T. 3699

MADRAS UNIVERSITY TAMIL DEPARTMENT

PUBLICATION No. 18 - 2.

General Editor:

DR. R. P. SETHU PILLAI, B.A., B.L., D. LITT.,

Professor of Tamil

UNIVERSITY OF MADRAS.

TIRUVĀYMOḺI

ĪṬṬIN TAMIḺĀKKAM

VOLUME - II (Hymns 111 - 222.)

Printed at
RATHNAM PRESS,
Madras-1.

Sri

Srīmatē Rāmānujāya namaha

Bagavat Vishayam

TIRUVĀYMOḺI

ĪṬṬIN TAMIḺĀKKAM

VOLUME - II (Hymns 111 - 222)

by

VIDWAN

B. R. PURUSHOTHAMA NAIDU

Lecturer in Tamil

UNIVERSITY OF MADRAS,

UNIVERSITY OF MADRAS

1957.

Second Edition.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பகவத் விஷயம்

திருவாய்மொழி

பகுதி - 2. (இரண்டாம் பத்து)

ஈட்டின் தமிழாக்கம்

சென்னை
சருவகலாசாலைத் தமிழ் லெக்சரர்
வித்வான்
பு. ரா. புருஷோத்தம நாயடு
ஆக்கியது.

சென்னைச் சருவகலாசாலை

1957

இரண்டாம் பதிப்பு.

ஸ்ரீ:

இப் புத்தகத்தில் அடங்கியவை

—:(o):—

1.	முகவுரை	...	i - iii
2.	திருவாய்மொழி இரண்டாம்பத்தின் மூலமும் ஈட்டின் தமிழாக்கமும்	...	1 - 288
3.	முதல் திருவாய்மொழி	....	1 - 31
4.	இரண்டாந் திருவாய்மொழி	...	32 - 55
5.	மூன்றாந் திருவாய்மொழி	...	56 - 87
6.	நான்காந் திருவாய்மொழி	...	88 - 116
7.	ஐந்தாந் திருவாய்மொழி	...	117 - 142
8.	ஆறாந் திருவாய்மொழி	...	143 - 171
9.	ஏழாந் திருவாய்மொழி	...	172 - 205
10.	எட்டாந் திருவாய்மொழி	...	206 - 236
11.	ஒன்பதாந் திருவாய்மொழி	...	237 - 267
12.	பத்தாந் திருவாய்மொழி	...	268 - 288
13.	பிற்சேர்க்கை I செய்யுள் முதற்குறிப்பகராதி	....	289 - 290
14.	பிற்சேர்க்கை II ஐதிஹ்யங்கள்	...	291 - 294
15.	பிற்சேர்க்கை III உரைநயங்கள்	...	295 - 296
16.	பிற்சேர்க்கை IV உவமைகள்	...	297 - 303
17.	பிற்சேர்க்கை V பெரியார்களைப்பற்றிய குறிப்புக்கள்	...	304
18.	பிற்சேர்க்கை VI பரிபாடல்	...	305 - 315
19.	பிற்சேர்க்கை VII மேற்கோள் சுலோகங்கள்	...	316 - 332

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

முகவுரை

தனமாம் சிலர்க்கு; தவமாம் சிலர்க்கு; தருமநிறை
கனமாம் சிலர்க்கு; அதற் காரணமாம் சிலர்க்கு; ஆரணத்தின்
இனமாம் சிலர்க்கு; அதற் கெல்லையு மாம்; தொல்லை ஏர்வகுள
வனமாலை எம்பெருமான் குருகூர்மன்னன் வாய்மொழியே.

இறைவனால் மயர்வு அற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வாருடைய ஸ்ரீசூக்தியாகிய திருவாய்மொழியில் முதற்பத்தின் வியாக்கியானத்திற்கு 'ஈட்டின் தமிழாக்கம்' என்ற பெயரோடு ஒரு புத்தகம் இவ் யாண்டின் முதலில் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப்பட்டது. அதனுட் பொதிந்த பொருள் இறைவனை சர்வேஸ்வரனுடைய கல்யாணகுணங்களாகிய அமிருதமேயாதலின் அப் புத்தகம் பெரியார் பலருடைய பாராட்டுதலுக்கு உரியதாயிற்று.

உலகத்தில் பேர்அறிஞர்களை எண்ணுங்கால் "மண்மிசை நால் விரல் நிற்கும்" என்று பாராட்டுதற்குரியவரும், "மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம், யாவுள முன்னிற்பவை" என்ற பொய்யாமொழிக்கு இலக்கியமாய்த் திகழ்பவரும், பரம வைதிககுல திலகருமான ஸ்ரீமத். சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியர் அவர்கள் உளம்உவந்து உள் அன்போடு கூறிய நல் வாழ்த்திற்கும் அடியேனைப் பொருள் ஆக்கியது. அப் பெரியாருடைய மங்களாசாசனம் அடியேற்கு உறுதுணையும் உறுபெருஞ் செல்வமுமாகும்.

"கையார் சக்கரத்து என் கருமாணிக்கமே! என்று என்று
பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமே யாடி
மெய்யே பெற்றொழிந்தேன் விதிவாய்க்கின்று காப்பார்
ஆர்?"

என்பது தமிழ்மறை.

ஹிந்து, மெயில், சுதேசமித்திரன், ஆனந்தவிகடன், விநோதன் முதலிய நாள் வார மாதப் பத்திரிகைகளும் பாராட்டற்குரிய முறையில் மதிப்புரைகள் எழுதியிருந்தன. இம் மதிப்புரைகளெல்லாம் அடியேன் மேற்கொண்ட பகவத் கைங்கர்யமான இத் தமிழ்த் தொண்டிற்கு ஊக்கம் அளிப்பன ஆயின. "அதுவும் அவனது இன் அருளே" என்கிறபடியே, எல்லாம் ஆழ்வாருடைய திருவருளேயாம்.

பகவத் விஷயத்தின் பெருமையினைக் கூறவல்லார் யாவர்! அதனை இயன்றவரையில் எளிய நடையில் ஆக்கித் தமிழ் உலகம் படித்து இன்புறும் முறையில் செய்தல் வேண்டும் என்ற ஒன்றே அடியேனது குறிக்கோள். அவ்வாறு ஆக்குங்கால் நேரும் கஷ்டங்களையும் அருமையினையும் அதனைக் கற்று அறிந்த பெரியோர்களே அறிவர். படித்தற்கே இயலாததும், பொருள் அறிந்து கோடற்கு மிக அரியதுமான அவ் வியாக்கியானத்தை இத்துணை எளிய நடையிலாயினும் வெளிவரச் செய்து தமிழ் உலகிற்கு உதவிய ஆழ்வாருடைய திருவருளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

இப்பொழுது, திருவாய்மொழியின் இரண்டாம் பத்தின் வியாக்கியானத்திற்கு '**ஈட்டின் தமிழாக்கம்**' என்ற இந்நூல் ஆழ்வாருடைய திருவருளால் வெளிவருகின்றது. தமிழ் உலகம் இதனையும் ஏற்று அடியேற்கு ஊக்கம் அளிக்கும் என்பது அடியேனது துணிவு.

ஈட்டு வியாக்கியானத்திற்கு மூல புருஷரும், அடியார்கள் வாழ அரங்கநகர் வாழச் சடகோபன் தண்தமிழ்நூல் வாழக் கடல் சூழ்ந்த மன்னுலகம் வாழ அவதரித்தவருமான பெரியார் நம்பிள்ளையின் வைபவத்தையும், வியாக்கியானத்தில் ஆங்காங்கு அமைந்துள்ள அரிய பெரிய கருத்துக்கள் முதலியவற்றையும் தொகுத்து விரிவாக எழுதிப் பத்தாம்பத்தின் முதலிலும் ஈற்றிலும் சேர்த்து வெளியிடக் கருதியுள்ளேன்; ஆழ்வாருடைய திருவருள் முற்றுவிப்பதாகுக.

பெரியோர்கள் பலர் விரும்பியவாறு, வியாக்கியானத்தில் காட்டப்பட்ட மேற்கோள் சுலோகங்களை எல்லாம் தொகுத்து, இந்நூலினிறுதியில் பிற்சேர்க்கையாகச் சேர்த்துள்ளேன்.

இருமொழிப் புலமையும் ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாய கிரந்தங்களில் நிறைந்த ஞானமுமுடையவரும், ஆசார சீலரும் அரிய

பல தமிழ் நூல்களுக்கு உரை எழுதி வெளியிட்டவருமாகிய ஸ்ரீமத். உ. வே., வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரிய ஸ்வாமிகள் இவ்வுரையின் கையெழுத்துப் பிரதியை முழுவதும் படித்து ஆங்காங்கு வேண்டிய இன்றியமையாத திருத்தங்களைச் செய்து உதவினர்கள். அடியேனுடைய நலனையே நாடுபவரும், இழுக்கலுடையுழி ஊற்றுக்கோல் போன்றவருமாகிய பல்கலைக்குரிசில் ஸ்ரீமான். வித்வான். வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் இவ்வுரை அச்சாகும்போது அன்புடன் ஒரு முறை நோக்கி உதவினர்கள். இப்பெரியோர்களை எழுமை எழுபிறப்பும் உள்ளுதலன்றி இவர்கட்கு அடியேன் செய்யும் கைம்மாறு யாதுளது ? தலையல்லால் கைம்மாறு இல்லேன்.

இந்நூலைச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் அச்சிடுதற்குக் காரணராயிருந்த சொல்லின் செல்வர் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, B.A., B.L., அவர்கட்கும் தொடர்ச்சியாக வெளியிட்டு உதவிவரும் சென்னைச் சர்வகலாசாலை அதிகாரிகட்கும் அடியேன் என்றுஎன்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

> குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
> கற்றறிந்த மாந்தர் கடன்.

சென்னை, 7-10-57.

இங்ஙனம்,
பு. ரா. புருஷோத்தம நாயடு.

ஸ்ரீ
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
மாறன் மலரடி வாழ்க
—:o:—

திருவாய்மொழி

இரண்டாம் பத்து

முதல் திருவாய்மொழி - "வாயுந்திரை"

முன்னுரை

ஈடு:—ஒருவன் பெறுதற்குரிய பேறுகளுள் மிக உயர்ந்த பேறு இறைவனுக்குச் செய்யப்படும் தொண்டேயாம் என்று அறுதியிட்டார் முதற்பத்தால்; அவ்வாறு செய்யப்படுந்தொண்டிற்குத் தடைகளாகவுள்ள களைகளை அறுக்கிறார் இந்த இரண்டாம் பத்தால்.

மேல்[1] திருவாய்மொழியில்[2] "மணியை வானவர் கண்ணனைத் தன்னதோர் அணியை" என்று இறைவனுடைய எளிமையினையும் மேன்மையினையும் வடிவழகினையும் அருளிச்செய்தார். மேல்விழப் பண்ணுகைக்கு இம் மூன்று குணங்களுள் ஒரொன்றே போதியதாம். இங்ஙனம் இருக்க, இறைவனிடத்தில் இம் மூன்று குணங்களும் நிறைந்து குறைவற்று இருக்குமேயாயின் அவனை அநுபவியாதிருக்கப் போகாதன்றே; ஆதலால், 'அவனை இப்பொழுதே அணைதல் வேண்டும்' என்னும் அவா மிக்கு எழுந்தது; நினைத்தவாறு அப்பொழுதே அணையப் பெறாமையாலே பிறந்த பெரும் துன்பத்தை, எம்பெருமானோடே கலந்து பிரிந்த ஆற்றாமையாலே நோவுபடுகிறாளாகிய

1. நூறு பாசுரங்கள் கொண்டதொரு தொகையைப் "பத்து" என்றும், பத்துப் பாசுரங்கள் கொண்ட பதிகத்தைத் "திருவாய்மொழி" என்றும் வழங்குவர்.

2. திருவாய். 1. 10 : 11. "மணியை" என்றதனால், எளிமையினையும், "வானவர் கண்ணனை" என்றதனால் மேன்மையினையும், "தன்னதோர் அணியை" என்றதனால், வடிவழகினையும் திருவுள்ளம்பற்றி "மணியை" என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

ஒரு பிராட்டி, [1] ஆற்றாமை கைகொடுக்க, விளையாடும் பூஞ் சோலைக்குப் புறப்பட்டு, அங்கே வாழ்கின்ற பொருள்களைக் கண்டு, அவையுமெல்லாம் பகவானைப் பெறாத காரணத்தால் நோவுபடுகின்றனவாகக் கொண்டு, அவற்றுக்குமாகத் தாம் நோவுபடுகிற பாசுரத்தால் பேசுகிறார்.

[2] "அஞ்சிறைய மடநாராய்" என்ற திருவாய்மொழியைக் காட்டிலும் இத்திருவாய்மொழியில் ஆற்றாமை கரைபுரண்டிருக்கும். அதற்குக் காரணம் என்னை? எனில், [3]"பெருநிலம் கடந்த நல்லடிப்போது அயர்ப்பிலன் அலற்றுவன்" என்று அவதாரத்திலே அநுபவிக்கக் கோலிப் பெறாதது ஆகையாலே 'அது ஒரு காலத்திலே நிகழ்ந்தது, நாம் பிற்பாடரானோம்' என்று ஆறலாம்; இது அவ்வாறு அன்றி, [4]"நம்பியைத் தென்குறுங்குடி நின்ற" என்று உகந்தருளின நிலத்திலே அநுபவிக்க ஆசைப்பட்டுப் பெறாமையாலே வந்த ஆற்றாமையாகையாலே இது கனத்திருக்கும். அவதாரத்தில், பிற்பட்டார்க்கும் இழக்க வேண்டாதபடி முகங்கொடுக்கைக்கு நிற்கின்ற இடங்கள் அன்றோ [5]உகந்தருளின நிலங்கள்? மற்றும், "அஞ்சிறைய மடநாராய்" என்ற திருவாய்மொழியில் தூது விடுகைக்குத் தரிப்பு உண்டாயிற்று; இத் திருவாய்மொழியில் அங்குத் தூதுவிட்ட பொருள்களும் நோவுபடுகின்றனவாக அவற்றுக்குமாகத் தாம் நோவுபடுகிறார். மேலும், அனுபவிக்கிற இவ் ஆழ்வாருடைய தன்மையாலும் இத் திருவாய்மொழியில் ஆற்றாமை கனத்திருக்கும்; யாங்ஙனம்? எனின், அத் திருவாய்மொழியிலுள்ள ஆற்றாமை [6]"பத்துடையடியவர்" என்ற திருவாய்மொழிக்கு முன்பு இறைவனை யநுபவித்துப் பிரிந்த அளவாலுள்ள ஆற்றாமையே; "அஞ்சிறைய மடநாரை"க்குப் பின்பு இத் திருவாய்மொழியளவும் அவனுடைய குணங்களை யநுபவித்துப் பிரிந்த பிரிவு ஆகையாலே இத் திருவாய்மொழியில் ஆற்றாமை கனத்திருக்கும்; இறைவன் [7]பயிலப்பயில இனியவனாய் இருப்பவன் அன்றோ?

1. ஆற்றாமை - துன்பத்தினைப் பொறுத்துக் கொள்ள இயலாமை. "ஆற்றாமையாவது - பிறிது எவ் உணர்வுமின்றி, அவ் ஆற்றாமை தானே யாவது" என்பர் இறையனார்களவியலுரைகாரர்.
2. திருவாய். 1. 4: 1.
3. திருவாய். 1. 3: 10.
4. திருவாய். 1. 10: 9.
5. 'உகந்தருளின நிலங்கள்' என்றது, திவ்யதேசங்களை.
6. திருவாய். 1. 3: 1.
7. "கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ்ஞான்றும், குருத்திற் கரும்பு தின்றற்றே" (நாலடி. 211). என்ற பகுதி இங்கு ஒப்பு நோக்கல் தகும்.

நாரையாகில் வெளுத்திருக்கையும், அன்றிலாகில் வாயலகு நெகிழ்த்தவாறே கதறுகையும், கடலாகில் எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி கூப்பிடுகையும், காற்றாகில் வேறுபாடின்றி எப்பொழுதும் திரிகையும், மேகமாகில் நீராய் இற்று இற்று விழுகையும், சந்திரனாகில் தேய்வது வளர்வதாகையும், இருளாகில் பொருள்களைக் காண ஒண்ணாது தடுக்கையும், கழியாகில் அலைவாய் முகமாய் ஏறுவதும் வடிவதுமாகையும், விளக்காகில் இற்று இற்று எரிகையும், இங்ஙனம் இவற்றிற்கு இத் தன்மைகள் எப்பொழுதும்உள்ளவை என்று அறியாமல், இவையெல்லாம் தம்மைப்போன்று இறைவனைப் பிரிந்த பிரிவால் நோவுபடுகின்றனவாகக் கொண்டு, அவற்றுக்குமாகத் தாம் வருந்தி, துக்கத்தையுடையவர்கள் தங்களோடு ஒத்த துக்கத்தையுடையவர்களைக் கழுத்தைக் கட்டிக் கொண்டு கிடந்து கூப்பிட்டு[1] ஆற்றாமைக்குப் போக்குவிட்டுத் தரிக்குமாறு போன்று, இவளும் கண்ணுக்கு இலக்கான பொருள்கள் எல்லாவற்றோடும் கழுத்தைக் கட்டிக் கொண்டு கிடந்து 'நீ பட்டதோ? நான் பட்டதோ?' என்று கூப்பிடுகிறாள்.

ஆயின், பறவை கடல் முதலான பொருள்கள் இறைவனைப் பிரியின், அப் பிரிவால் அவற்றிற்குத் துன்பம் உளதாமோ? எனின், [2]"வாரீர் சக்கரவர்த்தியே! உம்முடைய தேசத்தில் கழுத்தளவு தண்ணீரிலிருக்கின்ற மரங்களும் ஸ்ரீராமபிரானைப் பிரிந்த பிரிவால் உளதாய சோகத்தால் பீடிக்கப்பட்டனவாகி, அரும்பு போது மலர் இவைகளோடு வாடி உலர்ந்தன" என்றும், [3]"ஸ்ரீராமபிரானைப் பிரிந்த பிரிவின் வெம்மையால், ஆறுகள் கரையருகும் சென்று கிட்ட ஒண்ணாதபடி வெப்பங் கொண்டு கொதித்தன; வனத்திலுள்ள மரங்களும், சோலையிலுள்ள மரம் செடி கொடிகளும் உலர்ந்த இலைகளையுடையன ஆயின" என்றும் ஸ்ரீராமாயணத்தில் பேசப்படுவது போன்று, அறிவுடைப் பொருள் அறிவில் பொருள் என்னும் வேற்றுமையின்றி எல்லாப் பொருள்களையும் நோவுபடுத்தக்கூடியவன் இவள் பிரிந்த இறைவன் என்க.

---

1. "மூடி வேவாநின்ற தோர் கொள்கலம் மூய் திறந்தவிடத்து ஆவி எழுந்து முன்னின்ற வெப்பம் நீங்கினாற்போன்று, அச் சொல் சொல்ல, ஆற்றாமை பண்டையின் சிறிது அளவு படுவதாம்" என்னும் களவியலுரை ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

2. ஸ்ரீராமா. அயோத். 59: 4.

3. ஸ்ரீராமா. அயோத். 59: 5.

ஆக, ஸ்ரீராமபிரான் தந்தை இறந்த துக்கத்தால் மிக வருந்தி, முழுமதியினைப் போன்ற திருமுகத்தையுடைய பிராட்டியருகிற் சென்று அவளைப் பார்த்துச் சீதாய்! [1]"உன்னுடைய மாமனார் இறந்தார்" என்றும், "இலக்குமணா! நீ தந்தை இல்லாதவன் ஆனாய்" என்றும் கூறி, ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு கிடந்து கூப்பிட்டாற் போன்று கூப்பிடுகிறார் இங்கு.

இத் திருவாய்மொழியில்,[2] இளையபெருமாளைக் காட்டிலும் இவர்க்கு உண்டான வேறுபாடு சொல்லப்படுகிறது. யாங்ஙனம்? என்னில், [3]"மீனுக்குத் தண்ணீரைத் தாரகமாக அறுதியிட்டார் அவர், இவர், அந்த மீனோடு மீனுக்குத் தாரகமான தண்ணீரோடு தம்மோடு வேற்றுமையற,பகவானுடைய குணங்களே தாரகம் என்றிருக்கிறார் ஆதலால்.

111.

வாயும் திரைஉகளும் கானல் மடநாராய்!
ஆயும் அமர் உலகும் துஞ்சிலும்நீ துஞ்சாயால்
நோயும் பயலைமையும் மீதூர எம்மேபோல்
நீயும் திருமாலால் நெஞ்சம் கோட் பட்டாயே?

பொழிப்புரை :—மேலும் மேலும் வந்து பொருந்துகிற அலைகள் தாவுகின்ற கடற்கரைச் சோலையிலுள்ள மடநாராய்! என் தாயும் நித்தியசூரிகளும் தூங்கினாலும் நீ தூங்குகிறாயில்லை; ஆதலால், என்னைப்போன்று நீயும், நோயும் பசலையும் சரீரமெங்கும் பரவும்படி, திருமாலால் நெஞ்சம் கொள்ளப்பட்டாயோ? கூறுக என்கிறாள் என்பதாம்.

விசேடக் குறிப்பு :—இப் பாசுரம் 'தன்னுட்கையாறு எய்திடுகிளவி' என்ற துறையின்பாற்படும். அதாவது - தனக்கு நேர்ந்த துன்பத்தை, தன் ஆற்றாமையால் பிறிதொன்றன் மேலிட்டுக் கூறுதல். இவ்வாறு கூறுதற்குப் பயன் - களவொழுக்கத்திலே நின்று சிறைப்புறத்தானாய தலைமகன் கேட்பின், விரைவில் வெளிப்படையாக வந்து இவளை மணம் புரிந்துகொள்வான்; தோழி கேட்பின் தலைவனுக்குச் சொல்லி விரைவில் மணம் புரிந்துகொள்ளச்செய்வாள்; யாரும் கேளாராயின் தலைவி தானே சொல்லி ஆற்றினளாம். இதனைக் 'காம

---

1. ஸ்ரீராமா. அயோத். 102; 4.
2. இளையபெருமாள்-இலக்குமணன்.
3. ஸ்ரீராமா. அயோத். 53; 31.

மிக்க கழிபடர் கிளவி' என்று கூறுதலுமுண்டு. முதல் ஒன்பது பாசுரங்களும் இத் துறையே எனக் கொள்க. மடம் - கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. நாரை என்னும் ஐகார ஈற்றுப் பெயர், விளி ஏற்றலின் ' நாராய் ' என நின்றது. ஆய் - யாய் என்பதன் மரூஉ. என் தாய் என்பது பொருள். "யாயும் ஞாயும் யாரா கியரோ" என்றார் பிறரும். அமருலகு - அமரர் உலகு என்பதன் விகாரம். நோய் - பிரிவாற்றாமையால் மனத்தில் நிகழும் காமநோய் ; இது உடல் மெலிவிற்குக் காரணம். பயலை - பசலை ; காதலன் பிரிவால் தலைவிக்குத் தோன்றுகிற ஒரு நிறவேறுபாடு ; இதன் நிறம் பீர்க்கு, கொன்றை இவற்றின் மலர்களின் நிறத்தினைப் போன்றது என்பர். ' எம்மேபோல் ' தனித் தன்மைப்பன்மை. கோள் - முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

இத் திருவாய்மொழி, நாற்சீர் நாலடியான் வருதலின் கலிவிருத்தம் எனப் பெறும்.

ஈடு:—முதற்பாட்டு. [1]பிரிந்தார் இரங்குவது நெய்தல் நிலத்திலே யாகையாலே, கடற்கரைச் சோலையின்கண் இவள் பிரிவால் வருந்தி இரங்குகிற காலத்தில், ஆங்கு, இரைதேடுதல் நிமித்தமாகத் தங்கியிருந்தது ஒரு நாரை இவள் கண்ணுக்கு இலக்காக, அதன் உடம்பில் வெளுப்பைக் கண்டு, அதுவும் தன்னைப் போன்று பிரிவாற்றாமையாலே வந்த பசலை நிறத்தோடு இருக்கிறதாகக் கொண்டு, பாவியேன், நீயும் நான் அகப்பட்ட விஷயத்திலே அகப்பட்டு நெஞ்சு பறிஉண்டாயோ ? என்கிறாள்.

வாயும் திரை உகளும் கானல் மட நாராய் - பெரிய மலை போல் வந்து கிட்டுகிற அலைகள் மேலே தாவிப் போகாநின்றாலும் நினைத்தது கைப்புகுமளவும் சலியாமல் கடற்கரைச் சோலையில் தங்கியிருக்கின்ற நாரையே ! பகவானைத் தியானிப்பவர்கள் சலியாமல் இருப்பது போன்று சலியாமல் இருக்கிற நாரையே ! என்கிறாள். அதாவது - [2]"அலைகடல் நீர்குழம்ப அகடுஆட ஓடி அகல்வான் உரிஞ்ச முதுகில், மலைகளை மீது கொண்டு வரு மீனை" மறவாது இருப்பார்க்குப் போலியாய் இராநின்றது, அலைகளை மீதுகொண்டு வரு மீனை மறவாதிருக்கின்ற இந் நாரையும் என்றபடி. இனி, மீனைக் குறிக்கோளாகக்

1. போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சேர் ஊடல் அணிமருதம் - நோக்குங்கால்
இல்லிருக்கை முல்லை இரங்கல் நறுநெய்தல்
சொல்லிருக்கும் ஐம்பால் தொகை.

2. பெரிய திருமொழி. 11. 4 : 1.

கொண்டு சலியாமல் நிற்கின்ற நாரையே! என்று கொள்ளாது, [1]"சர்வேஸ்வரனே காப்பவன் என்று இருப்பார், [2]மூவகைத் துன்பங்களாலும் வருகின்ற இடையூறுகட்கு இடையாதே இருக்குமாறு போன்று" மலைகள் போன்ற அலைகள் மேலே தாவிச் சென்றாலும் அதற்குச் சலியாமல் இருக்கின்ற நாரையே! என்று கோடலும் ஆம். இனி, திரை உகளுதலை மட நாரைக்கு அடைமொழி ஆக்காது, திரை உகளாநின்றுள்ள கானல் - கடற்கரைச் சோலை என்று, திரை உகளுதலைக் கானலுக்கு அடைமொழியாக்கிக் கூறலும் ஒன்று. [3]கிராமணிகள், பிறர்க்குத் துன்பம் செய்துகொண்டே யாகங்களும் பண்ணிப் பவித்திரங்களும் முடிந்திட்டுத் 'தார்மிகர்' என்னும்படி திரிவது போன்று, நாரையும் [4]நினைத்த பெரிய மீன் கைப்புகுமளவும் சிறிய மீன்கள் வந்தாலும் அவற்றில் விருப்பம் அற்று இருத்தலின் '**மடநாராய்**' என்கிறாள். மடப்பமாவது - பற்றிற்று விடாமை.

ஆயும் துஞ்சிலும்-என்பிறப்பே பிடித்து உறங்காத தாயும் உறங்கிலும். அமர் உலகும் துஞ்சிலும் - தங்கள் சத்தையே பிடித்து உறங்காத [5]நித்திய சூரிகள் உறங்கிலும். நீ துஞ்சாயால் - உறங்குகின்றாய் இல்லை. இவளைப் பெற்ற தாய்க்கு உறக்கம் இன்மைக்குக் காரணம் என்? என்னில், முன்னர் இவள் இளமைப் பருவத்தில் 'இவளுக்குத் தக்கானாய் இருப்பான் ஒருவனைப் பெற்றுக் கொடுத்தோமாக வல்லோமே! என்று கண்ணுறங்காது; பின்பு, நாயகனைப் பிரிந்து இவள் நோவுபடுகிறபடியைக் கண்டு கண்ணுறங்காது; [6]"ஒரு கொள்

---

1. பாகவதம். 10. 20 : 15.

"சர்வேஸ்வரன்" என்று தொடங்கும் மேற்கோள், திரைகள் வந்து தம் மேல் தாவிச் செல்லினும், தளர்ச்சியின்றி அசையாமலிருத்தற்கும், மேல், "அலைகடல் நீர்" என்ற மேற்கோள், உணவின் பொருட்டு ஒன்றையே நினைவிற்கொண்டு வேறு நினைவின்றி இருத்தற்கும் கொள்க.

2. மூவகைத் துன்பங்கள் :—தெய்வத்தைப்பற்றி வருவனவும், தன்னைப் பற்றி வருவனவும், பிற உயிர்களைப்பற்றி வருவனவும் ஆம்.

3. கிராமணிகள் - கிராமத்தில் தலைமை பெற்றவர்கள்.

4. "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு"
என வருதல் காண்க.

5. நித்திய சூரிகள்-பரமபதத்தில் என்றும் இருப்பவர்களான தேவர்கள்.

6. ஸ்ரீராமா. அயோத் 119 : 36.

கொம்பிலே கொண்டுபோய்ச் சேர்த்து நோக்கில் நோக்கலாய், இல்லையாகில் கிடையாத படியான பருவமாய் இராநின்றது; இவளுக்கு ஈடாய் இருப்பான் ஒருவனைப் பெற்று அவன் கையில் காட்டிக் கொடுத்தோமாக வல்லோமே! என்று எங்கள் தந்தையார் கவலைக் கடலில் மூழ்கினவர் ஆனார்" என்றாள் பிராட்டி. அப்படியே அன்றோ இவளைப் பெற்ற தாயாரும் கண்ணுறங்காதே படும்படி. இமையோடு இமை கொட்டாதவர்களாய் எப்பொழுதும் இறைவனைப் பார்த்துக்கொண்டே இருப்பவர்கள் நித்தியசூரிகள் ஆதலின் '**அமர் உலகும் துஞ்சிலும்**' என்கிறாள்.

நோயும் பயலைமையும் - மனத்தின் துன்பமும் அத்தாலே வந்த பசலை நிறமும். தன் பக்கலிலே காண்கையாலே அவ் இரண்டும் நாரைக்கும் உண்டு என்றிருக்கிறாள். மீதூர - விஷம் ஏறியது போன்று உடம்பிலே பரக்க. எம்மே போல் - இப்படித் துன்பப் படுகைக்கு நான் ஒருத்தியும் என்று இருந்தேன்; நீயும் என்னைப் போல் ஆவதே! துக்க பரிபவங்களைப் பொறுத்திருக்கையாலும், பற்றிற்று விடாதிருக்கிறபடியாலும், பசலை நிறத்தாலும் என்னைப் போன்று இராநின்றாய் என்றபடி. நீயும் - விரகதாபத்தின் வியசனம் பொறுக்க மாட்டாத மென்மையையுடைய நீயும். [1]"பகைவர்களுடைய பலத்தை ஒழிப்பவரான ஸ்ரீராமபிரான், பாணங்களாலே இலங்கையை அழித்து என்னை அழைத்துச் செல்லின், செல்லும் அச் செயல் அவ் இராமனுக்கு ஒத்ததாக இருக்கும்" என்று கூறி இருந்த பிராட்டியைப் போன்று இருக்க மாட்டாமைக்கு இருவரும் ஒத்தோமோ? என்பாள் '**எம்மேபோல் நீயும்**' என்கிறாள்.

திருமாலால் நெஞ்சம் கோட்பட்டாயே - நோயும் பசலையும் இருந்தபடி கண்டேனுக்கு, நீயும் நான் அகப்பட்ட துறையிலே அகப்பட்டு நெஞ்சு பறிஉண்டாயாகாதே! மைந்தனை மலராள் மணவாளனையோ நீயும் ஆசைப்பட்டாய்? என்பாள் '**திருமாலால்**' என்கிறாள். தோற்புரை அன்றியே, மறுபாடுருவ [2]வேர்ப் பற்றிலே நோவுபட்டாய் ஆகாதே! என்பாள் '**நெஞ்சம் கோட்பட்டாயே**' என்கிறாள். (1)

---

1. ஸ்ரீராமா. சுந். 9 : 30.

2. வேர்ப்பற்று - நெஞ்சு. எல்லாவற்றுக்கும் காரணமாகையாலே நெஞ்சை 'வேர்ப்பற்று' என்கிறார். தோற்புரை - உடல். மறுபாடுருவல் - பின்னே உருவிப்போதல்.

112.

கோட்பட்ட சிந்தையையாய்க் கூர்வாய அன்றிலே!
சேட்பட்ட யாமங்கள் சேராது இரங்குதியால்
ஆட்பட்ட எம்மேபோல் நீயும் அரவணையான்
தாட்பட்ட தண்துழாய்த் தாமம் காமுற்றாயே.

பொ - ரை :—கூர்மை பொருந்திய அலகினையுடைய அன்றிற் பறவையே! கொள்ளப்பட்ட மனத்தினையுடையையாகி, நீண்டு செல்லுகின்ற நள்ளிரவிலும் படுக்கையிற் சேராது வருந்துகிறாய்; ஆதிசேஷ சயனத்தையுடைய இறைவனது திருவடிகளிலே பொருந்தியிருக்கின்ற திருத்துழாய் மாலையினை, அடிமைப்பட்ட யான் விரும்பியது போன்று நீயும் விரும்பினாயோ?

வி - கு :—அன்றில் என்பது, ஒரு பறவை விசேடம்; இது நெய்தல் நிலத்தில் வாழுமியல்பினது. இதன் ஒலி பிரிந்தவர்களுக்குத் துயரினை விளைக்கும். ஆய் சேராது இரங்குதி என முடிக்க. யாமம் - நள்ளிரவு; இது, ஒரு நாளில் 40-நாழிகைக்குமேல் 50-நாழிகை முடிய உள்ள காலம். "பொய்ப்பொருள் பிறகள் பொன்னும்" (சிந். 1595.) என்புழிக் 'கள்' அசைநிலைஆயினவாறு போன்று, ஈண்டு 'யாமங்கள்' என்பதில் 'கள்' அசைநிலை. இனி, இதனை, பன்மை விகுதியாகக் கொண்டு, இரவின் கூறுபாடாகிய மூன்று யாமங்களையும் கூறுகின்றாள் என்று கோடலுமாம். காமம் உற்றாய் என்பது காமுற்றாய் என வந்தது, விகாரம்.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1] இப்படி நாரையைப் பார்த்து வார்த்தை சொல்லுகின்ற அளவிலே, அருகே நின்ற பனையிலே தங்கின அன்றிலானது வாயலகு நெகிழ்த்தவாறே கூப்பிட்டது; அதனுடைய துன்பத்தைக் காட்டுகின்ற ஒலியைக் கேட்டு, 'பாவியேன், நீயும் என்னைப்போல் அகப்பட்டாயாகாதே!' என்கிறாள்.

கோள்பட்ட சிந்தையையாய் - கவரப்பட்ட மனத்தினையுடையையாகி; ஆயின், 'கவரப்பட்ட மனம்' என்று அறிந்தபடி என்? என்னில், அதனுடைய [2] அடியற்ற ஒலிதான் 'நெஞ்சு இழந்தது' என்று தோற்ற நின்றது காணும் இவளுக்கு. கூர் வாய அன்றிலே-தனியராய்இருப்பாரை இரு துண்டமாக இடவல்ல ஒலியையுடைய அன்றிலே! [3] வாய் - வார்த்தை.

1. 'கூர்வாய அன்றிலே, எம்மேபோல் தாமம் காமுற்றாயே' என்றதனைநோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. அடி - மனம்.

3. வாய் - ஆகுபெயர்.

அன்றி, கூர்த்த வாய்அலகினையுடைய அன்றிலே! எனலுமாம். சேண்பட்ட யாமங்கள் - இரவாய் நீண்டு செல்லாது, இரவின் கூறுகிய ஒவ்வொரு யாமமும் நீண்டு செல்லுகின்றது என்பாள் '**சேட்பட்ட யாமங்கள்**' என்கிறாள். சேராது இரங்குதி-நெடுகுகிற யாமங்களில் படுக்கையிற் சேராதொழியினும் தரித்திருக்கலாம்; அங்ஙனமும் செய்யாது வருந்துகிறாய் என்பாள் '**இரங்குதி**' என்கிறாள்.

ஆள்பட்ட எம்மேபோல் நீயும் - நெஞ்சு பறியுண்டு படுக்கையிலுஞ் சேராதே நோவுபடுகைக்கு என்னைப் போலே நீயும் அவன் திருவடிகளில் [1] தாஸ்ய பரிமளத்திலே அன்றோ அகப்பட்டது. நாட்டாரில் வேறுபாட்டையுடையதாகப் [2] போந்திருக்கிற நீ என்பாள் '**நீயும்**' என்கிறாள். இனி, [3] "இறைவன் உயிர்கட்கெல்லாம் ஈஸ்வரனுயும், மங்களகரனுயும், உயிர்களைக் கைவிடாதவனுயும் இருக்கிறான்" என்றும், [4] "இறைவனைச் சேர்ந்தவனாக நான் ஆகின்றேன்" என்றும் ஓதினாய் இல்லை; [5] "மயர்வற மதிநலம்அருள"ப் பெற்றாய் இல்லை; ஆதலால், என்தனை உட்புகாத நீயும் இப்படி ஆவதே! என்பாள் '**நீயும்**' என்கிறாள் எனலுமாம். அரவணையான் தாள்பட்ட தண் துழாய் தாமம் காமம் உற்றாயே - மேல் [6] "**திருமாலால்**" என்றாள்; இருவருமானல் இருப்பது படுக்கையிலேயாய்இருக்குமே; ஆதலின், ஈண்டு '**அரவணையான்**' என்கிறாள். ஆக, 'அவனும் அவளுமாய்த் துகைத்த திருத்துழாய்மாலை பெறவேண்டும்' என்று அத்தையோ நீயும் ஆசைப்பட்டாய் என்கிறாள் என்றபடி. சுடர் முடி மேல் துழாய் ஒழிய, அவர்கள் இருவரும் கூடத் துகைத்த துழாய் என்பாள் '**தாள்பட்ட துழாய்**' என்கிறாள். புழுகிலே தோய்த்து எடுத்தாற்போன்று, பரிமளத்திலே தெரியும்; [7] கலம்பகன் நாறும்; ஆதலின், '**தண்துழாய்**' என்கிறாள். [8] "தாளிணைமேல்அணி தண் அம் துழாய்"என்றுஅன்றோ தான் கிடப்பது. [9] சங்கத்தளவிலே நில்லாது, பெறில் பிழைத்தல்,

1. தாஸ்யபரிமளம் - அடிமைவாசனை.
2. போந்திருக்கிற - சென்று உன்வீட்டில் இருக்கிற என்பது பொருள். பனைமரத்திலிருக்கிற என்பது தொனிப்பொருள். போந்து = பனைமரம்.
3. தைத்திரீய நாராய. 11: 8.
4.
5. திருவாய். 1. 1: 1.
6. திருமால் - திருமகள் கேள்வன்.
7. கலம்பகன் - பலவகைப்பட்ட மலர்கள்.
8. திருவாய். 4. 2: 1.
9. சங்கம் - அன்பு.

பெருவிடில் முடிதலான நிலையை அடைந்தாயே என்பாள் 'காமுற்றுயே' என்கிருள். தாமம் - ஒளியும், மாலையும். (2)

113.

காமுற்ற கையறவோடு எல்லே இராப்பகல்
நீமுற்றக் கண் துயிலாய் நெஞ்சுருகி ஏங்குதியால்
தீமுற்றத் தென்னிலங்கை ஊட்டிஞன் தாள் நயந்த
யாமுற்றது உற்ருயோ? வாழி! கனைகடலே![1]

பொ - ரை :—ஒலிக்கிற கடலே! நீ விரும்பிய பொருள் கையில் கிடைக்கப்பெருத காரணத்தால் இரவும் பகலும் முற்றும் தூங்குகிருய் இல்லை; அதனேடு நில்லாது, மனமும் உருகி ஏங்குகிருய்; ஆகையால், தென் இலங்கை முழுதினையும் நெருப்பிற்கு உணவாகக் கொடுத்த ஸ்ரீ ராமபிரானுடைய திருவடிகளை விரும்பிய யான் பட்ட துன்பத்தினை நீயும் பட்டாயோ? அந்தோ! துன்பு நீங்கி வாழ்ந்திடுக.

வி - கு :—காமுற்ற கையறவோடு ஏங்குதி எனக் கூட்டுக. காமுற்ற - வினையாலணையும் பெயர். கையறவு - துன்பம்; "யான்பட்ட கையறவு காணுயோ" (கம்பரா. சூர்ப்பண. 107) என்ற இடத்துக் கையறவு இப் பொருள்படுதல் காண்க. இனி, காமுற்ற கையறவோடு என்பதற்கு, விரும்பிய பொருள் ஒழிதலோடு என்று பொருள்கூறலும் ஒன்று. இப்பொருளில் காமுற்ற என்பது பெயரெச்சம். கை-பொருள். "அவர் அன்பும் கையற்ற கண்ணே அறும்" (நாலடி. 37) என்ற இடத்துக் 'கை' என்பது இப் பொருட்டாதல் காண்க.

ஈடு :—மூன்ரும் பாட்டு. அன்றிலுடைய ஒலிக்கு வருந்தி இருக்குமளவில் கடல் என்று ஒரு[2] மகா தத்த்வமாய், அது தன் காம்பீர்யமெல்லாம் இழந்து கரையிலே வருவது கரையேற மாட்டாதே உள்ளே விழுவதாய், எழுத்துஞ் சொல்லும் பொருளும் தெரியாதபடி ஊமைக் கூறனுகக் கூப்பிடுவதாகிறபடியைக் கண்டு, 'பாவியேன், நீயும் இராம குணத்தில் அகப்பட்டு, நான் பட்டது பட்டாய் ஆகாதே?' என்கிருள்.

---

1. வாயின் இரங்கினை ஆரம் எறிந்தனை வால்வளை சிந்தினை தண்
பாயலை உந்தினை மாலை அடைந்தனை பாரில் உறங்கிலையால்
கோயி லரங்கனை மாகன சந்திகழ் கோக னகம்பொலியும்
ஆயிழை நண்பனை நீயும் விரும்பினை யாகும் நெடுங்கடலே.

என்னும் திருவரங்கக் கலம்பகச் செய்யுள் இத்திருப்பாசுரத்தின் பொருளை விரித்துக் கூறுவது போன்று அமைந்துள்ளது.

2. மஹாதத்த்வம் - பெரிய பொருள்.

காமுற்ற கை அறவோடு - ஆசைப்பட்ட பொருள் இழவோடே; ஆசைப்பட்ட பொருள் கையில் கிடையாமையாலே வந்த இழவோடே என்றபடி. கைத்து - பொருள். காமுறுகையும் இழவும் கடலுக்கு இல்லாதிருக்கவும் எடுத்துக் காட்டாய் விளங்குகிற தனக்கு உண்டு ஆகையாலே 'இதற்கும் உண்டு' என்று [1] அநுமித்துச் சொல்லுகிருள். எல்லே-இரவோடு பகலோடு வேற்றுமை அறக் கதறுகிறபடியைக் கண்டு, [2]"ஓதமும் நானும் உறங்காது இருந்தேனே" என்கிறபடியே, தன் படிக்குப் போலியாய் இருக்கையாலே [3]சிறையுறவு போன்று [4]தோழியை விளிக்குமாறு போன்று விளிக்கிருள். இனி, எல்லே என்பதனை வியப்புஇடைச்சொல்லாகக் கோடலும் அமையும். [5]என்னே! என்பது பொருள். இராப் பகல் முற்ற நீ கண் துயிலாய் - உறங்கக் கண்ட இரவுக்கும், உறங்காமைக்குக் கண்ட பகலுக்கும் உன் பக்கல் ஒரு வேற்றுமை கண்டோம் இல்லை. உன் காம்பீர்யமெல்லாம் எங்கே போயிற்று? என்பாள் 'நீ' என்கிருள். நெஞ்சு உருகி ஏங்குதியால் - நெஞ்சு அழிந்து கூப்பிடுகின்றுய்.உறக்கம்இன்றியே ஒழியினும் நெஞ்சாயினும் அழியாதிருக்கப் பெற்றனையோ? அதுவும்இன்றே! என்பாள் 'உருகி ஏங்குதியால்' என்கிருள்.

தென் இலங்கை முற்றத் தீ ஊட்டினான் தாள் நயந்த யாம் உற்றது உற்ருயோ - பரம காதலனை சக்கரவர்த்தித் திருமகன் திருவடிகளை ஆசைப்பட்ட நான் பட்டது பட்டாயாகாதே நீயும்? [6]பாவியேன், பரத்துவத்திலே ஆசைப்பட்டாய் இல்லையே, காதலியின் விரஹம் பொறுக்கமாட்டாத சக்கரவர்த்தித் திரு

1. அநுமித்தல் - அநுமானப் பிரமாணத்தால் அறிதல். அநுமானம் - கருதலளவை.

2. பெரியதிருமொழி. 9. 4: 9.

3. சிறைக்கூடத்தில் யாதானும் ஒரு காரணத்தால் சேரத் தங்கியிருக்க நேரின், அப்பொழுது அங்கே உண்டாகும் உறவு.

4. "எல்லே இளங்கிளியே" என்ற திருப்பாவையை நோக்குக.

5. "புல்லிப் புணர்முலையின் பூங்குவட்டின் மேலுறைந்தாய்
எல்லே மற் றெம்பெருமாற்கு இன்றிவளு மின்னுளோ"
என்ற இடத்து 'எல்லே' என்னும் பொருளதாதல் காண்க. (சிந். 2957)

6. 'பாவியேன்' என்பது, ஐயோ! என்னும் பொருளது. பரத்துவத்தில் ஆசைப்பட்டால் காதலியின் விரகநோயின் கூமைக்குப் பிரசங்கமில்லாமையாலே விளம்பம் பொறுக்கலாம் என்பது கருத்து.

மகனை யன்றோ நீயும் ஆசைப்பட்டாய் என்பாள் **'தென்னிலங்கை முற்றத் தீ ஊட்டினான் தாள் நயந்த'** என்கிறாள். விபீடணனுடைய மாளிகை, தீயால் எரிக்கப்படவில்லையே? 'இலங்கை முற்றத் தீ ஊட்டினான்' என்றல் எங்ஙனம் பொருந்தும்? எனின், அவன் [1]அவர்களுக்குக் கூட்டு இல்லாதவாறு போலே, அவன் அகமும் அவர்கள் அகத்துக்குக் கூட்டு இல்லை காணும்; அவன் அகம் **தாஸோகம்** அன்றோ? ஆதலின், விபீஷண கிருஹம் இலங்கைக்குள் அன்று போலே இருந்தது. இனி, கொண்டு கூட்டாது, தீ முற்ற தென் இலங்கை ஊட்டினான் என்று ஆற்றொழுக்காகக்கொண்டு, இராவண பயத்தாலே முன்பு அரைவயிறாகப் பிழைத்த நெருப்பு, [2]"ஒள்ளெரி மண்டி உண்ண" என்கிறபடியே, வயிறு நிறைய உண்டு ஜீவிக்கப் பெற்றது, [3]பெருமாளை அண்டை கொண்ட பலத்தாலே என்று பொருள் கூறலுமாம். [4]"செந்தீ உண்டு தேக்கிட்டதே" என வருதல் காண்க. ஆக, பின் இரண்டு அடிகளால், [5]தாள் நயந்தாரோடு தோள் நயந்தாரோடு வாசி அறுவதே கிலேசப்படுகைக்கு என்று கூறி வருந்துகிறாள் என்றபடி. ஆயின், ஆடவனான கடலுக்குப் பிரிவுத் துன்பம் கூடுமோ?

---

1. "பிறப்பு மாற்றினை" என்ற இராவணன் கூற்றும், "நல்லது சொல்லினீர் நாமும் வேறினி, அல்லது செய்துமேல் அரக்க ராதுமால்" என்ற விபீஷணன் கூற்றும், "வந்தனை நீதியும் பிறவும் மாண்பமைந்து, அந்தணர் இல்லெனப் பொலிந்த தாமரோ" என்ற திருவடி கூற்றும்(கம்ப.விபீஷணன் டைக்க. 8, 20, 100.) அவனகம் தாஸோகம் என்பதனை அறிதல் தகும். தாஸோகம் - அடிமை வீடு.

2. பெரியதிருமொழி. 10. 9: 1.

3. பெருமாள் என்றது, சக்கரவர்த்தித் திருமகனை.

4. என்று கொல்குரங் கன்னதிவ் வலியுள திலங்கை
நின்று வெந்துமா நீறெழு கின்றது நெருப்புத்
தின்று தேக்கிடு கின்றது தேவர்கள் சிரிப்பார்
நன்று நன்றுபோர் வலியென இராவணன் நக்கான்.

(கம்பரா. இலங்கை எரி. 46).

என்ற செய்யுளை நோக்கி இவ் வாக்கியம் எழுதப்பட்டது போலும்.

5. சேது பந்தன சமயத்தில் தாள் நயந்தது - கடல். மேலும், இயற்கையிலேயே இறைவனுக்கு அடிமைப் பட்டிருக்குந் தன்மையும் கடலுக்கு உண்டு. பிராட்டியின் நிலையை யடைந்திருப்பதனால் தோள் நயந்தவர் - ஆழ்வார்.

எனின், [1]பிரிவுத் துன்பம் பிராட்டியோடு ஸ்ரீபரதாழ்வானோடு வாசியற்று இருந்தது ; ஆதலால், கூடும். வாழி - இத் துன்பம் நீங்கி நீ வாழ்ந்திடுக. கனை கடலே - வாய்விட்டுக் கூப்பிடமாட்டாமல் விம்மல் பொருமலாய்ப் படுகிற கடலே! இனி, ஒலிக்கின்ற கடலே! என்று பொருள் கோடலுமாம். (3)

114.

கடலும் மலையும் விசும்பும் துழாய் எம்போல்
சுடர்கொள் இராப்பகல் துஞ்சாயால் தண்வாடாய்!
அடல்கொள் படைஆழி அம்மானைக் காண்பான் நீ
உடலம் நோய் உற்றாயோ, ஊழிதோறு ஊழியே?

பொ - ரை:—வடக்கிருந்து வருகின்ற குளிர்ந்த காற்றே! கடலும் மலையும் ஆகாயமும் ஆகிய இவற்றை தடவிக்கொண்டு, சந்திர சூரியர்களைக் கொண்ட இரவிலும் பகலிலும் எம்மைப் போன்று தூங்குகிறாய் இல்லை; பகைவர்களுடைய மிடுக்கைக் கொள்ளுகின்ற சக்கரப்படையினையுடைய தலைவனைக் காணுவதற்கு, காலமுள்ளவரையிலும் உடலோடு முடியும்படியான நோயினைக் கொண்டாயோ ? என்கிறாள்.

வி - கு :—துழாய் துஞ்சாய் என முடிக்க. துழாய் - வினையெச்சம். சுடர் : ஆகுபெயர். வாடை : விளியேற்றலின், ஆய் ஈறாகத் திரிந்தது. காண்பான் : வினையெச்சம். சுடர்கொள் இரா என்பதற்கு வெப்பத்தைக் கொண்டுள்ள இரவு எனப் பொருள் கூறலுமாம்.

ஈடு :—நாலாம் பாட்டு. காற்று என்று ஒரு [2]வியாபக தத்த்வமாய், அதுதான் காதலனைப் பிரிந்த விரஹத்தால் உண்டான வியசனத்தால், [3]இருந்த இடத்தில் இருக்கமாட்டா

---

1. வெயர்த்த மேனியன் விழிபொழி மழையன் மூவினையைச்
செயிர்த்த சிந்தையன் தெருமரல் உழந்துழந் தழிவான்
அயிர்த்து நோக்கினும் தென்திசை யன்றிவே றறியான்
பயத்த துன்பமே உருவுகொண் டென்னலாம் படியான்.
(கம்பரா. மீட். 194.)

அரிய மஞ்சினோடு அஞ்சனம் முதலிய யாவும்
கரிய காண்டலும் கண்ணினீர் கடல்புகக் கலுழ்வாள்
உரிய காதலின் ஒருவரோடு ஒருவரை உலகில்
பிரிவெ னுந்துயர் உருவுகொண் டாலன பிணியாள்.
(கம்பரா. காட். 17.)

என்னும் பாசுரங்கள் ஈண்டு நினைத்தல் தகும்.

2. வியாபக தத்த்வம் - எங்கும் பரந்து நிறைந்த பொருள்.

3. "துழாய்" என்றதனை நோக்கி, 'இருந்த இடத்தில் இருக்கமாட்டாமல்' என்கிறார்.

மல், மடல் ஊருவாரைப் போன்று உடலிலே புழுதியை ஏறிட்டுக்கொண்டு வடிவு தெரியாதபடியாய், [1] சன்னிசுரம் வந்தவர்களைப் போன்று குளிர்ந்திருந்தது; அதனைப் பார்த்து, 'நீயும் நான்பட்டது பட்டாய் ஆகாதே?' என்கிறாள்.

கடலும் மலையும் விசும்பும் துழாய்-அளவு அற்ற பெரிய கடலும், செறிந்த மலையும், இடவெளியினைக் கொடுக்கிற ஆகாயமும் என்னும் இவற்றைத் தடவி. எம் போல் சுடர் கொள் இராப்பகல் துஞ்சாயால் தண் வாடாய் - ஆதித்தன் மறைந்த இரவோடு, ஆதித்தனையுடைய பகலோடு வேற்றுமை அற எம்மைப் போன்று உறங்குகின்றாய் இல்லை; குளிர்ந்த வாடாய்! சன்னிசுரம் பிடித்தவர்களைப் போன்று முடியுமளவினை அடைந்தாய் என்பாள் '**தண்வாடாய்**' என்கிறாள். சுடர் கொள் என்றது, சிலேடை: சுடரைக் கொண்ட, அதாவது - மறைந்த எனவும், சுடரையுடைய எனவும் இரு பொருள்படும். மறைந்த என்பதனோடு இரவையும், உடைய என்பதனோடு பகலையும் கூட்டிப் பொருள் கோடல் வேண்டும். ஆயின், 'துழாய் எம்போல்' என்பதற்கு, இவள் துழாவினாளோ? எனின், [2]''காரார் திருமேனி காணு மளவும் போய்ச், சீரார் திருவேங்கடமே திருக்கோவ, லூரே...ஊராயஎல்லாம்ஒழியாமேநான்அவனை''என்று வருதலால் தேடினாள் என்க. ஆயின், இங்குத் திருப்பாற் கடலும் பரமபதமும் கூறினாள் இலளே? எனின், அவையும் இறைவன் தங்கியிருக்கின்ற இடங்களேயாதலின், ''ஊராய எல்லாம்'' என்றதனால் பெற வைத்தாள். ஆக, திருப்பாற்கடலோடு திருமலையோடு பரமபதத்தோடு வாசியறத் [3]தேடுவார்க்குப் போலியாய் இருக்கின்றது என்றபடி.

இனி, கடலும் மலையும் விசும்பும் துழாய் என்பதற்கு, [4]''சக்கரவர்த்தியின் புதல்வர்களான இராம இலக்குமணர்கள் வனங்களிலும் மலைகளிலும் நதிகளிலும் தடாகங்களிலும் சீதா

1. 'சன்னிசுரம் வந்தவர்களைப்போன்று' என்றது, உள்ளில் வெதுப்பும், புறத்தில் குளிர்ச்சியும் தோன்றுகைக்காக. 'குளிர்ந்திருந்தது' என்றது இவளுக்கு இப்படித் தோன்றியது என்பதனைத் தெரிவித்தபடி.

2. சிறிய திருமடல். 69 - 78.

3. தேடுவார் - ஆழ்வார் நாயகியும், பரகால நாயகியும்.

4. ஸ்ரீராமா. ஆரண். 61 : 20.

'தசரத சக்கரவர்த்தியின் குமாரர்கள்' ஆகையாலே, தேடப் பிறந்தவர்கள் அல்லர் என்றும், ''சீதாம்'' என்றதனாலே, தேடிக் கண்டிலோம் என்று ஆறியிருக்கலாம் விஷயமன்று என்றும், இத்தால், அவர்கள் ஜீவிக்கை என்று ஒரு பொருளுண்டோ? ஜீவித்தல் சக்கியமன்று என்றும் உரையாசிரியர் அச்சுலோகத்திற்கு விசேடப் பொருள் அருளிச்செய்வர்.

பிராட்டியைத் தேடிக்கொண்டு திரிந்தார்கள்" என்கிறபடியே, இராம இலக்குமணர்கள் பிராட்டியைத் தேடித் திரிந்தது போன்று, வாடையும், கடலையும் மலையையும் விசும்பையும் துழாவிக்கொண்டு வந்தது என்று பொருள் கூறலுமாம்.

அடல்கொள் படை ஆழி அம்மானைக் காண்பான்-மிடுக்கை யுடைத்தான படையாகிற திருவாழியைக் கையிலேயுடைய சர்வேஸ்வரனையோ நீயும் காண ஆசைப்பட்டாய்? [1] "இது எனக்கு நோன்பு" என்னும் நிலை தவிர்ந்து, பாரதப்போரில் மூன்றும் நாள் அருச்சுனன் இளைத்துக் கைவாங்கினவாறே, செய்த சூளுறவையும் அழித்துத் திருவாழியைக் கொண்டு [2] ஸ்ரீ வீடுமரைத் தொடர்ந்தான்; ஆகலால், செய்த சூளுறவை அடியார்கட்காகத் தப்பியவனுடைய பக்ஷபாதத்திலே அகப் பட்டாய் ஆகாதே என்பாள் '**அடல் கொள் படையாழி அம் மான்**' என்கிறாள். அடல் கொள் படை - அடல் என்று மிடுக்கு. எதிரிகள் மிடுக்கைக் கொள்ளும் படை என்னுதல்; தான் மிடுக்கையுடைத்தாய்இருக்கும் படை என்னுதல்.

நீ உடலம் நோய் உற்றாயோ - கைம்மாறு கருதாது உதவி செய்யும் நீ, எல்லாப் பொருள்களுக்கும் ரக்ஷகமான சரீரத் திலே நோவு வரும்படி பட்டாய்ஆகாதே! சஞ்சாரம் இதற்கு எப்பொழுதும் உள்ளதொரு தன்மை; இதனை அறியாது, எப் பொழுதும் சஞ்சரிக்கையை நோவு கண்டது என்று இருக்

1. ஸ்ரீராமா. யுத். 18 : 33.

2. ஏஹ்யேஹி - கெட்டோடுகிறவன் பிற்காலித்து நின்று 'எங்கள் அம்மை நாயனார்' மாறி மாறி இடுகிற அடி இருக்கிற அழகு என்? புல்லாம் புஜபத்ர நேத்ர-என்றும் ஆணை மறுத்தால் சேதம் என்? சிறிச் சிவந்த கண்ணழ கைக் காணப்பெற்றால். பிரஸஹ்ய மாம் பாதய - 'ஆயுதமெடேன்' என்ற நீர் ஆயுதம் எடுத்தாலும் அடியேன் கையில் ஆயுதம் இருக்கிற வரையில் தோலேன்; ஆயுதத்தைப் போகடச் சொல்லித் தலையறுத்தருளீர். லோக நாத - உமக்கும் வீரத்துக்கும் தோலேன்; முதன்மைக்குத் தோற்பன். என்பது அவ்விடத்துப் பாரதச் சுலோகத்துக்கு உரைகாரர் அருளிச்செய்த பொருள். பார. பீஷ்ம. 59 : 98.

ஆரண கற்பித மாதவ அச்சுத ஆழி யிடைத் துயிலும்
காரண சிற்குண ரூப மலர்க்கொடி காதல் மனத்துறையும்
நாரண அற்புத வானவ ருக்கொரு நாயக நிற்பணியும்
வாரண முத்தி விசால தலத்திடை வாழ்வுற வைத்தவனே.

என வீடுமன் துதித்தலை, வில்லிபாரதம் மூன்றும் போர்ச் சருக்கத்து 14 முதல் 20-முடிய உள்ள செய்யுட்களில் காண்க.

கிறாள். ஊழி தோறு ஊழி - கல்பந்தோறும். காலம் மாறிக் கொண்டே வரவும், நோய் மாறாது ஒரே தன்மையாகச் செல்லுகின்றதாதலின் 'ஊழிதோறு ஊழி' என்கிறாள். சரீரத்தோடு முடியும்படியான நோயினைக் கொண்டாயே என்பாள் 'ஊழி உடலம் நோய் உற்றாயே' என்கிறாள். (4)

115.

ஊழிதோறு ஊழி உலகுக்கு நீர்கொண்டு
தோழியரும் யாமும்போல் நீராய் நெகிழ்கின்ற
வாழிய வானமே! நீயும் மதுசூதன்
பாழிமையிற் பட்டு அவன்கண் பாசத்தால் நைவாயே.

பொ - ரை :—உலகமெல்லாம் நிரம்பவேண்டும் நீரைக்கொண்டு காலம்உள்ளதனையும் தண்ணீர்மயமாய் இற்று விழுகின்ற மேகமே! தோழிகளையும் எம்மையும் போன்று, நீயும், மது என்னும் அரக்கனைக் கொன்ற இறைவனுடைய தோள்வலிமையில் அகப்பட்டு அவன் பக்கல் வைத்த விருப்பத்தால் வருந்துகிறாயோ? அந்தோ! இத் துன்பம் நீங்கி வாழ்ந்திடுக.

வி - கு :—உலகுக்கு-வேற்றுமை மயக்கம். நெகிழ்கின்ற வானமே எனக் கூட்டுக.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [1] அவ்வளவிலே ஒரு மேகமானது கரைந்து நீராய் விழப்புக்கது; நீயும் அவனுடைய பகைவர்களைக் கொல்லுகின்ற பண்பிலே அகப்பட்டாய்ஆகாதே? என்கிறாள்.

ஊழிதோறு ஊழி நீராய் நெகிழ்கின்ற வானமே என்க. உலகுக்கு நீர் கொண்டு-உலகம் அடங்க வெள்ளம் இடவேண்டும்படி நீரை முகந்துகொண்டு. உனக்கு நல்ல [2] நிதரிசனம் உண்டு. தோழியரும் யாமும் போல் - என் இழவுக்கு [3] எம்மின் முன் அவனுக்கு மாயும் தோழிமாரையும் என்னையும் போன்று. நீராய் நெகிழ்கின்ற - கரைந்து நீராய் விழுகிற. வானமே - மேகமே! வானம் - மேகம்; [4] "வான் கலந்த வண்ணன்" என்றார் பூதத்தார்; [5] "வானம் வழங்காது எனின்" என்றார் திரு

1. "நீராய் நெகிழ்கின்ற வானமே! மதுசூதன் பாழிமையிற் பட்டு" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. நிதரிசனம் - எடுத்துக்காட்டு.

3. "யாமுடைத் துணையென்னும் தோழிமாரும் எம்மின்முன் அவனுக்கு மாய்வராலோ" திருவாய். 9. 9 : 5.

4. இரண்டாந் திருவந். 75.

5. திருக்குறள் - வான்சிறப். 9.

வள்ளுவர். வாழிய - உலகத்திற்கு உபகாரகமாய் இருக்கிற நீ, உன்னுடைய கண்ணீர் நீங்கி வாழ்ந்திடுக. இனி, நீராய் நெகிழ்கின்ற வானமே என்பதற்கு, மிக்க சூக்ஷ்மமான ஆகாயமானது நீரை முகந்துகொண்டு சிதறி உருகி நீராய் விழுகிற வானமே! என்று கூறலுமாம். வானம் - ஆகாயம்.

நீயும்-உலகத்திற்கு உபகாரகமாக வடிவு படைத்த நீயும். மதுசூதன் பாழிமையில் பட்டு அவன்கண் பாசத்தால் நைவாயே - பகைவர்களை அழிக்கும் பண்பினனானவனுடைய வீர குணத்திலே அகப்பட்டு, அவன் பக்கல் உண்டான விருப்பத்தாலே பிழைக்கவும் மாட்டாமல், நோவுபடுகிறாய் ஆகாதே? பாழிமை - வலிமை. இடமுடைமை என்றுமாம். உலகத்தில் பொருள்களுக்குத் தகுதியாகவே நசையும் இருக்கும்; எவ்வளவு நசைஉண்டு, மறுதலையில் அவ்வளவும் நைவும்உண்டாம்; ஆதலின், '**மதுசூதன்கண் பாசத்தால் நைவாயே**' என்கிறாள். நைவாயே என்ற ஏகாரத்தால் நைவே பலம் என்றபடி. (5)

116.

நைவாய எம்மேபோல் நாண்மதியே! நீ இந்நாள்
மைவான் இருள் அகற்றாய் மாழாந்து தேம்புதியால்
ஐவாய் அரவணைமேல் ஆழிப் பெருமானார்
மெய்வாசகம் கேட்டு உன் மெய்ந்நீர்மை தோற்றாயே?

பொ-ரை:—ஒரு கலையோடு கூடியிருக்கின்ற சந்திரனே! வருந்துதலையுடைய எம்மைப் போன்று, இக் காலத்தில் நீ ஆகாயத்திலிருக்கின்ற மிகக் கரிய இருளினைப் போக்குகின்றாய் இல்லை; ஒளியெல்லாம் மழுங்கி அழிகின்றாய்; ஆதலால், ஐந்து வாயினையுடைய பாம்பாகிய படுக்கையின்மேல் தங்கியிருக்கின்ற, சக்கரத்தைத் தரித்த இறைவனுடைய பொய்வார்த்தையைக் கேட்டு, உன் சரீரத்திலுள்ள ஒளியை இழந்தாயோ? என்கிறாள்.

வி - கு:—அகற்றாய்: முற்று; எச்சமுமாம். மாழாந்து - ஒளி மழுங்கி. தேம்புதல் - கெடுதல்; "புட்டேம்பப் புயன்மாறி" (பட்டினப்பாலை. 4.) என்றார் பிறரும். கற்கறித்து, 'நன்கட்டாய்' என்புழிப் போன்று, ஈண்டு 'மெய் வாசகம்' என்பது குறிப்புமொழி. எம்மேபோல் மாழாந்து தேம்புதி எனக் கூட்டுக.

ஈடு:—ஆறும் பாட்டு. [1] மேகத்தினருகே ஒரு கலையை யுடைய சந்திரன் தோன்றினான்; அவனைப் பார்த்து, 'உன் வடிவில் எழில் இழந்தாய் ஆகாதே?' என்கிறாள்.

நைவாய எம்மே போல் - நைவையுடைய எங்களைப் போன்று. இனி, நைவு தான் ஒரு வடிவு கொண்டாற்போன்று இருக்கின்ற எங்களைப் போன்று என்று கூறலுமாம்; [2] "பூமியில் நின்றும் தோன்றினவளைப் போன்றிருந்தவளும், அதனை அழித்து அலங்காரம் செய்கின்றவர்கள் இன்மையின் ஒப்பனை அழிந்திருந்தவளும், பெருமாள் வரினும் [3] 'இவ் ஆஶ்ரயத்தை உண்டாக்க ஒண்ணாது' என்னும்படி முதலிலே தாமரை குடி போன பொய்கை போன்றிருந்தவளும், போய்த் தேய்ந்தற்ற படிக்கும் பசலைக்கும் நிதர்சனமாகச் சொல்லும்படி இருந்தவளும், 'நற்சரக்குக்கு வந்த அழுக்கு' என்று தோற்ற இருந்தவளும், [4] அம்புவாய் உள்ளே கிடக்கப் புறம்பே சமாதானம் பண்ணினாற் போலே 'அகவாயில் இழவு பெரிது' என்று தோற்ற இருந்தவளும், [5] பெருங்காற்றால் சிதற அடியுண்ட மேகதுண்டங்கள் போல் இருந்தவளும் ஆன சீதை" என்றார் வால்மீகிபகவானும். நாள்மதியே-கலைகள் நிறைந்த சந்திரனே! [6] முன்னர், கலைகள் நிறைந்திருத்தலைக் கண்டிருந்தவள் ஆதலின் '**நாள்மதியே**' என்கிறாள். இனி, 'நாட்பூ' என்னுமாறு போன்று, இளமதியே! என்று பொருள் கூறலுமாம். நீ-காட்சிக்கு இனியனான நீ. இந்நாள் - இக் காலம். மை வான் இருள் அகற்றாய் - ஆகாயத்தில் கறுத்த இருளைப் போக்க மாட்டுகின்றிலை. இனி, இதற்கு, கறுத்து வலியதான இருளைப் போக்கமாட்டுகின்றிலை என்று பொருள் கூறலுமாம். வான்-சிலேடை: ஆகாயமும், வலிமையும்.

இப்படி, 'குறை அற்று இருக்கக் கடவ நீ, இக் காலத்தில் வந்தவாறே போக்கமாட்டுகின்றிலை என்பாள் '**நாள்மதியே**

---

1. மேல்பாசுரத்தில் மேகத்தைக் கூறினாள்; இப்பாசுரத்தில் சந்திரனைக் கூறுகிறாள்; காரணம் என்னை? என்னும் வினாவிற்கு விடையாக 'மேகத்தினருகே' என்று தொடங்குகிறார். ஒரு கலைச் சந்திரன்-பிரதமையில் சந்திரன்.

2. ஸ்ரீராமா. சுந். 15 : 22.

3. ஆஶ்ரயம் - உருவம்.

4. அம்புவாய் - அம்புபட்டபுண்.

5. பெருமாளுடைய திருமேனியிற் பிரிக்கப்பட்ட ஏகதேசம் என்று தோற்ற இருந்தாள் என்றபடி.

6. ஈண்டுக் கலைகள் நிறைந்த சந்திரன் எனின், பின்னர் "மாழாந்து தேம்புதியால்" என்றதனோடு முரணாகாதோ? என்னும் வினாவிற்கு விடையாக 'முன்னர்' என்று தொடங்கும் வாக்கியத்தை அருளிச்செய்கிறார்.

நீ இந்நாள் அகற்றாய்' என்கிறாள்.எதிரி எளியன் ஆனால் பகைவர்கள் கூட நின்று உருமுமாறு போன்று, மேலிடாநின்றது என்றவாறு. இதனால், இருளை ஒழிக்கவேண்டிய உன்னோடு அவ் இருளும் உடன் உள்ளதே! என்கிறாள். மாழாந்து தேம்புதி - ஒளிமழுங்கிக் குறைந்திராநின்றாய். ஐ வாய் அரவணை மேல் ஆழிப் பெருமானார் மெய்வாசகம் கேட்டு - இதனால், அவருடைய பெரும் பொய்யிலே அகப்பட்டாய்ஆகாதே நீ என்கிறாள். [1]"தம் பாம்பு போல் நாவும் இரண்டு உளவாயிற்று" என்கிறபடியே, தமக்குப் பொய்சொல்ல ஒரு வாய் உண்டாகில், தம்மைச் சேர்ந்த படைக்கு ஐந்து வாய் உண்டு என்பாள் '**ஐ வாய் அரவணை**' என்கிறாள். இதனால், அவனுக்குப் [2]பள்ளித் தோழமை பலித்தமை தெரிவித்தபடி. இனி, மற்றைப் படைகளைப் பார்ப்போமாயின், அவைகளுடைய தன்மைகள் தாம் என்னே! தாம், பகலை இரவாக்க நினைக்கின், அதற்குப் பெருநிலை நிற்கும் சக்கரம் என்பாள் '**ஆழிப் பெருமான்**' என்கிறாள்.

ஆயின், [3]புருஷகாரமாய் இருக்கும் படைகளை வெறுத்துப் பேசலாமோ? எனின், பேறு அவர்களாலே யானால், இழவிலும் இன்னாதாகப் பேசுதற்கு இடமுண்டு. அத்தகைய அவர்களும் தம் பக்கலிலே பொய் ஓத வேண்டும்படி பொய்யால் பெரியவர் என்பாள் '**பெருமானார்**' என்கிறாள். [4]"பொய்ந்நம்பி புள்ளுவன் கள்வம் பொதியறை" என்றார் **மங்கை மன்னனும்**. ஆயின், பாசுரத்தில் 'மெய்வாசகம்' என்று இருக்க, பொய்வாசகம் என்று பொருள் கூறுவது என்னை? எனின், [5]'**ஆழிப்பெருமானார் மெய் வாசகம்**' எனவே, 'பொய்' என்று பிரசித்தமாய் இருக்கும்போலே காணும். ஆயின், 'பொய்' என்னாது ஒழிவான் என்? என்னில், 'பொய்' என்னில் - நாட்டார் பொய்யைப் போன்று ஆகுமே? அதனினின்றும் வேறுபடுத்துதற்கு '**மெய்வாசகம்**' என்கிறாள். அம் மெய்வாசகம் யாது? எனின், [6]"என்னை அடைந்தவர்களை எல்லாத் துன்பத்

---

1. நாய்ச்சியார் திருமொழி. 10 : 3.
2. பள்ளி - சிலேடை : பள்ளிக்கூடமும், படுக்கையும்.
3. திருவாய்மொழி முதற்பத்து வியாக்கியானம்-150-ஆம்பக்கம் ஈண்டு ஒப்பு நோக்குக. "அருளாத திருமாலார்க்கு"
4. பெரிய திருமொழி. 10. 7 : 4.
5. ஆழிப்பெருமானார் - கண்ணபிரான்.
6. ஸ்ரீராமா. யுத். 18 : 33.

தினின்றும் நீக்கிப் பாதுகாக்கிறேன், இது எனக்கு நோன்பு" என்று கூறிய வார்த்தை. ஆயின், அவ் வார்த்தை பொய்யோ? எனின், இப்பொழுது தனக்கு உதவாமையாலே பொய் என்று இருக்கின்றாள். ஆயின், பொய் என்று இருக்கிறவள் மெய்ந் நீர்மை தோற்கக் கூடுமோ? எனின், இராமாவதாரத்தில் மெய்யும் [1] கிருஷ்ணாவதாரத்தில் பொய்யும் அன்றோ அடியார்கட்குத் தஞ்சம்; ஆகையாலே தோற்றாள்.

உன் மெய்ந் நீர்மை தோற்றாயே - உன் வடிவில் எழில் இழந்தாயே! காட்சிக்கு இனியதான தண்ணளியேயாய் உலகத்திற்கு உபகாரகமான உன் உடம்பின் ஒளியை அன்றோ இழந்தாய் என்றபடி. (6)

117.

தோற்றோம் மடநெஞ்சம்
　　எம்பெருமான் நாரணற்கு எம்
ஆற்றாமை சொல்லி
　　அழுவோமை நீ நடுவே
வேற்றோர் வகையிற்
　　கொடிதாய் எனை ஊழி
மாற்றாண்மை நிற்றியோ?
　　வாழி! கனை இருளே!

பொ - ரை :—எம்பெருமானாகிய நாராயணனுக்கு எங்கள் மட நெஞ்சத்தைத் தோற்றோம்; தோற்று, எங்களுடைய ஆற்றாமையைச் சொல்லி அழுதுகொண்டிருக்கின்ற எங்களை, செறிந்த இருளே! நீ நடுவே வந்து, பகைவர்கள் தன்மையைக் காட்டிலும் கொடுமையுடையையாய் வருத்துகின்றாய்; காலமுள்ளவரையிலும் இக் கொடுந் தன்மையிலேயே நிற்பாயோ? கொடுந்தன்மை நீங்கி வாழ்ந்திடுக.

வி - கு :—மேற்கூறிய நாரை முதலாயவற்றையும் உளப்படுத்தி நிற்றலின் 'தோற்றோம்' என்பது, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை முற்று. அழுவோம்: வினையாலணையும்பெயர். எனை என்பது, எத்தனை என்னும் பொருளையுடையது. மாற்றாண்மை - பகைமை. கனை - செறிவு.

---

1. "ஆயுதம்எடேன்" என்ற சூளுறவைப் பொய்யாக்கின கிருஷ்ணாவதாரத்தில் பொய்யும் என்றபடி. ஆயுதம் எடானாயின், வீடுமன் முதலியோர் கூறிய சூளுறவு பொய்யாதல் காண்க.

ஈடு :—ஏழாம்பாட்டு. [1] மதிகெட்டவாறே அந்தகாரம் வந்து மேலிட்டது என்கிறாள்.

இப் பாசுரத்திற்கு, [2] முன்னும் பின்னும் போருகிறபடி ஒழிய, [3] சொற்களின் நயத்தைத் திருவுள்ளம் பற்றி **எம்பெருமானார்** அருளிச்செய்து போருவது ஒன்று உண்டு; **ஆம்மங்கியம்மாளும்** அதனையே நிர்ப்பந்தித்துப் போரும். அதாகிறது - தான், பிரிவாற்றாதார் பலர் கூடக் கட்டிக்கொண்டு கூப்பிடாநிற்க, இருள் வந்து முகத்தை மறைக்க, அத்தைப் பார்த்து, [4] 'ஆற்றாமைக்குப் போக்கு விட்டுத் தரிக்க ஒட்டாதே நீ வந்து நலியக்கடவையோ?' என்கிறாள் என்பதாம்.

மடம் நெஞ்சம் தோற்றோம் - பகவத் விஷயம் என்றால் விடமாட்டாதபடி ஆசையுள்ள நெஞ்சை இழந்தோம்; இனி, இதற்கு, உரிமைப்பட்ட நெஞ்சை இழந்தோம் என்றுபொருள் கூறலுமாம். "எம்மே போல்" என்கிற பொருள்களையெல்லாம் கூட்டிக் கொண்டு சொல்லுகிறாளாதலின் '**தோற்றோம்**' என்கிறாள். எம்பெருமாற்கு - [5] கெடுவாய், வகுத்த விஷயத்திலே அன்றோ நாங்கள் நெஞ்சை இழந்தது. நாரணற்கு - 'தன்னுடைமை' என்றால் [6] வாத்சல்ய குணமுடையவனுக்கு அன்றோ இழந்தது. இனி, இதற்கு, சுலபனா யிருக்கு மவனுக்கு என்று பொருள் கூறலுமாம். எம் ஆற்றாமை சொல்லி அழுவோமை - ஆற்றாமையுடையார், தத் தமது ஆற்றாமை சொல்லிக் கூப்பிடுவர்கள் அன்றோ? நாங்கள் பெறப் போகும் பயன் ஒன்று உண்டாய் 'அத்தை விலக்கி நாம் பெறல் வேண்டும்' என்று

1. மதி - சிலேடை: அறிவும், சந்திரனும். அந்தகாரம் - இருளும், அஞ்ஞானமும்.

2. முன்னும் பின்னும் போருகிறபடியாவது :—"எம்மேபோல்" என்று மற்றைப் பொருள்களையும் உளப்படுத்திக் கூறுதல்.

3. 'சொற்களின் நயத்தைத் திருவுள்ளம் பற்றி' என்றது, "வேற்றோர் வகையில் கொடிதாய், மாற்றாண்மை நிற்றியோ" என்ற பதங்களின் நயத்தை நோக்கி என்பது.

4. 3-ஆம் பக்கம் குறிப்புரை பார்க்கவும்.

5. கெடுவாய் : வார்த்தைப்பாடு.

6. நாராயணன் என்ற சொல்லுக்கு, அன்மொழித்தொகையாகவும், நான்காம் வேற்றுமைத்தொகையாகவும் கொண்டு பொருள் கூறப்படுமாதலின், 'வாத்சல்ய குணமுடையவனுக்கு', 'சுலபனா யிருக்கு மவனுக்கு' என்று பொருள் அருளிச்செய்கிறார். நாரங்களை இருப்பிடமாக உடையவன் என்ற பொருளில் வாத்சல்யம்; நாரங்களுக்கு இருப்பிடமாக உள்ளவன் என்ற பொருளில் சுலபம். நாரம் - ஆத்மாக்கள். வாத்சல்யம் - அன்பு; (வத்சம் - கன்று.)

தான் செய்கிறாய்அன்றே! என்பாள் '**ஆற்றாமை அழுவோம்**' என்கிறாள். அவனைப்பெறவோ? போனநெஞ்சைப்பெறவோ? எங்கள் ஆற்றாமையாலே அழப் பெற்றோமோ? என்பாள் '**சொல்லி அழுவோம்**' என்கிறாள்.

நீ நடுவே - அல்லாதவற்றுக்கு உள்ளது அமையாதோ உனக்கு? என்பாள் '**நீ**' என்கிறாள். அதாவது, அவனை ஒழிந்த நம்மில் நாம் கழுத்தைக் கட்டிக்கொண்டு கிடந்து கூப்பிடுகை ஒழிய, நமக்குள் ஒருவரை ஒருவர் வருத்தும் தன்மை உளதோ? என்றபடி. நலிகைக்கு ஒரு காரணம் இல்லாதிருக்கும் நலிகின்றாயே? என்பாள் '**நடுவே**' என்கிறாள். வேற்றோர் வகையில் கொடிதாய் - பகைவர்கள் நலிகின்ற வகையைக் காட்டிலும் கொடிதாக நலிகின்றாய். பகைவர்களானாலும் நோவுபட்டாரை 'ஐயோ' என்ன அன்றோ அடுப்பது? எனை ஊழி மாற்றாண்மை நிற்றியோ - காலம் என்னும் ஒரு பொருள் உள்ளவரையிலும் பகையிலே நிற்கக்கடவையோ? இராவணன் முதலியோர்கள் பிரித்தார்கள் அத்துணையே, கூப்பிடப் பொறுத்தார்கள்; நீர்மையுடையார் கண்ணநீரை விழவிட்டார்கள்; நீர்மையுடையார்படியும் கண்டிலோம், பகைவர்கள் படியும் கண்டிலோம், உன்னுடைய தன்மை வேறுபட்டதாய் இருக்கின்றதே! என்றபடி.

வாழி-[1] காதுகரை '**உடன் பிறந்தீர்**' என்னுமாறுபோன்று 'வாழி' என்கிறாள். கனை இருளே - செறிந்த இருளே! இனி, கனைத்துக்கொண்டு செருக்கி வருகிற இருளே! என்று பொருள் கூறலுமாம்.

இனி, இப் பாசுரத்துக்குப் பொருந்திய பொருளாவது :— இருள் என்று ஒரு பொருள், அதுதான் ஒளிமழுங்கி, [2] அடங்கி இருக்கை அதன் தன்மை என்று அறியாமல், [3] காதலரைப் பிரிந்த பிரிவாலே ஒளிமழுங்கி வாய்விட்டுக் கூப்பிடவும் மாட்டாதே நோவுபடுகிறதாகக் கொண்டு, உன் இழவு கனத்திருந்ததே![4] வருத்த எம்பெருமானிடத்தில் யாமெல்லாம்நெஞ்சிழந்து

---

1. காதுகர் - கொலைஞர்.

2. அடங்கியிருத்தல் - வெளியில் புறப்படாமல் இருத்தல்.

3. பகவானைப் பிரிந்த பிரிவாலே ஒளிமழுங்கியிருப்பதாக நினைக்கிறாள்.

4. "நாரணற்கு மடநெஞ்சம் தோற்றோம்" என்பதற்குப் பொருள் - 'வருத்த, எம்பெருமானிடத்தில்' என்று தொடங்கும் வாக்கியம்.

கூப்பிடா நிற்க,[1] நீ உன் ஆற்றாமையைக் காட்டி நலிகின்றாயே! உன் நலிவு நீங்கி வாழ்ந்திடுக என்கிறாள் என்பதாம். (7)

118.

இருளின் திணிவண்ணம் மா நீர்க் கழியே! போய்
மருளுற்று இராப்பகல் துஞ்சிலும் நீ துஞ்சாயால்
உருளும் சகடம் உதைத்த பெருமானார்
அருளின் பெருநசையால் ஆழாந்து நொந்தாயே?

பொ - ரை :— இருள் செறிந்தாற் போன்று செறிந்த நிறத்தை யுடைய கரிய நீரையுடைய கழியே! மிகவும் அறிவு கெட்டு, இராப் பகல் முடிவுற்றாலும் நீ தூங்குகிறாய் இல்லை; உருண்டு வருகின்ற சகடத்தின் உருவாக அமைந்த அசுரனை உதைத்துக் கொன்ற பெருமான் திருவருள் புரிவான் என்னும் பெருவிருப்பால் ஈடுபட்டு வருந்தினாயோ? என்கிறாள்.

வி - கு :— வண்ணம் - நிறம். மா - கருமை; பெருமையுமாம். போதல் - மிகுதல்; "வார்தல் போகல் ஒழுகல் மூன்றும், நேர்பும் நெடுமையுஞ் செய்யும் பொருள" என்றார் தொல்காப்பியனார். துஞ்சுதல் - முடிவுறுதல். நசை - விருப்பம். ஆழாந்து: ஆழ்ந்து என்ற சொல்லின் விகாரம்.

ஈடு:— எட்டாம் பாட்டு. [2]அவ் இருளுக்குப் பின்னடைந்து அங்கே இங்கே திரியாநிற்க, இருள் செறிந்தாற் போலே இருப்பதொரு கழியிலே சென்று இழிந்தாள்; அது மடல் எடுப்பாரைப் போன்று கெட்டு ஓடாநிற்றலைக் கண்டு 'பாவியேன், சகடாசுரனை அழித்த அச் செயலிலே நீயும் அகப்பட்டாயோ?' என்கிறாள்.

இருளின் திணி வண்ணம் மா நீர்க் கழியே - இருளினது வயிரம் போன்று இருக்கின்ற நிறத்தையுடைத்தாய்ப் பெரிய

---

1. "வேற்றோர் வகையிற் கொடிதாய் மாற்றாண்மை நிற்றி" என்பதற்குக் கருத்துரையாக,'நீ உன் ஆற்றாமையைக் காட்டி நலிகின்றாயே'என்கிறார். உன் ஆற்றாமையைக் காட்டிப் பகைவர்கள் நலியும் வகையைக் காட்டிலும் அதிகமாக நலிகின்றாயே என்பது பொருள். "நீ நடுவே" என்பதற்கு, நாரை முதலானவற்றின் நடுவே என்பது பொருள். அதாவது-நாரை முதலானவைகள் தங்கள் வியசனத்தைக் காட்டி என்னை நலியாநிற்க, நீயும் அவை போன்று உன்னுடைய துக்கத்தைக் காட்டி நலிகின்றாயே! என்றபடி.

2. இருளுக்குப் பின், இப் பாசுரத்தில் கழியைக் கூறுதற்குரிய காரணத்தை விளக்குகிறார் 'அவ்இருளுக்குப் பின்னடைந்து' என்று தொடங்கி, 'மடலெடுத்தல்' என்பது, அகப்பொருள் துறைகளுள் ஒன்று,

கரையுமுடைத்தான கழியே? [1] வெளிறான இருள் அன்றி, இருளின் புற இதழை வாங்கி வயிரத்தைச் சேரப் பிடித்தாற் போன்றிருக்கிறது இருள் என்பாள் '**இருளின் திணி வண்ணம்**' என்கிறாள். திணி - வயிரம். இனி, [2] அச்சமான இருள் என்று பொருள் கூறலுமாம். போய் மருளுற்று - மிகவும் அறிவு கெட்டு. [3] மயர்வற மதிநலம் அருளப் பெற்றாருடைய அறிவு கேட்டிற்கும் அப்பாற்பட்டதாக இருக்கின்றதே அதனுடைய அறிவுகேடு! என்பாள் '**போய் மருளுற்று**' என்கிறாள்.

இராப் பகல் துஞ்சிலும் நீ துஞ்சாயால் - காலத்துக்கு ஓர் எல்லை காணிலும் உன் ஆற்றாமைக்கு ஓர் எல்லை காண்கின்றிலோம். உருளும் சகடம் உதைத்த பெருமானார் - காவலாக வைத்த சகடந்தானே அசுர ஆவேசத்தாலே ஊர்ந்துவர, தாயுங்கூட உதவாத சமயத்திலே முலை வரவு தாழ்த்த காரணத்தால் சீறி நிமிர்த்த திருவடிகளால் முடித்து உலகத்துக்குத் தலைவனாகிய தன்னைத் தந்த உபகாரகன். அருளின் பெருநசையால் - அத் தகைய உபகாரகன் காதலிக்கு உதவானோ? என்னும் ஆசையாலே. அருளின் கனத்துக்குத் தக்கபடியே நசையின் கனமும் இருக்குமாதலின் '**உருளும் சகடம் உதைத்த பெருமானார் அருளின் பெருநசை**' என்கிறாள். ஆழாந்து நொந்தாயே - தரைப்பட்டு நோவுபட்டாயே! என்கிறாள். (8)

119.

நொந்தாராக் காதல்நோய் மெல்லாவி உள்உலர்த்த
நந்தா விளக்கமே! நீயும் அளியத்தாய்!
செந்தா மரைத்தடங்கண் செங்கனிவாய் எம்பெருமான்
அந்தாமத் தண்துழாய் ஆசையால் வேவாயே?

பொ - ரை :—கெடாத விளக்கே! ஒருகால் வருந்த, அதனுடன் முடிந்தது என்பது இன்றி, அமையாது மேலும் மேலும் வளர்ந்து கொண்டே செல்லுகின்ற காதல் நோயானது, மிருதுவான உயிரை உள்ளே உள்ள பசைஎல்லாம் அறும்படி உலர்த்த, உலர்த்திய காரணத்தால் நீயும் இரங்கத் தக்கதாக இருக்கின்றாய்; செந்தாமரை

---

1. வெளிறு - அசாரம்; சாரமின்மை.

2. அச்சம் - வேறொன்றன் கலப்பில்லாமை.

3. இத் திருப்பதிகத்தில் இரண்டாம் திருப்பாசுரத்தில் 'நீயும்' என்ற சொல்லுக்கு எழுதிய பொருளை ஈண்டு நினைவுகூர்க.

போன்ற அகன்ற திருக்கண்களையும், சிவந்த கனி போன்ற திரு வாயினையுமுடைய எம்பெருமானுடைய அழகிய திருத்துழாய் மாலையில் வைத்த ஆசையால் வேகின்றாயோ? என்கிறாள்..

வி - கு:—நொந்து: செயவெனெச்சத் திரிபு; நோவ என்பது பொருள். ஆரா, நந்தா: ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள். அளியத்தாய்: ஒரு சொல். "அந்தமிலா அன்பு என்மேல் வைத்தாய் அளியத்தாய்" (கம்பரா. இரணியன் வதை. 136). என்றார் கம்பநாடர்.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு. [1]அக் கழிக்கு ஒரு கரை காண மாட்டாமல் மீண்டு வந்து படுக்கையிலே விழுந்தாள்; அங்கு எரிகிற விளக்கைக் கண்டாள்; அது 'உடம்பில் கை வைக்க ஒண்ணாதபடி விரஹசுரம் பற்றி எரியாநின்றது' என்று அதனைப் பார்த்து 'நீயும் நோவுபட்டாய்ஆகாதே?' என்கிறாள்.

நொந்து ஆராக் காதல் நோய் மெல் ஆவி உள் உலர்த்த-'நோவ' என்று புக்கால், நொந்து தலைக்கட்டக் கூடிய தல்லாமல் இருக்கிற காதல் நோயானது, மிருதுவாயிருக்கிற ஆத்மாவைக் குருத்துவற்றாக உலர்த்த. தொட்டார் மேல் தோஷமாம்படி காற்றுப்படவும் பொறாதிருக்கின்றதாதலின் 'மெல் ஆவி' என்கிறாள். ஆத்மாவிற்கு மென்மை:- பகவானுடைய குணங்களை அநுபவித்து நைந்திருத்தல். நந்தா விளக்கமே-கெடாத விளக்கே! ஒன்றன்பின் ஒன்று மாறிக்கொண்டே அழிகின்ற சுவாலையை 'நந்தா விளக்கே' என்றது என்னை? எனின், தான் மயக்கம் கொண்டவள் ஆதலின், மிக நுண்ணியதாக ஆய்ந்து அறியக்கூடிய சுவாலையினுடைய வேறுபாட்டினை இருந்து பார்க்கின்றாள் அல்லள்; சுவாலையானது கெடுதல்இன்றித் தொடர்ந்து வந்து கொண்டே இருப்பது போலத் தோற்றுதலின் அதனைப் பார்த்து 'நந்தா விளக்கே' என்கிறாள். அளியத்தாய் நீயும் - நாட்டுக்குக் [2]கண்காட்டியான அருமந்த நீயும். அளியத்தாய் வேவாயே-பிறர்க்கு உதவி செய்கிற உடம்பிலே உனக்கு நோவு வருவதே?

செம் தாமரைத் தடம் கண் - முகத்தைப் பார்த்துக் குளிர நோக்கினபோதைத் திருக்கண்களில் செவ்வி சொல்லுகிறது. செம் கனி வாய்-இன்சொல் சொல்லுகிறபோதைத் திருஅதரத்தில் பழுப்பைச் சொல்லுகிறது. எம்பெருமான்-நோக்காலும்

1. மேல் திருப்பாசுரத்திற்கும், இதற்கும் பொருள்இயைபு அருளிச் செய்கிறார் 'அக் கழிக்கு ஒரு கரை காணமாட்டாமல்' என்று தொடங்கி.

2. கண்காட்டியான - கண்களுக்கு விஷயங்களைக் காட்டுகிற,

புன்சிரிப்பாலும் என்னைத் தனக்கே உரிமையாக்கினவன். அம் தாமம் தண் துழாய் ஆசையால் - 'அழகிய திருத்துழாய் மாலை பெறவேண்டும்' என்னும் ஆசையாலே. [1]"கருமை நிறைந்த கண்களையுடைய பிராட்டி, கணவனாகிய ஸ்ரீராமபிரானால் மாலை அணிந்து கௌரவிக்கப்பட்டாள்" என்ற பேறு பெற வேண்டும் என்று அதனையோ நீயும் ஆசைப்பட்டாய் என்றபடி. வேவாயே-[2] உக்கக் காலுக்கு உளையக்கூடிய [3] உன் உடம்பே நெருப்பாக வேகிறாயே! என்கிறாள். (9)

120.

வேவாரா வேட்கைநோய் மெல்லாவி உள்உலர்த்த
ஓவாது இராப்பகல் உன்பாலே வீழ்த்தொழிந்தாய்
மாவாய் பிளந்து மருதிடைபோய் மண்அளந்த
மூவா முதல்வா! இனி எம்மைச் சோரேலே.

பொ - ரை :—கேசியினது வாயைப் பிளந்து, இரட்டை மருத மரங்களின் நடுவே தவழ்ந்து, உலகத்தையெல்லாம் அளந்த, காரியத்தில் சோம்புதல் இல்லாத முதல்வனே! சில நாள் வருந்த, அதனோடு அமையாது, மேன்மேலும் வருந்தும்படி வளர்ந்துகொண்டே செல்லுகின்ற வேட்கை நோயானது மிருதுவான உயிரை உள்ளேயுள்ளே பசையெல்லாம் அறும்படி உலர்த்த, இடைவிடாது எல்லாக் காலங்களிலும் உன் குணங்களைக் காட்டி, என்னை உன்பக்கல் விழவிட்டுக் கொண்டு, நீ கடக்க நின்றாய்; இனிமேல் நான் தளரும்படி விடாதொழியவேண்டும் என்கிறாள்.

வி - கு :—வேவ ஆரா என்பது, வேவாரா என விகாரப்பட்டது. வேவ ஆரா நோய் என்றும், உலர்த்த வீழ்த்து ஒழிந்தாய் என்றும், பிளந்து போய் அளந்த முதல்வா என்றும் முடிக்க. வீழ்த்தொழிந்தாய்: ஒரு சொல்லுமாம். "இருந்தொழிந்தாய்" (1. 4: 8.) என்றார் முன்னும். 'வேட்கை:-பொருள்களின் மேல் தோன்றும் பற்றுள்ளம்' என்பர் நச்சினார்க்கினியர். (தொல். எழுத். 288.) சோரேல்: எதிர்மறை ஆகாரம் கெட்டது.

---

1. ஸ்ரீராமா. அயோத். 16: 21.

2. உக்கம் - விசிறி; "உக்கமுந் தட்டொளியும் தந்து" என்பது திருப்பாவை. கால் - காற்று. உளைதல் - கெடுதல்.

3. "ஆதிவெந் துயரலால் அருந்தல் இன்மையால்
ஊதுறப் பறப்பதாய் உலர்ந்த யாக்கை" (கம்பரா. மீட். 249.)

ஈடு :—பத்தாம் பாட்டு. இவள் துன்பமெல்லாம் தீர வந்து கூடின எம்பெருமானைக் குறித்து, 'இனி ஒருநாளும் என்னை விடாதொழியவேண்டும்' என்கிறாள்.

வேவ ஆரா வேட்கை நோய் - 'வேவ' என்று தொடங்கி னால், ஒருகால் வெந்து முடிவுபெறாது மேலும் மேலும் வெந்துகொண்டே இருத்தலின் '**ஆரா வேட்கை நோய்**' என் கிறாள். ஆயின், உலகத்தில் வெந்து முடிவு பெறவில்லையோ? எனின், [1] அல்லாத நெருப்பைப் போல் அன்று; கேவல அக்நி யாகில் [2] அதாஹ்யமாயிருக்கும்; காதல் நோயாகிய நெருப்புக்கு உள்ளதொரு தன்மை இது. [3] "வணங்கத் தக்க பிராட்டியே! உம்மைப் பார்க்காத காரணத்தால், எரிகின்ற மிகப் பெரிய நெருப்பினால் நெருப்பு மலை எரிவது போன்று வருந்துகிறார் அவ் இராமபிரான்" என்றார் வால்மீகி பகவான். ஆக, வெந்த இடமே விரகாக எரிக்கிற வேட்கை நோய் என்றபடி. மெல் ஆவி உள் உலர்த்த - சரீரத்தில் உண்டான மிருதுத் தன்மை இவட்கு ஆத்மாவிலும் உண்டாய் இருத்தலின் '**மெல் ஆவி**' என்கிறாள். உள்ளே பிடித்துப் புறம்பே வர வேவாநின்ற தாதலின் '**உள் உலர்த்த**' என்கிறாள். [4] "காட்டிலுள்ள மரத்தை அம் மரத்தினுள்ளே மறைந்திருக்கும் நெருப்பானது உள்ளே இருந்து எரித்துக்கொண்டு வருவது போன்று, சோக மாகிற நெருப்பு, மனக் கவலையாகிற நெருப்போடு கூடி, ஸ்ரீ பரதாழ்வானை எரித்தது" என்பது ஸ்ரீ ராமாயணம்.

ஓவாது இராப் பகல் - வேவ ஆராத வேட்கைநோய் போன்று, இராப் பகலும் ஓவாது ஒழிதலின் '**ஓவாது இராப் பகல்**' என்கிறாள். உன்பாலே வீழ்த்தொழிந்தாய் - அகப் பட்டார்க்கு மீள ஒண்ணாத உன் பக்கலிலே விழ விட்டுக் கொண்டாய். இனி, இதற்கு, உன்பக்கலிலே விழ விட்டுக் கொண்டு, முகங்காட்டாமல் கடக்க நின்றாய் என்று பொருள்

1. நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.
தொடிற் சுடினல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ.

என்னும் குறட்பாக்கள் ஈண்டு ஒப்பு நோக்குக.

2. அதாஹ்யமாயிருக்கும் - எரிக்காமலிருக்கும்.

3. ஸ்ரீராமா. சுந்த. 35 : 44.

4. ஸ்ரீராமா. அயோத். 85 : 17.

கூறலுமாம். இப் பொருளுக்கு 'வீழ்த்தொழிந்தாய்' என்பது இரண்டு சொற்கள். மா வாய் பிளந்து மருதிடை போய் மண் அளந்த மூவா முதல்வா - கேசி வாயை வருத்தம் இன்றிக் கிழித்து, இரட்டை மருத மரங்களின் நடுவே போய், மஹாபலி கவர்ந்துகொண்ட பூமியை எல்லை நடந்து மீட்டுக்கொண்டு, இப்படி உதவிகளைச் செய்து, பின்னையும் ஒன்றும் செய்யாதானாய்க் குறைப்பட்டு, இவற்றின் இரக்ஷணத்திலே முயற்சி உள்ளவனாக இருக்கின்றவனே! இனி, [1]'மூவா முதல்வா' என்பதற்கு, இப்படி எல்லாம் செய்தும் ஒன்றும் செய்யாதாரைப் போன்று உலகைப் படைத்தல் முதலியவற்றைச் செய்தவனே! என்று பொருள் கூறலும் ஒன்று.

இனி எம்மைச் சோரேல்-[2] கேசி தொடக்கமான விரோதிகளைப் போக்கியது போன்று, தன் விரோதியையும் போக்கி, அவன் வந்து முகங் காட்டச் சொல்லுகிறாள். இனி, தம்முடைய ஆபத்தின் மிகுதியாலே 'வந்து முகங்காட்டும்' என்னும் விசுவாசத்தாலே சொல்லுகிறாள் என்று கோடலுமாம். [3]"கழிந்து போன காலத்தைக் குறித்துத் துக்கத்தால் பீடிக்கப் பட்டவராகிச் சோகிக்கிறார்" என்கிறபடியே, முன்புள்ள காலம் இழந்ததாகிலும் இனி மேலுள்ள காலம் இவ் ஆத்மாவைக் கைவிடாது ஒழியவேண்டும் என்பாள் 'இனி' என்கிறாள். 'போன காலத்தை மீட்க ஒண்ணாது' என்று அதற்குச் சோகிக்கிறாள் என்றபடி. இப்படிச் சோகித்தார் உளரோ? எனின், [4]"என்னுடைய காதலியானவள் தூரத்திலிருக்கிறாள் என்று அதற்குச் சோகிக்கிறேன் அல்லேன், அது ஒரு பயணம் எடுத்துவிடத் தீரும்; வலிய அரக்கனாலே பிரிவு வந்தது என்று அதற்குச் சோகிக்கிறேன் அல்லேன், அது அவன் தலையினை

---

1. மூவாமை = அழியாமை; நித்தியம் என்றபடி. முதல்வன் = உலகைப் படைத்தவன் என்பது பொருள். முன்னைய பொருளில் 'ஒன்றுஞ் செய்யாதானாய்க் குறைப்பட்டு' என்றது, "மூவா" என்ற சொல்லின் பொருள்; மூவா = முடியாத; சோம்பாத என்றபடி. முதல்வன் = ரக்ஷகன்.

2. "இனி" என்பதற்கு, இரண்டு வகையில் பாவம் அருளிச்செய்கிறார் 'கேசி தொடக்கமானார்' என்று தொடங்கி இரண்டு வாக்கியங்களால்.

3. "இனி" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கழிந்து போன' என்று தொடங்கி. இது, ஸ்ரீராமா. கிஷ்கிந். 30; 3.

4. ஸ்ரீராமா. யுத்த. 5; 5.

அறுக்கத் தீரும்; இது ஒன்றுமே எனக்குச் சோகத்திற்குக் காரணம்; [1]போன பருவம் இப்பால் மீட்க ஒண்ணாதே!" என்றார் ஸ்ரீராமபிரான். (10)

121.

சோராத எப்பொருட்கும் ஆதியாம் சோதிக்கே
ஆராத காதல் குருகூர்ச் சடகோபன்
ஓரா யிரம்சொன்ன அவற்றுள் இவை பத்தும்
சோரார் விடார்கண்டீர் வைகுந்தம் திண்ணனவே.

பொ - ரை :—ஒன்றும் ஒழியாத எல்லாப் பொருள்கட்கும் மூல காரணனான பரஞ்சோதி உருவமாக இருக்கின்ற இறைவனுக்கு, அமையாது மேலும் மேலும் வளர்கின்ற காதலையுடைய திருக் குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபராலே அருளிச் செய்யப்பட்ட ஒப்பற்ற ஆயிரம் திருப் பாசுரங்களுள் இப் பத்துத் திருப்பாசுரங்களையும் நழுவ நில்லாதவர்கள் (கற்றுவல்லவர்கள்) வைகுந்தம் அடைதல் உறுதியாம் என்றவாறு.

வி - கு:—'சோராத' என்பது, பொருள்களின் குறைவின்மையைக் காட்ட வந்தது; சோர்தல் - நழுவுதல். சோரார்: வினையாலணையும் பெயர். கண்டீர்: தெளிவின்கண் வந்தது. திண்ணன: ஐயமின்மையின்கண் வந்தது.

ஈடு :—[2]இத் திருவாய்மொழி கற்றார், கண்ணாற் காணப்பட்டன எல்லாம் பகவானைப் பெறுமையாலே நோவுபடுகிற சம்சாரத்திலே இருந்து நோவுபடாமல், கண்டார் எல்லாம் பகவானைப் பெற்றுக் களித்து வாழும் நாட்டிலே புகப்பெறுவர் என்கிறார்.

சோராத எப்பொருட்கும் ஆதியாம் சோதிக்கு - இவ்வளவிலே வந்து இவரோடே கலந்து இவரை உளராக்குகையாலே, ஒன்றும் ஒழியாதபடி எல்லாப் பொருள்கட்கும் ஈஸ்வரனுமாய், இவரோடே வந்து கலந்து அத்தாலே ஒளி உருவனுமாய்இருந்தான். இவர் ஒருவரையும் சோரக் கொடுக்கவே, எல்லாப் பொருள்கட்கும் ஈஸ்வரனாயுள்ள தன்மை அழியுமாத

1. அனையவை போற்றி நினைஇயன நாடிக்காண்
வளமையோ நாளும் செயலாகு மற்றிவள்
முனைநிரை முறுவலார் ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையும் தருவதோ இறந்த பின்னே. (கலித். 15.)
என்னும் பகுதி ஈண்டு ஒப்புநோக்கல் தகும்.

2. "இவை பத்தும் சோரார் விடார் கண்டீர் வைகுந்தம்" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை. இவை பத்தும் கற்றார்க்கு ஆழ்வாருடைய பா(ஸா)வ விருத்தியுண்டாம் என்பது கருத்து.

லின், இவர்க்கு வந்து முகங் காட்டுதற்கு முன்பு எல்லாப் பொருள்கட்கும் ஈஸ்வரனாய் உள்ள தன்மையும் அழிந்தது போலே கிடந்தது; இவர் இழவு தீர வந்து முகங்காட்டின பின்பு எல்லாப்பொருள்கட்கும் நிர்வாஹகன் ஆனான் என்பார், **'சோராத எப்பொருட்கும் ஆதி'** என்கிறார். பேறு இழவுகள் இவரது அன்றி, 'தன்னது' என்னுமிடம் வடிவில் புகரிலே தோற்றநின்றானாதலின் **'சோதிக்கு'** என்கிறார். இதனால்,'செய்ய வேண்டியனவற்றைச் செய்து முடித்தவனாய் இராநின்றான்' என்பதனைத் தெரிவித்தபடி. ஆராத காதல் - இத் திருவாய் மொழியில் சொல்லப்பட்ட பொருள்: கண்ணால் காணப்பட்ட பொருள்கள் எல்லாம் பகவானைப் பெறாத காரணத்தாலே தம்மைப் போலே நோவு படுகிறனவாகக் கொண்டு, அவற்றுக்குமாகத் தாம் நோவுபடும்படியான [1] அபிநிவேச மாதலின் அதனைத் தெரிவிப்பதற்கு **' ஆராத காதல் '** என்கிறார். காதல் குருகூர்ச் சடகோபன்-காதலைக் கொண்டே இவரை நிரூபிக்க வேண்டி இருத்தலின் **'காதல் சடகோபன்'** என்கிறார். இது, தற்புகழ்ச்சி அன்றோ? எனின், [2] தம் படி சொல்லும்போதும் தாமே சொல்லவேண்டுமே.

சொன்ன அவற்றுள் - இக் காதலோடே அருளிச்செய்த ஆயிரத்துள். அவற்றுள் இவை பத்தும் - அல்லாதவை ஒரு தலையாக, இத் திருவாய்மொழி ஒரு தலையாம்படி அக் காதலை வாய்விட்டுக் கூறிய பதிகமாதலின் **' அவற்றுள் இவை பத்தும்'** என்கிறார். இவை பத்தும் சோரார் விடார் கண்டீர் வைகுந்தம்- இங்கே இருந்து, கண்ணுக்கு இலக்கான பொருள்கள் அடங்கலும் பகவானைப் பெறாத காரணத்தால் நோவுபடுகிறனவாக அநுசந்திக்குமவர்கள், இவ் இருப்பை விட்டுக் கண்ணால் கண்டார் அடங்கலும் பகவானைப் பெற்றமையால் களிக்கும் நித்திய விபூதியை விடாமல் நித்திய அநுபவம் பண்ணப் பெறுவர்கள். ' கண்டீர் ' என்று கையெடுத்துக் கூப்பிடுகிறார். ' திண்ணன ' என்றது,ஐயமின்மையைக் குறிக்க வந்தது. இங்கே உள்ள சிலரைப் பற்றிச் சொல்லிற்று ஓர் அர்த்தமாகிலன்றே, ஐயம் திரிவுகள் உள்ளனவாம்? பகவானுடைய பிரபாவத்தைப் பற்றிச் சொன்னதாகையாலே இது தனக்கு எங்கேயாயினும் சூளுறவு செய்யலாம் என்றபடி.

---

1. அபிநிவேசம் - ஊக்கமிகுதி ; அன்பின் பெருக்கு.

2. " தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோர்க்கே "
என்றார் நன்னூலார்.

இத் திருவாய்மொழியில், முதற்பாட்டிலே தொடங்கி, நாரை தொடக்கமாக, அன்றில் கடல் காற்று மேகம் சந்திரன் இருள் கழி விளக்கு இப் பொருள்களைக் குறித்துச் சோகித்து மிகவும் தளர்ந்த அளவிலே அவன் வந்து முகங்காட்ட, 'இனி என்னை விடாதொழியவேண்டும்' என்று கூறி, இத் திருவாய்மொழி கற்றார்க்குப் பலத்தைச் சொல்லித் தலைக்கட்டினார். (11)

—o—

திருவாய்மொழி நூற்றந்தாதி

வாயும் திருமால் மறையநிற்க ஆற்றாமை
போய்விஞ்சி மிக்க புலம்புதலாய்—ஆய
அறியா தவற்றோடு அணைந்தழுத மாறன்
செறிவாரை நோக்கும் தணிந்து. (11)

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

இரண்டாந் திருவாய்மொழி—“திண்ணன் வீடு”

முன்னுரை

—o—

ஈடு :—மேல் திருவாய்மொழியில், இவருக்குப் பிறந்த ஆற்றாமை, பேச்சுக்கு நிலம் இல்லாததாக இருந்தமையின் [1]‘கடல் வெதும்பினுல் விளாவ நீரில்லை’ என்னுமாறு போன்று, ஆற்றாமையோடே முடிந்துபோமித்தனை என்று இருந்தார். பின்னர், அவன் வந்து முகங்காட்டினவாறே ஆற்றாமை புக்க இடம் கண்டிலர்; ‘இதற்கு அடி என்?’ என்று பார்த்து ஆராய்ந்தவாறே, மற்றைப் பொருள்களினுடைய பேறு இழவுகளின் அளவு அல்லாத இறைவனுடைய வேறுபட்ட சிறப்பாக இருந்தது; அதாவது—பிரிந்தபோது தன்னை ஒழிய வேறொன்று தோன்றாதபடியாய், கலந்தபோதும் தன்னை ஒழிய வேறொன்று தோன்றாதபடியான இறைவனுடைய [2]வைலக்ஷண்யமாய் இருந்தது என்றபடி. ‘இது தனக்கு அடி என்? என்று பார்த்தவாறே, [3]எல்லா நற்குணங்களையும் உருவமாக உடையவன் ஆகையாலேயாய் இருந்தது; ‘இது தனக்கு அடி என்?’ என்று பார்த்தவாறே, சர்வேஸ்வரன் ஆகையாலேயாய் இருந்தது. ஆபின், சமஸ்த கல்யாண குணாத்மகனாய் இருப்பின், சர்வேஸ்வரனாயும் இருத்தல் வேண்டுமோ? எனின், [4]“உயர்வற உயர்நலம் உடையவன்” என்றால், “அயர்வறும் அமரர்கள் அதிபதி” என்றே தோன்றுமாதலின், எல்லா நலமும் உடையவனே அமரர்கள் அதிபதியாயும் இருத்தல் வேண்டும். ஆக, இவ் வகையில் ஒன்றைப்பற்றி ஒன்றாக இடத்

1. “குன்றம் உருண்டால் குன்றி வழியடை ஆகாதவாறு போலவும், யானை தொடுஉண்ணின் மூடும் கலம் இல்லது போலவும், கடல் வெதும்பினுல் விளாவ நீரில்லது போலவும்” (இறை. களவியலுரை.) என்னும் பகுதி ஈண்டு ஒப்புநோக்குக.

2. வைலக்ஷண்யம் - வேறுபட்ட சிறப்பு.

3. ‘சமஸ்த கல்யாண குணாத்மகன்’ என்பது, நற்குணக் கடலாய் உள்ளவன் இறைவன் என்றபடி.

4. திருவாய். 1. 1: 1.

“இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு” என்ற திருக்குறளையும், “இறைமைக் குணங்களிலராயினாரை உடையரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின், அவை முற்றுமுடைய இறைவன் புகழே ‘பொருள்சேர் புகழ்’ எனப்பட்டது” என்ற அதனுரையையும் ஈண்டு ஒப்புநோக்குக.

திற்கு ஏற்பத் தோன்றிய இறைமைத் தன்மையினை அருளிச் செய்கிறார்[1] இத் திருவாய்மொழியில்.

இனி, 'மேல் திருவாய்மொழியின் ஈற்றில், "மூவா முதல்வா" என்றார்; அங்கு "முதல்வா" என்றதனுல் தோன்றிய முதன்மையினை - காரணத்வத்தை இத் திருவாய்மொழியில் விரித்து அருளிச்செய்கிறார்' என்று பணிப்பர் **திருக்குருகைப்பிரான் பிள்ளான்.**

ஆயின், முதல் திருவாய்மொழியிலும் சர்வேஸ்வரனுந் தன்மையினை அருளிச்செய்தனரே? எனின், [2]'ஒருகால் சொன்னோம்' என்று கைவாங்கி இருக்கவல்லர் அல்லர் இவர்; ஒருகால் சொல்லிற்று என்று கைவாங்கி இருக்கலாம் விஷயம் அல்லன் அவன். இனி, பகவத் விஷயத்தில் கூறியது கூறல் என்ற குற்றமும் ஆகாது. யாங்ஙனம்? எனின், ஒரு குணத்தையே எல்லாக்காலமும் அநுபவிக்கவல்லார் ஒருவர் இவர்; ஒரு குணந் தன்னையே 'இதற்கு முன்பு அநுபவிப்பித்தது இக் குணம்' என்று தோன்றாதபடி கணந்தோறும் புதுமை பிறப்பித்து அநுபவிப்பிக்க வல்லான் ஒருவன் அவன். ஆயின், கணந்தோறும் புதுமை தோன்றுமோ? எனின், பயிலாநிற்கச் செய்தே [3]"பண்டு இவரைக் கண்டு அறிவது எவ் ஊரில் யாம் என்றே பயில்கின்றாளால்" என்றார் திருமங்கைமன்னன்; [4]"எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டு ஊழி ஊழிதொறும், அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆராவமுதம்"என்றார் இவர் தாமும். ஆகையாலே அன்றே, ஒரு பொருளே நித்தியப் பிராப்பியம் ஆகிறது. ஆயினும், முதல் திருவாய்மொழிக்கும், இத் திருவாய்மொழிக்கும் வேற்றுமையும் உண்டு:—முதல் திருவாய்மொழியில் கூறிய பரத்துவம், சுவாநுபவமாய் இருக்கும்; இங்கு, அந்தப் பரத்துவந்தன்னை எல்லாரும் அநுபவிக்கலாம்படி பிறர் நெஞ்சிலே படுத்துகிறார் ஆகையாலே பரோபதேசமாய் இருக்கும். அங்கு, விதிமுகத்தால் பரத்துவத்தை அருளிச்செய்தார்;

1. இதனுல், மேல் திருவாய்மொழிக்கும், இத் திருவாய்மொழிக்கும் பொருள்இயைபு அருளிச்செய்கிறார்.

2. முதல் திருவாய்மொழியில் கூறிய பரத்துவத்தையே ஈண்டும் கூறுவது, கூறியது கூறல் ஆகாமைக்குக் காரணம் அருளிச்செய்கிறார் 'ஒரு கால் சொன்னோம்' என்பது முதல் 'இங்கு அவதாரங்களில் முதன்மை' என்றது முடிய.

3. பெரிய திருமொழி. 8. 1: 9.

4. திருவாய். 2. 5: 4.

இங்கு, [1] விதிமுகம் மறைமுகம் என்னும் இரண்டாலும் பரத்துவம் சொல்லுகிறார். அங்கு, [2] சுருதிச் சாயையாலே பரத்துவஞ் சொன்னார்; இங்கு, இதிகாச புராணங்கள் மூலமாகப் பரத்துவஞ் சொல்லுகிறார். [3] அங்கு, முதன்மையில் முதன்மை; இங்கு அவதாரங்களில் முதன்மை.

122.

திண்ணன் வீடு முதல் முழுதும் ஆய்
எண்ணின் மீதியன் எம்பெருமான்
மண்ணும் விண்ணும் எல்லாம் உடன் உண்ட நம்
கண்ணன் கண் அல்லது இல்லை ஓர் கண்ணே.

பொ - ரை:—என்றும் அழியாத பரமபதம் முதலான எல்லா உலகங்கட்கும் உரியவனாய், எல்லையற்ற நற்குணங்களையுடையனாய், அக்குணங்களைக் காட்டி என்னை அடிமை கொண்டவனாய், இவ் உலகம் தெய்வ உலகம் முதலான எல்லா உலகங்களையும் ஒருசேர உண்டவனாய் உள்ள நம் கண்ணபிரானே உலகத்திற்கெல்லாம் களைகண்; அவனை அல்லது களைகண் ஆவார் ஒருவரும் இலர்.

வி - கு:—திண்ணன் என்பது, திண்ணம் என்பதன் விகாரம். திண்ணம் என்பது, வீட்டிற்கு அடைமொழி. இனி, இதனை 'இல்லை ஓர் கண்; இது திண்ணம்' எனக் கூட்டிப் பூட்டுவிற்பொருள்கோளாக உரைத்தலும் அமையும். இனி, திண் நல் எனப் பிரித்தலுமாம்.

ஈடு:—முதற்பாட்டு. இத் திருவாய்மொழியில் சொல்லப் புகும் பரத்துவத்தைத் தொகுத்து அருளிச்செய்கிறார்.

திண்ணன் வீடு முதல் முழுதுமாய் - திண்ணியதான பரமபதம் தொடக்கமான எல்லா உலகங்களையு முடையனாய். திண்

1. "எல்லாம் உடன் உண்ட நம் கண்ணன்" என்றது, விதிமுகத்தாற் கூறியது. "அல்லது இல்லை ஓர்கண்" என்றது மறைமுகத்தாற் கூறியது.

2. 'சுருதிச்சாயை' என்றது - சாமாநாதிகரண்யம். 'இதிகாச புராணங்கள் மூலம்' என்றது, வையதிகரண்யம்; "மா பாவம் விட அரற்குப் பிச்சை பெய் கோபாலன்' என்றது போல்வனவற்றைத் திருவுளத்தே கொண்டு கூறுகிறார்.

3. "அயர்வறும்அமரர்கள் அதிபதி" என்றதை நோக்குக. 'இங்கு அவதாரங்களில் முதன்மை' என்றது, "எல்லாம் உடன் உண்ட நம் கண்ணன் கண்" என்றது போல்வனவற்றைத் திருவுளத்தே கொண்டு அருளிச் செய்வது.

ணம் என்றது உறுதி என்றபடி. இது பரமபதத்திற்கு அடைமொழி. உறுதியாவது :-[1] ஆவிர்ப்பாவ திரோபாவ ஜன்ம நாச விகல்பங்கள் என்னுமவை இல்லாமையாலே கர்மம் காரணமாக வரும் அழிவு இல்லாமை. ஆயின், விமானம் கோபுரம் மண்டபம் முதலியனவாக நிலைமாறுதல் நித்திய விபூதியில் உளவே? எனின், அவை இச்சை காரணமாக வருகின்றவை ஆதலின் குற்றம் அன்று; அவை அழிவாயும் தோற்றா. எவ்வாறாயினும், இவ் உலகங்களைப் போன்று கருமங்களின் காரணமாக வருகின்ற தோற்றக் கேடுகள் இலவாதலின் '**திண்ணம்**' என்கிறார். எண்ணின் மீதியன் - எல்லை இல்லாத கல்யாண குணங்களையுடையவன். ஆக, இவ் இரண்டாலும் எல்லா உலகங்களையும், எல்லா நற்குணங்களையும் உடையவன் என்பதனைத் தெரிவித்தபடி.

இனி, [2] திண்ணன் வீடு முதல் முழுதுமாய் என்பதற்கு, மோக்ஷம் கைவல்யம் செல்வம் ஆகிற உறுதிப் பொருள்களைக் கொடுக்கிறவன் என்றும், எண்ணின் மீதியன் என்பதற்கு, எண்ணுக்கும் மேற்பட்ட மோக்ஷம் முதலான உலகங்களை உடையவன் என்றும் கூறலுமாம். அன்றி, திண்ணன் வீடு முதல் முழுதுமாய் என்பது, மோக்ஷம் முதலான உறுதிப் பொருள்களைக்கொடுக்கிற கொடையாகிற குணம் ஒன்றனையே கூறுவதாகக் கொண்டு, எண்ணின் மீதியன் என்பது, எண் இல்லாத மற்றை நற்குணங்களைக் கூறுகிறது என்று கோடலுமாம். ஆக, குணங்களாலேயாதல், உலகங்களாலேயாதல் வந்த அளவிடமுடியாத தன்மையைச் சொல்லுகிறது. எம்பெருமான் - குணங்களையும் உலகங்களையும் உடையனாய் இருக்கிற இருப்பைக் காட்டி என்னை எழுதிக்கொண்டவன்.

---

1. ஆவிர்ப்பாவம் - படைக்கப்படுகின்ற காலத்தில் படைக்கப்படுதல். திரோபாவம் - மறைதல். ஜன்மம் - இடையிடையே தோன்றுதல். நாசம் - அழிக்குங்காலத்தில் அழிக்கப்படுதல்.

2. "திண்ணன் வீடு முதல் முழுதுமாய் எண்ணின் மீதியன்" என்பதற்கு மூன்றுவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். 'இனி' என்று தொடங்குவது இரண்டாவது பொருள்.

இரண்டாவது பொருளில், கொடுத்தலாகிய குணம் ஒன்றனையே கூறினாராயினும், உபலக்ஷணத்தால் மற்றைக் குணங்களையும் கொள்க. ஈண்டு, உபலக்ஷணத்தால் மற்றைக் குணங்களையும் கொள்ள வேண்டுவது என்னை? எனின், மூன்றாவது பொருளில், 'மோக்ஷம் முதலான உறுதிப்பொருள்களைக் கொடுக்கிற கொடையாகிற குணம்ஒன்றனையே கூறுவதாகக் கொண்டு' என்று கூறுவதனால் என்க.

மண்ணும் விண்ணும் எல்லாம் உடன் உண்ட நம் கண்ணன்-பூமியையும் தெய்வ உலகங்களையும் வெள்ளம் கொள்ளப் புக, அவற்றுள் ஒன்றும் தப்பாதவாறு, ஒரேகாலத்தில் அவற்றை எல்லாம் எடுத்துத் தன் திருவயிற்றிலே வைத்துக் காத்த நம் கண்ணன். காத்தல் அவனுக்குத் [1]தாரகமாகையாலே 'உண்ட' என்கிறார்; இன்றேல், 'காக்கும்' என்ன அமையும். ஆயின், உலகத்தை விழுங்கினவன் கிருஷ்ணனோ? என்னில், ஆம், கிருஷ்ணனே; [2]அங்காந்திட வையம் ஏழும் கண்டாள்அன்றோ யசோதை. ஆக, இதனால், இப்படி உலகங்களையு முடையனாய், உடைமை நோவுபட விட்டிருக்கை யன்றி, பிரளய ஆபத்திலே வயிற்றிலே வைத்து நோக்கும் என்பதனைத் தெரிவித்தபடி. கண் - சர்வ ரக்ஷகனான கிருஷ்ணனே உலகத்துக்குக் கண். [3]"உலகங்களுடைய தோற்றமும் கிருஷ்ணனே, பிரளயமும் கிருஷ்ணனே, காணப்படுகிற சராசரங்களாகிற ,எல்லாம் கிருஷ்ணன் பொருட்டாகவே இருக்கின்றன; இது பிரசித்தம்" என்கிற பிரமாணப் பிரசித்தி இருக்கிறபடி.

[4]அல்லது இல்லை ஓர் கண்ணே - அவன் அல்லது களைகண் ஆவார் வேறு ஒருவரும் இலர். கண் என்பதற்கு, காப்பவன் என்னும் இப் பொருளைத் தவிர, இதனை வெறும் சொல் அளவிலே கொண்டு [5]'பீலிக்கண்' என்று கூறும் வழக்கு உண்டு அன்றோ? அவ்வாறு வழங்கக்கூடிய பொருளும் வேறு ஒன்று இல்லை'என்பார் **'அல்லது இல்லை ஓர் கண்'** என்

---

1. தாரகம் - தரித்திருப்பதற்குக் காரணமாக இருப்பது.

2. "ஐய நா வழித்தாளுக்கு அங்காந்திட
   வையம்ஏழுங் கண்டாள் பிள்ளை வாயுளே."(பெரியாழ். திரு. 1: 6.)

3. மஹாபார. பீஷ்மபர்.

4. " அறுபொருள் இவன்என்றே யமரர்கணம் தொழுதுஏத்த
   உறுபசி ஒன்றின்றியே உலகடைய உண்டனையே"

என்னும் பகுதியும், 'அறுபொருள் - அற்றபொருள்; வினைத்தொகை; ஐயமற்றபொருள் என்றாயிற்று. இனி, அறுபொருள் - தீர்ந்தபொருள் என்றுமாம்; அற்ற காரியம் என்றாற்போல. இனி, அறுபொருள் - ஆறு சமயத்தாரும் துணிந்த பொருள் என்றுமாம்.' என்ற அடியார்க்கு நல்லார் உரைப்பகுதியும் ஈண்டு ஒப்புநோக்கி மகிழ்தற்குரியன. (சிலப். ஆய்ச்.)

5. " கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
   கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே "

என்ற சிலப்பதிகாரப் பகுதியில், "என்னகண்" என்பதற்கு 'முன்னர்க் கூறியவாறே கூறுக; பீலிக்கண்ணும் உண்டாகலின்' என்னும் உரைப்பகுதி ஈண்டு ஒப்புநோக்கத் தகும்.

கிறார். ஆயின், மற்றைத் தேவர்களும் காப்பவர்களாகக் கூறப் படுகின்றனரே? எனின், [1] மாலைக் கண் என்று இருப்பார்க்கு அல்லாதவை எல்லாம் மாலைக் கண்ணுகத் தோற்றும். 'திண்ணம் - இது திடம். [2] "சத்தியம் சத்தியம்; மீண்டும் சத்தியம்; கைகளை மேலே தூக்கிச் சொல்லுகிறேன்; வேதமாகிற சாஸ்திரத்தைக் காட்டிலும் மேலான பிரமாணம் கிடையாது; அது போன்று கேசவனைக் காட்டிலும் மேலான தெய்வம் வேறு கிடையாது" என்றார் ஸ்ரீ வியாச பகவான். ஆதலின், இவரும் '**திண்ணம்**' என்கிறார்.

'நம் கண்ணன் கண்' என்கையாலே விதிமுகத்தால் பரத்துவமும், 'அல்லது இல்லை' என்கையாலே மறைமுகத்தாலே பரத்துவமும் அருளிச்செய்தார். (1)

123.

ஏ பாவம்! பரமே! ஏழ் உலகும்
ஈ பாவம் செய்து அருளால் அளிப்பார் ஆர்?
மா பாவம் விட அரற்குப் பிச்சை பெய்
கோபால கோளரி [3]ஏறு அன்றீயே?

பொ - ரை:—பிரமனுடைய தலையினைக் கிள்ளியதனால் உண்டான பெரிய தீவினையானது விட்டு நீங்கும்படி, சிவனுக்குப் பிச்சையினைப் பெய்து அவனைக் காப்பாற்றிய, கோகுலத்திற் பிறந்தார்க்கு எல்லாம் வலிய ஆண்சிங்கத்தினை ஒத்த கிருஷ்ணனை அன்றி, உலகங்கள் ஏழிலும் உள்ள அவ்அவ் உயிர்கள் செய்த தீவினைகளையெல்லாம் போக்கி அவற்றை அருளோடு காப்பாற்றுகின்றவர் வேறு யாவர்? ஐயோ! பாவம்; இவ் உண்மையினைக் கூறல் நம்மைச் சார்ந்து ஆவதே! என்கிறார்.

வி - கு:—'ஏஎ' என்பது, இரக்கத்தின் கண் வந்தது. பரம் - பாரம்; கடமை. ஈ - அழித்தல். தழல் - அழல்; மலர் - அலர் என்பன போன்று, வீ என்பது மெய்ம்முதல் கெட்டு 'ஈ' என உயிர்

---

1. மாலைக்கண் என்றிருப்பார்க்கு-திருமாலே காப்பாற்றுகிறவன் என்று இருப்பவர்கட்கு; மால் - திருமால். மாலைக்கண்ணுய் - இரவில் பொருள்களைக் காணமாட்டாத கண்களைப் போன்று. அதாவது, இரவில் கண்கள் பயன்படாதவாறு போன்று, மற்றைத் தேவர்களும் காக்கும் தகுதியரல்லர் என்று தோற்றும் என்றபடி.

2. காசியில் செய்த சூளுறவு.

3. "வழிபடு வோரை வல்லறி தீயே" (புறம். 10.) என்புழி, 'வல்லறி தியே' என்பது 'வல்லறிதீயே' என நீண்டு வந்தது போன்று, ஈண்டும் 'ஏறன்றியே' என்பது 'ஏறன்றீயே' என செய்யுள் இசை நிறைக்க நீண்டு வந்தது. 'ஏறன்றியே' என்பது முன்னுள்ள பாடம்.

மாத்திரையாய் நின்றது. உலகு என்பது, ஈண்டு உயிர்களுக்கு ஆயிற்று. விட பெய் கோபாலன் என முடிக்க. அருளால் ஈ பாவம் செய்து என்று அருளால் என்பதனை முன்னுங் கூட்டுக. கோளரி ஏறு அன்றி அருளால் அளிப்பார் ஆர் என்க. யார் என்பது ‘ ஆர் ’ என மருவிற்று.

ஈடு :—இரண்டாம் பாட்டு. “ அல்லது இல்லை ” என்று நீர் சொல்லுவான் என்? பிரமனும் சிவனும் இறையவர்களாகப் பேசப்படுகின்ற பிரமாணங்களும் சில இருக்கின்றனவே? எனின், அவர்கள் நிலையினை ஆராய்ந்தால் தலைஅறுப்பாரும் தலைஅறுப்புண்டு நிற்பாருமாக இருக்கின்றார்கள்; அவர்கள் ஆபத்தினைப் போக்கிக் காத்தளிக்கின்றான் இவன்; அவர்களோ இவனோ சர்வேஸ்வரன்? என்கிறார்.

ஏ என்றது - ஓஓ என்றபடி. இதனால் துக்கத்தின் மிகுதியினைக் குறிக்கிறார். ஏ பாவம் - இரத்தினத்திற்கும் காட்டில் உலர்ந்து கிடக்கும் வறட்டிக்கும் வேறுபாடு உண்டு என்று சொல்ல வேண்டுவதே! மக்கள் சிற்றறிவினர்களாய் இருத்தலின் பகவானுடைய பரத்துவத்தை விளக்கவேண்டி இருக்கின்றதே என்னும் இன்னாப்பாலே **என்னே பாவம்!** என்கிறார். பரமே - [1] பகவானுடைய குணங்களை அநுபவிக்குமது ஒழிய, இது நமக்குக் கடமை ஆவதே! இது நாம் செய்யக் கூடியதாக வந்துவிழுவதே! என்றபடி. ஏழ்உலகும்-ஏழ்உலகங்களிலும் உண்டான மக்கள் இருந்தே குடியாகப் பாவங்களைச் செய்து அப் பாவங்களால் தங்களை நிறைத்துக்கொள்ள. ஈ பாவம் செய்து - பாவங்களை அழியும்படியாகச் செய்து. அருளால் - பாவங்களை அழிக்கும்போது, மக்கள் விரும்ப, தான் செய்தல்அன்றி நிர்ஹேதுகக் கிருபையாலே. அளிப்பார் ஆர் - இவர்களை ஈரக்கையால் தடவிக் காப்பார் யார்? அளிப்பான் இவன் என்னாதே, ‘ஆர்’ என்கிறார். அவர்களுக்கும் சத்துவம் தலை எடுத்தபோது, ‘ நீர் சொல்லுகிறவனே ’ என்று இசைய வேண்டும் பிரசித்தியாலே. [2] “ ஸ்ரீராமா! நீ தான் எல்லா உலகங்களிலும் இருக்கின்ற எல்லா உயிர்களினுடைய பாவங்களை எல்லாம் போக்கித் தூய்மை ஆக்குபவன் ” என்றும், [3] “ காப்பாற்றுவதில் நிலை நின்றவனையும் எல்லா உயிர்கட்கும் ஈஸ்வரனையும் மகாத்மாவாயும் இருக்கின்ற விஷ்ணுவைத் தவிர,

---

1. இவ்வாறு உபதேசித்தல், பகவத் குணாநுபவத்துக்குத் தடையாய் இராநின்றதே என்று இரங்குகிறார்.

2. ஸ்ரீராமா. உத்தர. 82 : 9.

3. ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 22 : 19.

காத்தலாகிய ஆற்றலானது வேறு ஒருவர்க்கும் இன்று" என்றும் வருகின்ற பிரமாணங்களைக் காண்க. மக்கள், தாங்கள் செய்த பாவங்களைப் பிராயச் சித்தத்தால் (கழுவாய்) போக்கிக் கொள்ள ஒண்ணாதோ? எனின், இவர்கள் செய்த பாவம் அவன் அருளால் போக்கில் போமத்தனை அல்லது, தாங்கள் பிராயச்சித்தம் செய்து போக்குதல் என்பது, அவற்றை மேன்மேலும் வளர்த்தலாகவே முடியும்.

அவன் எல்லாப் பொருள்களையும் காக்கின்ற தன்மை நிற்க; [1] தந்தாம் காலைத் தாம்தாம் நீட்டி முடக்க வல்லராய் இருக்கிறவர்களும் ஓரோர் அளவுகளிலே ஆபத்தை அடைவர்களாயின் அவற்றைப் போக்கிக் காக்கும்படியைப் பார்க்கலாகாதோ? என்கிறார் மேல்: மா பாவம் விட - [2] "பின்னால், கோபத்தால் பீடிக்கப்பட்டவனும் சிவந்த கண்களையுடையவனும் இருக்கிற என்னால் இடக்கை கட்டவிரல் நகத்தின் நுனியால் அந்தப் பிரமனுடைய தலை கிள்ளப்பட்டது" என்கிறபடியே, உலகத்திற்கெல்லாம் குருவாயும் தனக்குத் தந்தையாயும் இருக்கிறவன் தலையை அறுத்துப் பாவத்தையுடையவனாய் நின்றான்; நின்ற அவனுடைய பெரிய பாவமானது அவனை விட்டு நீங்கும்படி. மற்றைத் தேவர்களைக் காட்டிலும் ஞானம் சக்தி முதலியவற்றால் ஓர் ஆதிக்யத்தைப் படைத்த சிவனால் செய்யப்பட்ட பாவ மாதலின் '**யானைக்கும் தனக்குத் தக்க வாதம்**' என்பது போன்று, அப் பாவத்தினை '**மா பாவம்**' என்கிறார்.

அரற்குப் பிச்சை பெய் கோபால கோள் அரி ஏறு - சிவன், அழிக்கும் தலைவனான வேஷத்தோடே அதிகாரம் குலையாதே நின்று பாவத்தை விளைத்துக் கொண்டான் என்பார் '**அரன்**' என்கிறார். இறைவன், அவனுடைய துக்கத்தைப் போக்கியது அங்கே இங்கே தோன்றித் திரிகிற இடத்திலே என்பார் '**கோபாலன்**' என்கிறார். இதனால், இவர்கள் எத்துணை உயர நிற்பினும் கேட்டினையே சூழ்த்துக் கொள்ளுவார்கள் என்பதும், இறைவன் எத்துணைத் தன்னைத் தாழவிட்டாலும் காப்பாற்றுமவனும் என்பதும் சொல்லப்பட்டது. கோபால கோள் அரி ஏறு - கோபாலருடைய மிடுக்கையுடைத்தான ஆண்சிங்கம். கோள் - வலிமை. பிறருடைய வலிமையினைக் கொள்ளுகின்ற என்று உரைத்தலுமாம். நித்தியசூரிகளை

1. 'தந்தாம்' என்று தொடங்கும் வாக்கியம், 'மிகச் சிறிய ஆற்றலையுடையவர்' என அவர்களது ஆற்றலின் சிறுமையைக் குறிக்க வந்தது.

2. மத்ஸபுராணம்.

எல்லாம் ஏவுகின்ற இறைவன் ஆயர்களால் ஏவப்படுகின்ற வனாக இருக்கும் செருக்கினைத் தெரிவிப்பார் '**அரியேறு**' என்கிறார்.

தீவினைகளால் பீடிக்கப்பட்டவர்களாய்த் துன்பத்தினை அடைகின்ற இவர்களை ஈஸ்வரர்கள் என்போமோ? ஆபத்துக்களைப் போக்கிப் பாதுகாக்கும் இவனை ஈஸ்வரன் என்போமோ? என்கிறார். (2)

124.

ஏறனைப் பூவனைப் பூமகள் தன்னை
வேறின்றி விண்தொழத் தன்னுள் வைத்து
மேல்தன்னை மீதிட நிமிர்ந்து மண் கொண்ட
மால்தனின் மிக்கும் ஓர் தேவும் உளதே?

பொ - ரை :—இடப வாகனத்தையுடைய சிவனையும், தாமரைப் பூவில் பிறந்த பிரமனையும், தாமரைப் பூவில் வீற்றிருக்கிற பெரிய பிராட்டியாரையும் வேறுபாடு இன்றி, அயர்வறும் அமரர்கள் தொழும்படி தனது திருமேனியில் வைத்து, மேலே உள்ள உலகங்களுக்கு எல்லாம் மேலே செல்லும்படி வளர்ந்து உலகத்தை அளந்துகொண்ட அறப் பெரிய தெய்வத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகக் கூறத்தக்க வேறு தெய்வமும் உளதோ? இல்லை என்றவாறு.

வி - கு :—தொழ வைத்து நிமிர்ந்து கொண்ட மால் என்க. உளதே: ஏகாரம் எதிர்மறைப் பொருளது. "மாறுகொள் எச்சமும்" என்ற எழுத்ததிகாரச் சூத்திரத்தில் எதிர்மறைப்பொருளையும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியுள்ளமை காண்க.

ஈடு :—மூன்றாம்பாட்டு. [2] சௌசீல்யத்தாலும், உலகங்களை எல்லாம் மூன்று அடிகளால் அளத்தலாகிய, மனிதர்கள் அளவுக்கு அப்பாற்பட்ட செயலாலும் இவனே இறைவன் என்கிறார்.

---

1. "திரண்டுஅமரர் தொழுதுஏத்தும் திருமால்! நின் செங்கமல
இரண்டடியால் மூவுலகும் இருள்தீர நடந்தனையே" (சிலப். ஆய்ச்.)

இங்கு 'இருள்தீர' என்றதன் பொருளை ஊன்றி நோக்கி மகிழ்க. 'எல்லார் தலைகளிலும் காலை வைத்தவனை இறைவன் என்னவோ? இவன் காலிலே துகையுண்டவர்களை இறையவர் என்னவோ?' என்கிறார். இருள் - பரம்பொருள் அவனோ? பிறரோ? என்ற அஞ்ஞானம்.

2. சௌசீல்யமாவது :- ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாக வுடையவன், அங்கு நின்றும் சம்சாரி சேதநர் நின்றவிடத்தே வந்து அவதரித்து எளியனுமிடத்து, 'சிறியார் அளவிலே நம்மைத் தாழவிட்டோமே!' என்று தன் திருவுள்ளத்திலும் இன்றி இருத்தல்.

ஏறனை - சர்வேஶ்வரன் '**கருடவாகனன்**' என்று இறுமாந்து இருக்குமாறு போன்று, ஓர் எருத்தைக் தேடிக் கைக்கொள் ஆண்டிகளைப்போன்று இறுமாந்து இருப்பவன். பூவனை - 'திரு நாபிக்கமலத்தில் நேரே பிறந்தவன் அன்றோ' என்று இறுமாந்து இருக்கும் நான்முகன். அதாவது, தாமரைப் பூவில் பிறந்தவனாதலின் பிறப்பு இல்லாதவன் என்று நினைத்திருப்பவன் என்றபடி. பூமகள் தன்னை - தாமரைப்பூவில் வாசனையும் உபாதானமாகப் பிறந்தவளாய், இன்பமே ஒரு வடிவு கொண்டவளாய், [1] "உனக்கு ஏற்கும்" என்னும்படி தலைமை தோன்ற இருக்கிறவளை. அவர்களைக் காட்டிலும் இவளுக்கு உண்டான தலைமை தோன்ற '**பூமகள் தன்னை**' என்கிறார். மற்றும், அவர்களை 'ஏறனை, பூவனை' என்கிற விருப்பம் இன்மையைப் புலப்படுத்துகிற வார்த்தைகளாற் கூறியவதனாலும் இவளுடைய முதன்மை தோன்றும்.

விண் தொழ வேறு இன்றித் தன்னுள் வைத்து - வேறு பொருள்களிலும் மனத்தைச் செலுத்துகிற பிரமன் சிவன் இவர்கட்கும், வேற்றிடத்து மனத்தைச் செலுத்தாத பெரிய பிராட்டியாருக்கும் ஒக்க முகங்கொடுத்து வைக்கிற சீலத்தை நினைத்து விண்ணினுள்ளார் தொழாநிற்பர்கள். 'பிரமன் முதலானோர் எப்போதும் திருமேனியைப் பற்றி இருப்பர்களோ?' என்று **நஞ்சீயர் பட்டரைக்** கேட்க, [2]'ஓரோ ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங்கொடுக்கிறான்; அந் நீர்மையை விடமாட்டாமையாலே ஆழ்வார்கள் அதனையே வாய்புலற்றுகிறார்களத்தனை என்று அருளிச்செய்தார். [3] "ஏறாளும் இறையோனும் திசைமுகனும் திருமகளும், கூறாளும் தனி உடம்பன்" என்கிறபடியே, வேறுபாடு இன்றி உடம்பைக் கொடுத்துள்ளானாதலின், '**வேறின்றி**' என்கிறார். 'கட்டில் கத்துகிறது' என்பது போன்று 'விண்' என்பது இடவாகுபெயர். இங்குள்ளார் [4]'ஐஶ்வரியம்' என்றிருப்பர்கள்; அங்குள்ளார் 'சீலம்' என்று தோற்று இருப்பார்களாதலின் '**விண்தொழ**' என்கிறார்.

மேல் தன்னை மீதிட நிமிர்ந்து மண்கொண்ட - மேலே உள்ள உலகங்களை [5]"அப்பால் மிக்கு" என்கிறபடியே, விஞ்ச

1. திருவாய். 10. 10 : 6.
2. முதல்பத்து. ஈட்டின் தமிழாக்கம். பக். 113 - காண்க.
3. திருவாய். 4. 8 : 1.
4. ஐஶ்வரியம் - இறைமைத் தன்மை.
5. திருநெடுந்தாண்டகம். 5.

வளர்ந்து பூமிப் பரப்பெல்லாம் திருவடிகளின் கீழே இட்டுக் கொண்ட. மால் தனில் - இவ் அதிமாநுஷச் செயல்களையுடைய சர்வேஸ்வரனைக் காட்டிலும். மிக்கும் ஓர் தேவும் உளதே - ஒக்கப் பரிமாறுநிற்க, [1]'கட்டக்குடி' என்று கழிக்கலாம் தெய்வந்தான் உண்டோ?

[2]எல்லார் தலைகளிலும் காலை வைத்தவனை 'ஈஸ்வரன்' என்னவோ? இவன் காலிலே துகையுண்டவர்களை 'ஈஸ்வரர்கள்' என்னவோ? என்கிறார். (3)

125.

தேவும் எப்பொருளும் படைக்கப்
பூவில் நான்முகனைப் படைத்த
தேவன் எம்பெருமானுக்கு அல்லால்
பூவும் பூசனையும் தகுமே?

பொ - ரை :— தேவர்களையும் மற்றை எல்லாப் பொருள்களையும் உண்டாக்குவதற்குத் தனது திருவுந்தித் தாமரையில் நின்றும் நான்கு முகங்களையுடைய பிரமனைப் படைத்த ஒளியினையுடையவனை எம்பெருமானுக்கு அல்லாமல் ஏனையோர்க்கு மலர்களும் மலர்களால் அருச்சித்து வணங்கும் வணக்கமும் தகுவ ஆகுமோ? ஆகா என்றபடி.

வி - கு :— 'தேவும் - தெய்வத்துக்கு ஒரு பெயர்' என்பர், நச்சினார்க்கினியர். (சிந். கட. வாழ்த்.) படைக்க படைத்த தேவன் என்றும், அல்லால் தகுமே என்றும் முடிக்க. தகுமே: ஏகாரம் எதிர்மறைப் பொருளது. பூசனை - நாடோறும் கடவுளர்க்குச் செய்யப்படும் வழிபாடு முதலியன. "சிறப்பொடு பூசனை செல்லாது" என்றார் திருவள்ளுவர்.

ஈடு :- நான்காம்பாட்டு. [3]சௌகுமார்யத்தாலும் முதன்மையாலும் இவனே இறைவன் என்கிறார்.

---

1. கட்டக்குடி - கஷ்டப் படுகிற குடும்பி; வறியவன். அல்லாதாரோடு ஒக்கப் பரிமாறுநிற்கச்செய்தே, 'இறை இறுக்கமாட்டான்' என்று கழிப்புண்ணும் கட்டக் குடிபோலே என்றபடி.

2. "சிவந்தோங்கு உயர் கொடிச்சேவலோய்! நின்
சேவடி தொழாரு முளரோ? அவற்றுள்
கீழேழ் உலகமும் உற்ற அடியினை" (பரி. 3. 18 - 20.)
என்ற பகுதி ஈண்டு ஒப்பு நோக்குக.

3. "தேவன்" என்றதனால் சௌகுமார்யமும், "எம்பெருமான்" என்றதனால் முதன்மையும் பெறப்படும்.

தேவும் எப்பொருளும் படைக்கப் [1]பூவில் நான்முகனைப் படைத்த தேவன் - தேவர்களுடைய கூட்டங்களையும் மற்றை எல்லாப் பொருள்களையும் உண்டாக்குவதற்காக, [2] ஒரு பூவில் நான்கு பூக்கள் பூத்தாற் போன்று நான்கு முகங்களையுடைய பிரமனை உண்டாக்கினவன். தேவன்-பிரமனைப் படைத்தவன் ஆதலின் அதனால் உண்டான காந்தியினையுடையவன். இனி, தேவன் என்பதற்கு, படைத்தல் முதலிய தொழில்களை விளையாட்டாக உடையவன் என்றும், அழகு முதலியவைகளால் வந்த விளக்கத்தினை உடையவன் என்றும் கோடலுமாம். எம் பெருமானுக்கு அல்லால் - படைத்தல் முதலிய தொழில்களைச் செய்த உபகாரத்தாலும் படைத்தலுக்கு உறுப்பான குணங்களாலும் என்னை அடிமை கொண்டவனுக்கு அல்லாமல். பூவும் பூசனையும் தகுமே - [3] **சிக்குத் தலையனுக்குப் பூத் தகாது; [4] பிச்சை உண்ணிக்குப் பூசனை தகாது; பூத் தகுவது சுகுமாரனுக்கு; பூசனை தகுவது முதன்மை யுடையவனுக்கு**; ஆதலால், இவனை ஒழிந்தவர்க்குத் தகாது என்கிறார்.

இறைவனுடைய முதன்மையினை நெடும்போது விரிவாகக் கூறிக் கொண்டே வந்து [5] "பெரியதாயும் விசாலமானதாயும் நீண்டதாயும் இருக்கிற திருக்கண்களையுடையவன் காண், உங்களுக்கு மைத்துனனாகப் புகுந்திருக்கிற கிருஷ்ணன்" என்று அவ் இறைமைத் தன்மையினைக் கிருஷ்ணன்மேல் மாட்டெறிந்தான், தத்துவ ஞானியான வீடுமன். அவ்வாறு மாட்டெறிந்து முதன்மையினை அறுதியிட்ட வீடுமனுக்கு ஒரு சிறப்பும் செய்திலர் தேவர்கள்; [6] "கிருஷ்ண பரமாத்மாவை, இந்த இராயசூய யாகத்தில் பூசிக்கத் தக்கவராக நாங்கள் விரும்புகிறோம்; இச் சபையில் இருக்கிற நீங்கள் எல்லோரும் அவரைப் பூசிப்ப

---

1. "நீனிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டின்" (பெரும்பாண்.)

என்றார் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

2. 'ஒருபூ' என்றது, பிரமன் உதித்த உந்தித் தாமரையினை. 'நான்கு பூ' என்றது, நான்கு முகங்களை.

3. சிக்குத் தலையன் - பிரமன். சிவனுமாம். இவர்கள் சடையினையுடையவர்களாதலின் 'சிக்குத் தலையன்' எனப் பட்டனர்.

4. பிச்சையுண்ணி - சிவன்.

5. பாரதம்.

6. பாரதம் ராஜசூய.

தற்கு உங்கள் உடன்பாட்டினைத் தெரிவிப்பதற்குத் தக்கவர்களாக இருக்கின்றீர்கள்" என்று சகாதேவன் கூறித் தனது வைராக்கியத்தைத்தெரிவித்த காலத்தில், அவன் வைராக்கியத்தைக் கண்ட தேவர்கள் அவன் தலையில் மலர்மாரியைப்பெய்து அவனை வாழ்த்தினார்கள். இதனால், ஒரு தலையாக வேண்டற்பாலது ஞானத்தைக் காட்டிலும் வைராக்கியமே என்பது புலப்படும். ஆதலால், இவரும், "அல்லது இல்லை ஓர் கண்ணே" என்றும், "கோள் அரி யேறு அன்றி அருளால் அளிப்பார் ஆர்" என்றும், "மால்தனில் மிக்குமோர் தேவு முளதே" என்றும், "பூவும் பூசனையுந் தகுமே" என்றும் அவ் வைராக்கியத்தையே அருளிச்செய்தார். (4)

126.

தகும் சீர்த் தன் தனி முதலி னுள்ளே
மிகும்தேவும் எப்பொருளும் படைக்கத்
தகும் கோலத் தாமரைக்கண்ணன் எம்மான்
மிகும் சோதி மேல் அறிவார் எவரே?

பொ - ரை :—படைத்தல் முதலிய தொழில்களுக்குத் தக்க ஞானம் சக்தி முதலிய குணங்களையுடையவன், தன்னுடையதாகித் தனித்த காரணமான மூலப் பகுதியினுள்ளே மேலான தேவர்களையும் மற்றும் எப் பொருள்களையும் படைக்கத் தகுதியான அழகிய தாமரை போன்ற திருக் கண்களையுடையவன், என்னை அடிமை கொண்டவன், பேரொளிஉருவன் ஆன எம்பெருமானுக்கு மேம்பட்ட ஓர் இறைவன் உளன் என்று அறிகின்றவர்கள் யாவர்? ஒருவரும் இலர் என்றபடி.

வி - கு :—தனி முதல் - தனித்த காரணமான மூலப்பகுதி. தனி என்பது, இரண்டாவது வேறு காரணம் இன்மையைக் குறிக்க வந்தது. மேல் - மேம்பட்ட பொருள். அறிவார் : வினையாலணையும் பெயர். 'யவர்' என்பது, முன்பு உள்ள பாடம். 'எவர்' என்னும் வினா ஈண்டு இன்மை குறித்து நின்றது.

ஈடு:—ஐந்தாம் பாட்டு. [1]தாமரைக்கண்ணன் ஆகையாலும் இவனே இறைவன் என்கிறார்.

தகும் சீர் - படைத்தலுக்குத் துணையான ஞானம் சக்தி முதலிய குணங்களை யுடையவன். தன் தனி முதலினுள்ளே - காரிய வர்க்கத்துக்கு அடையக் காரணமான மூலப் பிரகிருதி.

1. "தாமரைக் கண்ணன்" என்னும் இத் திருப்பெயரையே திருவள்ளுவர் தம் நூலுள் ஓதுதல் காண்க.

இனி, இதற்கு,[1] "நான் பல பொருள்களாக ஆகின்றேன்" என்கிறபடியே, அந்த மூலப்பகுதிக்கும் காரணமான சங்கல்ப ரூப ஞானம் என்று பொருள் கூறலுமாம். [2] உலகத்தோற்றத்திற்குப் பரமாணுக்களே காரணம் என்பாரும் உளராதலின், அவர் கொள்கையினின்றும் வேறுபடுத்துவதற்குத் 'தனி' என்னும் அடை புணர்த்து ஓதுகிறார். மிகும் தேவும் - தன்னோடு [3] மசக்குப் பரல் இடலாம்படியான தேவசாதியையும். [4]"சிவனுடைய வில் விஷ்ணுவின் ஆற்றலால் ஒடிபட்டதனைக் கண்டு விஷ்ணுவே பரம்பொருள் என்று எண்ணினார்கள்" என்னலாம்படி அவர்களுடைய மிகை இருத்தலின் 'மிகும் தேவும்' என்கிறார்.

எப் பொருளும் படைக்கத் தகும் கோலம் தாமரைக் கண்ணன் எம்மான் மிகும் சோதி - 'மற்றும் உண்டான எல்லாப் பொருள்களையும் உண்டாக்குகைக்குத் தகுவான் ஒருவன்' என்னுமிடத்தைத் தெரிவிப்பனவாய், காக்குந் தன்மை இல்லையாயினும் காட்சிக்கு இனியவாய்க் குளிர்ந்திருக்கிற திருக்கண்களையுடையவனாய், அக் கண்அழகாலே என்னை அடிமை கொண்டவனே மிக்க பேர் ஒளியையுடையவன். 'தகும் கோலம் தாமரைக் கண்ணன் எம்மான்' என்று [5] திருவடி தோற்ற துறையிலே இவரும் தோற்கிறார். [6] "பரஞ்சோதி என்னும் சொல்லுக்குப் பொருளான பரம்பொருளினை அடைந்து" என்றும், [7] "பரம்பொருளும் நாராயணனே, பரஞ்

1. தைத்திரீய. ஆனந். 6: 3.

2. முதற்பத்து அவதாரிகை - 'திருமகள் கேள்வன் ஒன்று' பக். 10, 11. காண்க.

3. மசக்குப் பரலிடலாம்படி - சந்தேகம் கொள்ளும்படி.

4. ஸ்ரீராமா. பால. 75: 19.

5. ராம:-சர்வாங்க சுந்தரராய் இருக்கை. கமலபத்ராக்ஷ:- அதிலே ஒரு சுழியாயிற்று அமிழ்ந்துவார்க்கு வேண்டுவது. அக் கண்அழகுக்கு எல்லை என்? என்னில், ஸர்வ ஸத்த்வ மனோஹர:- திர்யக் ஜாதியனாய்ப் பணையோடு பணை தத்தித் திரிகிற என் நெஞ்சையும் அபஹரித்ததன்றோ? ரூப தாக்ஷிண்ய ஸம்பந்ந ப்ரஸூத:- தேக குணங்களாலும் ஆத்ம குணங்களாலும் குறையற்றதுதான் ஔத்பத்திகமாயிருக்கும். ஜநகாத்மஜே - 'அறவிஞ்சச் சொன்னாய்; இனி, இங்ஙன் சொல்லலாவார் உண்டோ? இல்லையோ?' என்று பிராட்டிக்குக் கருத்தாக, பின்னை உம்மைச் சொல்லலாம், நீரும் உண்டு என்கிறான் திருவடி. திருவடி - அநுமான். ஸ்ரீராமா. சுந். 53: 8.

6. சாந்தோக்கியம்.

7. தைத்திரீய நாரா. அநு. 11.

சோதியும் நாராயணனே" என்றும் கூறப்படுமவன் ஆதலின் 'மிகுஞ்சோதி' என்கிறார். மேல் அறிவார் எவரே - இவனை ஒழிய நாராயணனுவாக சித்தமாய் இருப்பது ஒரு பொருள் உண்டு என்று அறிவார் யாவரேனும் உளரோ? எவரே - [1] "எந்த வைதிகன்" என்றார் ஸ்ரீ ஆளவந்தார்.

உனக்கே உரியதான நாராயணனுவாகார்திகளிலே கூறப் பட்ட பெருமையை யுடைய உன்பக்கலிலே பொறுமைகொண் டிருப்பான் ஒரு வைதிகன் உளனோ? உளனாகில், அவன் அவைதிகனுமித்தனை என்றபடி. [2]"பரம் பொருளான விஷ்ணு வினிடத்தில் பக்தி இல்லாதான் ஒருவன் எல்லாச் சாத்திரங் களின் பொருள்களையும் அறிந்தவனாக இருப்பினும், அவ னிடத்தில் பிராமணத் தன்மை இல்லை; அவன் பிறவியினை ஆராய்தல் வேண்டும்" என்பது பத்மபுராணம். (5)

127.

எவரும் யாவையும் எல்லாப் பொருளும்
கவர்வுஇன்றித் தன்னுள் ஒடுங்க நின்ற
பவர்கொள் ஞான வெள்ளச் சுடர்மூர்த்தி
அவர் எம் ஆழி அம் பள்ளியாரே.

பொ-ரை :—உயர்திணையும் அஃறிணையுமான எல்லாப் பொருள் களும் ஒன்றோடு ஒன்று நெருக்கு உண்ணுதவாறு தன் வயிற்றில் ஒடுங் கும்படி நின்ற, பரந்து விரிந்த ஞானவெள்ளத்தினையுடைய ஒளி மிகுந்த திருமேனியையுடையவர் யாவர்? அவர் தாம், எமக்காகத் திருப் பாற் கடலில் அறிதுயில் செய்கின்றவர் ஆவர்.

வி - கு :—இன்றி ஒடுங்க நின்ற என முடிக்க. அவ்வாறு முடித்து, நின்ற என்பதனை மூர்த்தி என்பதனோடு முடிக்க. மூர்த்தி- திருமேனியை யுடையவன். கவர்வு - ஒரு பொருளும் மற்றொரு பொரு ளும் நெருக்குண்டு அந்நெருக்கால் வருந்தல். பவர் - பரப்பு.

ஈடு :—ஆறாம் பாட்டு. [3] ஆபத்துக் காலத்தில் துணைவன் ஆகையாலும் இவனே இறைவன் என்கிறார்.

---

1. தோத்திர ரத்நம். 11.
2. பத்ம புராணத்து இச் சுலோகத்தோடு,
 நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
 குலத்தின்கண் ஐயப் படும்.

என்ற திருக்குறளை ஒப்பு நோக்குக.

3. "தன்னுள் ஒடுங்க நின்ற" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவ தாரிகை அருளிச்செய்கிறார்.

எவரும் யாவையும் எல்லாப் பொருளும் - அறிவுடைப் பொருளும் அறிவில்லாத பொருளும் ஆகிய எல்லாப் பொருள் களும் பிரளய காலத்தில் தன் வயிற்றில் சேர்ந்திருந்தபோது. கவர்வு இன்றி - கவர்கையாவது - பற்றுகை. அதாவது - துன்ப மாய் ஒருவரை ஒருவர் நெருக்காதபடி. தன்னுள் ஒடுங்க நின்ற - [1] "உலகத்தில் சராசரங்களாக என்னால் பார்க்கப்பட் டவை எத்துணை உண்டோ? அவை எல்லாவற்றையும் நான் விஷ்ணுவினுடைய திருவயிற்றில் பார்த்தேன்" என்கிற படியே, [2] தன்னுள் அடங்க நின்ற. இனி, தன்னுள் என் பதற்கு, [3] தன்னுடைய சங்கல்பத்தின் ஏகதேசத்தில் என்று பொருள் கூறலுமாம். பவர் கொள் ஞான வெள்ளச் சுடர் மூர்த்தி அவர் - இவர்களைக் காப்பதற்கு உறுப்பான பரம்பின ஞான வெள்ளத்தையுடையனாய், 'இப்படி, காக்கப் பெற்ற இடம் தன் பேறு' என்று தோன்றும்படி இருக்கிற திவ்விய விக்கிரகத்தையுடையரான அவர். எம் ஆழி அம் பள்ளியாரே - [4] தாம் சம்சார மத்யஸ்த்தராய் இருக்கையாலே எல்லாரையும் கூட்டிக்கொண்டு, எங்களைப் பாதுகாத்தற்காக வந்து பிரள யத்தை அழகிய படுக்கையாகவுடையவர் ஆனார். பள்ளி - படுக்கை; [5] "பாயலும் பள்ளியும் பாழியும் படுக்கை" என வருதல் காண்க.

இப்படி ஆபத்துக் காலத்தில் துணைவனாய் [6] அணியன் ஆகையாலும் இவனே ஈஸ்வரன் என்கிறார். (6)

---

1. பாரதம் ஆரண்.

2. இது அவாந்தர சம்ஹாரத்தைக் குறித்தது.

3. இது மஹா சம்ஹாரத்தைக் குறித்தது. இப்பொருளில் "கவர்வின்றி" என்பதற்கு, ஒன்றும் தப்பாமல் என்று பொருள் கொள்க.

4. "எம்" என்ற பன்மையின் பொருளை விரிக்கிறார் 'தாம் சம்சார மத்யஸ்த்தரா யிருக்கையாலே எல்லாரையுங் கூட்டிக் கொண்டு' என்று. 'தாம்' என்றது, ஆழ்வாரை. 'தாம் இருக்கிற சம்சாரத்திலே வந்து கண் வளர்ந்தருளிற்று, தம்மை உஜ்ஜீவிப்பிக்கைக்கு என்று' என்பது, இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்.

5. நிகண்டு.

6. "ஆழி அம் பள்ளியாரே" என்றதனை நோக்கி 'அணியன்ஆகையாலும்' என்கிறார்.

128.

பள்ளி ஆலிலை ஏழுலகும் கொள்ளும்
வள்ளல் வல் வயிற்றுப் பெருமான்
உள்உள் ஆர் அறிவார் அவன்தன்
கள்ள மாய மனக்கருத்தே?

பொ - ரை :—ஆலந் தளிராகிய படுக்கையில் சயனித்திருக்கிற, வள்ளல் தன்மையும் வலிமையும் பொருந்திய வயிற்றையுடைய பெருமான்; ஒருவர்க்கும் தோன்றாத ஆச்சரியமான, உள்ளே உள்ளே செல்லுகின்ற, அவனுடைய மனத்தின் எண்ணத்தை அறிய வல்லவர் எவர்தாம்? ஒருவரும் இலர் என்றவாறு.

வி-கு:—கொள்ளும் என்னும் எச்சத்தை, வயிறு என்னும் பெயருடன் முடிக்க. வள்ளல் வல் இவ் இரண்டும், வயிற்றுக்கு அடைமொழி. கள்ளம் - ஒருவரும் அறிய முடியாத தன்மை. மாயம் - ஆச்சரியம். அறிவார் ஆர் என்ற வினா, இன்மை குறித்து நின்றது.

ஈடு :—ஏழாம்பாட்டு. [1] அகடிதகடநா சாமர்த்தியத்தாலும் இவனே இறைவன் என்கிறார்.

பள்ளி ஆல்இலை - அப்பொழுது தோன்றியது ஒரு ஆலந் தளிராகிய படுக்கையிலே. ஏழ்உலகும் கொள்ளும் வள்ளல் வல் வயிற்றுப் பெருமான்-ஏழ்உலகங்களையும் வயிற்றிலே வைத்து அப் படுக்கையில் அறிதுயில் செய்கின்றவன். [2] உள்ளே புக்க உலகங்கட்கு இடம் கொடுத்தலோடு அமையாது, இன்னம் வேறு தனியாக உலகங்கள் இருப்பினும் அவற்றிற்கும் இடம் கொடுக்க வல்ல வயிறு ஆதலின் '**வள்ளல் வயிறு**' என்றும், உள்ளே புக்க பொருள்கட்கு அச்சமென்பது சிறிதும் இல்லாத வண்ணம் காப்பாற்ற வல்ல மிடுக்கினையுடைத்தாக இருத்தலின் '**வல் வயிறு**' என்றும், இப்படிக் காப்பாற்ற வேண்டிய கடமையினையுடையவனுதலின் காப்பாற்றுகிறான் என்பார் '**பெருமான்**' என்றும் அருளிச்செய்கிறார்.

---

1. அகடிதகடநா சாமர்த்தியம் - செயற்கரிய செயல்களைச் செய்தல்.

2. பத்து நாலென அடுக்கிய உலகங்கள் பலவின்
மெத்தி யோனிகள் ஏறினும் வெளியிடம் மிகுமால்
முத்த ரானவ ரிதன்நிலை மொழிகுவ தல்லால்
இத் தராதலத் தியம்புதற் குரியவர் யாரே? (கம்பரா. மீட். 159.)

என்ற செய்யுள் ஈண்டு ஒப்புநோக்கல் தகும்.

அவன் தன் கள்ளம் மாயம் மனம் கருத்தை ஆர் அறிவார் - ஒருவரும் அறியாதவாறு இன்னம் உள்ளே உள்ளே இருப்பதாய், அறிந்த தன்மை ஆச்சரியமாக இருக்கிற அவனுடைய மனத்தின் வியாபாரத்தை யாவர் அறிவார்? ஏன்? நீர் அறிந்து சொன்னீரே? எனின், கண்டது ஒன்றைச் சொன்னேன் இத்தனை போக்கி, முழுதும் யான் தான் அறிந்தேனே? என்பார் 'யார் அறிவார்' என்கிறார். (7)

129.

கருத்தில் தேவும் எல்லாப் பொருளும்
வருத்தித்த மாயப் [1]பிரான் அன்றி யாரே
திருத்தித் திண் நிலை மூஉலகும் தம்முள்
இருத்திக் காக்கும் இயல்வினரே?

பொ - ரை :— தன் நினைவிலேயே எல்லாத் தேவர்களையும் எல்லாப் பொருள்களையும் உண்டாக்கின ஆச்சரியமான செயல்களையுடையவனை அல்லாமல், இம் மூன்று உலகங்களையும் திருந்தச் செய்து, தனது திருவுள்ளத்தே வைத்து, ஒரு நோவும் வாராதபடி காத்து நோக்குகின்ற இயல்பினையுடையவர் வேறு யாவர்? ஒருவரும் இலர் என்றவாறு.

வி - கு :— காக்கும் இயல்வினர் மாயப் பிரான் அன்றி யாரே? எனக் கூட்டுக. வருத்தித்த - உண்டாக்கின. காக்கும் : எச்சம்.

ஈடு :— எட்டாம் பாட்டு. படைத்தலையும் காத்தலையும் தனக்கு அதீனமாக உடையவன் ஆகையாலே இவனே இறைவன் என்கிறார்.

கருத்தில் தேவும்.........இயல்வினர் யாரே - தன்னுடைய நினைவினாலே தேவ சாதியையும் மற்றும் உண்டான எல்லாப் பொருள்களையும் உண்டாக்கின ஆச்சரியத்தையுடையனை சர்வேஸ்வரனை அன்றி, மூன்று உலகங்களையும் திண்ணிதான நிலையினையுடையதாம்படி திருத்தி, தம்முள் இருத்தி, அவ் அவ் பொருள்கட்குத் தகுதியான பாதுகாத்தல்களையும் திருவுள்ளத்தே வைத்துப் பாதுகாத்தலைச் செய்யு மிதனை [2] இயல்வாக உடையவர் யார்? என்கிறார். [3] "காப்பாற்றுவதில் நிலைநின்றவனும் எல்லா உயிர்கட்கும் ஈஸ்வரனும் மகாத்மாவாயும் இருக்கிற விஷ்ணுவைத் தவிர, காத்தலாகிய ஆற்றல் வேறு ஒருவர்க்கும் இன்று" என்பது விஷ்ணுபுராணம். (8)

---

1. 'பிரானை அன்றி' என்பதும் பாடம்.
2. அருள் குடையாக அறங் கோலாக
இருநிழல் படாமை மூவேழ் உலகமும்
ஒருநிழ லாக்கிய ஏமத்தை மாதோ. (பரி. 3. 74-76.)
என்பது பரிபாடல்.
3. ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 22 : 19.

130.

காக்கு இயல்வினன் கண்ண பெருமான்
சேர்க்கை செய்து தன் உந்தி உள்ளே
வாய்த்த திசைமுகன் இந்திரன் வானவர்
ஆக்கினன் தெய்வ உலகுகளே.

பொ - ரை :—எல்லா உயிர்களையும் பாதுகாத்தலையே தனக்கு இயல்பாகவுடையவன்; கண்ணபிரானாகிய நம் இறைவன்; அவன், அழிக்கும் காலம் வந்தவாறே, எல்லா உயிர்களையும் தன் திருமேனியில் சேரச் செய்து, பின்னர், தனது திருநாபிக் கமலத்திலே, எல்லாக் குணங்களும் பொருந்திய பிரமனையும், இந்திரனையும், தேவர்களையும், தேவர்களுக்குரிய உலகங்களையும் உண்டாக்கினான்.

வி-கு :—தன் உந்தியுள்ளே ஆக்கினன் எனக் கூட்டுக. சேர்க்கை செய்தல் - அழித்தல்; ஒரு சொல். இனி, தன் திருமேனியில் சேர்தலாகிய தொழிலைச் செய்து என்று பொருள்உரைத்து இதனை இருசொல்லாகக் கோடலு மாம்.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் இம் முத் தொழிலையும் [1] தன் அதீனமாம்படி இருக்கின்றான் ஆதலானும் இவனே இறைவன் என்கிறார்.

காக்கும் இயல்வினன் - [2]"செல்வங்களைக் கொடுப்பதிலும் ஆபத்துக்களை நீக்குவதிலும் ஆடவர் திலகனான திருமகள் கேள்வனைத் தவிர, வேறு ஒருவரும் ஆற்றலுடையவராகக் காணப்படுகின்றார் இலர்" என்கிறபடியே, காப்பாற்றுதலை இயற்கையாகவுடையவன். கண்ண பெருமான் - காப்பாற்றும் பொருட்டுக் கிருஷ்ணனாக வந்து அவதரித்த இறைவன். சேர்க்கை செய்து - அழிக்கிற காலம் வந்த அளவில், காரிய வடிவமான இவ் உலகங்கள் முழுதும் தன் பக்கலில் சேர்த

1. "அதனால்,
இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்
ஏம மார்ந்த நிற்பிரிந்து
மேவல் சான்றன எல்லாம்
சேவலோங் குயர்கொடி யோயே!"

'இவையும் உவையும் அவையும் பிறவுமாய் நின்கண் நின்று பிரிந்து நின்னால் ஏமமுற்றனவெல்லாம் பின்னும் நின்னோடு மேவல் அமைந்தன.

என்றது, உலகுயிர்களின் தோற்றமும் நிலைபேறும் ஒடுக்கமும் நின் கண்ண என்றவாறும்.' (பரி. 4. உரை.) என்ற பகுதி ஒப்பு நோக்கத்தகும்.

2.

லாகிய செயலைச் செய்து. [1] தன் உந்தியுள்ளே - தன்னுடைய திருநாபிக் கமலத்தில். வாய்த்த திசைமுகன் இந்திரன் வானவர் தெய்வ உலகுகள் ஆக்கினான் - பிரமன் இந்திரன் மற்றும் உண்டான தேவர்களோடே கூட அவர்களுக்கு இருப்பிடமான உலகங்களையும் கட்டளைப்பட உண்டாக்கினான். இறைவன், [2] பிரமனைப் படைத்து அவனை நோக்கி 'உலகத்தை எல்லாம் படைப்பாய்' என்று ஒருகால் ஏவி விட்டால் பின்னை தன்னையும் கேட்க வேண்டாதபடி படைத்தலில் ஆற்றல் வாய்ந்தவனாதலின் '**வாய்த்த திசை முகன்**' என்கிறார். (9)

131.

கள்வா! எம்மையும் ஏழுலகும் நின்
உள்ளே தோற்றிய இறைவ! என்று
வெள்ளேறன் நான்முகன் இந்திரன் வானவர்
புள்ளூர்தி கழல் பணிந்து ஏத்துவரே.

பொ - ரை:—வெண்மைநிறம் பொருந்திய இடபத்தை வாகனமாக வுடைய சிவனும் பிரமனும் இந்திரனும் மற்றைத் தேவர்களும், கள்வனே! எங்களையும் மற்றை உலகங்களையும் நின்னிடத்தில் நின்றும் தோன்றச் செய்த இறைவனே! என்று, கருடவாகனத்தையுடைய இறைவனுடைய திருவடிகளை வணங்கித் துதிப்பார்கள்.

வி - கு:—கள்வா, இறைவ என்பன: விளிப்பெயர்கள். என்று பணிந்து ஏத்துவர் என முடிக்க. ஊர்தி - ஊர்கின்றவன்; ஆண்பாற் பெயர். இத் திருப்பாசுரத்தின் முதலிரண்டு அடிகளைப் பரிபாடல் மூன்றாம் பாட்டின் முதல் பதினாறு வரிகளோடு ஒப்புநோக்கல் தகும்.

ஈடு:—பத்தாம் பாட்டு. இவ்வளவும் வர, நான் கூறி வந்த பரத்துவத்தை, நீங்கள் அடையத் தக்க தெய்வங்களாக நினைந்திருக்கிற அவர்களுடைய [3] மேலெழுத்தைக் கொண்டாயினும் நம்புங்கோள் என்கிறார்.

---

1. "பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனை"
என்றார் இளங்கோவடிகள்.

2. முதற்பத்து, ஐந்தாந் திருவாய்மொழி, மூன்றாம் பாசுரத்தின் உரைப் பகுதி ஈண்டு நினைவு கூர்க. பக். 181.

3. 'மேலெழுத்தைக்கொண்டு' என்றது, இத் திருப்பாசுரத்தின் முதல் இரண்டடிகளில் கூறப்படும் பொருளை நோக்கியது.

கள்வா-[1] சர்வேஸ்வரன்பக்கலிலே வந்து வரம் கொள்ளுகிற இடத்திலே, 'தேவர் இன்னம் எனக்கு ஒரு வரம் தரவேண்டும்; நீர் தந்த வரம் நிலைநிற்கும்படி என் பக்கலிலே வந்து ஒரு வரம் பெற்றுப் போகவேண்டும்' என்று வேண்டிக்கொள்ள, 'அப்படியே செய்கிறோம்' என்று விட்டு, 'உருக்குமிணிப் பிராட்டிக்கு ஒரு பிள்ளை வேண்டும்' என்று சென்று நின்று "நமோ கண்டாய கர்ணாய" என்றாற் போல ஏத்த, [2] "பார்வதியோடு கூடிய சிவன், இரு கைகளையும் குவித்துக் கொண்டு விஷ்ணுவைப் பார்த்து, விஷ்ணுவினுடைய பெருமையினைச் சொல்லுதற்குத் தொடங்கினான்" என்கிறபடியே, புறப்பட்டு, [3] 'நீ கறுப்புடுத்துத் தாழ நின்ற நிலையிலே இச்செயலைச் செய்தால் இதனை நாட்டார் [4]'மெய்' என்று இருப்பார்களோ, 'கள்வா?' என்பார்கள். ஈண்டுக் **களவாவது** - தன் ஸ்வாதந்தர்யத்தை மறைத்துப் பரதந்திரனாய் நிற்கும் நிலை. கைலாச யாத்திரையிலே [5]"நமோ கண்டாய கர்ணாய நமஃ" என்று துதிசெய்த படியைக் கண்ட பிராஹ்மணன் 'இதற்கு முன்பு ஒருவரைத் துதிசெய்து அறியாத வாயான படியால் [6]'மீன் துடிக்கிறபடி பாராய்' என்றான். [7]"நாத் தழும்ப நான்முகனும் ஈசனுமாய் முறையால் ஏத்த" என்கிறபடியே, துதிசெய்து நாத் தழும்புபட்டுக் கிடப்பது அவர்களுக்கு அன்றோ?

இவன் தாழ நின்ற நிலையும் துதிசெய்த நிலையும் களவு என்னுமிடத்தை விளக்குகிறார் மேல்: எம்மையும் ஏழ்உலகும் நின் உள்ளே தோற்றிய-நீ இவற்றைப் படைக்கின்றகாலத்தில்

---

1. "சுவாமி! சகல பிராணிகளுள் பிரசித்தமான வேறான வரத்தை எனக்குக் கொடுக்கவேண்டும்; கேசவனே! தேவரீர் மனிதனாக அவதரித்து என்னைப் பூஜிக்கவேண்டும்" என்றும், "தேவர்களுடைய காரியத்துக்காகச் செய்யும் அவதாரங்களிலே மனிதனாகவும் பிறப்பேன் நான்; அப்பொழுது உன்னைப் பூஜிக்கப்போகிறேன்; நீயும் வரம் கொடுக்கின்றவனாகக் கடவாய்" என்றும் வருகிற புராண வசனங்களை நோக்குக.

2. ஹரிவம்சம்.

3. கறுப்புடுத்தல்-பரத்துவ நிலையை மறைத்தல்; மாறுவேடம் தரித்தல்.

4. 'மெய் என்றிருப்பார்களோ?' என்றது, வரங் கொடுத்ததற்காகச் செய்தான் என்று இருப்பார்கள் என்றபடி.

5. ஹரிவம்சம் கைலாச யாத்திரை.

6. 'மீன் துடிக்கிறபடி' என்றது, மீன் துடித்தல் போல நாக்குத் துடிக்கிறபடி என்றவாறு.

7. பெரிய திருமொழி. 1. 7; 8.

எங்களை முன்னே படைத்து, பின்னர் மற்றைப் பொருள்கள் எல்லாவற்றையும் படைத்தாய். இறைவ - இறைவனே! என்பர்கள். இங்ஙனே சொல்லுகிறவர்கள்தாம் யார்? என்னில், வெள்ஏறன் நான்முகன் இந்திரன் வானவர் - சிவன் முதலானோர். ஆயின், கடவுளை வணங்குகின்றவர்கள் வாகனத்தோடு வருதல் பொருந்துமோ? எனின், **இராஜசேவை செய்வார், தத்தமது அடையாளங்களோடே சட்டையும் பிரம்புமாய்ச் சேவிக்குமாறு போன்று**, இவர்களும் தத் தமது அடையாளங்களோடே வந்து சேவிக்கிறார்கள். [1] "இரவியர் மணிநெடுந் தேரோடும் இவரோ, இறையவர் பதிஞெரு விடையரும் இவரோ, மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ?" என்றார் தொண்டரடிப்பொடிகள். புள்ளூர்தி கழல் பணிந்து ஏத்துவர்-சர்வேஶ்வரன், பெரியபிராட்டியாரும் தானுமாக இருக்கிற இருப்பில் புக முடியாமையாலே, திருப்பாற்கடலுக்கு இவ்வருகே கூப்பிட்டால், இவர்கட்குக் காட்சி கொடுக்கைக்காகத் திருவடி திருத்தோளில் ஏறிப் புறப்படுவான், அப்பொழுது [2] **ஆட்டத்து வெளியில் யானைக்காலில் துகையுண்ணு நிற்பர்கள்.** (10)

132.

ஏத்த ஏழுலகும் கொண்ட கோலக்
கூத்தனைக் குருகூர்ச் சடகோபன் சொல்
வாய்த்த ஆயிரத்துள் இவை பத்துடன்
ஏத்த வல்லவர்க்கு இல்லை ஓர் ஊனமே.

பொ - ரை:—ஏழ் உலகங்களிலும் உள்ளவர்கள் எல்லாரும் ஏத்த, எல்லா உலகங்களையும் தன் திருவடியால் அளந்துகொண்ட அழகு பொருந்திய கூத்தன் விஷயமாக, திருக் குருகூரில் அவதரித்த ஸ்ரீசடகோபரால் அருளிச் செய்யப்பட்ட பொருந்திய ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப் பத்துத் திருப்பாசுரங்களையும் பொருள் உணர்வோடு கற்று உணர்ந்து துதிக்க வல்லவர்கள் ஒரு குற்றமும் இலர் ஆவர் என்பதாம்.

வி - கு:—ஏத்த கொண்ட கூத்தன் என்க. வல்லவர்: வினையாலணையும்பெயர். ஊனம்-குற்றம். குற்றமாவது-ஒப்பாரும் மிக்காரும் இலாத

1. திருப்பள்ளி யெழுச்சி.

2. ஆட்டத்து வெளி - வையாளி வெளி. இராஜாக்களுடைய வையாளி வெளியிலே யானைக்காலிலே சிற்றரசர்கள் அபிமானம் அற்றுத் துகையுண்பார்கள்; அப்படியே, இங்கும் அபிமானம் அற்றவராய்த் துதிசெய்வார்கள் என்றபடி. "புள்ளூர்தி கழல் பணிந்தேத்துவரே" என்று அருளிச்செய்ததனால் இக் கருத்தை உரையாசிரியர் வெளியிடுகிறார்.

இறைவனை மற்றைத் தேவர்கட்கு ஒப்ப நினைத்தல்; அன்றி, அவனைக் குறைய நினைத்தல்; அன்றி, அவனைக்காட்டிலும் மற்றைத் தேவர்களை உயர்வாக நினைத்தல்; ஆக, இவற்ருல் உளவாய குற்றம்.

௧௫ :—முடிவில், இத் திருவாய்மொழியைக் கற்று உணர வல்லவர்கட்கு, மற்றைத் தேவர்களை இறைவர்களாக நினைத்தலாகிய குற்றம் இல்லை என்கிருர்.

ஏழ் உலகம் ஏத்த ஏழ் உலகும் கொண்ட - [1]"வானத்திலும் பூமியிலும் உள்ள அமரர்கூட்டமும், அவ்வாறே மனிதர்களும், அங்கேயே சஞ்சரிக்கிற தேவர்களும் துதிக்க, இவ் உலகங்களை எல்லாம் தன் அடிகளால் அளந்தவன் எவனே? அவ் இறைவனை திரிவிக்கிரமன், என்னுடைய மங்களங்களின் விருத்தியின் பொருட்டு எனக்கு எப்பொழுதும் அருள்புரிய வேண்டும்" என்கிறபடியே, ஏத்தித் துதிக்க, அம் மகிழ்ச்சியாலே எல்லா உலகங்களையும் திருவடியின் கீழே இட்டுக் கொண்ட. கோலக் கூத்தனை-திரு உலகு அளந்தருளினபோது வல்லார் ஆடியது போன்று இருந்தாளுதலின் 'கூத்தனை' என்றும், அப்பொழுதைய வடிவழகின் மிகுதியினைக் கூறுவார் 'கோலக் கூத்தனை' என்றும் அருளிச்செய்கிருர். இதனல், இந்திரன் இழந்த தனது ராஜ்யத்தைப் பெறும் பொருட்டு வணங்கியது போன்று, இவர் ஒரு பயனைக் கருதி வணங்குமவர் அல்லர் என்பதூஉம், அவ் இறைவனுடைய வடி வழகினை அநுபவித்தலே இவர்க்குப் பேறு என்பதூஉம் போதரும்.

குருகூர்ச் சடகோபன் சொல் - [2] ஆப்திக்கு இன்னர் கூறியது என்ன வேண்டுதலின் 'குருகூர்ச் சடகோபன்' என்கிருர். இதனல், வேதாந்தத்தைக் காட்டிலும் ஆழ்வாரிடத்தில் பிறந்த திருவாய்மொழிக்குள்ள உயர்குடிப் பிறப்பின் சிறப்பினைக் கூறியபடி. வாய்த்த ஆயிரம் - இத்தனைபோது இவர் கூறி வந்த பரம்பொருள் நேர்பட்டாற்போலேயாயிற்று இப்

---

1. விஷ்ணு தர்மம்.

2. "இந் நான்கும் உணர்ந்தவழியும், கற்றுவல்ல சான்றோ ரல்லாராற் செய்யப்பட்ட நூலாயின், கூறியது கூறல் முதலிய குற்றமுடைத்தாமன்றே யெனவும், கற்றுவல்ல சான்ருேரும் மற்ருேர் கோட்பாடு பற்றிச் செய்யின் முனைவன் நூலோடு முரணுமன்றே யெனவும், ஐயுற்று ஊக்கஞ் செல்லாமையின், அவ் வையம் நீக்குதற்பொருட்டு ஆக்கியோன் பெயரும் நூற்பெருமையும் உணர்த்தல் வேண்டும்" என்பது நன்னூல் விருத்தியுரை.

பிரபந்தமும் நேர்பட்டபடி. அன்றி, [1] வாச்சியத்திற் காட்டில் வாசகம் நேர்பட்டபடி என்றுமாம். அதாவது - விஷயத்தை உள்ளபடி பேசவற்றாய் இருக்கை. இவை பத்து உடன் ஏத்த வல்லவர்க்கு-இத் திருவாய்மொழியை மனமாரத் துதிக்க வல்லவர்கட்கு. ஓர் ஊனம் இல்லை - இவ் ஆத்மாவுக்கு ஊனமாவது, இறைவர் அல்லாதாரை இறைவர் என்று எண்ணுதலும், இறைவனை இறைவன் என்று எண்ணாமையும். இப்படி வரக்கூடிய ஊனம் இது கற்றார்க்கு இல்லை.

முதற்பாட்டில், மேல் பரக்க அருளிச்செய்கிற இத் திருவாய்மொழியின் அர்த்தத்தைத் தொகுத்து அருளிச்செய்தார். இரண்டாம்பாசுரம் முதல்-துக்கத்தைப் போக்குமவன் ஆதலானும், சீலவான் ஆதலானும், சுகுமாரன் ஆதலானும், தாமரைக் கண்ணன் ஆதலானும், ஆபத்சகன் ஆகையானும், அகடிதகட நாசமர்த்தன் ஆதலானும், படைத்தல் காத்தல்களைச் செய்கையாலும், அழித்தலைச் செய்கையாலும், ஈஸ்வரஅபிமானிகளாய் இருக்கிறவர்களுடைய துதிகள் முதலியவைகளாலும், இப்படிப் பல வகைகளாலே அவனுடைய பரத்துவத்தை அருளிச்செய்து, இது கற்றார்க்குப் பலம் சொல்லித் தலைக்கட்டினார். (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

திண்ணியதாம் மாறன் திருமால் பரத்துவத்தை
நண்ணி அவதாரத்தே நன்குரைத்த—வண்ணமறிந்து
அற்றார்கள் யாவர் அவரடிக்கே ஆங்கவர்பால்
உற்றாரை மேலிடாது ஊன். (12)

—o—

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. வாச்சியம் - சொல்லின் பொருள். வாசகம் - சொல்.

மூன்றாந் திருவாய்மொழி—“ஊனில் வாழ்”

முன்னுரை

ஈடு:—“வாயும் திரை உகளும்” - என்ற திருவாய்மொழியில் உண்டான துன்பமெல்லாம் தீரும்படி வந்து கலந்த கலவியினை அருளிச்செய்கிறார் இத் திருவாய்மொழியில். ஆயின், இது, “வாயும் திரை உகளும்” என்ற திருவாய்மொழியினைச் சார்ந்தன்றோ இருத்தல் வேண்டும்? எனின், ஆம்; முதல் திருவாய்மொழியின் ஈற்றுப் பாசுரத்தில் இறைவனுடைய முதன்மையினை அருளிச்செய்தாராதலின், அது சம்பந்தமாகத் தோன்றிய அம் முதன்மையினை இரண்டாந் திருவாய்மொழியில் அருளிச்செய்தார்; பின்னர், துன்பம் எல்லாம் தீரும்படி வந்து கலந்த கலவியினை அருளிச்செய்கிறார் இத் திருவாய்மொழியில். ஆக, இரண்டாந் திருவாய்மொழி, நடுவில் [1] பிராசங்கிகமாக வந்ததித்தனை.

[2] தாம் பெற்ற பேற்றின் கனத்தைப் பார்த்தார்; அது அளவு இறந்ததாக இருந்தது; தமது முயற்சியின் காரணமாக வந்ததாயின் அளவுபட்டு இருக்கும்; எல்லாம் வல்ல இறைவன் காரணமாக வந்ததாகலின் அவ் இன்பம் கனத்திருந்தது. மற்றும், தாம் அநுபவித்த அநுபவத்துக்குள்ளே [3] எல்லா ரசங்களும் உண்டாய் ஒப்பும் உயர்வும் அற்றதாய் இருந்தது; இத்தகைய பேற்றுக்கு உசாத் துணை யாவார் யார்? என்று பார்த்த இடத்தில் சம்சாரத்திலே ஆள் இல்லாமையாலே, அவன் தன்னோடு ஒக்கப் [4] பிராப்பியருமாய் அவனை நித்தியாநுபவம் பண்ணா நிற்பாருமாய், பகவானுடைய அநுபவத்துக்குத் தேசிகருமாய் இருக்கிற நித்திய சூரிகள் திரளிலே சென்று புக்கு ஒருவருக்கு ஒருவர் உணர்த்திக்கொண்டு

1. பிராசங்கிகம் - ஒரு காரணமாக இடையிலே தோன்றியது. (இடைப்பிறவரல்).

2. ‘தாம் பெற்ற பேற்றின்’ என்றது முதல், ‘இத் திருவாய்மொழியினைத் தலைக்கட்டுகிறார்’ என்றது முடிய, இத் திருவாய்மொழியின் பொருளைச் சுருங்க அருளிச்செய்கிறார்.

3. இத் திருவாய்மொழியின் முதற் பாசுரத்தை நோக்கி ‘எல்லா ரசங்களுமுண்டாய்’ என்கிறார்.

4. பிராப்பியர் — அடையத் தக்கவர்,

அநுபவிக்கப் பெறுவது எப்பொழுதோ?' என்னும்[1] அநவாப்தியோடே இத் திருவாய்மொழியினைத் தலைக்கட்டுகிறார். ஆயின், "வாயும் திரை உகளும்" என்ற திருவாய்மொழியிற் கூறியது போன்று, பிரீதிக்கும் பறவை முதலியவற்றைத் தேடாது, ஈண்டு நித்தியசூரிகளைத் தேடுவதற்குக் காரணம் என்னை? எனின், "வாயும் திரை உக"வில் ஆற்றாமைக்கு அறிவு நடையாடாத திரியக்குக்களையும்[2] அசேதநங்களையும் சேர்த்தார்; இங்கு, கலவியால் வந்த பிரீதிக்கு இயற்கை அறிவையுடைய நித்தியசூரிகளைத் தேடுகிறார்.

இறைவன் ஆழ்வாரோடு கலந்த கலவி, பெருமாளும் பிராட்டியும் ஏக தத்த்வம் என்னலாம்படி[3] கலந்த கலவியைப் போன்று இருந்தது.

---

1. அநவாப்தி - எண்ணம் முற்றுப்பெறாத தன்மை.

2. அசேதனம் - அறிவற்ற பொருள்; சேதனம் - அறிவு.

3. இவ்விடத்தில், ஸ்ரீராமாயணச் சுலோகத்திற்கு வியாக்கியாதா அருளிச்செய்த பொருள் :—ராமஸ் து-பெருமாளும் பிராட்டியும் ஏக தத்த்வம் என்னலாம்படி கலந்த கலவியைச் சொல்லுகிறது. 'பித்ரு ஶுஶ்ரூஷண பரரானார், தர்மங்களைப் பிரவர்த்திப்பித்தார், தேவ சமாராதனம் பண்ணினார்' என்றாயிற்றுச் சொல்லிக்கொண்டு போந்தது: இப்படிப் போந்த இவர், இப்போது 'வாத்ஸ்யாயநங் கற்றுக் காமதந்த்ரமேயோ நடத்திப் போந்தது?' என்னும்படி வேறுபட்டார். சீதயா ஸார்த்தம்-பரமபதத்திலே செவ்வியோடே வந்தவளும் பிற்பாடையாம்படி போக ஸ்ரோதஸ்ஸிலே முற்பாடரானார். விஜஹார-இப்படிப் பரிமாறச் செய்தேயும் போக உபோத்காதத்துக்கு அவ்வருகு பட்டிலர். பஹூந் ருதூந் - 'பஹூந் சம்வத்ஸராந்' என்னாதொழிந்தது, 'அவ்வோ கால விசேஷங்களுக்கு அடுத்த போக உபகரணங்களைக்கொண்டு புஜித்தார்' என்னுமிடம் தோற்றுகைக்காக. மனஸ்வீ - சம்ஸ்லேஷத்தில் பிராட்டி கோலின அளவுக்கு அவ்வருகு பட்டுப் பரிமாறினார். தத் கத:-தஸ்யாம் கத:- சாதி குணங்கள் திரவியத்துக்குப் பிரகாரமாய்ப் பிரிக்கவொண்ணாதபடியாய் இருக்குமா போலே, பிரிக்க ஒண்ணாதபடி ஒரு நீராகக் கலந்தபடி. தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித:—இவர் உயர்த்தியை அறிந்திருப்பாள் ஒருத்தி ஆகையாலே 'அப் பெரியவன் இப்படித் தாழவிடுவதே!' என்று அச் செயலிலே தன் நெஞ்சு துவக்குப்பட்டு 'அது அது' என்று கிடக்குமாயிற்று, அப்படியாயிற்று இங்குக் கலந்த கலவிதான்,

133.

ஊனில் வாழ் உயிரே! நல்லை, போ! உன்னைப்பெற்று
வானுளார் பெருமான் மதுசூதன் என் அம்மான்
தானும் யானும் எல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்
தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்தே.

பொ - ரை :—சரீரத்தில் வசிக்கிற மனமே! நீ மிகவும் நல்லை நல்லை; உன்னை நான் துணையாகப் பெற்ற காரணத்தால், நித்திய சூரிகட்குத் தலைவனும், மது என்னும் அரக்கனைக் கொன்றவனும், என்னை அடிமை கொண்டவனுமான இறைவனும் யானும் கலந்த கலவியிலே எல்லாச் சுவைகளும் உண்டாகுமாறு, தேனும் பாலும் நெய்யும் கருப்பஞ் சாறும் அமுதுமாகிய பொருள்கள் தம்மில் கலந்தாற் போன்று கலந்தோம்.

வி - கு :—ஊன் என்பதில் னகரம் சாரியை; 'ஊ' என்பதே பெயர். ஊ - தசை. கலந்தொழிந்தோம் என்பது: ஒருசொல் நீர்மையது. தொடர்மொழியாகக் கோடலுமாம்.

ஈடு :—முதற் பாட்டில், [1] இராச்சியத்தை இழந்த இராஜபுத்திரனை ஒருவன் இராச்சியத்திலே பிரவேசிப்பித்தால், 'இவனாலே நாம் இப் பேறு பெற்றோம்' என்று, அவன் அவனைக் கொண்டாடுமாறு போன்று, 'கைங்கரிய சாம்ராச்சியத்திற்கு இட்டுப் பிறந்து வைத்து நெடுநாள் அதனை இழந்து கிடக்க, இந் நெஞ்சு அன்றோ இப்போது அதனைத் தந்தது' என்று தம் திருவுள்ளத்தைக் கொண்டாடுகிறார்.

ஊனில் வாழ் உயிரே - சரீரத்திலே வசிக்கிற உயிரே! இவ் விளியால், பரமபதத்தைப் பெற்று அங்குப் பலவகை வடிவை உடையனாகி அநுபவிக்கிற இடத்திலேயோ நீ உதவி செய்தாய்? [2] எழுவகைத் தாதுக்களாலான சரீரத்திலே நித்திய சூரிகள் அநுபவிக்கும் அநுபவத்தை அன்றோ உதவினாய்

1. தந்திருவுள்ளத்தைக் கொண்டாடுதற்குரிய காரணத்தை ஓர் எடுத்துக்காட்டு மூலம் விளக்குகிறார் முதலில்.

2. எழுவகைத் தாதுக்கள் :—தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீர் என்பன.

என்ற தொனிப் பொருள் தோன்றும். இனி, ஊனில் வாழ் உயிரே என்பதற்கு, சரீரத்தைப் பற்றி அநுபவிக்கிற அநுபவத்தை யன்றி, அதற்கு அப்பால் வேறு ஒன்றனையும் அறியாதே வாழ்ந்து போன உயிரே! என்று பொருள் கூறலுமாம். இவ் விளியால், நெடுநாள் இவ் உலக இன்பங்களை நுகர்ந்து போந்த நீ, அவ் உலக இன்பத்துக்குக் கைதர நிற்பதே! என்ற தொனிப்பொருள் தோன்றும். இப் பொருளில் வாழ்தல் - அநுபவித்தல். ஈண்டு, உயிர் என்றது, மனத்தினை. ஆயின், மனத்தை 'உயிர்' என்பான் என்? எனின், உயிருக்கு [1] தர்ம பூத ஞானம் நித்தியமாய் இருக்கவும், [2] "மனிதனுக்கு மனமே பந்தங்கட்கும் மோக்ஷத்திற்கும் காரணம்" என்கிற படியே, பந்த மோக்ஷங்களுக்குக் காரணம் மனமே என்கிற பிராதாந்யத்தைப் பற்ற 'உயிரே' என்று ஆத்மாவை விளிக்குமாறு போன்று விளிக்கிறார். [3] நல்லை போ - நல்லை வா என்றபடி. இனி, நல்லை நல்லை என்று கொண்டாடுகிறார் என்று கோடலுமாம். அன்றி, 'போ' என்பது, விளியாகவு மாம்.

நடுவே என்னைக் கொண்டாடுகிறது என்? என்ன, உன்னைப் பெற்று - பிறப்பிற்குக் காரணமாகப் போந்த உன்னை மோக்ஷத்திற்குக் காரணமாகப் பெற்று. அதாவது - இறைவனும் என்றும் உளன்; அவன் சம்பந்தமும் அநாதி; அவன் [4] எதிர் சூழல் புக்குத் திரியாநிற்கவும், நீ அவனுக்கு முகங் காட்டாமையால் அன்றோ நெடுங்காலம் இழந்திருந்தது? இன்று நீ முகங்காட்டினமையால் அன்றோ இப் பேறு பெற்றது என்றபடி. ஆயின், நீர் பெற்ற பேறு எது? என்ன, சொல்லுகிறார் மேல்: வானுளார் பெருமான் மதுசூதன் என் அம்மான் தானும் யானும் - தான் அயர்வறும் அமரர்கள் அதிபதியாய்இருந்தும் அவதரித்து, மதுவாகிற அசுரனைப்போக்கியது போன்று, என்னுடன் கலப்பதற்குத் தடைகளாக இருந்தனவற்றைப் போக்கி என்னைத் தோற்பித்துத் தன்பக்கலிலே

---

1. தர்மபூதஞானம் - தர்மமான அறிவு; அதாவது, ஆத்மாவினைப்பற்றி இருப்பதாய், உலகத்துப் பொருள்களை அறிதற்குக் காரணமாயுள்ள ஞானம்.

2. ஸ்ரீ விஷ்ணுபுரா. 6. 7 : 28.

3. 'நல்லைபோ' என்பதற்கு மூன்று பொருள் அருளிச்செய்கிறார். மூன்றாவது பொருளில் 'ஹோ' என்ற வடசொல்லின் விகாரம்; 'ஹோ' என்பது, வடமொழியில் விளிப்பொருளைப் பயப்பது என்பர்.

4. திருவாய். 2. 7: 6. எதிர் சூழல் புகுதல்—ஒருவனைப் பிடிக்க நினைத்தவன் அவன் போம் வரம்புக்கு எதிர் வரம்பே வருமாறு போன்று, இவர் பிறந்த பிறவிகள் தோறும் இறைவனும் எதிரே பிறந்து வருதல். சூழல் - பிறவி.

கைங்கரியத்திலே மூளும்படி செய்த தானும், கைங்கரியத்திற்கு விஷயமாக உள்ள யானும். இனி, தானும் யானும் என்பதற்கு, என்னைப் பெறுகைக்கு நெடுநாள் எதிர்சூழல் புக்கு விடாய்ப் பித்த தானும், "வாயுந் திரை உகளும்" என்ற திருவாய்மொழியில், கண்ணுற் கண்ட பொருள்கள் அடங்கலும் பகவானைப் பெறாத காரணத்தால் நோவுபடுகின்றனவாக நினைத்து விடாய்த்த நானும் என்றும், கிருஷி செய்த தானும், கிருஷிக்கு விஷயமாக உள்ள நானும் என்றும் பொருள் கூறலும் ஆம்.

எல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம் - [1] ஆயிரத்தில் ஒன்றும், கடலிற் குளப்படியும் போலே, தானும் நானும் ஆன சேர்த்தியிலே எல்லா ரசங்களும் பிறக்கும்படி கலந்தோம்; நித்திய விபூதியில் சென்று புகினும் இப் பேற்றை அசையிட்டு இருக்கு மித்தனை; அங்கு ஏற்றமாகச் செய்யலாவது இல்லை; இதனுடைய பிரிவின்மையே அங்குள்ளது என்பார் '**கலந் தொழிந்தோம்**' என்கிறார். இனி, பரமபதத்திற்குப் போகத் தேடுவது - உசாத்துணைக்காகவும், இச் சேர்த்தி இடைவீடு இன்றி இருத்தற்கு மாம். நன்று; என் போலே கலந்தோம்? என்னில், தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்துக் கலந்தோம் என்கிறார். இதற்கு, 'ஒரு சாதிப் பொருள்கள் தம்மில் ஒன்றனோடு ஒன்று கலந்தது போன்று கலந்தோம்' என்று **ஆளவந்தார்** அருளிச்செய்தாராகத் **திருமாலையாண்டான்** பொருள் அருளிச்செய்வர். அதாவது - தேனும் தேனும் கலந்தாற் போலவும், பாலும் பாலும் கலந்தாற் போலவும், நெய்யும் நெய்யும் கலந்தாற் போலவும், கன்னலும் கன்னலும் கலந்தாற் போலவும், அமுதும் அமுதும் கலந்தாற் போலவும் என்பதாம்.

[2] இதற்கு, இவற்றை, சுவையுடைப் பொருள்களுக்கு எல்லாம் உபலக்ஷணமாக்கித் 'தானும் நானுமான கலவிக்

1. ஆயிரம் என்ற எண்ணுடன் ஒன்று என்ற எண்ணும், கடல் நீருடன் குளப்படி நீரும் சேர்ந்தது போன்று என்பதாம். இவ் உவமைகள் இறைவனுடைய ஞான ஆனந்தங்களின் மிகுதியையும், ஆழ்வாருடைய ஞான ஆனந்தங்களின் சிறுமையினையும் காட்ட வந்தன. குளம்பு அடி - குளப்படி: ஒரு விலங்கானது வைத்த குளம்பினது அடிச் சுவட்டில் தங்கிய நீர் என்பது பொருள்.

2. ஆளவந்தார் நிர்வாஹத்தில், தானும் யானும் எல்லாம் தன்னுள் தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்துக் கலந்தொழிந்தோம் எனறு கூட்டிப் பொருள் காண்க. எம்பெருமானார் நிர்வாஹத்தில், தானும் யானு மான தன்னுள் (கலவிக்குள்) தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் எல்லாம் ஒத்து (உண்டாம்படி) கலந்தொழிந்தோம் எனக் கூட்டிப் பொருள் காண்க.

குள்ளே எல்லா ரசங்களும் பிறக்கும்படி கலந்தோம் என்கிறார்' என்று எம்பெருமானார் பொருள் அருளிச்செய்வர். [1] "சர்வ ரஸ: சர்வ கந்த:" என்கிற இறைவனோடே கலக்கும் கலவி ஆதலானும், ஞான ஆனந்தங்களையுடைய இறைவனும் ஆத்மாவும் கலக்கிற கலவி ஆதலானும் சர்வ ரசங்களும் பிறக்கத் தட்டு இல்லை.

நன்று; ஆளவந்தார் நிர்வாகத்திலே, 'தேனும் தேனும் கலந்தாற் போலே கலந்தோம்' எனின், [2] இவ் இரண்டனையும் சேர்த்துச் சொல்லும்போது, வருவது ஒரு அளவின் மிகுதி உண்டு அன்றே? அவ் அளவின் மிகுதிதானே பொருள்கள் இரண்டு என்பதற்கு ஏற்ற பிரமாணமாம். (1)

134.

ஒத்தார் மிக்காரை இலையாய மா மாயா!
ஒத்தாய் எப்பொருட்கும், உயிராய், என்னைப் பெற்ற
அத் தாயாய்த் தந்தையாய் அறியாதன [3] அறிவித்து,
அத்தா! நீ செய்தன அடியேன் அறியேனே.

பொ - ரை :—ஒத்தவர்களும் உயர்ந்தவர்களும் இல்லாத மிகப் பெரிய ஆச்சரியமான குணங்களையும் செயல்களையும் உடையவனே! அவ் அவ் பொருள்கட்குத் தக்க நிலைகளை உடையவனாகி வந்து அவதரித்தவனே! சுவாமியே! என்னுடைய உயிராகி, என்னைப் பெற்ற அந்தத் தாயாகித் தந்தையுமாகி, அறியாதனவற்றை எல்லாம் அறியச் செய்து, நீ செய்த காரியங்களை அடியேன் அறியேன்.

வி - கு :—அத்தா! தாயாகித் தந்தையாகி அறிவித்து நீ செய்தன அடியேன் அறியேன் என்க. இலையாய மாயா என்க. அறியாதன, செய்தன : வினையாலணையும் பெயர்கள்.

ஈடு :—இரண்டாம் பாட்டு. 'அகன்ற நம்மை அவன் திருவடிகளிலே சேரவிட்டது நெஞ்சு அன்றோ?' என்று, இவர் திரு உள்ளத்தைக் கொண்டாடப் புகுந்தவாறே, நெஞ்சு, 'நீர் அடி

---

1. சாந். உபநிட. 2: 14.

2. ஒருபடி அளவு கொண்ட தேனோடு ஒருபடி அளவினையுடைய தேனைக் கலக்கும் போது, அத் தேன் முன் இருந்த அளவில் நில்லாது, மற்றும் ஒருபடி அளவு மிகுதலைக் காண்கிறோம் என்று அதன் பொருளை விரித்துக் கொள்க. ஐக்யமாகில், ஒரே பொருள் ஆய்விடுமே? என்ற வினாவிற்குக் கூறும் விடை இது.

3. 'அறிவித்த' என்னும் பாடம்.

அறியாதே,வழிப்போவாரைக்கொண்டாடுகிறது என்?'என்னை யும் இசைவித்த சர்வேஸ்வரனைக் கொண்டாடீர்' என்ன, கேட்ட ஆழ்வார், ஒக்கும்; 'ஆராயின், அதற்கும் அடி இறை வன் அன்றோ? நடுவே நெஞ்சைக் கொண்டாடினே மித்தனை ஆகாதே?' என்று தம் திருவுள்ளத்தை விட்டு, சர்வேஸ்வர னைக் கொண்டாடுகிறார்.

[1] **எம்பார்,** திருவாய்மொழிக்குப் பொருள் அருளிச்செய்து வருங்கால், இப் பாசுரம் வந்த அளவில், எம்பார் கோஷ்டி யிலே 'இவ் ஆத்மாவுக்குப் பிரதம குரு யார்?' என்ற ஒரு வினா எழுந்தது; இருந்த [2] முதலிகளிற் சிலர் 'ஆசாரியன்' என்றார் கள்; சிலர் 'ஆசாரியன் திருவடிகளிலே அடைவதற்கு வா' என்று அழைத்துக்கொண்டு போய்ச் சேரவிட்ட ஸ்ரீ வைஷ்ண வர்' என்றார்கள்; எம்பார் 'அங்ஙன் அன்று காண், அவன் இவனை அழைத்தாலும் இவன் 'அல்லேன்' என்னாதபடி [3] "இசைவித்து" என்கிறபடியே, அகவாயிலே இருந்து இசை வித்த சர்வேஸ்வரன்காண் பிரதம குரு' என்று அருளிச்செய் தார்.

ஒத்தார் மிக்காரை இலையாய மா மாயா - [4]"பரம்பொரு ளுக்கு ஒத்தவனும் காணப்படுவது இல்லை, மிக்கவனும் காணப் படுவது இல்லை" என்கிறபடியே, ஒத்தவனும் மிக்கவனும் இல் லாதவனாக இருப்பான். திருமகள் கேள்வனுக்கும் தன்னால் கழிக்க ஒண்ணாதபடி இருப்பது ஒரு [5] தாரித்திரியம் உண்டு என்று அருளிச்செய்வர், **எம்பார்.** என்னை அப்படி அங்கீ கரித்த நீதான் ஒரு குறைவாளனாய்ச் செய்தாயோ? என்பார் **'ஒத்தார் மிக்காரை இலையாய'** என்கிறார். இவ் ஆச்சர்யந் தான் என்னே! என்பார் **'மா மாயா'** என்கிறார். எப்பொருட் கும் ஒத்தாய் - ஒத்தாரும் மிக்காரும் இலையாய நீயே, இதர சாதீ யனாய் வந்து அவதரித்தாய்; அவையாவன - பிரமன் சிவன் இவர்கள் நடுவில் விஷ்ணு என்னும் பெயரோடும், இந்திரனுக் குத் தம்பியாகவும், இராமன் கிருஷ்ணன் முதலிய அவதாரங்க ளைச் செய்தும், விலங்குகளைப் போன்று மஹா வராஹமாகி யும், நிலையியற்பொருள் போன்று குட்டைமாமரமாயும் நின்ற

1. "அறியாதன அறிவித்து" என்றதிலே நோக்கமாக இவ் ஐதிஹ்யம் அருளிச்செய்கிறார்.

2. முதலிகள் - முதன்மையுடையவர்கள்; பெரியோர்கள்.

3. திருவாய்மொழி. 5. 8: 9.

4. ஸ்வேதாஸ்வதரம்.

5. தாரித்திரியம் - வறுமை. வறுமையாவது - இல்லாமை.

நிலைகள் போல்வன. [1]குட்டை மாமரமாக நின்றது எற்றிற்கு? எனின், செவ்வே நிற்பின் பெண்ணுக்கும் பேதைக்கும் ஏற ஒண்ணாது என்று எல்லோர்க்கும் ஒக்க எளியன் ஆகைக்கு. ஆயின், எப்பொருட்கும் ஒத்து வருவதற்குக் காரணம் என்னை? எனின், மேன்மையோடே வரில் 'கிட்ட ஒண்ணாது' என்று அகலுவர்கள்; தாழவிட்டு வரில் காற்கடைக் கொள்ளுவர்கள்; ஆகையாலே, சஜாதீயனாய் வந்து அவதரிக்கின்றான். [2] "ஒத்தாரை இல்லாதவனாய் ஒளியுருவனாய் உள்ள இறைவனுக்கு, பிரமன் சிவன் இவர்கள் நடுவில் விஷ்ணு என்ற ஒரு எண்ணிக்கையும், பன்னிரண்டு சூரியர்களுள் விஷ்ணு என்ற ஒரு எண்ணிக்கையும், அதிதிக்குப் புத்திரனாக இருக்கும் ஒரு சம்பந்தத்தால் [3] உபேந்திர அவதாரமும், இராமகிருஷ்ணர்களாய் வந்து அவதரிப்பது மான மேற்கூறிய இவைகள் போற்றத் தக்கவைகளாக இருக்கின்றன" என்றார் கூரத்தாழ்வான்.

இப்படி அவதரித்துச் செய்தது என்? எனின், உயிராய்-இவ் ஆத்மாதான் தனக்குப் பார்க்கும் ஹிதத்தையும் பார்க்கக் கூடியவனாய் இருக்கை. இனி, உயிராய் என்பதற்கு, தாரகனாய் எனலுமாம். என்னைப் பெற்ற அத் தாயாய் - பெறல் வேண்டும் என்று நோன்பு நோற்றுத் தன் சரீரத்தினை ஒறுத்துப் பெற்று இவன் பிரியத்தையே நடத்தக் கூடிய தாயாய். [4] மற்றைத் தாயர்களை நீக்குதற்குப் '**பெற்ற தாய்**'என்கிறார். தந்தையாய் - இப்படி நோன்பு நோற்று வருந்தி வரம் கிடந்து பெற்ற தாயும் இட்டுவைத்தற்கு ஒரு பை மாத்திரமாம்படி, இவன் தோன்றுவதற்குக் காரணனாய் ஹிதம் பார்க்கும் தந்தையாகி. தான், தனக்குத் தேடிக்கொள்ளும் நன்மையும், [5] தான் உளனாய பின்னரே செய்துகொள்ள வேண்டுதலின் '**உயிராய்**' என்றதனைச் சார, தாய் தந்தையர்களை அருளிச்செய்கிறார்.

---

1. குட்டை மாமரமாக நின்றது, திருவதரிகாச்சிரமத்தில் என்பர்.

2. அதிமாநுஷ ஸ்தவம் 15.

3. பரிபாடல் 3-ஆம் பாட்டு. 60, 61-ஆம் அடிகளின் உரையைப் பார்க்க.

4. தாயர் ஐவர் :—ஆட்டுவாள், ஊட்டுவாள், ஒல்கு உறுத்துவாள், நொடி பயிற்றுவாள், கைத்தாய் என்பவர்கள். (சிந். 363.)

5. சுவரினை வைத்தே சித்திரம் எழுதல்வேண்டும் என்னும் பழமொழி ஈண்டுச் சிந்திக்க.

அவ்வளவே அன்றி, அறியாதன அறிவித்து -[1] ஆசாரியனாய் இருந்து விரிந்த ஞானத்தையும் எனக்கு உண்டாகச் செய்து. [2]"தாய் தந்தையர்கள் சரீரத்தைமட்டும் கொடுத்தார்கள்; ஆசாரியன் மாணக்கனைக் கல்வியால் வேறு ஒரு சரீரத்தை அடையும்படி செய்கிறான்; கல்வியால்ஆய பிறவியே சிறந்தது" என்கிறபடியே, இச் சரீரத்தை உண்டாக்கிய தாய் தந்தையர்களைக் காட்டிலும், ஞானத்தைத் தந்து உயர்பிறவி அடையச் செய்த ஆசாரியன் சிறந்தவனாதலின், தாய் தந்தையர்கட்குப் பின் **ஆசாரியனை** அருளிச்செய்கிறார். ஆயின், இறைவன் ஆசாரியன் ஆவனோ? எனின், [3]"அது என்னுடைய விரதம்" என்றார் பெருமாள். [4]"என்னுடைய இரண்டு திருவடிகளையும் சரணமாகப் பற்று" என்றான் ஸ்ரீகண்ணபிரான். [5]"தாயும் தந்தையும் உடன்பிறந்தவனும் வசிக்கும்இடமும் பற்றுக்கோடும் நட்டோனும் பேறும் ஆகிய அனைத்தும் நாராயணனே" என்பது உபநிடதம். [6]"பெற்ற தாய் நீயே, பிறப்பித்த தந்தை நீ, மற்றையார்ஆவாரும் நீ பேசில்" என்பது தமிழ்மறை.

அத்தா - மஹோபகாரகன் ஆனவனே! இவ் உபகாரங்களை உடையவனாகையாலே செய்தான் என்கிறார். நீ செய்தன அடியேன் அறியேன் - ஸ்வாமியான நீ, அடியவனான என்பக்கல் செய்த உபகாரங்களை அடியேன் அறியேனே. ஒன்று இரண்டு ஆகில் அன்றோ 'இன்னது' என்னலாவது; ஆகையாலே, '**நீ செய்தன**' என்னுமித்தனை. செய்த நீ அறியில் அறியுமித்தனை; என்னால் சொல்லித் தலைக்கட்டப் போமோ? அநுபவித்துக் [7]குமிழி நீர் உண்டு போமித்தனை ஒழிய என்பார் '**அடியேன் அறியேன்**' என்கிறார். (2)

1. "பீதக ஆடைப் பிரானார் பிரம குருவாகி வந்து" என்பது, பெரியாழ்வார் திருமொழி.

2. ஆபஸ்தம்ப தர்ம சூத்.

3. ஸ்ரீராமா. யுத். 33 : 18.

4. ஸ்ரீகீதை. 18 : 66.

5. சுபாலோப நிடதம்.

6. பெரிய திருவந். 5.

7. குமிழிநீர் உண்கை - தண்ணீருக்குள் இருக்கிற மணலைத் தொடுகின்றவாறு தண்ணீருக்குள் புக்குக் கீழே இறங்குதல். நீரிலே குமிழி புறப்படுதல் என்பது பொருள்.

135.

அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து
அறியா மா மாயத்து அடியேனை வைத்தாயால்
அறியாமைக் குறளாய் நிலம் மாவலி மூஅடி என்று
அறியாமை வஞ்சித்தாய் எனது ஆவியுள் கலந்தே.

பொ - ரை :—பெரிய பிராட்டியாரும் அறியாதவாறு வாமனவதாரத்தைச் செய்து, மாவலி மூவடி நிலம் என்று இரந்து, அசுர குருவாகிய சுக்கிரன் கூறிய சொற்களையும் மஹாபலி அறியாதவாறு அவனை வஞ்சித்தது போன்று, என்னுடைய உயிரில் வந்து கலந்து அறியாமையினை உண்டுபண்ணுகிற மிகக் கொடிய இப் பிறவியில் அகப்பட்டிருக்கும் என்னை, ஒன்றையும் அறியாத இளமைப் பருவத்திலேயே அடிமை செய்வதில் மிகப் பெரியது ஒரு அவாவை எனக்கு உண்டாக்கி வைத்தாய் என்கிறார்.

வி - கு :—மாவலியை வஞ்சித்தது போன்று, எனது ஆவியுள் கலந்து, அறியா மா மாயத்து அடியேனை, அறியாக் காலத்துள் அடிமைக்கண் அன்பு செய்வித்து வைத்தாய் என்று கூட்டுக. கலந்து செய்வித்து வைத்தாய் என்க. அறியாமை : வினையெச்சம்.

ஈடு :—மூன்றாம் பாட்டு. அறிவு நடையாடாத பருவத்தில் சம்பந்த ஞானத்தினைப் பிறப்பித்தாய்; பிறப்பித்த ஞானத்தினை அழிக்கக் கூடிய இச் சரீரத்தோடே பின்னையும் வைத்தாய் என்னும்[1] இன்னாப்பாலே சொல்லுகிறார் என்று ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் அருளிச்செய்வர். இதனை, எம்பெருமானார் கேட்டருளி, 'முன்னிற் பாட்டுக்களும் பின்னிற் பாட்டுக்களும் பிரீதியோடே நடவா நிற்க, நடுவே பிரீதியின்மை தோற்றச் சொல்லுமது சேராது; ஆனபின்னர், இங்ஙனேயாமித்தனை. 'அறியா மா மாயத்து அடியேனை அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து வைத்தாயால் என்கிறார்' என்று இதனையும் ஓர் உபகாரமாக்கி அருளிச்செய்தார். "அத்தா நீ செய்தன" என்று - 'நாம் செய்த உபகாரங்களைச் சொல்லுகின்றீர்;

---

1. இன்னாப்பு - வெறுப்பு.

அவற்றிலே நீர் மதித்திருப்பது ஒரு உபகாரத்தைச் சொல்லிக் காணீர்' என்ன, அதனைச் சொல்லுகிறார்.

[1] அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து - [2] "இராமபிரான்பக்கல் இலக்குமணன் இளமைப் பருவம் தொடங்கி எப்பொழுதும் நேசத்துடன் இருந்தார்" என்கிறபடியே, அறிவு நடையாடாத பருவத்திலே [3] "தூங்குகிற நிலையிலும் விழித்திருக்கிற நிலையிலும் உமக்கு எல்லா அடிமைகளையும் செய்வேன்" என்கிறபடியே, சம்சாரத்தில் சிறிதும் சம்பந்தம் இல்லாத நித்தியசூரிகளுடைய பரிமாற்றத்திலே யன்றோ என்னைச் சேர்த்தாய். 'வரில் பொகடேன், கெடில் தேடேன்' என்று இருத்தல் அன்றி [4] "என்னை உடன் வருகின்றவனாகச் செய்தருளல் வேண்டும்" என்கிறபடியே, பெறாவிடில் முடியும்படியான நிலையினை உண்டாக்கினாய் என்பார் '**அன்பு செய்வித்து**' என்கிறார். அறியா மா மாயத்து அடியேனை வைத்தாயால் - அறிவின்மையினை உண்டு பண்ணுகிற பிரகிருதியில் சேர்ந்தவனாயிருக்கிற அடியேனை வைத்தாய். பிள்ளாய்! ஊமத்தங்காய் தின்று மயங்கினாரைப் போன்று, அசித்தில் சேர்ந்தவனாய் இருக்கிற என்னை அன்றோ இப்படிச் செய்தான் என்பார் '**அறியா மாயத்து அடியேனை**' என்கிறார். 'இது எங்கே சிறைப்பட்டாலும் நல்லது, நம்முடைய பொருள் அன்றோ' என்று இருக்கிறான் இறைவன் என்பார் '**அடியேனை**' என்கிறார். '**வைத்தாயால்**' என்ற சொற்போக்கால், **இத் தண்ணீர்ப் பந்தலை வைத்தாயே!** என்ற தொனிப் பொருள் தோன்றும். அறியா மா மாயத்து அடியேனை - அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து வைத்தாயால்.

தம்மை அறியாமை வஞ்சித்ததற்கு எடுத்துக்காட்டு ஒன்று அருளிச்செய்கிறார் மேல்: அறியாமைக் குறளாய் நிலம் மாவலி மூ அடி என்று - நெஞ்சு அறியாதபடி காரியம் செய்வாரைப் போன்று, திருமார்வில் இருக்கிற நாய்ச்சியாருங்கூட

---

1. மூலையோ முழுமுற்றும் போந்தில மொய்பூங் குழல் குறிய
கலையோ அரையில்லை நாவோ குழறும் கடல்மண்ணெல்லாம்
விலையோ என மிளிரும் கண் இவள் பரமே பெருமான்
மலையோ திருவேங் கடமென்று கற்கின்ற வாசகமே. (திருவிருத்.60)
2. ஸ்ரீராமா. பால. 18 : 27.
3. ஸ்ரீராமா. அயோத். 58 : 31.
4. ஸ்ரீராமா. அயோத். 31 : 32.

அறியாதவாறு வாமன வேடத்தை மேற்கொண்டு [1] "கொள்வன் நான் மாவலி மூ அடி தா என்ற கள்வனே" என்கிற படியே, 'நிலம் மாவலி மூ அடி' என்று பொருத்தம் அற்ற வார்த்தைகளைக் கூறி; பண்டும் இரந்து பழக்கம் உண்டாகில் அன்றோ பொருத்தம் உள்ள வார்த்தைகளைக் கூறுவது. அறியாமை வஞ்சித்தாய் - [2] சுக்கிரன் முதலியோர் 'இவன் சர்வேஶ்வரன், தேவ காரியம் செய்ய வந்தான்; உன் செல்வம் அனைத்தையும் அபஹரிக்க வந்தான்' என்றால், அவர்கள் வார்த்தைகள் செவிப்படாதவாறு உன் பேச்சாலே அவனை அறிவு கெடுத்து வஞ்சித்தாய். அப்படியே, எனது ஆவியுள் கலந்து-நான் இருக்குமிடத் தளவும் வந்து என்னோடே கலந்து; மிகவும் பராக்காய் இருக்கிற ஆத்மாவிலே புகுந்து உன் குணத்தாலும் செயலாலும் வசீகரித்தாய் என்பதாம்.

அறியாமைக் குறளாய் நிலம் மாவலி மூஅடி என்று அறியாமை வஞ்சித்தது போன்று, எனது ஆவியுள் கலந்து, அறியா மா மாயத்து அடியேனை, அறியாக் காலத்துள் அடிமைக்கண் அன்பு செய்வித்து வைத்தாய் என்க. (3)

136.

எனது ஆவியுள் புகுந்த பெரு நல் உதவிக் கைம்மாறு
எனதாவி தந்தொழிந்தேன் இனி மீள்வது என்பது உண்டே?
எனதாவி ஆவியும் நீ, பொழில் ஏழும் உண்ட எந்தாய்!
எனது ஆவி யார்? யான் ஆர்? தந்த நீ கொண்டாக்கினையே.[3]

பொ - ரை :— ஏழுவகைப்பட்ட உலகங்களையும் பிரளயகாலத்தில் திருவயிற்றில் வைத்துப் பாதுகாத்த என் சுவாமியே! என் உயிருக்குள் வந்து ஒரு நீராகக் கலந்த பெரிய நல்ல உதவிக்குப் பதில்உதவியாக என் உயிரை உனக்கே உரியதாகத் தந்தேன்; தந்த பின்னர், உன்னிடத்தினின்றும் மீள்வது என்பது உளதோ? இன்று என்றபடி. என் உயி

1. திருவாய். 3. 8 : 9.

2. கண்ட திறத்திது கைதவம் ஐய
கொண்டல் நிறக்குறள் என்பது கொள்ளேல்
அண்டமும் முற்றும் அகண்டமும் மேலுள்
உண்டவனும் இது உணர்ந்துகொள் என்றான்.

என்றார் கம்பநாடர்.

3. 'கொண்டாய்க்கினியே' எனவும் பாடம்.

ருக்குள் உயிராக இருப்பவனும் நீ ஆவாய்; என்னால் கொடுக்கப்பட்ட உயிர் யாருடையது? அவ் உயிரை உனக்குக் கொடுக்கிற நான் யார்? கொடுத்த நீயே கொடுக்கப்பட்ட பொருளினை உனக்கு உரிமையாக்கிக் கொண்டாய் என்றவாறு.

வி - கு :—கை மாறு - பிரதியுபகாரம். "கைம்மாறு வேண்டா கடப்பாடு" என்பது திருக்குறள். தந்தொழிந்தேன்: ஒரு சொல். மீள்வது: தொழிற்பெயர். உண்டே - ஏகாரம், எதிர்மறை. ஆர் என்பது, வினாவினைக் குறிப்பு முற்று. இது, யார் என்பதன் மரூஉ; ஈண்டு, அஃறிணைக்கண் வந்தது. "'ஊதை கூட்டுண்ணும் உகுபனி யாமத்து எம், கோதைகூட்டு உண்ணியதான் யார்மன் - போதெல்லாம், தாதொடு தாழுந்தார்க் கச்சி வளநாடன், தூதொடு வாராத வண்டு' என அஃறிணைக்கண் வருதலும், 'நானூர் என்னுள்ளமார்' என யார் என்பது ஆர் என மரீஇ வருதலும் புதியன புகுதலாம்" என்பது நன்னூல் விருத்தி. சூ. 349.

ஈடு :—நான்காம் பாட்டு.[1] "வைத்தாயால்" என்று அவன் செய்த உபகாரத்தைச் சொல்லி இங்ஙனே கிடந்து நெஞ்சாறல்பட நில்லாதே, பிரதியுபகாரமாக உம்மதாய் இருப்பது ஒரு பொருளைக் கொடுத்து நெஞ்சாறல் தீர மாட்டீரோ? என்ன, 'அப்படியே யன்றோ செய்வது' என்று அவன் திருவடிகளிலே ஆத்ம சமர்ப்பணத்தைப் பண்ணி, கழிவிரக்கங் கொள்ளுகிறார்.

எனது ஆவியுள் புகுந்த - அநாதிகாலம் சம்சாரத்திலே வாசனை பண்ணிப் போந்த என்னுடைய ஆத்ம வஸ்துவிலே அன்றோ வந்து கலந்தான். **வசிஷ்டன் சண்டாள சேரியிலே புகுந்தது** போன்று தம்மைச் சொல்லுகிறார் '**எனதாவி**' என்று; [2] "நீசனேன்" என்று அன்றோ தம்மை அநுசந்திப்பது. அவ்வாறு கலக்கும் இடத்திலும் [3] கடக்க நின்று சில

1. "எனதாவி தந்தொழிந்தேன், எனதாவி யார் யானார்" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. திருவாய். 3. 3: 4.

3. கடக்க நின்று சில போகத்தைக் கொடுத்தலாவது, தான் பிராப்பியன் அன்றிக்கே யொழிகை. கடக்க நின்று மோக்ஷத்தைக் கொடுத்தலாவது, "மோக்ஷயிஷ்யாமி", "நித்யகிங்கரோ பவிஷ்யதி" என்று புருஷார்த்தப் பிரதானத்தைச் சங்கல்பித்து, அந்த ரசத்தை அநுபவிப்பியாமலிருக்கை.

போக மோக்ஷங்களைத் தந்து போதல்அன்றி,[1] "எல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்" என்னும்படி கலந்தானதலின் '**உள்கலந்த**' என்கிறார். பெரு நல் உதவிக் கைம்மாறு - இப்பெரிய உபகாரத்துக்குப் பிரதியுபகாரமாக; **உதவி, நல்லுதவி, பெருநல்லுதவி: உதவியாவது**-உபகரித்தல். **நல் உதவியாவது**-[2] பச்சை கொள்ளாதே உபகரித்தல். **பெரு நல் உதவியாவது**-தன் பேறாக உபகரித்தல். எனது ஆவி தந்தொழிந்தேன் - என்னுடைய ஆத்மவஸ்துவைத் தேவரீருடைய திருவடிகளிலே சமர்ப்பித்தேன். அழகிது, இதுதான் [3] எத்தனை குளிக்கு நிற்கும்? என்றான் ஈஸ்வரன். இனி மீள்வது என்பது உண்டே - [4] சத்யோ தசாகமாகத் தந்தேன். 'அழகிது, நீர் தாம் யாரதை யாருக்குத் தந்தீர்; ஆராய்ந்து பார்த்தீரோ?' என்றான் ஈஸ்வரன். ஆராய்ந்து பார்த்தவாறே, அவனுடைய பொருளை அவனுக்குக் கொடுத்ததாக இருந்தது. 'எனது ஆவி ஆவியும் நீ' என்கிறார்; அதாவது - என் ஆத்மாவுக்கு அந்தராத்மாவாய்ப் புகுந்து நின்றாயும் நீயாய் இருந்தாய் என்றபடி.

பகவானுக்கு உரிமைப்பட்ட பொருளை நெடுநாள் 'நமது' என்றிருந்து, இத்தை இன்று அவன் பக்கலிலே சமர்ப்பித்தோம்; முற்றறிவினனான சர்வேஸ்வரன் என் நினைந்திருப்பான்? என்று தாம் அதனை யறிந்து அதற்கு நாணுகிறார் '**எனது ஆவி யார் யானார்**' என்று. நன்று; ஆத்ம சமர்ப்பணம் செய்யாவிடில் [5] சர்வமுக்தி பிரசங்கமாம்; சமர்ப்பிக்கில் அவனுடைய பொருளை அவனுக்குக் கொடுத்ததாம்; அப்படி

1. திருவாய். 2. 3: 1.

2. பச்சை = பிரதியுபகாரம்.

3. 'எத்தனை குளிக்கு' என்றது, குளித்தல் = நீராடல்; நாலு ஆறு குளிபர்யந்தம் புஷ்பாங்கராகாதி பரிமளம் இருக்குமாறு போன்று, இதுவும் எத்தனைகாலம் இருக்கும் என்றபடி.

4. சத்யோ தசாகம் - பத்து நாட்களும் இப்பொழுதே முடிவுற்றது. அதாவது, உலகத்துப் பொருள்களை விற்றல் வாங்கல் செய்யுமிடத்து, கொடுத்த பொருளைப் பெறுவதாயின் பத்து நாட்களுக்குள் பெறுவேன்; இன்றேல், கொடுத்த பொருள் உன்னுடையதே, என்னுடையதன்று என்று கூறப்படுகிற நியதி யுண்டு; அந் நியதியும் என் விஷயத்தில் இன்றே சென்று விட்டதாகக் கொடுத்தேன் என்பதாம்

5. சர்வ முக்தி பிரசங்கம் - எல்லாரும் மோக்ஷத்தைப் பெறுதற்கு உரியவர் என்று போதருதல்.

யாயின், செய்ய அடுப்பது என்? என்னில், [1] மயங்கிக் கிடக்கிற காலத்தில் சமர்ப்பிக்கவும் வேண்டும்; தெளிந்தால், 'கொடுத்தோம்' என்று இருக்கக்கடவன் அல்லன். [2] "தேவரீருடைய திருவடித் தாமரைகளில் எனது உயிரை இப்போது நான் சமர்ப்பித்தேன்" என்றும், [3] "என்னுடையதும் யானும் ஆகிய எல்லாப் பொருள்களும் தேவரீர் உடைமை அன்றோ? இதனை நன்கு அறிந்த யான் தேவரீருக்கு என்னுடைய பொருள் என்று எதனைக் கொடுப்பேன்?" என்றும் வருகின்ற **ஸ்ரீ ஆளவந்தார்** திருவாக்குக்களை ஈண்டு உணர்தல் தகும்.

பொழில் ஏழும் உண்ட எந்தாய் - இயல்பாகவே அமைந்த சேஷியாய் இருக்குந் தன்மையைக் கொண்டு சொல்ல வேண்டுமோ? பிரளயாபத்திலே வயிற்றிலே வைத்து நோக்கின அது போதாதோ 'நீ சேஷி' என்கைக்கு? இனி, பிரளயாபத்திலே நசியாதபடி உலகத்தைப் பாதுகாத்தது போன்று, பிரிந்து நசியாதபடி என்னோடே கலந்து அடிமைகொண்டவன் என்பார் '**பொழில் ஏழும் உண்ட எந்தாய்**' என்கிறார் எனலுமாம்.

எனது ஆவி யார் யான் ஆர் - கொடுக்கப்படுகின்ற பொருள் யார் உடையது, கொடுக்கின்றவன் யார் உடையவன்? ஆதலால், நான் என் ஆத்மாவை உன்னிடத்தில் சேர்த்தேன் என்னத் தக்கவனோ? அல்லன் என்றபடி. தந்த நீ கொண்டாக்கினையே - ஆதியில் இதனை உண்டாக்கின நீயே கொண்டாய் ஆனாய். ஆயின், நித்தியமான ஆத்மாக்களை 'உண்டாக்கினை' என்றல் என்? என்னில், [4] "தேவரீருடைய நித்தியமான இச்சையினாலேயே, எல்லாப் பொருள்களினுடையவும் உளதாந் தன்மை" என்கிறபடியே, இவ் ஆத்மாக்கள் நித்தியமாக இருத்தல், இறைவனுடைய நித்தியமான இச்சையினாலேயாம். (4)

---

1. 'மயங்கிக் கிடக்கும் காலம்' என்றது, ஒருவன் கேவலம் சேஷத்வ ஞானமாத்திரம் உடையவனாக இருக்கும் நிலையினைக் குறித்தது. 'தெளிந்தால்' என்றது, அத்யந்த பாரதந்திரிய அநுசந்தானத்தையுடையவனாக இருத்தலைக் குறித்தது.

2. ஸ்தோத்திர ரத்நம். 52.

3. ஸ்தோத்திர ரத்நம். 53.

4. ஸ்ரீவைகுண்டஸ்தவம். 36.

137.

இனி யார் ஞானங்களால் எடுக்கல் எழாத எந்தாய்!
கனிவார் வீட்டின்பமே! என் கடற்படா அமுதே!
தனியேன் வாழ்முதலே! பொழில் ஏழும் ஏனம் ஒன்றாய்
நுனியார் கோட்டில்வைத்தாய்! [1] நுன பாதம் சேர்ந்தேனே.

பொ - ரை :—எத்தகைய பெரியோர்களுடைய ஞானங்களாலும் அளவிட்டு அறிய முடியாதபடி இருக்கின்ற என் நாயனே! பக்தி நிறைந்து அதனால் கனிந்த மனம் உடையவர்களுக்கு மோக்ஷ சுகமானவனே! எனக்குக் கடலில் உண்டாகாத அமிர்தம் போன்றவனே! யான் பெற்ற இப் பேற்றுக்கு மூல காரணம் ஆனவனே! உலகங்கள் ஏழனையும் ஒப்பற்ற வராகஅவதாரமாகிக் கூர்மை மிக்கதந்தத்தில் வைத்துத் தூக்கி வந்தவனே! இப்பொழுது உன்னுடைய திருவடிகளைச் சேர்ந்தேனே அன்றோ?

வி - கு :—இப் பாசுரம் பூட்டுவிற்பொருள்கோள். 'இனி சேர்ந்தேனே' எனக் கூட்டுக. அன்றி, 'இனியார்' என்பதனை ஒரு சொல்லாகக்கொண்டு, இனியார் - இனியர்அல்லாதார்; அதாவது - அன்புஇல்லாதார் என்று பொருள் கூறலுமாம். ஞானம் பலவகைப் படுதலின் 'ஞானங்களால்' என்கிறார். கனிவார்: வினையாலணையும் பெயர். முதல் - காரணம். சேர்ந்தேனே - ஏகாரம் தேற்றப் பொருள்.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [2] 'ஞான லாபமே அமையுமோ? பேறு வேண்டாவோ?' என்ன, எனக்குப் [3]பிரதம சுக்ருதமும் நீயே யாய், என்னைச் சம்சாரிகளில் வேறுபட்டவன் ஆக்கின அன்றே பெற்றேனே அன்றோ? என்கிறார்.

யார் ஞானங்களால் எடுக்கல் எழாத எந்தாய்-தன் முயற்சியால் அறியப் பார்க்குமன்று எத்துணை மேம்பட்டவர்களுடைய ஞான விசேடங்களாலும் பெயர்க்கப் பெயராது இருக்கின்ற

---

1. "உனபாதம் சேர்ந்தேனே" என்பதும் பாடம்.

2. "தனியேன் வாழ்முதலே! இனி நுனபாதம் சேர்ந்தேனே" என்ற பதங்களைக் கடாக்ஷித்து, இரண்டாம் பாசுரத்தோடு கூட்டி அவதாரிகை அருளிச்செய்கிறார். 'ஞான லாபமே அமையுமோ' என்றது, "அறியாதன அறிவித்து" என்றதனை நோக்கி.

3. பிரதம சுக்ருதம் - ஆதியில் உண்டான புண்ணியம்.

என் நாயனே! [1] அதாவது-துரியோதனனால் அளவிட்டு அறிதல், [2] இராவணனாலே எடுக்கலாய் இருத்தல் செய்ய அரிதாய் இருக்கை. கனிவார் விட்டு இன்பமே - நீ என்றால் உள்கனிந்து பக்குவமாய் இருக்குமவர்களுக்கு மோக்ஷசுகம் ஆனவனே! அன்றி, நீ என்றால் இனியராய் இருக்குமவர்கள் இருப்பிடத்திலே வந்து அவர்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்குமவனே! என்று கோடலுமாம். அப்படி எங்கே கண்டோம்? என்னில், யசோதைப் பிராட்டி, [3]தொல்லை இன்பத்து இறுதி கண்டாள் அன்றோ? என் கடல் படா அமுதே - பகை, பக்தி என்ற இவ் இரண்டின் எல்லையிலே உள்ள இரு திறத்தாரிலும் எண்ண ஒண்ணாதபடி இருக்கிற எனக்கு, முயற்சி இன்றிக் கிடைத்த அமுதம் போன்றவனே! தனியேன் வாழ் முதலே - தனியேனை என்னுடைய அநுபவத்துக்குப் பிரதம சுக்ருதம் ஆனவனே! பிராட்டி ஒற்றைக்கண்ணள், ஒற்றைக் காதள் முதலியவர்கள் நடுவே இருந்தாற் போன்று, இவரும் இவ் உலக மக்களின் நடுவே இருந்தா ராயினும் அவர்களோடு ஒட்டு இன்றி இருத்தலின் [4]**'தனியேன்'** என்கிறார்.

பொழில் ஏழும் ஏனம் ஒன்றாய் நுனியார் கோட்டில் வைத்தாய் - தனக்கு ஒத்தது வேறு ஒன்று இல்லாததான மஹா

1. "ஞானங்களால் எடுக்கல் எழாத எந்தாய்" என்றதனால், உடல் வலிமையாலும் எடுக்கல் எழாத எந்தாய் என்பதனை உபலக்ஷணத்தாற் கொள்க. "எடுக்க எழுதலை" அறிவிற்கும் உடலின் உறுப்புக்கட்கும் ஏற்பக் கொள்க.

2. முதல்பத்து, மூன்றாம் திருவாய்மொழி. பக். 85. குறிப்பைப் பார்க்க.

3. முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும்
முகிழ் இளஞ் சிறுத் தாமரைக் கையும்
எழில்கொள் தாம்புகொண்டு அடிப்பதற்கு எங்கு
நிலையும் வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும்
அணிகொள் செஞ் சிறுவாய் நெளிப்பதுவும்
தொழுகையும் இவை கண்ட அசோதை
தொல்லை இன்பத்து இறுதி கண்டாளே. (பெருமாள் திரு.)

4. "பந்துக்கள் நடுவே இருக்கிறவர் 'தனியேன்' என்கிறாரிறே; வழிப்பறிக்காரர் நடுவே நின்றால் அவர்கள் துணையாகாரிறே; எனக்கு என்றிருப்பார் நடுவே இருக்கையிறே இவர்க்குத் தனிமை. தம்மை அத்தலைக்கு ஆக்கி வைக்கையிறே இவர்க்கு வாழ்வு" என்பது இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்.

வராகத்தின் வடிவை மேற்கொண்டு, பிரளயம் கொண்ட உலகங்கள் ஏழனையும் எடுத்து, கூர்மை மிக்க கோட்டில் வைத்தவனே! இதனால், தனிமையில் வந்து உதவின படியையும், பாதுகாக்கப் படுகின்ற பொருள்களின் அளவு அல்லாத பாதுகாக்கின்றவனுடைய பாரிப்பையும் அருளிச்செய்தபடி. இனி நுன பாதம் சேர்ந்தேனே - பிரளயம் கொண்ட பூமியை எடுத்தது போன்று, பிறவிப் பெருங்கடலால் கொள்ளப்பட்ட என்னை எடுத்தபோதே தேவர் திருவடிகளை நான் கிட்டினேனே அன்றோ? அன்றி, [1]"இமையோர் தலைவா-இந் நின்ற நீர்மை இனி யாம் உறாமை" என்னும்படி, அறிவைத் தந்தபோதே உன் திருவடிகளைப் பெற்றேனே அன்றோ? என்று பொருள் கோடலுமாம். (5)

138.

சேர்ந்தார் தீவினைகட்கு அரு நஞ்சைத் திண் மதியைத்
தீர்ந்தார் தம் மனத்துப் பிரியாது அவர் உயிரைச்
சோர்ந்தே புகல்கொடாச் சுடரை அரக்கியை மூக்கு
ஈர்ந்தாயை அடியேன் அடைந்தேன் முதன்முன்னமே.

பொ - ரை:— தன்னை அடைந்தவர்களுடைய தீவினைகட்குக் கொடிய விஷமாக இருப்பவனும், அவ் அடியவர்கட்குத் தன்னாலும் அசைக்க ஒண்ணாத அறிவினைக் கொடுக்குமவனும், தன்னை ஒழியச் செல்லாதவர்களுடைய மனத்தினின்றும் பிரியாமல் அங்கே தங்கியிருந்து அவர்களுடைய உயிரைச் சிற்றின்பங்களால் சோர்ந்து போகும்படி விடாத ஒளியுருவைஉடையவனும், சூர்ப்பணகையினுடைய மூக்கினை அறுத்தவனும் ஆன உன்னை, உனக்கு அடியவனான நான் இவ் உயிர் உள்ள அன்றே அடைந்தேனே அன்றோ? என்கிறார்.

வி - கு:— தீர்ந்தார் - எல்லாப் பொருள்களின் ஆசையினின்றும் நீங்கினவர்கள்; அதாவது - அவ் இறைவனை ஒழியச் செல்லாதவர்கள் என்றபடி. தீர்தல் - விடுதல். "தீர்தலும் தீர்த்தலும் விடற் பொருட்டாகும்" என்பது தொல்காப்பியம். (சொல். 318.) சோர்தல் - ஐம்புலன்களால் தளர்ச்சியினை அடைதல். அல்லது, இறைவனை விட்டுப் பிரிந்து தளர்தல் எனலுமாம். ஈர்ந்தாயை என்பது உருபு ஏற்ற முன்

---

[1] திருவிருத்தம். 1.

னிலைப் பெயர். முன்னமே என்பதிலுள்ள ஏகாரத்தை அடைந்தேன் என்பதனுடனும் கூட்டுக. இவ் ஏகாரம், தேற்றத்தின் கண் வந்தது.

ஈடு:—ஆறும் பாட்டு. "இனி நுன பாதம் சேர்ந்தேனே" என்றார் மேல் திருப்பாசுரத்தில்; 'இனி' என்றுதான் விசேடிக்க வேண்டுமோ? "பொய்ந்நின்ற ஞானத்திலே" நீ விசேஷ கடாக்ஷம் பண்ணினபோதே கிட்டிற்றிலேனோ? என்கிறார் இப் பாசுரத்தில். அன்றி, சொரூபத்தை அநுசந்தித்தவாறே, நிலைநின்ற சொரூபம் இயல்பாகவே அமைந்துள்ளதான சேஷத்துவமேயாய், நடுவுள்ளது வந்தேறியாய்த் தோன்றுகையாலே அருளிச்செய்கிறார் எனலுமாம்.

சேர்ந்தார் - [1] "இரண்டு துண்டுகளாக வெட்டுப் படக் கடவேன்; அப்படி வெட்டுப் பட்ட போதிலும் ஒருவனுக்கு வணங்கமாட்டேன்" என்னும் நிர்ப்பந்தம் இல்லாதவர்கள்; இவர்களைச் 'சேர்ந்தார்' என்கிறது என்? எனில், அநாதி காலம் பிறவிகளிலே உழன்று திரிந்த ஆத்மா சர்வேஸ்வரனைக் கிட்டுகையாவது - கெடு மரக்கலம் கரை சேர்ந்தது போன்று இருத்தலின் 'சேர்ந்தார்' என்கிறார்; இவர்கள்[2] இக் கரை ஏறினவர்கள் அன்றோ? தீவினைகட்கு அரு நஞ்சை - இவர்கள் பேற்றினை அடைவதற்குத் தடையாக உள்ள கர்மங்கட்குக் [3]காற்ற ஒண்ணாத நஞ்சானவனை. திண்மதியை-முன்பே சேர்ந்திருக்குமவர்கட்குத் திண்ணியதான மதியைக் கொடுக்குமவனை. அதாவது, [4] அம்பரீடன் தவம் செய்து கொண்டிருக்க, சர்வேஸ்வரன் இந்திரன் வேடத்தைத் தரித்துக்கொண்டு சென்று, [5] "உனக்கு வேண்டியவற்றை வேண்டிக்கொள்

---

1. ஸ்ரீராமா. யுத். 36: 11.

2. "அக்கரை என்னும் அனத்தக் கடலுள் அழுந்தி உன் பேரருளால்
இக்கரை ஏறி இளைத்திருந்தேனை அஞ்சல் என்று கைகவியாய்"
என்பது பெரியாழ்வார் திருமொழி.

"புன்பிறப்பாம்
எக்கரை நீக்கிப் படித்தாரை அந்த இருவிரசைக்கு
அக்கரை சேர்க்கும் மணவாளதாசன் அருங்கவியே"
என்னும் பகுதி ஈண்டு ஒப்புநோக்கத் தகும்.

3. காற்றவொண்ணாத - வேறு மருந்தைக் கொடுத்துக் காக்க வொண்ணாத.

4. ஈண்டுச் சரபங்கர் வரலாறு ஒப்பு நோக்குக. (கம்பரா. சரபங்கர் பிறப்பு நீங்கு படலம்.)

5. விஷ்ணுதர்மம்.

என்ன, நான் உன்னை ஆராதிக்குமவன் அல்லேன்காண்; என்னைச் சமாதி பங்கம் பண்ணாதே போகவல்லையே, உன்னைக் கும்பிடுகிறேன்" என்றான். ஆக, இறைவன் தானே அழிக்கப் பார்க்கும்அன்றும் அழிக்க ஒண்ணாதபடியான திண்ணிய மதியைக் கொடுக்குமவன் என்பதாம்.

தீர்ந்தார் தம் மனத்துப் பிரியாது அவர் உயிரைச் சோர்ந்தே புகல் கொடாச் சுடரை.[1] "ஸ்ரீராமா! உம்மால் நீக்கப்பட்ட பிராட்டி உயிர் வாழாள்; நானும் உயிர் வாழேன்; ஒருவாறு பிழைத்தோமானால், தண்ணீரினின்றும் மேலே எடுக்கப்பட்ட மீன் போன்று, ஒரு கணநேரமே பிழைத்திருப்போம்" என்கிறபடியே, தன்னைப் பிரிய மாட்டாதே இருக்குமவர்கள் நெஞ்சை விட்டுப் போகமாட்டாதே, அவர்கள் உயிர், தன்னைப் பிரிந்து நீர்ப்பண்டமாக மங்கிப் போகக் கொடாதே, 'அது தன் பேறு' என்னுமிடம் வடிவிலே தோன்ற இருக்குமவனை. இனி, தீர்ந்தார்-உபாயத்தில் துணிவுடையார்; அவர்கள் ஆகிறார்:—[2] பிராப்பிய பிராபகங்கள் இரண்டும் அவனே என்று இருக்குமவர்கள்; அவர்கள் தன்னைப் பிரிந்து நோவுபடாதபடி அவர்கள் நெஞ்சிலே இருக்குமவன் என்று கூறலுமாம். அரக்கியை மூக்கு ஈர்ந்தாயை - பிராட்டியினுடைய சேர்க்கைக்குத் தடையாக நின்ற சூர்ப்பணகையைப் போக்கியது போன்று, அவர்களுடைய விரோதிகளைப் போக்கும்படியும். ஆயின், மூக்கை அறுத்தவன் ஸ்ரீராமனோ? எனில், ஆம்; கையாலே அறுக்க வேண்டுமோ? [3] "ஸ்ரீராமபிரானுக்கு இலக்குமணன் வலது தோள்" எனப் புகலும் ஸ்ரீராமாயணம்.

அடியேன் அடைந்தேன் முதல் முன்னமே-அநாதி காலம் இழந்த இழவை மறக்கும்படி வந்து கலக்கையாலே, இன்றோ பெற்றது? இவ் ஆத்மா உள்ள அன்றே பெற்றேன் அல்லேனோ? என்கிறார். இனி, முன்னர், கலவியிலே களித்த தேற்றம் போய் "வாயுந் திரை உகளும்" என்ற திருவாய்மொழியில்

---

1. ஸ்ரீராமா. அயோத். 31 : 5.

நீருள எனின் உள மீனும் நீலமும்;
பாருள எனின் உள யாவும்; பார்ப்புறின்
நாருள தனுவுளாய்! நானும் சீதையும்
யாருளர் எனின் உளேம்; அருளுவாய் என்றான்

என்ற கம்பராமாயணச் செய்யுள் ஈண்டு நினைவிற்கு வருகின்றது.

2. பிராப்பியம் - பேறு. பிராபகம் - அதனையடைதற்குரிய வழி.

3. ஸ்ரீராமா. ஆரண். 34 : 14.

கலங்கிப் பிரிவேயாகிச் சென்றது போன்று, இங்குக் கலவி யின் மிகுதியாலே அத்தை மறந்து முன்னே பெற்றேன் அல் லேனே? என்கிறார் எனலுமாம். முதன் முன்னம் - பழையதாக என்றபடி. (6)

139

முன்னல் யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவையே!
பன்னலார் பயிலும் பரனே! பவித்திரனே!
கன்னலே! அமுதே! கார்முகிலே! என் கண்ணா!
நின்னலால் இலேன்காண்; என்னை நீ குறிக்கொள்ளே.

பொ - ரை :—பழையதாய்ச் சிறந்ததாய் யாழ் விஷயமாகக் கற் கப்படுவதாய் உள்ள யாழ்நூல்களிற் பேசப்படுகின்ற இலக்கணத்தை யுடைய நரம்பிலே பிறந்த முதிர்ந்த சுவை போன்று இனியன் ஆன வனே! சிறப்பித்துச்சொல்லப்படுகிற நித்தியசூரிகள் அநுபவித்தாலும் முடிவு பெறாத இன்ப மயமானவனே! பரிசுத்தத்தையுடையவனே! கரும்பின் ரசம் போன்றவனே! அமுதம் போன்றவனே! கார்முகில் போன்றவனே! என் கண்ணா! உன்னை அல்லாமல் வேறு ஒரு கதியினை யுடையேன் அல்லேன்; ஆதலால், என்னை நீ நினைத்தல் வேண்டும்.

வி - கு :—பன்னலார் - ஒரு சொல். பன் நல்லார் எனப் பிரித்தலு மாம். பவித்திரம் - தூய்மை; அதனையுடையவன் பவித்திரன். கன் கல் - கரும்பு; அது ஆகுபெயராய் அதன்சாற்றின் கட்டிக்கு ஆயிற்று.

ஈடு :—ஏழாம் பாட்டு. இப்படி, [1]தாம் பெற்ற பேற்றின் கனத்தையும் நினைத்தார்; இவ் விஷயத்தினுடைய இனிமை யையும் அநுசந்தித்தார்; அநுசந்தித்து, 'இது இருந்தபடி கண்டோமுக்குத் தொங்காது போலே இருந்தது' என்று ஐயங்கொண்டு 'தேவர் என்னைக் கைவிடில் நான் உளேன் ஆகேன்; என்னைக் கைவிடாது ஒழியவேண்டும்' என்கின்றார்.

முன் நல் யாழ் பயில்நூல் நரம்பின் முதிர் சுவையே - சாஸ் திரத்தினுடைய பழமையதாய், அதுதான் சிறந்ததாய், யாழ்

---

1. இத் திருவாய்மொழியில் மேலே போந்த பாசுரங்களைக் கடாக்ஷித்துத் 'தாம் பெற்ற பேற்றின் கனத்தையும்' என்கிறார். இப் பாசுரத்தைக் கடா க்ஷித்து, 'விஷயத்தினுடைய இனிமையையும்' என்கிறார். கண்டோமுக்கு - கண்ட நமக்கு. தொங்காது - நில்லாது.

விஷயமாகக் கற்கப்படுவதாய் உள்ள நூல் உண்டு - சாஸ்திரம்; அந் நூலிற் கூறிய முறைப்படியே நரம்பிலே தடவப்பட்டு, அதிலே பிறந்த பண்பட்ட ரசத்தினைப் போன்ற இனிமையினை உடையவனே! மிடற்றினின்றும் பிறக்கும் இசையானது காலத்திற்கும் செயலுக்கும் ஏற்றவாறு விகாரங்களை அடையுமாதலின் மிடற்று ஓசையினைக் கூறாது '**நரம்பின் முதிர் சுவையே**' என்கிறார். இனி, முன்னல் என்பதனை ஒருமொழியாகக் கொண்டு, அதற்கு 'நினைத்தல்' என்று பொருள் கூறி, நினைத்தலாவது - யாழோசையின் இனிமையாலே 'அது அது' என்று வாய்புலற்றும்படி இருத்தல் என்று கூறலுமாம். இனி, முன்னல் என்பதனை, முனல் என்ற சொல்லின் விகாரமாகவும், அந்த முனல் என்பதனை முரல் என்ற சொல்லின் விகாரமாகவும் கொண்டு, முரல் என்பதற்கு ஒலித்தல் என்று பொருள் கூறி, ஒலிக்கின்ற யாழ் என உரைப்பாரும் உளர்.

இவ்வாறு இனிமை குறைவற்று இருந்தால் அவ் இனிமையினை நுகர்கின்றவர்கள் வேண்டும்அன்றோ? அவர்களை அருளிச் செய்கிறார் மேல்: பன்னலார் பயிலும் பரனே - [1] "தெள்ளியார் பலர் கைதொழும் தேவனார்" என்கிறபடியே, தாங்கள் பலராய் இறைவனுடைய நற்குணங்கட்குத் தேசிகராய் இருக்கின்ற நித்தியசூரிகளால் அநுபவிக்கப் படுகின்றவனே! அயர்வு அறும் அமரர்கள் விடாது என்றும் நுகர்ந்தாலும் அதுகாறும் நுகர்ந்த பகுதி அளவுபட்டு, மேல் நுகரவேண்டிய பகுதிகளே மிக்கு இருப்பவன்ஆதலின் '**பரனே**' என்கிறார். பவித்திரனே - பிறப்பிலே உழன்று திரிகின்றவர்களும், நித்திய சூரிகளைப் போன்று உன்னை அநுபவித்தற்குத் தக்கவர் ஆகும்படி அவர்கட்கும் சுத்தியைப் பிறப்பிக்குமவனே! இனி, பன்னலார் பயிலும் பரனே பவித்திரனே என்பதனை ஒரே தொடராகக் கொண்டு, பன்னலார்-முமுக்ஷுக்கள்; அவர்கள் எப்பொழுதும் அநுபவித்தாலும் தொலையாத இனிமையினையுடையையாய், அவர்கட்கும் உன்னை அநுபவித்தற்குத் தடையாக உள்ளனவற்றைப் போக்கும் சுத்தியோகத்தை யுடையவனே! என்று உரைத்தலும் ஆம்.

கன்னலே - எனக்கு எல்லை அற்ற இனியன் ஆனவனே! அமுதே - [2] சாவாமல் என்னை உய்வித்துக்கொண்டு போகின்ற

1. நாய்ச்சியார் திரு. 4 : 1.

2. 'சாவாமல்' என்றது, "வாயுந் திரை உகளும்" என்ற திருவாய்மொழியில் கூறிய பிரிவால் முடிந்து போகாதபடி பிழைப்பித்தவனே என்றபடி,

வனே! கார் முகிலே-வள்ளன்மையினைப் பற்றிக் 'கார்முகிலே' என்கிறார். என் கண்ணா - தன்னைக் கொடுத்தபடி. நின் அலால் இலேன் காண் - உன்னை ஒழிய அரைக்கணம் பிழைக்க மாட்டேன். இனி, இதற்கு, உன்னை ஒழிய வேறு ரக்ஷகரை உடையேன் அல்லேன் என்று பொருள் கூறலு மாம். என்னை நீ குறிக்கொள்-உன்னை ஒழிந்த அன்று அறிவு அற்ற பொருளாகக் கிடக்கும் என்னை, இவ் உயிருக்குத் தாரகனாக இருக்கிற நீ பார்த்தருள வேண்டும். திருவுள்ளம் பற்றல் வேண்டும் எனலு மாம். (7)

140.

குறிக்கொள் ஞானங்களால் எனை ஊழி செய் தவமும்
கிறிக்கொண்டு இப் பிறப்பே சில நாளில் எய்தினன் யான்
உறிக்கொண்ட வெண்ணெய் பால் ஒளித்துண்ணும் அம்மான்பின்
நெறிக்கொண்ட நெஞ்சனாய்ப் பிறவித் துயர் கடிந்தே.

பொ - ரை :—உறியிலே சேமித்து வைத்த வெண்ணெயினையும் பாலினையும் மறைந்திருந்து புசித்த இறைவனுக்குப் பின்னே அவன் சென்ற வழியே சென்று திரிகின்ற நெஞ்சை உடையேனாய்ப் பிறவியினது துன்பத்தைக் கடிந்தேன்; ஆதலால், இயமம் நியமம் முதலிய எண்வகை உறுப்புக்களை மேற்கொண்டு செய்வதனால் உளவாய ஞானங்களால் பல காலங்களாக ஈட்டப்படுவதான பரபக்தியை இறைவனுடைய திருவருளாகிய நல்ல உபாயத்தைக் கொண்டு இப் பிறப்பிலேயே சில நாட்களில் யான் அடைந்தேன்.

வி - கு :—நெறிக் கொண்ட நெஞ்சனாய்ப் பிறவித் துயர் கடிந்தேன்; ஆதலால், தவத்தின் பலத்தை இப் பிறப்பே சில நாளில் எய்தினன் என்று கூட்டுக. கடிந்து : முற்று. "கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும், தொல்லது விளைந்தென நிலம் வளங் கரப்பினும்" (புறம். 203.) என்புழிப் போன்று ஈண்டு, கடிந்து என்பதும் கடிந்தேன் என்னும் பொருட்டாய் நின்றது. இனி, இதனை எச்சமாக்கி, 'கடிந்து எய்தினன்' என முடித்தலுமாம். ஈண்டுத் தவம் என்றது, தவத்தாற் பெறும் பேற்றினை; தவத்தாலாய பயனைத் தவம் என்றார். குறி என்றது, இயமம் நியமம் முதலிய எட்டினை; குறித்துக் கொள்ளப்படுதலின் அவற்றைக் குறி என்றார். குறித்தல் - கருதுதல். எனை என்பது, எத்தனை என்ற சொல்லின் மரூஉ. கிறி - உபாயம்.

ஈடு :—எட்டாம் பாட்டு. [1]"என்னை குறிக்கொள்ளே" என்றவாறே, அவன் குளிரக் கடாக்ஷித்தான் ; அதனால் எல்லாத் துன்பங்களும் போய் அவனை அநுபவிக்கிறார்.

குறிக் கொள் ஞானங்களால் - [2]இயமம் நியமம் முதலியவற்றிலே கருத்து ஊன்றியவர்களாய்க் கொண்டு சம்பாதிக்க வேண்டும் ஞான விசேஷங்களாலே ; அவையாவன :— [3]கேட்டல் மனனம் உபாசனம் முதலிய நிலை விசேடங்கள். எனை ஊழி செய் தவமும் - பல கல்பங்கள் கூடிக் கேட்டலாய் மனனமாய்ப் பாவனையாய் இங்ஙனம் வரக் கூடியதான தவத்தின் பயனை. கிறிக் கொண்டு - ஒரு முயற்சியும் இன்றியே இருப்பது ஒரு விரகைப் பெற்று. அதாவது, அவன் தன்னையே கொண்டு என்றபடி. ஆயின், 'கிறி' என்றால், இறைவனைக் காட்டுமோ? எனின், [4]"பெருங் கிறியானை அல்லால் அடியேன் நெஞ்சம் பேணலதே" என்ற இடத்தில் இறைவனைக் 'கிறியான்' என்று ஓதியிருத்தல் காண்க. இதுதான் எத்தனை பிறவிகள் கூடி? என்னில், இப் பிறப்பே - இந்தப் பிறவியிலேயே. இப் பிறவியின் வாழ்நாள் முழுதும் கூடியோ? என்னில், சில நாளில் - சில நாட்களிலே. அழகிது, நீர் அப் பேற்றினைப் பெறப் போகின்றவராய் நிற்கின்றீரோ? என்ன,

---

1. "பிறவித் துயர் கடிந்து தவம் எய்தினன்" என்ற பதங்களை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. இயமம் நியமம் முதலியவை எண்வகை யோக உறுப்புக்கள் எனப் படும். அவை - இயமம், நியமம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இவற்றுள், இயமம் - கொல்லாமை, வாய்மை முதலியன. நியமம் - தத்துவ நூல் ஆராய்ச்சி, தெய்வ வழிபாடு முதலியன. ஆசனம் - இருப்பு: அது ஸ்வஸ்திகம் முதலாக எண்வகைப்படும். பிராணாயாமம் - பிராணவாயுவை ரேசக பூரக கும்பஞ் செய்தல்; இது உயிர்நிலை, வளிநிலை எனவும்படும். பிரத்தியாகாரம் - மன ஒருக்கம் ; இது தொகை நிலை எனவும் படும். அது உபாதியை நீக்கி உள்நோக்கல். தாரணை - கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி இவற்றுள் ஒன்றில் எப்பொழுதும் சிந்தையை வைத்தல்; இது, பொறைநிலை எனவும் படும். தியானம் - ஐம் புலன் அடக்கி யோகம் சேர்தல் ; இது, நினைவு எனவும் படும். சமாதி - இந்திரியம் முதலிய தத்துவங்களின் சேஷ்டைகளுக்கு ஏதுவாகிய உடம்பினுள் நின்று அவற்றோடு கூடினும் அவற்றில் பற்றின்றி இருக்கும் ஆத்மாவாகிய தன்னைத் தான் காண்டல்.

3. இவற்றை, திருக்குறள் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் 5, 6, 7-ஆம் செய்யுட்களிலும் அவற்றின் உரைகளிலும் கண்டு கொள்க.

4. திருவிருத்தம். 91.

எய்தினன் - அடைந்தேன். யான் - இப் பேற்றுக்கு ஒரு முயற்சியும் செய்யாத நான்.

உறிக் கொண்ட வெண்ணெய் பால் ஒளித்து உண்ணும் அம்மான் - உறிகளிலே சேமித்துக் கள்ளக் கயிறு உருவி வைத்த வெண்ணெயையும் பாலையும் 'தெய்வம் கொண்டதோ!' என்னும்படி மறைந்து அமுதுசெய்த அச் செயலாலே நாட்டை [1] எழுதிக்கொண்டவனுடைய. பின் நெறிக் கொண்ட நெஞ்சனாய் - [2] "இறைவன் எவ் எவ் வழியில் செல்லுகின்றான்; இவ் உயிரும் அவ் அவ் வழியெல்லாம் கூடவே செல்லுகிறது" என்கிறபடியே,[3] அவன் பின்னே நெறிப்பட்ட நெஞ்சை யுடையனாய். இதனால், "தவம் எய்தினன்" என்கிற பலத்தைச் சொல்லுகிறாராதல், அன்றி, "கிறிக்கொண்டு" என்கிற உபாயத்தைச் சொல்லுகிறாராதல். பின் நெறி என்றது, பிரபத்தியை எனலுமாம். பின்நெறி - [4]பின்னே சொன்ன வழி என்றபடி.

பிறவித் துயர் கடிந்து - பலத்தைக் கூறுகின்ற சரமச் சுலோகத்தில் "எல்லாப் பாவங்களினின்றும் உன்னை விடுவிக்கின்றேன்" என்று தடையின் நீக்கத்தையும் கூறப்பட்டு இருத்தலின், இப் பாசுரத்திலும் பலத்தைக் கூறிப் 'பிறவித் துயர் கடிந்து' என்று தடையின் நீக்கத்தையும் அருளிச் செய்கிறார். இனி, 'உறிக்கொண்ட வெண்ணெய் பால் ஒளித்து உண்ணும் அம்மான் பின் நெறிக்கொண்ட நெஞ்சனாய்ப் பிறவித் துயர் கடிந்து' என்றதனால், பாரதப் போரில் அருச்சுனனுக்குச் சோக நிலையினை உண்டாக்கி, பின்னர் அன்றோ உபாயத்தை உபதேசித்தது? இவர், வெண்ணெய் களவு காணப் போன இடத்தில் அடி ஒற்றிக்கொண்டு சென்று, அவன் புக்க வீட்டிலே தாமும் புக்கு, [5] அவன் வெளி வாராமல் படலைத் திருகி வைத்து, உபாய நெறியினைக் கேட்டு அறிந்து, பின் பிறவித் துயர் கடிந்தார் என்ற தொனிப்பொருளும் தோன்றும். (8)

---

1. எழுதிக்கொண்ட - அடிமைக்கொண்ட.

2.

3. 'அவன் பின்னே நெறிப்பட்ட நெஞ்சையுடையனாய்' என்றது, கைங்கரியத்திலே ஒருப்பட்ட நெஞ்சை யுடையனாய் என்றபடி.

4. 'பின்னே சொன்னவழி' என்றது, பின்பு சொன்ன சரமஸ்லோகத்திற் கூறிய உபாயத்திலே ஒருப்பட்ட நெஞ்சையுடையனாய் என்றபடி. கர்மம் ஞானம் பக்தி பிரபக்தி என்ற நான்கனுள் பிரபக்தி ஈற்றிற் சொல்லப்பட்டதாதலின் 'பின்நெறி' எனப்பட்டது.

5. இங்கு, ததிபாண்டன் சரிதம் நினைவு கூர்வது.

141.

கடிவார் தண்ணந் துழாய்க் கண்ணன் விண்ணவர்பெருமான்
படி வானம் இறந்த பரமன் பவித்திரன் சீர்ச்
செடியார் நோய்கள் கெடப் படிந்து குடைந்து ஆடி
அடியேன் வாய்மடுத்துப் பருகிக் களித்தேனே.

பொ - ரை :—வாசனை மிகுந்துள்ள குளிர்ந்த அழகிய திருத் துழாயினை அணிந்த கண்ணபிரானும், நித்தியசூரிகட்குத் தலைவனும், பரமபதத்திலும் தன் திருமேனிக்கு ஒப்பான பொருள் இல்லாதபடி இருக்கிற மேலானவனும், பரிசுத்தத்தைக் கொடுக்குமவனும் ஆன இறைவனுடைய நற்குணங்களில், தூறு மண்டிக் கிடக்கிற நோய்கள் எல்லாம் கெடும்படியாகப் படிந்து குடைந்து ஆடி வாய்மடுத்துப் பருகி அடியேன் களித்தேன்.

வி - கு :—கடி - வாசனை. வார்தல் - ஒழுகுதல்; அதாவது- மிகுதல். படி - திருமேனி. படிமை என்ற சொல்லின் விகாரம். வானம்- பரமபதம். இறத்தல் - கடத்தல். செடி - தூறு. பவித்திரன் சீரிலே அடியேன் நோய்கள் கெடும்படியாகப் படிந்து குடைந்து ஆடி அச் சீரை வாய்மடுத்துப் பருகிக் களித்தேன் என முடிக்க. சீரை வாய்மடுத்துப் பருகி என்கிறார்; "உண்டற்கு உரிய அல்லாப் பொருளை, உண்டன போலக் கூறலும் மரபே" என்பது விதி.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [1] "இவ் உயிரானது முற் றறி வினனான இறைவனுடைய நற்குணங்களை அவ் இறைவனோடு அநுபவிக்கின்றது" என்கிறபடியே, தம்முடைய எல்லாத் துக்கங்களும் போகும்படி இறைவனை அநுபவிக்கப் பெற்றேன் என்று மகிழ்கிறார்.

கடி வார் தண் அம் துழாய்க் கண்ணன் - வாசனை மிகுந் துள்ள திருத்துழாய் மாலையினை யுடைய கிருஷ்ணன். இனி, கடி வார் என்பதற்குத் தேன் ஒழுகுகின்ற என்று பொருள் கூறலுமாம். விண்ணவர் பெருமான் - இவ் ஒப்பனை அழகாலே எழுதிக் கொள்வது [2] அனந்தன் வைநதேயன் முதலிய

---

1. ஆனந்தவல்லி, 1: 2.

"செடியார் நோய்கள் கெட, சீர் வாய்மடுத்துப் பருகிக் களித்தேன்" என்ற பதங்களை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. அனந்தன் - ஆதிசேடன். வைநதேயன் - விநதையின் புத்திரன்; கருடன் : தத்திதாந்த நாமம்.

நித்தியசூரிகளை யாதலின் 'துழாய்க் கண்ணன்' என்றதனை அடுத்து, 'விண்ணவர் பெருமான்' என்கிறார். படி வானம் இறந்த பரமன் - எல்லாவகையாலும் தன்னை ஒத்திருக்கிற பரமபதத்திலுள்ள நித்தியசூரிகளும் தன் தன்மைக்கு ஒப்பாகாதபடி இருக்கிற பரமன். படி - தன்மை. வானம்: இடவாகு பெயர். இனி, தன் திருமேனிக்கு மேகமும் ஒப்பாகாதபடி இருக்கிற பரமன் எனலுமாம். படி - திருமேனி. வானம் - மேகம். பவித்திரன் - இவ் வடிவழகைச் சம்சாரிகளும் அநுபவிக்கைக்குத் தக்கவராம்படி செய்யும் சுத்தியை யுடையவன்.

சீர் - அவனுடைய கல்யாண குணங்களை. செடியார் நோய்கள் கெடப் படிந்து குடைந்து ஆடி அடியேன் வாய்மடுத்துப் பருகிக் களித்தேனே - அடி காண ஒண்ணாதபடி தூறு மண்டிக் கிடக்கிற தீய வினைகளெல்லாம் போகும்படி வந்து கிட்டி, நான்கு மூலைகளிலும் புக்கு உட்புகுந்து, வேறு ஒருவர்க்கும் உரியன் அல்லாத யான் முழுமிடறுசெய்து அநுபவித்து, [1] யமன் முதலியோர் தலைகளிலும் அடியிட்டுக் களிக்கப் பெற்றேன். சிற்றின்பம் துக்கமே ஆயது போன்று, பகவத்குணாநுபவம் களிப்பே ஆதலின் 'களித்தேனே' எனத் தேற்றேகாரம் கொடுத்து ஓதுகிறார். படிதல் - கிட்டுதல். குடைதல்-எங்கும் புகுதல். ஆடுதல் - உட்புகுதல். வாய்மடுத்துப் பருகுதல் - பெருவிடாயோடே அநுபவித்தல். (9)

142.

களிப்பும் கவர்வும் அற்றுப் பிறப்புப் பிணி மூப்பு இறப்புஅற்று
ஒளிக்கொண்ட [2]சோதியமாய் உடன்கூடுவது என்றுகொலோ
துளிக்கின்ற வான் இந்நிலம் சுடர்ஆழி சங்கு ஏந்தி
அளிக்கின்ற மாயப்பிரான் அடியார்கள் குழாங்களையே.

பொ - ரை: நினைத்த பொருள் கிடைக்கப் பெற்றமையால் உளதாகும் களிப்பும், அது கிடைக்கப் பெறாமையால் உளதாகும் துன்பமும் நீங்கி, இவை இரண்டற்கும் அடியான பிறப்பும், பிறப்புள்ள இடத்தே சென்று புகுகின்ற நோயும், வேறு ஒன்றால் நீக்க ஒண்ணாத

1. காவலில் புலனை வைத்துக் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து
நாவல்இட்டு உழிதர்கின்றோம் நமன்தமர் தலைகள் மீதே
மூவுலகு உண்டு உமிழ்ந்த முதல்வ! நின்நாமம் கற்ற
ஆவலிப்பு உடைமை கண்டாய் அரங்கமா நகரு ளானே.

என்றார் தொண்டரடிப்பொடிகள்.

2. 'சோதியுமாய்' என்றும் பாடம்.

முதுமையும், இறப்பும் நீங்கி, பேரொளி மயமான திருமேனியினை உடையோமாய், மழையினைப் பெய்கிற ஆகாயத்தையும், பூமியையும், ஒளியுடன் கூடிய ஆழியினையும் சங்கினையும் ஏந்திக் காத்தருளுகின்ற ஆச்சரியமான குணங்களையும் செயல்களையும் கொண்ட இறைவனைச் சார்ந்த நித்தியசூரிகளுடைய கூட்டத்தை ஒரு நீராம்படி உடன்பட்டுக் கூடுவது என்றோ?

வி - கு :—வானையும் இந்நிலத்தையும், ஆழி சங்கு ஏந்தி அளிக்கின்ற பிரான் அடியார்கள் குழாங்களை, அற்று அற்றுச் சோதியமாகி உடன் கூடுவது என்று கொலோ எனக் கூட்டுக. "களிப்புக் கவர்ச்சிகளும் பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களும் முதலாயின இன்றி உயிர் நிரதிசய இன்பத்ததாய் நிற்றலின் வீட்டினைப் 'பேரா இயற்கை' என்றும்" என்னும் விசேடவுரை இத் திருப்பாசுரத்தைக் கொண்டு எழுந்ததாகும். (திருக்குறள். 370.) சோதியம் - தனித்தன்மைப் பன்மை. கொல், ஓ என்பன : அசைநிலைகள்.

ஈடு :—பத்தாம் பாட்டு. "களித்தேனே" என்றவர், மீண்டும், இவ் உலக மக்களோடு பொருந்தியிருத்தல் நீங்கி, இவ் அநுபவத்திற்குத் தேசிகரான நித்தியசூரிகள் திரளில் போய்ப் புகுவது எப்போதோ? என்கிறார்.

களிப்பும் - சிற்றின்ப நுகர்ச்சியாலாய களிப்பும், கவர்வும் - ஆசைப்பட்டு அவை பெறாதபோது வரும் துன்பமும், அற்று - நீங்கி, பிறப்புப் பிணி மூப்பு இறப்பு அற்று - [1]இவை இரண்டற்கும் அடியான பிறப்பும், அது புக்க இடத்தே புகக் கூடிய நோயும், பின்னர் வருகின்ற முதுமையும், இவற்றோடே யாகிலும் இருந்தால் ஆகாதோ? என்று நினைத்திருக்கும் போதே வருகின்ற இறப்பும் ஆகிய இவ் அனைத்தும் நீங்கி. ஒளிக் கொண்ட சோதியமாய் - இராசசம் தாமசம் கலந்த இச் சரீரத்தைப் போன்றது அன்றியே, சுத்த சத்துவ மயமாய் எல்லையற்ற ஒளியுருவமான சரீரத்தை யுடையோமாய். உடன் கூடுவது என்று கொலோ - [2]'நான், எனக்கு' என்று அகல

1. 'இவையிரண்டு' என்றது, முற்கூறிய களிப்புக் கவர்ச்சிகளை.

2. இவ்வுலகத்து மக்கள் 'இறைவனுடைய அடியார் குழாங்களைச் சார்ந்திருத்தலே நமக்குப் பேறு' என்னும் அறிவு படைத்திருந்தனராயினும், நான் எனது என்னும் செருக்கால் அவர்களை விட்டு அகன்றிருக்கின்றார்களன்றோ? அப்படி அகலவேண்டாதபடியான சம்பந்தஞான முடையவர்கள் என்பதனைக் காட்டுவதற்கு 'நான், எனக்கு என்று அகலவேண்டாத' என்கிறார். இவ்வுடம்பையுடையார் - சுத்த சத்துவ மயமான உடம்பையுடைய நித்திய சூரிகள்.

வேண்டாத இவ் உடம்பைஉடையார் திரளிலே போய்ப் புக்கு நெருக்கப் பெறுவது என்றோ!

துளிக்கின்ற வான் இந் நிலம் சுடர் ஆழி சங்கு ஏந்தி அளிக்கின்ற மாயப் பிரான் - மழையினைப் பெய்கின்ற ஆகாயம், அதனால் விளையக்கூடிய இந்தப் பூமி இவற்றைக் [1] **கடற்கரை வெளியில் நோக்கியது போன்று,** திவ்ய ஆயுதங்களைத் தரித்து நோக்குகிற ஆச்சரியத்தை யுடையவன். பரமபதத்தில் ஆபரணங்களாகக் காட்சி அளிக்கிற இவை, இங்கு ஆயுதங்களாகக் காட்சி அளிப்பன ஆதலின் அளித்தற்குச் சுடர் ஆழியினையும் சங்கையும் கருவிகளாக ஓதினார்.

அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்றுகொலோ - இவ்வாறு காக்கின்ற அக் காத்தல் தொழிலுக்குத் தோற்றிருப்பாராய், அவ் இறைவனைப் போன்றே அடையத் தக்கவருமாய், இறைவனுடைய நற்குணங்களுக்குத் தேசிகராய் இருப்பாருமாய், தம் அநுபவங்களை ஒருவர்க்கொருவர் உணர்த்திக்கொண்டு கலந்து பழகுவதற்குத் துணையாக இருக்கிறவர்களுமாய் உள்ள நித்திய சூரிகளுடைய குழாங்களைச் சென்று சேர்வது எப்போதோ! என்கிறார். [2]**'கலியர் கல அரிசிச் சோறு உண்ண வேண்டும்'** என்று நினைக்குமாறு போன்று, இவரும் அத் திரளில் போய் புகப் பெறுவது என்றோ! என்கிறார். ஆற்றாமையின் மிகுதி இங்ஙனம் கூறச் செய்கின்றது. (10)

1. பாண்டிய நாட்டினின்றும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் சிலர் வந்து நம்பிள்ளையைக் கண்டு வணங்கித் தேவரீர் 'எங்களுக்குத் தஞ்சமாக இருப்பது ஒரு வார்த்தை யருளிச்செய்யவேண்டும்' என்று விண்ணப்பம்செய்ய, பிள்ளையும் 'கடற்கரை வெளியை நினைத்திருமின்' என்று அருளினார். அவர்களும் 'மணற் குன்றையும் நாவல் காட்டையும் நினைத்திருக்கவோ?' என்று விண்ணப்பம் செய்ய, பிள்ளையும் புன்முறுவல் செய்து அருளிச்செய்தபடி :— 'சக்கரவர்த்தித் திருமகன் கடற்கரையில் படைவீடு செய்திருக்கும்போது ஸ்ரீ வானரவீரர்கள் இராகவார்த்தே பராக்ராந்தராய்த் தங்களை உபேக்ஷித்துப் பெருமாளையே நோக்கிக்கொண்டு கிடக்க, இவர்கள் கண்ணுறங்குந்தனையும் தான் உறங்கி, இவர்கள் கண்ணுறங்கினவாறே அம்பறுத்தூணியை முதுகிலே கட்டித் திருக்கையிலே பிடித்த சார்ங்கமும் திருச்சாழுமாய் இராமுற்றும் நோக்கின சக்கரவர்த்தித் திருமகனுடைய திருவடிகளே தஞ்சமென்று இருமின்' என்று அருளினார். ஆகையால், ஸ்வரக்ஷண சிந்தையற்று நியதனாகவே சர்வ ரக்ஷகன் கைக்கொண்டு ரக்ஷிக்கும் என்றபடி என்ற நம்பிள்ளையின் இத் திருவாக்கு ஈண்டு ஒப்பு நோக்குக.

2. கலியர் - பசியினையுடையவர்கள்.

143

குழாங்கொள் பேர்அரக்கன் குலம் வீய முனிந்தவனைக்
குழாங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் தெரிந்து உரைத்த
குழாங்கொள் ஆயிரத்துள் இவை பத்தும் உடன் பாடிக்
குழாங்களாய் அடியீர்! உடன் கூடி நின்று ஆடுமினே.

பொ-ரை :—இராக்கதர்களைக் கூட்டம் கூட்டமாக உடையவனும் எல்லாவற்றாலும் பெருமைபெற்றவனும் ஆன இராவணனுடைய குலமானது முற்றும் அழியுமாறு சீற்றங்கொண்ட இறைவன் விஷயமாக, ஸ்ரீ வைஷ்ணவர்கள் கூட்டம் கூட்டமாகத் தங்கியிருக்கிற அழகிய திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபர் ஆராய்ந்து அருளிச்செய்த பத்து நூறுகளையுடைய ஆயிரம் பாசுரங்களில், இப் பத்துப் பாசுரங்களையும், அடியவர்களே! பொருள் உணர்ச்சியோடே அன்பிற்குப் போக்கு வீடாக வாய்விட்டுப் பாடிக் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து நின்று அநுபவியுங்கள் என்றவாறு.

வி-கு:—அடியீர்! குழாங்களாய், இவை பத்தையும் உடன் பாடி உடன் கூடி நின்று ஆடுமின் எனக் கூட்டுக. வீய - வினையெச்சம்; 'வீ' என்பது பகுதி; சாதல் என்பது பொருள். முனிந்தவன் : வினையாலணையும் பெயர்.

ஈடு :—முடிவில், இத் திருவாய்மொழியை 'உனக்கே நாம் ஆட் செய்வோம்' என்று இருக்கும் அடியவர்கள் [1] என்னைப் போன்று தனித்திராமல் திரளாக அநுபவியுங்கள் என்கிறார்.

குழாம் கொள் பேர் அரக்கன் குலம் வீய முனிந்தவனை - [2]"சீதா பிராட்டியின் பொருட்டு, பாணங்களால் இவ் உலகத்தில் பிசாச சாதி அற்றதாயும், இராக்கத சாதி அற்றதாயும் செய்வேன்" என்கிறபடியே, புத்திரர் பௌத்திரர் முதலானவர்களும் உறவினர்களுமான இவர்களாலே குழாங்கொண்டு வரத்தின் வலிமை தோள்வலிமை என்பனவற்றால் தழைத்து வேரூன்றின இராக்கதனுடைய சாதியினைக் கிழங்கு எடுத்த சக்கரவர்த்தித் திருமகனை.

குழாம் கொள் தென் குருகூர்ச் சடகோபன் - அடியார்கள் கூட்டத்தைக் கொண்ட அழகிய திருக்குருகூரில் அவ

1. 'என்னைப்போன்று தனித்திராமல்' என்றது, "அடியார்கள் குழாங்களை யுடன்கூடுவது என்று கொலோ" என்றதனை நோக்கி. மேலும் "தனியேன் வாழ்முதலே" என்றார். (2. 3 ; 5,)

2. ஸ்ரீராமா. ஆரண். 64 : 66.

தரித்த ஸ்ரீசடகோபர். ஜன ஸ்தானம் அடியறுப்பு உண்ட பின்பு தண்டகாரண்யத்தில் முனிவர்கள் குடி ஏறியதுபோன்று, "வாயும் திரை யுகளும்" என்ற திருவாய்மொழியில் உண்டான நிலையினின்றும் தப்பிய ஆழ்வாரைக் காணவேண்டும்என்னும் பேரவாவோடு ஸ்ரீ வைஷ்ணவர்க ளடையத் திரண்டு வந்து சேர்ந்தார்களாதலின் 'குழாங்கொள் தென்குருகூர்' என்கிறார். [1]"நல்லார் நவில் குருகூர்" அன்றோ? சத்துக்கள் இருந்த இருந்த இடங்களிலே வாய் புலற்றும் படியான தேசமானால், அத் தேசத்திலுள்ளார் திரளச்சொல்லவேண்டாஅன்றோ? தெரிந்து உரைத்த குழாம் கொள் ஆயிரத்துள் - உள்ளபடி அநுசந்தித்துச் சொன்ன பத்துப்பாட்டு ஒரு திருவாய்மொழியாய், பத்துத் திருவாய்மொழி ஒரு பத்தாய், இப்படிப் பத்துப் பத்தான ஆயிரம். திரண்ட ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஜீவனமாக இவை இருத்தலின் 'குழாங்கொள் ஆயிரம்' என்கிறார். ஆயின், திருவாய்மொழி ஜீவனம் ஆகுமோ? எனின், [2]"தொண்டர்க்கு அமுது உண்ணச் சொன்மாலைகள் சொன்னேன், அண்டத்து அமரர் பெருமான் அடியேனே" என்பது இவருடைய திருவாக்கு. இவை பத்தும் உடன் பாடி-இவை பத்தையும் பொருள் உணர்ச்சி நிறைந்த கருத்தோடு பாடி. குழாங்களாய் - என்னைப் போன்று "பருகிக் களித்தேனே" என்று கூறி, குழாம் தேட இராதே, முற்படவே திரளாக இழியப் பாருங்கள். அடியீர் உடன் கூடி நின்று ஆடுமின்-அவன் பக்கலிலே [3]நிக்ஷிப்தபரராய் இருக்கிற நீங்கள் [4]நால்வர் இருவர் இங்கிருக்கும் [5]நான்கு

---

1. திருவிருத். 100.

2. திருவாய்மொழி. 9.4 : 9.

3. நிக்ஷிப்தபரர் - பாரத்தை இறைவனிடத்தில் ஒப்படைத்தவர்கள்.

4. அநுகூலர் கிடையாமையாலே 'நால்வர் இருவர்' என்கிறார்; நம்பிள்ளை நஞ்சீயரைப் பார்த்து "இதர உபாயங்களுக்கு அநுஷ்டாதாக்கள் பலராக இருக்க, இதற்கு அநுஷ்டாதாக்கள் மிகச் சிலராக இருத்தற்குக் காரணம் யாது? என்று கேட்க, உலகத்தில் இருந்ததே குடியாக அனைவரும் சம்சாரிகளாக இருக்க, அதில் நாலிரண்டுபேர் உத்தம ஆஶ்ரமிகளானால் சம்சாரிகளுக்கு ஓர் உத்கர்ஷமும் சந்யாசிகளுக்கு ஓர் அபகர்ஷமும் உண்டோ? சுவர்க்க அநுபவத்துக்கு ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்களைச் சாதனமாகச் சாஸ்திரங்கள் விதிக்கின்றன; ஓர் ஊரில் ஒருவனன்றோ யாகம் செய்தான் என்று கேள்விப்படுகிறோம்; ஆதலால், இதற்கோ உமக்கு ஆள்பற்றப் போகிறது" என்று நம்பிள்ளைக்கு நஞ்சீயர் அருளிச்செய்த விடை இங்கு நினைவு கூர்க.

5. காலத்தின் சிறுமை நோக்கி 'நான்குநாளும்' என்கிறார்; "சேர்ந்து நின்ற, இல்லினுள் இரண்டு நாளைச் சுற்றமே இரங்கல் வேண்டா" என்றார் திருத்தக்க தேவரும். (சிந். நாமகளிலம். 241.)

நாளும் தள்ளத்தக்க அர்த்த காமங்களைப் பற்றிச் 'சீறு, பாறு' என்னுதே, நம் பெரிய குழாத்திலே போய்ப் புகு மளவும் ஒரு மிடருய் அநுபவிக்கப் பாருங்கள். (11)

முதற் பாட்டில், திருவுள்ளத்தைக்கொண்டாடினுர்; இரண்டாம் பாட்டில், அதனையும் இசைவித்த இறைவனைக் கொண்டாடினுர்; மூன்றும் பாட்டில், தம் நெஞ்சிற் பட்டதோர் உபகாரத்தைக் கூறினுர்; நான்காம் பாட்டில், அவ் உபகாரத்திற்குக் கைம்மாருக ஆத்ம சமர்ப்பணம் பண்ணி அது தனக்கு வருந்தினுர்; ஐந்தாம் பாட்டில், எனக்குப் பிரதம சுக்ருதமும் நீயே யான பின்பு உன் திருவடிகளைக் கிட்டினேனே யன்றே? என்றுர்; ஆறும் பாட்டில், இன்றே கிட்டிற்று? தேவரீர் எனக்கு விசேடமான திருவருள் பண்ணின அன்றே பெற்றேனே அல்லேனே? என்றுர்; ஏழாம் பாட்டில், இனிமையை நினைத்து உன்னைப் பிரியில் தரியேன் என்றுர்; எட்டாம் பாட்டில், இப்படி எல்லையற்ற இனிய ஞனவனை எளியது ஒரு விரகாலே அடையப் பெற்றேன் என்றுர்; இனி, பல காலம் கூடிச் செய்து பெறக் கூடிய தவத்தின் பலத்தை அவனைப் பின் சென்று மிக எளிதில் அடைந்தேன் என்கிறுர் எனலுமாம். ஒன்பதாம் பாட்டில், என்னுடைய எல்லாத் துக்கங்களும் போகும்படி அநுபவித்துக் களித்தேன் என்றுர்; பத்தாம் பாட்டில், இப்படி இவனை அநுபவித்துக் களிப்பார் திரளிலே போய்ப் புகப் பெறுவது எப்போதோ? என்றுர்; முடிவில், இத் திருவாய்மொழியைக் கருத்தோடு கூடிக் கற்று, நான்கு நாளும் நால்வர் இருவர் உள்ளார் கூடியிருந்து அநுபவிக்கப் பாருங்கோள் என்றுர்.

திருவாய்மொழி நூற்றந்தாதி

ஊனம் அறவே வந்து உள்கலந்த மால் இனிமை
யானது அநுபவித்தற்கு ஆம்துணையா—வானில்
அடியார் குழாம் கூட ஆசையுற்ற மாறன்
அடியாருடன் நெஞ்சே! ஆடு. (13)

ஆழ்வார் எம்பெருமானுர் சீயர் திருவடிகளே அரண்.

நான்காந் திருவாய்மொழி—“ ஆடியாடி ”

முன்னுரை

—: o :—

ஈடு:—மேல் திருவாய்மொழியிலே, “பருகிக் களித்தேனே” என்று ஆனந்தித்தவராய், ‘அதுதன்னைப் பாகவதர்களோடே உசாவித் தரிக்கவேண்டும்’ என்று பாரித்து, அதற்கு இவ் உலகத்தில் ஆள் இல்லாமையாலே, நித்தியவிபூதியிலே நித்திய சூரிகள் திரளிலே போய்ப் புக்கு ஒருவருக்கு ஒருவர் அறிவித்துக்கொண்டு அநுபவிக்கக் கோலி, நினைத்தபோதே அத் திரளிலே போய்ப் புக்கு அநுபவிக்கப் பெறாமையாலே மிகவும் துன்புற்றவராய், தம்முடைய நிலையைத் தம்மவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் எம்பெருமானுக்கு அறிவிக்கிறபடியை [1] அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

[2] “அம் சிறைய மட நாராய்” என்ற திருவாய்மொழியில் தூதுவிட [3] க்ஷமர் ஆனார்; [4]“வாயுந் திரை யுகளும்” என்ற திருவாய்மொழியில், கண்ணுற் கண்ட பொருள்களடையப் பகவானைப் பெறாத காரணத்தால் நோவுபடுகின்றனவாகக் கொண்டு அவற்றுக்குமாக நோவுபட க்ஷமர் ஆனார்; அவ்வளவு அன்றிக்கே, ஆற்றாமை கரை புரண்டு, தாமான தன்மை அழிந்து ஒரு பிராட்டி தசையை அடைந்தவராய், அது தன்னிலும் தம் தசையைத் தாம் வாய்விட்டுப் பேசமாட்டாமல் பக்கலில்உள்ளவர்கள் அறிவிக்க வேண்டும்படியாய், இருத்தல் நடத்தல் படுத்தல் முதலியவைகளில் ஒரு நியதியின்றி மகிழ்ச்சி அற்றவராய் நோவுபட, இப் பெண்பிள்ளை நிலையினை நினைந்த திருத்தாயார் ‘இராமன் கிருஷ்ணன் முதலிய அவதாரங்களைச் செய்து, ஆசைப்பட்ட அடியார்களுடைய துன்பங்களையெல்லாம் போக்கக்கடவ நீர், உம்மை ஆசைப்பட்ட இவள் நோவுபடப் பார்த்திருப்பதே! என்று, எல்லாவகையாலும் அவனைக் கொண்டே பரிகரித்துக்கொள்ளும் குடியாகையாலே, அவன்

---

1. அந்யாபதேசம் - வேறு ஒன்றனைக் கூறுதல்; அப்ரகிருதத்தைக் கூறிப் பிரகிருதத்தைக் குறித்தல்.

2. திருவாய். 1. 4: 1.

3. க்ஷமரானார் - பொறுத்துக்கொள்பவரானார்; க்ஷமம் = பொறுத்துக் கொள்ளும் தன்மை; ஆற்றலுடையவர் ஆனார் என்றபடி.

4. திருவாய். 2. 1: 1.

திருவடிகளிலே போகட்டு[1] இவள் இடையாட்டத்தில் நீர் செய்ய நினைத்திருப்பது யாது? என்று கேட்கிற பாசுரத்தாலே தம் முடைய நிலையினை அருளிச்செய்கிறார்.

ஆயின், மேற்கூறிய இரண்டு திருவாய்மொழிகளிற் போந்த பிரிவுத் துன்பங்களைக் காட்டிலும் இத் திருவாய்மொழியில் பிரிவுத் துன்பம் மிகுந்து இருப்பதற்குக் காரணம் யாது? எனின், [2] **காசினை இழந்தவனுக்கும் பொன்னினை இழந்தவனுக்கும் இரத்தினத்தை இழந்தவனுக்கும் இழந்ததனால் உளதாய துன்பம் ஒத்ததாக இராது வேறுபடுவது போன்று,** அங்கும் இங்கும் பிரிவுத் துன்பம் ஒன்றாயினும், துன்பத்தில் வேற்றுமை உண்டு என்க. எவ்வாறு? எனின், அவதாரத்தில் [3] "பெரு நிலம் கடந்த நல் அடிப் போதை" அநுபவிக்க ஆசைப்பட்டுக் கிடையாமையாலே வந்த ஆற்றாமை "அஞ் சிறைய மட நாரையில்"; [4] "நம்பியைத் தென்குறுங்குடி நின்ற" என்ற அர்ச்சாவதாரத்தில் அநுபவிக்க ஆசைப்பட்டுக் கிடையாமையால் வந்த ஆற்றாமை "வாயுந் திரை யுகளில்"; இங்கு, அவ் இறைவனுக்கும் உயிரான நித்தியசூரிகளை அநுபவிக்க ஆசைப்பட்டுக் கிடையாமையால் வந்த ஆற்றாமை ஆகையால் அவற்றைக் காட்டிலும் இதற்கு ஆற்றாமை விஞ்சி இருக்கும்.

நன்று; நித்தியசூரிகள் திரளிலே சென்று சேர்ந்து அநுபவிக்கப் பெறாமையால் நோவுபடுகின்றாராயின், பின்னை, அவர்கள் பெயர்களைச் சொல்லிக் கூப்பிடாமல், [5] 'நரசிங்கா' என்பது போன்ற இறைவன் திருப் பெயர்களைச் சொல்லிக் கூப்பிடுவது எற்றிற்கு? எனின், **எங்கேனும் ஒரு காட்டில் இரத்தினங்கள் பறிஉண்டால், நாட்டிலே அரசன் வாசலிலே சென்று அவ் அரசன் பெயரினைச் சொல்லிக் கூப்பிடுவது போன்று,** நித்தியசூரிகள் திரளிலே தாம் சென்று சேர்வதற்கும் காரணமாக இருப்பவன் இறைவனே ஆகையால், அவ் இறைவனுடைய திருப் பெயரினைச் சொல்லிக் கூப்பிடுகிறார்.

1. "நுமது இட்டம் என் கொல் இவ் ஏழைக்கே" என வருதலை நோக்கியது.

2. 'காசு' என்றது, அவதாரங்களை. 'பொன்' என்றது, அர்ச்சாவதாரத்தை. 'இரத்தினம்' என்றது, அடியார்களை. "காசினை மணியை", "செம்பொனே திகழும் திருமூர்த்தியை", "செழு மா மணிகள் சேரும்" என வருவன கொண்டு தெளிதல் தகும்.

3. திருவாய். 1. 3 : 10.

4. திருவாய். 1. 10. 9.

5. திருவாய். 2. 4 : 1.

இனி, [1] பகவானுடைய பிரிவிலே உட்புக நின்றால் அன்றோ பாகவத விஸ்லேஷந்தான் தெரிவது: [2] "இலக்குமணா! மகாத்மாவான பரதனோடும், வீரனான சத்துருக்கனனோடும், உன்னோடும் எப்பொழுது சேர்வேன்" என்கிறார் பெருமாள். இங்கு, ஸ்ரீ பரதாழ்வானோடும் சத்துருக்கனாழ்வானோடும் கூடப் பெறாத [3] கிழிக்குறையாலே, கூட நிற்கிற இளைய பெருமாளோடும் கூடிற்றாய்த் தோன்றவில்லை பெருமாளுக்கு; [4] "ஸ்ரீ ராமபிரான், குகனைச் சேர்ந்தார்; அதனால், இலக்குமணனோடும் பிராட்டியோடும் சேர்ந்தவரானார்" என்கிறார் வால்மீகி. இங்கு, கூடப்போன இளையபெருமாளோடும் பிராட்டியோடும் கூடிற்றாய்த் தோன்றியது, [5] ஸ்ரீ குகப் பெருமாளோடு கூடின பின்பு அன்றோ? இப்படியே அன்றோ இறைவன் தனக்கும் [6] அந்வய வியதிரேகங்கள் இருக்கும்படி. ஆக, அடியார்களுடைய சேர்க்கையை ஆசைப்பட்டுப் பெறாமையாலே வந்த இழவு, பெற்ற பகவானுடைய சேர்க்கையையும் இழந்து அடியே பிடித்துப் பிரார்த்திக்க வேண்டும்படியாய் வந்து விழுந்தது எனக் கோடலுமாம்.

---

1. 'பகவானுடைய பிரிவிலே உட்புக நின்றால்அன்றோ பாகவத விஸ்லேஷந்தான் தெரிவது' என்றது, பாகவதர்களுடைய பிரிவின் வியசன மிகுதி தெரிவது; பெற்ற பகவானுடைய சேர்க்கையும் போய், அதுவும் பிரார்த்திக்கும்படி உட்புக நின்றாலிறே; இல்லையாகில், பாகவத விஸ்லேஷமாகாது என்றபடி. இவர் பாகவத விஸ்லேஷத்திலே உட்புக நின்றவராகையாலே, அது, இவர்க்குப் பகவத் விஸ்லேஷபர்யந்தமாய், அவன் தன்னை அடியே பிடித்துக் கூப்பிடுகிறார் என்றவாறு. விஸ்லேஷம்-பிரிவு. ஆயின், பெற்றது பெறாததாகத் தோன்றுமோ? எனின், அதனை இரண்டு உதாரண முகத்தால் விளக்குகிறார் மேல்.

2. ஸ்ரீராமா. ஆரண். 16 : 10.

3. கிழிக்குறை - நிறைந்திராமல் குறைந்திருக்கிற பணப்பை. கிழி - பணப்பை. "வேண்டிய, வேதங்கள் ஓதி விரைந்து கிழிஅறுத்தான்" என்ற இடத்துக் 'கிழி' என்பது இப்பொருட்டு.

4. ஸ்ரீராமா. பால. 1 : 29.

5. வேடர் தலைவனை குகனை, 'குகப்பெருமாள்' என்பது வைணவப் பெருமக்கள் வழக்கு.

6. 'அந்வய வியதிரேகங்கள்' என்பதற்குப் பொருள் :—எது இருந்தால் எது இருக்குமோ? எது இன்றேல் எது இராதோ? என்பது. "யத் சத்வே யத் சத்வம்; யதபாவே யதபாவ:" என்பது வடமொழி வாக்கியம். இங்கு, ஸ்ரீராமபிரானுக்கு ஸ்ரீ குகப்பெருமாளுடைய சேர்க்கை உண்டானதனால் இளையபெருமாளோடும் பிராட்டியோடும் சேர்ந்த சேர்க்கையையும் அவர் உள்ளவரானார். ஸ்ரீ பரதாழ்வான் சத்துருக்கனாழ்வான் இவர்களுடைய சேர்க்கை இல்லாததனால், இளையபெருமாளுடைய சேர்க்கை இருந்தும் அவர் இல்லாதவரானார் என்க.

இனி, வாயுந் திரை யுகளில் துன்பம் தீர வந்து கலந்த கலவி முற்றுவதற்கு முன்னே வந்த பிரிவாகையாலும் ஆற்ற ஒண்ணாது ; ஆதலால், வருந்துகிறார் எனலு மாம்.

144

ஆடி ஆடி அகம்கரைந்து, இசை
பாடிப் பாடிக் கண்ணீர் மல்கி, எங்கும்
நாடி நாடி, நரசிங்கா ! என்று
வாடி வாடும் இவ் வாள் நுதலே.

பொ - ரை :—ஒளி பொருந்திய நெற்றியினையுடைய இவள், நின்ற இடத்தில் நில்லாமல் பல இடங்களிலும் உலாவி, மனமும் கரைந்து, இசையோடு பல காலம் பாடிக்கொண்டு, கண்களில் நீர் நிறையப் பெற்று எல்லா இடங்களிலும் தேடித் தேடி, நரசிங்கனே ! என்று மிகவும் வாடாநின்றாள்.

வி - கு :—வாணுதல் ஆடிக் கரைந்து பாடி மல்கி நாடி நரசிங்கா என்று வாடி வாடும் என்க. வாணுதல் : அன்மொழித்தொகை. 'நரசிங்கா என்று வாடும்' என்றது, பிரஹ்லாதன் விரும்பிய காலத்தில் நரசிங்கமாக வந்து தோன்றி, அவனுக்கு உதவியைச் செய்த பெருமான் எனக்கு உதவுகின்றிலனே ! என்று இப் பெண் வருந்துகிறாள் என்ற கருத்தை உட்கொண்டு நின்றது.

இத் திருவாய்மொழி முச்சீரடி நான்காய் வருதலின் வஞ்சி விருத்தம் என்பர்.

ஈடு :—முதல் பாட்டு. [1] ஆபத்தே செப்பேடாக அடியனான பிரஹ்லாதன் சூளுறவு செய்த அக் கணத்திலே வந்து உதவும் தன்மையனானவனைச் சொல்லிக் கூப்பிடாநின்றாள் என்கிறாள்.

ஆடி - இருத்தல் நடத்தல் கிடத்தல் முதலியவைகளில் ஒரு நியதி இன்றிப் பிரிவுத் துன்பத்தால் படுகிற பாடு திருத்தாயார்க்கு மனத்தைக் கவர்வதாக இருத்தலின் 'ஆடி' என்கி

---

1. "நரசிங்கா என்று, வாடி வாடும்" என்றதனை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார். செப்பேடு - தாமிரசாசனம்.

> என்னுயிர் நின்னாற் கோறல் எளியது ஒன்று அன்று, யான் முன்
> சொன்னவன் தொட்ட தொட்ட இடந்தொறும் தோன்றா னாயின்
> என்னுயிர் யானே மாய்ப்பல், பின்னும் வாழ்வு உகப்ப லென்னின்
> அன்னவற்கு அடியே னல்லேன் என்றனன், அறிவின் மிக்கான்.

என்ற செய்யுளால் அவன் சூளுறவு அறிதலாகும். (கம்பரா. இரணியன் வதை. 126)

ருள். ஸ்ரீ கௌசல்யையார் பெருமாளைப் பிரிந்து துடிக்கிற துடிப்பை [1] "ஸ்ரீ ராமன், தாயை நர்த்தனஞ் செய்கின்றவளைப் போன்று பார்த்தான்" என்கிறார் ஸ்ரீவால்மீகி பகவான். ஆதலால், வடிவழகியார் செய்யும் வியாபாரங்கள் எல்லாம் கண்ணுக்கு இனியவாகவே இருக்கும். அன்றியும், பிராட்டி, பிரிந்து அழகு அழிந்திருக்கிற சமயத்திலேதான் [2] "மங்கள சொரூபியாக இருந்தாள்" என்று ஸ்ரீவால்மீகி கூறுகிறார். ஆதலால், அழகியார், என்றும் வடிவழகியாரே யாவர்.

ஆடி - முதலில் 'ஆடி' என்றதற்கு அவ்வருகே ஒரு நிலை இரண்டாம் ஆடி. முதலில் 'ஆடி' என்றதனோடு அமையாது, இருகால் மட்டு 'ஆடி' என்கிறாள்; துன்பத்தின் மிகுதியைத் [3] தாளங்கொண்டு அறியுமித்தனை. முதலிலே சஞ்சாரம் அரிதாய் இருக்கவும் ஆற்றாமையால் தூண்டப்பட்டுச் சஞ்சரிக்கிறாள்; என்? முடிந்தாலோ? எனின், [4]குணாதிக விஷயம் ஆகையாலே முடிந்து பிழைக்கவும் ஒட்டாது; [5] "ஸ்ரீ பரதாழ்வான் இன்னம் ஒருகால் அவ் இராமபிரானுடைய முகத்தில் விழிக்கலாமாகில், அருமந்த பிராணனைப் பாழே போக்குகிறது என்?" என்று இராச்சியத்தையும் தொட்டுக் கொண்டு கிடந்தான் அன்றோ? அகம் கரைந்து-மனம் என்னும் பொருள் நீராய் உருகிப்போயிற்று என்கிறாள். ஆற்றாமை தூண்ட சஞ்சரித்தவள், சஞ்சாரம் அடி அற்று இருக்கின்றாள் என்பாள் '**அகம் கரைந்து**' என்கிறாள். ஆயின், மனம் கரைந்ததை இவள் அறிந்தவாறு யாங்ஙனம்? எனின், இவள் வியாபாரம் கண்ணுக்கு இலக்கானாற் போலே, அகவாயும் இவள் நெஞ்சுக்கு இலக்காய் இருக்கிறபடி. இசை பாடிப் பாடி - [6] "மனம் முன்னர் நினைக்க, பின்னர் வார்த்தை உண்டாகும்" என்கிற நியதி இல்லை; ஆற்றாமையாலே கூப்பிடுகிற கூப்பீடுதான் பாட்டாய்த் தலைக்கட்டுகிறதித்தனை. ஆயின், கூப்பீட்டைப் பாட்டு என்னலாமோ? எனின், ஆற்றாமையாலே துடித்த

---

1. ஸ்ரீராமா. அயோத். 40 : 25.
2. ஸ்ரீராமா. சுந். 29 : 1.
3. 'தாளங்கொண்டு அறியுமித்தனை' என்றது, வெண்கலத்தின் ஒலி போன்று ஒரு காலுக்கு ஒருகால் ஓய்ந்து வருகிறது என்றபடி.
4. "விலக்ஷண விஷயத்தைப் பிரிந்தால் முடிகையும் அரிது, ஜீவிக்கையும் அரிது; வைலக்ஷண்யம் ஜீவிக்கவொட்டாது, நசை முடியவொட்டாது" என்பது இருபத்து நாலாயிரம்.
5. ஸ்ரீராமா. பால. 1 : 38.
6.

துடிப்பு ஆடல் ஆறற்போலே,[1] "பண்ணை வென்ற இன்சொல் மங்கை" ஆதலின், ஆற்ருமையாலே கூப்பிட்ட கூப்பீடு பாட்டாய் விழாநின்றது. [2] "அழகானவளும் மதுரமான வார்த்தையுடையவளும்" என்ருர் ஸ்ரீ வால்மீகி. 'பாடிப் பாடி' என்ற அடுக்கு, முதல் கூப்பீடு போல் அன்றி, இரண்டாம் கூப்பீடு தளர்ந்திருத்தலையும் தெரிவிக்கும்.

கண்ணீர் மல்கி - உருகிய மனம் இசையாய்ப் பெருகி, மிக்கது கண்ண நீராய்ப் பெருகுகிறபடி. [3] நெஞ்சு ஒழியப் பாய்கிற கண்ணீரே அன்றோ? மல்குதல் - மிகுதல். [4] "தாமரை இதழ்களினின்றும் விசேடமாகப் பாய்கிற தண்ணீர்போன்று, ஆனந்தக் கண்ணீர் பெருகும்படியான கண்களில் துக்கக் கண்ணீர் எதற்காகப் பெருகுகிறது?" என்ருர் ஸ்ரீ வால்மீகி. இங்கு 'ஆனந்தக் கண்ணீருக்குத் தகுதியான கண்களிலே சோகக் கண்ணீர் பெருகுகிறது [5]'யார் குடி வேர் அற?' என்று பட்டர் அருளிச்செய்வர். [6] 'யாரைச் சேதநராகக் கொண்டு?' என்று **திருக் குருகைப்பிரான் பிள்ளான்** பணிப்பர். [7] "பாவியேன், யான் வந்த இவ் வரவு, உடைய பெருமாள் வரவாய்க் காணப் பெற்றது இல்லையே!' என்று இரங்குகிறன் திருவடி.

எங்கும் நாடி நாடி-தன் ஆபத்தே செப்பேடாக, வருதற்கு உரித்துஅல்லாத திக்குக்களையும் பார்க்கிருள். நினைவின்றியே இருக்கச் செய்தேயும், வாராத் திருநாமம் செவிப்பட்டவாறே

---

1. திருச்சந். 105.

2. ஸ்ரீ ராமா. சுந். 64 : 15.

3. அகம் கரைந்தால் கண்ணீர் மல்கக் கூடுமோ? என்னும் வினாவிற்கு விடையாக 'நெஞ்சு ஒழிய' என்று தொடங்கி அருளிச் செய்கிருர். "முடியானே" என்ற திருவாய்மொழியின் பொருளை ஈண்டு நினைத்தல் தகும்.

4. ஸ்ரீராமா. சுந். 33 : 4.

5. 'யார் குடி வேர்அற' என்றது, இராவணன் குடி வேர் பறியவோ? இராக்கதர்கள் என்று சொல்லப்படுகிற எல்லாருடைய குடிகளும் வேர் பறியவோ? என்றபடி.

6. 'யாரைச் சேதனரா்கக் கொண்டு' என்றது, யாருடைய இன்பத்திற்காக என்றபடி. சேதனன் - இன்பத்தை நுகர்கின்றவன். தாமரை இதழிலே முத்தப்பட்டாற் போன்று இருக்கிற இந்த அழகினை அநுபவித்தற்குத் தக்கவரான பெருமாள் அருகில் இல்லாதிருக்க, இக் கண்ணீருக்குப் பயன் யாது? என்பது கருத்து.

7. பாவியேன் - ஐயகோ! உடைய பெருமாள் - அடையத்தக்கவரான ஸ்ரீராமபிரான்.

[1] "விலங்கப் பார்ப்பது, மேலே பார்ப்பது, கீழே பார்ப்பது ஆனாள்" என்றார் ஸ்ரீ வால்மீகி. ஆயின், வருதற்கு உரித்து அல்லாத திக்கிலும் தேடுவான் என்? என்னில், சம்பாவனை இல்லாத திக்கிலும் வந்து தோற்றுமவன் ஆகையாலே தேடுகிறாள். ஆயின், பரத்துவம் முதலிய நிலைகளை விட்டு, இவர் அவதாரத்தையே பேசுவான் என்? எனில், [2]"பத்துடை அடியவர்க்கு"ப் பின்பு அவதாரத்துக்கு அவ்வருகு இவர் போகமாட்டார். இனி, எங்கும் நாடி நாடி என்பதற்கு, தன் கொய்சகம் உட்படப் பாரா நின்றாள் என்று பட்டர் அருளிச் செய்வர். அதற்குக் கருத்து என்? என்னில், [3] "கண்ணன் என் ஒக்கலையானே" என்கிற படியே, அவன் இருந்த இடமாகையாலே. நரசிங்கா என்று வாடி வாடும் - பிரஹ்லாதனைப் போலே, ஒரு [4]தம்பம் இல்லாத படி இருக்கையாலே கொம்பை இழந்த தளிர் போலே வாடும். 'முதல் வாட்டம்-தளிர்' என்று கூறத் தக்கவாறு இருக்கிறது, அடுத்தகணத்தில் வாட்டம் என்பாள் 'வாடி வாடும்' என்கிறாள்.

[5] "என்னிடமிருந்து எல்லாப் பொருள்களும் உண்டாகின்றன, எல்லாம் என்னிடத்தில் லயம் அடைகின்றன, எல்

---

1. ஸ்ரீராமா சுந். 31: 119. இச் சுலோகத்திற்கு வியாக்கியாதா அருளிச்செய்த பொருள் மேலும் வருமாறு: "கீழே பார்த்ததற்குக் கருத்து என்? என்னில், பூமியைப் பிளந்துகொண்டு புறப்பட்டு ஒருவன் திருநாமம் சொல்லச் சம்பாவனையுண்டாகில், அல்லாத திக்கிலும் உள்ளது என்று பார்த்தாள்; அன்றிக்கே, மாஸோபவாசிகள், 'சோறு' என்றவாறே அலமாக்குமா போலே பார்த்தாள் என்னுதல்; அங்ஙனன்றிக்கே, சிம்சுபா விருக்ஷத்தை எங்கும் ஒக்கப் பார்த்தாள் என்னுதல். தம சிந்த்ய புத்திம் ததர்ஶ — அவன் வடிவு காண்பதற்கு முன்னே அகவாயையாயிற்றுப் பரிசோதித்தது; இந்நிலத்திலே புகுந்து இடங்கொண்டு நாம் இருந்த இடந் துருவி நிலைகுத்த வல்ல நெஞ்சையுடையவ னன்றோ? என்று. பிங்காதிபதேரமாத்யம் - இவன் ஸ்வதந்த்ரனல்லன், இராஜ கார்யம் இவன் கையிலே உண்டு என்று அறிந்தாள். வாதாத்மஜம் - பெருமாளுக்குப் பிராணஹேதுவான பிராட்டிக்குப் பிராணனைக் கொடுக்கையாலே 'இவன் சர்வர்க்கும் பிராணஹேதுவான வாயுபுத்திரன் என்று தோன்ற இருந்தான். ஸூர்யமிவோதயஸ்த்தம் - இலங்கையிலும் கிழக்கு வெளுக்க அடியிட்டது. பெருமாளாகிற ஆதித்திய உதயத்துக்கு அருணோதயம் என்னலாம்படி இருந்தான்; ஆகையிறே, இலங்கை நாலு மதிளுக்கு நடுவு 'ஹரி ஹரி' என்றபடியே இருக்கிறது."

2. திருவாய். 1. 3: 1.

3. திருவாய். 1. 9: 4.

4. தம்பம்: சிலேடை; தூண், ஆதாரம் என்பன பொருள். 'தம்பம் இல்லாமையாலே' என்றது, தம்பத்தில் தோன்றியது போன்று, இங்குத் தோன்றாமையாலே என்றபடி.

5. ஸ்ரீவிஷ்ணுபுரா. 1. 19: 85.

லாப் பொருள்களும் நானாகவே இருக்கிறேன்" என்னும் தெளிவுடையவனுக்குத் தோன்றினவன், கலங்கின [1] அபலைக்குத் தோன்றானே! என்று வாடுகிறாள் என்கிறாள் என்றபடி. 'நரசிங்கா என்று வாடும்' என்ற தொடரில், தமப்பன் பகையானாலோ உதவுவது, நீர் பகையானால் உதவலாகாதோ? ஞான நிஷ்டர்க்கோ உதவலாவது, பக்தி நிஷ்டர்க்கு உதவலாகாதோ? ஆண்களுக்கோ உதவலாவது, பெண்களுக்கு உதவலாகாதோ? [2] சேராத வடிவு சேர்த்து உதவிலோ உதவலாவது, இருந்தபடியே உதவலாவார்க்கு உதவலாகாதோ? [3]ஒரு அதிகாரி நியதி, ஒருகால நியதி, ஒரு அங்க நியதி என்கிற நிர்ப்பந்தம் வேண்டுமோ இவளுக்கு? இவளுடைய ரக்ஷணத்திற்கு [4]ஏதேனும் முகம்பண்ண வேண்டுமோ? என்ற தொனிப் பொருளும் தோன்றும். [5] தர்மி லோபம் பிறந்தது இல்லை. என்பாள் '**வாடும்**' என நிகழ்காலத்தாற் கூறுகிறாள். 'வரும்' என்னும் நசையாலே முடியப் பெறுகின்றிலள் என்பதாம்.

இவ் வாணுதலே-ஒளியுடன் கூடின நுதலையுடைய இவள். இவ் அழகுக்கு இலக்கானார் படுமதனை இவள் படுவதே! என்பாள் '**வாடும் இவ் வாணுதல்**' என்கிறாள். இவள் முடிந்தால் [6] "பிரமன் முன் காலத்தில் இருந்தபடியே படைத்தான்" என்பது போன்று, உம்முடைய மேன்மையாலே 'இன்னம் இப்படிப் பட்டது ஒரு வடிவத்தை உண்டாக்கலாம்' என்று இருக்கிறீரோ? என்பது திருத் தாயாருடைய உட்கோள். நன்று; இந் நிலையில் இவளை 'வாணுதல்' என்னக் கூடுமோ? என்னில், [7]"ஊனில் வாழுயிரில்" கலவியால் உண்டான புகர் இன்னம் அழிந்தது இல்லை ஆதலின் கூறுகிறாள். அம்பு பட்டு முடிந்தாரையும், நீரிலே புக்கு முடிந்தாரையும் முகத்திலே அறியலா மாதலின், குணாதிக விஷய விரஹத்தாலே வந்த இழவு என்னுமிடம் முகத்தின் எழிலிலே தெரியாநின்றது என்றபடி. (1)

---

1. அபலை - பலமற்றவள்.
2. சேராத வடிவு - மனித வடிவும், விலங்கு வடிவும்.
3. அதிகாரி - பிரஹ்லாதன். காலம் - அந்திக் காலம். அங்கம் - நர வடிவும், சிங்க வடிவும் கலந்த வடிவம்.
4. அவனைக் காத்தற்குச் சிங்கத்தின் முகத்தை அடைந்தது போன்று, இவளைக் காத்தற்கு வேறு முகம் கொள்ளவேண்டாம் என்றபடி.
5. தர்மத்தையுடையது தர்மி; இங்கு உயிர்.
6. தைத்திரீய நாராயண உபநிடதம்.
7. திருவாய். 2. 3; 1.

145.

வாணுதல் இம் மடவரல் உம்மைக்
காணும் ஆசையுள் நைகின்றாள்; விறல்
வாணன் ஆயிரம் தோள் துணித்தீர் ! உம்மைக்
காண, நீர் இரக்கம் இலீரே.

பொ - ரை :—வெற்றி பொருந்திய வாணாசுரனுடைய ஆயிரம் தோள்களையும் துணித்தவரே! ஒளிபொருந்திய நெற்றியினை உடைய ளாய் மேன்மேலும் வளர்கின்ற மடப்பத்தினை உடையளாய் உள்ள இப் பெண், உம்மைக் காணவேண்டும் என்னும் ஆசையுள் அகப்பட்டு வருந்துகிறாள் ; உம்மைக் காணுமாறு நீர் இரங்குகின்றீர்இலீர்.

வி - கு :—நைதல்-வருந்துதல். வாணன் ஆயிரம்தோள் துணித்தீர் என்ற விளி, வாணனுடைய ஆயிரம் தோள்களையும் துணித்து உஷை யோடு அநிருத்தனைச் சேர்த்து வைத்தீர் ; இப்பொழுது இப் பெண் ணின் திறத்து இரங்காது இருப்பது என்னோ! என்ற கருத்தை உட் கொண்டது.

ஈடு :—இரண்டாம் பாட்டு. நம்மைக் காணுதற்குத் தடை யாக உள்ள விரோதிகள் பல உங்களிடத்தில் இருந்துகொண்டு இருக்க, நடுவே வாடும் இத்தனையேயோ வேண்டுவது? என்ன, வாணனுடைய தோள்கள் ஆயிரத்திலும், இவள் விரோதி பிர பலமோ? என்கிறாள்.

வாணுதல் இம் மடவரல் நைகின்றாள் நீர் இரக்கம் இலீர் - இவ் அவயவ சோபை போகத்திற்குக் காரணமாதல் அன்றி நைகைக்கு உறுப்பாவதே! ஜனக மஹாராஜன் பிராட்டி யினுடைய பேரழகினை நினைந்து [1] "இச் சீதை" என்று சுட்டிக் கூறியது போன்று, பெற்ற தாயாகிய இவளும் பெண்ணின் பேரழகினை நினைந்து '**இம் மடவரல்**' என்கிறாள். பெற்ற எனக்கு [2] ஆகர்ஷகத்திற்குக் காரணமான இது, கைப்பிடித்த உமக்கு உபேக்ஷைக்குக் காரணம்ஆவதே! என்பாள் '**நீர் இரக்கம் இலீர்**' என்கிறாள். மடவரல் - மடப்பம் வந்திருக்கை ;

1. ஸ்ரீராமா. பால. 73 : 24.
2. ஆகர்ஷகம் - மனக்கவர்ச்சி.
இவ்விடத்தில்,

கஞ்சத்துக் களிக்கும் இன்தேன் கவர்ந்துணும் வண்டு போல
அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லாம் அருளினாள் அழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தம் தகை தடுமாறி நின்றார்
மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனம்என்பது ஒன்றே யன்றோ.

என்ற செய்யுள் ஒப்புநோக்கத்தகும். (கம்பரா. கோலங். 19)

அதாவது, மென்மையையுடையவள் ஆகை. பிரிந்து கலக்கப் பொறுத சௌகுமார்யத்தையுடையவள் என்றபடி. ஆக, பிராட்டி நிலையைக் கண்ட திருவடியைப் போலே இருக்கிறது காணும், இப் பெண்பிள்ளை நிலையைக்கண்ட திருத்தாயார்க்கு; [1] "இவளைப் பிரிந்து சமாதானம் பண்ணியிருந்த பெருமாள் சால அரிதாகச் செய்தார், இவளைப் பிரிந்து தேகத்தைத் தரித்திருந்தார் என்பது யாது ஒன்று, அதனைச் சால அரிதாகச் செய்தார்; [2] யானை ஏறவும் குதிரை ஏறவும் நாடு ஆளவும் கற்றுரித்தனை; பிரணய தாரையில் புதியது உண்டிலர்" என்பது திருவடி வார்த்தை. மால்யவானில் பெருமாள் இருந்தபோது கார் காலத்திலே பட்ட பாட்டைக் கண்டு, 'வசிஷ்ட சிஷ்யன், ஒரு பெண் நிமித்தமாக இப்படிப் படுவதே!' என்று பழித்துச் சிரித்திருந்தான் விரக்தன் ஆகையாலே; இப்போது 'இவளைப் பிரிந்து தேகத்தைத் தரித்துக்கொண்டிருப்பதே!' என்கிறான் விசேஷஜ்ஞன் ஆகையாலே. 'இது ஏதேனும் [3] இரவல் உடம்போ சுமந்து கொண்டு இருக்கைக்கு? இன்பத்திற்கு நிலைக்களம் அன்றோ? துக்கத்துக்கு நிலைக்களமோ இது? பிரிந்தால் கிரமத்திலே கூடுகிறோம் என்று தரித்திருக்க வல்லள் அல்லளே?' என்கிறாள் என்றபடி.

உம்மை - இவள்படியன்றோ உமக்கு உபதேசிக்க வேண்டுவது; உம்மை நீர் அறியாமை இல்லையே; 'நம்மைப் பிரிந்தார்கள் பிழையார்கள்' என்று இருக்க வேண்டாவோ? வாணுதல் இம் மடவரல் உம்மை - [4] "சக்கரவர்த்தித் திருமகனுக்குத் தகுந்த சீலம், வயது, ஒழுக்கம், ஒத்த குலம், இராஜ இலக்கணம் இவற்றையுடையளாய் இருக்கிற பிராட்டிக்கு, பெருமாள்

1. ஸ்ரீராமா. சுந். 15 : 53.

2. இத்தனை நாளும் 'பிரணயி' என்று பிரமித்திருந்தோம்; பிரணயிகள் படி அன்றிக்கே, பிரிந்து தரித்திருக்கையாலே பிரணயி அல்லர்; கேவலம் பிரபு என்றபடி. புதியதுஉண்டிலர் - ஏகதேசமும் அநுபவித்திலர். புதியது உண்கை - ஏகதேச அநுபவம்.

இப்போது இவளைக் கண்டு இப்படிச் சொல்லுகையாலே, இவளைக் காணுமையாலே அவன் பழித்தான் என்பது, பொருளாற்றலால் போதரும்.

3. இரவல்உடம்போ – பிராட்டியின் உடம்பு போன்று பரதந்திரமான உடம்போ?

4. ஸ்ரீராமா. சுந். 16 : 5.

"நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறும் குரிசிற்கும் அன்ன தேயாம்"

என்று, மேற்கூறிய சுலோகத்தின் பொருளையே வேறொரு வகையாகக் கூறுவர் கம்பர்.

13

தகுந்தவர்; கறுத்த கண்களை உடையளான இப் பிராட்டியும் பெருமாளுக்குத் தகுந்தவர்" என்னும்படி காணும் இருக்கிறது. உம்மைக் காணும் ஆசையுள் நைகின்றாள் - விஷயத்திற்குத் தகுதியாக அன்றோ ஆசையும் இருப்பது? உம்மை அணைய ஆசைப்பட்டாளோ? காட்சியிலேயும் அருமைப்படுத்துவீரோ? என்பாள் 'காணும் ஆசை' என்கிறாள். [1]"ஆசை என்னும் கடல்" என்கிறபடியே, ஆசையாகிய கடலிலே அழுந்தாநின்றாள் என்பாள் 'ஆசையுள்' என்கிறாள். 'நைகின்றாள்' என்பதில், இவளைத் தரிப்பிக்க வேண்டா; அடியில் நிலையிலே நிறுத்த அமையும் என்ற தொனிப்பொருள் தோன்றும். இதனால், வாடுகைதான் தேட்டமாம்படி ஆயிற்று என்கிறாள் என்றபடி.

விறல் வாணன் ஆயிரம் தோள் துணித்தீர் - 'நையும் இதுவேயோ வேண்டுவது, தடைகள் கிடக்க?' என்றோ நீர் சொல்லுகிறீர்; வாணனுடைய தோள்களாகிய வனத்தைக் காட்டிலும் பரப்பு உண்டோ இவளுடைய விரோதி வர்க்கம்? உஷையோடு அநிருத்தனைச் சேர்த்தவர் அன்றோ நீர். பேரனுமாய் ஆணுமாகிலோ உதவலாவது; உம்மோடு கலந்த அபலைக்கு உதவல் ஆகாதோ? என்பது தொனிப் பொருள். உம்மைக் காண - உம்மை இவள் காண்கைக்கு ஈடாக. [2] **கருமுகைமாலை தேடுவார் சூடுவதற்காகவே தேடுவது? சும்மாட்டைக் கொள்ள அன்று;** அது போன்று, உம்மை ஆசைப்படுவார் படுவது, காட்சிக்காக ஆயிற்று; [3]"அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண" என்றார் திருமழிசைப்பிரான். [4]"காரார் திருமேனி காணுமளவும் போய்" என்றார் திருமங்கைமன்னன். [5]"கண்களால் காண வருங்கொல் என்று" என்று இவர்தாமே பின்னரும் அருளிச்செய்வர். நீர் இரக்கம் இலீர் - [6]"தன் சரீரத்தின் மேல் தங்கி இருந்த காட்டு ஈக்களையும் கொசுக்களையும் பாம்புகளையும் ஓட்டமாட்டார்" என்கிறபடியே, பிராட்டியைப் பிரிந்த

1. பெரிய திருமொழி. 4. 9 : 3.

2. 'கருமுகைமாலை தேடுவார்' என்று தொடங்கும் வாக்கியம், ஸ்வாபதேசத்தில் பாவம். 'சும்மாட்டைக் கொள்ள அன்று' என்றது, வேறு பிரயோஜனங்களைப் பெறுதற்குச் சாதனமாகக் கொள்ளுதற்கு அன்று என்றபடி.

3. நான்முகன் திருவந். 39.

4. சிறிய திருமடல். 69.

5. திருவாய். 3. 8 : 5.

6. ஸ்ரீராமா. சுந். 36 : 42.

துன்பத்தால்,மற்றைப்பிராணிகளால்உண்டாகும்துன்பத்தையும் அறியாதிருந்த நீர், இப்பொழுது நோவுபடுகை தவிர்ந்தால், சாமான்யமான இரக்கமும் போகவேண்டுமோ? ஆயின், நீரே இரங்கல் வேண்டும்; நீர் இரங்கும்படி செய்யத் தக்க சாதனம் இவளிடத்து இன்று என்று கூறுவது போன்று, 'நீர் இரக்கமிலீர்' என்று கூறுவது எற்றிற்கு? 'நைகின்றாள்' என்று திருத்தாயார் கூறியது, இறைவன் இரக்கத்திற்குச் சாதனம் ஆகாதோ? எனின், 'இவள் நைவு பேற்றுக்கு உபாயமன்று; அவன் இரக்கம் பேற்றுக்குச் சாதனம்' என்று காணும் திருத்தாயார் இருக்கிறது. ஆயின், இவள் நைவிற்குப் பலன் தான் யாதோ? எனின், 'இவள் நைவு அவன் இரக்கத்துக்குப் பரிகரம், அவன் இரக்கம் பேற்றுக்குச் சாதனம்; [1] "இப்பரம்பொருள், மனத்தாலும் நிதித்தியாசனத்தாலும் மிகுந்த கேள்வியாலும் அடையத்தக்கவன் அல்லன்; இறைவன் எவனை வரிக்கின்றானோ? அவனால் அடையத் தக்கவன்" என்கிற படியே, தானே காட்டக் காணும் இத்தனையே. (2)

146.

இரக்க மனத்தொடு எரி அணை
அரக்கும் மெழுகும் ஒக்கும் இவள்;
இரக்கம் எழீர்; இதற்கு என்செய்கேன்,
அரக்கன் இலங்கை செற்றீருக்கே?

பொ - ரை :—இவள் இரக்கம் பொருந்திய மனத்தால் நெருப்பினைச் சேர்ந்த அரக்கினையும் மெழுகினையும் ஒப்பாள்; நீர் இரக்கம் உடையீர் ஆகின்றிலீர்; இது நிமித்தமாக, இராவணனுடைய இலங்கையை அழித்த உமக்கு எதனைச் செய்வேன்?

வி - கு :—'அரக்கன் இலங்கை செற்றீருக்கு' என்ற தொடர், உம்மைப் பிரிந்து வருந்தின பிராட்டியின் பொருட்டு இலங்கையை அழித்து அவள் துன்பத்தினை நீக்கினீர்; பிரிந்து வருந்துகிற இவளுடைய துன்பத்தை நீக்குதற்கு இப்பொழுது இரக்கமும் கொள்கின்றிலீர் என்ற கருத்தை உட்கொண்டது. மனத்தொடு: ஒடு உருபு, கருவிப்பொருளில் வந்தது. அணை அரக்கு: வினைத்தொகை. எழீர்: எதிர்மறைமுற்று. செற்றீர்: பெயர்.

1. முண்டகோப நிடதம். 3. 2: 3.

இவ் உபநிடத வாக்கியத்தின் பொருளோடு "வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று; அவை:—கேள்வி, விமரிசம், பாவனை என்பன: அவற்றுள் கேள்வி இதனாற் கூறப்பட்டது" என்னும் பரிமேலழகருரை ஒரு புடை ஒப்பு நோக்கத்தகும். (குறள். 356.)

நிதித்தியாசனம் - பாவனை; தெளிதல்.

ஈடு :—மூன்றும் பாட்டு. இன்று இச் செயல் செய்யக்கடவதாக நினைத்த நீர், அன்று, [1]உண்ணாது உறங்காது ஒலிகடலை ஊடு அறுத்தலாகிய அச் செயலை எதற்காகச் செய்தீர்? என்கிறாள்.

இரக்க மனத்தொடு இவள் - இரங்கின நெஞ்சையுடைய இவள். இரக்கம் - நெஞ்சில் நெகிழ்ச்சி. அன்றி, [2] ஈடுபாடு என்றும், ஈரிப்பு என்றும் பொருள் கூறலுமாம். எரி அணை அரக்கும் மெழுகும் ஒக்கும் - எரியை அணைந்த அரக்கும் மெழுகும் போலே உருகாநின்றாள். அரக்கும் மெழுகும் என்னும் இவற்றை நெஞ்சுக்கு ஒன்றும், இவள் தனக்கு ஒன்றுமாகக் கொண்டு பொருள் கூறுவர் **பிள்ளை திருநறையூர் அரையர்.** நெஞ்சும் இவள் தனக்குக் [3] கையடைப்புஆகையாலே இவள் தனக்கே இரண்டையும் அடை ஆக்கி அருளிச்செய்வர் **பட்டர்.** [4] "சக்தியில் விஷ்ணுவைப் போன்றவர்; பார்க்கத் தகும் தன்மையில் சந்திரனைப் போன்றவர்" என்கிறபடியே, பல பொருள்களையும் இவளுடைய படிக்குத் திருஷ்டாந்தமாகக் கூறக்கூடிய வாறு இவள் தன் நிலை இருக்கிறது என்றபடி. [5] அரக்கும் மெழுகும், நெருப்பிற்குள் புகில் கரிந்து போம்; கடக்க இருக்கில் வலிக்கும்; அதனைச் சார்ந்து நின்றுழி உருகும்; அது போன்று, முடிந்து பிழைக்கவும் பெறாமல், தரித்திருக்கவும்

---

1. "உண்ணாது உறங்காது ஒலிகடலை ஊடு அறுத்துப்
பெண்ணாக்கை யாப்புண்டு தாமுற்ற பேதெல்லாம்"
(நாய்ச். திரு. 11 : 7.)

கடல் வழிவிட நிசிசரர் பொடிபட இருகண் சீறி
வட கயிலையில் எழுவிடை தழுவியதும் மறந்தாரோ
அடல்அரவு அமளியில் அறிதுயில் அமரும் அரங்கேசர்
இடர்கெட வருகிலர் முருகலர் துளவும் இரங்காரே.
(திருவரங்கக்கலம்பகம்.)

என்ற அருமைப்பாசுரம் இவ்வியாக்கியானத்தோடு படித்து இன்புறத்தகும்.

2. ஈடுபாடு - துக்கம். ஈரிப்பு - சிநேகம்.

3. கையடைப்பு - இவளிடத்தில் அந்தர்ப்பூதம்.

4. ஸ்ரீராமா. பால. 1 : 18.

5. "இடர்உற மறையோரும் எரியுறும் மெழுகானார்" (கம்பரா. கங். 60.)
"மெழுகெரி முகந்த தொக்கும் தாய் மெலிவகற்றினானே"
(சிந். செய். 2095.)

'எரி யணை அரக்கு' என்பதற்கு எழுதும் பதசாரம், கற்போர்க்குக் கழி பேரின்பம் பயப்பதாம்.

பெறுமல், நோவுபடும்படி செய்கின்றீரே! என்பாள் '**எரிஅணை அரக்கும் மெழுகும்**' என்கிறுள். இவள் நிலை இது.

இரக்கம் எழீர் - 'நீரும் இவளைப் போன்று உருகவேண்டும்' என்று வளைக்கிறேமோ? நொந்தார் பக்கல் செய்யும் அருளும் செய்கிலீர். இரக்க மனத்தையுடையள் ஆகாநின்றுள் இவள், நீர் இரக்கம் எழுகின்றிலீர்; நீர் இரங்காவிட்டால், உம்முடைய நெஞ்சைப் போன்று இருப்பது ஒரு நெஞ்சை இவளுக்குக் கொடுத்தால் ஆகாதோ! என்கிறுள். இதற்கு என்செய்கேன் - உம்முடைய இரக்கம் ஒழிய ஏதேனும் வேறு உபாயங்களால் பெறத் தக்கதோ இப் பேறு? இனி, உம்மை இரங்கும்படி செய்யவோ? அன்றி, இவளை இரங்காமற் செய்யவோ? யாது செய்வேன்? என்பாள் '**என் செய்கேன்**' என்கிறுள் எனனுமாம். அரக்கன் இலங்கை செற்றீருக்கு - 'ஒரு காதலிக்கு உதவினவன் நமக்கு உதவானே' என்று ஈடுபடாநின்றுள். [1]புழுக் குறித்தது எழுத்தானுற்போலே ஒன்று வாய்த்ததைக் கொண்டு [2]'அது அங்யார்த்தம்' என்று இராமல் நோவுபடாநின்றுள் என்கிறுள். உமக்கு இரக்கம் இன்றியே ஒழிந்தால், [3]இவள் இரங்குவது ஒரு செயலைச் செய்து வைக்கவேண்டுமோ? என்பது உட்கோள். (3)

---

1. மானத்து வண்டல் உழ ஓர்எழுத்தின் வடிவு உற்ற சீர், மான" என்றூர், திவ்யகவி ஐயங்கார்.

2. அங்யார்த்தம்-வேறென்றற்காகச் செய்யப்பட்டது. அல்லது, பிறருக்காகச் செய்யப்பட்டது. இவ்விடத்து,

உன்னை மீட்பான் பொருட்டு உவரி தூர்த்து ஒளிர்
மின்னை மீட்டுறு படை யரக்கர் வேரறப்
பின்னை மீட்டுறு பகை கடந்திலேன்; பிழை
என்னை மீட்பான்பொருட்டு இலங்கை எய்தினேன்.

(கம்பரா. மீட். 63.)

சீதையைக் குறித்த தேயோ தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வன் என்று பேணிய விரதப் பெற்றி
வேதியர் அபய மென்றூர்க்கு அன்று நான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்து நின்ற அவ்வுரை கடக்க லாமோ.

(கம்பரா. விபீட. 118.)

என்னும் செய்யுட்களை ஒப்புநோக்கல் தகும்.

3. 'இவள் இரங்குவதொரு செயல்' என்றது, இலங்கையை அழித்தது.

147.

இலங்கை செற்றவனே ! என்னும்; பின்னும்
வலங்கொள் புள்உயர்த்தாய்! என்னும்; உள்ளம்
மலங்க வெவ்உயிர்க்கும்; கண்ணீர் மிகக்
கலங்கிக் கைதொழும் நின்று இவளே.

பொ - ரை :—இவள் இலங்கையினை அழித்தவனே ! என்கிறாள் ; அதற்கு மேல், வெற்றியைக் கொண்ட கருடப் பறவையினைக் கொடியாக உயர்த்தியவனே! என்கிறாள் ; மனமானது கலங்கும்படி நெருப்பினைப் போன்று பெருமூச்சு எறிகின்றாள் ; கண்களில் நீர் மிகும்படி நின்று அறிவு கலங்கிக் கைதொழுகின்றாள்.

வி - கு :—என்னும் என்னும் உயிர்க்கும் தொழும் என்பன : செய்யும் என் முற்றுக்கள். நின்று கைதொழும் என மாற்றுக.

ஈடு :—நான்காம்பாட்டு. 'அரக்கன் இலங்கை செற்றீர்' என்கிற இது எப்பொழுதும் உள்ளது ஒரு செயல் அன்று காண், எப்பொழுதாயினும் ஒரு கால விசேடத்திலே நிகழ்வது காண் என்றாள் திருத்தாயார்; அது பொறுக்க மாட்டாமே, அது தன்னையே சொல்லுகிறாள்.

இலங்கை செற்றவனே என்னும் - எனக்குப் பண்டே உதவி உபகரித்தவனே! என்னாநின்றாள். முன்பு தனக்கு உதவினவன் இப்பொழுது தனக்கு உதவாது ஒழிந்தாற் போலே கூப்பிடுகிறாள். [1] மலைஎடுத்தல், கடல் அடைத்தல், அம்பு ஏற்றல் செய்ய வேண்டுமோ ? என்பக்கல் வரும்போது என்ன தடை உண்டு ? என்கிறாள் எனலுமாம். திருத்தாயார், இவள் விடுகைக்குச் சொன்னது தானே இவளுக்குப் பற்றுகைக்கு உடலாய்விட்டது. பின்னும் - அதற்கு மேல். வலம் கொள் புள் உயர்த்தாய் என்னும் - மிடுக்கையுடைய புள்ளாலே தாங்கப்பட்டவனே ! என்கிறாள். விடாயர் இருந்த இடத்தே [2] சாய்கரகம் போலே உயர வைத்துக் கொண்டு வந்து காட்டும் பரிகரத்தையுடையவனே ! என்கிறாள் என்றபடி. அன்றி, மிடுக்கையுடைய புள்ளைக் கொடியாக உடையவன் என்று பொருள் கூறலுமாம்.

---

1. பிராட்டிக்கு உதவினவன் எனக்கு உதவானோ ? என்று கொண்டு வேறுவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார், 'மலையெடுத்தல்' என்று தொடங்கி.

2. சாய்கரகம் - தண்ணீர்ப்பந்தலிலே உயரவைத்துச் சாய்க்கிற கரகம்.

உள்ளம் மலங்க வெவ் உயிர்க்கும் - கொண்டு வருவதற்குப் பரிகாரம் இருந்தும் வரக் காணாமையாலே மனமானது வேர் பறியும்படி நெடுமூச்சு எறியாநிற்கும். [1] "கழுத்தளவு நீரில் இருக்கிற தளிர்களையுடைய மரங்களைத் தனது மூச்சுக் காற்றினால் கொளுத்துகின்றவள் போல் இருக்கிற சீதை" என்றார் ஸ்ரீ வால்மீகி பகவான். [2] கண்ணீர் மிக - நெடுமூச்சாகப் புறப்பட்டு, புறப்படாதது கண்ணீராய்ப் புறப்படா நின்றது. கலங்கிக் கைதொழும் - [3] தெளிந்திருந்து தொழுமது இல்லை அன்றோ காதலி? இவளோ - [4] அவன் தொழும்படியான வேண்டற்பாடுடைய தான் தொழாநின்றாள். (4)

148.

இவள் இராப் பகல் வாய்வெரீஇத் தன
குவளை ஒண்கண்ண நீர்கொண்டாள்; வண்டு
திவளும் தண்அம் துழாய் கொடீர்; என
தவள வண்ணர் தகவுகளே.

பொ - ரை :—இவள் இரவும் பகலும் வாயால் பிதற்றிக்கொண்டு தன்னுடைய கருங்குவளை போன்ற கண்களில் நீரினைக் கொண்டாள்; வண்டு படிந்து ஒளிவிடுகின்ற குளிர்ந்த அழகிய திருமார்வில்இருக்கின்ற திருத்துழாய் மாலையினைக் கொடுக்கின்றீர்இலீர்; ஆதலால், தூய்மையான பரிசுத்தத்தையுடையவரே! உம்முடைய தகவுகள்தாம் என்னே!

வி - கு :—வெரீஇ என்பது, சொல்லிசையளபெடை. தன: அகரம் ஆறனுருபு. கண்: சாதியொருமை. கண்ண: அகரம் சாரியை. என என்பது, என்ன என்ற சொல்லின் விகாரம். "என்ன

---

1. ஸ்ரீராமா. 17 : 29.

2. "கண்ணீர்மல்கி" என்றதன் உரையை நோக்குக. (பக். 93.)

3. மகளிர், தெளிந்திருக்கும் காலத்துக் கணவனது அன்பைப் பெறுதற்கு அவனை வணங்கமாட்டார்கள் என்பது கருத்து. ஞானிகள் இறைவனுடைய திருவருளைப் பெறுதல் நிமித்தம் அவனை வணங்கமாட்டார்கள் என்ற விசேடப் பொருளும் தோன்றும். "அடியேன் நான் முயற்சியின்றி நின்னருளே பார்த்திருப்பன் நீசனேனே" என்றார் திவ்யகவி. நீர் இரக்கம் இலீரே" என்றதன் உரையும் ஈண்டு நோக்குக. (பக். 98.)

4. "பொய்ப்ப விடேஎம் என நெருங்கில், தப்பினேன் என்று அடி சேர்தலும் உண்டு" (கலித். 89.) என் வருதலால் தலைவன் வணங்கும் வழக்கு உண்டு என்பதனை அறிதல் தகும்.

போதித்தும் என்ன" என்பது தாயுமானவர் பாடல். தவளம் - வெண்மை; அது ஈண்டு, தூய்மைக்கு ஆயிற்று. வண்ணம் - தன்மை, இதனை 'இயற்சொல்' என்பர் நச்சினார்க்கினியர்.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. இவள் இப்படித் துக்கப்படுகின்ற இடத்திலும் வரக் காணாமையாலே, [1] 'அருள்அற்றவர்' என்கிறாள்.

இவள் இராப் பகல் வாய்வெரீஇ - [2] "ஆடவர் திலகனான ஸ்ரீ ராமபிரான் எப்பொழுதும் உறக்கம் இல்லாதவராக இருக்கிறார்; ஒருகால் உறங்கினராயினும், சீதா என்கிற மதுரமான வார்த்தையினைச் சொல்லிக்கொண்டு விழித்துக் கொள்ளுகிறார்" என்கிறபடியே, வாய்வெருவுவான் அவனாக இருக்க, இவள் வாய் வெருவுகின்றாளே! என்கிறாள். 'இவள் இராப் பகல் வாய் வெரீஇ' என்றதனால், [3] "பொய்ந் நின்ற ஞானம்" தொடங்கி இத் திருப்பாசுரம் முடிய, இவர் பாடிக்கொண்டு வந்தன எல்லாம் வாய்வெருவின இத்தனையே என்பதும், அவதானம்பண்ணி அருளிச்செய்கின்றார் அல்லர் என்பதும் போதரும். அவதானம் பண்ணாமல் அருளிச் செய்தல் கூடுமோ? எனின், வாசனையே உபாத்தியாயராகச் சொல்லிக்கொண்டு வரச் சொல்லுகிறார் இத்தனை.

தன குவளை ஒண் கண்ண நீர் கொண்டாள் - தன்னுடைய வாய், குவளைப்பூப் போலே இருக்கிற அழகிய கண்களிலே நீரைக் கொண்டாள். ஆனந்தக் கண்ணீர் பெருக்கு எடுக்கக் கூடிய கண்களில் துக்கக் கண்ணீர் பெருக்கு எடுத்து ஓடுகின்றதே! என்பாள் 'குவளை ஒண் கண்ண நீர் கொண்டாள்' என்றும், இக் கண்ணுக்கு இலக்கானார் கண்ணிலே காணக்

---

1. "என, தவள வண்ணர் தகவுகளே" என்றதனை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. ஸ்ரீராமா. சுந். 38 : 48. இச் சுலோகத்திற்கு வியாக்கியாதா அருளிச்செய்த பொருள் வருமாறு :—"சீதேதி மதுராம் வாணீம் வியாகரந் ப்ரதிபுத்யதே என்று வாய்வெருவுவான் அவன் கிடீர். அநித்ரஸ் ஸததம் ராம :—நித்திரையோடே காலக்ஷேபம் பண்ணவேண்டும் செல்வுடையவர், ஸததம் அநித்ரராயிருப்பர். சுப்தோபிச - ஸததம நித்ர: என்று வைத்து, ஸுப்தோ பிச என்கிறது, பாரார்த்த அநுசந்தான அபாவத்தைப் பற்ற. நரோத்தம :—அபிமதவிஸ்லேஷத்தில் இங்ஙனே இருக்கைபோலே - புருஷோத்தமத்வமாவது."

3. திருவிருத்தம். 1.

4. அவதானம் - கவனம், ஞாபகம்.

கூடிய கண்ணீரைத் தன் கண்ணிலே கொண்டாள் என்பாள் '**தன கண் நீர் கொண்டாள்**' என்றும் கூறுகின்றாள். அதற்கு நம்மைச் செய்யச் சொல்லுகிறது என்? என்ன, வண்டு திவளும் தண் அம் துழாய் கொடீர் என்கிறாள்; அதாவது - விரஹ வெம்மையால் வாடின இவள் மார்வில் மாலையை வாங்கி, உம்முடைய மார்வில் செவ்வி மாறாத மாலையைக் கொடுக்கின்றிலீர் என்றபடி. அவ் வண்டுகளுக்கு என்ன கண்ணீரைக் கண்டு கொடுக்கிறீர் என்பாள் '**வண்டு திவளும் துழாய்**' என்கிறாள். திவளுகை-படிதல், அசைதல், ஒளிவிடுதல். தவள வண்ணர் தகவுகள் என - [1]'சுத்த சுவபாவரான உம்முடைய தகவுகள் எங்கே போயின' என்று **எம்பார்** அருளிச்செய்வர். 'உம்மைப் போலே நாலு சிஷ்டர்கள் அமையும்; அபலைகள் குடிகெட' என்று **பட்டர்** அருளிச் செய்வர். (5)

149.

தகவு உடையவனே! என்னும்; பின்னும்
மிக விரும்பும்; பிரான்! என்னும்; எனது
அக உயிர்க்கு அமுதே! என்னும்; உள்ளம்
உக உருகி நின்று உள்உளே.

பொ - ரை:— மனமானது நிலை கெடும்படி நீர்ப்பண்டமாக உருகி நின்று, மேலும் மேலும் அருள்உடையவனே! என்கிறாள்; அதற்கு மேல், மிகுதியாக விரும்புகிறாள்; எனக்கு உதவியினைச் செய்தவனே! என்கிறாள்; என்னிடத்துள்ள ஆத்மாவிற்கு அமுதே! என்கிறாள்.

வி - கு:—உள்உளே - மேலும் மேலும். உள்ளே உள்ளே என்று உரைத்தலும் ஒன்று. நின்று என்னும் என மாற்றுக.

ஈடு:—ஆறும் பாட்டு. இவள் துன்பத்தினைக் கண்ட திருத்தாயார் [2]'அருள் அற்றவர்' என்றாள்; இவள் அது பொறாமல்

---

1. முன்பு சுத்த சுவபாவருமாய்த் தயாவானுமாய் இருந்த நீர், இப்போது சுத்தசுவபாவரும் அன்றிக்கே தயாஹீனருமாய் விட்டீர் என்பது எம்பாருடைய திருவுள்ளம். என - எங்குற்றன என்பது பொருள். சுத்தசுவபாவரும்அல்லர், தயாவானும்அல்லர் என்பது பட்டருடைய திருவுள்ளம். என தவள வண்ணர், என தகவுகள் என்று கொண்டு, என்ன சுத்தசுவபாவர், என்ன தகவுகள் என்று பொருள் கொள்க. இப்பொருளையே ரசோக்தியாக, 'உம்மைப்போலே நாலு சிஷ்டர்கள் அமையும்; அபலைகள் குடிகெட' என்று அருளிச்செய்கிறார்.

2. "என, தவளவண்ணர் தகவுகளே" என்றதனை நோக்கி 'அருள் அற்றவர் என்றாள்' என்கிறார்.

'தகவுடையவனே' என்று அதனையே நிரூபகமாகச் சொல்லுகிறாள் என்கிறாள்.

தகவுடையவனே என்னும் - ஐயகோ! [1] ஆகரத்தில் தகவு மறுக்குமோ? நம் குற்றங்காண் என்கிறாள். இனி, 'தகவு இல்லை என்றவள் வாயைப் புதைத்தாற் போலே, [2] வந்து தோன்றுவதே!' என்று, அவன் வந்தால் செய்யும் விருப்பத்தைச் செய்கிறாள் எனலுமாம். பின்னும் மிக விரும்பும் - உருவெளிப்பாட்டின் தன்மை இருக்கிறபடி. [3]பிரான் என்னும் - பெற்ற தாய்க்கு இடம் வையாமல் வந்து தோன்றுவதே! இது என்ன உபகாரம் தான் என்கிறாள். எனது அக உயிர்க்கு அமுதே என்னும் - என்னுடைய உள்ளே இருக்கிற ஆத்மாவுக்கு இனியனவனே! என்கிறாள். இறைவன், நித்தியமான ஆத்மா அழியாமல் நோக்கும் அமுதமாதலின் '**அக உயிர்க்கு அமுதே**' என்கிறாள். உள்ளம் உக உருகி நின்று – வடிவம் இல்லாத மனமானது வடிவினை அடைந்து உருகி நீர்ப்பண்டமாய் மங்கிப் போகாநின்றது. உள்ளம் உருகி நின்று தகவுடையவனே என்னும், பின்னும் மிக விரும்பும், பிரான் என்னும், எனது அகஉயிர்க்கு அமுதே என்னும்; இவை, இவள் பேசும் பேச்சைக் கொண்டு நாம் அறிந்தவைகள்; உள் ஓடுகிறது, உள் உளே - [4] வாசா மகோசரம். இனி, உள்உளே என்பதற்கு, மேலும் மேலும் என்று பொருள் கூறுவாருமுளர். அப்பொருளுக்கு, மேலும் மேலும் உருகி நின்று என்னும் எனக் கூட்டுக. (6)

150.

உள்உள் ஆவி உலர்ந்து உலர்ந்து, என
வள்ளலே! கண்ணனே! என்னும்; பின்னும்
வெள்ள நீர்க் கிடந்தாய்! என்னும்; என
கள்வி தான் பட்ட வஞ்சனையே?

பொ - ரை :—உள்ளே இருக்கிற உயிரானது சருகாக உலர்ந்து, எனக்கு உதவியைச் செய்தவனே! கண்ணனே! என்று கூப்பிடுகின்

1. ஆகரம் - கனி; உத்பத்தி ஸ்தானம் என்றபடி.

2. 'வந்து தோன்றுவதே' என்றது, உருவெளிப்பாடு. செய்யும் விருப்பத்தைச் செய்தலாவது, பூசும் சாந்தும் புனையும் கண்ணியும் முதலான வற்றைச் சேர்க்கை.

3. பிரான் - உபகாரகன். பிரிவுக்காலத்தில் செய்யும் உபகாரம் என்? என்ன, பெற்ற தாய்க்கு இடம் வையாமல் வந்து தோன்றியது என்கிறாள்.

4. வாசா மகோசரம் - வாக்கிற்கு எட்டாதது. உள் - உள்ளே ஓடுகிறது, உளே - உள்ளேதான் என்பது பொருள்.

றாள் ; அதற்குமேல், திருப் பாற்கடலில் கண்வளர்ந்தருளுகிறவனே ! என்கிறாள் ; ஆதலால், என்னுடைய கள்வியானவள் பட்டவைகள் வஞ்சனையே யாகும்.

வி - கு :—உலர்ந்து என்னும் எனக. என வள்ளல், என கள்வி என்பன : ஒருமை பன்மை மயக்கம். என : ஆறனுருபு. கள்வி : பெண்பாற் பெயர். "எற் பெறத் தவஞ் செய்கின்றார் என்னை நீ இகழ்வது என்னே, நற்பொறை நெஞ்சின் இல்லாக் **கள்வியை** நச்சி என்றாள்" என்றார் கம்பர். தன்மனத்தின் நிகழ்ச்சிகளைத் தாயும் அறியாதவாறு மறைக்கின்றாளாதலின் 'கள்வி' என்கிறாள். பட்ட: வினையாலணையும் பெயர். எச்சமாகக் கோடலுமாம்.

ஈடு :—ஏழாம் பாட்டு. [1] தன் நெஞ்சில் ஓடுகின்றவற்றைப் பிறர் அறியாதபடி அடக்கும் இயல்புடைய இவள், வாய் விட்டுக் கூப்பிடும்படி இவளை வஞ்சித்தான் என்கிறாள்.

உள்உள் ஆவி உலர்ந்து-உள்ளே இருக்கும் மனத்திற்குத் தாரகமான ஆத்மா சருகாய் வருகிறபடி. [2]"இவ் ஆத்மா வெட்ட முடியாதவன், கொளுத்த முடியாதவன், நனைக்க முடியாதவன், உலர்த்த முடியாதவன்" என்று சொல்லப் படுகிற இத் தன்மையும் போயிற்று என்கிறாள். ஆயின், உடல் உலர்ந்த பின்புஅன்றோ ஆவி உலர்தல் வேண்டும்? எனின், [3]பாவபந்தம்அடியாக வருகிற நோய்ஆகையாலே அகவாயே பிடித்து வெந்து கொண்டு வருமாயிற்று. என வள்ளலே கண்ணனே என்னும் - விடாயர் கற்பூரத்திரள் வாயில் இடுமாறு போன்று, இவ்வளவான துன்பத்திற்கு இடையில் வந்து உன்னை எனக்குக் கையாளாகத் தருமவனே என்னாநின்றாள். பின்னும்-அதற்கு மேலே. வெள்ளம் நீர்க் கிடந்தாய் என்னும்-என் விடாய்க்கு உதவத் திருப்பாற்கடலிலே வந்து சாய்ந்தருளிற்றே என்னும். [4]"தாபத்தாலே பீடிக்கப்பட்டவன் தண்ணீரில் சயனித்திருக்கிற நாராயணனை நினைக்கக் கடவன்"என்பது

---

1. "என கள்விதான் பட்ட வஞ்சனையே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. ஸ்ரீ கீதை. 2 : 24.

3. 'வேவாரா வேட்கை நோய்' என்ற பாசுரத்தின் பொருளை நினைவு கூர்க.

4. விஷ்ணுதர்மம். அத். 40.

விஷ்ணுதர்மம். இக் கிடை, இவளுக்கு ஒரு படுக்கையிலே சாய்ந்தாற் போலே இருக்கிறது காணும். என கள்வி - தன் மனத்தில் ஓடுகிறது பிறர் அறியாதபடி மறைத்துப் பரிமாறக் கூடிய இவள் படும் பாடே இது! தான் பட்ட - [1]"கருமை பொருந்திய திருக்கண்களையுடைய சீதையைப் பிரிந்து நான் ஒரு நொடிப்பொழுதும் பிழையேன்" என்கிற தான், வேறு பாடு இல்லாதவனாக இருக்க, இவள் வேறுபடுவதே! வஞ்சனையே-பகலை இரவு ஆக்கியும், 'ஆயுதம் எடேன்' என்று கூறிப் பின்னர் எடுத்தும் செய்த செயல் போலே, இவளை வஞ்சித்தீர் இத்தனை. அளவு படைக்குப் பெரும் படை தோற்பது வஞ்சனையால் அன்றோ? (7)

151.

வஞ்சனே! என்னும்; கைதொழும்; தன
நெஞ்சம் வேவ நெடிது உயிர்க்கும்; விறற்
கஞ்சனை வஞ்சனை செய்தீர்! உம்மைத்
தஞ்சம் என்று இவள் பட்டனவே!

பொ - ரை :— வலிமையினையுடைய கம்சனை அவன் நினைத்த நினைவு அவனோடே போமாறு கொன்றவரே! இவள், குணங்களாலும் செயல்களாலும் என்னை வஞ்சித்தவனே! என்கிறாள்; கைகூப்பி வணங்குகிறாள்; தன்னுடைய நெஞ்சமானது வேகும்படி பெருமூச்சு எறிகின்றாள்; ஆதலால், உம்மையே பற்றுக்கோடாக நினைத்து இவள் பட்ட துன்பங்கள் எண்ணில் அடங்கா என்றவாறு.

வி - கு :— தன நெஞ்சம்: ஒருமை பன்மை மயக்கம். வஞ்சனை செய்தீர்: பெயர். தஞ்சம் - பற்றுக்கோடு. பட்டன: பெயர். ஏகாரம்: இரக்கத்தின்கண் வந்தது.

ஈடு :— எட்டாம் பாட்டு. உம்மை அநுபவித்துச் சுகித்திருக்க வைத்தீர் அல்லீர், கம்சனைப் போலே முடித்து விட்டீர் அல்லீர், உம்மை 'ரக்ஷகர்' என்று இருந்த இவள் படும் பாடே இது என்கிறாள்.

---

1. ஸ்ரீ ராமா. சுந். 66 : 10.

2. பகலை இரவாக்கியது, வில்லிபாரதம் பதினூலாம்போர்ச் சருக்கம் செய். 164-173. முடியக் காண்க. ஆயுதம் எடுத்தது, ஷை மூன்றும் போர்ச் சருக்கம், செய். 14-20. முடியக் காண்க. அளவுபடை - சிறுபடை; இங்கு, நாயகன். பெரும்படை - நாயகி. கண்ணழகு முதலியனவற்றையுடையவளாதலின், நாயகியைப் பெரும்படை என்றார்.

வஞ்சனே என்னும் - தாயார், 'வஞ்சித்தான்' என்னப் பொறுத்திலள்: [1] "தான் ஒட்டி வந்து என் தனி நெஞ்சை வஞ்சித்து, ஊன் ஒட்டி நின்று என் உயிரிற் கலந்து", 'நான் அல்லேன்' என்றாலும் தவிர ஒண்ணாதபடி என்னையும் அறியாதே வஞ்சித்து, உன் திருவடிகளிலே சேர்த்த உபகாரகனே! என்கிறாள். கைதொழும் - வஞ்சித்த உபகாரத்துக்குத் தோற்றுக் கைதொழும். தன நெஞ்சம் வேவ நெடிது உயிர்க்கும் - தாயார் சொன்ன குணமின்மைக்கு ஒரு பரிகாரம் செய்தும் ஆற்றாமை போகாமல் தன் நெஞ்சும் வேவ நெடுமூச்சு எறியாநிற்கும். [2] "பின் அழுக்குப் புடைவையை உடுத்தவளும் அரக்கியரால் சூழப்பட்டவளும் பட்டினியால் இளைத்தவளும் எளியவளும் அடிக்கடி பெருமூச்சு எறிகின்றவளுமான பிராட்டி" என்றார் ஸ்ரீ வால்மீகியும். [3] "உள்ளம் மலங்க" என்ற இடம், வெட்டி விழுந்தபடி சொல்லிற்று. [4] "உள் உள் ஆவி உலர்ந்து உலர்ந்து" என்ற இடம், உலர்ந்தபடி சொல்லிற்று; இங்கு, 'தன நெஞ்சம் வேவ' என்கையாலே, நெருப்புப் பற்றி எரிகிறபடி சொல்லுகிறது.

விறல் கஞ்சனை வஞ்சனை செய்தீர் - மிடுக்கனான கம்சனை அழியச் செய்தீர். உம்மைத் தோற்பிக்க நினைத்தாரை நீர் தோற்பிக்குமவராய் இருந்தீர். [5] அடைந்தவர்கள் பகைவர்கள் என்னும் வேற்றுமை இன்றி உமக்கு இரண்டு இடத்திலும் காரியம் ஒன்றேயோ? என்கிறாள். உம்மைத் தஞ்சம் என்று - [6] "தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாய்" என்னும் சர்வ ரக்ஷகனைக் காதுகரைச் சொல்லுமாறு போன்று சொல்லுகிறாள், மகள் நிலையைப் பார்த்து. [7] தஞ்சம் அல்லாதாரைத் 'தஞ்சம்' என்று இருந்தால் சொல்லுமாறு போன்று சொல்லுவதே!

---

1. திருவாய். 1. 7 : 7.

2. ஸ்ரீராமா. சுந். 15 : 18. இந்தச் சுலோகம், பலகாலும் பெருமூச்சு விடுதற்கு மேற்கோள்.

3. திருவாய். 2. 4 : 4.

4. திருவாய். 2. 4 : 7.

5. அடைந்தவர்களான யசோதை முதலியவர்கட்குத் தோற்கையும், அடைந்தவரல்லாதவரான கம்சன் முதலியோரை வெல்லுதலும் அன்றோ உமக்கு ஸ்வபாவம்: இப்போது இரண்டிடத்திலும் தோற்பிக்கையேயாய் விட்டதே என்றபடி.

6. திருவாய். 3. 6 : 9.

7. வியாக்யாதாவின் ஈடுபாடு.

இவள் பட்டனவே - [1]சம்சாரிகளைப்போன்று உண்டு உடுத்துத் திரிய வைத்தீர் அல்லீர்; நித்திய சூரிகளைப் போன்று அநுபவிக்க உம்மைக் கொடுத்தீர் அல்லீர்; [2]"இலங்கையை அழித்து, என்னை அழைத்துக்கொண்டு போவாராகில் போகும் அச்செயல் அவருக்குத் தக்கதாம்" என்னும் எங்களைப்போன்று இருக்கப் பெற்றிலள்; கம்சனைப் போன்று முடித்தீர் அல்லீர்; என்வழி வாராதே உம்மைத் தஞ்சமாகப் பற்றின இவளை எத்தனை படுத்தவேண்டும்? இனி, நீர் படுத்துமவற்றைச் சொல்லில், ஒரு மஹாபாரதத்துக்குப் போரும் போலே என்கிறுள் எனலுமாம். (8)

152.

பட்டபோது எழுபோது அறியாள்; விரை
மட்டு அலர் தண் துழாய் என்னும்; சுடர்
வட்ட வாய் நுதி நேமியீர்! நுமது
இட்டம் என்கொல், இவ் ஏழைக்கே?

பொ - ரை :—பேரொளியினையும் வட்டமான வாயினையும் கூர்மையினையுமுடைய சக்கரத்தைத் தரித்தவரே! சூரியன் மறைகின்ற காலத்தையும் தோன்றுகிற காலத்தையும் அறிகின்றிலள்; வாசனையோடு மலர்கின்ற தேனையுடைய குளிர்ந்த திருத்துழாய் என்று சொல்லுகிறுள்; அறியாமையினையுடைய இப் பெண்ணின் திறத்து நுமது எண்ணம்தான் யாதோ? என்றவாறு.

வி - கு :— அலர்துழாய்: வினைத்தொகை. நேமியீர்: விளிப்பெயர். ஏழை – அறிவில்லாவள். இது, உயர்திணை இருபாற்கும் பொதுப்பெயர். "களி மடி மானி காமி கள்வன், பிணியன் ஏழை" என்றார் நன்னூலார்.

---

1. இத் திருப்பாசுரத்தில், வஞ்சனையை உபகாரமாகச் சொல்லுகையாலே சம்சாரிகளில் வேறுபாடு. "தன நெஞ்சம் வேவ" என்கையாலே நித்தியசூரிகளிலும், தாயாரான தன்னிலும் வேறுபாடு. "கைதொழும்" என்றதனை நோக்கி அருளிச்செய்கிறார் 'எங்களைப்போன்று இருக்கப் பெற்றிலள்' என்று. "கஞ்சனை வஞ்சனை செயதீர்" என்றதனை நோக்கி அருளிச்செய்கிறார் 'கம்சனைப் போல முடித்தீரல்லீர்' என்று. 'என் வழி வாராதே' என்றது, "என தவளவண்ணர் தகவுகளே" என்றும், "என கள்விதான் பட்ட வஞ்சனையே" என்றும் தான் கூறிய வார்த்தைகளை அநாதரித்தமை நோக்கி. "என் சிறகின் கீழ் அடங்காப் பெண்ணைப் பெற்றேன், இரு நிலத்து ஓர் பழிபடைத்தேன் ஏ பாவமே" (திருநெடுந். 12.) என்றார் மங்கை மன்னனும்.

2. ஸ்ரீராமா. சுந். 9; 80.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு. 'இவள் பட்டன' என்கைக்கு என்பட்டாள்? என்ன, படுவன எல்லாம் பட்டாள்; [1] இனி,'என் படல் வேண்டும்?' என்கிறாள்.

பட்டபோது எழுபோது அறியாள் - [2] உதித்ததும் மறைந்ததும் அறிகின்றிலள். இவள் அறிவதும் ஏதேனும் உண்டோ? என்னில், விரை மட்டு அலர் தண் துழாய் என்னும் - இது ஒரு பரிமளமே, இது ஒரு தேனே, இது ஒரு பூவே, இது ஒரு குளிர்த்தியே என்று, திருத்துழாய் விஷயமாக ஒரு கோடியைச் சொல்லும். ஆக, [3] உம்முடைய பேரும் தாரும் ஒழிய அறியாள் என்கிறாள். என்றவாறே, 'நம்மை ஆசைப்பட்டு இப்படிப் படப் பெற்றோமே!' என்று [4] அலப்ய லாபத்தால் கையில் திரு ஆழியை விதிர்த்தான். சுடர் வட்டம் வாய் நுதி நேமியீர் என்கிறாள். அதாவது - சுடரையும் வட்டமான வாயையும் கூர்மையையுமுடைய திருவாழியைக் கையிலே உடையீர் என்பதாம். [5] இப்போது, பெண்பிள்ளையைக் காட்டிலும் திருத்தாயார் கையும் திருவாழியுமான அழகுக்கு ஈடுபட்டு விசேஷணங்கள் இட்டு அநுபவிக்கிறாள் 'சுடர் வட்டம் வாய் நுதி' என்று. ஆக, [6] அடைந்தவர் பகைவர் என்னும் வேற்றுமை இன்றி அழிக்கைக்

1. 'இனி, என்படல் வேண்டும்' என்றது, இதற்கு முன்பு அநுபவியாததாய்; இனிமேல் அநுபவிக்க வேண்டியதாயுள்ள துக்கம் உளதோ? என்றபடி.

2. "பட்டபோது" என்றது, 'முத்துப்பட்டது' என்னுமாறு போன்று, உதித்தபோது என்றபடி. 'எழுபோது' என்றது, 'எழுகளம்' என்னுமாறுபோன்று, சூரியன் மறைந்தபோது என்றபடி. எழுகளம் - முடிகிற யுத்த பூமி' என்பர் அரும்பதவுரைகாரர். படுதல் - உண்டாதல் என்னும் பொருட்டு; "இலமென் கிளவிக்குப் படு வரு காலை", "இலம்பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை" என்ற சூத்திரங்களில் நச்சினார்க்கினியரும் 'படுதல் - உண்டாதல்' என்றுரைத்தார்.

"பட்டபோது எழுபோது அறியாள்" என்ற இவ்விடத்து,

"காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றிப்
பொழுது இடை தெரியிற் பொய்யே காமம்"

என்ற குறுந்தொகைச் செய்யுள் ஒப்பு நோக்கலாகும்.

3. "ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் அவனுடைய, பேருந் தார்களுமே பிதற்ற" என்பது திருவாய்மொழி. (6. 7 : 2)

4. அலப்யலாபம் - கிடையாத பொருள் கிடைத்தல்.

5. இப்போது - தாயார் தன் வார்த்தையாகச் சொல்லுகிறபோது.

6. "சுடர் வட்ட வாய் நுதி நேமியீர்!" என்றதனை "பட்டபோது எழுபோது அறியாள்" என்றதனோடு கூட்டி, மகளுடைய வியசனத்துக்குத் திருவாழியாழ்வானுடைய சேர்த்தி அழகே காரணம் என்று அருளிச்செய்கிறார் 'அடைந்தவர் பகைவர்' என்று தொடங்கி. அதாவது - அடைந்தவர்கள் அல்

குப் பரிகாரம் உமக்கு ஒன்றேயோ? என்கிருள் என்றபடி. [1]"ஆழிப்படை அந்தணனை, மறவியை இன்றி மனத்து வைப்பாரே" என்பதன்றோ இவர் தம்முடைய வார்த்தையும்? கையும் திருவாழியுமான அழகைக் கண்டால் நெஞ்சுஅழியுமவர்கள் [2] இவர்கள். நுமது இட்டம் என் கொல் - [3] இராவணன் இரணியன் முதலியோர்களை முடித்தது போன்று, முடிக்க நினைக்கிறீரோ? நித்தியசூரிகளைப் போன்று, கையும் திருவாழியுமான அழகை அனுபவிப்பிக்கிறீரோ? தன்னையும் மறந்து உம்மையும் மறந்து சம்சாரிகளைப் போன்று உண்டு உடுத்துத் திரிய வைக்கிறீரோ? இவள் பேற்றில் நீர் நினைத்திருக்கிறது என்? இவ் ஏழைக்கே-சிறிதும் மனத்திட்பம் இல்லாதவளான [4]இவள் விஷயத்தில் நீர் நினைத்திருக்கிறது என்? (9)

153.

ஏழை பேதை இராப் பகல் தன
கேழ்இல் ஒண் கண்ண நீர்கொண்டாள்; கிளர்
வாழ்வை வேவ இலங்கை செற்றீர்! இவள்
மாழை நோக்கு ஒன்றும் வாட்டேன்மினே.

பொ-ரை:—ஏழையாய்ப் பேதையாய் இருக்கின்ற இவள், தனது ஒப்பில்லாத ஒள்ளிய கண்களில் எக்காலத்திலும் நீரைக் கொண்டாள்; மேன்மேலும் ஓங்குகிற செல்வமானது அழியும்படி இலங்கையை அழித்தவரே! இவளுடைய இளமை பொருந்திய மான்போன்ற நோக்கு ஒன்றும் வாடும்படி செய்யாதீர்.

லாதாரான இரணியன் முதலியோர்களை அழிக்கைக்கும், அடைந்தவளான இவளைச் சேர்த்திஅழகைக் காட்டி அழிக்கைக்கும் பரிகாரம் ஒன்றேயோ? என்றபடி. 'உகப்பாரை அவ் அழகைக் காட்டி, அவ் அழகைக்கொண்டு அகலநின்று முடிக்கும்; உகவாதாரைக் கிட்டி நின்று, அத் திருவாழியாலே அழியச்செய்து முடிக்கும் என்பர் சீயர்' என்பது இருபத்து நாலாயிரப்படி.

1. திருவாய். 1. 7 : 1.

2. 'இவர்கள்' என்றது, திருமங்கைமன்னன் முதலானாரையும் சேர்த்து அருளிச்செய்தபடி; "ஆழியொடும், பொன்னார் சார்ங்கம் உடைய அடிகளை, இன்னார் என்று அறியேன்" என்பது, மங்கைமன்னன் திருவாக்கு.

3. இங்குக் கூறப்படுகின்றவை, "சுடர் வட்ட வாய் நுதி நேமியீர்!" என்ற விளியின் தொனிப்பொருள்: "நுதி" என்றதனை நோக்கி, 'இராவணன் இரணியன் முதலியோரை முடித்தது போன்று' என்றும், "சுடர்" என்றதனை நோக்கி, 'நித்தியசூரிகளைப் போன்று' என்றும் அருளிச்செய்கிருர். "பட்ட போது எழுபோது அறியாள்" என்றதனை நோக்கி, 'தன்னையுமறந்து' என்று தொடங்கும் வாக்கியத்தை அருளிச்செய்கிருர்.

4. "சிட்டனே! செழுநீர்த் திருவரங்கத்தாய்! இவள்திறத்து என் சிந்தித்தாயே?" என்பர் பின்னும். (7. 2 : 4.)

வி - கு :—இலங்கை செற்றீர்! இவள் தன கண்ண நீர் கொண்டாள், இவள் நோக்கு ஒன்றும் வாட்டேன்மின் என்பதாம். கேழ்: ஒப்பு. "ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ தெரியின் அம்மா" என்பது கம்பராமாயணம். கிளர்வாழ்வு: வினைத்தொகை. வாழ்வை - ஐகாரம் சாரியை. மாழை - இளமை; அழகுமாம். 'வாட்டேன்மின்' என்பது எதிர்மறை பன்மை வினைமுற்று.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1] இவள், நோக்கு ஒன்றும் ஒழிய, அல்லாதவை எல்லாம் இழந்தாள்; இந் நோக்கு ஒன்றையும் நோக்கிக் கொள்ளீர் என்கிறாள்.

ஏழை - 'கிடைக்காது' என்று பிரமாணங்களால் பிரசித்தமாகக் கூறப்பட்டுள்ள பொருளில், கிடைக்கக்கூடிய பொருளில் செய்யும் விருப்பத்தினைச் செய்பவள். பேதை - 'கிடைக்காது' என்று அறிந்து மீளும் பருவம் அன்று; நான் ஹிதம் சொன்னாலும் கேளாத பருவம். இராப் பகல் தன கேழ் இல் ஒண் கண்ண நீர் கொண்டாள் - ஆனந்தக் கண்ணீருக்குத் தகுதியாய், ஒப்பு இல்லாதவையாய், கண்ண நீர் இல்லாவிடினும் கண்டவர்க்கு ஆலத்தி வழிக்கவேண்டும்படி ஒள்ளியவாய் உள்ள கண்களில், எல்லாக் காலங்களிலும் கண்ணீர் நிறையப் பெற்றாள். [2] தாமரையிலே முத்துப் பட்டாற் போன்று, இக் கண்ணும் கண்ணீருமாய் இருக்கிற இருப்பை, காட்டில் எறித்த நிலவு ஆக்குவதே! [3] இவ் இருப்புக்குக் கிருஷி பண்ணிப் பல வேளையிலே இழப்பதே! [4] பொன்னும் முத்தும் விளையும்படி அன்றோ கிருஷிபண்ணிற்று என்று இப்போது இவள் இழவுக்கு அன்றியே, அவன் இழவுக்காக இவள் கரைகின்றாள்.

---

1. "இவள் மாழை நோக்கு ஒன்றும் வாட்டேன்மினே" என்றதனை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. கண்ணை வர்ணிக்கிறவளுடைய மனோபாவம், 'தாமரையிலே முத்துப் பட்டாற் போன்று' என்று தொடங்கும் வாக்கியம்; அதாவது, கலவியாலே உண்டான ரசத்தைப் பொறுப்பதற்காகவும், மேலும்மேலும் விருப்பம் மிகுவதற்காகவும் அன்றோ நீர் பிரிந்தது? அவை அப்படியே பலித்த பின்பும், கண்ண நீரையும் மாற்றிக் கலக்கப் பெறாமல் இழப்பதே! என்றபடி.

3. 'இவ் இருப்புக்குக் கிருஷி பண்ணிப் பலவேளையில் இழப்பதே!' என்றது, 'இதுவேண்டும்' என்று படைத்தல், அவதரித்தல் முதலியவைகளாலே பாடுபட்டு, இப்பொழுது இழப்பதே! என்றபடி.

4. "ஒண்முத்தும் பைம்பொன்னும் ஏந்தி" (திருவிருத். 11.) என்றதனை உட்கொண்டு ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'பொன்னும் முத்தும்' என்று தொடங்கி. பொன் - பசலைநிறம், முத்து - கண்ணீர்.

நடுவே கண்ணீர் விழ விடும் இத்தனையோ, விரோதி கனத்திருக்க? என்ன, இராவணனைக் காட்டிலும் வலியதோ இவளுடைய விரோதிகளின் கூட்டம்? என்கிறாள் மேல்: கிளர் வாழ்வை வேவ இலங்கை செற்றீர் - கிளர்ந்த ஐஸ்வர்யமானது வேகும்படி இலங்கையை அழித்தீர். [1] "கொழுத்தவனை இராவணனுடைய அழிவினை விரும்பிய தேவர்களால் பிரார்த்திக்கப்பட்டவரும் நித்தியமானவருமான விஷ்ணு, மனித லோகத்தில் இராமனாக அவதரித்தார்; இது பிரசித்தம்" என்கிறபடியே, வந்து அவதரித்த தமப்பனும் தாயும் சேர இருத்தற்குப் பொறுதவனுடைய செல்வம் ஆகையாலே '**கிளர் வாழ்வை**' என்கிறாள். இவ் விளியால், [2]ஒன்றை அழிக்க நினைத்தால், முதல் கிடவாமே அழிக்குமவராய் இராநின்றீர் என்ற தொனிப்பொருள் தோன்றும். இவள் மாமை நோக்கு ஒன்றும் வாட்டேன்மின் - இவளுடைய இளமை பொருந்திய நோக்கு ஒன்றும் கிடக்கும்படி காரியம் பார்த்தருள வேண்டும். இவள் தானே முடிந்து போகிறாள்; நாங்கள் தாமே இழக்கிறோம்; ஜீவிக்க இருக்கிற நீர் வேண்டுமாகில், [3] உம்முடைய ஜீவனத்தை நோக்கிக் கொள்ளப் பாரும் என்பாள் '**வாட்டேன்மின்**' என்று அவன் தொழிலாகக் கூறுகிறாள். (10)

154.

வாட்டம் இல் புகழ் வாமனனை இசை
கூட்டி, வண்சடகோபன் சொல் அமை
பாட்டு ஓர்ஆயிரத்து இப் பத்தால் அடி
சூட்ட லாகும் அம் தாமமே.

பொ - ரை :—குறைதல் இல்லாத புகழையுடைய வாமனனை, வள்ளலாரான ஸ்ரீ சடகோபர் இசையோடு சேர்த்து அருளிச்செய்த எல்லா இலக்கணங்களும் அமைந்த ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப் பத்துப் பாசுரங்களால், அழகிய செவ்வி மாலையினை அவனுடைய திருவடிகளில் சூட்டுதலாகிய பேற்றினை அடையலாம்.

வி - கு:—வாட்டம் இல் புகழ் வாமனனை, வண் சடகோபன் இசை கூட்டிச் சொல் அமை பாட்டு ஓர் ஆயிரத்து இப் பத்தால் அம் தாமம்

---

1. ஸ்ரீராமா. அயோத். 1: 7.

2. என்றது, இலங்கையை அடியோடு அழித்தது போன்று, இவளையும் அழியாதே கொள்ளும் என்றவாறு.

3. 'உம்முடைய ஜீவனம்' என்றது, "மணநோக்கம் உண்டானே" (பெரியதிரு. 8. 10: 1.) என்றதனை நோக்கி.

அடி சூட்டலாகும் என்க. "வாட்டம் இல் புகழ் வாமனன்" என்பதனை, "தாவா விழுப்புகழ் மாயோன்" (தொல். பொ. புறம்.) என்றதனோடு ஒப்பிடுக.

ஈடு:—முடிவில், இத் திருவாய்மொழியினைக் கற்கவல்லவர்கள், இவர் பிரார்த்தித்தபடியே நித்தியசூரிகள் திரளிலே போய்ப் புக்குச் சர்வேஸ்வரன் திருவடிகளிலே, [1]"சூட்டு நன்மாலை" ப்படியே திருமாலை சாத்தி அடிமை செய்யப் பெறுவர்கள் என்கிறார்.

வாட்டம் இல் புகழ் வாமனனை - "நோக்கு ஒன்றும் வாட்டேன்மினே" என்றவாறே, 'புறப்பட்டோம்' என்று நாணத்தோடே வந்து தோன்றினன்; இவள் வாட, அவன் புகழாயிற்று வாடுவது. இத் துன்ப நிலையிலே வந்து முகம் காட்டுகையாலே பூர்ணமான கல்யாணகுணங்களையுடையவன் ஆனன் என்கிறாள். தன் உடைமை பெறுகைக்கு இரப்பாளனுமவன் ஆகையாலே 'வாமனன்' என்கிறாள். இசை கூட்டி - பரிமளத்தோடே பூ அலருமாறு போன்று, இசையோடே புணர்ப்புண்டவைகள். வண் சடகோபன் சொல் - [2]"உதார குணத்தையுடையவரும்மனனசீலருமான ஸ்ரீவால்மீகிஇராகவனுடைய கீர்த்தியினை உண்டுபண்ணுகிற இந்தக்காவியத்தைச் சுலோகங்களாலே செய்தார்" என்கிறபடியே, மானச அநுபவத்தோடு அல்லாமல் வாசிகம் ஆக்கி நாட்டை வாழ்வித்த வண்மையர் ஆதலின் 'வண் சடகோபர்' என்கிறார்.

அமை பாட்டு ஓர் ஆயிரத்து - அமைவு - சமைவாய், சொல்லும் பொருளும் நிறைந்திருத்தல். இப் பத்தால் அம் தாமம் அடி சூட்டலாகும் - இப் பத்தையும் கற்கவல்லவர்கட்குச் செவ்வி மாலையைக் கொண்டு அவன் திருவடிகளிலே நித்திய கைங்கரியம் பண்ணப் பெறலாம். ஆயின், நித்திய கைங்கரியத்தைச் செய்வதற்கு, இவர்க்குப் பிறந்த ஆற்றாமை இதனைக் கற்குமவர்கட்கும் உண்டாகவேண்டாவோ? எனின், வேண்டா; தொண்டினைச் செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டு, அது பெருமையாலே போலே காணும் இவ் ஆற்றாமை எல்லாம் இவர்க்குப் பிறந்தன; [3]தமப்பன் செல்வம் புத்திரனுக்குக்

1. "சூட்டு நன் மாலைகள் தூயன ஏந்தி விண்ணோர்கள் நன்னீர், ஆட்டி அம்தூபம் தரா நிற்க" என்பது, திருவிருத். செ. 21.

2. ஸ்ரீராமா. பால. 2: 42.

3. ஆழ்வாருடைய திருவாய்மொழியினைக் கற்ற வழியாலே, ஆழ்வார்க்கு, இதனைக் கற்பவர்கள் மாணாக்கர்கள்ஆதலாகிய புத்திர சம்பந்தத்தைப் பெறுகின்றார்கள்ஆதலின், இங்ஙனம் அருளிச்செய்கிறார்.

கிடைக்கவேண்டியது முறையாமாறுபோன்று, இவ் ஆற்றாமை யால் வந்த கிலேசம் இது கற்றவர்களுக்கு அநுபவிக்க வேண் டாமல் [1]"அடியார்கள் குழாங்களை உடன்கூடுவது என்று கொலோ" என்று இவர் ஆசைப்பட்டபடியே அத்திரளிலே போய்ப்புக்கு அநுபவிக்கப் பெறுவர். (11)

முதற்பாட்டில், அடியார்களுடைய ஆபத்தே செப்பேடாக உதவும் தன்மையினை உடையவன், இவளுடைய ஆபத்துக்கு வந்து உதவுகின்றிலன் என்றாள்; இரண்டாம் பாட்டில், 'விரோதி உண்டே' என்பது இறைவனுக்கு நினைவாக, வாண னுடைய தோள்வலியிலும் வலிதோ இவளுடைய விரோதி? என்றாள்; மூன்றாம் பாட்டில், இப்படிச் செய்ய நினைத்த நீர், முன்பு அச் செயலை எதற்காகச் செய்தீர்? என்றாள்; நான் காம் பாட்டில், அது பொறுக்கமாட்டாமல் அது தன்னையே உபகாரமாகச் சொல்லாநின்றாள் என்றாள்; ஐந்தாம்பாட்டில், அவ்வளவிலும் வாராமையாலே, அருள் இல்லாதவன் என்றாள் திருத் தாயார்; ஆறாம்பாட்டில், அது பொறுக்கமாட்டாமல், கெடுவாய்! ஆகரத்தில் தகவு மறுக்குமோ? அது நம் குறை காண் என்கிறாள் என்றாள்; ஏழாம்பாட்டில், அவன் குணம் இன்மைதன்னையே குணமாகக் கொள்ளும்படி இவளை வஞ்சித் தான் என்றாள்; எட்டாம்பாட்டில், உம்மைத் தஞ்சமாகப் பற்றின இவள் படும் பாடே இது? என்றாள்; ஒன்பதாம் பாட்டில், இவள் பேற்றில் நீர் செய்தருள நினைத்திருக்கிறது என்? என்றாள்; பத்தாம் பாட்டில், எஞ்சி நிற்பது நோக்கு ஒன்றுமேயாயிற்று, இஃது ஒன்றையும் நோக்கிக் கொள்ளீர் என்றாள்; முடிவில், இத் திருவாய்மொழியைக் கற்றார்க்குப் பலம் சொல்லித் தலைக்கட்டினார்.

திருவாய்மொழி நூற்றந்தாதி

ஆடி மகிழ் வானில் அடியார் குழாங்களுடன்
கூடி இன்பம் எய்தாக் குறையதனால்—வாடி மிக
அன்புற்றார் தம்நிலைமை ஆய்ந்துரைக்க மோகித்துத்
துன்புற்றான் மாறன் அந்தோ. (14)

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. திருவாய். 2. 3: 10.

ஐந்தாந் திருவாய்மொழி—“அந்தாமத்தன்பு”

முன்னுரை

—:✻:—

[1]“ கஜேந்திரன் என்னும் யானையானது கரையில் இழுக்கிறது, முதலையானது தண்ணீருக்குள் இழுக்கிறது” [2] என்றதனைப் போன்றது ஒன்றும், மேல் “ ஆடி ஆடி ” என்ற திருவாய்மொழியில் ஆழ்வார்க்குப் பிறந்த துக்கம்; [3] அத் துக்கம் எல்லாம் ஆறும்படியாக, [4]“சேனை முதலியாரால் கொடுக்கப்பட்ட கைலாகை ஏற்றுக்கொள்ளாமலும்” என இவ்வாறாகக் கூறியுள்ளபடியே, மிகுந்த விரைவோடே ஆயுதங்களையும் ஆபரணங்களையும் முறைபிறழத் தரித்துக்கொண்டு, மடுவின் கரையிலே அரைகுலையத் தலைகுலைய வந்து உள்ளே போய்ப் புக்கு, யானையை ஒரு கையாலும் முதலையை ஒரு கையாலும் அணைத்து எடுத்துக்கொண்டு கரையிலே ஏறி, [5]“ திருவாழியாலே முதலையைப் பிளந்தார் ” என்கிறபடியே, குழந்தையின் வாயில் முலையைக் கொடுத்துக் கிரந்தியைச் சிகிச்சை செய்வது போன்று, பெரிய பிராட்டியாரும் தானுமாக, [6]இரண்டுக்கும் நலிவு வாராமல் திருஆழியாலே விடுவித்துச் சாத்தியருளின திருப்பரியட்டத்தின் தலையைச் சுருட்டித் தன் வாயிலே வைத்து அவ் யானையின் புண்வாயை வேதுகொண்டு திருக்கையாலே குளிரத் தீண்டிக்கொண்டு நின்றாற்போலே, இவ் ஆழ்வாரும் [7]“வலங்கொள் புள் உயர்த்தாய்” என்று கூப்

---

1. விஷ்ணுதர்மம். 68.

2. ‘என்றதனைப் போன்ற தொன்றும்’ என்றது, பிரிவால்உண்டாகிய துன்பம் முடிக்கத் தேட, நசையானது முடிக்க ஒட்டாமல் ஜீவிப்பிக்க, இப்படியே, மேல் “ஆடிஆடி” என்ற திருவாய்மொழியில் ஆழ்வாருடைய நிலை சென்றது என்றபடி.

3. ‘அத் துக்கம் எல்லாம் ஆறும்படியாக’ என்றதனை ‘அநுபவித்து அவ் அநுபவத்தால் உண்டான மகிழ்ச்சியின் மிகுதியால் தாம் பெற்ற பேற்றைப் பேசி அநுபவிக்கிறார்’ என்றதனோடு கூட்டி முடிக்க.

4. ஸ்ரீரங்கராஜ ஸ்தவம். உத். 59.

5.

6. ‘இரண்டுக்கும் நலிவு வாராமல்’ என்றதனை ‘முதலைக்கே நலிவு வரும்படி’ என்பதனைக் கொணர்ந்து அதனோடு முடிக்க. திருப்பரியட்டம் - வஸ்திரம்.

7. திருவாய். 2. 4 ; 4.

பிட்ட துக்க ஒலியானது செவிப்பட, 'அழகிதாக நாம் உலகத்தைப் பாதுகாத்தோம், நாம் ஆரானோம்' என்று, பிற்பட்டதனால் உண்டாகும் [1] நாணத்தாலும் பயத்தாலும் கலங்கினவனாய், தன்னுடைய [2] சொரூப ரூப குணங்கள் ஒப்பனை, திவ்ய ஆயுதங்கள் சேர்ந்த சேர்த்தி, இவை எல்லாவற்றோடும் வந்து கலந்து அத்தாலே மகிழ்ந்தவனாய், தான் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் அனைத்தையும் செய்து முடித்தவனாய் இருக்கிற இருப்பை அநுபவித்து, அவ் அநுபவத்தால் உண்டான மகிழ்ச்சியின் மிகுதியால் தாம் பெற்ற பேற்றைப் பேசி அநுபவிக்கிறார்.

—:o:—

155.

அம் தாமத்து அன்புசெய்து என் ஆவி சேர் அம்மானுக்கு
அம்தாமம் வாழ் முடி சங்கு ஆழி நூல் ஆரம் உள;
செந்தாமரைத்தடம் கண்; செங்கனிவாய் செங்கமலம்;
செந்தாமரை [3] அடிகள்; செம்பொன் திரு உடம்பே.

பொ - ரை :—அழகிய பரமபதத்தில் உள்ள நித்தியசூரிகளிடத்தில் செய்யும் அன்பினை என்னிடத்திற் செய்து, என்உயிரோடு கலந்த அம்மானுக்கு, அழகிய மாலையானது வாழ்கிற திருமுடி, சங்கு, சக்கரம், பூணூல், முத்துமாலை முதலிய மாலைகள் ஆகிய இவை எல்லாம் உள்ளன; கண்கள் செந்தாமரைமலர்கள் மலர்ந்திருக்கின்ற தடாகம் போன்றுஉள்ளன; செந்நிறம் வாய்ந்த திருவாயானது செங்கமலமாக இருக்கின்றது; திருவடிகளும் செந்தாமரையாக இருக்கின்றன; திருமேனி சிறந்த பொன்னாகவே இருக்கிறது என்பதாம்.

வி - கு :—தாமம் - இடம்; இங்கே பரமபதத்தினைக் குறித்தது. "தண் தாமம் செய்து" என்றார் முன்னும். (1. 8: 7.) செய்து சேர்ந்த அம்மான் என்க. தாமம் - மாலை. சேர் அம்மான், வாழ்முடி: நிகழ்கால வினைத்தொகைகள்.

இத் திருவாய்மொழி, நாற்சீரடி நான்காய் வருதலின் தரவு கொச்சகக்கலிப்பா எனப்படும்.

---

1. 'நாணத்தாலும் பயத்தாலும்' என்றது, முடிந்து விடுவாரோ? என்ற ஐயம் பயத்திற்குக் காரணம் என்றபடி.

2. "செம்பொன் திருஉடம்பு", "பலபலவேஆபரணம்", "ஆழி நூல்ஆரம்" என்பன போன்ற பாசுரப் பகுதிகளை நோக்கி, 'சொரூப ரூப' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். 'கலந்து' என்றது, "என்னுள் கலந்தவன்" என்றதனை நோக்கி என்க. "மரதகக் குன்றம் ஒக்கும்", "ஆராஅமுதமாய்" என்பன போன்ற பாசுரப் பகுதிகளை நோக்கி 'மகிழ்ச்சியின் மிகுதியால்' என்கிறார்.

3. "அடிக்கள்" என்பது முன் உள்ள பாடம்.

ஈடு:—[1] "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவது என்று கொலோ" என்று இவர் ஆசைப்பட்டபடியே வந்து கலந்தான் என்கிறார்.

அம் தாமத்து அன்பு செய்து - [2] அழகிய தாமத்திலே செய்யக் கூடிய சிநேகத்தை என் பக்கலிலே செய்து. இனி, இதனை "கட்டில் கத்துகிறது" என்பது போன்று, இடவாகு பெயராகக் கொண்டு, பரமபதத்திலுள்ளார் பக்கலிலே செய்யக்கூடிய சிநேகத்தை என் பக்கலிலே செய்து என்று பொருள் கூறலுமாம். இதனால், [3] ஒரு விபூதியில் உள்ளார் பக்கலிலே செய்யக்கூடிய சிநேகத்தை என் ஒருவன் பக்கலிலே செய்தான் என்கிறார்; [4] "முற்றவும் நின்றனன்" என்று, முன்னர் தாமே அருளிச்செய்தார் அன்றோ? என் - அவன் மேல் விழத் தாம் [5] இறாய்த்தமை தோன்றுகிறது. இவர், முன் நிலையினை நினைந்து இறாயாநின்றார்; அதுவே காரணமாக அவன் மேல்விழாநின்றான். கமர் பிளந்த இடத்திலே நீர் பாய்ச்சுவாரைப் போன்று. [6] "உள் உள் ஆவி உலர்ந்து உலர்ந்து" என்கிற ஆவியிலே வந்து சேர்கின்றான் ஆதலின் 'என் ஆவி' என்கிறார். விடாயர் மடுவிலே சேருமாறு போன்று வந்து சேர்கின்றான் என்பார் 'சேர்' என்கிறார். இப்படி மேல்விழுகைக்குக் காரணம் என்? என்னில், அம்மான் ஆகையாலே என்கிறார் மேல்: அம்மானுக்கு-நித்தியவிபூதியில் உள்ளாரைப் போன்று [7] லீலாவிபூதியில் உள்ளார்க்கும் வந்து முகங்காட்டவேண்டும் சம்பந்தத்தை

---

1. திருவாய். 2. 3 : 10.

"ஆழி நூல் ஆரம் உள" என்றதனை நோக்கி ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹத்திலே அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. ஈண்டு அழகாவது, விலக்ஷண போக்ய போக உபகரண போக ஸ்தானங்களாலே வந்த அழகு.

3. ஒரு விபூதி - பரமபதம்.

4. திருவாய். 1. 2 : 6.

5. இறாய்த்தமை - பின்வாங்கினமை.

6. திருவாய். 2. 4. 7.

7. லீலா விபூதி - விளையாட்டுக்குரிய உலகம்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டு உடையார் அவர்"

என்றார் கம்பநாடர்.

உடையவனுக்கு, வகுத்த ஸ்வாமி ஆகையாலே 'அம் தாமத்து அன்பு செய்தான், என் ஆவி சேர்ந்தான்' என்றபடி. [1]இனி, இவரைப் பெற்ற பின்னரே அவன் சர்வேஸ்வரனானான் என்பார் 'அம் தாமத்து அன்பு செய்து என் ஆவி சேர் அம்மான்' என்கிறார் எனலுமாம்.

அம் தாமம் வாழ் முடி சங்கு ஆழி நூல் ஆரம் உள-இதற்கு, '"அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்றுகொலோ" என்று இவர் ஆசைப்பட்டபடியே, நித்தியசூரிகளோடே வந்து கலந்தான்' என்று ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் அருளிச்செய்வர். ஆயின், அவர்களை [2]"ஆழி நூல் ஆரம்" என்று சொல்லுவது என்? என்னில், ஞானவான்களாய் இருக்கச்செய்தே, பாரதந்திரிய சித்திக்காகத் தங்களை இங்ஙனம் அமைத்துக்கொள்ளுகிறார்கள் இத்தனையே. இனி, இதற்கு, எம்பெருமானார், 'இவரோடு கலப்பதற்கு முன்பு இறைவனைப் போன்றே இவையும் ஒளி இழந்தவையாய்ச் சத்தை அற்ற பொருளுக்குச் சமமாய், இவரோடு கலந்தபின்பு ஒளிப்பொருளாகிச் சத்தை பெற்றபடியைச் சொல்லுகிறது' என்று பொருள் அருளிச்செய்வர். ஆயின், இறைவன் ஒளி இழந்தால் இவையும் ஒளி இழக்கவேண்டுமோ? எனின், கற்பகதரு வாடினால் அதில் பூவும் தளிரும் வாடுவன அன்றோ? அம் தாமம் வாழ் முடி-அழகிய மாலையானது முடியிலே சூடப்பட்டதனால் வாழத் தொடங்கிற்று. இனி, வாண் முடி என்பது பாடமாயின், எல்லை அற்ற ஒளிஉருவமான முடி என்று பொருள் கூறுக. அம் தாமம் சங்கு-ஒளிஉருவமான ஸ்ரீபாஞ்சஜன்யம். அம் தாமம் ஆழி-ஒளிஉருவமான திரு ஆழி. நூல்-திருப்பூணூல். ஆரம்-திரு ஆரம். உள-உள்ளவைகள் ஆயின. இவற்றைக் கூறியது நித்தியசூரிகட்கு உபலக்ஷணம். இனி, நித்தியரான இவர்கள் [3]உளராகையாவது என்? என்னில், [4]"அந்த ஸ்ரீமந் நாராயணன் தனியராக

---

1. ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹத்திலே, "அம் தாமம் வாழ் முடி சங்கு ஆழி நூல் ஆரம் உள" என்பதற்கு, இவைகள் உண்டு என்பது பொருள். அதாவது, இவற்றோடே வந்து கலந்தான் என்பது கருத்து.

2. "சூடும் தண் துழாய்" என்றதன் உரையை நோக்குக. (1. 8 : 1.) பக். 251.

எம்பெருமானார் நிர்வாகத்திலே 'உள' என்பதற்குச் சத்தை பெற்றன என்பது பொருள்.

3. உளராகையாவது, இப்போது உளராகையாதல்.

4. மஹோபநிடதம்.

மகிழ்ச்சி அடைந்திலர்" என்கிறபடியே, இவரோடு கலப் பதற்கு முன்னர் அந்த மோக்ஷ உலகமும் இல்லையாய்த் தோன்றுகையாலே என்க.[1]

செந் தாமரைத்தடம் கண்-துன்பமெல்லாம் தீர இவரைப் பார்த்துக்கொண்டு நிற்கிற நிலை. இவரோடே கலந்தபின்பு ஆயிற்றுத் திருக்கண்கள் செவ்விபெற்றதும், மலர்ச்சிபெற்ற தும். [2] ஒரே தன்மையையுடையனவற்றுக்கு எல்லாம் இப்படி ஒரு விகாரம் பிறக்கின்றதே! ஆயின், இது, [3] "தன் சொரூ பத்துக்கு ஒத்த திவ்விய மங்கள விக்கிரகத்தை உடையவன்" என்ற புராணவாக்கியத்தோடு முரணுகாதோ? எனின்,அங்கு, கர்மம் அடியாக வரும் விகாரம் இல்லை என்கிற இத்தனையே யாம். செம் கனி வாய் செம் கமலம் - நூற்றுக் கணக்கான உபசார வார்த்தைகளைச் சொல்லுகிற திரு அதரம் இருக்கிற படி. சிவந்து கனிந்த அதரமானது சிவந்த கமலம் போலே இராநின்றது. செந்தாமரை அடிகள் - நோக்குக்கும் புன் முறுவலுக்கும் தோற்று விழும் திருவடிகள். செம்பொன் திரு உடம்பே - திருவடிகளிலே விழுந்து அநுபவிக்கும் திருமேனி; இவரோடு கலந்தபின்பு திருமேனியில் பிறந்த புகர்தான் [4] "ஓடவைத்த பொன்னின் நிறத்தையுடையவன் இறைவன்" என்னும்படி ஆயிற்று.[5] (1)

---

1. முன்னையது, இயல்பாகவே வாடினர்கள் என்றபடி, பின்னையது, பகவானுடைய அபிப்பிராயத்தாலே அந்த மோக்ஷ உலகமும் இல்லையாய்த் தோன்றிற்று என்றபடி. ஆக, எம்பெருமானார் நிர்வாஹத்திலே 'உள' என் பதற்கு இரண்டு கருத்து உரைத்தபடி.

2. 'ஒரேதன்மையை உடையனவற்றுக்கெல்லாம் இப்படி ஒரு விகாரம் பிறக்கின்றதே!' என்றது, வியாக்கியாதாவின் ஈடுபாடு. ஒரேதன்மையை உடையனவற்றுக் கெல்லாம்' என்றது, திருமுடி முதலான நித்தியசூரிகளை நோக்கி என்க.

3. ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 2 : 1.

4. மனுஸ்மிருதி. 12 : 122.

5. ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹத்தில், "அந்தாமம் வாழ்முடி சங்காழி நூல் ஆரமுளவாய்க் கொண்டு, அந்தாமத்துஅன்பு செய்து என்ஆவிசேர் அம்மான்" என்று சொற்களைக் கூட்டியும், எம்பெருமானார் நிர்வாஹத்தில், 'அந்தாமத்து அன்புசெய்து என் ஆவி சேர்ந்த பின்னர், அந்தாமம் வாழ்முடி சங்காழி நூலார முளவாய், அம்மானும் ஆனவனுக்குச் செந்தாமரைத்தடம் கண் என்று சொற் களைக் கூட்டியும் பொருள் கொள்க.

156.

திருஉடம்பு வான்சுடர்; செந்தாமரை கண்; கை கமலம்;
திருஇடமே மார்வம்; அயன் இடமே கொப்பூழ்;
ஒருவுஇடமும் எந்தை பெருமாற்கு அரனே; ஓ!
ஒருவு இடம் ஒன்று இன்றி என்னுள் கலந்தானுக்கே.

பொ - ரை:—வெற்றிடம் சிறிதும்இல்லாதபடி என்னுள் கலந்தவனை எந்தை பெருமானுக்கு அழகிய திருமேனி சூரியனைப் போன்று இருக்கின்றது; திருக் கண்கள் செந்தாமரை போன்று இருக்கின்றன; திருமகளுக்கு இருப்பிடம் திருமார்பாகும்; பிரமனுடைய இடம் திருஉந்தித்தாமரையாகும்; ஒழிந்த மற்றைஇடம் சிவன் இருக்கும் இடமாகும்.

வி - கு:—வான் சுடர் - சூரியன்; மிக்க ஒளியுமாம். மூன்றாம் அடியிலும் நான்காமடியிலும் ஒருவிடம் என்பதனை ஒருவு இடம் எனப் பிரிக்க. ஒருவுதல் - நீங்குதல். ஒன்று என்பது, சிறிது என்னும் பொருட்டாய் நின்றது. ஓகாரம்: சிறப்புப் பொருளில் வந்தது. கலந்தான்: வினையாலணையும் பெயர்.

ஈடு:—இரண்டாம் பாட்டு. [1] தம்மோடே கலந்த பின்பு அவனுக்குப் பிறந்த புகரைச் சொல்லி, தன் உடம்பைப் பற்றிப் பிரமன் சிவன் முதலியோர்கள் சத்தையாம்படி இருக்கிறவன் தான், என் உடம்பைப் பற்றித் தன் சத்தையாம்படி இரா நின்றான் என்கிறார்.

திரு உடம்பு வான் சுடர்-அணைத்த போதை ஸ்பரிச சுகங் கொண்டு அருளிச்செய்கிறார். [2]"**ஈஸ்வரனுக்கு விக்ரஹம் இல்லை, விபூதி இல்லை' என்கிறவர்கள் முன்பே, ஆப்த தமரான இவர் 'திரு உடம்பு வான் சுடர்' என்னப்பெறுவதே! 'ஈஸ்வரனுக்கு**

---

1. "என்னுவிசேரம்மானுக்கு - செம்பொன் திருஉடம்பு" என்றதிலே நோக்காகத் 'தம்மோடே' என்றும், "அயனிடமே கொப்பூழ், ஒருவிடமும் எந்தை பெருமாற்குஅரனேயோ" என்றதிலே நோக்காகத் 'தன்னுடம்பை' என்றும், "ஒருவிடமொன்றின்றி என்னுள் கலந்தானுக்கே" என்றதிலே நோக்காக 'என்னுடம்பை' என்றும் தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. பலகாலும் விக்கிரஹத்தை வருணிக்கிறபடியை அநுசந்தித்து நம்பிள்ளை ஈடுபடுகிறார் 'ஈஸ்வரனுக்கு' என்று தொடங்கும் வாக்கியத்தால். ஆப்ததமர் - நம்பத் தகுந்தவர்களில் உயர்ந்தவர்.

விக்ரஹம் இல்லை, குணம் இல்லை' என்கிறவர்கள் செய்து வைக்க மாட்டாத பாவம் இல்லை; அவர்களைச் சார்ந்து அதனைக் கேட்க இராதபடி பெருமாள் நமக்குச் செய்த உபகாரம் என்?" என்று அருளிச்செய்வர் **நஞ்சீயர்.** ஆயின், இவ் ஆழ்வார் அருளிச் செய்யின், அது பிரமாணமோ? எனின், மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர் அன்றோ? [1] அவர் அன்றே திருமேனியில் துவக்கு உண்கிறார்? [2] "தனது இச்சையால் மேற்கொள்ளப் பட்ட பல சரீரங்களையுடையவன்" என்கிறபடியே, தனக்கும் விரும்பத் தக்கதாய் இருப்பது ஆதலானும், [3] "மஹாத்மா வான திருவடிக்கு என்னால் கொடுக்கப்பட்டது இவ் ஆலிங் கனமே; இவ் ஆலிங்கனமானது எல்லாவகைச் சொத்தாகவும் உள்ளது" என்கிறபடியே, தான் மதித்தார்க்குக் கொடுப்பதும் திருமேனியே ஆதலானும் '**திருஉடம்பு**' என்கிறார். வான்சுடர் - முதலிலே தேஜோரூபமான திருமேனி மிகவும் ஒளிபெற்றது இவருடைய கலவியாலே. புறம்பு ஒளியாய் உள்ளும் மண்பற்றி இருக்கை அன்றி, நெய் திணுங்கினாற் போன்று ஒளிப்பொரு ளாகவே இருத்தலின் '**வான்சுடர்**' என்கிறார். [4] "பேரொளியின் கூட்டத்தைப் போன்றவன்" என்பது விஷ்ணுபுராணம். [5] இப் படித் திருமேனி பஞ்ச சக்திமயமாய் இருக்கச்செய்தும், "ஆறு குணங்களையுடைய திருமேனி" என்கிறது குணங்களுக்குப் பிரகாசகம் ஆகையைச் சுட்டியேயாம்.

---

1. இதனால், இவர் அநுபவ பரீவாஹ ரூபமான ஸ்ரீஸூக்தியும் பரமப் பிரமாணம் என்றபடி.

2. ஸ்ரீ விஷ்ணுபுரா. 6. 5 : 84.

3. ஸ்ரீராமா. யுத். 1 : 13.

4. ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 9 · 63.

5. இப்படி, திருமேனி பேரொளிப் பிழம்பாய் இருப்பதற்குக் காரணம் பஞ்ச சக்திமயமாக இருத்தல் என்பது நம்பிள்ளையின் திருவுள்ளம். அப்படி யாயின், "ஆறு குணங்களையுடைய திருமேனி" என்பது சேரும்படி என்? என்னும் வினாவிற்கு விடையாக, 'இப்படித் திருமேனி பஞ்ச சக்திமயமாய்' என்று தொடங்கும் வாக்கியத்தை அருளிச்செய்கிறார்.

பஞ்ச சக்திகளாவன :—பரமேஷ்டி, புமான், விஶ்வம், நிவிருத்தி, சர்வம் என்பன. இவ்வுலகம் ஐம்பெரும்பூதங்களால் ஆக்கப்பட்டது போன்று, அவ்வுலகம் பஞ்ச சக்திகளாலாயது என்பர்.

கண் செம் தாமரை - கடாக்ஷத்தாலே [1] வவ்வல் இடப் பெற்றுச் சொல்லுகிற வார்த்தை. கை கமலம் - [2] "மென்மை யான திருக்கை"என்கிறபடியே, தம்மை அணைத்த கை. இவர், ஒரு கால் சொன்னதைப் பலகால் சொல்லுவான் என்? என்னில், முத்துக்கோக்க வல்லவன் முகம்மாறிக் கோத்தவாறே விலைபெறுமாறு போன்று, இவரும் ஒரோமுக பேதத்தாலே மாறிமாறி அநுபவிக்கிறார். திரு இடமே மார்வம் - அக் கையாலே அணைப்பிக்கும் பெரிய பிராட்டியாருக்கு இருப் பிடம் திருமார்வு. அயன் இடமே கொப்பூழ் - பதினான்கு உலகங்களையும் படைத்த பிரமன் திருநாபீகமலத்தை இருப் பிடமாகக் கொண்டிருப்பான். ஒருவு இடமும் எந்தை பெரு மாற்கு அரனே - என் நாயனான சர்வேஸ்வரனுக்கு நீங்கின இடமும் உருத்திரனுக்கு இருப்பிடமாய்இருக்கும். 'ஓரிடம்' என்னாதே, '**ஒருவிடம்**' என்கிறது, ஒருவுதல் - நீங்குதலாய், நீங்கின இடம் என்றபடி. தாமச தேவதை இருப்பிடம்ஆகை யாலே, 'நீங்கின இடம்' என்று விருப்புஅற்ற வார்த்தை இருக் கிறபடி.

ஒருவு இடம் ஒன்று இன்றி என்னுள் கலந்தானுக்கு - என்னோடே வந்து கலக்கிற இடத்தில், நீங்குமிடம் ஒன்றும் இன்றியே வந்து கலந்தான். 'தனக்கே உரியவளான பெரிய பிராட்டியாரைப் போன்று, பிறர்க்கு உரியவர்களான பிரமனுக்கும் சிவனுக்கும் திருமேனியில் இடங்கொடுத்து வைப் பதே!' என்று இந்தச் சீல குணத்தை அநுசந்தித்து [3] வித் தராய் இருந்தார் முன்பு; இப்போது தமக்கு உடம்பு கொடுத்த படி கண்டவாறே 'அது பரத்துவம்' என்று தோற்றி, இது என்ன சீலத்தின் மிகுதி! ஓ! என்பார் 'ஓ' என்கிறார். (2)

157.

என்னுள் கலந்தவன் செங்கனிவாய் செங்கமலம்;
மின்னும் சுடர்மலைக்குக் கண், பாதம், கை கமலம்;
மன்னும் முழு ஏழ் உலகும் வயிற்றின் உள;
தன்னுள் கலவாதது எப்பொருளும் தான் இலையே.

பொ - ரை :—என்னுள் வந்து கலந்தவனாகி மின்னுகின்ற ஒளி மயமான மலைபோன்ற இறைவனுக்கு, சிவந்து கனிந்த திருவதரம் செங்

1. வவ்வலிடல் - குளிர் மிகுதியால் பற்கள் ஒலியுண்டாக விரைந்து தாக்கிக்கொள்ளுதல்.

2. ஹரிவம்சம்.

3. வித்தர் - ஈடுபாடுடையவர். 'முன்பு' என்றது, "ஏறனைப் பூவனை" என்ற திருப்பாசுரத்திலே நோக்கு.

தாமரையைப் போன்றதாகும்; திருக்கண்களும் திருவடிகளும் திருக்கைகளும் தாமரைமலர்களேயாம்; நிலைபெற்ற பதினன்கு உலகங்களும் திருவயிற்றிலே உள்ளன; ஆதலால், இறைவனுகிய தனக்குள் கலவாதனவாகிய எப்பொருள்களும் இல்லை என்றவாறு.

வி - கு :—உலகு: இடவாகுபெயர். மலை என்றது, உருவகம். மூன்ருும் அடியில் 'வயிற்றின் உள' என உடன்பாட்டாற் கூறிய வதனை, நான்காமடியில் 'கலவாதது எப்பொருளும் தான் இலையே' என எதிர்மறை முகத்தால் அருளிச்செய்கிருர். 'கலவாதது எப்பொருளும்' என்பது ஒருமையோடு பன்மை மயங்கி வந்தது.

ஈடு :—மூன்ருும்பாட்டு. [1] தன்னின் வேறுபட்ட எல்லாப் பொருள்களும் தன்னைப்பற்றி உளவாம்படி இருக்கிற சர்வேஸ்வரன், தான் என்னைப்பற்றி உளனய் என்னேடே வந்து கலந்தான் என்கிருர்.

என்னுள் கலந்தவன் - "**அகஸ்தியர்க்கு உடன்பிறந்தவன்**" என்னுமாறு போன்று, நிரூபகம் இருக்கிறபடி. "நாராயணன்", "வாசுதேவன்" என்பன போன்று, "**என்னுள் கலந்தவன்**" என்று காணும் அவனுக்குத் திருநாமம். செம் கனி வாய் செம் கமலம் - சிவந்து கனிந்த வாய் செங்கமலம் போலே இராநின்றது. மின்னும் சுடர் மலைக்கு - [2] "வாட்டம்இல் புகழ் வாமனன்" இவரோடு கலந்த பின்பு வளர்ந்தபடியும், புகர்பெற்றபடியும், தரையிலே கால்பாவித் தரித்தபடியும், திண்மையையுடையனனபடியும் நோக்கி '**மின்னும் சுடர்மலை**' என்கிருர். கண் பாதம் கை கமலம் - முகமறிந்து கோத்தவாறே முத்து விலைபெறுமாறு போன்று, இவரும் திவ்விய அவயவங்களைச் சேர்த்து அநுபவிக்கிருர்.

மன்னும் முழு ஏழ் உலகும் வயிற்றின் உள - [3] பிரவாஹ ரூபத்தாலே நித்தியமான எல்லா உலகங்களும் தன் சங்கல்பத்தைப் பற்றிக் கிடக்கின்றன. தன்னுள் கலவாதது எப்

---

1. "மன்னும் முழுவேழ்உலகும்" என்று தொடங்கி "என்னுள் கலந்தவன்" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை.

2. திருவாய். 2. 4 : 11.

3. 'பிரவாஹ ரூபத்தாலே நித்தியம்' என்றது, கங்கை முதலிய நதிகளில் செல்லும் தண்ணீர் கழிந்துகொண்டே இருக்கவும், மேன்மேலும் தண்ணீர் வந்துகொண்டே இருப்பதனல் வெள்ளம் நிலைத்திருப்பதாகக் காணப்படுதல் போன்று, உயிர்கள் இறந்துகொண்டே இருப்பவும், மேன்மேலும் பிறந்துகொண்டே இருப்பதனல் உலகம் நிலைத்திருப்பதாகக் காணப்படுதல்.

பொருளும் தான் இலையே - தன் திருவுள்ளத்தைப் பற்றுக் கோடாக உடைத்து அன்றிக்கே இருக்கிற பொருள் யாது ஒன்று, அது இல்லை என்ற சொல்லுக்குப் பொருளாகிறது. [1] இனி, தன்னுள் கலவாதது எப் பொருளும் தான் இலையே என்பதற்கு, இறைவன் உருவமாக இல்லாத பொருள்தான் இல்லை என்று பொருள் கூறலுமாம். [2]" இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாகக் காணப்படுகின்றவைகள் எவையோ, அவைஎல்லாம் என்னை அன்றி இல்லை" என்பது ஸ்ரீ கீதை. உலகத்துப் பொருள்கள், இறைவனைப் பற்றாதபோது சத்தை இன்றியே இருக்கிறது - சொரூபத்தாலே; இறைவன், ஆழ்வாரைக் கலவாதபோது சத்தை இன்றியே இருப்பது - காதலாகிய பண்பாலே. (3)

158.

எப்பொருளும் தானாய், மரதகக் குன்றம் ஒக்கும்;
அப்பொழுதைத் தாமரைப்பூக் கண் பாதம்; கை கமலம்;
எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டு ஊழி ஊழிதொறும்
அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆரா அமுதமே.

பொ - ரை :—எத்துணைச் சிறிய நேரமும் நாளும் மாதமும் வருடமும் ஊழி ஊழிகள் தோறும் அவ் அவ் காலங்களில் எனக்குத் தெவிட்டாத அமுதமாக இருக்கின்ற இறைவன், எல்லாப் பொருள்களும் தனக்குள் அடங்கப் பெற்றவனாய் மரகதமலையினை ஒத்திருக்கிறான்; அவனுடைய திருக்கண்கள் அப்பொழுது மலர்ந்த தாமரைப்பூவினை ஒத்திருக்கின்றன; திருவடிகளும் அப்பொழுது மலர்ந்த தாமரைகள் ஆவனவாம்.

வி - கு :—ஆரா அமுதம் குன்றம் ஒக்கும் என்க. அமுதம் சொல்லால் அஃறிணையாதலின், ஒக்கும் என்கிறார்.

ஈடு :—நான்காம்பாட்டு. நீர் ஒருகால் கூறியதை ஒன்பதின் கால் கூறி இங்ஙனே கிடந்து படுகிறது என்? என்ன, நான் அது தவிர்கிறேன்; நீங்கள் அவ் விஷயத்தை ஒருகால் இருந்தபடியே எப்பொழுதும் இருக்கும்படி செய்யவல்லீர்களோ? என்கிறார்.

---

1. 'தன்னுள் கலவாதது எப் பொருளும் தான் இலையே' என்பதற்கு இரண்டு கருத்து அருளிச்செய்கிறார். முன்னையது, சங்கல்பாஸ்ரிதம்; உள் - உள்ளம். இரண்டாவது, சொரூபாஸ்ரிதம்; தன்னுள் - தன்னிடத்தில். ஸ்ரீ கீதையின் சுலோகம், சொரூபாஸ்ரிதத்திற்கு மேற்கோள்.

2. ஸ்ரீ கீதை. 10 : 39.

எப் பொருளும் தானாய் - தன்னில் வேறாக நின்ற எல்லாப் பொருள்களும் 'தான்' என்ற சொல்லுக்குள்ளே [1] பிரகாரமாம்படி தான் பிரகாரியாய். இதனால், ஸ்வாதீனம் அல்லாதது ஒரு பொருளைப் பெற்றுத்தான் இப் பாடு படுகிறானோ? என்கிறார். மரதகம் குன்றம் ஒக்கும் - [2] மேல், உலகமே உருவமாய் நிற்கும் நிலை சொல்லிற்று; இங்கு, அசாதாரண விக்கிரஹம்தன்னையே சொல்லுகிறது. [3] மேல், "மின்னும் சுடர்" என்று தம்முடைய கலவியால் வந்த புகரைச் சொல்லிற்று; அப் புகருக்கு இருப்பிடமான அசாதாரண விக்கிரஹத்தைச் சொல்லுகிறது இங்கு. கண் - [4] பந்தத்தை விளைக்கும் கண். பாதம்-பந்தம் அறிந்தால் அநுபவிக்க இழியும் துறை. ஆகிய இவை, அப்பொழுதை தாமரைப் பூ - 'மேல், தாமரையை ஒப்பாகச் சொன்ன இடம் தப்பச் சொன்னோம்' என்று அழித்துச் சூளுறவு செய்கிறார். கேவலம் தாமரையை ஒப்பாகச் சொல்லில் செவ்வி அழிந்த சமயத்திலும் ஒப்பாகத் தொடங்குமே; ஆதலால், [5] அப்போது அலர்ந்த செவ்வியையுடைத்தான தாமரையை ஒப்பனவாம். கை கமலம் - தம்முடைய ஸ்பரிசத்தால் செவ்வி பெற்றபடி. கை அப்போது அலர்ந்த கமலம் போலே இருக்கும்.

---

1. பிரகாரம் - விசேஷணம்; அடை. பிரகாரி - விசேஷியம்; அடைகொளி. 'இப்பாடு' என்றது, தம்மை அடைந்த பின்னர்த் திருமேனியிற் பிறந்த புகரை நோக்கி.

2. 'மேல்' என்றது, "தன்னுள் கலவாதது எப்பொருளும் தான் இலையே" என்றதனைக் குறித்தது. "எப்பொருளும் தானாய்" என்ற பின்பு "மரதகக் குன்றம்" என்று சேர்த்து அநுபவிக்கிறார் என்று கருத்து.

3. "மின்னும் சுடர்மலை" என்றவர், இப் பாசுரத்தில் "மரதகக் குன்றம்" என்று கூறுதல், கூறியது கூறல் ஆகாமைக்குக் காரணம் காட்டுகிறார், 'மேல், "மின்னும் சுடர்"' என்று தொடங்கி.

4. 'பந்தத்தை விளைக்கும் கண்' என்றது, உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள ஒன்பது வகையான சம்பந்தத்தைப் பார்வை மாத்திரத்திலேயே உண்டாக்குகிற கண் என்றபடி.

5. இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்கு எளிதே யாரும்
செப்பருங் குணத்து இராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு; பின்பு அவ் வாசகம் உரைக்கக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது அம்மா.

என்ற செய்யுள் இங்கு ஒப்புநோக்குக. (கம்பரா. கைகேசி சூழ். 168.)

எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டு ஊழி ஊழிதொறும் அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆரா அமுதம் - [1] கலை காஷ்டை முதலியவைகளாலும் வேறுபடுத்த ஒண்ணாத மிகச் சிறிய காலம் அநுபவிப்பது, ஒரு நாள் அநுபவிப்பது, ஒரு மாதம் அநுபவிப்பது, ஓர் ஆண்டு அநுபவிப்பது, கல்பந் தோறும் கல்பந்தோறும் அநுபவிப்பது, இப்படிக் காலமெல் லாம் அநுபவியாநின்றாலும், அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆரா அமுதமேயாம். அதாவது - [2] முன் கணத்தில் அநு பவம் போல் அல்ல ஆயிற்று அடுத்த கணத்தில் அநுபவம் இருப்பது என்றபடி. ஒரு பொருளைப் பற்றித் தொடர்ச்சியாக உண்டாகின்ற பலவகை அநுபவங்களில் காலம் தேசம் முதலியவைகளின் கூட்டரவுகளால் வருவது ஒரு பேதம் உண்டு ஞானத்திற்கு; இங்கு [3] விஷயாந்தரனே வேறுபடு கின்றது என்பதாம். (4)

159.

ஆரா அமுதமாய் அல்ஆவியுள் கலந்த
காரார் கருமுகில்போல் என்அம்மான் கண்ணனுக்கு
நேரா வாய் செம்பவளம்; கண் பாதம் கை கமலம்;
பேராரம் நீண்முடி நாண் பின்னும் இழை பலவே.

பொ - ரை :—உண்ணத் தெவிட்டாத அமுதமாய், ஒரு பொரு ளாக மதித்தற்குத் தகுதிஇல்லாத என்னுடைய உயிருள் கலந்த, கார் காலத்தில் எழுகின்ற கரியமேகம் போன்ற, என் தலைவனாகிய கண்ண பிரானுடைய திருஅதரத்தினைச் செம்பவளம் ஒப்பாகமாட்டாது; திருக் கண்கள் திருவடிகள் திருக் கரங்களாகிய இவற்றைத் தாமரைமலர்கள் ஒப்பாகமாட்டா ; பெரிய ஆரமும் நீண்ட திருமுடியும் அரைநாணும் மற்றுமுள்ள ஆபரணங்களும் மேலும் பலபலவேயாக இருக்கின்றன.

வி - கு :—கார் கருமை ; காலத்திற்கு ஆயிற்று : இருமடியாகு பெயர். கண்ணனுக்கு, ஆறாம் வேற்றுமையில் நான்காவது மயங்கிய மயக்கம். 'நேரா' என்னும் பன்மைப் பயனிலைக்கு, பவளம் கமலம்

1. கலை காஷ்டை என்பன, மிகச் சிறிய காலஅளவுகள் ; பதினெட்டு முறை இமைகொட்டுகிற காலஅளவு ஒரு காஷ்டை எனப்படும் ; காஷ்டை முப்பது கொண்டது ஒரு கலை எனப்படும்.

2. 'முன் கணத்தில்' என்று தொடங்கும் வாக்கியம், "அப்பொழு தைக்கு அப்பொழுது" என்ற அகரச் சுட்டின் பொருளை விளக்க வந்தது.

3. 'விஷயாந்தானே வேறுபடுகின்றது' என்றது, இனிமையின் மிகுதி யினாலே புதியதாய்த் தோன்றுகை.

என்னும் இரண்டனையும் எழுவாயாகக் கொள்க. இழைக்கப்படுதலின், ஆபரணம் இழையாயிற்று ; இழைத்தல்-செய்தல். அமுதமாய்க் கலந்த என் அம்மான் கண்ணன் என்க.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [1] இத்தனை போதும் தாமரையைச் சிக்ஷித்து உபமானமாகச் சொல்லிப் போந்தார்; விஷயத்திலே இறங்கிப் பார்த்தவாறே நேர்கொடு நேரே உபமானமாய் நின்றது இல்லை ; அவற்றைக் கழித்து உபமேயத்தையே சொல்லுகிறார்.

ஆரா அமுதமாய்-எப்போதும் உண்ணாநின்றாலும் மேன்மேலென விருப்பத்தை விளைக்கும் அமிருதம் போன்று எல்லை இல்லாத இனியனாய். அல் ஆவி-இப்படி, [2]போக்யம் குறைவற்றால் போக்தாக்களும் அதற்குத் தகுதியாகப் பெற்றதோ? எனின், ஒரு பொருளாக எண்ண ஒண்ணாத என்னுடைய உயிரோடே அன்றோ வந்து கலந்தது; தன்னையும் அறிந்திலன், என்னையும் அறிந்திலன் என்பதாம். அசித்தைக் காட்டிலும் தம்மைக் குறைய நினைத்தபடியாலே 'அல் ஆவி' என்கிறார். அசித்திற்கு [3] இழவு இல்லையே, தன் சொரூபத்தில் கிடந்ததே; அறிவுள்ள பொருளாய்இருந்தும் ஞானபலம் இல்லாமையாலே அசித்தைக் காட்டிலும் தம்மைக் குறைய நினைத்திருக்கிறார். ஆவி உள் கலந்த - பெருமக்கள் உள்ளவரான நித்தியசூரிகள் அளவில் கலக்குமாறு போன்று தான் கலந்தானோ? என்னை ஆரா அமுதாக நினைத்து, என் அளவாகத் தன்னை நினைத்து அன்றோ கலந்தது. இனி, உள் கலந்த என்பதற்கு "ஒரே பொருள்" என்னலாம்படி கலந்தான் எனலுமாம்.

அவன் இப்படிக் கலந்தமையை நீர் என்கொண்டு அறிந்தது? என்னில், வடிவிலே, [4]தொடைகொண்டேன் என்கிறார்

1. மேல், உபமானமான தாமரையைச் சிக்ஷித்து ஒப்பாகச் சொல்லிப் போந்தவர், இங்கு "நேராவாம்" என்று சொன்னதற்குப் பிரயோஜனம் அருளிச்செய்கிறார் 'இத்தனைபோதும்' என்று தொடங்கி. சிக்ஷித்தல் - சிறிது விசேஷணமிட்டுக் கூறுதல். மூன்றாம் அடியின் பொருளை நோக்கி 'உபமேயத்தையே சொல்லுகிறார்' என்கிறார்.

2. போக்யம் - இனியபொருள். போக்தா - அநுபவிக்கிறவன்.

3. 'இழவு இல்லையே' என்றது, அசித்துக்கு 'இழந்தோம்' என்னும் அறிவு இல்லையே என்றபடி. 'தன் சொரூபத்தில் கிடந்ததே' என்றது, வேறு பொருள் என்று நினைத்தற்கு இடமில்லாமலே கிடந்தது என்றபடி. 'ஞானபலமில்லாமையாலே' என்றது, பகவானுடைய சேர்க்கைக்குத் தகுதி அற்றவன் என்னும் ஞானபல மில்லாமையாலே என்றவாறு.

4. தொடைகொண்டேன் - கிரஹித்தேன் ; அறிந்தேன்.

மேல்: [1] காரார் கருமுகில் போல்-என்னுடைய கலவி 'பெரும் பேறு' என்னும்இடம் தன்வடிவிலே தோன்ற இராநின்றான். கார்காலத்தில் எழுந்த கருமுகில் போல் என்னுதல்; கார் என்று கருமையாய், கருமை மிக்க முகில் என்னுதல். இனி, இவ் வடிவையுடையவன் அன்றோ என்னோடே வந்து கலந்தான் என்கிறார் எனலுமாம். என் அம்மான் கண்ணனுக்கு - அவ் வடிவழகாலே என்னை எழுதிக்கொண்ட கிருஷ்ணனுக்கு. செம் பவளம் வாய் நேரா - சிவந்த பவளம் திரு அதரத்துக்கு ஒப்பா காது. பவளமாயின் சிவந்தன்றோ இருப்பது, செம்பவளம் என்றது என் கருதி? எனின், [2] பவளத்தை ஸ்படிகத்தின் தானத்திலேயே வைத்து அதற்குமேல் சிவந்த பவளத்தை உண்டாக்கினால், அப்படி உண்டாக்கிய சிவந்த பவளமும் [3] சாதியாக ஒப்பாகாது என்பதனைத் தெரிவித்தபடி.

கண் பாதம் கை கமலம் நேரா - குளிர நோக்கின கண், நோக்குக்குத் தோற்று விழும் திருவடிகள், திருவடிகளிலே விழுந்தாரை எடுத்து அணைக்கும் கை; இவற்றுக்குத் தாமரைச் சாதியாக ஒப்பு ஆகா. பேர் ஆரம் - [4] "பெரிய வரை மார்பிற் பேர்ஆரம்" என்கிறபடியே, திருக்கழுத்துக்கு இருமடி இட்டுச் சாத்த வேண்டும்படியான ஆரம். நீள் முடி - ஆதிராஜ்ய சூசக மான திருமுடி. நாண் - [5]விடு நாண். பின்னும் இழை பலவே - அநுபவித்துப் போம்இத்தனைஒழிய, என்னாற் சொல்லித் தலைக் கட்டப்போமோ? முடியாது என்றபடி. (5)

---

1. "கார் ஆர் கருமுகில்போல்" என்பதற்கு, இருபொருள் அருளிச் செய்கிறார். ஒன்று, என்னுடைய சேர்க்கையாலே காரார் கருமுகில் ஆனான் என்பது; மற்றொன்று, காரார் கருமுகில் போன்றவன் என்னுடன் கலந்தான் என்பது.

2. இதனை, 'செஞ்ஞாயிறு' என்பது போன்று இயற்கையடைமொழி யாகக் கோடலும் அமையும்.

"இனச்சுட்டு இல்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்காறு அல்ல செய்யு ளாறே"

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

3. 'சாதியாக ஒப்பாகா' என்றது, சாதிக்குள்ளே ஒரு பொருளும் ஒப் பாகாது என்றபடி.

4. மூன்றாந் திருவந். 55.

5. விடுநாண் - அரைஞாண்.

160.

பலபலவே ஆபரணம்; பேரும் பலபலவே;
பலபலவே சோதி வடிவு; பண்பு எண்ணில்
பலபல கண்டு உண்டு கேட்டு உற்று மோந்து இன்பம் ;
பலபலவே ஞானமும்; பாம்பணை மேலாற்கேயோ !

பொ - ரை :—பாம்பணையின்மேல் அறிதுயில் செய்கின்ற இறைவனுடைய பண்புகளை எண்ணுமிடத்து ஆபரணங்கள் பல பலவாம்; பேரும் பல பலவாம்; ஒளிஉருவமான திருமேனியும் பல பலவாம்; கண்டு உண்டு கேட்டு உற்று மோந்து அநுபவிக்கிற இன்பங்களும் பல பலவாம்; ஞானமும் பல பலவாம் என்றவாறு.

வி - கு :—கண்டு உண்டு கேட்டு உற்று மோந்து என்பது உம்மைத் தொகை. "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்" என்றார் திருவள்ளுவர். "உண்டு கேட்டு உற்று மோந்துப் பார்க்கும் ஐவர்" என்றார் திவ்யகவி. பாம்பணை மேலாற்கு என்ற தொடர்மொழி, ஒரே காலத்தில் ஐம்பொறிகட்கும் ஒருசேர இன்பத்தை ஊட்டவல்ல பரிகரத்தைஉடையவன் இறைவன் என்ற கருத்தை உட்கொண்டு நிற்கிறது. ஏகாரம் : ஈற்றசை. ஓகாரம் : சிறப்புப் பொருளின்கண் வந்தது.

ஈடு :—ஆறும் பாட்டு. என்னுடனே கலந்து [1] ஆற்றானுய்ப் பல சரீரங்களை மேற்கொண்டு என்னை அநுபவியாநின்றான் என்கிறார்.

பல பலவே ஆபரணம் - சாதிபேதமும் வடிவுபேதமும் இருக்கிறபடி. திருக் கைக்குச் சாத்துமவை என்றால் பல; அவை தாம், [2] 'இடைச்சரி, கடைச்சரி, என்பன போல்வன. பேரும் பல பலவே - அநுபவ சமயத்தில் திருப்பெயர்களைச் சொல்லுதற்கு இழிந்த இடமெல்லாம் துறை; அவைதாம், [3] சீலப் பேர், வீரப்பேர் என்பன போல்வன. பல பலவே சோதிவடிவு- [4] அத் திருப் பெயர்கள் மூலமாகக் காணும் வடிவுகளும் பல; இறைவன் பிரகிருதி சம்பந்தம்இல்லாத தனது திருமேனியை, மற்றைச் சாதிகட்குச் சமமாக ஆக்குகிறான் ஆகையாலே எல்

1. 'ஆற்றானுய்' என்றது, ஒருசரீரத்தாலே அநுபவிக்க விருப்பம் இல்லாதவனாகி என்றபடி.

2. சரி - வளையம். இடைச்சரி - தோள்வளை முதலானவை. கடைச்சரி - முன்கைவளை.

3. சீலப்பேர் - கோவிந்தன் என்பது போன்ற திருப்பெயர்கள். வீரப் பேர் - மதுசூதனன் என்பது போன்ற திருப்பெயர்கள்.

4. அவதாரங்களில் கொள்ளும் வடிவினைக் குறித்தது.

லாம் சோதி வடிவாயே இருக்குமாதலின் '**சோதி வடிவு**' என்கிறார். இனி, [1] **சௌபரியைப்** போலே பல வடிவு கொண்டு இவரை அநுபவிக்கிறான் ஆதலின் '**பல பலவே வடிவு**' என்கிறார் எனலுமாம். முக்தன் தன்னை யநுபவிக்கும்போது படுமாறு போன்று, தான் என்னை அநுபவிக்கப் பல வடிவு கொள்ளாநின்றான் என்பதனைத் தெரிவித்தபடி.

பண்பு எண்ணில் - தன்மைகளை நினைக்குமிடத்து. கண்டு உண்டு கேட்டு உற்று மோந்து உண்டாகக் கூடியதான ஐம்பொறி இன்பங்களும் பலப்பல ; என்றது, காண்பனவும், உண்பனவும், கேட்பனவும், தொடுவனவும், முகர்வனவுமான இவைகள் பலப்பல என்பதாம். பல பலவே ஞானமும் - ஐம்புலன்களைச் சொல்லுதல் ; அவற்றை அறிகைக்குக் கருவியான ஞானங்களைச் சொல்லுதல். ஆயின், [2] ஞானம் பல உண்டோ? எனின், விஷயங்கள்தோறும் ஞானமும் வேறுபடும் அன்றோ? [3] ஆக, இவற்றால், தன்னின் வேறுபட்டவற்றை எல்லாம் விஷயமாக உடையனாய், அவற்றை எல்லாம் அறியவும் வல்லனாய், அவற்றை எல்லாம் அநுபவித்தால் வரும் ஏற்றத்தையும் உடையவனாய் இருக்கும் இருப்பைத் தெரிவித்தபடி. பாம்பணை மேலாற்கேயோ - இவை எல்லாம் ஒரு விஷயத்தில் இருக்க அநுபவிப்பான் என்னுமிடத்திற்கு உதாஹரணம் காட்டுகிறார். பாம்பு தொடுதற்கு மென்மையாக இருக்கும், நறுநாற்றத்ததாய் இருக்கும், கண்ணுக்கு இனியதாக இருக்கும். இம்மூன்றும், ஏனை இரண்டற்கும் உபலக்ஷணம்.

பாம்பணை மேலாற்கு, பண்பு எண்ணில், பலபலவே ஆபரணம்; பேரும் பலபலவே; சோதி வடிவு பலபலவே; கண்டு உண்டு கேட்டு உற்று மோந்து இன்பம் பலபலவே; ஞானமும் பலபலவே ; ஓ என்று கூட்டி முடிக்க. (6)

---

1. அவதாரிகை - திருமகள் கேள்வன் ஒன்று. பக். 42. காண்க.

2. 'ஞானம் பல உண்டோ' என்றது, தர்மபூத ஞானம் ஒன்றேயன்றோ? பல உண்டோ? என்றபடி. விஷயம் காரணமாக வரும் பேதம் உண்டு என்றவாறு.

3. "பலபல கண்டுண்டு கேட்டுற்று மோந்தின்பம், பலபலவே ஞானமும்" என்றதற்குக் கூறிய பொருள்களை எல்லாம் கூட்டி நிகமிக்கிறார், 'ஆக, இவற்றால்' என்று தொடங்கி. ஆக, இத்தால், இவரோடே கலந்த பின்பு சப்தாதிவிஷய அநுபவத்தால் உண்டான இன்பமெல்லாம் உண்டாயிற்று என்றபடி.

161.

பாம்பணைமேற் பாற்கடலுள் பள்ளி அமர்ந்ததுவும்
காம்பணைதோள் பின்னைக்காய் ஏறுடன் ஏழ் செற்றதுவும்
தேம்பணைய சோலை மராமரம் ஏழ் எய்ததுவும்
பூம்பிணைய தண் துழாய்ப் பொன் முடி அம் போர் ஏறே.

பொ - ரை :— திருப்பாற்கடலில் பாம்பாகிய படுக்கையின்மேல் அறிதுயில் பொருந்தியதும், மூங்கில் போன்ற தோள்களையுடைய நப்பின்னைப்பிராட்டிக்காக இடபங்கள் ஏழனையும் அழித்ததும், தேன் பொருந்திய கிளைகளையுடைய சோலையாகத் தழைத்த மராமரங்கள் ஏழனையும் ஓர் அம்பால் தொளை செய்ததும், அழகினையுடைய கட்டப்பட்ட குளிர்ந்த திருத்துழாயினை அணிந்த பொன்னாற் செய்யப்பட்ட திருமுடியினையுடைய, அழகிய போரைச் செய்கிற இடபமேயாம் என்றவாறு.

வி - கு :— அமர்ந்ததுவும், செற்றதுவும், எய்ததுவும் என்பன: உகரம் கெடாது உடம்படுமெய் பெற்று வந்தன. "ஆறன் ஒருமைக்கு அதுவுமாதுவும்", "தன்முகமாகத் தான் அழைப்பதுவே" என்றார் நன்னூலார். காம்புஅணை என்பதில் அணை: உவமைஉருபு. 'ஏறு' என்பது சொல்லால் அஃறிணையாதலின் 'அமர்ந்தது' என அஃறிணை முடிபு கொடுத்து ஓதினார்.

ஈடு :— ஏழாம் பாட்டு. அயர்வறும் அமரர்கள் அதிபதியாக இருந்தும், திருப்பாற்கடலிலே திருக்கண்வளர்ந்தருளி, இராமன் கிருஷ்ணன் முதலிய அவதாரங்களைச் செய்தன எல்லாம் எனக்காக அன்றோ என்கிறார்.

பாற்கடலுள் பாம்பு அணைமேல் பள்ளி அமர்ந்ததுவும் - துன்பப்படுகின்றவர்களைப் பாதுகாத்தற்காகத் திருப்பாற்கடலிலே தண்ணீரானது உறுத்தாமல் இருக்கும் பொருட்டுக் குளிர்த்தி வாசனை மென்மைகளை உடையனான திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளியதும். காம்பு அணை தோள் பின்னைக்காய் ஏறு ஏழ் உடன் செற்றதுவும் - சுற்றுடைமைக்கும் செவ்வைக்கும் மூங்கில் போலே இருந்துள்ள தோள் அழகையுடைய நப்பின்னைப் பிராட்டியின் கலவிக்குத் தடையாக இருந்த இடபங்கள் ஏழையும் ஒரு காலே [1] ஊட்டியாக நெரித்துப் பொகட்டதும்.

1. ஊட்டி - கழுத்து; குரல்வளை.

தேன் பணைய சோலை மராமரம் ஏழ் எய்ததுவும் - மஹாராஜர் 'நீர் வாலியைக் கொல்லமாட்டீர்' என்ன, அவரை நம்பும்படி செய்வதற்காக, தேனையுடைத்தாய்ப் பணைத்து அடிகண்டு இலக்குக் குறிக்க ஒண்ணாதபடியாய் இருந்த மராமரங்கள்ஏழையும் எய்ததும். பூம் பிணைய தண் துழாய்ப் பொன் முடி அம் போர் ஏறே - நல்ல தொடையை உடைத்தான திருத்துழாய் மாலையாலே அலங்கரிக்கப்பட்டவனாய், பேரரசு எனக் குறிக்கும் திரு முடியையுடையனாய், இவ் அழகுதன்னை நித்தியசூரிகளை அநுபவிப்பித்து அதனால் வந்த மேன்மை தோன்ற அழகிய தாய்ப் போருக்குப் புறப்படுகின்ற இடபம் போலே, [1]மேனாணித்திருக்கிற இருப்பு. இனி, பூம் பிணைய என்பதற்கு, பூக்களோடு கட்டப்பட்ட என்று பொருள் கூறலுமாம்.

பொன் முடி அம் போர் ஏறு பள்ளி அமர்ந்ததுவும், ஏறு செற்றதுவும், மராமரம் எய்ததுவும் ஆன இவை யெல்லாம், எனக்காகவே யாம் என ஒரு சொற்றொடர் கூட்டிப் பொருள் முடிக்க. (7)

162.

பொன்முடி அம்போர் ஏற்றை எம்மானை நால்தடந்தோள்
தன்முடிவு ஒன்று இல்லாத தண்துழாய் மாலையனை
என்முடிவு காணாதே என்னுள் கலந்தானைச்
சொன்முடிவு காணேன் நான்; சொல்லுவது என்? சொல்லீரே.

பொ-ரை:— ஒளிபொருந்திய முடியைத் தரித்த போர்ஏறு போன்றவனை, என் நாயனை, நான்காகப் பருத்த வலிய தோள்களையுடைய, தன் பெருமையின் எல்லைக்கு முடிவு ஒன்று இல்லாத, குளிர்ந்த திருத்துழாய் மாலையினைத் தரித்த இறைவனை, என்னுடைய தாழ்ச்சியின் முடிவினைப் பாராமல் என்னுள் வந்து கலந்தவனைப் பாசுர மிட்டுச் சொல்லுவதற்கு ஒரு வகையினைக் காணேன் ; சொல்லுதல் எப்படி? சொல்லுங்கோள் என்றவாறு.

வி - கு :— நான்கு தடம் - நால்தடம். சொல்லுவது - தொழிற்பெயர்.

ஈடு:— எட்டாம் பாட்டு. அயர்வறும் அமரர்கள் அதிபதியாக இருந்தும் என் தண்மையைப் பாராது, என்னோடே வந்து கலந்த இம் மகா குணத்தை என்னால் பேசி முடியாது என்கிறார்.

1. மேனாணித்து - செருக்கோடு.

பொன் முடி அம் போர் ஏற்றை - [1] உபயவிபூதிகட்கும் கவித்த முடியினை உடையனாய், அதனால் வந்த இறைமைத் தன்மையின் [2] உறைப்புத் தோன்ற இருக்கின்றவனை. எம்மானை - தனது இறைமைத் தன்மையின் எல்லையினைக் காட்டி என்னை அடிமையின் எல்லையில் நிறுத்தினவனை. நான்கு தடம் தோள் தன் முடிவு ஒன்று இல்லாத தண் துழாய் மாலையனை - நான்காய்ப் பணைத்திருந்துள்ள தோள்களை உடையனாய், தன்னைப் பேசப் புக்கால் வேதங்களும் எல்லை காணமாட்டாது [3] "வாக்கிற்கு அப்பாற்பட்டவனே" என்று மீளும்படி இருப்பானாய் இருக்கின்ற தண்துழாய் மாலையனை. எல்லை காணவொண்ணாத பரம்பொருளுக்குத் திருத்துழாய்மாலை அடையாளம் ஆதலின், '**தன் முடிவுஒன்று இல்லாத தண்துழாய் மாலையனை**' என்கிறார்.

என் முடிவு காணாதே என்னுள் கலந்தானை-[4]"அறியாதவராக இருக்கின்றார்" என்கிறபடியே, என் தண்மை பாராதே கண்ணைச் [5] செம்பளித்து வந்து கலந்தான். இறைவன் பக்கல் நன்மைகள் எல்லை காண ஒண்ணாதனவாக இருப்பன போன்று, இவர் பக்கல் தீமைகள் எல்லை காண ஒண்ணாதனவாக இருக்கின்றபடி. இனி, இதற்கு, "ஆடி ஆடி" என்ற திருப்பதிகத்தில் பிரிவுத் துன்பத்தாலே நான் முடியப் புக, அது காணமாட்டாது என்னோடே வந்து கலந்தானை என்று உரைத்தலுமாம். சொல் முடிவு காணேன் நான் - என்னோடே வந்து கலந்த ஒரு குணத்தையும் சொல்லப் புகில், ஆனந்த குணம் ஒன்றையும் சொல்லப்புக்க வேதம் பட்டது படும் இத்தனை. இனி, இத் தொடர்மொழிக்கு, அவன் என்னை அநுபவிப்பிக்க, அத்தால் எனக்குப் பிறந்த ரசம் அநுபவித்துவிடும் அத்தனை அல்லாது, பாசுரமிட்டுச் சொல்லிமுடியாது என்று கூறலுமாம். சொல்லுவது என் சொல்லீரே - மற்றை

---

1. உபயவிபூதி - இவ்வுலகமும் மோக்ஷஉலகமுமான இரண்டு உலகங்கள். உபயம் - இரண்டு. விபூதி - உலகம்; செல்வம்.

2. உறைப்பு - திண்மை.

3. தைத்திரீய ஆனந். 9 : 1.

4. ஸ்ரீ சஹஸ்ரநாமம்.

5. செம்பளித்து - கண்ணை மூடிக்கொண்டு.
"கண்செம் பளித்திருந்து கைத்துருத்தி நீர்தூவி
அம்புதத்தைப் பார்த்திருப்பான் அற்று" (ஞானசாரம். 33.)

விஷயங்களை அநுபவித்து அவற்றுக்குப் பாசுரமிட்டுச் சொன்னவர்களாக இருக்கின்ற நீங்கள்தாம் சொல்ல வல்லீர்களோ? என்றபடி. (8)

163.

சொல்லீர் என் அம்மானை; என் ஆவி ஆவிதனை;
எல்லை இல் சீர் என் கரு மாணிக்கச் சுடரை:
நல்ல அமுதம், பெறற்கு அரிய வீடுமாய்,
அல்லி மலர் விரை ஒத்து ஆணல்லன்; பெண் அல்லனே.

பொ - ரை:—என் தலைவனை, எனது உயிர்க்குள் உயிராக இருக்கின்றவனை, முடிவில்லாத மிக்க புகழினையுடைய, என்னுடைய கரு மாணிக்கம் போன்ற ஒளியுருவனை, எல்லோரும் சேர்ந்து சொல்லலாமாகில் சொல்லுங்கள்; சிறந்த அமுதம் போன்று இனியனாய், எளிதில் பெறுதற்கரிய மோக்ஷ உலகிற்குத் தலைவனாய், தாமரை மலரின் வாசனையினை ஒத்தவனாய், ஆணும் அல்லாதவனாய்ப் பெண்ணும் அல்லாதவனுமாய் இருக்கின்றான் அவ் இறைவன்.

வி - கு:—சொல்லீர்; உடன்பாட்டில் வந்தது. "எனது ஆவி ஆவியும் நீ" என்றார் முன்னும். நல்ல அமுதம் என்பதில் நல்ல என்பது, இனம் விலக்க வந்தது. ஆய், ஒத்து என்னும் வினையெச்சங்கள், அல்லன் என்னும் குறிப்புமுற்றுடன் முடிந்தன. ஆய் என்பதனை அமுதம் என்பதனோடும் கூட்டுக. அல்லி மலர் - தாமரை மலர்.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு. [1] "பாசுரம் இல்லை" என்று, கைவாங்கமாட்டாரே; சம்சாரிகளைப் பார்த்து, என் நாயனை சர்வேஸ்வரனை நீங்கள் அனைவரும் கூடியாகிலும் சொல்ல வல்லீர்களோ? என்கிறார்.

சொல்லீர் என் அம்மானை - சிற்றின்பங்களை அநுபவித்து அவற்றிற்குப் பாசுரமிட்டுச் சொல்லி இருக்கிற நீங்களாகிலும் சொல்ல வல்லீர்களோ? என் அம்மானை - தன்னுடைய குணங்களாலும் செயல்களாலும் என்னை முறையிலே நிறுத்தினவனை. என் ஆவி ஆவிதனை - என் ஆத்மாவுக்குள் ஆத்மாவாக உள்ளவனை. எல்லை இல் சீர் [2] கருமாணிக்கச் சுடரை - அளவு இறந்த நற்குணங்களையும் நீலமணிபோன்று குளிர்ந்த

1. மேல், "சொல்லுவதென் சொல்லீர்" என்றவர், ஈண்டுச் "சொல்லீர்" என்கிறது என்? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் "பாசுரமில்லை" என்று தொடங்கி. நாயன் - தலைவன்; இச்சொல்வழக்கு, வியாக்கியானங்களில் பலஇடங்களிலும் பயிலுதல் காணலாம்.

2. "கருமாணிக்கச்சுடர்" என்றது, ஈண்டு விக்கிரகத்தைக் குறித்தது.

வடிவழகினையும் என்னை அநுபவிப்பித்தவனை. இதனால், [1]திவ்யாத்மசொரூப குணங்களுக்கு எல்லை காணிலும் விக்கிரகங்களின் குணங்களுக்கு எல்லை காணமுடியாமல் இருத்தலைத் தெரிவித்தபடி. நல்ல அமுதம் - நித்தியமுமாய்ப் போக்கியமுமான அமுதம்; [2]இனி, இதற்கு, பிராகிருத போக்கியங்களில் தலையான அமுதம் என்று கூறலுமாம்.

பெறற்கு அரிய வீடுமாய் - ஒருவராலும் முயற்சியால் அடைய முடியாத மோக்ஷபுருஷார்த்தமுமாய். அல்லி மலர் விரை ஒத்து - இன்பத்துக்குத் தாமரைப்பூவில் வாசனையோடு ஒத்து. ஆண் அல்லன் பெண் அல்லன் - [3]இங்குக் காணப்படுகிற புருஷ சாதியினைச் சேர்ந்தவன் அல்லன்; [4]பெண் அல்லன் என்றதைப் போன்று, ஆண் அல்லன் என்று அது தன்னையும் கழிக்கிறது.[5] இத்தால், உவமை இல்லாவன் என்றபடி. (9)

164.

ஆண் அல்லன் பெண் அல்லன் அல்லா அலியும் அல்லன்
காணலும் ஆகான் உளன் அல்லன் இல்லை அல்லன்
பேணுங்கால் பேணும் உருவாகும் அல்லனும் ஆம்
கோணை பெரிது உடைத்து எம் பெம்மானைக் கூறுதலே.

பொ - ரை :—ஆணும் அல்லன், பெண்ணும் அல்லன், ஒரு பாலிலும் சேராத அலியும் அல்லன், கண்களாற் காண்பதற்கும் இயலாதவன், உள்ளவன் அல்லன், இல்லாதவனும் அல்லன், அடியார்கள் விரும்புகின்ற காலத்தில் விரும்புகின்ற வடிவினையுடையவன் ஆவான், அப்படி அல்லாதவனும் இருப்பான்; ஆதலால், எமது பெருமானைச் சொல்லுமிடத்து மிக்க பிறுக்காக இருக்கின்றது என்றபடி.

---

1. "எல்லை யில் சீர்" என்றதனால் இங்ஙனம் அருளிச்செய்கிறார்.

2. "நல்ல" என்ற அடைமொழிக்கு, வேறும் ஒரு வகையில் பொருள் அருளிச்செய்கிறார் 'இனி' என்று தொடங்கி.

3. 'இங்குக் காணப்படுகிற புருஷ சாதியினைச் சேர்ந்தவன் அல்லன்' என்றது, ஆண்தன்மையாலே பெண்களைக் கழித்ததுபோன்று, புருஷர்களுக்கு உத்தமனுந் தன்மையாலே நாட்டில் புருஷர்களோடு உண்டான ஸாஜாத்யத்தையும் கழிக்கிறது என்கை.

4. "ஆணல்லன்" என்ன அமையாதோ? "பெண்ணல்லன்" என்கிறது என்? என்ன, திருஷ்டாந்தம் என்கிறார், 'பெண்ணல்லன் என்றதைப் போன்று' என்று தொடங்கி. 'அது தன்னையும்' என்றது, புருஷசாதியையும் என்றபடி.

5. ஆயின், ஆண்தன்மை இல்லையோ? என்ன, 'இத்தால்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

வி - கு :—கோளை - மிறுக்கு; அதாவது, வருத்தம். எம்பெம்மானைக் கூறுதல் கோளை பெரிதுடைத்து என மாற்றுக. பெம்மான் என்பது பெருமான் என்ற சொல்லின் திரிபு.

ஈடு :—பத்தாம் பாட்டு. என்னோடு கலந்த எம்பெருமான் படி [1] பேசப் பெரிதும் மிறுக்குடைத்து என்கிறார்.

ஆண் அல்லன் பெண் அல்லன் அல்லா அலியும் அல்லன் - நாட்டில் காண்கிற ஆண்களின்படியும் அல்லன், பெண்களின் படியும் அல்லன், உபயோகத்திற்குத் தகுதியில்லாத அலியின் படியும் அல்லன். பட்டர் இவ்விடத்தில், [2] "பரமாத்மாவைப் பற்றிப் பேசும் ஒருவன் தனது வாக்கால் இப் பரம்பொருளைப் பெண் என்றும் சொல்லுகிறான் இல்லை, ஆண் என்றும் சொல்லுகிறான் இல்லை, இவ் இருபாலுக்கும் வேறான அலியாகவும் சொல்லுகிறான் இல்லை, அத்தகைய பரம்பொருள் அகாரவாச்சியனாக இருக்கிறான்," [3]" அப் பரம்பொருள், தேவன் அசுரன் மனிதன் விலங்கு இவைகளாக இல்லை, பெண்ணாகவும் இல்லை, அலியாகவும் இல்லை, ஆணாகவும் இல்லை வேறுபட்ட மற்றைப் பொருள்களாகவும் இல்லை, குணமாக இல்லை, கிரியையாக இல்லை, சேதனனுமாக இல்லை, அசேதனனுமாக இல்லை" என்னும் இவ்வேத புராண வாக்கியங்களை மேற்கோள் காட்டி அருளிச்செய்தவாறே, அருகு இருந்து கேட்டிருந்த ஒரு தமிழ்ப் புலவர், 'சுவாமி! நாட்டில் காணப்படுகின்ற மூன்றின் படியும் அல்லனாகில் சொல்லப்படுகின்ற பொருள் சூன்யமோ பின்னை?' என்று கேட்க, பட்டர் [4] "பிள்ளை இயல்அறிவுக்குப் போந்திருந்தது இல்லையே! ஆணல்லன் பெண்ணல்லள் அலியும்அல்லது என்றார் இலரே? 'அல்லன், அல்லன், அல்லன்' என்கிறாதலின் 'புருஷோத்தமன்' என்பதனை அச் சொற்கள் தாமே தோற்றுவிக்கின்றனவே?" என்று அருளிச்செய்தார். "ஆணல்

1. "பேருமோர் ஆயிரம் பிற பல உடைய எம் பெருமான், பேருமோருருவமு முளது இல்லை யிலது இல்லை பிணக்கே" என்றார் முன்னும். 1. 3: 4.

2. ருக்வேதம். ஆர. 2 : 2.

3. பாகவதம். 8. 3 : 24.

4. இயலறிவுக்கு - சொல் இலக்கணத்துக்கு. அர்த்தஞானமேஅன்றிச் சப்தஞானமும் இல்லையே! என்றபடி.

> " ஐயந் திணைபால் அவ்வப் பொதுவினும்
> மெய்தெரி பொருண்மேன் அன்மையும் விளம்புவ "

என்பது நன்னூல்.

லன் பெண்ணல்லன்" என்கின்ற இத்தால் [1] சஜாதீய விஜாதீய நிஷேதம் செய்தபடி.

காணலும் ஆகான் - ஆண் பெண் அலி என்னும் இவற்றைக் காண்கிற பிரமாணங்களால் காணப்படாதவன். இத்தால், [2]ஏகப் பிரமாண கம்யத்வ சாம்யமும் இல்லை என்கை. உளன் அல்லன் - அடியர் அல்லாதார்க்கு. இல்லை அல்லன் - அடியார்கட்கு. இவற்றை விரிக்கிறார் மேல்: பேணுங்கால் பேணும் உருவாகும் - [3] "தேவீ, நீ செய்த தவங்கள் பயனைப் பெற்றன ஆயின; ஏன்? எனில், நானே உனக்குப் புத்திரனாகத் தோன்ற இல்லையா?" என்கிறபடியே, நீ எங்கட்குப் புத்திரனாகப் பிறக்க வேண்டும் என்று சிலர் இரந்தால் அப்படியே வந்து பிறப்பான். இனி, இதற்கு, [4] தன்னை அர்த்திக்குங் காட்டில் அன்போடு தன்னைப் பேணி மறைக்க வேண்டும்படி வந்து அவதரிப்பான் என்று கூறலுமாம். அல்லனுமாம் - இப்படித் தாழ நிற்பினும் சிசுபாலன் முதலியோர்க்குக் கிட்டவும் அரிதாக இருப்பான். எம்பெருமானைக் கூறுதல் கோளை பெரிதுடைத்து - இந்த இந்த நிலைகளை எனக்கு அறிவித்த இறைவன் படிகளைப் பேச என்றால் சால மிறுக்குடைத்து. (10)

165.

கூறுதல் ஒன்று ஆராக் குடக்கூத்த அம்மானைக்
கூறுதலே மேவிக் குருகூர்ச் சடகோபன்
கூறின அந்தாதி ஓர் ஆயிரத்துள் இப் பத்தும்
கூறுதல் வல்லார் உளரேல் கூடுவர் வைகுந்தமே.

---

1. சஜாதீய விஜாதீய நிஷேதம் - ஒரே சாதியிலுள்ள மற்றைப் பொருள், வேறான சாதியிலுள்ள மற்றைப் பொருள் இவற்றினின்றும் விலக்கியபடி.

2. 'ஏகப்பிரமாண கம்யத்வ சாம்யமுமில்லை' என்றது, ஒரே பிரமாணத்தால் அறியத்தக்க ஒப்புமையும் இல்லை என்றபடி.

3.

4. "பேணுங்கால் பேணும் உருவாகும்" என்பதற்கு, இருபொருள் அருளிச்செய்கிறார்: முன்னையது, அடியார்கள் ஆசைப்பட்ட வடிவோடே அவதரிக்கும் என்பது; பின்னையது, மங்களாசாசனம் செய்யவேண்டும்படியான விக்கிரகத்தையுடையவனாய் அவதரிக்கும் என்பது. முதற்பொருளில், பேணுதல் - விரும்புதல். இரண்டாவது பொருளில், பேணுதல் - பரிவு.

பொ-ரை :—வேதங்களால் ஒரு குணத்தையேனும் முற்றும் கூறி முடிக்க ஒண்ணாதபடி இருக்கின்ற குடக்கூத்து ஆடிய இறைவனை, குருகூரிலே அவதரித்த ஸ்ரீ சடகோபர் கூறுவதற்கு ஆசைப்பட்டு ஆசைப்பட்டவாறே கூறி முடித்த அந்தாதியான ஓராயிரம் திருப்பாசுரங்களுள் இப் பத்துத் திருப்பாசுரங்களையும் சொல்லவல்லவர்கள் இருப்பார்களேயாயின் அவர்கள் வைகுந்தம் கூடுவார்கள் என்றவாறு.

வி - கு :—ஒன்றையும் கூறுதல் ஆராத குடக்கூத்த அம்மானைக் குருகூர்ச் சடகோபன் கூறுதலை மேவிக் கூறின அந்தாதி ஓராயிரம் எனக் கூட்டுக. ஒன்று என்பதில் உம்மை தொக்கது. குடக்கூத்து - இது, பதினோராடலுள் ஒன்று; பஞ்சலோகங்களாலும் மண்ணாலும் செய்த குடம் கொண்டு ஆடுவது; [1]பிரத்யுமனன் மகன் அநிருத்தனைச் சிறை மீட்கும்போது வாணன் பேரூரில் கிருஷ்ணனால் ஆடப்பட்டது. இதனை வேறு வகையாகவும் கூறுவதுஉண்டு. அந்தாதி-முதற்பாட்டின் ஈற்றிலுள்ள அடியேனும் சீரேனும் பதமேனும் அசையேனும் எழுத்தேனும் அடுத்த செய்யுளின் முதலடியின் முதலில் அமையப் பாடுவது. "அந்த முதலாத் தொடுப்பது அந்தாதி" என்றார் பிறரும். 'வல்லார் உளரேல்' என்றது, அதன் அருமை குறித்து நின்றது. [2]"நாலு நாளும் நால்வர் இருவர் உள்ளார் கூடியிருந்து அநுபவிக்கப் பாருங்கோள்" என்றார் முன்னும்.

ஈடு :—முடிவில், இத் திருவாய்மொழியைக் கற்கவல்லவர்கள் உளராகில், அவர்கள் பரமபதத்தில் போய் நித்திய அநுபவம் பண்ணப் பெறுவர் என்கிறார்.

கூறுதல் ஒன்று ஆராக் குடக் கூத்த அம்மானை-தன்படிகளைப் பேசப் புக்கால், [3]ஆனந்தவல்லியிற் சொல்லுகிறபடியே, பேசித் தலைக் கட்ட ஒண்ணா திருக்கிறவனை. அவ்வாறு பேச ஒண்ணாது ஒழிந்தது பரத்துவத்தை அன்று, குடக் கூத்து ஆடிய செயல் ஒன்றுமே ஆயிற்று. [4]"மகாத்மனும், ஐந்து ஆயுதங்களைக் கையில் தரித்திருப்பவனும், ஜெயசீலனும், வசு

1. "வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணில மளந்தோ னாடிய குடமும்" 'காமன்மகன் அநிருத்தனைத் தன்மகள் உஷை காரணமாக வாணன் சிறைவைத்தலின், அவனுடைய சோ என்னும் நகரவீதியிற் சென்று நிலங் கடந்த நீனிறவண்ணன் குடங் கொண்டாடிய குடக்கூத்தும்' (சிலப். கடலாடுகா. 54, 55) என்பது, சிலப்பதிகாரம்.

2. திருவாய். 2. 3 : 11. வியாக்கியானம் பார்க்கவும்.

3. "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்பது. (தைத்திரீய ஆனந். 9: 1.) அந்த ஆனந்தகுணத்தில் நின்றும் மனத்தோடு வாக்குக்கள் திரும்புகின்றன என்பது அவ் வாக்கியத்திற்குப் பொருள்.

4. பாரதம் கர்ணபர்வம்.

தேவருக்குப் புத்திரனும், எங்கும் நிறைந்தவனுமான கண்ண பிரானுடைய நற்குணங்கள் உலகங்கள் அனைத்தும் சேர்ந்து பதினயிரம் வருஷங்கள் கூறினும் கூறி முடிவுபெறு" என்பது பாரதம். அம்மானை-குடக்கூத்தாலே என்னைத் தனக்கே உரிமையாக்கிக் கொண்டவனை.

கூறுதலே மேவி-"நான் சொல்லுவது என்? சொல்லீரே!" என்று, மீண்டும் "சொல்லீர் என் அம்மானை" என்று தொடங்குமவர் ஆதலின், 'பேச நிலம் அன்று' என்று வேதங்கள் மீண்ட விஷயம் என்று, தாமும் 'பேச ஒண்ணுது' என்று கைவாங்காதே, அழகிதாகப் பேசக்கடவோம் என்று உறுதி கொண்டார். உறுதிகொண்ட அளவேயோ? கூறியதும் உண்டோ? என்னில், குருகூர்ச் சடகோபர் அன்றே? கூறச் சொல்லவேண்டுமோ? மயர்வற மதிநல மருளப்பெற்றவர்க்குப் பேசத் தட்டு உண்டோ? என்றபடி. கூறின அந்தாதி ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் கூறுதல் வல்லார்உளரேல் - விஷயத்துக்குத் தகுதியாகப் பேசித் தலைக்கட்டின அந்தாதி ஆயிரத்திலும் இப்பத்தையும் கற்கவல்லவர்கள் உளராகில். கூடுவர் வைகுந்தம் - "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவது என்றுகொலோ" என்று ஆசைப்பட்டுப் பெறுது "ஆடியாடி" யாய் வியசனப் படாமல், இப் பாசுர மாத்திரத்தைச் சொல்லவே நான் பிரார்த்தித்துப் பெற்ற பேறு பெறுவார்கள். ஆயின், இவரைப் போன்று ஆற்றுமை இல்லாதவர்களும் பெறுதல் கூடுமோ? எனின், தமப்பனது தனம் கிடந்தால் புத்திரன் [1]அழித்து ஜீவிக்குமத்தனை யன்றே; [2]அது போன்று, இங்கும் ஆழ்வார் பட்ட வியசனம் படவேண்டா; இவருடைய அநுபவத்தைப் பரமபதத்திலே அநுபவிக்கப் பெறுவர்.

முதற்பாட்டில், இவர் ஆசைப்பட்ட படியே அடியார்கள் குழாங்களோடே வந்து கலந்தபடி சொன்னர்; இரண்டாம் பாட்டில், தம்மோடு கலந்தபின்பு திருமேனியும் திவ்விய அவயவங்களும் திவ்விய ஆயுதங்களும் நிறம்பெற்றன என்றார்; மூன்றும் பாட்டில், தம்மோடே கலந்து தன் சத்தை பெறுதல்,

1. அழித்து - செலவுசெய்து.

2. இந்த அரங்கத்து இனிது இரு நீ என்று அரங்கர்
எந்தை எதிராசர்க்கு ஈந்த வரம் - சிந்தைசெயில்
நம்மது அன்றே நெஞ்சமே! நற்றுதை சொம் புதல்வர்
தம்மது அன்றே தாயமுறை தான். (ஆர்த்திப் பிரபந். 60.)

என்னும் பாசுரத்தை ஒப்புநோக்குக. சொம் - செல்வம்.

இன்றேல், இல்லையாம்படியாய் வந்து கலந்தான் என்றார்; நான்காம் பாட்டில், மேல் உவமையாகச் சொன்ன பொருள்கள் நேர் நில்லாமையாலே, அவற்றைச் சிக்ஷித்துச் சேர்த்துக் கூறி அநுபவித்தார்; ஐந்தாம் பாட்டில், அவைதாமும் உவமையாக நேர் நில்லாமையாலே, அவற்றைக் கழித்து உபமேயந் தன்னையே அநுபவித்தார். ஆறாம் பாட்டில், இப்படி எல்லாரைக் காட்டிலும் வேறுபட்ட தன்மையினையுடைய இறைவன், முக்தன் தன்னை அநுபவிக்குமாறு போன்று, தான் என்னை அநுபவித்தான் என்றார்; ஏழாம் பாட்டில், தமக்காக இராமன் கிருஷ்ணன் முதலிய அவதாரங்களைச் செய்தான் என்றார்; எட்டாம் பாட்டில், அவனை என்றும் பேச முடியாது என்றார்; ஒன்பதாம் பாட்டில், துணை தேடிக்கொண்டு மீண்டும் பேசுவதற்குத் தொடங்கினார்; பத்தாம் பாட்டில், "இப் படிகளால் என்னோடே கலந்த இம் மகாகுணம் ஒன்றையும் பேச" என்றால் சால மிறுக்குடைத்து என்றார்; முடிவில், இது கற்றார்க்குப் பலம் சொல்லித் தலைக்கட்டினார்.

—:o:—

திருவாய்மொழி நூற்றந்தாதி

அந்தாமத்து அன்பால் அடியார்களோடு இறைவன்
வந்துஆரத் தான்கலந்த வண்மையினால்—சந்தாபம்
தீர்ந்த சடகோபன் திருவடிக்கே நெஞ்சமே!
வாய்ந்தஅன்பை நாடோறும் வை. (15)

—:o:—

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

ஆரும் திருவாய்மொழி—"வைகுந்தா"

முன்னுரை

—:o:—

ஈடு :—"ஆடி ஆடி" என்னும் திருவாய்மொழியில் உண்டான துன்பம் தீர வந்து கலந்தபடியை "அந்தாமத்துஅன்பு" என்ற திருவாய்மொழியில் அருளிச்செய்தார்; அச் சேர்க்கையால் பிறந்த பிரீதி, அவனது என்னுமிடத்தைச் சொல்லுகிறார் இத் திருவாய்மொழியில். [1]"பிரணயி பிரீதி அநுசந்தானங் காண் இது' என்று **ஸ்ரீ ஆளவந்தார்** அருளிச்செய்வர். அதாவது, ஆழ்வார் விஷயமாகச் சர்வேஸ்வரனுக்கு உண்டான பிரீதி சொல்லுகிறது இத் திருவாய்மொழியில் என்றபடி. இனி, "ஊனில் வாழ்" என்ற திருவாய்மொழியில், ஆழ்வார், தாம் பகவானை அநுபவித்துத் தமக்கு அவன் பக்கலுண்டான பிரேமம் அவன் அளவில் முடிவு பெறாது, "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ" என்று அவன் அடியார் அளவும் சென்றபடியை அருளிச்செய்தார்; இத் திருவாய்மொழியில், சர்வேஸ்வரன் ஆழ்வார் பக்கல் செய்த பிரேமம் இவர் ஒருவர் அளவில் நில்லாது, சம்பந்தி சம்பந்திகள் அளவும் வெள்ளம் இடுகிறபடியை அருளிச்செய்கிறார் என்று இயைபு கூறலுமாம். இரண்டு தலைக்கும் ரசம் மிகுந்தால் சம்பந்தி சம்பந்திகள் அளவும் செல்லும் அன்றே! "எமர் கீழ் மேல் எழு பிறப்பும் விடியா வெம் நரகத்து என்றும் சேர்தல் மாறினர்" என்பது இவருடைய திருவாக்கு.

[2] உபய விபூதிகளையுடையவனாய், மங்களம் பொருந்திய எல்லா நற்குணங்களையும் உருவமாக உடையவனாய், எல்லா

---

1. பிரணயி - காதலன்; சர்வேஸ்வரன். "ஆடியாடி" என்றது முதல், 'பிரீதி சொல்லுகிறது இத் திருவாய்மொழியில்' என்றது முடிய, "உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே" என்ற பாசுரப் பகுதியை நோக்கி ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹம். இனி, "ஊனில் வாழ்" என்றது முதல் 'வெள்ளம் இடுகிறபடியை அருளிச்செய்கிறார்' என்றது முடிய, "எமர் கீழ் மேல் எழு பிறப்பும், விடியா வெம் நரகத்து என்றும் சேர்தல் மாறினரே" என்ற பாசுரப் பகுதியை நோக்கிய வேறு நிர்வாஹம்.

2. 'உபய விபூதிகளை யுடையவனாய்' என்றது முதல் 'அவனை உளனாக்குகிறார்' என்றது முடிய, ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹ விவரணம். 'உபய விபூதிகளையுடையவனாய்' என்றது முதல் 'மகிழ்ச்சியுடையவனாய்' என்றது முடிய, மேல் திருவாய்மொழியின் அநுவாதம்.

வகையாலும் நிறைந்தவனான தான், தன்படிகள் ஒன்றும் குறையாதபடி வந்து இவரோடே கலந்து, அக் கலவிதான் 'தன்பேறு' என்னுமிடம் தோன்ற மகிழ்ச்சியுடையவனாய், 'பலகாலம் எதிர்சூழல் புக்குத் திரிந்த பொருளை ஒருபடியாக அடைந்தோமே! [1]இவர்தாம் இனி நம்மை விடின் செய்வது என்?' என்று [2] ஐயங்கொண்டு அவன் அலமாக்கிற படியைக் கண்டு, 'நீ இங்ஙனம் படவேண்டா' என்று அவன் ஐயத்தை நீக்கி அவனை உளன் ஆக்குகிறார். [3]"விதேக குலத்தில் பிறந்த சீதாய்! சித்திரகூட மலையில் என்னோடுகூட இன்பத்தினை அனுபவிக்கிறாயா?" என்றாற் போலே ஆயிற்று இதில் சுவையும்; [4]'மைதிலி, உன்னை அறிந்தாயே, நம்மை அறிந்தாயே, கலக்கிற தேசம் அறிந்தாயே!' என்கிறார் என்றபடி.

166.

வைகுந்தா! மணிவண்ணனே! என் பொல்லாத்
[திருக்குறளா! என்னுள் மன்னி
வைகும் வைகல்தோறும் அமுதாய வான் ஏறே!
செய்குந்தா வரும் தீமை உன் அடியார்க்குத் தீர்த்து
[அசுரர்க்குத் தீமைகள்
செய் குந்தா! உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே.

---

1. "அல் ஆவியுள் கலந்த" என்றும், "என் முடிவு காணாதே" என்றும் இவர் கூறினார்; ஆதலால், "வளவேழுலகு" தலைஎடுத்து என்னும் வாக்கியங்களைக் கொணர்ந்து 'இவர்தாம்' என்று தொடங்கும் வாக்கியத்திற்கு முன்னே கூட்டிப் பொருள் காண்க.

2. ஆழ்வார்பக்கல் இறைவன் ஐயங் கொள்ளக் காரணம் இரண்டு: 'மகிழ்ச்சி யுடையவனாய்...ஐயங்கொண்டு' என்றதனால் கலவியால் உண்டான பிரீதி ஒன்று; "அல்லாவியுள் கலந்த" என்றும், "என் முடிவு காணாதே" என்றும்கூறியதனால்ஆழ்வார்,தம்மைத்தாழ்வாக நினைக்கும் நினைவுஒன்று."உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே" என்றும், "உன்னை எங்ஙனம் விடுகேன்" என்றும் வருகிற பாசுரப் பகுதிகளால் இறைவனுடைய ஐயத்தை நீக்கி, அவனை உளனாக்குகிற படியைக் காணலாம்.

3. ஸ்ரீ ராமா. அயோத். 94 : 18. சம்ஶ்லேஷ ரசாதிசயத்துக்கும், அத்தாலே ஐயங் கொண்டதற்கும் மேற்கோள், "விதேககுலத்தில்" என்று தொடங்கும் பொருளையுடைய சுலோகம். ரமியாநிற்கச்செய்தே "ரமஸே கச்சித்" என்கையாலே, நீர் வாய்ப்பும் நிழல் வாய்ப்புமான சித்திரகூட பரிசரத்தில் அழகையும், தங்கள் சேர்த்தியழகையும் கண்டு, 'இது தொங்கப் புகுகிறதோ?' என்று ஐயங்கொண்டது தோன்றுகிறது. அப்படிப் பெருமாள் ஐயங்கொண்டது போன்று, இங்கும், ஆழ்வார் விஷயத்தில் இறைவனுக்கும் ஐயம் உண்டாயிற்று என்றபடி.

4. மேற்கோள் சுலோகத்தின் கருத்து, 'மைதிலி' என்று தொடங்கும் வாக்கியம்.

பொ - ரை :—பரமபதத்தில் இருப்பவனே! நீலமணி போன்ற நிறத்தை உடையவனே! என்னுடைய அழகிய வாமனனே! என் மனத்தில் வீற்றிருந்து, கழிகின்ற நாள்தோறும் அமிர்தின் மயமாய் இருக்கின்ற வான் ஏறே! செய்யப்பட்டுத் தப்ப அரிதாய் வருகின்ற தீமைகளை உன் அடியார்க்குத் தீர்த்து அசுரர்களுக்குத் துன்பத்தைச் செய்கின்ற குந்தனே! நான் உன்னை நன்றாகப் பிடித்தேன்; இனி நழுவமாட்டேன்; இதனை நீ திருவுள்ளம்பற்று.

வி - கு :—பொல்லா என்பது குறிப்புமொழி; அழகிய என்பது பொருள். மன்னி அமுதாய வான் ஏறே எனக் கூட்டுக. வான்: இடவாகுபெயர். செய் குந்தா வருந் தீமை எனப் பிரிக்க. இனி, செய்கும் தா அரும் தீமை எனப் பிரித்தலுமாம். தீர்த்து செய் குந்தா எனக் கூட்டுக. குந்தன் என்பது, இறைவனுடைய திருப்பெயர். அது விளி ஏற்றலின் குந்தா என ஈறுகெட்டு அயல் நீண்டது.

இத் திருவாய்மொழியில் [1] ஒவ்வொரு பாசுரத்திலும் இரண்டு அடிகள் சில சீர் குறைந்து வருதலின் ஆசிரியத்துறை எனப்பெறும்.

ஈடு :—"அம் தாமத்து அன்பு" என்ற திருவாய்மொழியில் இறைவன் ஆழ்வாருடனே வந்து கலந்து தான் பெறுப் பேறு பெற்றானாக இருந்தான்; இவர், "அல் ஆவி உள் கலந்த" என்றும், "என் முடிவு காணாதே என்னுள் கலந்தான்" என்றும் தம்முடைய தாழ்மையினைச் சொன்னவாறே, [2] "வளவேழ் உலகு" தலையெடுத்து இன்னம் இவர் நம்மை விடின் செய்வது என்? என்று எம்பெருமானுக்குப் பிறந்த [3] ஐயத்தை நீக்குகிறார் இப்பாசுரத்தில்.

வைகுந்தா - ஸ்ரீ ஜனகராஜன் திருமகள் "**ஆர்ய புத்ர**" என்னுமாறு போன்றும், திருவாய்ப்பாடியில் பெண்கள் "**கிருஷ்ண**" என்னுமாறு போன்றும், '**வைகுந்தா**' என்று

---

1. கடையதன் அயலடி கடைதபு நடையவும்
நடுஅடி மடக்காய் நான்கடியாகி
இடையிடை குறைநவும் அகவல் துறையே. (யா. கலம். 76.)
என்பது இலக்கணம்.

2. 'வளவேழுலகு தலையெடுத்து' என்றது, அத் திருவாய்மொழியில் உண்டாய தன்மை உண்டாகி என்றபடி.

3. 'ஐயத்தை நீக்குகிறார்' என்றது, "பிடித்தேன் கொள் சிக்கெனவே" என்ற பகுதியைத் திருவுள்ளம்பற்றி. ஆழ்வார் இங்ஙனம் அருளிச்செய்கின்றதனால் இறைவனுக்கு ஐயம் உண்டாயினமை பொருளாற்றலாற் போதரும்.

அவனுடைய முதற்பெயரைச் சொல்லுகிறார்.[1] இதனால், 'நித்திய விபூதியிலுள்ள இறைவன் தம்முடனே வந்து கலந்தான்' என்று மகிழ்கின்றார் என்னுமிடம் தோன்றுகிறது. ஆயின், இப்பொழுது திருப்பெயர்களை அடுக்கிக் கூறுவதற்குக் காரணம் என்னை? எனின், போகம் [2] உத்கூலமானால் ஒருவர்க்கு ஒருவர் பெயரைச் சொல்லிக்கொண்டு அதனால் தரிப்பது என்பது ஒன்று உண்டு அன்றே? மணிவண்ணனே - நீல ரத்தினம் போன்று குளிர்ந்த வடிவுடையவனே! [3] அணைத்த போது உண்டான பரிசத்தால் திமிர்த்துச் சொல்லுகிறார். என் பொல்லாத் திருக்குறளா - என்னுடைய அழகிய வாமனனே! 'அழகிது' என்னில், நாட்டுக்கு ஒப்பாம் என்று கருதி, அழகில் [4] விஸஜாதீயதையைச் சொல்லுகிறார் '**பொல்லா**' என்று. இனி, கண்ணெச்சில் வாராமைக்குக் கரிபூசுகிறார் எனலுமாம். இதனால், [5] மஹாபலி பக்கலிலே இரப்பாளனாய் நின்றது போன்று தம்மைப் பெறுகைக்குச் சிறும்பி இரப்பாளனாய் நின்ற நிலையைத் தெரிவித்தபடி.

'**வைகுந்தா**' என்று மேன்மை சொல்லிற்று; '**மணிவண்ணனே**' என்று வடிவழகு சொல்லிற்று; '**என் பொல்லாத் திருக்குறளா**' என்று சௌலப்யம் சொல்லிற்று; இம் மூன்றும் கூடினதாயிற்றுப் பரத்துவமாவது.[6]

என்னுள் மன்னி - என்னுடைய மனத்திலே வந்து நித்திய வாசம்செய்து. இந்திரன் இராஜ்யலாபம் பெற்றுப் போனான், மஹாபலி கொடையின் லாபம் பெற்றுப் போனான்; அவ் வடிவழகு ஊற்றிருந்தது இவர் நெஞ்சிலே ஆதலின் '**குறளா என்னுள் மன்னி**' என்கிறார். வைகும் வைகல்தோறும் அமுதாய-

---

1. 'இதனால்' - "வைகுந்தா" என்ற இதனால்.

2. உத்கூலமாதல் - கரைபுரளுதல்.

3. சம்ஸ்லேஷ சமயத்தில் "மணிவண்ணனே" என்றதற்குப் பாவம், 'அணைத்தபோது' என்று தொடங்கும் வாக்கியம்.

4. விஸஜாதீயதை - வேறுபட்ட சாதியின் தன்மை.

5. "குறளா" என்றதற்குப் பாவம், 'மஹாபலிபக்கலிலே' என்று தொடங்கும் வாக்கியம். சிறும்பி - சங்கோசித்து.

6. இம் மூன்றையும் இங்குச் சேர்த்துக் கூறியது, விடப் போகாமைக்குக் காரணத்தைத் தெரிவித்தபடி.

[1] கழிகிற காலந்தோறும் எனக்கு [2] முன்பு இல்லாத அமிர்தத்தைப் போன்று இனியன் ஆனான். வான்ஏறே - நித்திய சூரிகளோடே கலந்து அவர்களைத் தோற்பித்து மேனாணித்து இருக்குமாறு போலே ஆயிற்று, இவரோடே கலந்து இவரைத் தோற்பித்து இருந்த இருப்பு. பின்பும் அவன் ஏற்றமே விஞ்சி இருத்தலின் 'ஏறு' என்கிறார் எனலுமாம்.

இனி, தம்முடைய அநுபவ விரோதிகளைப் போக்கினபடி சொல்லுகிறார் மேல்: செய் குந்தா வருந் தீமை-செய்யப்பட்டுத் தப்பாவாய் இருக்குந் தீமை. இனி, செய்கும் தா அரும் தீமை எனப் பிரித்துச் செய்யப்பட்டுக் கடக்க அரிதான தீமை எனப் பொருள் கூறலுமாம். உன் அடியார்க்குத் தீர்த்து அசுரர்க்குத் தீமைகள் செய் குந்தா - உன் பக்கலிலே [3] நிக்ஷிப்தபரராய் இருப்பார்க்கு வாராதபடி நீக்கி, அசுரத்தன்மையுடையவர்கள் மேலே பொகடும் படியான சுத்தியையுடையவனே! குந்தம் - குருந்தம் என்ற சொல்லின் விகாரம்; அது ஆகுபெயராய் அதன் மலருக்குஆயிற்று; அதன் மலர் வெளுத்து இருக்குமாதலின், அவ்வழியாலே பரிசுத்தத்தை நினைக்கிறது. இனி, குந்தன் என்பதனை இறைவனுடைய திருப்பெயர்களில் ஒன்றாகக் கோடலும் அமையும். [4] "குமுத: குந்தா: குந்த:" என வருதல் காண்க.

இதனால், முன் பிராதிகூல்யம் பண்ணினவர்கள் அநுகூலித்து நாலடி வர நின்றவாறே, பின்னர் அவர்கள் பகைவர்கள் மேலே பொகடுவான் என்பதனைத் தெரிவித்தபடி. கடலுக்குத் தொடுத்த அம்பை, அவன் முகங்காட்டினவாறே மருகாந்தாரத்தில் அசுரர்கள் மேலே தொடுத்தமையை [5] ஸ்ரீ ராமாயணத்தால் உணர்க. அங்ஙனம் ஒரு போக்கடி கண்டிலனாகில், [6] "பகதத்தனால் விடப்பட்டதும் எல்லாப் பொருள்களையும் அழிக்கக் கூடியதுமான அந்தச் சக்தி என்

1. "வைகல் நாளும் வைகின்றே" (சிந். 156.) என்ற இடத்து 'நாள்கள் தோறும் நாள்கள் கழியாநின்றன' என்று பொருள் கூறினர் நச்சினார்க்கினியர். வைகல் - கழிதல்.

2. இவ்விடத்து 158-ஆம் பாசுரம் நினைவுகூர்க.

3. நிக்ஷிப்தபரர் - பாரத்தை இறைவன் மேல் போகட்ட அடியார்கள்.

4. சஹஸ்ரநாமம்.

5. இச் சரிதையைக் கம்பராமாயணம் உயுத்தகாண்டத்தில் வருணனை வழிவேண்டு படலத்தால் உணரலாகும்.

6. பாரதம்.

னும் பாணத்தை, கிருஷ்ணன் அருச்சுனனை மறைத்துத் தன் மார்பிலே ஏற்றுக்கொண்டான்” என்கிறபடியே, [1] பகதத்தன் விட்ட சக்தியை, அருச்சுனனைத் தள்ளித் தன் [2] அந்தப்புரத்திலே ஏற்றாற் போலே, தான் ஏறிட்டுக்கொண்டு அநுபவித்தல் செய்யுமித்தனை. [3] பாவங்கள் தாம் - அசேதனமாய் இருப்பன சில கிரியா விசேடங்களாய் அவை செய்தபோதே நசிக்கும்; செய்தவன் அறிவில்லாதவன் ஆகையாலே செய்ததை மறப்பான்; முற்றறிவினனான சர்வேஸ்வரன் உணர்ந்திருந்து பலத்தை நுகர்விக்க நுகர்வான் இத்தனை. அவன் மார்பிலே ஏற்றுக் கொள்கையாவது, “**பொறுத்தேன்**” எனத் தீர்தல். [4] “**அபூர்வங்காண், சக்திகாண், பலாநுபவம் பண்ணுவிக்கிறது**” என்று கூறுவதைக் காட்டிலும், முற்றறிவினனான இறைவன் செய்விக்கிறான் என்கை அழகிதே அன்றோ.

உன்னை - அடியார்களிடத்தில் பக்ஷபாதத்தையுடைய உன்னை. நான் - “ஆடியாடி” என்னும் திருவாய்மொழியில் விடாய்த்த நான். இனி, நீ உய்விக்க, உன்னாலே உளேனான நான் என்று கோட்லுமாம். பிடித்தேன் கொள் - பிடித்தேனாகவே திருவுள்ளம்பற்று. முன்பும் சொல்லிப்போரும் வார்த்தை அன்றோ இது? எனின், அங்ஙனமன்று, சிக்கெனப் பிடித்தேன் கொள் - என்னைப் பெறுகைக்கு முற்பட்ட நீ விடிலும் விடாதபடி நான் பிடித்தேனாகவே திருவுள்ளம் பற்று. அவனைப் பார்த்து, [5] “துக்கப்படவேண்டாம்” என்கிறார். (1)

---

1. இச் சரிதப் பகுதியை வில்லிபாரதம் பன்னிரண்டாம்போர்ச் சருக்கம் 54 முதல் 67 முடியவுள்ள செய்யுட்களில் காண்க.

2. அந்தப்புரம் = மார்பு.

3. ஏறிட்டுக் கொள்ளுகையாவது ஏது? என்ன, ‘பாவங்கள் தாம்’ என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

4. இறைவனே பலனைக் கொடுக்கின்றவனாக வேண்டுமோ? கிரியையாதிகள் பலனைக் கொடுக்கின்றன ஆகாவோ? என்ன, அருளிச்செய்கிறார் ‘அபூர்வங்காண்’ என்று தொடங்கி. அபூர்வமாவது, ஒருவன் யாதானும் ஒரு கர்மத்தைச் செய்ய அதனால் தோன்றுவது.

5. சரமச் சுலோகக் கருத்து - ‘அவனைப் பார்த்து’ என்று தொடங்கும் வாக்கியம்.

167.

சிக்கெனச் சிறிது ஓர் இடமும் புறப்படாத்
[தன்னுள்ளே உலகுகள்
ஒக்கவே விழுங்கிப் புகுந்தான் புகுந்ததன் பின்
மிக்க ஞான வெள்ளச் சுடர் விளக்காய்த் துளக்கு அற்று
[அமுதமாய் எங்கும்
பக்கம் நோக்கு அறியான் என் பைந்தாமரைக் கண்ணனே.

பொ - ரை :—அழகிய தாமரை போன்ற கண்களையுடைய என் இறைவன், மிகச் சிறிய இடமும் புறம்பு போகாதபடி உலகுகளைத் தன் நினைவிற்குள்ளே ஒரேவிதமாக அடக்கி, வெளியில் புறப்படாதபடி என் மனத்திற் புகுந்தான்; புகுந்த பின்னர், ஞான வெள்ளத்தால் வந்த மிக்க ஒளியை உடையவனாய் நடுக்கமும் தீர்ந்து, அமுதம் போன்று இனியனாய், ஓரிடத்திலும் பக்கத்தைப் பார்க்கின்றிலன்.

வி - கு :—சிறிதோரிடமும் புறப்படாத் தன்னுள்ளே உலகுகள் ஒக்கவே விழுங்கிச் சிக்கெனப் புகுந்தான் என மாற்றுக. விழுங்குதல் - அடக்குதல். புறப்படா விழுங்கினான் எனக் கூட்டுக. புறப்படா - புறப்படாதபடி.

ஈடு :—இரண்டாம்பாட்டு. [1]மேல் பாசுரத்தில் இறைவன், 'இவர் நம்மை விடின் செய்வது என்?' என்று ஐயங்கொண்ட படியை அருளிச்செய்தார்; இவர், 'விடேன்' என்ற பின்பு அவனுக்கு வடிவிற் பிறந்த பௌஷ்கல்யத்தைச் சொல்லுகிறார் இப் பாசுரத்தில்.

சிறிது ஓர் இடமும் புறப்படாத் தன்னுள்ளே உலகுகள் ஒக்கவே விழுங்கிச் சிக்கெனப் புகுந்தான் - மிகச் சிறியதாய் இருப்பது ஒரு பொருளும் தன் பக்கல்நின்றும் பிரிகதிர்ப்பட்டு நோவுபடாத படியாகத் தன் நினைவில் ஆயிரத்தில் ஒரு கூற்றிலே உலகங்களை ஒருகாலே வைத்து, இனிப் பேராதபடி புகுந்தான். "நாம் ஆழ்வாரை அநுபவிக்கும்போது, செருப்பு

---

1. மேற் பாசுரத்தின் பொருளை அநுவதியாநின்றுகொண்டு, "மிக்க ஞான வெள்ளச் சுடர் விளக்காய்" என்பது போன்றவைகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். இவர் "பிடித்தேன் கொள் சிக்கென" என்ற பின்னர், இறைவனுடைய ஞானாதிகளிற் பிறந்த ஒளியின் தன்மையைச் சொல்லுகிறார் என்று இப் பாசுரத்துக்குச் சங்கதி என்றபடி. "சுடர் விளக்காய்" என்றதனை நோக்கி 'வடிவிற் பிறந்த பௌஷ்கல்யத்தைச் சொல்லுகிறார்' என்கிறார். பௌஷ்கல்யம் - நிறைந்திருக்கும் தன்மை.

வைத்துத் திருவடி தொழப் புக்காற் போலே[1] ஆக ஒண்ணாது" என்று பார்த்து, உலகத்தைப் பாதுகாத்தற்கு வேண்டும் வியாபாரங்களை எல்லாம் செய்துமுடித்து, வேறு ஒன்றில் நோக்கு இல்லாதவனாய் அநுபவித்துப் போக மாட்டாதே இருந்தான் என்றபடி. இராஜாக்கள் அந்தப்புரத்திற் புகுவது, நாட்டுக் கணக்கு அற்ற பின்பே ஆதலின் '**உலகுகள் ஒக்க விழுங்கிப் புகுந்தான்**' என்கிறார். இனி, சிக்கெனப் புகுந்தான் என்பதற்கு,[2] அநந்யப் பிரயோசனமாகப் புகுந்தான் என்று கூறலுமாம்.

புகுந்ததன் பின் மிக்க ஞானச் சுடர் விளக்காய்த் துளக்கு அற்று - இவரோடே வந்து கலந்து, அக் கலவியில் அதிசங்கையும் தீர்ந்த பின்பாயிற்று, [3] விகஸித ஸஹஜ ஸார்வஜ்ஞனுமாய் விஜ்வரனும்ஆயிற்றது. என்றது, [4]தனக்கு நித்திய தர்மமான ஞானத்தை யுடைத்தான ஆத்மவஸ்து, கர்மம் காரணமாக ஒரு சரீரத்தை மேற்கொண்டு இந்திரியங்களாகிய வழியை விரும்பிக்கொண்டு சஞ்சரிக்கவேண்டும்படி போந்தது, ஒரு நாள் வரையிலே பகவானுடைய திருவருளும் பிறந்து ஞானக் குறைவும் கழியக் கடவதாய் இருக்கும் அன்றே; அங்ஙனம் ஓர் ஏதுவும் இன்றிக்கே இருக்கிற சர்வேஸ்வரனும் இவரோடே வந்து

---

1. செருப்பு வைத்துத் திருவடி தொழுகையாவது, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பெருமாளைத் திருவடிதொழ எழுந்தருள, அவர் திருவடிகள் பித்தப் பிளவாய் இருக்கையாலே ஸ்ரீபாதரக்ஷை தரித்துக்கொண்டு எழுந்தருளினாராய் அதனைத் திருவாசலின்கண் வைத்து எழுந்தருளின அளவில், ஸ்ரீ பாதரக்ஷையிலே தானே திருவுள்ளம் சென்று 'தீர்த்தம் பிரசாதிக்க' என்று அருளிச்செய்ய வேண்டியதைச் 'செருப்புப் பிரசாதித்தருள' என்றாராம் என்பது.

2. 'சிக்கென' என்பதற்கு இருபொருள்: வேறொன்றில் நோக்கில்லாதவனாகி என்றும், வேறு பயனைக் கருதாதவனாகி என்றும். 'அநந்யப் பிரயோஜனமாக' என்றது, ஜகத்ரக்ஷண ரூபப் பிரயோஜனம் சித்திக்கையாலே என்றபடி.

3. விகஸித - மலர்ந்த. ஸஹஜம் - உடன்பிறந்தது; இயற்கை என்றபடி. சர்வஜ்ஞன் - முற்றறிவினன். விஜ்வரன் - நடுக்கமற்றவன்.

4. கர்ம வசியனான சேதனனுக்குச் சம்சாரியான நாளில் பகவானுடைய நிக்ரஹமடியாக ஞானசங்கோசம் பிறக்கக்கடவதாய், பகவானுடைய திருவருள் அடியாக ஞானம் மலர்ச்சி பெறுவதாய் இருக்கும்; அப்படி ஒரு ஏதுவின்றியே இருக்கின்ற சர்வேஸ்வரனும் ஆழ்வாருடைய பிரிவாலே சங்குசித ஞானனாய், அவருடைய சம்ஸ்லேஷத்தாலே மலர்ந்த ஞானவானாயினான் இது என்ன பிரணயித்வம்! என்றபடி. நித்திய தர்மம் - சேஷத்வம்; அடிமையார் தன்மை. பிரணயித்வம் - காதல் தன்மை.

கலப்பதற்கு முன்பு குறைவுபட்ட ஞானத்தை உடையவனாய் இவரோடே கலந்த பின்பு மலர்ந்த ஞானவெள்ளத்தையும் உடையவன் ஆனான்; திவ்விய மங்கள விக்கிரஹமும் புகர்பெற்றது இப்போது என்றபடி. துளக்கு அறுதலாவது, "ஆடி ஆடி" என்ற திருவாய்மொழியில் உண்டான [1] ஆற்றாமையால் வந்த உள் நடுக்கமும் தீர்தல். [2] "நடுக்கமற்றவனானான்" என்றார் ஸ்ரீ வால்மீகி. இனி, துளக்கு அறுதலாவது, 'இவர் நம்மை விடின் செய்வது என்?' என்கிற உள் நடுக்கமும் தீர்ந்தான் இப்போது என்று கூறலுமாம்.

அமுதமாய் - [3] 'மிக மகிழ்ந்தார்" என்கிறபடியே, இறைவன் தம்மை விரும்பிப் போக்கியமாக நினைத்திருக்கிற இருப்புத் தமக்குப் போக்கியமாய் இருக்கிறபடி. இறைவன் தம்மை அநுபவித்து இனியனாய் இருக்கும் இருப்பு இவர் தமக்குப் போக்யமாய் இருத்தலின் '**அமுதமாய்**' என்கிறார் என்றபடி. எங்கும் பக்கம் நோக்கு அறியான் - "ஆழ்வார்பக்கல் இறைவனுக்கு உண்டான [4] அளவுகடந்த காதலைத் தவிர்க்கவேண்டும்" என்று நாய்ச்சிமார் விரும்பி வார்த்தைகள் கூறினும் அவர்கள் பக்கல் கண்வைக்க மாட்டுகின்றிலன்.

இங்கே **ஆளவந்தாருக்குக் குருகைகாவலப்பன்** அருளிச்செய்ததாக அருளிச்செய்யும் வார்த்தை:—'**அப்பன்** ஸ்ரீ பாதத்திலே ஒரு ரஹஸ்ய விசேஷம் உண்டு' என்று **மணக்கால் நம்பி** அருளிச்செய்ய, 'அது கேட்கவேண்டும்' என்று **ஆளவந்தாரும்** எழுந்தருள, கங்கைகொண்ட சோழபுறத்தேற, [5] அப்பனும் அங்கே ஒரு குட்டிச்சுவரிலே யோகத்திலே எழுந்தருளியிருக்க, 'இவரைச் சமாதிபங்கம் பண்ண ஒண்ணாது' என்று சுவருக்குப் புறம்பே பின்னே நிற்க, அப்பனும் யோகத்திலே எழுந்

1. ஆற்றாமை - ஆழ்வாருடைய ஆற்றாமையாலே.

2. 3. சங்க்ஷேப ராமாயணம். "விபீஷணனுக்கு முடிசூட்டிய பின்னர் செய்து முடிக்கவேண்டிய காரியங்களைச் செய்து முடித்தவராய் நடுக்கமுந் தீர்ந்து மகிழ்ந்தவர் ஆனார்" என்பது அச் சுலோகத்தின் பொருள்.

4. அளவு கடந்த காதல் ஆத்மாவிற்குக் கேடு ஆகையாலே தவிர்க்க வேண்டும் என்றபடி.

5. அப்பன் - குருகை காவலப்பன்; இவர் நாதமுனிகளுடைய மாணாக்கர். ரஹஸ்ய விசேஷம் - யோகமார்க்கம். மணக்கால் நம்பி - ஆளவந்தாருடைய ஆசாரியர். அப்பன் யோகு செய்த இடத்தை, 'குருகை காவலப்பன் சந்நிதி' என்று இன்றும் வழங்குவர்.

தருளியிருக்கிறவர் திரும்பிப் பார்த்து, 'இங்கே [1] சொட்டைக் குலத்தில் யாரேனும் வந்தார் உளரோ?' என்று கேட்டருள, 'அடியேன்' என்று ஆளவந்தாரும் எழுந்தருளிவந்து கண்டு, 'நாங்கள் பின்னே தெரியாதபடி நிற்க இங்ஙனம் அருளிச் செய்கைக்கு ஏது என்?' என்ன, 'நானும் தானுமாக அநு பவியாநின்றால், பெரிய பிராட்டியார் அன்பு நிறைந்த வார்த் தைகளைக் கூறினும் அவள் முகங்கூடப்பாராத சர்வேஸ்வரன், என் கழுத்தை அமுக்கி நாலு மூன்று தரம் அங்கே எட்டிப் பார்த்தான்; இப்படி அவன் பார்க்கும்போது சொட்டைக் குடியிலே சிலர் வந்தார்உண்டாகவேண்டும் என்று இருந்தேன் காணும்' என்று அருளிச்செய்தார். என் பைந்தாமரைக் கண்ணன் - "ஆடியாடி" என்ற திருவாய்மொழியில் ஆற்று மையால் வந்த தாபமும் தீர்ந்து திருக்கண்களும் குளிர்ச்சி பெற்றவன் ஆனான். (2)

168.

தாமரைக் கண்ணனை விண்ணோர் பரவும் தலைமகனைத் [துழாய்விரைப்
பூமருவு கண்ணி எம்பிரானைப் பொன்மலையை
நாம் மருவி நன்கு ஏத்தி உள்ளி வணங்கி நாம் மகிழ்ந்து [ஆட நாஅலர்
பாமருவி நிற்கத் தந்த பான்மையே! வள்ளலே!

பொ - ரை:—தாமரைக்கண்ணனைப் விண்ணோர் துதிக்கின்ற தலைமகனைப் வாசனையையுடைய பூக்கள் பொருந்திய திருத்துழாய் மாலையைத் தரித்த எம்பிரானைப் பொன்மலையாய் இருக்கின்ற உன்னை, வள்ளன்மை உடையவனே! நான் வந்து கிட்டி நன்கு ஏத்தி நினைத்து வணங்கி நான் மகிழ்ந்தாடும்படியாக நாவிலே அலரும்படியான பாசுரங் களிலே பொருந்தி நிற்கும்படி திருவருள் செய்த தன்மைதான் என்னே!

வி - கு:—'தாமரைக்கண்ணனை' என்பது போன்ற இடங்களில் ஐகாரம்: அசைநிலை. அலர் பா: வினைத்தொகை.

ஈடு:—மூன்றாம் பாட்டு. [2] நித்தியசூரிகளுக்கும் அவ்வரு கானவன் தன்னை நான் தேசிகனாய் அநுபவிக்கும்படி பண் ணின இதுவும் ஓர் ஔதார்யமேதான் என்கிறார்.

1. சொட்டைக்குலம்-ஸ்ரீநாதமுனிகளுடைய திருவம்சம். ஆளவந்தார்-ஸ்ரீநாதமுனிகளுக்குத் திருப்பேரனார்.

2. "விண்ணோர் பரவும் தலைமகனை, நா அலர் பா மருவி நிற்கத் தந்த பான்மையே வள்ளலே" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை.

தாமரைக் கண்ணனை விண்ணோர் பரவும் தலைமகனை - ஒருகால் திருக்கண்களாலே குளிர நோக்கினால் அதிலே தோற்றுச் சன்னிசுரம் பிடித்தவர்களைப் போன்று [1] அடைவுகெட ஏத்தாநிற்பர்கள் ஆயிற்று நித்தியசூரிகள். [2] "ஜமதக்நியின் புதல்வரும் அடைவுகெடப் பேசுகிறவருமான பரசுராமனிடத்தில் இப் பொருள் கேட்கப்பட்டது" என்பது பாரதம். தலைமகனை - இவர்கள் ஏத்தாநின்றாலும் [3] "குற்றம் இல்லாதவர், அடைவதற்கு முடியாதவர்" என்கிறபடியே, அவன் பரன் ஆகவே இருப்பான். துழாய் விரை பூ மருவு கண்ணி எம்பிரானை - விரையும் பூவும் மருவி இருந்துள்ள துழாய்க் கண்ணி எம்பிரானை. நித்தியசூரிகளைக் கண் அழகாலே தோற்பித்தான்; இவரைக் கண்ணியிலே அகப்படுத்தினான். அதாவது - மார்வில் மாலையைக் காட்டி [4] மால் ஆக்கினான் என்றபடி. பொன் மலையை - என்னுடைய கலவியால் எல்லை இல்லாத அழகையுடையவனாய், கால்வாங்கமாட்டாதே இருக்கிறவனை. இனி, தாம் ஏத்தியபடியாலே வளர்ந்தபடியைத் தெரிவிப்பார் [5] '**பொன் மலையை**' என்கிறார் எனலுமாம். ஆக, இதனால், இவரைப் பெற்ற பின்பு வளர்ந்து புகர் பெற்றபடியைத் தெரிவித்தபடி. நாம் மருவி - [6] "அருவினையேன்" என்று அகலக்கூடிய நாம் கிட்டி. நன்கு ஏத்தி - நித்தியசூரிகள் ஏத்தக்கூடிய பொருளை நன்றாக ஏத்தி; [7] "வானவர் சிந்தையுள் வைத்துச் சொல்லும் செல்வனை, எந்தையே என்பன்" என்று முன்பு அகன்றவர் ஆதலின், இப்பொழுது '**நாம் நன்கு ஏத்தி**' என்கிறார். இனி [8] "அந்த ஆனந்த குணத்தினின்றும் மனத்தொடு வாக்குக்கள்

1. பரவுதல் - அடைவு கெடக் கூப்பிடுதல்; இது, பக்தி பாரவஸ்யத்தின் தொழில்.

2. பாரதம் மோக்ஷதர்மம். இச் சுலோகம், அடைவு கெடப் பேசுதற்கு மேற்கோள்.

3. ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 1: 48.

4. மால்ஆக்கினான் - மயக்கத்தை அடையச் செய்தான்.

5. "பொன்மலையை" என்றதற்கு இரண்டு கருத்து அருளிச்செய்கிறார்: ஒன்று, நின்ற நிலையிலே நிற்றல்; ஒன்று, வளர்தல்.

6. திருவாய்மொழி. 1. 5: 1.

7. திருவாய்மொழி. 1. 10: 7.
"நன்கு ஏத்தி" என்பதற்கு இருபொருள்: ஒன்று, தாழ்மையை நினைத்து அகன்ற நான் அது தவிர்ந்து நன்றாக ஏத்தி என்பது. மற்றொன்று, அபரிச்சிந்ந விஷயத்தை மறுபாடுருவ ஏத்தி என்பது. மறுபாடுருவல் - பின்னே புறப்படுதல்.

8. தைத்திரீய. ஆனந். 9: 1.

திரும்புகின்றனவோ'' என்கிறபடியே, வேதங்களுங்கூட மீண்ட விஷயத்தை மறுபாடுருவ ஏத்துகின்றார் ஆதலின் 'நன்கு ஏத்தி' என்கிறார் எனலுமாம்.

உள்ளி- [1]''நினைந்து'' என்று அநுசந்தானத்திற்குப் பிராயச்சித்தம் தேடவேண்டாமல் நினைத்து. வணங்கி-குணங்களின் பலாத்காரத்தால் தூண்டப்பட்டுச் செருக்கு அற்று வணங்கி. இனி [2]''வணங்கினால், உன் பெருமை மாசு உணாதோ'' என்ற நாம் வணங்கி எனலுமாம். நாம் மகிழ்ந்து ஆட - பகவானுடைய அநுபவத்தால் வந்த பிரீதியான பொருளைக் கனக் கண்டு அறியாத நாம் மகிழ்ந்தவராய் அதற்குப் போக்குவிட்டு ஆட. நா அலர் பா மருவி நிற்க தந்த பான்மையே வள்ளலே - நாட்பூ அலருமாறு போன்று நாக்கின் நுனியிலே மலர்கின்ற பாவானது என்பக்கலிலே நிற்கும்படியாகத் தந்த இதுதன்னை இயல்பாக உடையையாய் இருக்கிற பரம உதாரனே! [3]மனத்தின் துணையும் வேண்டாதபடி இருத்தலின் 'நா அலர் பா' என்கிறார்.

தாமரைக் கண்ணனைய் விண்ணோர் பரவும் தலைமகனைய்த் துழாய் விரைப் பூ மருவு கண்ணி எம்பிரானைய்ப் பொன்மலையாய் இருக்கிற தன்னை, நாம் மருவி நன்கேத்தி உள்ளி வணங்கி நாம் மகிழ்ந்து ஆடும்படி, நா அலர் பா மருவி நிற்கத் தந்த பான்மை [4]ஏய்ந்த வள்ளலே! என்று சொல்லுகிறார் ஆகவுமாம். அன்றி, 'தாமரைக் கண்ணனை' என்பது போன்ற இடங்களிலுள்ள ஐகாரத்தை அசைநிலை ஆக்கி, தாமரைக் கண்ணனைய்-பொன்மலையாய் இருக்கிற நீ, நாம் மருவி - நா அலர் பா மருவி நிற்கத் தந்த பான்மையே - இதுவும் ஒரு தன்மையே! வள்ளலே - பரமோதாரனே! என்கிறார் ஆகவுமாம். (3)

---

1. திருவாய். 1. 5 : 1.
'அநுசந்தானத்துக்குப் பிராயச்சித்தம் தேடவேண்டாமல்' என்றது, தம் தாழ்மையை நினைத்து, அகலவேண்டாமல் என்றபடி. பிராயச்சித்தம் - ஈண்டு அகலுதல்.

2. திருவாய். 1. 5: 1.

3. முதற்பத்து, 213-ஆம் பக். ''பாடும் என் நா அவன் பாடல்'' என்றதன் உரையை ஈண்டு ஒப்பு நோக்குக.

4. இவ்வாறு பொருள் அருளிச்செய்வதனால் ''பான்மை ஏய் வள்ளலே'' என்ற பாடமும் உண்டு போலும். பன்னீராயிரப்படி உரைகாரர் 'பான்மை ஏய்' என்ற பாடமே கொண்டார். இருபத்து நாலாயிரப்படி உரைகாரர் இரண்டு பாடமும் கொண்டுள்ளார்.

169.

வள்ளலே! மதுசூதனா! என் மரதக மலையே! [உன்னை நினைந்து
எள்கல் தந்த எந்தாய்! உன்னை எங்ஙனம் விடுகேன்?
வெள்ளமே புரை நின் புகழ் குடைந்து ஆடிப் பாடிக் [களித்து உகந்துகந்து
உள்ள நோய்கள்எல்லாம் துரந்து உய்ந்து போந்து இருந்தே.

பொ - ரை:—வள்ளலே! மதுசூதனா! என்னுடைய மரதக மலையே! உன்னை நினைத்தலால், மற்றைப் பொருள்களை இகழும்படியான தன்மையை எனக்குக் கொடுத்த எந்தையே! வெள்ளத்தைப் போன்ற நினது புகழ்களில் மூழ்கி ஆடிப் பாடி மகிழ்ந்து அம் மகிழ்ச்சியிலே உயர்ந்து என்னிடத்திலுள்ள நோய்களை எல்லாம் நீக்கி அதனால் உயர்வுபெற்று உன்னிடத்திற் போந்திருந்தேன்; ஆதலால், இனி, உன்னை எங்ஙனம் விடுகேன்! என்றவாறு.

வி - கு:—நினைந்து: செயவென் எச்சத்திரிபு. நினைத்தலால் எள்கல் தந்த எந்தாய் என்க. புரை: உவம உருபு. உகத்தல் - உயர்தல்; "உகப்பே உயர்தல் உவப்பே உவகை" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். இருந்து: வினைமுற்று. "கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும், தொல்லது விளைந்தென நிலம் வளம் கரப்பினும்" (புறம். 203.) என்ற இடத்துக் கழிந்து, பொழிந்து என்பன, வினைமுற்றுப் பொருட்டாதல் காண்க. அன்றி, இதனை எச்சமாகக் கோடலுமாம்.

ஈடு:—நாலாம் பாட்டு. "நாம் மருவி நன்கு ஏத்தி உள்ளி வணங்கி நாம் மகிழ்ந்து ஆட" என்று தம்முடைய தாழ்வினைச் சொன்னவாறே, 'இவர் நம்மை விடின் செய்வது என்?' என்று அவன் ஐயம்கொள்ள, 'நிர்ஹேதுகமாக [1] உன் வடிவழகை என்னை அநுபவிப்பிக்க அநுபவித்து அத்தாலே உருக்குலைந்த நான் உன்னை விடக் காரணம் உண்டோ?' என்கிறார்.

வள்ளலே - [2] நிர்ஹேதுகமாக உன்னை எனக்குத் தந்த பரம உதாரனே! மதுசூதனா - நீ உன்னைத் தருமிடத்தில் நான் ஏற்றுக்கொள்ளாதபடி பண்ணும் விரோதிகளை, மதுவாகிற

---

1. 'உன் வடிவழகை' என்றது "மரதக மலையே" என்றதனை நோக்கி. "எள்கல்" என்ற பதத்தின் இரண்டாவது பொருளை நோக்கிக் 'உரு குலைந்த நான்' என்கிறார். "எங்ஙனம் விடுகேன்" என்றதனை நோக்கி 'விடக் காரணம் உண்டோ? என்கிறார்.

2. ஒரு காரண முன்னாகக் கொடுத்தால், அது ஔதார்யமல்லாமையாலே 'நிர்ஹேதுகமாக' என்கிறார். நிர்ஹேதுகம் - காரணம் இல்லாமை.

அசுரனை அழித்தது போன்று அழித்தவனே! என் மரதக மலையே - [1] உன்னை நீ ஆக்கும் படி உன்னிலும் சீரியதாய், சிரமத்தைப் போக்கக் கூடியதாய், அளவிட முடியாத வடிவழகை அன்றோ எனக்குக் கொடுத்தாய். உன்னை நினைந்து எள்கல் தந்த எந்தாய் - உன்னை நினைத்தால் மற்றைப் பொருள்களை நான் விடும்படி பண்ணினவனே! இனி, எள்கல் தந்த என்பதற்கு, உன்னை நினைத்தால், [2]"காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்கிறபடியே, அள்ளி எடுக்க வேண்டும்படி பண்ணித் தந்த என் நாயனே! என்று பொருள் கூறலும் ஆம். எள்கல்-ஈடுபாடு. முன்னைய பொருளில், கொடைத் தன்மை விளங்கும். உன்னை எங்ஙனம் விடுகேன்-[3] உன் விஷயத்திலே இப்படி ஈடுபட்ட யான் உன்னை விடக் காரணம் உண்டோ? என்னுதல்; உன்னை நினைத்தால் மற்றைப்பொருள்களில் விரக்தனை யான் விட மரியாதை உண்டோ? என்னுதல். [4] உதாரன் அல்லன் என்று விடவோ? விரோதியை அழிக்கின்றவன் அல்லன் என்று விடவோ? உனக்கு வடிவழகு இல்லை என்று விடவோ? எங்ஙனம் விடுவேன்? என்றபடி.

இனி, மேல் எல்லாம் அவனுடைய ஐயத்தினைத் தீர்க்கிறார்: வெள்ளமே புரை நின் புகழ் குடைந்து ஆடிப் பாடிக் களித்து உகந்து உகந்து - கடலோடு ஒத்திருந்துள்ள உன்னுடைய நற்குணங்களை நாலு மூலையும் புக்குப் பரந்து, நான் [5] மறுநனைந்து பிரீதியினாலே தூண்டப்பட்டவனாய்க் கொண்டு பாடி, அத்தாலே செருக்கி மிகவும் பிரீதனாய். உள்ள நோய்கள் எல்லாம் துரந்து - கர்மம் காரணமாக வருமவை, உன்னைப் பிரிந்து படுமவை, "தாழ்ந்தவன்" என்று அகன்று வருமவை,

---

1. 'உன்னை நீ ஆக்கும் படி' என்றது, உன்னைப் 'பரன்' என்று பிரகாசிப்பிக்கிற படி என்றபடி. படி - திருமேனி. "உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதலும் அரிதே" என்றார் திருத்தக்க தேவரும்.

2. பெரிய திருவந். 24.

3. மேல், 'எள்கல் தந்த' என்பதற்குக் கூறிய இருவகைப் பொருள்களோடு இங்குக் கூறப்படும் இருவகைப் பொருள்களையும் முறையே பொருத்திக்கொள்க.

4. 'உதாரன் அல்லன் என்று விடவோ?' என்றது முதலான மூன்று பொருள்களும் "வள்ளலே! மதுசூதனா! என் மரதகமலையே!" என்ற மூன்றையும் நோக்காகக் கொண்டு எழுந்தன.

5. மறுநனைதல் - மறுபாடுருவ நனைதல்; அதாவது - பூர்ணாநுபவம் பண்ணி என்றபடி.

முதலிய நோய்கள் எல்லாவற்றையும் ஓட்டி. உய்ந்து - [1] "கடவுள் உளன் என்று நினைத்தால் இவனும் உள்ளவன் ஆகின்றான்" என்கிறபடியே உய்வு பெற்று. போந்து - சம்சாரிகளைக் காட்டிலும் வேறு பட்டவனாய். இருந்து - பாரம் இல்லாதவனாய் இருந்து. வள்ளலே! மதுசூதனா! உன்னை எங்ஙனம் விடுகேன்? என்க. (4)

170.

உய்ந்து போந்து என் உலப்பு இலாத வெம் தீவினைகளை
[நாசஞ்செய்து உனது
அந்தம் இல் அடிமை அடைந்தேன் விடுவேனோ?
ஐந்து பைந்தலை ஆடு அரவணை மேவிப் பாற்கடல்
[யோக நித்திரை
சிந்தை செய்த எந்தாய்! உன்னைச் சிந்தை செய்து செய்தே.

பொ - ரை :— *திருப்பாற்கடலில் பசிய ஐந்து தலைகளையுடைய ஆடுகின்ற ஆதிசேஷ சயனத்தில் பொருந்தி யோகநித்திரையில் காக்கும் வகையைச் சிந்தை செய்த என் சுவாமியே! உன்னை நினைத்து நினைத்து அதனால் உய்வுபெற்று, உலகமக்களில் வேறுபட்டு, என்னுடைய அளவு இல்லாத கொடிய பாவங்களை அழித்து, உன்னுடைய முடிவு இல்லாத நித்தியமான கைங்கரியத்திலே சேர்ந்துள்ள நான், இனி விடுவேனோ? என்கிறார்.*

வி - கு :— சிந்தை செய்து உய்ந்து போந்து நாசம் செய்து அடிமை அடைந்தேன் எனக் கூட்டுக. அடைந்தேன் : வினைபாலணையும் பெயர். சிந்தை செய்து, நாசஞ்செய்து என்பன : ஒருசொல் நீர்மைய. செய்து செய்து : அடுக்கு. மேவி சிந்தை செய்த எனக் கூட்டுக. அந்தம் இல் அடிமை - நித்தியமான அடிமை.

ஈடு :— ஐந்தாம் பாட்டு. [2] ஆத்மாந்த தாஸ்யத்திலே அதிகரித்த நான் உன்னை விடப் பிரசங்கம் உண்டோ? என்கிறார்.

உய்ந்து - நான் உளேனாய்ப் போந்து - சம்சாரிகளில் வேறுபட்டவனாய்ப் போந்து. என் உலப்பு இலாத வெம் தீவினைகளை நாசம் செய்து - என்னுடைய முடிவு இல்லாமல் இருக்கிற கொடிய பாவங்களை வாசனையோடே போக்கி. உன் அந்தம் இல் அடிமை அடைந்தேன் விடுவேனோ - [3] உன் திருவடிகளிலே

1. உபநிடதம்.

2. "உனது அந்தமில் அடிமை அடைந்தேன் விடுவேனோ?" என்றதனை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார். ஆத்மாந்த தாஸ்யம் - உயிர் உள்ள வரையிலும் உள்ளதான கைங்கரியம்.

3. அடிமை செய்வது திருவடிகளிலே ஆதலின் 'உன் திருவடிகளிலே' என்கிறார்.

ஆத்மாந்த தாஸ்யத்திலே அதிகரித்த நான் இனி விடக் காரணம் உண்டோ? [1]வேறு விஷயங்களை விரும்பினேனோ விடுகைக்கு? சொரூப சித்தி இல்லாமல் ஒழிந்து விடுகிறேனோ? தொண்டின் பரிமளத்தில் சுவடு அறியாமல் விடுகிறேனோ? எனக்குத் தெவிட்டி விடுகிறேனோ? என்றபடி.

[2]ஐந்து பைந்தலை ஆடு அரவணை மேவிப் பாற்கடல் யோக நித்திரை சிந்தை செய்த எந்தாய் - பெருவெள்ளத்துக்குப் பல [3]வாய்த்தலைகள் போலே, பகவானுடைய அநுபவத்தால் வந்த மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாகப் பல தலைகளை உடையவனாய், கட்குடியரைப் போலே ஆடுகின்றவனாய், [4] சைத்திய சௌகுமார்ய சௌகந்தியங்களை உடையனான திருவனந்தாழ்வான் மேலே, திருப்பாற்கடலிலே 'எல்லாப்பிராணிகளும் கரைமரம் சேர்ந்தாம் விரகு என்?' என்று யோகநித்திரையில் திருவுள்ளம் செய்த என் நாயன் ஆனவனே! யோகநித்திரை: [5] "பரம புருஷன் வாசுதேவன் என்ற தன்னைச் சிந்தித்துக்கொண்டு தனது மாயாரூபமான பிரகிருதி சம்பந்தம் இல்லாத யோகநித்திரையை அடைந்தார்" என்கிறபடியே, தன்னை நினைத்தல். எந்தாய் - நீர்மையைக் காட்டி என்னை உனக்கே உரிமை ஆக்கினவனே! உன்னைச் சிந்தை செய்து செய்து - நான் நினைக்கைக்குக் கிருஷிசெய்த உன்னை நினைத்துவைத்து விடக் காரணம் உண்டோ? என மேலே கூட்டுக. (5)

171.

உன்னைச் சிந்தை செய்து செய்து உன் நெடு மா மொழி
[இசை பாடி ஆடி என்
முன்னைத் தீவினைகள் முழுவேர் அரிந்தனன் யான்
உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த இரணியன் அகன்
[மார்வம் கீண்ட என்
முன்னைக் கோள் அரியே! முடியாதது என் எனக்கே?

---

1. பாசுரத்திலுள்ள "உனது", "உய்ந்து", "அடிமை", "அந்தம் இல்" என்ற பதங்களை நோக்கி 'வேறு விஷயங்களை விரும்பினேனோ விடுகைக்கு?' என்பது முதலான நான்கு வாக்கியங்களையும் அருளிச்செய்கிறார். சுவடு - ரசம்.

2. "பாடிமிழ் பரப்பகத்து அரவணை யசைஇய
ஆடுகொள் நேமியான்" (105) என்பது கலித்தொகை.

3. வாய்த்தலை - வாய்க்கால்கள்.

4. சைத்திய சௌகுமார்ய சௌகந்தியங்கள் - குளிர்ச்சி மென்மை நறுநாற்றங்கள்.

5. ஸ்ரீ விஷ்ணுபுரா. 6. 4: 6.

பொ - ரை :— உன்னை மனத்தால் இகழ்ந்த இரணியனுடைய அகன்ற மார்வைப் பிளந்த, என்னுடைய முன்னை நரசிங்கமே! உன்னை நினைத்து நினைத்து உன்னுடைய பெருமை பொருந்திய திருவாய் மொழியைப் பெருமை பொருந்திய இசையோடு பாடி, அதற்குத் தக ஆடி, என்னுடைய பழமையான கொடிய பாவங்களை அடியோடு அழித்தேன் யான்; இனி, எனக்கு முடியாத காரியம் யாது உளது?

வி - கு :— சிந்தை செய்து பாடி ஆடி அரிந்தனன் எனக் கூட்டுக. முன்னை என்பது, அடியனான பிரஹ்லாதன் நினைவுக்கு முற்கோலின வன் என்னும் பொருளது. என் என்பது, எவன் என்னும் வினைப் பெயர் என் என்று ஆய், ஈண்டு இன்மை குறித்து நின்றது.

ஈடு :— ஆறாம்பாட்டு. [1] அடியவன் சூளுறவு செய்த அக் காலத்திலே தோற்றுவான் ஒருவனை பின்பு எனக்குச் செய்ய வேண்டிய காரியம் ஒன்று உண்டோ? என்கிறார்.

உன்னைச் சிந்தை செய்து செய்து - இனிமையாலே விட ஒண்ணாது இருக்கிற உன்னை மாறாமல் நினைத்து. உன்னை - இனியனுமாய் அடையத் தகுந்தவனுமான உன்னை. சிந்தை செய்து செய்து - [2] "தியானம் செய்யத் தக்கவன்" என்கிற ஒரு விதியினாலே தூண்டப்பட்டவனா யல்லாமல், இனிமையாலே விடமாட்டாமல் எப்பொழுதும் நினைத்து.உன் நெடு மா மொழி இசை பாடி ஆடி - இயலும் இசையும் கரை காண ஒண்ணாதபடி இருக்கிற மொழியைப் பாடி, அது இருந்த இடத்தில் இருக்க ஒட்டாமையால் ஆடி. **நெடு, மா** என்ற இரண்டும், மொழிக்கும் இசைக்கும் அடைமொழிகள்; இயலின் பெருமையையும் இசையின் பெருமையையும் சொல்ல வந்தன. என் முன்னைத் தீவினைகள் முழு வேர் அரிந்தனன் யான் - என்னுடைய பல காலமாக ஈட்டப்பட்ட கர்மங்களை வாசனையோடே போக் கினேன். முழு வேர்-வேர் முழுக்க.அதாவது-பக்க வேரோடே என்றபடி. பாவங்களைப் போக்கினவன் இறைவன் ஆயினும் பலத்தை அடைந்தவர் தாம்ஆகையாலே '**அரிந்தனன் யான்**' எனத் தம் தொழிலாகக் கூறுகிறார்.

உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த - வார்த்தையோடு நில் லாது நெஞ்சினாலும் இகழ்ந்தவன். இத்தால், அவன் விடுவது, மனம் அறிந்தே தீவினைகளைச் செய்தவர்களை; கைக்கொள்ளு

1. "என் முன்னைக் கோளரியே முடியாதது என் எனக்கே" என்றதனை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. பிருகதாரண்ய உபநிடதம். 4 : 5.

கைக்கு நட்புத் தன்மையே அமையும் என்றபடி. இரணியன் அகன் மார்வம் கீண்ட - இரணியனுடைய அகன்ற மார்வைப் பிளந்த. வரபலம் தோள்பலம் [1] ஊட்டியாக வளர்ந்த சரீர மானது [2] திரு உகிருக்கு [3] இரை போராமையாலே, வருத்தம் இன்றிக் கிழித்துப் பொகட்டான் என்பார் "**அகன் மார்வம் கீண்ட**" என்கிறார். என் முன்னைக் கோள் அரியே - [4] நரசிம்ஹ மாய் உதவியதும் தமக்கு என்று இருக்கிறார்; அடியார்களில் ஒருவருக்குச் செய்ததும் தமக்குச் செய்ததாக நினைத்து இராத அன்று பகவத் சம்பந்தம் இல்லையாம் இத்தனை. இதனால், எனக்குப் பண்டே உதவி செய்தவனே! என்கிறார் என்றபடி. கோளரி-"மஹாவிஷ்ணும்" என்கிற [5] மிடுக்கையுடைய சிங்கம் என்னுதல். [6] "ஜ்வலந்தம்" என்கிற ஒளியையுடைய சிங்கம் என்னுதல். முடியாதது என் எனக்கே - நீ, சூளுறவு செய்த அக் காலத்திலேயே தோற்றுவாய் ஆயிற்ற பின்பு எனக்கு முடியாதது உண்டோ? (6)

172.

முடியாதது என் எனக்கேல் இனி? முழு ஏழ் உலகும்
[உண்டான் உகந்து வந்து
அடியேன் உட்புகுந்தான் அகல்வானும் அல்லன் இனிச்
செடியார் நோய்கள் எல்லாம் துரந்து எமர் கீழ் மேல்
[எழு பிறப்பும்
விடியா வெம் நரகத்து என்றும் சேர்தல் மாறினரே.

பொ-ரை:—ஏழ் உலகங்கள் முழுதினையும் உண்டவன், விரும்பி வந்து அடியேன் மனத்திலே புகுந்தான்; இனி, நீங்குமவனும் அல்லன்; கீழ் எழு பிறப்புக்களிலும் மேல் எழு பிறப்புக்களிலும் உள்ள என்னுடைய உறவினர், பாவங்கள் காரணமாக வருகின்ற துன்பங்கள் எல்லாம் நீங்கி, ஒருநாளும் விடியாத கொடிய நரகத்திலே சேர்தலை எப்பொழுதும் நீங்கினர்; ஆதலால், எனக்கு முடியாதது என்? என்கிறார்.

---

1. ஊட்டியாக - உணவாக.
2. திருஉகிர் - அழகிய நகம்.
3. இரை - இலக்ஷ்யம்.
4. "என் கோளரியே" என்றதில் "என்" என்பதில் நோக்கமாக 'நரசிம்ஹமாய்' என்று தொடங்கும் வாக்கியத்தை அருளிச்செய்கிறார்.
5. மிடுக்காவது - சர்வலோக வியாபன சக்தி
6. ஜ்வலந்தம் - பிரகாசிப்பது. "மஹாவிஷ்ணும்", "ஜ்வலந்தம்" இவை, நரசிம்ஹ அநுஷ்டுப்பில் உள்ளவை.

வி - கு :—முழு என்பது, எஞ்சாமையைக் காட்ட வந்தது; "முழுது என் கிளவி எஞ்சாப் பொருட்டே" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். உண்டான்: வினையாலணையும்பெயர். "எழுபிறப்பும் தீயவை தீண்டா பழி பிறங்காப், பண்புடை மக்கள் பெறின்" என்ற திருக்குறளுக்கு விரிவுரையாகவும் உதாரணமாகவும் அமைந்தது இப்பாசுரம் எனலாம். எமர் துறந்து சேர்தல் மாறினர் என முடிக்க.

ஈடு :—ஏழாம் பாட்டு. [1] என் அளவில் செய்த திருவருள் என்னுடைய சம்பந்தி சம்பந்திகள் அளவும் சென்றது காண்மின் என்கிறார்.

முடியாதது என் எனக்கேல் இனி - எனக்காகில் இனி முடியாதது உண்டோ? எனக்கு இனி [2] அநவாப்தமாய் இருப்பது ஒன்று உண்டோ? என்றபடி. நீர் இது என் கொண்டு சொல்லுகிறீர்? என்ன, முழு ஏழ்உலகும் உண்டான் உகந்து வந்து அடியேன் உள் புகுந்தான் - பிரளய ஆபத்திலே அகப்பட்ட பூமி, தன் வயிற்றில் புகாதபோது படும்பாடு அடங்க, தான் என் பக்கல் புகாதபோது படுவானாய் வந்து புகுந்தான்; எனக்கு இனி முடியாதது உண்டோ? சம்பந்தத்தைப் பார்த்துப் புகுந்தான் என்பார் '**அடியேன் உள் புகுந்தான்**' என்கிறார். ஒரு நீராகக் கலந்தான் என்பார் '**உள் புகுந்தான்**' என்கிறார். தன்பக்கல் உலகம் புக்கது போன்று அன்றி, மகிழ்ந்து புக்கானாதலின் '**உகந்து புகுந்தான்**' என்கிறார். ஆயின், இவனுக்கும் உலகத்துக்கும் செல்லாமை ஒக்கும், உவப்பே இவ் விஷயத்தில் [3] தன் ஏற்றம். இனி அகல்வானும் அல்லன் - அந்தப் பூமிக்குப் பிரளயம் நீங்கினவாறே அகல வேண்டும்; இவனுக்கு அதுவும் இல்லை. அகல ஒண்ணாமைக்குக் காரணம் என்? எனின், சேதநரைப் போலே பாவத்தாலே அகன்று ஒரு புண்ணியத்தாலே கிட்டுமது இல்லையே இவனுக்கு? ஆதலின், '**அகல்வானும்அல்லன்**' என்கிறார். ஆக, முதலிலே பிரிவைப் பற்றிப் பேசவும் உடன்படுகின்றிலன் என்றபடி.

---

1. "எமர் கீழ் மேல் எழுபிறப்பும் விடியா வெம் நரகத்துச் சேர்தல் என்றும் மாறினர்" என்ற பதங்களை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. அநவாப்தமாய் - முடியப்பெறாததாய்.

3. 'உவப்பே இவ் விஷயத்தில் தன்னேற்றம்' என்றது, ஆழ்வார் விஷயத்தில் இறைவனுக்குண்டான உவப்பே இறைவனுக்கு ஏற்றம் என்றபடி. அன்றி, 'இவ் விஷயத்தில்' என்றதனை ஈசுவரனைக் கோடலுமாம்.

உம்மை அவன் இப்படி விரும்பினான் ஆகில், **பனை நிழல் போலே** உம்மை நோக்கிக் கொண்டுவிட அமையுமோ? என்ன, செடியார் நோய்கள் எல்லாம் துரந்து-பாவங்களாலே நிறைந்த துக்கங்களை வாசனையோடே ஓட்டி. செடி - பாவம். இனி, செடியார் நோய் என்பதற்கு, தூறு மண்டின நோய்கள் என்று பொருள் கூறலுமாம். செடி - தூறு. விஷயப் பிராவண்யத்தால் வந்த நோய், தமது தாழ்வினை நினைத்தலால் வந்த நோய், பகவானுடைய அநுபவத்தைப் பிரிந்த பிரிவால் வந்த நோய் ஆகிய இவற்றை எல்லாம் நினைத்து '**நோய்கள் எல்லாம்**' என்கிறார். ஆயின், [1]"உள்ள நோய்கள் எல்லாம் துரந்து" என்ற இடத்திலும் கூறிற்றிலரோ இவற்றை? என்னில், அங்குக் கூறியது - தம் அளவு. இங்குக் கூறுவது - தம் சம்பந்தி சம்பந்திகளுடைய விஷயம். இப்படி இவர்கள் ஓட்டியது எதனாலே? என்னில், எமர் - வேறு ஒன்றால் அன்று; என்னுடைய சம்பந்தமே காரணமாக. சம்பந்தம் எவ்வளவு? என்னில், கீழ் மேல் எழு பிறப்பும்!- கீழ் எழுபடிகாலும் மேல் எழுபடிகாலும் [2]தம்முடன் எழுபடிகாலும் ஆக இருபத்தொரு படிகால்.

விடியா வெம் நரகத்து - ஒருநாள் வரையிலே பாவங்கள் குறைந்தவாறே விடியும் தன்மையையுடையது எமன் தண்டம்; [3]இது விடியாத நரகம் ஆதலின் '**விடியா நரகம்**' என்கிறார். "நரகம்" என்று புத்தி பிறக்கும் அந் நரகத்தில், [4]தண்மை தோற்றாத நரகம் இது ஆதலின் '**வெம் நரகம்**' என்கிறார். என்றும் சேர்தல் மாறினர் - என்றும் கிட்டக்கூடிய தண்மை தவிர்ந்தார்கள். நானும் பிரார்த்திக்க வேண்டிற்று இல்லை, அவனும் நினைப்பிட வேண்டிற்று இல்லை என்பார் '**மாறினர்**' என்று [5]அவர்கள் வினையாக அருளிச்செய்கின்றார். எதனாலே? என்னில், என் பக்கல் அவன் பண்ணின பக்ஷபாத ராஜ குலத்தாலே மாறிக்கொண்டு நின்றார்கள் என்றபடி. (7)

---

1. திருவாய்மொழி. 2. 6 : 4.

2. 'தம்முடன் எழுபடிகால்' என்றது, தமக்கு முன்னே மூன்று பேரும், பின்னே மூன்று பேரும், தாமுமாக எழுவர். இருபத்தொருபடிகால் - இருபத்தொரு தலைமுறை.

3. இது - சம்சாரம்.

4. தண்மை - தாழ்வு.

5. மேல்பாசுரத்தில் "அரிந்தனன் யான்" என்றதன் வியாக்கியானத்தை ஈண்டு ஒப்பு நோக்குக.

173.

மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து அடியை அடைந்து
[உள்ளம் தேறி
ஈறில் இன்பத்து இருவெள்ளம் யான் மூழ்கினன்
பாறிப் பாறி அசுரர்தம் பல்குழாங்கள் நீறு எழப்
[பாய் பறவை ஒன்று
ஏறி வீற்றிருந்தாய்! உன்னை என்னுள் நீக்கேல் எந்தாய்!

பொ - ரை :—அசுரர்களுடைய பல கூட்டங்கள் நிலை கெட்டு ஓடவும், அவ்விடத்தில் புழுதி எழவும், பகைவர்கள்மேல் பாய்கின்ற ஒப்பற்ற கருடப்பறவையின்மேல் ஏறி வீற்றிருந்தவனே! மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து திருவடிகளை அடைந்து அதனால் உள்ளம் தெளிந்து முடிவுஇல்லாத இன்பமாகிய பெரிய வெள்ளத்திலே யான் மூழ்கினன்; இனி, எந்தாய்! உன்னை என்னுள் நீக்கேல்.

வி - கு :—மாறிப் பிறந்து அடைந்து தேறி மூழ்கினன் எனவும், பாறி எழ ஏறி வீற்றிருந்தாய் எனவும் கூட்டுக. மாறி மாறி, பாறிப் பாறி என்பன: அடுக்குத்தொடர்; மிகுதிப்பொருளைக் காட்ட வந்தன. பாறி - பாற. வீற்றிருத்தல் - வேறொன்றற்கு இல்லாத பெருமையோடு தங்கியிருத்தல்; வீறு - வேறொன்றற்கு இல்லாத பெருமை. நீக்கேல்: எதிர்மறைமுற்று.

ஈடு :—எட்டாம் பாட்டு. [1] இப்படி, கனத்த பேற்றுக்கு நீர் செய்த நல்வினை என்? என்ன, ஒரு நல்வினையால் வந்தது அன்று, நான் பிறந்து படைத்தது என்கிறார். அதுவும் ஒன்று உண்டு, அந்தாதியாகப் பிறந்து போந்தேன் என்கிறார்.

மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து - சம்பந்தி சம்பந்திகளோடு உம்மை ஏற்றுக் கொள்ளுவதற்கு நீர் செய்தது என்? என்ன, கடலுக்குள்ளே கிடந்த ஒரு துரும்பு திரைமேல் திரை

---

1. "பிறந்து" என்றதனை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார். 'இப்படி, கனத்த பேற்றுக்கு' என்றது, சம்பந்தி சம்பந்திகள் அளவும் சம்சார விச்சேத ரூப பலத்துக்கு என்றபடி. 'நான் பிறந்து படைத்தது' என்றது, நான் பிறவாநிற்கச்செய்தே பெற்றது. அதாவது - துர்க்கதியே பற்றாசாக அங்கீகரித்தான் என்றபடி. ஜன்மசித்தம் என்பது தொனிப்பொருள். "மாறி மாறி" என்றதனை நோக்கி அருளிச்செய்கிறார் 'அதுவும் ஒன்று உண்டு' என்று தொடங்கி. 'அதுவும் ஒன்று உண்டு' என்றது, நல்வினை இல்லை எனலாகாது; நல்வினையும் உண்டு என்றபடி. நல்வினையாவது, அந்தாதியாகப் பிறக்கை. அந்தாதியாகப் பிறக்கையாவது - முன்னைய சரீரத்தினுடைய அந்தம் அடுத்த சரீரத்துக்கு ஆதியாகும்படி பிறத்தல். பின் வாக்கியத்தால் இறைவனுடைய நிர்ஹேதுகம் போதரும்.

மாகத் தள்ள வந்து கரையிலே சேருமாறு போன்று, மாறி மாறிப் பிறந்து வாராநிற்க, திருவடிகளிலே கிட்டிக்கொண்டு நிற்கக் கண்டேன் இத்தனை. பாவங்களை அநுபவித்து மீளுதல், பிராயஸ்சித்தம் பண்ணி மீளுதல் செய்யக் காலம்இல்லை என்பார் '**மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து**' என்கிறார். *அடியை அடைந்து உள்ளம் தேறி* - இதனால், உள்ளம் தேறி அடியை அடைந்தவன் அல்லன், அடியை அடைந்து உள்ளம் தேறினவன் என்கிறார். நெடுநாள் உள்ள விஷய வாசனையாலும் பகவானைப் பற்றாத காரணத்தாலும் உள்ள மனத்தின் மயக்கம் நீங்கித் தெளிந்து. தெளிந்த அளவே அன்றியே, [1] *ஈறு இல் இன்பத்து இரு வெள்ளம் மூழ்கினன் யான்* - முடிவில்லாமல் இருக்கின்ற பெரிய ஆனந்தக்கடலிலே மூழ்கினேன். திருவடி, திருவனந்தாழ்வான், இவர்கள் குமிழி நீர் உண்கிற விஷயத்திலே அன்றோ யான் மூழ்கினேன் என்பார் '**யான் மூழ்கினேன்**' என்கிறார்.

ஆயின், உம்முடைய விரோதிகள் செய்த காரியம் என்? என்ன, [2] அதற்குக் கடவாரைக் கேண்மின் என்கிறார் மேல்: *அசுரர் தம் பல் குழாங்கள் பாறிப் பாறி நீறு எழப் பாய்பறவை ஒன்று ஏறி வீற்றிருந்தாய்* - அசுர வர்க்கத்தினுடைய பல வகைப்பட்ட குழாங்களானவை பாறிப் பாறி நீறு எழுந்து போகும்படியாகப் பகைவர்கள் மேலே பாயாநின்றுள்ள [3] அத்விதீயமான பறவையை மேற்கொண்டு உன்னுடைய சிறப்பின் வேறுபாடு தோன்ற இருந்தவனே! பெரிய திருவடிக்கு அத்விதீயமாவது, இறைவன் கருத்து அறிந்து நடத்தலில் தலைவனாதல். இறைவன் பகைவர்களை அழித்தற்குப் பண்ணின செயல், பெரியதிருவடி திருத்தோளில் பேராதே இருந்தது இத்தனையே என்பார் '**ஏறி வீற்றிருந்தாய்**' என்கிறார். *உன்னை என்னுள் நீக்கேல்*-ஸ்வாமியான நீ, இனி ஒரு காலமும் உன்னை என்பக்கல் நின்றும் பிரித்துக்கொண்டு போகாது ஒழிய

---

1. "ஈறில் இன்பம்" என்றது, அழியுந்தன்மையதான ஐஸ்வர்ய இன்பத்தில் வேறுபாடு. "இரு இன்பம்" என்றது, அல்ப சுகமான கைவல்ய இன்பத்தில் வேறுபாடு.

2. 'அதற்குக் கடவாரைக் கேண்மின்' என்றது, "குழாங்கள் நீறு எழப் பாய் பறவை" என்றதனை நோக்கி. 'கடவார்' என்றது, பறவையை.

3. அத்விதீயம் - தன்னைப் போன்றது ஒருபொருள் இரண்டாவதாக இல்லாதது.

வேண்டும். இனி, இதற்கு, [1] என்னோடே இப்படிக் கலந்த உன்னை, உன்னுடைய கலவியால் வந்த ரசம் அறிந்த என் பக்கல் நின்றும் நீக்க நினையாது ஒழியவேண்டும் என்று கூறலுமாம். [2] தம்முடைய இனிமையாலே ஐயம்கொள்ளுகிறார். தம் உகப்பு அவனை எதிரிட்டபடி. எந்தாய் - விரோதியைப் போக்கிக் கலக்கைக்கு அடியான சம்பந்தத்தைச் சொல்லுகிறார். எந்தாய் - என் தமப்பன். (8)

174.

எந்தாய் ! தண் திருவேங்கடத்துள் நின்றாய் ! இலங்கை
[செற்றாய் ! மராமரம்
பைந்தாள் ஏழ் உருவ ஒரு வாளி கோத்த வில்லா !
கொந்து ஆர் தண் அம் துழாயினாய் ! அமுதே ! உன்னை
[என்னுள்ளே குழைத்த எம்
மைந்தா ! வான் ஏறே ! இனி எங்குப் போகின்றதே?

பொ - ரை :—என் தமப்பனே, குளிர்ந்த திருவேங்கடத்தில் நிற்கின்றவனே, இலங்கையை அழித்தவனே, மராமரங்களினுடைய பருத்த அடிப்பாகம் ஏழும் ஊடுருவும்படி ஒப்பற்ற பாணத்தை விடுத்த வில்லையுடையவனே, குளிர்ந்த அழகிய கொத்துக்களையுடைய திருத்துழாய் மாலையை உடையவனே, அமுதம் போன்றவனே, உன்னை என்னுள்ளே கலந்த இளமைப்பருவம் உடையவனே, நித்தியசூரிகளுக்கு ஏறுபோன்றவனே, இப்பொழுது இக் கலவியை விட்டு எங்கே போகின்றாய் !

வி - கு :—வான் : இடவாகுபெயர். இனி - இப்பொழுது. போகின்றதே ! என்பது, போகாதே என்னும் பொருளது.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [3] முதலிலே உன்னை அறியாது இருக்கிற என்னை, உன்னையும் உன் இனிமையையும் அறி

---

1. " ஈறிலின்பத்து இருவெள்ளம் யான் மூழ்கினன் " என்கையாலே, ' இந்த இன்பம் நமக்குத் தொங்கப் புகுகிறதோ ?' என்று, போக்யதாதிசயத்தில் அதிசங்கை தோன்றும் பாவமாக, ' என்னோடே இப்படி' என்று தொடங்கும் வாக்கியத்தை அருளிச் செய்கிறார்.

2. முன்னும் பின்னும் ஈஸ்வரனுடைய அதிசங்கையாயிருக்க, இப்பாசுரத்தில் " உன்னை என்னுள் நீக்கேல் " என்று கூறும்படி இவர் ஐயங்கொள்ளக் காரணம் என் ? என்னும் வினவிற்கு விடையாக, ' தம்முடைய இனிமையாலே ' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

3. " அமுதே! உன்னை என்னுள்ளே குழைத்த எம் மைந்தா! இனி எங்குப் போகின்றதே " என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். " உன்னை என்னுள் நீக்கேல் எந்தாய் " என்ற அது, சொல் அளவேயோ? மனத்திலுமுண்டோ? என்று அறியவேண்டும் என்று ஈஸ்வரன் ஓர்அடி பெயர நின்றான் ; அதனைக் கண்டு சொல்லுகிறார்.

வித்து உன்னால் அல்லது செல்லாதபடி ஆக்கின நீ, இனி என்னை விட்டுப் போகாதொழிய வேண்டும் என்கிறார்.

எந்தாய் - சிரமத்தைப் போக்குகிற திருமலையிலே வந்து நின்று உன் [1] ஸ்வாமித்வத்தைக் காட்டி என்னைச் சேஷத்வத்திலே நிறுத்தினவனே! இலங்கை செற்றாய் - பிராட்டியுடைய சேர்க்கைக்கு விரோதியாயிருந்தவனைப் போக்கியதுபோன்று என்னுடைய சேஷத்துவ விரோதியைப் போக்கினவனே! மராமரம் பைந்தாள் ஏழ் உருவ ஒரு வாளி கோத்த வில்லா - பரந்த வடிவை யுடைத்தான மராமரங்கள் ஏழும் மறுபாடுருவும்படியாகப் பண்டே தொளையுள்ளது ஒன்றில் ஓட்டியது போன்று, அம்பைக் கோத்த வில்வலியை யுடையவனே! இதனால், அடியார்கள் திறத்தில் மழுவேந்திக் கொடுத்துக் காரியம் செய்தமையைத் தெரிவித்தபடி. கொந்து ஆர் தண் அம் துழாயினாய் - வைத்த வளையத்தோடே நின்று மராமரம் எய்தானதலின், '**கோத்த வில்லா**' என்றதனைச் சார்த்து '**தண் அம் துழாயினாய்**' என்கிறார். ஆயின், அவ் அவதாரத்தில் துழாய் உண்டோ? எனின், அவதாரத்துக்குச் சேர ஏதாவது ஒன்றாலே வளையம் வைக்கிலும், திருத்துழாயாய் அல்லது தோற்றாது இவர்க்கு. கொந்து ஆர் - தழைத்திருக்கை. அமுதே - மராமரம் எய்கிறபோது இலக்குக் குறித்து நின்ற நிலை இவர்க்கு இனியதாய் இருந்தபடி.

உன்னை என்னுள் குழைத்த எம் மைந்தா-கலக்கிற இடத்தில் "ஒரேபொருள்" என்னலாம்படி கலந்து அதனால் வந்த புதுமையான யௌவனத்தை யுடையவனே! இதனால், இனி, 'போவேன்' என்றால், போகப் போமோ? போகிலும், கூடப் போமித்தனை என்பதனைத் தெரிவித்தபடி. வான் ஏறே - தன் இனிமையை நித்தியசூரிகளை அநுபவிப்பித்து, அதனாலே வந்த மேன்மை தோன்ற இருக்குமாறு போன்று, இவரை அநுபவிப்பித்து மேன்மை தோன்ற இருக்கின்றபடி. இனி எங்குப் போகின்றதே - உன்னால் அல்லது செல்லாதபடியான என்னை விட்டு உன்னை ஒழிய வாழ வல்லார் பக்கல் போகவோ? நித்திய சூரிகளை விடிலன்றோ என்னை விடலாவது என்கிறார். 'இவர் நம்மை விடிற் செய்வது என்?' என்று இறைவனுக்கு உண்டான ஐயத்தைப் போக்குகிற இவ்விடத்தில், 'நீ என்னை

1. ஸ்வாமித்வம் - இறைமைத்தன்மை. சேஷத்வம்-அடிமைத்தன்மை.

விட்டுப் போகாதே கொள்' என்னும் இதற்குக் கருத்து என்? என்னில், [1] **விலக்ஷண விஷயம் தானும் காற்கட்டி, எதிர்த்தலையையும் காற்கட்டப் பண்ணுமாயிற்று.**

[2]எந்தாய் - நீ சேஷி அல்லாமற் போகவோ? தண் திருவேங்கடத்துள் நின்றாய் - தூரஸ்த்தனாய்ப் போகவோ? இலங்கை செற்றாய் - பகைவர்களை அழிக்கின்ற பண்பினன் அல்லாமற் போகவோ? மராமரம் பைந்தாள் ஏழ் உருவ ஒரு வாளி கோத்த வில்லா - அடியார்கள் திறத்தில் சூளுறவு செய்து காரியம் செய்யுமவன் அல்லாமற் போகவோ? கொந்து ஆர் தண் அம் துழாயினாய்-அடியார்களைக் காத்தற்கு மாலை இட்டிலன் என்று போகவோ? அமுதே - இனியன் அல்லாமற் போகவோ? உன்னை என்னுள் குழைத்த - ஒரு நீராகக் கலந்திலன் என்று போகவோ? எம் மைந்தா - புதிய புதிய தன்மையன் அல்லன் என்று போகவோ? வான்ஏறே - மேன்மையன் அல்லன் என்று போகவோ? இனி எங்குப் போகின்றதே - போகிலும் கூடப் போமித்தனை ஒழிய, "ஒரே பொருள்" என்னலாம்படி கலந்து தனித்துப் போகலாமோ? போகலாகாது என்றபடி. (9)

175.

போகின்ற காலங்கள் போய காலங்கள் போகு காலங்கள் [தாய் தந்தை உயிர்
ஆகின்றாய்! உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ?
பாகின்ற தொல் புகழ் மூ உலகுக்கும் நாதனே! பரமா! [தண் வேங்கடம்
மேகின்றாய்! தண் துழாய் விரை நாறு கண்ணியனே!

பொ - ரை:—எங்கும் பரவுகின்ற பழமையான புகழையுடைய, மூன்று உலகங்கட்கும் தலைவனே! குளிர்ந்த வேங்கடத்தில் எழுந்தருளியிருப்பவனே! வாசனை வீசுகின்ற குளிர்ந்த துழாய்மாலையை

---

1. விலக்ஷண விஷயம் - உலகத்திற்கெல்லாம் வேறுபட்ட சிறப்பினையுடைய பொருள். தானும் காற்கட்டித் தன்னுடைய சிநேகத்தாலே எதிர்த்தலையையும் போகாதபடி காற்கட்டப் பண்ணும் என்றபடி. காற்கட்டுகை - ஐயம் கொள்ளுதல்.

2. "எங்குப் போகின்றதே" என்ற தொடரிலுள்ள "எங்கு" என்ற பதத்திற்கு, இதுகாறும் தேச பரமாக வியாக்யானம் செய்து, இப்பொழுது, 'ஹேதுபரமாக வியாக்யானம் செய்கிறார் 'எந்தாய்' என்று தொடங்கி. இனி, மேற்கூறிய விசேஷணங்களை எல்லாம் போகாமைக்கு உறுப்பு ஆக்குகிறார், 'எந்தாய்' என்று தொடங்கி எனலுமாம்.

யுடையவனே! நிகழ்காலம் இறந்தகாலம் எதிர்காலம் ஆகிய முக்காலங்களிலும் தாயும் தந்தையும் உயிரும் ஆகின்றவனே! உன்னை நான் அடைந்தேன்; இனி, விடுவேனே? விடேன் என்க.

ஈடு:—பத்தாம் பாட்டு. [1] நாம் போகாதொழிகிறோம்; நீர் நம்மை விடாதொழிய வேண்டுமே? என்ன, நீ செய்த உபகாரங்களைக் கண்டு வைத்து விட மரியாதை உண்டோ? என்கிறார். இனி, முக்காலத்திலும் எல்லாவித பந்துவுமான உன்னை விடக் காரணம் இல்லை என்கிறார் எனலுமாம்.

போகின்ற காலங்கள் போய காலங்கள் போகு காலங்கள் தாய் தந்தை உயிர் ஆகின்றாய் உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ - முக்காலத்திலும், பரிவுடைய தாய் செய்வதும் செய்து, ஹிதத்தைச் செய்கின்ற தமப்பன் செய்வதும் செய்து, [2]"அந்த காகாசுரன் தகப்பனாலும் விடப்பட்டான்" என்கிறபடியே, அவர்கள் விடுமளவிலும், தான் தனக்குப் பார்க்கும் ஹிதமும் பார்க்கும்படி [3] எல்லாவகையாலும் அடையத் தக்கவனுமாய், உபகாரத்தைச் செய்கிறவனுமாய் உள்ள உன்னை, உதவியை நினையாநின்ற நான் கிட்டப் பெற்று வைத்து, விடக் காரணம் உண்டோ? பாகின்ற தொல் புகழ் மூவுலகுக்கும் நாதனே - பரம்பி இருப்பதாய், [4] இயல்பிலே அமைந்த நற்குணங்களையுடையையாய், மூன்று உலகங்கட்கும் நிர்வாஹகன் ஆனவனே! [5]"பெருமாள் தர்மத்தை யுடையவர், சரணாகதி புகுந்தவனிடத்தில் அன்புடையவர், எல்லாராலும் அறியப்பட்டவர், ஆகையால், பிழைத்திருப்பதற்கு நீ விரும்புவாயேயானால் உனக்கு அவ் இராமனோடு நட்பு உண்டாகவேண்டும்" என்கிறபடியே, பகைவர்கள் கூட்டத்திலும் பிரசித்தமாம்படி பரந்திருத்தலின் '**பாகின்ற புகழ்**' என்கிறார்.

பரமா - குணங்களுக்கும் காத்தலுக்கும் உன்னை எண்ணினால், பின்னை எண்ணலாவார் இல்லாதபடி சர்வாதிகனாய் இருக்குமவனே! தண் திருவேங்கடம் மேகின்றாய் - இப்படி

---

1. பாசுரத்தின் முதல் இரண்டு அடிகளை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார். 'தாய் தந்தை' என்ற இடத்தில் உபகாரகத்வமும், பந்துத்வமும் தோன்றும்.

2. ஸ்ரீராமா. சுந்த. 38: 33.

3. தாய் தந்தையர்களுக்குச் சம்பந்தமும் உபகாரகத்வமும் உண்டாகையாலே 'எல்லா வகையாலும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

4 தொன்மை - பழமை; அதனால் பலித்த பொருள், 'இயல்பிலேயமைந்த' என்பது.

5. ஸ்ரீராமா. சுந்த. 21: 20.

எல்லார்க்கும் மேம்பட்டவனா யிருந்து வைத்து, என்னை அடிமை கொள்ளுகைக்காக, சிரமத்தை நீக்குகிற திருமலையிலே வந்து அண்மையில் இருப்பவனே! உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ? என மேலே கூட்டுக. [1]தண் துழாய் விரை நாறு கண்ணியனே - இவருடைய துன்பமெல்லாம் தீரும்படியாக வந்து அங்கீகரித்துத் தன்னை நுகர்வித்து,'இவர், தன்னை விடின் செய்வது என்?' என்ற ஐயமும் தீர்ந்து, தோளில் இட்ட மாலையும் வாசனை உள்ளதாய், பிடித்து மோந்த இலைத் தொடைமாலையும் தானுமாய் நின்ற நிலையைத் தெரிவிக்கிறார். (10)

176.

கண்ணித் தண் அம் துழாய் முடிக் கமலத் தடம் பெரும்
[கண்ணனைப் புகழ்
நண்ணித் தென்குருகூர்ச் சடகோபன் மாறன் சொன்ன
எண்ணில் சோர்வு இல் அந்தாதி ஆயிரத்துள் இவையும்
[ஓர் பத்து இசையொடும்
பண்ணில் பாட வல்லார் அவர் கேசவன் தமரே!

பொ - ரை :—குளிர்ந்த அழகிய திருத்துழாய் மாலையையுடைய திருமுடியினையும் தாமரைபோன்ற விசாலமான பெரிய கண்களையுமுடைய இறைவனது நற்குணங்களிலே தாம் ஈடுபட்டு, அழகிய திருக்குருகூரில் அவதரித்த மாறனாகிய ஸ்ரீ சடகோபர் அருளிச்செய்த எண்ணத்தில் தப்பாத அந்தாதியாக அமைந்த ஆயிரம் பாசுரங்களுள் இப் பத்துப் பாசுரங்களையும் இசையோடும் பண்ணோடும் பாடுவதற்கு வல்லார் எவர்? அவர் கேசவன் தமர் ஆவர்.

வி - கு :—கண்ணனை : வேற்றுமை மயக்கம். சடகோபன் மாறன் என்பன இரண்டும், ஆழ்வாருடைய திருப்பெயர்கள். 'இசையொடும் பண்ணில்' என்று அருளிச்செய்வதால் இசை வேறு, பண் வேறு என அறியலாம். இவ் இரண்டின் வேறுபாட்டினை வியாக்கியானத்திற் காண்க.

---

1. "தாய் தந்தை உயிர் ஆகின்றாய் உன்னை நான் விடுவேனோ?" என்று அருளிச்செய்தார்; கேட்ட சர்வேஸ்வரன் பரிபூர்ண மனோரதனாய், தோளில் மாலையும் பரிமளிதமாய், இலைத்தொடை மாலையோடு மோந்து கொண்டிருக்கும் இருப்பை அநுபவிக்கிறார் "தண்டுழாய் விரை நாறு கண்ணியனே" என்று. இலைத்தொடை - பூப்பந்து.

ஈடு :—முடிவில், இத்திருவாய்மொழியினைக் கற்கவல்லவர்கள் யாரேனுமாகவுமாம், அவர்களுக்குக் குலம் சரணம் கோத்திரம் முதலானவைகள் பிரயோஜனம் அற்றவைகள்; இத் தன்மையாலே அவர்கள் பகவானுக்கு உரிமைப்பட்டவர்கள் என்கிறார்.

கண்ணி தண் அம் துழாய் முடிக் கமலம் தடம் பெரும் **கண்ணனை** - இப்போதாயிற்று மாலை செவ்விபெற்றதும், முடி நன்கு தரித்ததும், திருக்கண்கள் மலர்ச்சி பெற்றதும். **புகழ் நண்ணி** - இறைவன், தம்பக்கல் செய்த காதலாகிய குணத்திலே மூழ்கி. **தென்குருகூர்ச் சடகோபன் மாறன்** - ஒன்று திருப்பெயர்; ஒன்று பகைவர் கூட்டத்துக்கு யமனாக உள்ளவர் என்பதனைக் காட்ட வந்தது. **எண்ணில் சோர்வு இல் அந்தாதி ஆயிரத்துள் இவையும் ஓர் பத்து** - இறைவன், தம் பக்கல் பண்ணின வியாமோகத்தின் மிகுதியை நினைத்து, அவற்றில் ஒன்றும் குறையாமல் அருளிச் செய்த ஆயிரத்தில் இப் பத்து. **இசையொடும் பண்ணில் பாட வல்லார்** - இதில் ஆசையாலே இசையோடும் பண்ணோடும் பாட வல்லவர்கள். பண்ணாவது - கானம். இசையாவது - குருத்வம் லகுத்வம் முதலானவைகள் தம்மிலே நெகிழ்ந்து பொருந்துகை. [1]தொனியாலும் நிறத்தாலும் என்றபடி. **அவர் கேசவன் தமரே** - அவர்கள் யாரேனு மாகவுமாம், [2] குலம் சரணம் கோத்திரம்

1. தொனி என்றது, பண். நிறம் என்றது, இசை.

2. "விப்ரர்க்குக் கோத்ர சூத்ர சரண கூடஸ்த்தர், பராசர பாராசர்ய போதாயநாதிகள்; (பிரபந்நர்கட்கு) பிரபந்ந ஜந கூடஸ்த்தர் பராங்குச பரகால யதிவராதிகள்" 'கோத்ரமாவது, அபத்ய சந்ததி; அந்த கோத்ரந்தான் அநேகமாய்த் தத்தத் கூடஸ்த்தரான வசிஷ்ட காஶ்யப பரத்வாஜ வத்ஸப் பிரப்ருதிகள் பலரும் உண்டாகையாலே "பராசராதிகள்" என்கிறது. சூத்ர கூடஸ்த்தர், போதாயநாதிகள்; சூத்ரமாவது, கர்ம அநுஷ்டாந பிரதிபாதகமான கல்பம்; அது தானும் பலவாய்த் தத்தத் கர்த்தாக்களான ஆபஸ்தம்ப ஆஶ்வலாயநாதிகளும் உண்டாகையாலே, "போதாயநாதிகள்" என்கிறது. சரணங்களாவன, வேதசாகைகள்; சர்வ சாகைகளுக்கும் பிரதான பிரவர்த்தகன், பாராசர்யனாயிருக்கச் செய்தேயும், பின்பு தத்தத் சாகைகளுக்குத் தனித்தனி பிரவர்த்தகரான கடக கலாப கண்வாதிகளும் உண்டாகையாலே "பாராசர்யாதிகள்" என்கிறது' என வரும் ஆசார்ய ஹ்ருதய சூத்திரமும், அதன் வியாக்கியானமும் ஈண்டு உணர்தல் தகும். (பிரதமப் பிரஹரணம். சூத். 36.)

சாத்திரம் மறைதெரி முனிவர் தன்மையிற்
காத்திரம் மாறி அக் காவல் வேந்தரும்
கோத்திரம் சூத்திரம் குடி உரைத்துளார்
வேத்திரகீய மாநகரின் மேயினார். (வேத்திரகீயச்சருக். 33.)

என்றார் வில்லிபுத்தூராழ்வார்,

முதலானவைகள் பயன் அற்றவைகள்; [1] "**விண்ணப்பஞ் செய்வார்கள்**" என்னுமாறு போன்று, இத் தன்மையாலே அவர்கள் பகவானுக்கு உரிமைப்பட்டவர்கள். (11)

முதற்பாட்டில், எம்பெருமான் 'இவர் நம்மை விடின் செய்வது என்?' என்று கொண்ட ஐயத்தைப் போக்கினார்; இரண்டாம் பாட்டில், அது போனபின்னர் அவனுக்கு உண்டான புதுக்கணிப்பைச் சொன்னார்; மூன்றாம் பாட்டில், தமக்கு அவன் செய்த கொடையினைச் சொல்லி ஈடுபட்டார்; நான்காம் பாட்டில், அவன் உமக்குப் பண்ணின உதவி எது? என்ன, இதர விஷய வைராக்கியம் என்றார்; ஐந்தாம் பாட்டில், இதர விஷயவைராக்கியம் முன்னாக ஆத்மாஉள்ளவரையிலும் உள்ள அடிமையிலே அதிகரித்த நான் இனி ஒருநாளும் விடேன் என்றார்; ஆறாம் பாட்டில், அடியார்கட்கு உதவுவாய் ஆன பின்பு எனக்கு ஒரு குறை உண்டோ? என்றார்; ஏழாம் பாட்டில், என்னுடைய சம்பந்தி சம்பந்திகளுக்கும் ஒரு குறை இல்லை என்றார்; எட்டாம் பாட்டில், இதற்குத் தாம் செய்த உபாயம் இன்னது என்றார்; ஒன்பதாம் பாட்டில், "இவர் அகவாய் அறியவேண்டும்" என்று ஓரடி பேர நிற்க, இனிப் போக ஒண்ணாது என்றார்; பத்தாம் பாட்டில், நாம் போகா தொழிகிறோம்; நீர் தாம் போகாதொழிய வேண்டுமே? என்ன, முக்காலத்திலும் எல்லாவிதமான பந்துவுமான உன்னை விடக் காரணம் இல்லை என்றார்; முடிவில், இது கற்றார்கட்குப் பலம் சொல்லித் தலைக்கட்டினார்.

திருவாய்மொழி நூற்றந்தாதி

வைகுந்தன் வந்து கலந்ததற் பின் வாழ்மாறன்
செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து - நைகின்ற
தன்மைதனைக் கண்டுஉன்னைத் தான்விடேன் என்றுரைக்க
வன்மை அடைந்தான் கேசவன். (16)

—o—

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே சரணம்.

---

1. விண்ணப்பஞ் செய்வார் - அரையர்.

ஏழாந் திருவாய்மொழி—"கேசவன் தமர்"

முன்னுரை

ஈடு:—[1] "ஆடி ஆடி" என்ற திருவாய்மொழியில் "வாடி வாடும்" என்கையாலே, ஒரு நீர்ச்சாவியாய் வாடினபடி சொல்லிற்று; அந்த நீர்ச்சாவியானது தீரக் காரார் கருமுகில் கலந்து மழை பெய்தபடி சொல்லிற்று "அந்தாமத்தன்பு" என்ற திருவாய்மொழியில்; அப்படி மழை பெய்த படியாலே, "ஈறு இல் இன்பத்து இரு வெள்ளம் யான் மூழ்கினன்" என்று வெள்ளம் இட்டுப் பெருகினபடி சொல்லிற்று "வைகுந்தா மணிவண்ணனே" என்ற திருவாய்மொழியில்; "எமர் கீழ் மேல் எழு பிறப்பும் மா சதிர் இது பெற்று" என்கையாலே, அவ் வெள்ளம் இருகரையும் புரண்டபடி சொல்லுகிறது "கேசவன் தமர்" என்னும் இத் திருவாய்மொழியில். இனி, இவர் "ஆடி ஆடி" என்ற திருவாய்மொழியில் பட்ட துன்பம் தீர வந்து கலந்தபடி சொல்லிற்று "அந்தாமத்தன்பு" என்ற திருவாய்மொழியில்; அக் கலவியால் பிறந்த பிரீதி அவனது ஆன படி சொல்லிற்று "வைகுந்தா மணிவண்ணனே" என்ற திருவாய்மொழியில்; அந்தப் பிரீதிதான் ஆழ்வார் ஒருவர் அளவிலும் அன்றிக்கே, [2] தம்மோடு தொடர்ந்து வருகின்ற சம்பந்தம் உடையாரளவும் வெள்ளம்இட்டுப் பெருகினபடியைச் சொல்லுகிறது இத் திருவாய்மொழியில் என்று கூறலுமாம்.

[3] சர்வேஸ்வரன், ஆழ்வாரோடே வந்து கலந்த கலவியால் பிறந்த பிரீதி தம் ஒருவர் அளவிலும் அன்றிக்கே, தம்மோடு

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் இருவகையில் இயைபு அருளிச்செய்கிறார் "ஆடியாடி" என்று தொடங்கி. நீர்ச்சாவி - நீர் இல்லாத பயிர். "அல்லாவியுள் கலந்த, காரார் கருமுகில்போல் என் அம்மான்" என்றதனை நோக்கிக் 'காரார் கருமுகில் கலந்து மழை பெய்தபடி சொல்லிற்று' என்கிறார். "மாறி மாறிப் பல பிறப்பும்" என்ற பாசுரத்தை நோக்கி 'ஈறிலின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன் என்று வெள்ளமிட்டுப் பெருகினபடி சொல்லிற்று' என்றார். 'இருகரையும்' என்றது, கீழ் எழு பிறப்பும் ஒருகரை; மேல் எழுபிறப்பும் ஒருகரை.

2. இத் திருப்பதிகத்தின் முதல் பாசுரத்தை நோக்குக.

3. இத்திருப்பதிகத்தில் கூறப்படும் பொருளைச் சுருக்கி அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரன்' என்று தொடங்கி.

பரம்பரையாகச் [1]சம்பந்த முடையார் அளவும் பெருகினபடியைக் கண்டு, 'இது இறைவன் என்பக்கல் செய்த பக்ஷபாத மிகுதி அன்றோ?' என்று இனியராய், தம்மை அங்கீகரிக்கைக்கு ஈடான குணங்கள் செயல்கள் முதலியவற்றை அநுசந்தித்து அவற்றிற்கு வாசகமான பன்னிரண்டு திருப்பெயர்களாலே அவனைப் பேசி அநுபவிக்கிறார்.

சர்வேஸ்வரன் ஆழ்வாரை அங்கீகரித்தால், சம்பந்தி சம்பந்திகளையும் அங்கீகரிப்பான் என்? எனின், சர்வேஸ்வரன் ஒருவனை அங்கீகரித்தால், அது பின்னை அவன் அளவிலே நில்லாதே அன்றோ? [2]"இருடிகள் குடியிருப்பை அழித்தான், மைதிலியைப் பிரித்தான், நம் உயிர் நிலையிலே நலிந்தாற் போலே ஸ்ரீஜடாயு மஹாராஜரை நலிந்தான், இவைஎல்லாம் செய்யமாட்டானே இவன் இனி; இவன் ஜீவிக்கிற நாளிலே 'நாம் செய்யும் நன்மை இவன் விலக்காது ஒழிவதுகாண்' என்று இருந்தோம்; அது அந் நாளில் பெற்றிலோம்; நாம் தேடி இருந்தது முந்துற முன்னம் சித்திக்கப் பெற்றோம்; இவன் நாம்செய்யும் நன்மை விலக்காதானை அளவு பிறந்த இன்றும் இழக்க வேண்டுமோ? வேண்டுவன செய்யப் பாரும்;

1. 'சம்பந்தமுடையார் அளவும்' என்றது, "எமர் கீழ் மேல் எழு பிறப்பும்" என்ற பாசுரப் பகுதியை நோக்கி. பகவானுடைய விஷயீகாரம் சம்பந்தி சம்பந்திகள் அளவும் செல்லும் என்கைக்கு நான்கு உதாரணம் காட்டுகிறார், 'இருடிகள் குடியிருப்பை' என்றது முதல் 'நீ அவனுக்கு நல்லையாகில் அவன் முன்னாகப் போ என்று அருளிச்செய்தான்' என்றது முடிய.

2. ஸ்ரீராமா. யுத். 114: 101. இச் சுலோகத்தின் பொருளோடு,

" கொடுமையும் செம்மையும் வெம்மையும் தண்மையும்
உள்வழி உடையை; இல்வழி இலையே;
போற்றார் உயிரினும் போற்றுநர் உயிரினும்
மாற்றே மாற்றல் இலையே; நினக்கு
மாற்றோரும் இலர் கேளிரும் இலர் எனும்
வேற்றுமை இன்று; அது போற்றுநர் பெறினே "

என்னும் பரிபாடற்பகுதியும், 'என்றது, உயிர்களது இயல்பான் நினக்குப் பகையும், நட்பும் உளபோலத் தோன்றுவதல்லது நின் இயல்பான் அவை உளவல்ல என்றவாறும்' என்ற அதன் உரையும் ஒப்பு நோக்கத் தகும். (பரிபா. 4.)

அன்னதோ என்னா ஈசன் ஐயமும் நாணும் நீங்கித்
தன்ன தோளிணையை நோக்கி வீடணா! தக்க தன்றால்;
என்னதோ இறந்துளார்மேல் வயிர்த்தல்; நீ இவனுக்கு ஈண்டு
சொன்னதோர் விதியினாலே கடன்செயத் துணிதி என்றான்.

என்றார் கம்பநாடரும்.

நீர் இறாய்த்து இருந்தீராகில், [1]குடல் தொடக்கு உடையாரிலே ஒருவன் செய்யுமித்தனை அன்றோ? நாம் இவனுக்கு வேண்டுவன செய்ய, நீர் கடக்க நில்லீர்" என்றார் பெருமாள். இங்கு ஸ்ரீவிபீஷணாழ்வான் பக்கல் இருந்த அன்பு இராவணன் அளவும் சென்றது. [2] "மகாராஜர்க்குப் பகைவன்" என்று வாலியைக் கொன்ற பின்னர், மகாராஜர் கண்ணநீர் பொறுக்கமாட்டாமல் [3] "விடப்பட்ட கண்ணநீரை உடையவர் ஆனார்" என்கிறபடியே, தாமும் கண்ண நீர் விழவிட்டார். [4] "மங்களகுணமுள்ள மாலாகாரரே! உம்முடைய மனமும் எக்காலமும் தர்மத்தில் செல்லப் போகிறது, உம்முடைய வம்சத்தில் பிறந்தவர்களுக்கும் நீண்ட ஆயுள் உண்டாகப் போகிறது" என்கிறபடியே, ஸ்ரீமாலாகாரர் பக்கல் அங்கீகாரம் அவர் சந்தானத்தளவும் சென்றது. ஸ்ரீகண்டாகர்ணன் பக்கல் பண்ணின அங்கீகாரம் அவன் தம்பி அளவும் சென்று 'நீ அவனுக்கு நல்லையாகில் [5] அவன் முன்னாகப் போ' என்று அருளிச்செய்தான். ஆக, இன்னோர் அன்ன சரிதைகளால் சம்பந்தி சம்பந்திகளையும் அங்கீகரித்தல் உணர்தல் தகும்.

[6] **எம்பார்** இத் திருவாய்மொழி அருளிச்செய்யப் புக்கால், "**ஸ்ரீவைஷ்ணவன் ஆனேன்** என்கிறார்" என்பராம். ஸ்ரீவைஷ்ணவத்வ அடையாளம் அன்றோ திருத் துவாதச நாமங்கள். நெடுமாற்கு அடிமை, ஆழ்வாருடைய நெடுமாற்குஅடிமையும், எம்பெருமானுடைய நெடுமாற்குஅடிமையும் என இரு வகைப்படும்; அவற்றுள், எம்பெருமானுடைய நெடுமாற்கு அடிமை இத் திருவாய்மொழி.

---

1. ஸ்ரீ விபீஷணாழ்வானைப் பெருமாள் தமக்கு உடன் பிறந்தவனாகக் கொண்டார் ஆகையாலே, அவனுக்குத் தமையனான இராவணனும் உடன் பிறந்தவன் ஆவன்; ஆதலில், தம்மைக் 'குடல் தொடக்குடையாரிலே ஒருவன்' என்கிறார். ஒருவன் - ஸ்ரீராமபிரான். ஸ்ரீராமபிரானைப் 'பெருமாள்' என்றும், இலக்குமணனை 'இளையபெருமாள்' என்றும் கூறுதல் வழக்கு.

2. சுக்கிரீவனை 'மஹாராஜர்' என்பது வைணவப் பெருமக்கள் வழக்கு.

3. ஸ்ரீராமா. கிஷ்கிந். 23 : 24.

4. ஸ்ரீவிஷ்ணுபுரா. 5. 19 : 27.

5. 'அவன் முன்னாகப் போ' என்றது, அவனை முன்னிட்டுக் கொண்டு போ என்றபடி.

6. குண சேஷ்டித வாசக நாமாந்தரங்கள் இருக்க, திருத் துவாதச நாமங்களாலே அநுபவிப்பதற்குப் பாவம், 'எம்பார் இத் திருவாய்மொழி' என்று தொடங்கும் வாக்கியம். துவாதசம்-பன்னிரண்டு. சம்பந்தி சம்பந்திகள் அளவும் அங்கீகரிக்கைக்கு ரசோக்தி, 'நெடுமாற்கடிமை, ஆழ்வாருடைய' என்று தொடங்கும் வாக்கியம். 'நெடுமாற்கடிமை' என்றது, அடியார்கள் அளவும் செல்லும் பிரேமத்தை. இந்தப் பிரேமம் ஆழ்வார்க்குச் சொரூபத்தோடு கூடியது; எம்பெருமானுக்கு வேட்கையால் உண்டாயது.

177.

கேசவன் தமர் கீழ் மேல் எமர் ஏழ் எழு பிறப்பும்
மா சதிர் இது பெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா!
ஈசன் என் கருமாணிக்கம் என் செங்கோலக் கண்ணன்
[விண்ணோர்
நாயகன் எம்பிரான் எம்மான் நாராயணனாலே.

பொ-ரை :—எனக்குச் சுவாமியாய், எனக்கு நீலரத்னம் போன்ற வடிவையுடையவனாய், சிவந்த அழகிய கண்களையுடையவனாய், நித்திய சூரிகட்குத் தலைவனாய், எனக்கு உதவியைச் செய்தவனாய், எனக்குத் தலைவனாய் இருக்கிற, என்னுடைய நாராயணனால் என்னைச் சேர்ந்தவர்கள் கீழும் மேலும் உள்ள ஏழ் ஏழ் பிறப்புக்களிலும் இறைவனுக்குத் தமர் ஆனார்கள்; இந்தப் பெரிய சிறப்பைப் பெற்று நம்முடைய வாழ்வு வளர்கிறபடி என்னே! என்கிறார்.

வி-கு :—மேல், "எமர் கீழ் மேல் எழு பிறப்பும் விடியா வெம் நரகத்து என்றும் சேர்தல் மாறினரே" என்று சுருங்கக் கூறியவதனை இத் திருவாய்மொழியில் விரித்து அருளிச்செய்கிறார். வாய்க்கின்ற வாறு என்பது, வாய்க்கின்றவா என விகாரப்பட்டது. "எழு பிறப்பும் தீயவை தீண்டா பழி பிறங்காப், பண்புடை மக்கட் பெறின்" என்ற திருக்குறளை இப் பாசுரத்தோடு ஒப்பு நோக்குக.

ஈடு :—முதற்பாட்டு. சம்பந்தி சம்பந்திகள் பக்கலிலும் எம்பெருமான் பேரன்பு கொண்டவனானபடியைக் கண்டு, இவை எல்லாம், என்பக்கல் உண்டான அங்கீகாரத்தின் மேம்பாடே அன்றோ என்று மகிழ்ந்தவர் ஆகிறார்.

கேசவன் தமர் - [1]பிரசஸ்தகேசனான நிலையிலே தோற்று இருக்குமவர்கள். என்றது, அவனுடைய அவயவங்களின் அழகிலே தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் என்றபடி. அன்றிக்கே, பகைவர்களை அழிக்கும் பண்பிலே தோற்றிருக்குமவர்கள் என்னுதல்; அன்றிக்கே, [2]"க என்பது பிரமனுடைய பெயர்; நான் எல்லாப்பொருளையும் நியமிக்கிற சிவன் ஆகின்றேன்; நாங்கள் இருவரும் தேவரீர் திருமேனியில் உண்டானோம்; ஆதலால், 'கேசவன்' என்னும் திருப் பெயரை உடைய

---

1. கேசவன் என்பதற்கு மூன்றுபொருள் அருளிச்செய்கிறார்: கேசத்தையுடையவன் கேசவன்; கேசம் - மயிர்முடி. கேசி என்னும் அசுரனைக் கொன்றவன் கேசவன்; பிரமனையும் சிவனையும் தன் திருமேனியிலே வைத்திருப்பவன் கேசவன். பிரசஸ்தகேசன் - நீண்ட மயிர்முடியை யுடையவன்,

2.

வர் ஆனீர்" என்கிறபடியே, சர்வ நிர்வாஹகனை நிலையிலே தோற்றிருக்குமவர்கள் என்னுதல். 'சர்வேஸ்வரன் உடையார்' என்றாயிற்று ஆழ்வார் இவர்களை விரும்புகிறது; 'எமர்' என்கிற ஆழ்வாருடைய சம்பந்தம் கொண்டாயிற்று அவன் இவர்களை விரும்புகிறது. இத்தால், இறைவன் அங்கீகரிப்பதற்கு ஒரு வைஷ்ணவ அபிமானமே வேண்டுவது என்றபடி. எமர் கீழ் மேல் ஏழ் எழு பிறப்பும் கேசவன் தமர் ஆனார்கள் என்க. [1] "குழந்தாய்! தருமபுத்திரா! வாராய், ஒரு நாளாகிலும் பூமியில் தண்ணீரை விடு; அவ்வாறு விடும் தண்ணீர் வம்சத்தை மூ ஏழ் தலைமுறை கரை ஏற்றுகிறது" என்றும், [2] "கழிந்து போன பத்துப் பிறவிகளையும், இனி, வருகின்ற பத்துப் பிறவிகளையும், தன்னையும் பரிசுத்தப் படுத்துகிறது" என்றும் வரும் பிரமாணங்களைக் காண்க.

மா சதிர் இது பெற்று - [3] "விதி சூழ்ந்ததால்" என்கிற ஆகஸ்மிக பகவத்கிருபையைப் பெற்று என்னுதல்; அன்றிக்கே, "மாதவன் என்றதே கொண்டு" என்கிற சொல் மாத்திரத்தையே பெற்று என்னுதல்; அன்றிக்கே, தாம் பெற்ற பேற்றைத் தம்மோடு சம்பந்தமுடையாரும் பெறும்படியான பேற்றைப் பெற்று என்னுதல்; அன்றிக்கே, தடக்கைச் சதுரனைப் பெற்று என்னுதல். தம் தலையால் வந்தது அன்று, இறைவன் அடியாக வந்தது; ஆதலின், முடிவின்றியே இருக்கிறது என்பார் 'மா சதிர்' என்கிறார். காணக்காண அவன் சிரசாகத் தாங்குகிறான் ஆதலின் 'இது பெற்று' என்கிறார். நம்முடைய வாழ்வு-ஸ்ரீ வைஷ்ணவ சம்பத்து. அவர்கள் கேசவன்

---

1. ஒருவன் அபிமானங்கொண்டு எல்லாரும் உஜ்ஜீவிக்கக் கூடுமோ? என்னும் வினாவிற்கு விடையாக இரண்டு மேற்கோட் சுலோகங்கள் காட்டுகிறார். இது, மஹாபாரதம்.

2. போதாயனதர்மம்.

உன்னை இங்கு உயிர்த்த ஆற்றால் உரைக்கும் நின் குலத்து மூவேழ்
என்னும் நன் மரபுளோரும் இயைந்தனர் புனிதம் என்றால்
அன்னவன் புனிதன் ஆதற்கு ஐயம் என்? அவனுக்கு ஈமம்
மன்னு நல்வினை செய்கென்ன மைந்தன் அவ்வினை செய்தானால்.

என்னும் பாகவதச் செய்யுள் ஈண்டு ஒப்பு நோக்கலாகும். 7-ஆம் ஸ்கந்தம், இரணியனைக் கொன்ற அத். 107.

3. "மா சதிர் பெற்று" என்பதற்கு நான்கு வகையான பொருள் அருளிச்செய்கிறார்: முன்னைய இருவகைப் பொருள்களும் உபாயம் பரம்; பின்னைய இருவகைப் பொருள்களும் பல பரம். ஆகஸ்மிகம் - காரணமில்லாமல் கிடைப்பது. 'தடக்கைச் சதுரனைப் பெற்று' என்ற இடத்தில் 'சதுரன்' என்றது, இறைவனை.

தமர் ஆனால் தம்முடைய வாழ்வு ஆயினவாறு யாங்ஙனம்? எனின், தம்மோடு சம்பந்தம் உடையாரையும் இறைவன் இப்படி அங்கீகரித்தது தம்முடைய வாழ்வே அன்றோ? வாய்க்கின்றவா-ஊற்று மாறாதே மேன்மேலெனப் பெருகி வருகிறபடி. ஆக, ஏழ்படிகால் என்றதுதான் ஓர் அளவு இல்லை; இன்று நம் அளவும் வரச் செல்லுகிறதே அன்றோ? இப்படி, அங்கீகரிப்பதற்குக் காரணம் என்? என்னில், ஈசன்-வகுத்த ஸ்வாமி ஆகையாலே. என் கருமாணிக்கம் என் செம் கோலம் கண்ணன் - கண் அழகாலே என்னைத் தனக்கே உரியவன் ஆக்கி, தன் வடிவழகை என்னை அநுபவிப்பித்தவன். விண்ணோர் நாயகன் எம்பிரான் எம்மான் - நித்தியசூரிகளைத் தோற்பிக்குமாறு போன்று என்னை வடிவழகைக் காட்டித் தோற்பித்து, என்னை அவ் வடிவழகை அநுபவிப்பித்த உபகாரகன். நாராயணனாலே - தன் மேன்மையைப் பாராமல் உகவாதாரையும் விடமாட்டாதபடி வத்சலனாய் உள்ளவனாலே. [1]சமிதை பாதி சாவித்திரி பாதியாக அன்றி, அவனுடைய நிர்ஹேதுக கிருபையாலேயே என்பார் '**நாராயணனாலே**' எனப் பிரிநிலை ஏகாரம் கொடுத்து ஓதுகிறார். [2]நாராயணனாலே என்ற இடம், மா சதிரினுடைய உபபாதனம்.

---

1. 'சமிதை பாதி சாவித்திரி பாதியாக' என்றது, உபாகர்மாவின் பிற்றை நாள் பிரஹ்மசாரிகள் காயத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு தடவை சொல்லி ஆயிரத்தெட்டு சமித்துக்களை நெருப்பில் ஓமம் செய்தல். சமிதை - சமித்து; பலாச மரத்தின் சுள்ளிகள். சாவித்திரி - காயத்திரி மந்திரம்.

2. 'மா சதிர்' என்பதற்கு அருளிச்செய்த உபாய உபேய பரமான நிர்வாஹங்கள் இரண்டற்கும் சாதாரணமான யோஜனையை அருளிச்செய்கிறார் 'நாராயணனாலே' என்று தொடங்கி. 'நாராயணனாலே' என்ற இது, "ஈசன் என் கருமாணிக்கம்" முதலிய திருப்பெயர்களுக்கும் உபலக்ஷணம். "மா சதிர்" என்றது, உபாய பரமான பக்ஷத்தில், 'நாராயணனாலே' என்றது, கூறியது கூறல் ஆகாதோ? எனின், ஆகாது; நாராயணனாலே என்ற இடம் மா சதிரினுடைய உபபாதனம் என்கிறார். அதாவது, நாராயண சப்தத்துக்கு அன்மொழித்தொகைப் பொருளில் வாத்சல்யம் சொல்லுகையாலே, "மாசதிர்" என்பது, பகவத் கிருபையைச் சொல்லுமிடத்தில் மாசதிருக்கு நாராயணபதம் உபபாதகமாயிருக்கும் என்றபடி. உபபாதனம் - விரிவு. இப்பொருளில், நாராயணனாலே என்னும் மூன்றாம் வேற்றுமையை முதல் வேற்றுமையாகக் கொள்க. நாராயணனாகிற மாசதிரைப் பெற்று என்பது பொருள். ஈசன் என் கருமாணிக்கம் என் செங்கோலக் கண்ணன் விண்ணோர் நாயகன் எம்பிரான் எம்மான் நாராயணன் ஆகிற மாசதிரைப் பெற்றுக் கீழ்மேல் ஏழேழு பிறப்பில் எமர் கேசவன் தமரானார்கள்; நம்முடைய வாழ்வு வாய்க்கின்றவா! என்று கூட்டிப் பொருள் காண்க. "மாசதிர்" என்பது, உபேய பரமான பக்ஷத்தில், ஈசன் என் கருமாணிக்கம்—— நாராயணனாலே கீழ்மேல் ஏழேழு பிறப்பில் எமர் கேசவன் தமர் ஆனார்கள்; மா சதிர் இது பெற்று நம்முடைய வாழ்வு வாய்க்கின்றவா! என்று கூட்டிப் பொருள் காண்க.

நாராயணனாலே எமர் கீழ் மேல் ஏழ் எழு பிறப்பும் கேசவன் தமரானார்கள்; மா சதிர் இது பெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா! எனக் கூட்டி முடிக்க. (1)

178.

நாரணன்; முழு ஏழ் உலகுக்கும் நாதன்; வேதமயன்;
காரணம் கிரிசை கருமம் இவை முதல்வன்; எந்தை
சீரணங்கு அமரர் பிறர் பலரும் தொழுது ஏத்த நின்று
வாரணத்தை மருப்பு ஒசித்த பிரான்;என் மாதவனே.

பொ - ரை:—நாராயணனும், எழுவகைப்பட்ட எல்லா உலகங்கட்கும் தலைவனும், வேத உருவனும், காரணம் காரியம் அவற்றின்பலம் ஆகிய இவற்றிற்கு முதல்வனும், மிக்க புகழையும் தெய்வத்தன்மையையுமுடைய நித்தியசூரிகளும் மற்றையோரும் தொழுது ஏத்தும்படி நின்று குவலயாபீடம் என்னும் யானையினது கொம்பை முறித்த உபகாரகனுமான திருமால் எனக்குத் தந்தையாவான் என்றவாறு.

வி - கு:—கிரிசை - கிரியை. முழு ஏழ் உலகுக்கும் நாதனாய், வேதமயனாய், காரணம் கிரிசை கருமம் இவற்றுக்கு முதல்வனாய், சீரணங்கு அமரர் பிறர் தொழுது ஏத்த நின்று வாரணத்தை மருப்பு ஒசித்த பிரானாய் என் மாதவனான நாரணன் - எந்தை எனக் கூட்டுக.

ஈடு:—இரண்டாம் பாட்டு. [1] "நாராயணனாலே" என்று நாராயண சப்தம் பிரஸ்துதம் ஆயிற்று அன்றே; அதற்குப் பொருள் அருளிச்செய்வதாக அத்திருப்பெயரை உபாதானம் பண்ணுகிறார்.

நாரணன் - இதற்குப் பொருள் என்? என்னில், முழு ஏழ் உலகுக்கும் நாதன்-சர்வஸ்வாமி. இவ் அர்த்தத்தில் பிரமாணம் என்? என்னில், வேத மயன் - "நாராயண பரப்பிரஹ்ம" என்று இது போன்ற பிரமாணங்களால் 'சர்வ ஸ்வாமி' என்று ஓதப்படுகிறவன். காரணம் கிரிசை கருமம் இவை முதல்வன்-

---

1. மேற்பாசுரத்தில் பிரஸ்துதமான நாராயண சப்தத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் என்று பாசுரத்துக்குச் சங்கதி கண்டுகொள்வது. ஆயின், பொருள்மாத்திரம் கூற அமையாதோ? சப்த உபாதானம் எதற்கு? என்னும் வினாவிற்கு விடை, 'நாராயணனாலே' என்று தொடங்கும் வாக்கியம். இங்கு, முதற்பத்து இரண்டாந் திருவாய்மொழி "எண் பெருக்கு அந்நலத்து" என்ற பத்தாம் பாசுரத்தின் அவதாரிகையை நினைவு கூர்க. பிரஸ்துதம் - சொல்லும்படி நேர்பட்டல். உபாதானம் - எடுத்துக்கொள்ளுதல்.

தன் உலகத்தில் (மண் ஆதியான) காரணமாயும், (குடம் முதலான) காரியமாயும், (தண்ணீர்கொண்டு வரலாகிற) பலமாயும் வரக் கூடியதான இவற்றுக்கு [1] நியந்தாவாக உள்ளவன். இனி, [2] கிரியா சாதனம், அது அடியாக வரும் கிரியை, அதனால் சாதிக்கப்படுகிற காரியம், இவற்றுக்கு நிர்வாஹகனாய் இருக்குமவன் என்றும் ஆம். சீர் அணங்கு-ஸ்ரீ யான அணங்கு;, பெரிய பிராட்டியார். அணங்கு - தெய்வப்பெண். அன்றியே, சீர் அணங்கு என்பதனை, அமரர்கட்கு அடைமொழி ஆக்குதலும் ஒன்று. சீர் அணங்கு அமரர் பிறர் தொழுது ஏத்த நின்று வாரணம் மருப்பு ஒசித்த பிரான் - சேஷத்வத்திற்குத் தகுதியான ஆத்ம குணங்களைத் தரிக்கின்றவர்களாய்ப் பிரகிருதி சம்பந்தம் இல்லாத தன்மையரான நித்தியசூரிகள், இவ் அருகு உண்டான சம்சாரிகள், இப்படி, 'சிறியார் பெரியார்' என்னும் வாசி இன்றிக்கே, எல்லாரும் [3] எழுத்து வாங்கி ஏத்தும்படியாக நின்று, [4] குவலயாபீடத்தின் கொம்பை வருத்தம் இன்றி முறித்த உபகாரகன். [5] "தரையில்இருக்கும் இராமனுக்கும் தேரில்இருக்கும் அரக்கனுக்கும் சண்டை தகுந்தது அன்று என்று தேவர்கள் கந்தருவர்கள் தானவர்கள்ஆகிய இவர்கள் கூறினார்கள்" என்பது போன்று '**அமரர் பிறர் தொழுது ஏத்த நின்று**' என்கிறார். என் மாதவனே - நான் தோற்ற துறை.

மாதவனை நாராயணன் எந்தை என முடிக்க. (2)

---

1. நியந்தா - ஏவுகிறவன். "காரணம் கிரிசை கருமம் இவை முதல்வன்" என்ற இதனால், ஐம்பெரும் பூதங்களையும், அவற்றின் காரியமான அண்டம் முதலானவற்றையும், அவற்றில வசிக்கிற ஆத்மாக்களின் செயல்களையும் கூறியபடி.

2. கிரியாசாதனம் - மட்பிண்டம், தண்டசக்கரங்கள் முதலானவைகள். கிரியை - தொழில். அதனால் சாதிக்கப்படுகிற காரியம், குடம் முதலான காரியங்கள். இங்குக் கூறிய இரண்டாவது பொருளால், நிமித்தகாரணம் முதற் காரணம் துணைக்காரணங்களையும், அவற்றின் காரியமான படைத்தல் முதலான காரியங்களையும், அவற்றால்உண்டான தேவர்கள் முதலான பதார்த்தங்களையும் தெரிவித்தபடி.

3. எழுத்துவாங்குகை - தலைவன் பெயரை மார்பிலே எழுதிக் கொள்ளுதல்; அடிமை என்பதனைத் தெரிவித்தல்.

4. அகாரத்தின் விவரணமான நாராயண சப்தத்திலே "அவ ரக்ஷணே" என்கிற ரக்ஷகத்வமும் அர்த்தசித்தமாகையாலே, "வாரணத்தை மருப்பு ஒசித்த பிரான்" என்று அநிஷ்ட நிவர்த்தியையும் இப்பாசுரத்தில் அருளிச்செய்கிறார்.

5. ஸ்ரீ விஷ்ணுபுரா.

179

மாதவன் என்றதே கொண்டு, என்னை இனி இப்பால்
[பட்டது
யாதவங்களும் சேர்கொடேன் என்று என்னுள் புகுந்து
[இருந்து
தீது அவம் கெடுக்கும் அமுதம்; செந்தாமரைக்கண் குன்றம்;
கோது அவம் இல் என்கன்னற் கட்டி; எம்மான்; என்
[கோவிந்தனே.

பொ - ரை :—எம்மானாகிய என்னுடைய கோவிந்தன், நான் மாதவன்என்று வாயினாற் சொன்ன அளவையே கொண்டு, என் விஷயத்தில் இனிமேல் உள்ள காலமெல்லாம் எத்தகைய தீங்குகளும் சேரச் செய்யேன் என்று உறுதிகொண்டு என்னுள்ளே புகுந்திருந்து, தீங்குகளையும் அவங்களையும் போக்கியருள்கின்ற அமிருதம் போன்றவன்; செந்தாமரை போன்ற திருக்கண்களையும் மலைபோன்ற திருமேனியையும் உடையவன்; கோதும் அவமும் இல்லாத கன்னல்கட்டி போன்று எனக்கு இனியவன் என்பதாம்.

வி-கு :—என் கோவிந்தன் எம்மான் மாதவன் என்றதே கொண்டு என்னை இனி இப்பால்பட்டது யாதவங்களும் சேர்கொடேன் என்று என்னுள் புகுந்து தீது அவம் கெடுக்கும் அமுதம்; செந்தாமரைக் கண்குன்றம்; கோது அவம் இல் என் கன்னற்கட்டி எனக் கூட்டுக.

ஈடு :—[1] மேல் "மா சதிர் இது பெற்று" என்றார்; இந் நன்மைக்கு அடி என்? என்ன, நினைவு இன்றியே அந்தப்புரவாசிகள் சொல்லும் வார்த்தையைச் சொன்னேன் என்கிறார். "பிராட்டியே! அழகிய மணவாளன் உன்னுடைய நாயகன் என்ற சம்பந்தத்தைக் கொண்டே அவனைத் தரிசிக்கின்றோம், கிட்டுகின்றோம், அவனுக்குத் தொண்டுகளைச் செய்கின்றோம், அத் தொண்டினால் அவனுக்கு விளைகிற பிரீதியைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளுகிறோம்" என்று அருளிச்செய்தார் அன்றோ பட்டர்.

மாதவன் என்றதே கொண்டு - நான் "மாதவன்" என்று கூறிய சொல்மாத்திரத்தையே கொண்டு; 'அல்லாத திருநாமங்

1. இரண்டாம் பாசுரம் பிராசங்கிக மாகையாலே முதற் பாசுரத்தோடே சங்கதி. அந்தப்புர வாசிகள் சொல்லும் வார்த்தை, "மாதவன்" என்பது. அந்தப்புர வாசிகள் அப்படிச் சொல்லுவரோ? என்னும் வினாவிற்கு விடை, "பிராட்டியே!" என்று தொடங்கும் பொருளையுடைய சுலோகம். இது, குணரத்நகோசம் 52-ஆம் சுலோகம். பிராசங்கிகம் - இடைப்பிறவரல்.

களுக்கும் இதற்கும் வாசி அறிவதே!' என்று இதனையே குவாலாகக் கொண்டான் ஆதலின் '**மாதவன் என்றதே கொண்டு**' என்கிறார். என்னை - மற்றைத் திருப்பெயர்கட்கும் இதற்கும் வாசி அறியாத என்னை. இனி - முன்பு கழிந்தகாலம் கழிந்து விட்டது அன்றோ? இதனால், மேலுள்ள காலம் மிகச் சிறிய காலமாகத் தோன்றாநின்றதாயிற்று, ஈஸ்வரனுக்கு! [1]"பழுதே பலபகலும் போயின என்று அஞ்சி அழுதேன், அரவணைமேல் கண்டு தொழுதேன்" என்று ஈஸ்வரனைக் கிட்டின சேதனன் இருப்பைத் தான் என்பக்கலிலே கொண்டுள்ளான் என்கிறார். "சுக்கிரீவன் சொன்ன தவணைக்காலம் கடந்துவிட்டது என்று கருதி மூர்ச்சித்தார்" என்கிறபடியே, இராநின்றான் என்றபடி. இப்பாற் பட்டது - அணைக்குக் கிழக்குப் பட்ட நீரைப் போன்றது அன்றோ கழிந்த காலம்; ஆதலால், இனி மேல் உள்ள காலமாகிலும். யாதவங்களும் சேர் கொடேன் என்று - உன்னை யாதொரு தவத்திலும் புக்குக் கிலேசப் படும்படி விடேன் என்று. இறைவனை விட்டு வேறு உபாயங்களைப் பற்றுதல் [2] அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும் ஆதலின் '**யாதவங்களும் சேர்கொடேன் என்று**' என்கிறார்.

இனி, 'யாதவங்களும்' என்பதனை, யாது அவங்களும் எனப் பிரித்து, நரகத்திற்குக் காரணமான அவித்யை முதலியவைகள் என்று பொருள் கூறலுமாம். புறம்பே, சில பிரயோஜனங்களைக்கொண்டு போகவிடுதல், "தாழ்ந்தவன்" என்று நினைத்து அகலும்படி விடுதல், வேறு உபாயங்களை மேற்கொள்ளச் செய்தல் முதலியனவாக அவங்கள் பலவகைப் படுதலின் '**யாது அவங்களும்**' என்கிறார். என்று - [3] "இது எனக்கு விரதம்" என்கிறபடியே, அறுதியிட்டு. என்னுள் புகுந்து - இப்படி அறுதியிட்டு நெடுங்கை நீட்டாக இருக்கை அன்றி என் மனத்திலே வந்து புகுந்து. இருந்து - 'புகுந்தாலும் போக்கு

1. மேலுள்ள காலம் மிகச் சிறிய காலமாகத் தோன்ற துக்கிப்பவன் சேதனன் அன்றோ? என்ன, "பழுதே பலபகலும்" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "பழுதே பல பகலும்" என்னும் பாசுரம், முதல் திருவந்தாதி. 16. இறைவன் அப்படியிருந்த இடமுண்டோ? என்ன, அதற்கு விடை, "சொன்ன தவணைக்காலம் கடந்துவிட்டது என்று மூர்ச்சித்தார்" என்பது. இப்பொருளையுடைய சுலோகம், ஸ்ரீராமா. கிஷ்கிந். 30 : 3.

2. "அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும், கொம்மைமுலை பகர்வார் கொண்டாட்டம்" (நல்வழி. 10.)

3. ஸ்ரீராமா. யுத். 18 : 33.

வரவு உண்டாமாகில், [1]வாலி போனவழியை அடைத்து மஹாராஜர் குறும்பு செய்தாற்போலேயாம்' என்று நிலையியற் பொருளாக இருந்து. இவரை வர நிறுத்த ஒண்ணுதே இவருக்குமாகத் தான் புகுந்து இருந்தான் ஆதலின் '**புகுந்து இருந்து**' என்கிறுர்.

புகுந்து செய்த கிருஷி யாது? என்னில், தீது அவம் கெடுக்கும் - தீதாவது - பொய்ந்நின்ற ஞானத்துக்கு முன்பு புத்திபூர்வகமாகச் செய்து போந்த பாவங்கள் ; அவமாவது-ஞானம் பிறந்த பின்பு தம்மை அறியாமல் நேர்ந்தவைகள். ஆக, இவ்விரண்டாலும் பகவானை அடைவதற்குத் தடையாக இருந்த கர்மங்களைச் சொல்லுகிறது. அன்றியே, [2]"பசுவதை செய்தவன் விஷயத்திலும், சுராபானம் செய்பவன் விஷயத்திலும், திருடன் விஷயத்திலும், விரதங்களை நியமம் தவறி நடத்தினவன் விஷயத்திலும், பிராயச்சித்தம் பெரியோர்களால் சொல்லப் பட்டது ; நன்றிகெட்டவன் விஷயத்தில் பிராயச்சித்தம் சொல்லப்படவில்லை" என்கிறபடியே, பிராயச்சித்தம் உள்ள பாவங்களையும் அஃது இல்லாத பாவங்களையும் சொல்லிற்றுகவுமாம். இவற்றைக் கெடுப்பது கஷாயத்தைக் குடிக்கச் செய்தோ? என்னில், அமுதம் - தன்னுடைய இனிமையை அநுபவிப்பித்தாயிற்று.

---

1. இச் சரிதப் பகுதியைக் கம்ப ராமாயணம் மராமரப்படலம் செய்யுள் 88 முதல் 100 முடிய உள்ள பகுதியில் காண்க. வாலி போன வழி - பிலத்துவாரம்.

2. ஸ்ரீ ராமா. கிஷ். 33 : 12. இங்கு,

சிதைவகல் காதல் தாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவி அந்தணரை ஆவைப் பாலரைப் பாவை மாரை
வதை புரிகுநர்க்கும் உண்டாம் மாற்றலாம் மாற்றல் ; மாயா
உதவிகொன்றுர்க்கு என்றேனும் ஒழிக்கலாம் உபாய முண்டோ.
(கம்பரா. கிஷ். 62.)

"ஆன்முலை அறுத்த அறன் இலோர்க்கும்
மாணிழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவாயும் உளஎன
நிலம் புடைபெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே." (புறம்)

எந்நன்றி கொன்றுர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (திருக்குறள்.)

என்பன நோக்கத் தக்கன.

செந்தாமரைக்கண் குன்றம் - வாக்கு இந்திரியத்திற்கே அன்றிக் கண்ணுக்கும் இனியனாய் இருக்கை. இத் தலையில் தீதும் அவமும் போக்கினனாய் இருக்கை அன்றியே, [1]"தனக்கு உண்டாய்க் கழிந்தது" என்று தோற்றும்படி வடிவில் பிறந்த பேரொளியோடு விளங்குகிறான் ஆதலின் "செந்தாமரைக் கண்குன்றம்" என்கிறார். [2]"மனிதர்கட்குத் துன்பம் வரும் காலத்தில் அவர்கள் படும் துன்பத்தைக் காட்டிலும் பலமடங்கு அதிகமான துன்பத்தைத் தான் அடைகின்றான்" என்கிற படியே, இருக்குமவ னன்றோ இறைவன்? கோது அவம் இல் என் கன்னல் கட்டி-கோதாவது-வேறு பொருள்களின் சேர்க்கையால் வருமது. அவமாவது - பாகத்தாலே வருமது. [3] தார்ஷ்டாந்திகத்தில், கோதும் அவமுமாவது - அருளால்ஆதல், இவனுக்கு உபகாரகமாக ஆதல் அங்கீகரிக்கை. ஆக, தனக்குப் புறம்பாய் இருப்பது ஒரு இனிய பொருள் இல்லாதபடி தான் இனியனாய் இருப்பான்என்றபடி.எம்மான்-"நான் வேறொன்று போக்யம்" என்று இராதபடி என்னைத் தோற்பித்தவன். என் கோவிந்தனே-கிருஷ்ணாவதாரமும் தமக்கு என்று இருக்கிறார் ஆதலின் '**என் கோவிந்தன்**' என்கிறார். [4]"ஆட்கொள்ளத் தோன்றிய ஆயர்தம் கோ" அன்றோ அவன்? (3)

180.

கோவிந்தன் குடக்கூத்தன் கோவலன் என்று என்றே [குனித்துத்
தேவும் தன்னையும் பாடி ஆடத் திருத்தி என்னைக் கொண்டு, [என்
பாவம் தன்னையும் பாறக் கைத்து எமர் ஏழ் எழு பிறப்பும்
மேவும் தன்மையம்ஆக்கினான் : வல்லன் எம்பிரான் [விட்டுவே.

பொ - ரை :—எம்பிரானாகிய விஷ்ணு, எனக்குச் செய்த உதவி யாது? எனில், கோவிந்தா! கோபாலா! குடக்கூத்தா! என்று சொல்லிக் கூத்தாடி மேன்மையினையும் தானான தன்மையாகிய எளிமையினையும்

---

1. இங்கு, "துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே" என்ற இடத்துத் "துயரறு" என்றதற்கு எழுதியுள்ள வியாக்கியானத்தை நினைவு கூர்க.
2. ஸ்ரீராமா. அயோத். 2 : 42.
3. தார்ஷ்டாந்திகம் - உபமேயம்.
4. பெரியாழ்வார் திருமொழி. 1. 6; 11.

புகழ்ந்து பாடி ஆடும்படி திருவருள்புரிந்து, என்னை அடிமையும் கொண்டு, எனது பாவங்களையும் சிதறும்படி ஓட்டி, என்னைச் சேர்ந்தவர்கள் ஏழ் ஏழ் பிறப்பும் தன்னை அடையும் படியான தன்மை உடையோமாம்படி செய்தான்; ஆதலால், ஆற்றல் உடையோன் என்பதாம்.

வி - கு :—கோவலன் : 'கோபாலன் என்ற சொல்லின் சிதைவு' என்பர் சிலப்பதிகார உரையாசிரியர். தே-தெய்வத்தன்மை; மேன்மை. பாறுதல் - சிதறுதல். கைத்தல் - வெறுத்தல். தன்மையம் : படர்க்கையைத் தழுவிய உளப்பாட்டுத் தன்மைப் பன்மை. குனித்துப் பாடி ஆடத் திருத்திக் கொண்டு பாறக் கைத்து ஆக்கினன் என முடிக்க. வல்லன் : குறிப்பு வினைமுற்று.

ஈடு:—நாலாம் பாட்டு. [1]என்னோடு பரம்பரையாகச் சம்பந்தமுடையாரையும் என்னைப்போலே ஆக்கினன் ஒருவனுடைய ஆற்றல் இருக்கும்படி என்னே! என்று ஆச்சரியப்படுகிறார்.

கோவிந்தன் - ஸ்ரீ வைகுண்டத்தில் இல்லாதது ஒரு செல்வம் இது. நிறைந்த பசுக்களால் உண்டான செல்வம் உள்ளது இங்கேயே அன்றோ? குடக்கூத்தன் - பிராஹ்மணர் செல்வம் மிகுந்தால் யாகங்கள் செய்யுமாறு போன்று, ஆயர்கள் செல்வம் மிகுந்தால் செருக்குக்குப் போக்கு விடுவது ஒன்றாயிற்று குடக்கூத்தாவது. [2]"எல்லாம் நிறைந்தவனாதலின் ஒன்றிலும் விருப்பம் இல்லாதவன்; ஆதலால், மௌனமாக இருக்கிறான்" என்கிறபடியே, இருக்கக் கூடிய பொருள், [3]தைரிய பங்கம் பிறந்து செருக்குக்குத் தலைச்சாவி வெட்டி ஆடினபடி இது. கோவலன் – இவற்றுக்கு அடியான பிறப்பை உடையவன்; பிறந்து படைத்த ஐஸ்வர்யம் அன்றோ இது. என்று என்றே குனித்து - இக் குணங்களை மாறாதே சொல்லாநின்றுகொண்டு உடம்பு இருந்த இடத்தில் இராமல் ஆடி. அவன் அடியார்கட்குப் பரதந்திரப்பட்டு இருக்கும் தன்மையை நினைத்தால் இவர்க்குப் பேசாது இருக்க ஒண்ணாது ஆதலின் '**என்று என்றே குனித்து ஆடி**' என்கிறார்.

---

1. "எமர் ஏழேழு பிறப்பும் மேவுக் தன்மைய மாக்கினன் வல்லன் எம்பிரான்" என்றதிலே நோக்காக அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. சாந். உபநிட. 3 : 14.

3. தைரியபங்கம் பிறத்தல் - காம்பீர்யத்திற் குறைதல்.

தலைச்சாவி வெட்டுகையாவது, எழுச்சிஅறுக்கை; அதாவது - பயிர்மிடுக்காய் வளர்ந்தவாறே, மதர்த்துப் போகாமைக்கு அதன் வளர்த்தியைக் கொய்வது. அப்படியே செருக்குக்குப் போக்குவிட்டு ஆடினபடி.

தேவும் என்றது, இறைமைத் தன்மையினை. தன்னை என்கிறது, அடியார்கட்குப் பரதந்திரப் பட்டு இருக்கும் தன்மையை; அது அன்றோ [1] தானான தன்மை. "ஆத்மாநம் நாதிவர்த்தேதா:- நீரான தன்மையை இழவாதே கொள்ளும்" என்றார் வசிஷ்ட பகவானும். இச் சுலோகத்திலுள்ள "ஆத்மானம்" என்பதனை ஸ்ரீ பரதாழ்வானுக்கு அடைமொழியாக்கி "ஆத்மாவைப் போன்ற பரதனை இழவாதே கொள்ளும்" என்று இதற்கு வேறுவகையாகப் பொருள் கூறுவர் சிலர். "நீரான தன்மை யாகிறது, அடியார்கட்குப் பரதந்திரப் பட்டவராக இருத்தல்; உம்முடைய தம்பி சொன்ன வார்த்தையை மறுத்து, நீரான தன்மையை இழவாதே கொள்ளும் [2]என்கிறான்" என்று பொருள் அருளிச்செய்வர் பட்டர். பாடி ஆடத் திருத்தி - தரிசு கிடந்த நிலத்தைச் செய்காலாம்படி திருத்துவாரைப் போன்று, நித்திய சூரிகள் யாத்திரையே யாத்திரையாம்படி திருத்தி. ஆயின், மேல்அடியில்,"என்று என்றே குனித்து" என்றதற்கும், இங்கு, "பாடி ஆடி" என்பதற்கும் வேற்றுமை என்? என்னில், மேலிடம், [3]சௌலப்யத்திலே நோக்கு; இங்கு,

---

1. தானான தன்மை - தன்னுடைய சுவபாவம்; அதாவது, இறைவனுக்கு இயற்கைத் தன்மையாவது, அடியார்கட்குப் பரதந்திரனாய் இருத்தல் என்பதாம். அப்படி ஆஸ்ரிதபாரதந்த்ர்யமே தானான தன்மையாக இருக்குமோ? எனின், அதற்கு, "ஆத்மாநம் நாதிவர்த்தேதா:" என்னும் ஸ்ரீராமாயணச் சுலோகத்தை மேற்கோள் காட்டுகிறார். பாசுரத்திலுள்ள "தன்னை" என்பதும், சுலோகத்திலுள்ள "ஆத்மாநம்" என்பதும் ஒரு பொருளன: அது, ஸ்ரீராமபிரானைப் பார்த்து வசிஷ்ட பகவான் கூறுவது. அந்தச் சுலோகம் முழுதினையும் ஈண்டுத் தருகிறேன்:

"பரதஸ்ய வச:குர்வந் யாசமாநஸ்ய ராகவ
ஆத்மாநம் நாதிவர்த்தேதாஸ் ஸத்ய தர்ம பராக்ரம"

சத்யம் தர்மம் பராக்ரமம் இவற்றையுடைய இராகவனே! யாசிக்கின்ற பரதனுடைய வார்த்தையை மறுத்து நீரான தன்மையை (ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்தை) இழவாதே கொள்ளும் என்கிறான் என்பதாம்.

2. 'என்கிறான்' என்ற பயனிலைக்கு வசிஷ்டபகவான் என்னும் எழுவாயினை வருவித்து முடிக்க.

3. 'சௌலப்யத்திலே நோக்கு' என்றது, "கோவிந்தன் குடக்கூத்தன் கோவலன்" என வருகின்றவற்றை நோக்கி. 'இங்கு, இறைமை சௌலப்யம் இரண்டிலும் நோக்கு' என்றது, "தேவும் தன்னையும்" என்றதனை நோக்கி. தேவு என்றதில் இறைமைத்தன்மை; தன்னை என்றதில் சௌலப்யத் தன்மை. சௌலப்யத்தை அநுசந்தித்த காரணத்தால் வந்த கூத்தைச் சொல்லுகிறது; இறைமைத்தன்மையினையும் சௌலப்யத்தையும் அநுசந்தித்த காரணத்தால் வந்த பாடுதல் ஆடுதல்களைச் சொல்லுகிறது என்றபடி.

இறைமை, சௌலப்யம் என்னும் இரண்டிலும் நோக்கு. விஷயபேதத்தாலே சொல்லவுமாம். அன்றியே, என்றுஎன்று என்ற இடம், மனத்தொடு படாத வார்த்தையாய், குனிக்கை யாவது, முயற்சி அளவாய், இங்கு, மனத்தொடு பட்டுப் பாடுவது ஆடுவதான படியாய், என்று என்றே குனித்துப் பாடுவது ஆடுவதாம்படி என்றதாதல்.

என்னைக் கொண்டு - என்னைக் கைக்கொண்டு; கைக்கொள்ளுதலாவது - சேற்றிலே விழுந்த மாணிக்கத்தை எடுத்துக் கழுவி விநியோகம் கொள்ளுமாறு போன்று, என்னை அங்கீகரித்து என்றபடி. என் பாவம் தன்னையும் பாறக் கைத்து - என்னால் போக்கிக் கொள்ள ஒண்ணாத என் பாவங்களையும் உருமாய்ந்து போம்படி ஓட்டி. 'என்னைக் கொண்டு' என்பதற்கு, 'ஓர் உபாய அநுஷ்டானத்தைச் செய்வித்து' என்று கூறில், இப்போது இவர்க்கு [1] அபசித்தாந்தமாம்; பகவானுடைய திருவருளாலே பெற்றாராகச் சொல்லுமதுக்கும் சேராது; ஆதலின், மேலதே பொருள். எமர் ஏழ் எழு பிறப்பும் மேவும் தன்மையம் ஆக்கினான் - இதுதான் என் ஒருவனளவு அன்றிக்கே, என்னோடு சம்பந்தமுடையார் ஏழ் எழு பிறப்பும் தன்னைக் கிட்டுகையே தன்மையாக உடையோமாம்படி செய்தருளினான். எம்பிரான் விட்டு வல்லன் - எனக்கு உபகாரகனான சர்வேஸ்வரன் நினைத்த காரியம் செய்து தலைக்கட்ட வல்லன். சர்வசக்தி மாட்டாதது உண்டோ? [3] வியாப்தியும் தமக்காக என்று இருக்கிறார். (4)

181.

விட்டிலங்கு செஞ்சோதித் தாமரை பாதம், கைகள், கண்கள்;
விட்டு இலங்கு கருஞ்சுடர் மலையே திரு உடம்பு;
விட்டு இலங்கு மதியம் சீர் சங்கு; சக்கரம் பரிதி;
விட்டு இலங்கு முடி அம்மான் மதுசூதனன் தனக்கே

பொ - ரை :—மலர்ந்து விளங்குகிற முடியினையுடைய சுவாமியான மதுசூதனனுக்கு, திருவடிகளும் திருக்கைகளும் திருக்கண்களும்

---

1. அபசித்தாந்தம் - போலிக்கொள்கை : அவர் தம் கொள்கைக்கு முரண்பட்டது.

2. "வல்லன்" என்பதற்குப் பாவம், 'சர்வசக்தி மாட்டாத துண்டோ? என்ற வாக்கியம்.

3. "விட்டு" என்பதற்கு மேலே சர்வேஸ்வரன் என்று பொருள் அருளிச்செய்தார். இங்கு, வியாபகனான் என்று வேறு பொருள் அருளிச் செய்கிறார் 'வியாப்தியும் தமக்காக என்றிருக்கிறார்' என்று. வியாப்தி - பரந்திருத்தல்.

விட்டு விளங்கா நின்றுள்ள சிவந்த ஒளியினையுடைய தாமரையினைப் போன்றனவாம்; திருமேனி மலர்ந்து விளங்குகிற குளிர்ந்த ஒளியோடு கூடிய மலையினைப் போன்றதாகும்; அழகிய பாஞ்சஜன்யமானது களங்கம் இன்றி விளங்குகிற சந்திரனைப் போன்றதாம்; திருச்சக்கரமானது சூரியனைப் போன்றதாம் என்றவாறு.

வி - கு :—'விட்டு இலங்கு செஞ்சோதி' என்பது, தாமரைக்கு அடை. 'மதியம்' என்பதில் அம் சாரியை. அன்றி, அம் என்பதனைச் சங்கிற்கு அடைமொழி ஆக்கலுமாம்.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. **திருமாலையாண்டானிடத்தில் எம்பெருமானார்** திருவாய்மொழி கேட்டருளுகிற காலத்தில் பாசுரங்கள் தோறும் சில வார்த்தைகளை அருளிச்செய்து "இது அர்த்தம் ஆனாலோ" என்றால், "இது விஸ்வாமித்திர சிருஷ்டி, ஆளவந்தார் அருளிச்செய்யக் கேட்டறியேன்" என்று பணிக்குமாம் **ஆண்டான்.** **ஆண்டான்** "இப் பாசுரத்திற்கு விஸ்வாமித்திர சிருஷ்டி வேண்டாவாய் இருந்ததீ" என்ன, **எம்பெருமானார்** [1] "**இப் பாசுரத்தால், தன் அவயவ சௌந்தர்யத்தால் என்னைத் தனக்கு ஆக்கினான் என்கிறார்**" என்று அருளிச்செய்தனராம். அதுவும் கிடக்க, **பட்டர்**, "ஆழ்வாரையும் ஆழ்வார் சம்பந்தி சம்பந்திகளையும் அங்கீகரித்ததனால் திருமேனியிற் பிறந்த பேரொளியைச் சொல்லுகிறது" என்று அருளிச்செய்வர்; "நீராட்டம் முடிந்த பின் பலவித மலர்களால் கட்டப்பட்ட மாலை, கலவைச் சந்தனம் இவற்றை அணிந்திருப்பவரும், மிக உயர்ந்த பீதாம்பரத்தைத் தரித்திருப்பவருமான ஸ்ரீராமன், சுத்தமான திருக்குழலை உடையவராய் அந்தச் சிம்மாசனத்தில் அலங்கார இலக்குமியோடு பிரகாசித்தவராய் நின்றார்" என்றார் ஸ்ரீவால்மீகி.

---

1. மேல் சபரிகாரமாகத் தம்மை அங்கீகரித்தது எத்தாலே என்னில்? 'தன்னுடைய அவயவ சௌந்தர்யத்தாலே என்கிறார்' என்பது எம்பெருமானாருடைய திருவுள்ளம். 'எமர் ஏழேழு பிறப்பும் மேவும் தன்மையம் ஆக்கின குணத்துக்குத் தோற்று "விட்டிலங்கு" என்று இன்னோரன்ன விசேஷணங்களை இட்டு ஏத்துகிறார்' என்பது திருமாலையாண்டான் நிர்வாஹம்.

'ஆழ்வாரையும் ஆழ்வாருடைய பரிகரத்தையும் அங்கீகரித்த மகிழ்ச்சியினால் திருமேனியிற் பிறந்த பேரொளியைச் சொல்லுகிறது' என்பது பட்டர் திருவுள்ளம். ஆயின், ஒருவரை அங்கீகரித்த மகிழ்ச்சியினால் திருமேனியில் பேரொளி பிறந்த இடம் உண்டோ? எனின், அதற்குக் காட்டும் மேற்கோள், "சுத்தமான திருக்குழலையுடையராய்" என்று தொடங்கும் பொருளையுடைய சுலோகம். இந்தச் சுலோகம் ஸ்ரீபரதாழ்வானை அங்கீகரித்த பின்னர்த் திருமேனியில் உண்டான அழகைச் சொல்லுகிறது. ஸ்ரீராமா. யுத். 131 : 15.

விட்டு இலங்கு செம்சோதி தாமரை பாதம் கைகள் கண்கள் - மதகு திறந்தாற் போலே விட்டு விளங்காநின்றுள்ள, சிவந்த ஒளியையுடைத்தான தாமரை போலே ஆயிற்றுத் தாம் தோற்றுவிழும் திருவடிகள், தம்மை அணைத்த கைகள், குளிர நோக்கின திருக்கண்கள் இவை. உபமேயத்துக்கு உபமானம் நேராகப் போராமையாலே, அது தன்னையே அடைகொடுத்து ஓதுகிறார். அன்றி, 'விட்டு' என்பதனை வினையெச்சமாக்காது பெயர்ச்சொல்லாகக் கொண்டு 'விஷ்ணு' என்று பொருள் கூறலுமாம். விஷ்ணுவுக்கு, இலங்கு செம் சோதித் தாமரை பாதம் என்பது பொருள். விட்டு இலங்கு கரும் சுடர் மலையே திரு உடம்பு - [1] "இராமன் தனது திருமேனியின் ஒளியாலே தண்டகவனத்தை விளங்கச் செய்துகொண்டு அப்போது தோன்றிய இளஞ் சந்திரன் போன்று காணப்பட்டார்" என்னுமாறு போன்று இராநின்றது வடிவழகு; தம்மை அணைத்த போதைக் குளிர்ந்த வடிவு இருந்தபடி.

விட்டு இலங்கு மதியம் சீர் சங்கு - விட்டு இலங்குகின்ற ஒளியையுடைய சந்திரனைப் போன்று இராநின்றது ஸ்ரீ பாஞ்சஜன்யம். இறைவனைச் சார்ந்து இருத்தலாலே வந்த ஐஸ்வர்யத்தையுடையதாதலின், '**சீர் சங்கு**' என்கிறார். அதாவது, [2] "உண்பது சொல்லில் உலகுஅளந்தான் வாய்அமுதம், கண்படை கொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே" என்கிறபடியே, [3]**பிரசாதத்தைச் சூடிக் கைப்புடையிலே கிடப்பாரைப் போலே,** அவன் வாயாலே ஊட்ட உண்டு வடிவைப் பாராத் திருக்கையிலே சாய்வது; "உன் செல்வம் சால அழகியது" என்னும்படி வாயது கையதான ஐஸ்வர்யம் அன்றோ? சக்கரம் பரிதி-கண்டதில் மின்னிற்று ஒன்றை உபமானமாகச் சொல்லுமித்தனையே யாம்; ஆதித்தியனைப் போலே அன்றே திருவாழியாழ்வான் இருப்பது. விட்டு இலங்கு முடி-[4] இவை இத்தனையும் தன் புகராலே முட்டாக்கு இடுமாயிற்றுத் திருமுடி. அம்மான் மதுசூதனன் தனக்கே - சர்வேஸ்வரனாய் இருந்தும் அடியார்களுடைய பகைவர்களை அழிக்கும் தன்மையனானவனுக்கு. (5)

---

1. ஸ்ரீராமா. ஆரண். 38 : 15.

2. நாய்ச்சியார் திருமொழி. 7 : 8.

3. பிரசாதத்தைச் சூடி - பிரசாதத்தை உண்டு. கைப்புடை - திருக்கோபுர வாசலில் அறை. 'வாயது கையது' என்பது, சிலேடை.

4. உபமானத்தைச் சொல்லாமல் உபமேய மாத்திரத்தைச் சொல்லுகையாலே பலித்த பாவம், 'இவைஇத்தனையும்' என்று தொடங்கும் வாக்கியம்.

182.

மதுசூதனை அன்றி மற்று இலேன் என்று எத்தாலும்
[கருமம் இன்றித்
துதிசூழ்ந்த பாடல்கள் பாடி ஆட நின்று ஊழி ஊழி
[தொறும்
எதிர்சூழல் புக்கு, எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள்
[செய்ய
விதிசூழ்ந்ததால் எனக்கேல் அம்மான் திரிவிக்கிரமனையே.

பொ-ரை :—மதுசூதனனாகிய இறைவனையொழிய வேறுஒருவரையும் யான் தஞ்சமாக உடையேன் அல்லேன் என்று உறுதி பூண்டு, வேறொரு பொருளாலும் ஒரு பயனும் இன்றிக் கல்பந்தோறும் கல்பந்தோறும் துதி செய்தலாக அமைந்து சூழ்ந்துள்ள பாடல்களைப் பாடி ஆடி அதிலேயே நிலைபெற்று நிற்கும்படி, நான் பிறந்த எல்லாப் பிறப்புக்களிலும் தானும் எதிரே வந்து பிறந்து எனக்கே காரியங்களைச் செய்யும்படி அம்மானாகிய திரிவிக்கிரமனை என் பொருட்டாகவே ஓர் அருள் சூழ்ந்துகொண்டது என்றவாறு.

வி-கு :—மதுசூதனை அன்றி மற்றிலேன் என்று எத்தாலும் கருமம் இன்றி ஊழி ஊழிதொறும் துதி சூழ்ந்த பாடல்களைப் பாடி யாடி நின்று எனைத்தோர் பிறப்பும் எதிர்சூழல் புக்கு எனக்கே அருள்கள் செய்ய, அம்மான் திரிவிக்கிரமனை என்பொருட்டாகவே ஒரு விதி சூழ்ந்தது எனக் கூட்டுக. மற்று இலேன் என்று துதிசூழ்ந்த பாடல்கள் என்றும், கருமம் இன்றித் துதிசூழ்ந்த பாடல்கள் என்றும், எதிர்சூழல் புக்கு அருள்கள் செய்ய விதி சூழ்ந்தது என்றும் முடிக்க. 'ஆடநின்று' என்பதனை நின்று ஆட என மாற்றுக. எனக்கே, ஏகாரம் பிரிநிலை. எனக்கேல், ஏல் அசைநிலை.

ஈடு :—[1] ஆறும்பாட்டு. தன்பக்கல் யான் பக்தியுடையேன் ஆகைக்கு எம்பெருமான் வருந்திய வருத்தம் அனைத்தும் தன் கிருபையாலே என்கிறார்.

மதுசூதனை அன்றி மற்று இலேன் என்று-விரோதிகளை அழிக்கும் தன்மையனானவனை ஒழிய, வேறு சிலரைத் தஞ்சமாக உடையேனல்லேன் என்றாயிற்று இவர் இருப்பது. ஆயின், சத்துவம் தலையெடுத்தபோது ஒருகால் இவ்வார்த்தை சொல்லு

---

1. "எனைத்தோர் பிறப்பும் எதிர்சூழல்புக்கு எனக்கே அருள்கள் செய்ய விதி சூழ்ந்ததால்" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை.

மது நமக்கும் உள்ளது ஒன்றே யன்றோ; இவர்க்கு வேற்றுமை என்? என்னில், எத்தாலும் கருமம் இன்றி - அந்த வார்த்தைக்குச் சேர அநுஷ்டானம் உண்டாயிருக்கும்; அதாவது, [1] பிராப்பிய ஆபாசங்களிலும் பிராபக ஆபாசங்களிலும் நெகிழ்ந்து, அவனை ஒழிந்த எல்லாவற்றாலும் ஒரு பிரயோஜன மின்றியே இருப்பர் என்றபடி. துதி சூழ்ந்த பாடல்கள் பாடி ஆட நின்று ஊழி ஊழிதொறும் - கல்பந்தோறும் கல்பந் தோறும் துதிசெய்த பாடல்களைக் கொண்டு பாடுவது ஆடுவதாம்படி பண்ணினான். துதி சூழ்ந்த பாடல் - துதி உருவமான பாடல்கள் என்னுதல்; துதிக்கப்படுகிற குணங்களை விளாக்கொலை கொள்ளும்படியான பாடல்கள் என்னுதல். '**நின்று**' என்கிறார், [2] "எனக்குக் கொடு" என்று பிரயோஜனங்களைப் பற்றி அகலுகை இன்றியே இருத்தலின்.

இப்படி, அவன் செய்தற்குக் காரணம் என்? என்ன, சொல்லுகிறார் மேல்: எனைத்தோர் பிறப்பும் எதிர்சூழல்புக்கு எனக்கே அருள்கள் செய்ய விதி சூழ்ந்ததால் என்கிறார்; அதாவது, எதிர்சூழல் புக்கு ஒருவனைப் பிடிக்க நினைத்தவன் அவன் போம் வரம்புக்கு எதிர்வரம்பே வருமாறு போன்று, இவர் பிறந்த பிறவிகள் தோறும் தானும் எதிரே பிறந்து வந்தான் என்கிறார் என்றபடி. [3] இவர் கர்ம மடியாகப் பிறக்க, அவன் அநுக்கிரகத்தாலே பிறந்து வந்தான் இத்தனை. சூழல் என்று அவதாரத்தைச் சொல்லக் கடவது. விதி என்றது, பகவானுடைய கிருபையை. பகவானுடைய கிருபையை விதி என்பான் என்? என்னில், இறைவனுக்குத் தப்ப ஒண்ணாதது ஆகையாலே. அதாவது, நாம் நினைத்தவற்றைத் தலைக்கட்ட ஒட்டாத கர்மம் போன்று, ஈஸ்வரன் நினைத்த காரியங்களையும் கிருபைக்குப் பரதந்திரனாய்த் தலைக்கட்டமாட்டானாகையாலே

1. பிராப்பியாபாசங்கள் - வேறு பயன்கள். பிராபகாபாசங்கள் - வேறு உபாயங்கள். பிராப்பியாபாசம், பிராபகாபாசம் என்றால் பிராப்பியத்தைப் போலத் தோன்றுவது, பிராபகத்தைப் போலத் தோன்றுவது என்பது பொருள். பிராப்யம் - அடையத்தக்கது, பிராபகம் - அடைதற்குரிய வழி.

2. யஜுர்வே. 1 : 8. 'எனக்கு நீ ஒரு பலனைக் கொடு, நான் உனக்கு ஒரு பலனைக் கொடுக்கிறேன்' என்று வேறு பிரயோசனங்களைக் கொண்டு நீங்காமல் என்றபடி.

3. சேதனன் கர்ம மடியாகப் பிறக்கிறான், இறைவன் பிறக்கைக்கு அடி என்? என்ன, அருளிச்செய்கிறார் 'இவர் கர்ம மடியாகப் பிறக்க' என்று தொடங்கி. "பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே" என்ற பரிபாடல் இங்கு ஒப்பு நோக்குக.

என்றபடி. [1] "தங்களிலும் திருவருளே மிகுந்து இரக்ஷித்துக் கொண்டுபோரும் குடியிலே பிறந்தவர்; கொலை செய்தற்குத் தக்கதான காகத்துக்கு விட்ட அம்புக்கு உட்படக் [2] கண்ணழிவு செய்யுமவர்" என்பர் ஸ்ரீவால்மீகி பகவான். எனக்கேல் அம்மான் திரிவிக்கிரமனையே-[3]சர்வேஸ்வரனாய்இருந்தும், ஸ்ரீ வாமனனாய் வந்து அவதரித்து, மூன்று அடியாலே மூன்று உலகங்களையும் திருவடிகளின் கீழே இட்டுக்கொண்டு, எல்லாரோடும் பொருந்தின சௌலப்யந்தான் பரத்துவம் என்னும்படி என்னை அங்கீகரிப்பதற்கு ஒரு விதி சூழ்ந்தது. [4] அம்மான் திரிவிக்கிரமனை எனக்கே அருள்கள் செய்ய எனக்கு என்னவே ஒரு விதி சூழ்ந்தது என்க. (6)

---

1. ஸ்ரீராமா. சுந். 38 : 34. "ககுஸ்தவம்சத்தில் பிறந்த சரண்யனான அவ் இராமபிரான், பூமியில் விழுந்தவனும் சரணம் அடைந்தவனுமான அந்தக் காகாசுரன் கொல்லத் தக்கவனாயிருந்தும் பரமகிருபையால் அவனைக் காப்பாற்றினார்" என்பது அச் சுலோகத்தின் பொருள்.

'தங்களிலும் திருவருளே மிகுந்து' என்றது, தங்கட்குக் கேடு வரினும் கிருபையே மிகுந்து என்றபடி.

எந்தை நின்சரணம் சரண்என்ற இதனால்
முந்து நின்குறையும் பொறை தந்தனம்; முந்துன்
சந்தம் ஒன்று கொடித்திரள் கண்கள் தமக்கே
வந்தொர் நன்மணி நிற்கென வைத்ததும் வைப்பாய்.

(கம்பரா. சுந். சூடா. 82.)

சித்திரகூடத்து இருப்பச் சிறுகாக்கை முலைதீண்ட
அத்திரமே கொண்டு எறிய அனைத்துலகும் திரிந்தோடி
வித்தகனே இராமாவோ நின்னபயம் என்று அழைப்ப
அத்திரமே அதன்கண்ணை அறுத்ததும் ஓர் அடையாளம்.

(பெரியாழ். 3. 10 : 6.)

என்னும் பாசுரங்களை நோக்குக.

2. கண்ணழிவு - விளம்பம், கண்ணை அழிக்கை.

3 அம்மான் திரிவிக்கிரமனை எனக்கு என்ன விதிசூழ்ந்தது என்று கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரனாய் இருந்தும்' என்று தொடங்கி.

4. "எனக்கு" என்பது இரண்டு இடத்தில் வந்திருப்பதால் கூறியது கூறல் ஆகாமைக்கு அந்வயம் காட்டுகிறார் 'அம்மான்' என்று தொடங்கி. "விதி" என்பதற்குக் கிருபை என்று பொருள் அருளிச்செய்தாராதலின் "அருள்கள்" என்பதற்குக் கிருபையின் காரியம் என்று பொருள் கொள்க.

183

திரிவிக்கிரமன் செந்தாமரைக்கண் எம்மான் என்
[செங்கனி வாய்
உருவில் பொலிந்த வெள்ளைப்பளிங்கு நிறத்தனன் என்று
[என்று உள்ளிப்
பாவிப் பணிந்து பல் ஊழி ஊழி நின் பாத பங்கயமே
மருவித் தொழும் மனமே தந்தாய் வல்லைகாண் என்
[வாமனனே!

பொ - ரை :—மூன்று அடிகளாலே உலகங்களை எல்லாம் அளந்தவன், செந்தாமரை போன்ற திருக்கண்களையுடைய எம்மான், சிவந்த கனி போன்ற திருவாயிலே அழகிய வெண்மையான ஸ்படிகம் போன்ற நிறம் பொருந்திய பற்களை உடையவன் என்று என்று காலமுள்ள வரையிலும் நினைத்து வணங்கித் துதித்துப் பொருந்தித் தொழும்படியான மனத்தினைத் தந்தாய்; என் வாமனனே! நீ ஆற்றலையுடையாய் என்றவாறு.

வி - கு :—என்று என்று உள்ளிப் பரவிப் பணிந்து மருவித் தொழும் மனம் என முடிக்க. 'வெள்ளைப் பளிங்கு நிறத்தனன்' என்பதனை வெள்ளை நிறத்துப் பளிங்கினன் என விகுதி பிரித்துக் கூட்டுக. பளிங்கு என்றது, பளிங்கு போன்ற பற்களை. வல்லை: முன்னிலை முற்று. காண்: முன்னிலை யசை.

ஈடு :—ஏழாம் பாட்டு. [1]உன்னுடைய குணங்களை நினைத்தல் முன்னாகத் துதித்தலையும் வணங்குதலையும் செய்து கொண்டு உன்னை அநுபவிக்கும் இதுவே பிரயோஜனமாய் இருக்கும் மனத்தை எனக்குத் தந்தாய் என்கிறார்.

திரிவிக்கிரமன் - மூன்று அடிகளாலே எல்லா உலகங்களையும் தன் காற்கீழே இட்டுக் கொண்டவன். செந்தாமரைக்கண் எம்மான் - நோக்காலே என்னைத் தன் காற்கீழே இட்டுக் கொண்டவன். என் செம் கனி வாய் உருவின் பொலிந்த வெள்ளைப் பளிங்கு நிறத்தனன் - என்னைத் தனக்கே உரியவன் ஆக்குகையாலே சிவந்து கனிந்த திருஅதரத்தின் [2]உருவிலே பொலிந்த, பரிசுத்தமான ஸ்படிகம் போலே இருக்கிற திருமுத்து நிரையினுடைய நிறத்தை யுடையவன். இதனால், இவர்

1 "மருவித் தொழும் மனமே தந்தாய்" என்றதனை நோக்கி 'உன்னை அநுபவிக்கு மிதுவே பிரயோஜனமாய் இருக்கும் மனத்தை' என்கிறார்.

2. உரு - அழகு: ஈண்டு நிறத்தின் அழகைக் குறிக்க வந்தது. சிவந்த நிறத்தாலே என்றபடி. பொலிந்த - பரபாகத்தாலே நிறைந்த. பரபாகம் - வர்ண உத்கர்ஷம்; நிறத்தின் சிறப்பு. திருமுத்து என்றது, பற்களை.

[1] "ஜிதம்" என்ற பின்பு, அவன் புன்முறுவல் பூத்தமையைத் தெரிவித்தபடி. என்று என்று உள்ளி - இதர விஷயங்களினுடைய புன்முறுவலில் உண்டான நினைவு [2] அகவாய் கண்டவாறே விட்டு அல்லது நிற்க ஒண்ணாதாய் இருக்கும்; இது மாறாதே அநுசந்திக்கக் கூடியதாக இருத்தலின் 'என்று என்று உள்ளி' என்று அடுக்குத்தொடரால் கூறுகின்றார்.

பரவிப் பணிந்து - முறைகேடாகக் கூப்பிட்டுச் செருக்கு அற்றவனாய்த் திருவடிகளிலே விழுந்து. இப் பேறு தான், ஒரு நாள் உண்டாய் மற்றைநாள் [3]மறுக்கை அன்றியே, பல் ஊழி ஊழி நின் பாத பங்கயமே மருவித் தொழும் மனமே தந்தாய் - கல்பந்தோறும் கல்பந்தோறும் பரம போக்யமான உனது திருவடிகளையே [4] அநந்யப் பிரயோஜனனாய்க் கொண்டு தொழும் மனத்தினைத் தந்தாய். இனி, மற்றைய விஷயங்கள் நிலைஅற்றவை ஆகையாலும் இனியன அல்லாதவை ஆகையாலும் ஒன்றையே பற்றி நிற்க விஷயம் இல்லை ஆகையாலே, மனம் [5] "சஞ்சலம் அடைந்துகொண்டே இருக்கும் மனம்" என்கிறபடியே, சஞ்சலம் அடைந்துகொண்டே அன்றோ இருப்பது; அப்படி இன்றியே, நித்தியமுமாய் எல்லை இல்லாத போக்கியமுமாய் இருக்கையாலே 'மருவித் தொழும் மனமே தந்தாய்' என்கிறார் எனலுமாம். இனி, பழைய மனத்தினைத் திருத்தின

---

1. ஜிதம் - தோற்றல்; அதாவது, அடிமை புகுதல்.

2. "மக்கள் யாக்கை இதுவென வுணர்ந்து
மிக்கோய்! இதனைப் புறமறிப் பாராய்." (மணிமே. பளிக். 120,121.)
"மற்றதனைப், பைம்மறியாப் பார்க்கப் படும்." (நாலடி. 42.)
"பைம்மறியா நோக்கப் பருந்துஆர்க்குந் தகைமைத்து."
(இறை. கள. சூ. 1, உரை.)

என்பன ஒப்பு நோக்கத் தக்கன.

3. மறுக்கை - ஈண்டு இல்லையாதல்.

4. அநந்யப்பிரயோஜனன் - வேறு பயனைக் கருதாதவன். மனம் எப்பொழுதும் மருவித் தொழுவதற்குக் காரணங்கள் இரண்டு. அவையாவன: அநந்யப் பிரயோஜனத்வமும், பகவானுடைய நிரதிசய போக்யத்வமும். அவ் இரண்டு காரணங்களையும் விரிக்கிறார் 'கல்பந்தோறும்' என்று தொடங்கும் வாக்கியத்தாலும், 'மற்றைய விஷயங்கள்' என்று தொடங்கும் வாக்கியத்தாலும்.

5. ஸ்ரீ கீதை. 6: 34.

அளவே அன்றி, [1] கருவூலத்திலே ஒரு நெஞ்சைத் தந்தாய் எனலுமாம்; [2] "உனக்கு ஞானக் கண்ணைக் கொடுத்தேன்" என்பது போன்று. "பழைய மனம் இது" என்று [3] பிரத்ய பிஜ்ஞை பண்ண ஒண்ணாதபடி இராநின்றது என்றபடி. என் வாமனனே வல்லைகாண் - வாமன வேடத்தைக் காட்டி என் மனத்தினைத் திருத்தித் தந்தாய்; அவ் வடிவழகாலே, மஹாபலி 'என்னது' என்று இருந்த பூமியை அபகரித்தாய்; ஆதலால், கொள்கைக்கும் கொடுக்கைக்கும் உனக்குப் பரிகரம் ஒன்றேயோ? என்கிறார். வல்லை காண் - உகப்பின் மிகுதி. (7)

184.

வாமனன், என் மரகதவண்ணன், தாமரைக் கண்ணினன்,
காமனைப் பயந்தாய்! என்று என்று உன் கழல் பாடியே [பணிந்து
தூ மனத்தனனாய்ப் பிறவித் துழதி நீங்க, என்னைத்
தீ மனம் கெடுத்தாய்; உனக்கு என் செய்கேன் என் [சிரீதரனே?

பொ - ரை:—என் வாமனன், மரகத வண்ணன், தாமரைக்கண்ணினன், காமனைப் பயந்தாய் என்று என்று உன் திருவடிகளைப் பாடி வணங்கித் தூய்மை பொருந்திய மனத்தினை உடையேனாய்ப் பிறவியின் துன்பமானது நீங்கும்படி என்னுடைய தீய மனத்தையும் கெடுத்தாய்; என் ஸ்ரீதரனே! உனக்கு என்ன கைம்மாறு செய்வேன்? என்கிறார்.

வி - கு:—வாமனன் என்பது முதலிய மூன்றும், படர்க்கைப் பெயர்கள்; முன்னிலைப்பெயர்களாகக் கோடலுமாம். காமனைப் பயந்தாய் என்பது முன்னிலை. பாடிப் பணிந்து மனத்தனனாகி நீங்கக் கெடுத்தாய் என முடிக்க. துழதி - துன்பம். ஸ்ரீதரன் - ஸ்ரீயைத் தரித்தவன்; ஸ்ரீ - திருமகள்.

ஈடு:—எட்டாம் பாட்டு. [4] எம்பெருமான் தம் திறத்திற் செய்த உபகாரத்துக்குப் பிரதியுபகாரம் காணாது தடுமாறுகிறார்.

---

1. திருஆபரணங்கள் முதலியன இட்டு வைக்கும் அறையைக் கருவூலம் என்பர்; ஸ்ரீ பண்டாரம் என்றபடி.

2. ஸ்ரீ கீதை. 11 : 18.

3. பிரத்யபிஜ்ஞை பண்ணுதல் - நினைவிற்கு வருதல்.

4. "உனக்கு என் செய்கேன்" என்றதிலே நோக்காக அவதாரிகை அருளிச்செய்கிறார்.

வாமனன் - வடிவழகைச் சொல்லுகிறது என்னுதல்; அன்றிக்கே, சுகங்களைத் தருமவன் என்னுதல். என் மரகத வண்ணன் - சிரமத்தைப் போக்கக் கூடிய வடிவழகை என்னை அனுபவிப்பித்தவன். தாமரைக் கண்ணினன் - வடிவழகே அன்றி, அகவாயில் தண்ணளிக்குப் பிரகாசகமான திருக்கண்களை உடையவன். காமனைப் பயந்தாய்-வடிவழகாலே நாட்டை வெருட்டித் திரிகிற காமனைப் பெற்றவனே! [1] அநுசந்தானத்திலே ஒரு தெளிவு பிறந்தவாறே முன்னிலை போலே தோன்றும், அப்படியும் சொல்லிக் கூப்பிடுவர்; அதற்கு மேல் சில பரிமாற்றங்களை ஆசைப்பட்டு அவை கிடையாமையாலே படர்க்கையாகவும் சொல்லிக் கூப்பிடுவர்: இவை இரண்டற்கும் அடி அபிநிவேசம்.

என்று என்று பாடியே உன் கழல் பணிந்து - இத் திருநாமங்களை இப்படி வாயாலே மாறாதே சொல்லாநிற்கத் திருவடிகளிலே விழுந்து. தூ மனத்தனனாய் - பந்த மோக்ஷங்கள் இரண்டற்கும் பொதுவான நெஞ்சாதல் இன்றி, மோக்ஷத்திற்கே ஏகாந்தமான மனத்தினை உடையனாய். பரிசுத்தமான மனத்தினை உடையேனாய் என்றபடி. அதன் பலமாக வருமதுவே பிறவி நீங்குவது; பிறவித் துழதி நீங்க - பிறவித் துழதி உண்டு - பாரமான துன்பம்; அது நீங்கும்படியாக. என்னைத் தீ மனம் கெடுத்தாய் - அமிருதத்தையும் விஷத்தையும் ஒருசேர விரும்புவாரைப் போன்று, உன்னையும் விரும்பி அற்ப விஷயங்களையும் உவக்கும் பொல்லாத மனத்தைத் தவிர்த்தாய். ஆயின், "மருவித் தொழும் மனமே தந்தாய்" என்ற போதே இதுவும் பெறப்படாதோ? எனின், "நல்ல மனத்தைத் தந்த அளவே அன்றிப் பொல்லாத நெஞ்சினைத் தவிர்ப்பதும் செய்தாய் என்கிறார். உனக்கு என் செய்கேன் என் சிரீதரனே-செய்த உதவியின் கனத்தாலே பிரதியுபகாரம்

---

1. "வாமனன்" என்பது போன்ற படர்க்கைப் பெயர்களும், "காமனைப் பயந்தாய்" என்னும் முன்னிலைப் பெயரும் விரவி ஒரே பாசுரத்தில் வருதல் கூடுமோ? என்னும் வினாவைத் திருவுள்ளத்தே கொண்டு அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அநுசந்தானத்திலே' என்று தொடங்கி. அபிநிவேசம்-அன்பின் பெருக்கு.

2. 'நல்ல மனத்தைத் தந்த அளவே யன்றி' என்றது, அநந்யப் பிரயோஜனமானும் ஒரே காலத்தில் விஷயப் பிராவண்யம் உண்டாதல் கூடுமாகையாலே அதனைத் தவிர்த்தாய் என்கிறார் என்றபடி. அன்றியே, மேலே விதிமுகத்தால் அருளிச்செய்தார்; இங்கே மறை முகத்தால் அருளிச்செய்கிறார் எனக் கோடலுமாம்.

செய்தல்லது தரிக்கமாட்டுகின்றிலேன்; அதற்கு விரகு காண்கின்றிலேன். நான் ஓர் உபகாரம் கொள்ளாதொழிதல், நீ குறைவாளனாதல் செய்யப்பெற்றிலேன்; நிறைவாளனாக இருக்கிற உனக்கு நான் எத்தைச் செய்வேன் என்பார் '**ஸ்ரீதரனே உனக்கு என் செய்கேன்**' என்கிறார். (8)

185.

சிரீதரன், செய்ய தாமரைக்கண்ணன், என்று என்று [இராப் பகல் வாய்
வெரீஇ, அலமந்து கண்கள் நீர் மல்கி, வெவ்வுயிர்த்து [உயிர்த்து
மரீஇய தீவினை மாள, இன்பம் வளர, வைகல் வைகல்
இரீஇ, உன்னை என்னுள் வைத்தனை;என் இருடீகேசனே.

பொ - ரை:—என்னுடைய இருடீகேசனே! ஸ்ரீதரன், செந்தாமரைக்கண்ணன் என்று இடைவிடாது இரவும் பகலும் வாயால் சொல்லிக் கொண்டு மனம் சுழன்று கண்கள் நீர் நிறைந்து வெப்பத்தோடு பெருமூச்சு எறிந்து, பொருந்திய கொடிய பாவங்களெல்லாம் நீங்கும் படியாகவும் பேரின்பம் மேலும் மேலும் வளரும்படியாகவும் கழிந்து கொண்டே செல்கின்ற நாள்தோறும் உன்னை என் மனத்தில் இருத்தி வைத்தனை என்கிறார்.

வி-கு:—வெருவி, மருவிய, இருத்தி என்னும் சொற்கள், விகாரப்பட்டு அளபெடுத்தன. என்று என்று வெருவி அலமந்து மல்கி உயிர்த்து என்னும் எச்சங்களை மருவிய என்னும் பெயரெச்சத்துடன் முடிக்க. மாள வளர வைத்தனை என்றும், இரீஇ வைத்தனை என்றும் முடிக்க. இருடீகேசன் - இந்திரியங்களை நியமிக்கின்றவன்; ஹ்ருஷீகம் - இந்திரியங்கள்; ஈசன் - நியமிக்கிறவன். இது வடமொழிப் பெயர். "பொறிவாயில் ஐந்தவித்தான்" (திருக்குறள்) தமிழ்ப்பெயர்.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு.[1] "ஆடி ஆடி"யிற் பிறந்த துன்பம் எல்லாம் யான் மறந்து மிகவும் பிரீதன் ஆகும்படி பண்ணி,

---

1. இப் பாசுரத்திற்கு அவதாரிகை இரண்டு வகையில் அருளிச் செய்கிறார். முன்னையது, பட்டர் நிர்வாஹத்தைப் பற்றியது. பின்னையது, முன்புள்ள முதலிகள் நிர்வாஹத்தைப் பற்றியது. இப்பாசுரத்தில் "மரீஇய தீவினை மாள" என்றதனை நோக்கி '"ஆடியாடி" யிற் பிறந்த துன்பம் எல்லாம் யான் மறந்து' என்கிறார். "இன்பம் வளர" என்றதனை நோக்கிப் 'பிரீதனாகும்படி பண்ணி' என்கிறார். "இருடீகேசன்" என்றதனை நோக்கி 'இந்திரியங்களைத் தானிட்ட வழக்காக்கினான்' என்கிறார். "இராப் பகல் வாய்வெரீஇ அலமந்து கண்கள் நீர் மல்கி வெவ் வுயிர்த் துயிர்த்து, மரீஇய தீவினைமாள இன்பம் வளர வைகல் வைகல் இரீஇ உன்னை என்னுள் வைத்தனை" என்னும் முழுப்பகுதியினையும் நோக்கிப் 'பக்திமுன்னாக' என்று தொடங்கும் அவதாரிகை எழுகின்றது.

இந்திரியங்களைத் தான்இட்ட வழக்கு ஆக்கினன் என்கிறார். இனி,பக்தி முன்னாக உன்னை அநுபவியா நிற்கவும்,தடைகளும் நீங்கி எல்லை இல்லாத மகிழ்ச்சியும் பிறக்கும்படி உன்னை என்னுள்ளே வைத்தாய் என்று இனியர்ஆகிறார் எனலுமாம்.

சிரீதரன்-பெரியபிராட்டியாரைத் திருமார்விலே உடையவன். செய்ய தாமரைக் கண்ணன் - [1] "பிராட்டியைத் திருமார்விலே தரித்துக்கொண்டு இருப்பவரும், எங்கும் நிறைந்தவரும், விசாலமான தாமரைஇதழ் போன்ற திருக்கண்களை உடையவரும்"என்கிறபடியே,நீர்பாய்ந்த பயிர் செவ்விபெற்று இருக்குமாறு போன்று, பிராட்டி மார்வில் இருக்கையாலே குளிர்ந்த கண்ணழகினை யுடையவன். என்று என்று - இப்படி மாறாதே சொல்லி. இராப் பகல் வாய்வெரீஇ-இதற்கு, "இவர் பக்திபரவசர் ஆகையாலே இவருடைய தேக யாத்திரை இருக்கும்படி" என்று முன்புள்ள முதலிகள் அருளிச்செய்வர். இனி, பட்டர் "இராப் பகல் வாய்வெரீஇ" என்றது முதல் "மரீஇய தீவினை மாள" என்றது முடிய, [2] "ஆடிஆடியில்" இவர்க்கு ஓடின நிலையினைக் கூறுகின்றது என்றும், "இன்பம் வளர" என்றது, [3]"அந்தாமத்தன்பு" தொடங்கி "கேசவன்தமர்" முடிய உண்டான பிரீதியைச் சொல்லுகிறது என்றும்அருளிச் செய்வர்.

அதாவது :-"இராப்பகல் வாய்வெரீஇ" என்றது [4]"இவள் இராப் பகல் வாய்வெரீஇ" என்றதனை. "அலமந்து" என்றது [5]"எங்கும் நாடி நாடி" என்றதனை. "கண்கள் நீர்மல்கி" என்றது, [6]"தன குவளை ஒண்கண்ண நீர்கொண்டாள்" என்றதனை. "வெவ் உயிர்த்து உயிர்த்து" என்றது [7]"உள்ளம் மலங்க வெவ்வுயிர்க்கும்" என்றதனை. "மரீஇய தீவினை மாள" என்றது ஆயிரம் யாண்டு முதலையின் வாயிலே யானை இடர்பட்டது போன்று, "ஆடியாடி"யில் இவர்க்குப் பிறந்த ஆற்றாமையினை. இவர்க்கு இப்படிப்பொருந்தின பிரிவின் வியசனம் ஆறும்படி

1. விஷ்ணுதர்மம்.
2. "ஆடியாடி" என்றது, இப் பத்தில் நான்காம் திருப்பதிகம்.
3. "அந்தாமத்தன்பு" இப் பத்தில் ஐந்தாந் திருப்பதிகம்.
4. திருவாய். 2. 4: 5.
5. திருவாய். 2. 4: 1.
6. திருவாய். 2. 4: 5.
7. திருவாய். 2. 4: 4.

யாக என்றபடி. "இன்பம் வளர" என்றது "அந்தாமத்தன்பு" தொடங்கிப் பிறந்த பிரீதியினை. வைகல் வைகல்-கழிகிற காலந் தோறும் - உன்னை என்னுள்ளே இருத்தி வைத்தனை. என் இருடீகேசனே - எனக்குப் பரிகரமாய்ப் பகைத்த இந்திரியங் களும் உன் பக்கலிலே படையற்றன. [1] பரம சேஷியைக் கண் டார் துவாரசேஷிகள் அளவிலே நில்லார்கள் அன்றே? (9)

186.

இருடீகேசன், எம்பிரான், இலங்கை அரக்கர் குலம்
முருடு தீர்த்தபிரான், எம்மான், அமரர்பெம்மான் என்று [என்று
தெருடியாகில், நெஞ்சே! வணங்கு; திண்ணம் அறி; அறிந்து
மருடியேலும் விடேல் கண்டாய்! நம்பி பற்பநாபனையே.

பொ - ரை :—மனமே! நீ அறிவுடையையாகில், நம்பியாகிய பத்ம நாபனை, இருடிகேசன் எம்பிரான் இலங்கையில் உள்ள அரக்கர் குலத் தவனை இராவணன் முதலியோருடைய கொடுமைகளை நீக்கிய பிரான், எம்மான், அமரர்பெம்மான் என்று என்று கூறி வணங்கு; இதனைத் திடமாகப் புத்திபண்ணு; அவ்வாறு அறிந்து, பின் கலங்குவாயே யாயினும் இறைவனை விடாதொழி என்கிறார்.

வி - கு :—தெருடி, மருடி என்பனவற்றிற்குத் தெருள், மருள் என்பன பகுதிகள். 'நம்பி என்பது, நமக்கு இன்னான் என்னும் பொருள்பட வந்த உயர்சொல்' என்பர் தொல்காப்பிய உரைகாரர். (தொ. சொ. சூ. 163.) பத்மநாபன் என்பது, பற்பநாபன் என வந்தது; தாமரை உந்தியன் என்பது பொருள்.

ஈடு :—பத்தாம்பாட்டு. [2] "நமக்கு மிகவும் உபகாரகனானவனை நீ ஒருகாலும் விடாதேகொள்' என்று தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார் இப் பாசுரத்தில்.

இருடீகேசன் எம்பிரான் - [3] தன்னை அறிகைக்குப் பரிகர மாகத் தந்த இந்திரியங்களைக்கொண்டு ஐம்புலஆசையில் அகப் பட்டு நான் கேட்டினை அடையாமல் தன்னையே அறிகைக்குப் பரிகரமாம்படி செய்து உபகரித்த பேருதவியை உடையவன்.

1. பரமசேஷி - சர்வேஶ்வரன்; இந்திரியங்களுக்கு ஸாக்ஷாத் சேஷி, சர்வேஶ்வரன் ஆகையாலே 'பரமசேஷி' என்கிறார். 'துவாரசேஷி' என்றது, சேதநனை.

2. "இருடீகேசன் எம்பிரான்" என்றதனை நோக்கி 'நமக்கு மிகவும் உபகாரகன் ஆனவனை' என்கிறார்.

3. இறைவன் செய்த உபகாரத்தை விரிக்கிறார், 'தன்னை அறிகைக்குப் பரிகரமாகத் தந்த' என்று தொடங்கும் வாக்கியத்தால்.

இலங்கை [1] அரக்கர் குலம் முருடு தீர்த்த பிரான் - இலங்கையில் இராக்ஷச சாதியில் விபீஷணன் முதலியோரை வைத்து, முருடரான இராவணன் முதலியோர்களை அழித்தாற் போலே ஆயிற்று, இவருடைய [2] அவஸ்த்தையைத் தவிர்த்தபடி. எம்மான் அமரர் பெம்மான் - இந்திரியங்களினுடைய இதர விஷயங்களில் உள்ள ஆசையைத் தவிர்த்த மாத்திரமேயன்றி நித்தியசூரிகளுக்குத் தன்னை அநுபவிக்கக் கொடுக்குமாறு போன்று எனக்குத் தன்னை அநுபவிக்கத் தந்தவன்.

என்று என்று - இப்படிச் சொல்லாநின்று கொண்டு. தெருடியாகில் - தெருளுதியாகில்; ஞானம் பரவுவதற்கு வழியாகில் என்றபடி. நெஞ்சே வணங்கு - [3] ஞானேந்திரியங்களுக்கும் அறிவுக்கும் வாய்த்தலையான ஏற்றம் உனக்கு உண்டாகில் உதவியைச் செய்தவனுடைய திருவடிகளிலே விழப் பார். திண்ணம் அறி - இதனை [4] "ஓலக்க வார்த்தை" என்று இராமல் திடமாகப் புத்திபண்ணு. அறிந்து - அறிகை தானே போதுவதாம் பிரயோஜனம். அதற்கு மேலே, மருடியேலும் விடேல் கண்டாய்-அவன் வைலக்ஷண்யத்தைப் பார்த்த அளவிலே வருவது ஒரு பிச்சு உனக்கு உண்டு அன்றே? அதாவது, 'நாம் இவ் விஷயத்தைத் தூஷிக்கையாவது என்' என்று தாழ்மையைச் சொல்லிக்கொண்டு அகலப்பார்ப்பது ஒன்று உண்டு அன்றே? அதனைத் தவிர்வாய் என்றபடி. நம்பி பற்பநாபனையே - கெடுவாய், இவ் விஷயத்தை விட்டுப் புறம்பே போய் [5]மண்ணை முக்கவோ? [6] அவன் குணபூர்த்தி இருந்தபடி கண்டாயே! வடிவழகு இருந்தபடி கண்டாயே! நமக்கு முன்பு உதவி செய்தபடி கண்டாயே! என்கிறார். (10)

---

1. "அரக்கர் குலம் முருடுதீர்த்த" என்றதனால் 'இராக்ஷச சாதியில் விபீஷணன் முதலியோரை வைத்து' என்று பொருள் அருளிச்செய்கிறார். விபீஷணன் முதலியோர் முருடு அல்லாமை உணர்க.

2. 'இந்திரிய அவஸ்த்தையைத் தவிர்த்த' என்றது, இவருடைய இந்திரியங்கள் அழியாதிருக்கவும் அவற்றினுடைய விபரீத போக்கின் தன்மையைப் போக்கினமையைத் தெரிவித்தபடி.

3. 'ஞானேந்திரியங்களுக்கு வாய்த்தலையான' என்றது, ஞானேந்திரியங்களால் உண்டாகக்கூடிய அறிவிற்கு வாய்த்தலை என்றபடி. வாய்த்தலை - மூலம்.

4. ஓலக்க வார்த்தை - சபையில் கூறும் வார்த்தை.

5. மண்ணை முக்கவோ - மண்ணைத் தின்னவோ?

6. "நம்பி பற்பநாபன் இருடீகேசன் எம்பிரான்" என்ற பாசுரப் பகுதியை நோக்கிப் பாவம் அருளிச்செய்கிறார் 'அவன் குணபூர்த்தி இருந்தபடி கண்டாயே' என்று தொடங்கி.

187.

பற்பநாபன், உயர்வு அற உயரும் பெருந் திறலோன்;
எற்பரன், என்னை ஆக்கிக்கொண்டு, எனக்கே தன்னைத் தந்த
கற்பகம்; என் அமுதம்; கார்முகில் போலும் வேங்கட நல்
வெற்பன்; விசும்போர் பிரான்; எந்தை தாமோதரனே.

பொ - ரை :—உந்தித் தாமரையை உடையவன், எல்லாருடைய திறலும் இல்லை என்று கூறும்படி உயர்ந்திருக்கின்ற பெரிய திறலை உடையவன், எற்பரன், என்னைத் தனக்கு அடிமையாகக்கொண்டு எனக்கே தன்னைக் கொடுத்த கற்பகம், எனக்கு அமுதம் ஆனவன், கரிய மேகம் போன்ற திருவேங்கடமலையை உடையவன், நித்தியசூரிகட்குத் தலைவனான இறைவன் எனக்குத் தந்தை ஆவான்.

வி - கு :—"உயர்வற உயர் நலம்" என்றார் முன்னும். எம் தந்தை-எந்தை. கார்முகில், வெற்பிற்கு அடை. தாமோதரன்-கயிற்றால் கட்டப்பட்ட வயிற்றை உடையவன்; உதரம் - வயிறு.

ஈடு :—பதினோராம் பாட்டு. [1]எல்லாப் பொருள்களைக் காட்டிலும் மிக வேறுபட்ட சிறப்பினனாயிருந்தும், அத்யந்த சுலபனாய் என்னை அடிமை கொண்டவன் என்னை அல்லது அறியாதவன் ஆனான் என்கிறார்.

பற்பநாபன்-எல்லா உலகங்களும் உண்டாவதற்குக் காரணமான திருநாபிக் கமலத்தை உடையவன். உயர்வு அற உயரும் பெருந் திறலோன் - பேசப் புக்கால் [2]பரிச்சேதித்துப் பேச ஒண்ணாதபடியான சௌர்யம், வீர்யம் முதலிய குணப் பிரதையுடையவன். திறல் - பராபிபவந சாமர்த்தியம். திறலைக்

---

1. "பற்பநாபன் உயர்வற உயரும் பெருந்திறலோன்" என்பன போன்ற பதங்களைக் கடாக்ஷித்து 'எல்லாப் பொருள்களைக் காட்டிலும் வேறுபட்ட சிறப்பினனாய்' என்கிறார். "தாமோதரன்" என்றதனை நோக்கி 'அத்யந்த சுலபனாய்' என்கிறார். அத்யந்த சுலபன் - மிக எளியன். "எந்தை" என்றதனை நோக்கி 'என்னை அடிமை கொண்டவன்' என்கிறார். "எற்பரன்" என்றதனை நோக்கி 'என்னை அல்லது அறியாதவன் ஆனான்' என்கிறார்.

2. "பரிச்சேதித்து - அளவிட்டு. சௌர்யம் - சூரத்தன்மை. வீர்யம் - வீரத்தன்மை. குணப்பிரதை - குணப்பிரசித்தி. பராபிபவநம் - பிறரை அவமானப்படுத்தல்.

கூறியது, மற்றைக் குணங்கட்கும் உபலக்ஷணம். [1] காரணத்வ பிரயுக்தமான மேன்மை அது, பராபிபவன சாமர்த்தியம் தொடக்கமான குணங்கள் அவை. இப்படி இருக்கிறவன், எற்பரன் - [2] மதேகசித்தன். [3] என்னை ஆக்கிக் கொண்டு எனக்கே தன்னைத் தந்த கற்பகம் - கொடையில் பிரசித்தமாய் இருப்பது கற்பக மாதலின் அதனினின்று வேறுபடுத்தி அருளிச் செய்கிறார். என்னை ஆக்கிக்கொண்டு - அர்த்திகளை உண்டாக்கிக் கொடுக்குமது இல்லை அன்றே அதற்கு. எனக்கே - ஒருவனுக்கே குறைவறக்கொடுக்குமது இல்லை அன்றேஅதற்கு. தன்னைத் தந்த - வேறு சில பிரயோஜனங்களைக் கொடுக்குமது அல்லாது தன்னைக் கொடுக்குமது இல்லை அன்றே அதற்கு. என் அமுதம் - தான் போக்யமாய் இருக்குமது இல்லை அன்றே அதற்கு; எனக்கு எல்லை இல்லாத இனியனானவன். கார்முகில் போலும் வேங்கட நல் வெற்பன் - கொடுத்ததை நினையாதே கொடுக்கும் மேகம் போன்ற தன்மையையுடைய திருமலையைத் தனக்கு வாசத்தானமாக உடையவன். இதனால், மேலே கூறிய கொடைக்கு அடி திருமலையின் சம்பந்தம் என்பதனைத் தெரிவித்தபடி. ஸஹ்யம் பற்றின ஔதார்யமன்றோ? விசும்போர் பிரான் தாமோதரன் எந்தை - நித்திய சூரிகட்கு நிர்வாஹகனாய் இருந்தும், தன்னை அடைந்தவர்களான ஆயர்கட்கும் ஆய்ச்சியர்களுக்கும் கட்டவும் அடிக்கவுமாம்படி வந்து அவதரித்து, அச் செயலாலே என்னை அடிமை கொண்டவன். (11)

---

1. 'காரணத்வ பிரயுக்தமான மேன்மை அது' என்றது, "பற்பநாபன்" என்றதனை நோக்கி. காரணத்வ பிரயுக்தமான - காரணமாயிருக்குந் தன்மையால் உண்டான. "உயர்வற உயரும் பெருந்திறலோன்" என்றதனை நோக்கி, 'பராபிபவன சாமர்த்தியம் தொடக்கமான குணங்கள் அவை' என்கிறார்.

2. மதேக சித்தன் - என்னிடத்திலேயே சித்தத்தை வைத்தவன்.

3. வியாக்கியாதா பதசாரம் எழுதுவதில் ஒப்புயர்வற்றவர் என்பதனை ஈண்டும் காண்க.

4. 'மேலே கூறிய கொடை' என்றது, "எனக்கே தன்னைத் தந்த கற்பகம்" என்றதனை நோக்கி. ஸஹ்ய பர்வதத்தினின்று உண்டாகும் பிரவாஹத்துக்கு நாசமில்லாதது போன்று, திருமலையின் சம்பந்தமடியாக உண்டான பகவானுடைய கொடைக்கும் ஒரு காலும் குறைவில்லையாதலின் 'ஸஹ்யம் பற்றின ஔதார்யமன்றோ?' என்கிறார். ஸஹ்யம்-எழுவகை மலைகளுள் ஒன்று; குடக்கிலுள்ளது; மேற்குத் தொடர்ச்சி மலை. ஔதார்யம் - கொடை.

188.

தாமோதரனைத் தனி முதல்வனை ஞாலம் உண்டவனை
ஆமோ தரம் அறிய ஒருவர்க்கு? என்றே தொழுமவர்கள்
தாமோதரன் உருவாகிய சிவற்கும் திசைமுகற்கும்
ஆமோ தரம் அறிய, எம்மானை என் ஆழி வண்ணனையே?

பொ - ரை :—தாமோதரன் என்னும் திருநாம முடையவனும் உலகங்கட்கெல்லாம் தனித்த காரணமாக இருக்கின்றவனும் உலகங்களை எல்லாம் உண்டவனுமான இறைவனுடைய தன்மைகளை அறிவதற்கு ஒருவரால் முடியுமோ? என்று கூறிக்கொண்டு வணங்குகின்றவர்களான, தாமோதரனுடைய சரீரத்தைப் போன்று அவனுக்கு உரிமைப்பட்டிருக்கின்ற சிவனுக்கும் பிரமனுக்கும், எம்மானாகிய என் ஆழி வண்ணனுடைய தன்மைகளை அறிவதற்கு முடியுமோ? முடியாது என்றபடி.

வி - கு :—தொழுமவர்கள் : வினையாலணையும் பெயர். தொழுமவர்களான சிவற்கும் திசைமுகற்கும் என்றும், உருவாகிய சிவற்கும் திசைமுகற்கும் என்றும் கூட்டுக. இரண்டா மடியிலுள்ள 'ஆமோ தரம் அறிய' என்றது, பிரமன் சிவன் இவர்களுடைய கூற்று. நான்கா மடியிலுள்ளது ஆழ்வார் கூற்று. தரம் அறிய ஆமோ? என மாற்றுக. ஆமோ என்பது, ஆகுமோ என்றதன் விகாரம்.

ஈடு :—பன்னிரண்டாம்பாட்டு. 'எற்பரன்' என்கிறபடியே, [1]என்னளவில் அவன் செய்தாற்போலே செய்வார்க்கு அவனைக் காணலாமல்லது, 'தன் முயற்சியால் அறிவோம்' என்பார்க்கு அறியப் போகாது என்கிறார்.

[2] தாமோதரனைத் தனி முதல்வனை ஞாலம் உண்டவனை ஆமோ தரம் அறிய ஒருவர்க்கு என்றுயிற்றுப் பிரஹ்மாதிகள் சொல்லுவது. தாமோதரனை - அவன் அடியார்கட்குப் பரதந்திரனாய் நிற்கிற நிலையை அறியப் போமோ? தனி முதல்வனை - [3] "சத் என்று சொல்லக் கூடியதாய், நாம ரூபங்கள் இன்மை

1. 'என்னளவில் அவன் செய்தாற் போலே செய்வார்க்கு' என்றது, என்னளவில் அவன் திருவருள் செய்தது போன்று திருவருள் செய்ய நினைத்தார்க்கு என்றபடி.

2. "தாமோதரனை" என்றது முதல் "ஒருவர்க்கு" என்றது முடிய, பிரமன் முதலியோர் வார்த்தை என்கைக்காக அருளிச்செய்கிறார் 'தாமோதரனை' என்று தொடங்கும் வாக்கியத்தை.

3. சாந்தோக்கிய உபநிடதம். 6. 2: 1. ஈண்டுக் கூறும் மூன்று வித காரணத்தை முதற்பத்து 183-ஆம் பக்கம் குறிப்புரையிற் காண்க. (ஈட்டின் தமிழாக்கம்)

யின் ஒன்றாய், அடையத் தக்க இரண்டாவது பொருள் வேறு இல்லாததாய் இருந்தது " என்கிறபடியே, மூன்றுவித காரணமும் தானேயாய் இருக்கிற இருப்பை அறியப் போமோ? ஞாலம் உண்டவனை - உண்டாக்கி விடுகை அன்றிக்கே, ஆபத்திற்குத் துணைவனாய் நிற்கும் நிலையை அறியப் போமோ? ஆமோ தரம் அறிய ஒருவர்க்கு? என்றே தொழுமவர்கள் தாமோதரன் உருவாகிய சிவற்கும் திசைமுகற்கும் தரம் அறிய ஆமோ - தாங்கள் எல்லாம் அறிந்தார்களாக நினைத்து ஆமோ தரம் அறிய என்றே தொழுமவர்களாய், சர்வேஶ்வரனுக்குச் சரீரத்தைப் போன்று உரிமைப்பட்டு இருக்கின்றவர்களாய், அல்லாதாரைக் காட்டிலும் தாங்கள் அறிந்தார்களாக அபிமானித்திருக்கின்றவர்களாய் உள்ள சிவன் பிரமன் ஆகிய இவர்களாலே தாம் தரம் அறியப் போமோ?

யாரைத் தான்? என்னில், எம்மானை என் ஆழிவண்ணனை - குளப்படியிலே கடலை மடுத்தாற்போலே, தான் குணக்கடலாய் இருக்கின்ற இருப்பை எனக்கு அறிவித்தவனை. இப்படி, அவன் தானே காட்ட நான் கண்டாற்போலே காண்பார்க்குக் காணலாமித்தனை அல்லது தன் முயற்சியால் காண்பார்க்கு அறியப்போமோ? என்றபடி.

எம்மானை என் ஆழி வண்ணனைத் தாமோதரனைத் தனி முதல்வனை ஞாலமுண்டவனை ஆமோ தரம் அறிய ஒருவர்க்கு? என்றே தொழுமவர்களாய்த் தாமோதரன் உருவாகிய சிவற்கும் திசைமுகற்கும் தரம் அறிய ஆமோ? என்று கூட்டுக. (12)

189.

வண்ண மா மணிச் சோதியை அமரர் தலைமகனைக்
கண்ணனை நெடுமாலைத் தென் குருகூர்ச் சடகோபன்
பண்ணிய தமிழ்மாலை ஆயிரத்துள் இவை பன்னிரண்டும்
பண்ணில் பன்னிரு நாமப் பாட்டு அண்ணல் தாள் அணை
[விக்குமே.

பொ - ரை :— அழகிய பெருமை பொருந்திய நீலமணியைப் போன்ற ஒளியுருவனை, நித்தியசூரிகட்குத் தலைமகனை, கண்ணனாக அவதரித்தவனை, மிக்க வியாமோகத்தை யுடையவனைப் பற்றி அழகிய திருக்குருகூரிலே அவதரித்த ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப்

பட்ட தமிழ்மாலை ஆயிரத்துள் பன்னிரு நாமத்தைப் பற்றிய பண்ணோடு கூடிய இவை பன்னிரண்டு பாசுரங்களும் அண்ணலுடைய திருவடிகளில் சேர்ப்பிக்கும்.

வி - கு :—இத் திருவாய்மொழியில் வந்துள்ள பன்னிரண்டு திருப்பெயர்களும் "துவாதச மந்திரம்" எனப்படும். "பன்னிருநாமம்" என்றதூஉம் அது. நான்காம்அடியிலுள்ள 'பண்' என்பது, இசை.

ஈடு :—முடிவில், [1] 'இத் திருவாய்மொழி கற்றவர்களை இத் திருவாய்மொழிதானே எம்பெருமான் திருவடிகளில் சேர்த்து விடும் என்கிறார்.

வண்ணம் மா மணிச் சோதியை-அழகிய நிறத்தையுடைத்தாய்ப் பெருவிலையனை இரத்தினம் போலே இருக்கிற விக்கிரகத்தை உடையவனை. [2] நீலரத்தினம் போன்ற வடிவில் ஒளியை உடையவன் எனலுமாம். வண்ணம் - நிறம். மா - கருமை. இவ் வடிவழகினைக் கொள்ளை கொள்ளும் போக்தாக்களைச் சொல்லுகிறார் மேல்: அமரர் தலைமகனை - ஒரு நாடாக அநுபவித்தாலும் தன்அழகினைப் பரிச்சேதிக்க ஒண்ணு திருக்கின்றவனை. கண்ணனை - அவர்களே அநுபவித்துப் போகாமல் இங்குள்ளாரும் அநுபவிக்கும்படி கிருஷ்ணனாய் வந்து அவதரித்தவனை. நெடுமாலை - ஒருவனை அங்கீகரித்தால் அவன் அளவில் முடிவுபெருத வியாமோகத்தையுடையவனை. தென் குருகூர்ச் சடகோபன் பண்ணிய - **வேதம் போன்று பிறப்பிலி அன்று; 'புருஷனுல் செய்யப்படாதது' என்னுமதிலும் வீறு உண்டாய் இருக்கிறதாயிற்று இயற்றினர் சிறப்பாலே.** பண்ணில் ஆயிரத்துள் இவை பன்னிரண்டும் - இவை பண்ணிலேயாயிற்று நடந்தது.பன்னிரு நாமப் பாட்டு-வைஷ்ணவத்திற்கு அடையாளமான திருநாமங்களை வைத்துப் பாடினவை. இது செய்வது என்? எனில், அண்ணல் தாள் அணைவிக்கும் - சர்வேஸ்வரன் திருவடிகளோடே சேர்த்து விடும். இத் திருவாய்மொழியின் சம்பந்தந்தானே கேசவன் தமராக்கி விடும் என்பதாம். (13)

1. "பன்னிரு நாமப் பாட்டு அண்ணல் தாள் அணைவிக்கும்" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை.

2. "வண்ண மாமணிச் சோதியை" என்பதற்கு, அருளிச்செய்யும் பொருள் இரண்டனுள் முதற்பொருளில், வண்ணம் - அழகிய நிறம். மா - பெருமை. சோதி - விக்கிரகம். இரண்டாவது பொருளில், "மா மணி வண்ணச் சோதி என மாற்றுக. வண்ணம் - விக்கிரகம்; ஆகுபெயர்.

முதற்பாட்டில், தம்மோடு சம்பந்தி சம்பந்திகளும் எல்லாரும் தம்மைப் போன்று இறைவனுடைய அங்கீகாரத்திற்கு ஆளானார்கள் என்றார்; இரண்டாம் பாட்டில், அதற்கு அடி நாராயணன் ஆகையாலே என்றும், அந் நாராயண மந்திரத்தின் பொருள் இன்னதென்றும் அருளிச்செய்தார்; மூன்றாம் பாட்டில், இப்படி அங்கீகரிப்பதற்குரிய காரணத்தைச் சொன்னார்; நான்காம்பாட்டில், எல்லாக் காலங்களிலும் தன்னையே அநுபவிக்கும்படி செய்தான் என்றார்; ஐந்தாம் பாட்டில், இப்படித் தம்மை அநுபவித்ததனாலே அவன் வடிவில் புகரைச் சொன்னார்; ஆறாம்பாட்டில், இப்படி என்னை அடிமை கொண்டதற்கு அடி நிர்ஹேதுகமான திருவருள் என்றார்; ஏழாம் பாட்டில், தன்னையே எல்லாக் காலமும் அநுபவிக்கும்படியான மனத்தினைத் தந்தான் என்றார்; எட்டாம்பாட்டில், தந்த அளவு அன்றியே தீ மனத்தினையும் போக்கினான் என்றார்; ஒன்பதாம் பாட்டில், தன்னுடைய நற்குணங்களையே நான் அனுபவிக்கும்படி என் மனத்திலே புகுந்தான் என்றார்; பத்தாம் பாட்டில், அநுபவத்திற்கு விரோதியாக இருந்த இந்திரியங்களையும் தன் வழியாக்கிக்கொண்டான் என்றார்; பதினோராம் பாட்டில், இவ்விதமான இறைவன் என்னை அல்லது அறியான் ஆனான் என்றார்; பன்னிரண்டாம் பாட்டில், என்னைப்போலே காண்பார்க்குக் காணலாமதொழிய தன்முயற்சியால் அறியப்போகாதென்றார்; முடிவில், பலம் சொல்லி முடித்தார்.

திருவாய்மொழி நூற்றந்தாதி

கேசவனால் என்தமர்கள் கீழ்மேல் எழுபிறப்பும்
தேசடைந்தார் என்று சிறந்துரைத்த—வீசுபுகழ்
மாறன் மலரடியே மன்னுயிர்க்கெல்லாம் உய்கைக்கு
ஆறென்று நெஞ்சே அணே.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

எட்டாந் திருவாய்மொழி—“அணைவதரவணை”

முன்னுரை

சர்வேஸ்வரன் தம்பக்கல் செய்த வியாமோகம் தம் ஒருவர் அளவிலும் அன்றிக்கே, தம்மோடு சம்பந்தம் உடையார் அளவிலும் வெள்ளம் இட்டபடியைச் சொன்னார் மேல் திருவாய்மொழியில்; ‘நம்முடைய சம்பந்தமே ஏதுவாக இறைவன் இப்படி அங்கீகரிப்பவனான பின்பு சம்சாரிகளுக்கும் [1]நம்மோடு ஒரு சம்பந்தத்தை உண்டாக்கி அவன் திருவருளுக்கு விஷயமாக்குவோம்' என்று, அவர்களுக்கு மோக்ஷப் பரதத்துவத்தை அருளிச்செய்கிறார் இத் திருவாய்மொழியில். இத் திருவாய்மொழி [3]‘ஈஸ்வரத்வம் சொல்லுகிறது' என்று நிர்வஹிப்பாரும் உண்டு. ஆனால், மோக்ஷப் பரதத்துவம் சொல்லுகிறது என்று பட்டர் அருளிச்செய்யும்படி. [2]இவைதாம், ஒன்றை ஒன்று விட்டு இரா; ஈஸ்வரன் ஆவான் மோக்ஷத்தைக் கொடுப்பவனே யாவன்; மோக்ஷத்தைக் கொடுப்பவன் ஆம்போது ஈஸ்வரன் ஆகவேண்டும்.

நன்று, இத் திருவாய்மொழியில் எவ் விஷயத்தைப்பற்றிப் பேசுகிறார்? என்னில், ஆழ்வார்க்கு முதல்முன்னம் சர்வேஸ்

---

1. இவர் உபதேசிக்க அவர்கள் கேட்பதனால் குரு சிஷ்ய சம்பந்தம் உண்டாதலை நோக்கி ‘நம்மோடு ஒரு சம்பந்தத்தை உண்டாக்கி' என்கிறார்.

2. ‘ஈஸ்வரத்துவம் சொல்லுகிறது என்று நிர்வஹிப்பாரும் உண்டு' என்றது, இத்திருவாய்மொழியில் “இருவர் அவர் முதலுந் தானே” என்றும், “தீர்த்தன் உலகளந்த” என்றும் வருகின்றவைகளை நோக்கி. ஈஸ்வரத்துவம், இறைமைத் தன்மை. ‘மோக்ஷப் பரதத்துவத்தைச் சொல்லுகிறது' என்று பட்டர் அருளிச்செய்யக் காரணம், “பிறவிக்கடல் நீந்துவார்க்குப் புணைவன்” என்ற பகுதியைத் திருவுள்ளம்பற்றி. மேலும், “திண்ணன்வீடு” என்ற திருவாய்மொழியில் ஈஸ்வரத்துவத்தைப் பற்றி அருளிச்செய்துள்ளமையும் ஈண்டு நினைவு கூர்தல் தகும்.

3. ‘இவைதாம்' என்றது ஈஸ்வரத்துவத்தையும், மோக்ஷப் பரதத்துவத்தையும். மோக்ஷத்தைக் கொடுக்கின்றமையாகிய ஈஸ்வரத்துவத்தை இத் திருவாய்மொழி கூறுகின்றது என்றபடி. இவை இரண்டும் முதல் பாசுரத்தால் விளங்கும்.

“நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்”

என்பது பரிபாடல், 15. 15 - 16.

வரன் [1] அத்வேஷத்தைப் பிறப்பித்து ஆபிமுக்கியத்தைப் பிறப்பித்து ருசியை உண்டாக்கி [2] இவர் விடிலும் தான் விடாமல் விரும்பி, இதுதான் இவர் தம்அளவிலே அன்றி இவர் தம்மோடு சம்பந்தமுடையார் அளவும் இப்படிப் பெருகிக் கரை புரளும்படி செய்கிற தன்மையை அநுசந்தித்து, 'சர்வேஸ்வரன் தன்மை இதுவான பின்பு நாம் பெற்ற பேறு எல்லாரும் பெறும்படி செய்வோம்' என்று, சம்சாரிகளை அடையப் பார்த்து, அவர்களுக்கு "**மோக்ஷத்தைக் கொடுப்பவன்**" என்னுமிடத்தை அருளிச்செய்கிறார்.[3] இவர், தாம் பெற்றதாய்ப் பிறர்க்கு உபதேசிக்கிற பேறுதான் பிராட்டி, திருவடி, திருவனந்தாழ்வான் இவர்களைப் பரிகரமாக உடையதாய், எத்தனையேனும் ஞான முடையார்க்கும் தன் முயற்சியால் அடைவதற்கு அரியதாய், அவனாலே பெறப் பார்ப்பார்க்கு வருத்தம் அறப் பெறக் கூடியதாய், சம்சாரத்தில் இன்பங்கள் போலே நிலையற்றதாய் இருக்கை அன்றிக்கே நித்தியமாய், விளக்கம்இன்றி

1. 'அத்வேஷத்தைப் பிறப்பித்து' என்றது, "யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை நல்வீடு செய்யும்" என்றும், "இசைவித்து என்னை" என்றும் வருகின்ற பாசுரப் பகுதிகளை நோக்கி. அத்வேஷம் - துவேஷமின்மை. 'ஆபிமுக்கியத்தைப் பிறப்பித்து' என்றது, "மயர்வற மதிநல மருளினன்" என்றதனை நோக்கி. அன்றியே, இவ் இரண்டையும் "என்னைத் தீமனம் கெடுத்தாய்", "மருவித்தொழும் மனமே தந்தாய்" என்பனவற்றைத் திருவுள்ளத்தே கொண்டு அருளிச்செய்கிறார் எனலுமாம். ஆபிமுக்கியம் - எதிர்முகமாதல். 'ருசியை யுண்டாக்கி' என்றது, "அடிமைக்கண் அன்பு செய்வித்து", "நின்னலால் இலேன்காண்" என்பனவற்றை நோக்கி.

2. 'இவர் விடிலும் தான் விடாமல் விரும்பி' என்றது, "யானொட்டி என்னுள் இருத்துவம் என்றிலன்" என்ற பாசுரத்தை நோக்கி. 'இதுதான்' என்றது முதல் 'கரைபுரளும்படி செய்கின்ற தன்மையை அநுசந்தித்து' என்றது முடிய, "முடியாதது என் எனக்கேல்", "கேசவன்தமர்", "கோவிந்தன்" என்னும் பாசுரங்களைத் திருவுளத்தே கொண்டு அருளிச் செய்கிறார்.

3. இது முதல் இத் திருவாய்மொழியிற் கூறிய பொருளைச் சுருங்க அருளிச்செய்கிறார். 'பரிகரமாக உடையதாய்' என்றது, பரிகரமாகவுடைய சர்வேஸ்வரனை விஷயமாக உடையதாய் என்றபடி. இது, முதல்பாசுரத்திலே நோக்கு. "ஆர் காண்பாரே" என்றதிலே நோக்காக 'அடைவதற்கு அரியதாய்' என்கிறார். 'வருத்தமறப் பெறக்கூடியதாய்' என்றது, "புணைவன்" என்றதனை நோக்கி. "நலமந்தமில்லாதோர் நாடு" என்றதனைத் திருவுள்ளம்பற்றிச் 'சம்சாரத்தில் இன்பங்கள்' என்று தொடங்கும் வாக்கியத்தை எழுதுகிறார். 'விளக்கமின்றி இருத்தலன்றி' என்றதுமுதல், 'அளவுக் குட்படாததாய்' என்றது முடிய, கத்யத்திரைய வாக்கியங்களை திருவுள்ளத்தே கொண்டு அருளிச்செய்கிறார்.

இருத்தலன்றி மிக்க ஒளியோடு கூடியதாய், துக்கங் கலந்ததாய் இருத்தல்அன்றிச் சுகத்திற்கே ஓர்இருப்பிடமாய், மங்களமாய், உத்தமமாய், அளவுக்குட்படாததாய் இப்படி இருக்கிற [1] முக்தப் பிராப்பிய போகத்தைத் தமக்கும் தம் சம்பந்தம் உடையார்க்கும் அவன் கொடுப்பானாகப் பாரிக்கிற படியைக் கண்டு, "சம்சாரிகளையும் இப்படிப்பட்ட இன்பத்தினை உடையவர்களாகச் செய்யவேண்டும்" என்று பார்த்து, அவர்களைக் குறித்து ஹிதம் அருளிச்செய்ய, அது கேட்ட பின்பும் அவர்கள் பழைய நிலையில் நின்றும் குலையாமல், [2] மாலியவான் தொடக்கமானார் இராவணனுக்குச் சொன்ன ஹிதம் போலே அவர்கள் இதனை விரும்பாதிருக்க, 'நாம் நம்முடைய அநுபவத்தை விட்டு இவர்களோடே துவக்குண்கிற இதற்குப் பிரயோஜனம் என்?' என்று, வழிப்பறிக்கும் நிலத்தில் தம் கைப்பொருள்கொண்டு தப்பினார் மகிழ்ச்சியையுடையவர்கள் ஆமாறு போன்று, 'நாம் முந்துற முன்னம் இவர்களைப் போன்று ஆகாது ஒழியப் பெற்றோம்அன்றோ?' என்று [3] தம் இலாபத்தை அநுசந்தித்து இனியராகிறார்.

190.

அணைவது அரவணைமேல்; பூம்பாவை ஆகம்
புணர்வது; இருவர் அவர் முதலும் தானே;
இணைவன்ஆம் எப்பொருட்கும்; வீடு முதல் ஆம்;
புணைவன் பிறவிக் கடல் நீந்துவார்க்கே.

பொ-ரை:—திருவனந்தாழ்வானாகிற படுக்கையின்மேல் சேர்வது; தாமரைப் பூவில் வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டியின் திருமேனியைக்

---

1. முக்தப் பிராப்பிய போகம்-முக்தனாலே அடையப்படுகின்ற இன்பம். 'தமக்கும் தம் சம்பந்த முடையார்க்கும்' என்றது, "கேசவன்தமர்" என்னும் திருப்பாசுரத்தை நோக்கி. 'அவன் கொடுப்பானாகப் பாரிக்கிற படியைக் கண்டு' என்றது, "ஆள்வர் எம் மா வீடே" என்றதனால் விளங்கும். 'ஹிதம் அருளிச் செய்ய' என்றது, "நாடு புகுவீர்" என்றதனை நோக்கி.

2. மாலியவான் தொடக்கமானார்-மாரீசன், விபீஷணன் என்னும் இவர்கள். மாலியவான் - இராவணனுக்குப் பாட்டன். மாலியவான் சொன்ன ஹிதத்தைக் கம்பராமாயணம் இலங்கைகாண்படலம் 6 முதல் 16 முடிய உள்ள செய்யுட்களிலும், கும்பகருணன் வதைப்படலம் 32, 33 ஆம் செய்யுட்களிலும் காண்க. விபீஷணன் கூறிய ஹிதத்தை இராவணன் மந்திரப்படலத்தால் உணர்க. மாரீசன் கூறிய ஹிதத்தை மாரீசன்வதைப் படலத்தில் 176 முதல் 196 முடிய உள்ள செய்யுட்களில் காண்க.

3. 'தம் இலாபத்தை அநுசந்தித்து' என்றது, "கண்ணனை நான் கண்டேனே" என்றதனை நோக்கி.

கலப்பது ; பிரசித்தராக விளங்குகின்ற அந்தப் பிரமன் சிவன் இருவர் கட்கும் தானே காரணம் ஆனவன்; எல்லாப் பொருள்கட்கும் ஒத்த பிற வியை உடையவன் ; மோக்ஷத்திற்குக் காரண மானவன் ; பிறவியாகிற கடலை நீந்தவேண்டும் என்று இருப்பவர்கட்குத் தெப்பமாக இருப் பவன் என்றவாறு.

வி - கு :—அணைவது முதல் புணர்வது முடிய, மோக்ஷ உலகத் தைப் பற்றிய செயல்கள். மற்றை அடிகளிற் கூறப்படுவன இவ் உலகில் உள்ளார்க்கு அவன் செய்யும் செயல்கள். அணைவது, புணர்வது என் பன : தொழிற்பெயர்கள். அவர் என்பது, பிரசித்தியைக் காட்ட வந் தது. இணைவன் - ஒத்தவன் ; இணை - ஒப்பு. புணைவன் - தெப்பமான வன் ; புணை - தெப்பம்.

இத் திருவாய்மொழி நாற்சீர் நாலடியாய்த் துள்ளல் ஓசையிற் சிறிது வழுவி வந்த தரவுகொச்சகக் கலிப்பா வாகும்.

ஈடு :—முதற்பாட்டு. [1] முக்தப் பிராப்பிய போகத்தைச் சொல்லுகிறது. இப் பாசுரம் இத் திருவாய்மொழியின் சுருக் கம் ; மேலுள்ள பாசுரங்கள் இப் பாசுரத்தில் ஒவ்வொரு பதத் தைப் பற்றிப் போருமவையும், அவைதம்மைப் பற்றி அவற் றிற்கு மேலுள்ள பாசுரங்கள் எழுமவையுமாய் இருக்கின்றன.

அரவணை மேல் அணைவது - முக்தப் பிராப்பிய போகந் தான் இருக்கிறபடி. [2] பரியங்க வித்தையிற் சொல்லுகிற படியே, சர்வேஸ்வரனும் பிராட்டிமாரும் கூடத் திருவனந்தாழ்

1. "அணைவது அரவணைமேல் பூம்பாவை ஆகம் புணர்வது" என்றதனை நோக்கி 'முக்தப் பிராப்பிய போகத்தைச் சொல்லுகிறது' என்கிறார். "இருவர் அவர் முதலுந் தானே" என்பது போன்றவைகளை நோக்கி 'இப்பாசுரம்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. "அணைவதரவணைமேல்" என்ற அளவில், முக்தப் பிராப்பிய போகத் தைக் கூறியபடி யாங்ஙனம்? என்னும் வினவிற்கு விடையாக, 'பரியங்க வித் தையிற் சொல்லுகிறபடியே' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். "பரமபதத் திலே திருமாமணி மண்டபத்திலே திருவனந்தாழ்வான்மேலே தர்மமுதலான எட்டுப் பீடத்தை உடைத்தான திவ்ய சிம்மாசனத்தின் மத்தியில் 'அஷ்ட தள பத்மம்' என்கிற தாமரையிலே, அந்தத் தாமரையின் அஷ்டதளத்திலே இருக் கிற 'விமலை' முதலான பெண்கள் எண்மரும், அதன் கர்ணிகையிலே இருக் கிற 'அநுக்கிரஹை' என்றவளோடே கூடத் திருவெண்சாமரம் பரிமாற அந்தக் கர்ணிகையிலே திருவனந்தாழ்வான் மேலே பிராட்டிமாரோடு கூட வீற்றிருப்பது" பர்யங்கா வித்யா பிரகாரம் என்பதாகக் கௌஷீதகீ பிராஹ் மணத்திலே சொல்லப்பட்டது என்று அருளிச்செய்வர்.

வானுகிற படுக்கையிலே இருக்கிற இருப்பிலே, இச் சேதனன் முக்தனாய்ச் சென்று கிட்டினால் [1] "அஹம் பிரஹ்மாஸ்மி - நான் இராஜ புத்திரன், பிரஹ்ம பிரகார பூதன்" என்னக் கடவன்; ஆகில், 'இங்ஙனே வாராய்' என்றால், அவன் அங்கீகாரம் பெற்று, தாய் தந்தையர்கள் இருந்த படுக்கையிலே குழந்தை சென்று ஏறுமாறு போன்று [2] "அவனை இவ்விதமாக அறிந்தவன், அவன்மேல் காலால் ஏறுகிறான்" என்று ஏறக்கடவனாகச் சொல்லுகிற அப் பேற்றைச் சொல்லுகிறது. [3] மூவகைத் துன்பங்களாலே நொந்த சம்சாரி சேதனன், [4] "கோடைக் காலத்தில் குளிர்ந்த தடாகத்தை அடைவது போன்று, பரம் பொருளை அடைந்தவனாக இருக்கிறான்" என்கிறபடியே, அப் பெரிய மடுவிலே வீழ்ந்து தன் தாபம் எல்லாம் ஆறுமாறு போன்று, முதலிலே [5] இவை இல்லாதவன் திருவனந்தாழ்வான்மேலே அணைந்து, இவை உண்டாய்க் கழிந்தாரைப் போன்று இருக்கின்றான் ஆதலின் 'அணைவது' என்கிறார். விடாயர் மடுவிலே விழுமாறு போலே ஆயிற்று அணைவது. [6] சேஷபூதன் அடிமை செய்து அல்லது தரியாதது போன்று, சேஷியும்சேஷபூதனோடே அணைந்தல்லது தரியாதானாய் இருக்கிறபடி. நாற்றம், குளிர்த்தி, மென்மைகளை இயல்பாகவே உடையவனாதலின் 'அரவு' என்கிறார். இனி, அணைமேல் அணை

---

1. "அஹம் பிரஹ்மாஸ்மி" என்ற வாக்கியம் சாமாநாதி கரண்யம் என்று கொண்டு அதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நான் ராஜபுத்திரன், பிரஹ்ம பிரகார பூதன்' என்ற வாக்கியங்களாலே. இங்குச் சாமாநாதிகரண்யம், காரிய காரண பாவத்தாலேயாதல், சரீர ஆத்ம பாவத்தாலே யாதல் கொள்க. 'நான் ராஜ புத்திரன்' என்றது, காரிய காரண பாவத்தாலே சாமாநாதிகரண்யம். 'பிரஹ்மபிரகாரபூதன்' என்றது, சரீர ஆத்ம பாவத்தாலே சாமாநாதி கரண்யம். ராஜபுத்திரன் - பிரஹ்மபுத்திரன் என்றபடி.

2.

3. மூவகைத் துன்பம்: தன்னைப்பற்றி வருவனவும், பிற உயிர்களைப் பற்றி வருவனவும், தெய்வத்தைப் பற்றி வருவனவுமாம்.

4. பாரதம் மோக்ஷ தர்மம். 4 : 50.

5. இவை இல்லாதவன் - தாபங்கள் இல்லாதவன்; இறைவன்.

6. இவ் ஆத்மா, பிறவிகளிலே பிறந்து நொந்தவன் ஆகையாலே இறைவனைப் பற்றி ஆனந்திக்கிறான்; இயற்கையிலே ஆனந்தமயமான இறைவன் இவனைப் பெற்று ஆனந்திக்கக் கூடுமோ? என்னும் வினவிற்கு விடையாக, 'சேஷபூதன்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

வது என்பதற்கு, திருவனந்தாழ்வானோடு அணைவது என்று பொருள் கூறலுமாம். [1]"புல்கும் அணையாம்" என்றார் பொய்கையாரும்.

பூம் பாவை ஆகம் புணர்வது - [2] இன்பமே ஒரு வடிவு கொண்டவளாய் ஒரு காரணத்தால் வந்த பெண்மையினையுடையள் அல்லாதவளாய் உள்ள பெரிய பிராட்டியாரோடே கலந்து ஒழுகுவது. ஆகம் புணர்வது என்றதனால், [3] ஆத்ம குணங்கள் குமரி இருந்து போமித்தனை. [4] மூவர்க்கும் போகம் ஒத்திருக்கையாலே 'அணைவது, புணர்வது' என்கிறார். "காட்

1. முதல் திருவந்தாதி. 53.

2. பூ - அழகு; அதனாலே இன்பத்தைச் சொல்லுகிறது. "பாவை" என்றதனால், மற்றைப் பெண்களுக்கும் பிராட்டிக்கும் உள்ள வேறுபாட்டினை விளக்குகிறார் 'ஒரு காரணத்தால் வந்த' என்று தொடங்கி.

3. ஆத்ம குணங்கள் குமரி இருந்துபோம் இத்தனை' என்பதற்கு, பரம ரசிகனான சர்வேஸ்வரன் பிராட்டியினுடைய திருமேனியின் சௌந்தர்யம் முதலிய குணங்களில் ஈடுபட்டதனால் ஆத்ம குணங்கள் பர்யந்தம் சென்றிலன் என்பதும்,அதனால், பிராட்டியின் ஆத்ம குணங்கள் பயன் அற்றுக் கிடக்கின்றன என்பதும் கருத்து. குமரி இருந்து போதல் - இளம்பருவமுள்ள நங்கையாயிருந்தும் அநுபவ யோக்கியம் இன்றிக்கே கழிதல். குமரி - கன்னிப் பெண். "மிகுநலம், பெற்றாள் தமியள் மூத்தற்று", (குறள்) "குமரி மூத்த என்கைப் பாத்திரம்", "குமரி மூத்த அக் கொடுங்குழை நல்லாள்" (மணிமேகலை.) என்பன ஈண்டுக் கருதத் தக்கன.

4. 'மூவர்க்கும் போகம் ஒத்திருக்கையாலே' என்றது, அக்ர்யப்பிராய நியாயத்தாலே, பிராட்டியோடே கூட எடுக்கையாலே இவ் இருவர்க்கும் பிறக்கும் ரசம், சேர்த்தியைக் கண்டு அநுபவிக்கையாலே திருவனந்தாழ்வானுக்கும் உண்டு என்பதாம். இதற்கு மேற்கோள் காட்டுகிறார் 'காட்டில் கட்டிய ஆசிரமத்தில்' என்று தொடங்கி. இச் சுலோகம், சங்க்ஷேபராமாயணம். இதற்கு வியாக்கியாதா அருளிச்செய்த பொருள் :—ரம்யமா வசதம் கிருத்வா - அறுபதினாயிரம் ஆண்டு மலடு நின்ற சக்கரவர்த்தி தன் ஆதரத்துக்குத் தகுதியாகச் சமைத்த மாளிகைகளிலும் திருவுள்ளத்துக்குப் பொருந்தி அழகியதாய் இருந்தது காட்டிலே இளைய பெருமாள் சமைத்த ஆசிரமமாயிற்று. த்ரயோ ரமமாணா :—நாயகரான பெருமாள் ரசம் அன்றே பிராட்டியது, பிராட்டிக்குப் பிறக்கும் ரசம் அன்றே பெருமாளது, அப்படியே, அச்சேர்த்தி கண்டு உகக்குமவ ரன்றோ இளையபெருமாள். வநே - "படைவீடர் காட்டிலே வசித்தார்கள்" என்று தோற்றாமல், காடர் காட்டிலே வசித்தாற்போலே பொருந்தி இருந்தபடி. படைவீடர் - படைவீட்டிலே இருப்பவர்கள்; படைவீடு - நகரம். அக்ர்யப்பிராயம்-முதன்மைபெற்றவர்கள் வகுப்பிலே சேர்த்தல். இது ஒரு நியாயம்.

டில் கட்டிய ஆசிரமத்தில் பெருமாள், பிராட்டி, இளையபெருமாள் ஆகிய மூவரும் களிக்கின்றவர்களாய் வாழ்ந்தார்கள்" என்றார் ஸ்ரீவால்மீகி. ஆக, சொல்லிற்றாயிற்று, சர்வேஸ்வரனும் பிராட்டிமாருமாகத் திருவனந்தாழ்வான் ஆகிற படுக்கையிலே இருக்கக் கண்டு உகந்து அடிமை செய்கை, முக்தப் பிராப்பிய போகம் என்றபடி. இருவர் அவர் முதலும் தானே - பிரமனுக்கும் சிவனுக்கும் காரணனாய் இருப்பான்; [1] "பிரமன் அவன், சிவன் அவன்" என்கிற பிரசித்தியாலே '**இருவர் அவர்**' என்கிறார். அம் மோக்ஷ உலகத்தைச் சொல்லுகிற இடத்தில் '**அணைவது புணர்வது**' என்கையாலே, அது போக பூமியாய் நித்தியமாய் இருக்கும் என்னுமிடமும், இங்கு '**முதல்**' என்கையாலே, இவ் உலகத்தில் காரிய காரண பாவத்தால் வந்த சம்பந்தமும், இதுதான் ஆவது அழிவதாம் என்னும் இடமும் சொல்லுகிறது. இதனால், பிரமனும் சிவனும் [2] **சம்சார பத்தர்கள்** என்னுமிடமும், சர்வேஸ்வரனே மோக்ஷத்தைக் கொடுக்க வல்லான் என்னுமிடமும் சொல்லுகிறது. ஆக, அடையத் தக்கவன் அவனே, பிரமனும் சிவனும் அடையத் தக்கவர்களல்லர் என்கை. [3] "பிரமன் முதல் புழு இறுதியாக உள்ள இவ் உலகத்துப் பொருள்கள் புண்ணிய பாவ ரூப கருமங்களால் உண்டு பண்ணப்பட்ட சம்சாரத்துக்கு உட்பட்டவைகள்" என்று நின்றதுஅன்றோ? ஆக, இப்படிப் பிரஹ்ம ருத்திரர்களுக்கும் காரணனாக இருக்கையாலே வந்த மேன்மை உடையவன்.

எப் பொருட்கும் இணைவன் ஆம் - தேவர்கள் முதலான எல்லாப் பொருள்கள்தோறும் சஜாதீயனாய் வந்து அவதரிப்பவன்; பிரமன் சிவன் இவர்கள் நடுவே வந்து அவதரிப்பது, உபேந்திரன் ஆவது, சக்கரவர்த்தி ஸ்ரீவசுதேவர்கள் அளவிலே அமைத்து வந்து பிறப்பது, மஹாவராஹம் ஆவது, குட்டைமாமரம் ஆவது ஆகாநிற்பன் என்றபடி. இப்படித் தாழ விட்டுப் பிறக்கின்றது எதற்காக? என்னில், வீடு முதலாம்- மோக்ஷத்தைக் கொடுப்பதற்காக. அவதரித்த இடங்களிலே, [4] பறவைக்கு மோக்ஷத்தைக் கொடுப்பது, பிசாசத்துக்கு மோக்ஷத்தைக் கொடுப்பது ஆகாநிற்பன் என்றபடி. அவன்

1. தைத்திரீயநாரா. உப. 11.
2. சம்சார பத்தர்கள் - சம்சாரத்திலே கட்டுப்பட்டவர்கள்.
3. விஷ்ணுதர்மம்.
4. பறவை - ஜடாயு. பிசாசம் - கண்டாகர்ணன்.

வந்து அவதரிப்பது மோக்ஷத்தைக் கொடுக்கைக்காக ஆகில், எல்லாரும் முக்தராக வேண்டாவோ? என்னில், பிறவிக் கடல் நீந்துவார்க்குப் புணை வன் - "சம்சாரம் என்பது ஒரு பெருங் கடல், அது எங்களால் கடக்கப் போகாது, பிரபலனை நீயே கழித்துத் தரவேண்டும்" என்று இருப்பார்க்குப் [1]பிரதி பூவாய் நின்று கடத்திக் கொடுப்பான். இனி, புணைவன் என்பதற்கு, புணையாமவன் என்றும், சர்வபர நிர்வாஹகனுமவன் என்றும் பொருள் கோடலுமாம். [2]"ஞானிகள் தேவரீரையே சரணமாக அடைந்து, கொடியதாயும் எல்லை இல்லாத துக்கத்துக்கு இருப்பிடமாயும் இருக்கிற சம்சாரமாகிற கடலைத் தாண்டுகிறார்கள்" என்றது காண்க. "விஷ்ணுபோதம்" என்று கூறப் பட்டுள்ளது அன்றோ? இதனால், ஓர் இடத்தைப்பற்றி நிற்கை அன்றிக்கே, அக் கரையும் இக் கரையுமாய் நிற்கும் ஓடம் என்பது போதரும். (1)

191.

நீந்தும் துயர்ப் பிறவி உட்பட மற்று எவ் எவையும்
நீந்தும்; துயர் இல்லா வீடு முதல் ஆம்;
பூந்தண் புனல் பொய்கை யானை இடர் கடிந்த
பூந்தண் துழாய் என் தனி நாயகன் புணர்ப்பே.

பொ - ரை :— பூக்களையுடைய குளிர்ந்த தண்ணீர் நிறைந்த பொய்கையிலே கஜேந்திரன் அடைந்த துன்பத்தைப் போக்கிய, அழகிய குளிர்ந்த திருத்துழாய் மாலையைத் தரித்த, எனது ஒப்பற்ற தலைவனுடைய சம்பந்தமானது, நீந்தப்படுகிற துன்பத்தையுடைய பிறப்பு முதலாக உள்ள மற்று எல்லாத் துன்பங்களையும் போக்கும்; துன்பம் இல்லாத வீட்டுலகிற்கும் காரணமாம் என்றவாறு.

வி - கு :— இரண்டாமடியிலுள்ள 'நீந்தும்' என்பது, மெலித்தல் விகாரம்; நீத்தும் என்பது சொல்; இது முற்று. மேலது, பெயரெச்

1. பிரதிபூ - ஜாமீன். இது, புணை என்பதன் பொருள். புணையாமவன் - தெப்பமாக இருப்பவன்; இது இரண்டாவது பொருள்.

2. ஜிதந்தா ஸ்தோத்திரம்.

3. விஷ்ணுபோதம் - விஷ்ணுவாகிற ஓடம். இது, விஷ்ணுதர்மம்.

   பனிநின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் படிபற்றி
   நனிநின்ற சமயத்தோர் எல்லோரும் நன்று என்னத்
   தனிநின்ற தத்துவத்தின் தகைமூர்த்தி நீயாகில்
   இனிநின்ற முதல்தேவர் என்கொண்டு என் செய்வாரே.

என்றார் கம்பநாட்டாழ்வார். (விராதன்வதைப். 52.)

சம். முதல் - காரணம் 'பொய்கை - மானிடர் ஆக்காத நீர்நிலை' என்பர் நச்சினார்க்கினியர். புணர்ப்பு - சம்பந்தம்.

ஈடு :—இரண்டாம் பாட்டு. "என் தனி நாயகன் **புணர்ப்பு**" என்கையாலே, எம்பெருமான் தான் வேண்டுமோ? அவனோடு உள்ள சம்பந்தமே மோக்ஷத்தைக் கொடுக்கும் என்கிறார்.

மேற் பாசுரத்தில் "பிறவிக்கடல் நீந்துவார்க்கு" என்ற அதனுடைய விவரணமாய் இருக்கின்றது இப் பாசுரம். நீந்தும் துயர்ப் பிறவி உட்பட மற்று எவ் எவையும் நீந்தும் - கடக்க அரிதான துக்கத்தை விளைப்பதான பிறப்பு தொடக்கமான மற்றும் உண்டான [1] அபக்ஷய கேடு முதலானவைகளையும் கடத்தும். 'கடக்க அரிது' என்பது போதர '**நீந்தும்**' என நிகழ்காலச் சொல்லால் அருளிச்செய்கிறார். துயர் இல்லா வீடு முதலாம் - துக்கத்தின் வாசனையும் இல்லாத மோக்ஷத்துக்கும் காரணமாம். இனி, இதனை ஒரு தொடராகக் கொண்டு, கடக்க அரிதான துக்கத்தை உடைத்தான பிறவி தொடக்கமாக நீந்தும் துயரான மற்று எவ் எவையும் இல்லாத மோக்ஷத்துக்குக் காரணமாம் என்று பொருள் கோடலுமாம். [2] இப் பொருளில், இரண்டாம் அடியிலுள்ள 'நீந்தும்' என்பதும் பெயரெச்சம். இவர் '**வீடு**' என்கிறது, பிறவி நீங்குதல் மாத்திரத்தை அன்று; சுகமாக இருத்தலையே இலக்கணமாகவுடைய பகவானிடத்தில் அநுபவிக்கும் அநுபவத்தைச் சொல்லுகிறது. ஆயின், வீடு என்ற சொல் பகவானிடத்தில் அநுபவிக்கும் அநுபவத்தைச் சொல்லுமோ? எனின், [3]"முக்திர் மோக்ஷா மஹாநந்த :" என்பது நிகண்டு.

இப்படித் துக்கத்தைப் போக்கி வீட்டிற்குக் காரணமாதலை எங்கே கண்டோம்? என்னில், சொல்லுகிறார் மேல்: [4] பூந் தண்

---

1. 'அபக்ஷய கேடு முதலானவைகள்' என்றது, உண்டாதல், பிறத்தல், பரிணமித்தல், வளர்தல், குறைதல், மரணம் என்பன. அபக்ஷயம் - குறைதல்.

2. இப் பாசுரத்தின் முதல் இரண்டு அடிகட்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற்பொருள், அநிஷ்ட நிவர்த்தி பூர்வகமாக இஷ்டப் பிராப்தியைச் சொல்லுகிறது. இரண்டாவது பொருள், கேவலம் இஷ்டப் பிராப்தியைச் சொல்லுகிறது.

3. முக்தி என்பதும், மோக்ஷம் என்பதும், பெரிய ஆனந்தம் என்பதும் ஒரு பொருளன என்பது பொருளாம். இங்கு மோக்ஷத்திற்கு 'மஹாநந்தம்' என்ற பெயர் இருத்தல் கருதத்தக்கது.

4. "யானை இடர் கடிந்த" என்பதற்கு மூன்று பொருள் அருளிச்செய்கிறார். மூன்றாவது பொருளால், யானையினுடைய மேலான குணம் விளங்கும்.

புனல் பொய்கை யானை இடர் கடிந்த - பரப்பு மாறப் பூத்துக் குளிர்ந்த புனலையுடைத்தான பொய்கையிலே போய்ப் புக்கு முதலையாலே இடர்ப்பட்ட யானையினுடைய துக்கத்தைவாசனை யோடே போக்கினவன். இனி, 'பூவின் செவ்வி அழியாமல் திருவடிகளிலே இடவேண்டும்' என்று நினைத்து அது பெருமை யால் வந்த இடரைப் போக்கினவன் என்றும், "'சர்வேஶ்வரன் ஆபத்திற்குத் துணைவன்' என்று இருந்தோம்; இவன் இப்படி ஆபத்தை உடையவனாக இருக்க உதவாது ஒழிவதே! அருள் அற்றவனாக இருந்தானே! என்று நாட்டிலுள்ளார் நினைக்கில் செய்வது என்?" என்று அதனாலே வந்த இடரைப் போக்கினவன் என்றும் பொருள் கூறலுமாம். [1] பொய்கை யானை இடர் கடிந்த பூந் தண் துழாய் நாயகன் - வைத்த வளையத்தோடே காணும் மடுவிலே போய் விழுந்தது. ஆனை இடர் கடிந்த பூந்தண் துழாய் நாயகன் - திருத் துழாயின் பரி மளம்போலே காணும் யானையின் இடரைக் கடிந்தது. யானை இடரைப் போக்குகையே அன்றி, தம் இடரைப் போக்கினாற் போலே இவர்க்கு இருத்தலின் '**இடர் கடிந்த என் தனி நாயகன்**' என்கிறார். புணர்ப்பு - அவனுடைய [3] சம்பந்தம். அவனுடைய திருவடிகளில் சம்பந்தம் துக்கத்தையும் போக்கி, "சுகமாக இருத்தலையே இலக்கணமாகஉடையது" என்கிற பேற்றையும் தரும்.

என் தனி நாயகன் புணர்ப்பு நீத்தும்; வீடு முதலாம் எனக் கூட்டுக. (2)

192.

புணர்க்கும் அயன் ஆம்; அழிக்கும் அரன் ஆம்;
புணர்த்த தன் உந்தியோடு ஆகத்து மன்னி
புணர்த்த திருஆகித் தன் மார்வில் தான் சேர்
புணர்ப்பன் பெரும் புணர்ப்பு எங்கும் புலனே.

---

1. "இடர் கடிந்த நாயகன்" என்றும், "பூந்தண் துழாயை உடைய நாயகன் என்றும் கூட்டுக.

2. 'திருத்துழாயின் பரிமளம் போலே காணும் யானையின் இடரைக் கடிந்தது" என்னும் பொருளில், "கடிந்த" என்னும் பெயரெச்சம் "துழாய்" என்ற பெயருடன் முடிகின்றது. திருத்துழாயின் வாசனை முன்னே வந்து யானையின் இடரைப் போக்கிற்று என்றபடி.

3. 'சம்பந்தம்' என்றது, சம்பந்த ஞானத்தை; இறைவனுக்கும் ஆத்மாவுக்கு முள்ள நவவித சம்பந்தத்தைக் குறித்தபடி. நவவித சம்பந்தமாவன-சரீரி சரீர சம்பந்தம், பிதா புத்திர சம்பந்தம், சேஷி சேஷ சம்பந்தம் முதலாயின.

பொ - ரை :—தன்னை உண்டாக்கிய உந்தியோடு பொருந்தி உலகத்தை எல்லாம் படைக்கின்ற பிரமனும் ஆவான்; திருமேனியில் வலப் பாகத்தில் பொருந்தி உலகங்களை எல்லாம் அழிக்கின்ற சிவனும் ஆவான் ; தனது திருமார்வில் சேர்க்கப்பட்ட பெரியபிராட்டியாரை உடையனுய்த் தனக்குத் தகுதியான செயலை உடையனுய் இருக்கிற எம் பெருமானுடைய பெரிய காரியங்கள் எங்கும் காணக் கூடியனவாக இருக்கும் என்றவாறு.

வி - கு :—தன் புணர்த்த உந்தியோடு மன்னி புணர்க்கும் அயன் ஆம் ; ஆகத்து மன்னி அழிக்கும் அரன் ஆம் ; தன் மார்வில் புணர்த்த திருஆகி, தான் சேர் புணர்ப்பன் பெரும் புணர்ப்பு எங்கும் புலன் எனக் கூட்டுக. மூன்றுமடியிலுள்ள புணர்த்தல் - சேர்த்தல். புணர்ப்பன் - செயலையுடையவன். புணர்ப்பு - செயல்.

ஈடு :—மூன்றும்பாட்டு. [1]"இருவர் அவர் முதலும் தானே" என்கிற பதங்களை விவரியாநின்றுகொண்டு, திருமகள் கேள்வனுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்களை எங்கும் பார்க்கலாம் என்கிருர்.

புணர்க்கும் அயன் ஆம்-இவற்றைப்படைத்தலையே தொழிலாகக் கொண்டிருக்கிற பிரமனும் ஆம். அழிக்கும் அரன் ஆம்-சுடுதடி போலே இவற்றை அடைய அழித்துக்கொண்டிருக்கிற சிவனும் ஆம். [2]"அந்த நாராயணனல் நன்கு காண்பிக்கப்பட்ட படைத்தல் அழித்தல் என்னும் தொழில்களை உடையவர்களாய்ப் படைத்தல் அழித்தல்களைச் செய்கிருர்கள்" என்றும், [3]"பிரமனே! உன்னிடத்தில் அந்தராத்மாவாய் நின்று சிருஷ்டியைச் செய்யப் போகிறேன்" என்றும் வருகிறபடியே, அவன் அந்தராத்மாவாய் நின்று நடத்துவிக்க இவற்றைச் செய்கிருர்கள். புணர்த்த தன் உந்தியோடு மன்னி புணர்க்கும் அயன் ஆம் ஆகத்து மன்னி அழிக்கும் அரன் ஆம் - இவைதாம் இவர்கள் செய்யவல்லராவது அவன் திருமேனியைப் பற்றி இருந்த போதாயிற்று ; பால் குடிக்கும் குழந்தை வாயில் முலை வாங்கினல் தரியாதது போன்று, இவர்களும் திருமேனியை விட்டு

1. "ஆகத்து மன்னி" என்பதனையும், "புணர்த்த திருஆகி" என்றது முதல் "எங்கும் புலனே" என்றது முடிய உள்ளவற்றையும் நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிருர்.

அதிமானுஷ சேஷ்டிதங்கள் — மனிதர்கள் செயல்களுக்கு அப்பாற்பட்ட செயல்கள்.

2. பாரதம். சாந்தி பர்வம் : 169.

3, விஷ்ணுதர்மம்.

விலகின், ஆற்றல் இல்லாதவர்கள் ஆவர்கள் என்றபடி. [1] இத்தால், சாமாநாதிகரண்யத்தாலே அந்தர்யாமித்துவம் சொல்லிற்று. '**புணர்த்த தன் உந்தி**' என்கையாலே, [2]காரணத்துவம் சொல்லிற்று; '**ஆகத்து மன்னி**' என்கையாலே, திருமேனியைப் பற்றிப் பெற்ற சொரூபத்தினை உடையவர் என்னுமிடம் சொல்லிற்று.

புணர்த்த திருவாகித் தன் மார்வில் - திருமார்வில் எப்பொழுதும் சேர்ந்திருக்கிற பெரிய பிராட்டியாரை உடையனாய். [3] இது இப்பொழுது சொல்லுகிறது என்? என்னில், பிரமன் முதலியோர்கட்கு நிர்வாஹகன் என்றதைப் போன்று, திருமகள் சம்பந்தமும் ஐஸ்வர்யத்துக்குக் காரணமாகையாலே சொல்லுகிறார். பெரிய பிராட்டியாருடைய சம்பந்தம் நீர்மைக்கும் மேன்மைக்கும் காரணமாம் அன்றோ? தான் சேர் புணர்ப்பன் - படைத்தல் காரணமாக ஏகார்ணவத்திலே சாய்ந்தருளினவன் என்னுதல்; தனக்குத் தகுதியான செயல்களை உடையவன் என்னுதல். பெரும் புணர்ப்பு எங்கும் புலனே-[4] பிரமன் முதலியோர் மேற்கொண்ட காரியங்களை அவர்கள் வழியாலே

---

1. 'இத்தால்' என்றது, "புணர்த்த தன் உந்தியோடு ஆகத்து மன்னி புணர்க்கும் அயனும்; ஆகத்து மன்னி அழிக்கும் அரனும்" என்ற இதனால் என்றபடி. 'அந்தர்யாமித்வம் சொல்லிற்று' என்றது, சரீர ஆத்ம பாவம் சொல்லிற்று என்றபடி.

2. 'காரணத்வம் சொல்லிற்று' என்றது, "பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம், விரிகமல உந்தியுடை விண்ணவனை" (சிலப். ஆய்ச்.) என்கிறபடியே, உலகமெல்லாம் உண்டாதற்குக் காரணமாதலை நோக்கி,

பந்திக் கமலத் தடம் சூழரங்கர் படைப்பு அழிப்புச்
சிந்தித்திடுவதும் இல்லை கண்டீர்! அத் திசைமுகனோடு
உந்திக் கமலம் விரிந்தால் விரியும்; உகக்கடையில்
முந்திக் குவியி லுடனே குவியும்; இம் மூதண்டமே.

என்றார் திவ்வியகவியும். (திருவரங். மாலை. 19.)

3. 'இது இப்பொழுது சொல்லுகிறது என்? என்னில்' என்றது, ஈஸ்வரத்வம் சொல்லுகிற இவ்விடத்திலே லக்ஷ்மீ சம்பந்தம் சொல்லுதல் என்? என்றபடி.

4. முன்னுரு வாயினை நின்திரு நாபியின் மூளரியின் வாழ்முனிவன்
தன்னுரு வாகி இருந்து படைத்தனை; பலசக தண்டமு நீ
நின்னுரு வாகி அளித்திடுகின்றனை; நித்த விபூதியினால்
என்னுரு வாகி அழிக்கவும் நின்றனை; ஏதம் இல் மாதவனே.

என்ற வில்லிபாரதச் செய்யுள் ஈண்டு ஒப்பு நோக்கலாகும். இது சிவபெருமான் கிருஷ்ணனை நோக்கிக் கூறியது. (பதின்மூன். போர்ச். 220.)

நடத்தியும், தான் மேற்கொண்ட காரியங்களைத் தானே நடத்தியும் போருகையாலே தன்னுடைய [1] யானைத் தொழில்கள் எங்கும் காணலாய் இருக்கும். (3)

193.

புலன் ஐந்து மேயும் பொறி ஐந்தும் நீங்கி
நலம் அந்தம் இல்லது ஓர் நாடு புகுவீர்!
அலமந்து வீய அசுரரைச் செற்றான்
பலம் முந்து சீரில் படிமின் ஓவாதே!

பொ - ரை :—சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து புலன்களிலும் [2] மேய்கிற ஐம்பொறிகட்கும் வசப்பட்டு இருத்தலைத் தவிர்ந்து, ஆனந்தம் முடிவு இல்லாததாய் ஒப்புஅற்றதாய் உள்ள வீட்டு உலகின்கண் செல்ல இருக்கின்றவர்களே! மனம் சுழன்று அழியும்படி அசுரர்களை அழித்தவனுடைய பலம் முற்பட்டிருக்கின்ற நற்குணங்களில் இடைவிடாமல் மூழ்குங்கள் என்றவாறு.

வி - கு :—நீங்கிப் புகுவீர் என்றும், வீயச் செற்றான் என்றும் முடிக்க. ஓவாது படிமின் என மாற்றுக. அலமரல் - மனம் சுழலல்; "அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். "சீரில் படிமின் ஓவாதே" என்ற இவ்விடத்தில் "நற்குணக் கடல் ஆடுதல் நன்றரோ" என்ற கம்பர் திருவாக்கை ஒப்பு நோக்குக. 'நலமந்த மில்லதோர் நாடு" என்ற இப் பெரியாருடைய திருவாக்கைப் பின்பற்றியே திருக்குறள்உரையில், பல இடங்களில் வீட்டினை "அந்தமில் இன்பத்து அழிவில் வீடு"என்று எழுதிச்செல்வர் ஆசிரியர் பரிமேலழகர்.

ஈடு :—நாலாம்பாட்டு. [3] அவனுடைய பரத்துவத்தில் கண்ணழிவு அற்றிருந்தது; 'இனி, இதற்கு அவ்வருகு இல்லை என்னும் நன்மை பெறவேண்டும்' என்று இருப்பார் அவனை விரைவில் அடைவதற்குப் பாருங்கோள் என்கிறார்.

புலன் ஐந்து மேயும் பொறி ஐந்தும் நீங்கி - புலன் ஐந்து என்றது, [4]விஷயங்களை; அவற்றிலே விருப்பத்தைச் செலுத்துகின்ற பொறி ஐந்து என்றது, மெய் வாய் கண் மூக்குச்

1. யானைத்தொழில் - அதிமானுஷ சேஷ்டிதங்கள்.

2. புலன் ஐந்தும் எயும் எனப் பிரித்தலுமாம்.

3. 'அவனுடைய பரத்துவத்தில் கண்ணழிவு அற்றிருந்தது' என்றது, மேற் பாசுரத்தின் அநுவாதம். கண்ணழிவற்றிருத்தல் - சலனமின்றி உறுதி உடைத்தாயிருத்தல்.

4. 'விஷயங்களை' என்றது, சுவை, ஒளி ஊறு ஓசை நாற்றங்களை.

செவிகளை; அவற்றிற்கு வசப்பட்டிருத்தலைத் தவிர்ந்து. சில பொருள்களை [1]வறை நாற்றத்தைக் காட்டி முடிக்குமாறு போன்று, புலன்களிலே மூட்டி நசிப்பிக்கையாலே, இந்திரியங்களைப் "**பொறி**" என்கிறது. இத்தால், ஓர் அளவிற்கு உட்பட்ட பொருள்களைப் பற்றுகின்ற இந்திரியங்கட்கு வசப்பட்டு இருத்தலைத் தவிர்ந்து என்றபடி. நலம் அந்தம் இல்லது ஓர் நாடு புகுவீர் - நன்மைக்கு முடிவு இன்றியே இருக்கின்ற நாட்டிலே புகவேண்டி இருப்பீர்! [2]"ஸ்வ விநாசம்காண் மோக்ஷம்" என்கை அன்றி,[3] ஆப்த தமரான இவர் நன்மைக்கு முடிவு இல்லாதது ஒரு [4]தேச விசேஷம் உண்டாக அருளிச்செய்து வைத்தாரே அன்றோ! இப் பேற்றுக்கு இசைவே அதிகாரம் என்பார் '**புகுவீர்**' என்கிறார்.

அது ஒரு நாடும் உண்டாய், 'அது பெறவேண்டும்' என்னும் நசையும் உண்டானாலும், பிரபல விரோதிகள் கிடக்குமாகில் பிரயோஜனம் இல்லையே? என்னில், அலமந்து வீய அசுரரைச் செற்றான் - தடுமாறி முடிந்து போகும்படி அசுரர் கூட்டத்தை அழியச் செய்தான். இதனால், விரோதி போக்குகை நம் பணியோ? என்கிறார். பலம் முந்து சீரில் படிமின் - அவனுடைய பலம் முற்பட்டிருக்கிற கல்யாணகுணங்களிலே அன்புடையர் ஆகுங்கோள். [5]"செய்வதற்கு சுக ரூபமாக இருக்கும், நினைத்த பலன்களைக் கொடுத்துத் தான் அழிவில்லாமல் இருக்கும்" என்னும்படி அறுதிசெய்யப்பட்ட விஷய [6]சாரஸ்யத்தாலே, சாதன தசையே தொடங்கி இனியதாய் இருத்தலின் '**பலம் முந்து சீர்**' என்கிறார். ஓவாதே-'பௌர்ணமி அல்லாத மற்றை நாட்களில் கடல் தீண்டலாகாது' என்னுமாறு போன்று ஒரு நியதி இல்லை இதற்கு; மாறுமல் அடைவதற்குப்

1. வறை நாற்றம் - தீ நாற்றம்.

2. 'ஸ்வ விநாசம்காண் மோக்ஷம்' என்றது, இச் சரீரம் அழிதலே மோக்ஷம் என்றபடி.

3. ஆப்ததமர் - நம்பத் தகுந்தவர்களில் மிக உயர்ந்தவர்.

4. யான் எனது என்னுஞ் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.
தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.

என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும்.

5. ஸ்ரீ கீதை. 9: 2.

6. சாரஸ்யம் - ரசத்தோடு கூடியிருக்குந் தன்மை.

பாருங்கோள். இனி, [1] "நானும் சொன்னேன் நமரும் உரைமின் நமோ நாராயணமே" என்றது போன்று, தமக்குச் சுவையாய் இருத்தலால் இடைவிடாமல் அநுபவியுங்கோள் என்கிறார் எனலுமாம். (4)

194.

ஓவாத் துயர்ப்பிறவி உட்பட மற்று எவ் எவையும்
மூவாத் தனிமுதலாய் மூஉலகும் காவலோன்
மாவாகி ஆமையாய் மீனாகி மானிடம் ஆம்
தேவாதி தேவ பெருமான் என் தீர்த்தனே.

பொ - ரை :—ஹயக்கிரீவனாகி ஆமையாகி மீனாகி இராமன் கிருஷ்ணன் முதலிய மனிதவடிவமும் ஆன, தேவர்கட்கும் தேவர்களான நித்தியசூரிகட்குத் தலைவனாகிய என் தீர்த்தன், இடைவிடாத துன்பத்தையுடைய பிறப்பு முதலாக மற்றும் உள்ள எல்லாவற்றுக்கும் சோம்புதல் இல்லாத தனித்த காரணனாகி மூன்று உலகங்களையும் பாதுகாக்கின்றவன் என்றவாறு.

வி - கு :—ஓவா, மூவா என்பன: ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சங்கள். மூத்தல் - சோம்புதல். அல்லது, அழிதல். 'ஆய்' என்னும் செய்தெனெச்சம், காவலோன் என்னும் வினையாலணையும் பெயர் கொண்டது. ஆம் பெருமான் என்க. தீர்த்தன் - பரிசுத்தம் ஆக்க வல்லவன்.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. "இணைவன் ஆம் எப் பொருட்கும்" என்றார்; அதனை விரிக்கிறார்.

ஓவாத் துயர்ப் பிறவி உட்பட மற்று எவ் எவையும் - உச்சி வீடும் விடாத துயரை விளைக்கக் கூடியதான [2] ஜன்மம் தொடக்கமாக மற்றும் உண்டான ஐந்தற்கும், அவற்றை உடைத்தான பொருள்கட்கும். மேல் "நீந்தும் துயர்ப் பிறவி" என்றார்; இங்கு "ஓவா" என்கிறார்; இதனால், ஒருகால் விட்டுப் பிடிக்குமதுவும் இல்லை என்கிறார் என்று கொள்க. 'மூவா' இதனை, மூவாப்பிறவி என்று மேலே உள்ள பிறவிக்கு அடைமொழியாக்கிப் பிரவாஹரூபத்தாலே நித்தியமாகச்செல்லுகிற பிறவிக்குத் தனிமுதல் என்னுதல்; அன்றி, ஆற்றொழுக்காகத் தனிமுதலுக்கே அடைமொழியாக்கி,முசியாத தானே தனித்த

1. பெரிய திருமொழி. 6. 10 : 6.

2. ஜன்மம் தொடக்கமாக மற்றும் உண்டான ஐந்தையும் மேலே 217-ஆம் பக்கம் குறிப்புரையிற் காண்க.

காரணம் என்னுதல். [1] முசியாத காரணமாவது : 'தன்பக் கலிலே வழிபடவேண்டும்' என்று நினைத்து உறுப்புக்களைக் கொடுத்துவிட, கொடுத்த [2] உபகரணங்களைக் கொண்டு வழி கெட நடவாநின்றால், 'இப்போது இங்ஙனே போயிற்றதாகில், கிரமத்திலே நம்பக்கலிலே ருசியைப் பிறப்பித்து மீட்டுக் கொள்கிறோம் என்று அவர்கள் விருப்பின்படி விட்டு உதாசீனனாய் இருக்கும்; இப்படி, தன் நினைவைத் தப்பிப் போகச் செய்தேயும், கிருஷிகன் ஆனவன் 'ஒருகால் பதர்த்ததே அன்றோ' என்று சோம்பிக் கைவாங்காதே மேலே மேலே கோலுமாறு போன்று, 'ஒருகால் அல்லா ஒருகாலாகிலும் ஆகிறது' என்று படைத்துக் கொண்டே இருத்தல். [3] "சோம்பாது இப் பல் உருவை எல்லாம் படர்வித்த வித்தா" என்றார் பெரியதிருவந்தாதியில்.

இப்படி, இவன் படைத்துக் காப்பது எவ்வளவு? என்னில், மூன்று உலகங்களும் என்கிறார் மேல்: அதாவது, படைக்கப் படுகின்ற உலகங்களின் எல்லையளவும். மூஉலகு: [4] கீழும் மேலும் நடுவும் என்னுதல்; கிருதகம், அகிருதகம், கிருதகா கிருதகம் என்னுதல். காவலாவது : சாஸ்திரங்களைக் கொடுத்தல் முதலியவைகளாலே காத்தல். இப்படி, காத்தல் தன் மேன்மை குலையாதே நின்றோ ? என்னில், கர்மங்கட்குக் கட்டுப்படாதவன் கர்மங்கட்குக் கட்டுப்பட்டவர்களைப் போன்று பிறந்தாயிற்றுக் காப்பது என்கிறார் மேல்: மா ஆகி - ஹயக்ரீவமூர்த்தியாய் அவதரித்தபடி. ஆமைஆய் மீன் ஆகி - [5] சாஸ்திரங்களுக்குக் காரணமான அவதாரங்கள். மானிடம் - இராமன் கிருஷ்ணன் முதலிய அவதாரங்கள். இவை ஒழுக்கத்தை அநுஷ்டித்துக்

---

1. முசியாத - சோம்பாத.

2. உபகாரணங்கள் - கரண களேபரங்கள்.

3. பெரிய திருவந். 18.

4. 'கீழும்' என்றது, பூமிக்குக் கீழேயுள்ள ஏழ் உலகங்களை; 'மேலும்' என்றது, பூமிக்கு மேலேயுள்ள ஆறு உலகங்களை; 'நடுவும்' என்றது, இப்பூ உலகத்தை. பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் என்னு மூன்றும் கிருதகம்; ஜனலோகம், தபோலோகம், சத்தியலோகம் என்னும் மூன்றும் அகிருதகம் ; மகர்லோகம் ஒன்றும், கிருதகா கிருதகம். கிருதகம் - செய்யப்படுவது ; அழிவது. அகிருதகம் - செய்யப்படாதது ; அழியாதது. கிருதகாகிருதகம் - செய்யப்பட்டும் செய்யப்படாமலுமிருப்பது; அழிந்தும் அழியாமலுமிருப்பது. இங்குக் கூறியவையெல்லாம் தினப்பிரளயத்தில் எனக் கொள்க.

5. இவ் அவதாரங்கள் மூலமாகச் சாஸ்திரங்கள் வெளிவந்தனவாதலின் 'சாஸ்திரங்களுக்குக் காரணமான அவதாரங்கள்' என்கிறார்.

காட்ட வந்த அவதாரங்கள். [1]"அந்த இராகவன் உலகினுடைய மரியாதையைச் செய்கிறவன், செய்விக்கிறவன்" என்றார் ஸ்ரீ வால்மீகி. [2]பெரியவன் எதனை எதனைச் செய்கிறானோ அதனையே மற்றை மக்களும் செய்கிறார்கள்; அப் பெரியவன் எதனைப் பிரமாணமாக வேண்டுமென்று செய்கிறானோ அதனையே உலகமும் அநுசரிக்கிறது" என்பது ஸ்ரீ கீதை, இப்படித் தாழவிட்டு அவதரிக்கிறவன்தான் யார்? என்னில், தேவஆதி தேவ பெருமான்-மனிதமணம் பொறாத தேவமணம் பொறாத நித்திய சூரிகட்கு அவ்வருகானவன். என் தீர்த்தனே - நல்ல இனிய பொருள்களின் கூட்டம் இருக்க, தாழ்ந்த பொருள்களை விரும்புவாரைப் போன்று, தானும் தன்னுடைய குணங்களும் இருக்க, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்கட்கு விஷயமாக உள்ளனவற்றை விரும்பிப் போந்த என்னை அவற்றை விட்டுத் தன்னையே விரும்பும்படியான சுத்தியைப் பிறப்பித்த சுத்தியையுடையவன். அன்றி, நான் இழிந்து ஆடும் துறை என்னுதல். (5)

195.

தீர்த்தன் உலகு அளந்த சேவடிமேல் பூந்தாமம்
சேர்த்தி அவையே சிவன் முடிமேல் தான் கண்டு
பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை
பேர்த்தும் ஒருவரால் பேசக் கிடந்ததே?

பொ - ரை :— அருச்சுனன், உலகங்களை அளந்த தீர்த்தனுடைய செம்மைபொருந்திய திருவடிகளின்மேல் அழகிய மாலையினை அணிந்து, அணிந்த அம் மாலையினையே சிவனுடைய சடையின்மேலே தானே நேரில் கண்டு, கண்ணபிரானே இறைவனாவான் என்று தெளிந்து அறுதியிட்ட பசிய திருத்துழாய் அணிந்த கண்ணபிரானுடைய பெருமை இப்பொழுது மீண்டும் ஒருவரால் ஆராயவேண்டும்படி இருக்கின்றதோ? இன்று என்றபடி.

வி - கு :— சேர்த்தி கண்டு தெளிந்தொழிந்த பெருமை என்க. சிவன் - மங்களத்தையுடையவன். பார்த்தன் - பிரதையின் புத்திரன். பிரதை என்பது குந்தியின் பெயர். கிடந்ததே என்பதில் ஏகாரம், எதிர்மறை.

---

1. ஸ்ரீராமா. சுந். 35 : 11. இவ்விடத்தில்,

"அறந்தலை நிறுத்தி வேதம் அருள்சுரந்து அறைந்த நீதித்
திறந்தெரிந்து உலகம் பூணச் செந்நெறி செலுத்தி"

என்ற கம்பர் திருவாக்கை நினைவு கூர்தல் தகும்.

2. ஸ்ரீ கீதை. 3 : 21.

ஈடு :—ஆறும்பாட்டு. நீர் சொல்லுகிறவனுக்கு இந்த உயர்வுகளெல்லாம் உண்டோ? என்ன, முன்பே அருச்சுனன் நிரூபித்து நிர்ணயித்த அர்த்தம் நாம் இன்று ஆராயும்படி குறைபட்டுஇருந்ததோ ? என்கிறூர்.

தீர்த்தன் - [1]“தன்னுடைய தலையிலே தரிக்கப்பட்டு இருக்கிற எவருடைய ஸ்ரீ பாத தீர்த்தமான கங்கையினால் அச்சிவன் பரிசுத்தன் ஆனான்” என்றும், [2]“நான் தக்கோன் ஆனேன் என்னும் நிச்சயக் கருத்தால் பரிசுத்தத்திற்காகத் தன் சடைமுடியில் கங்கையைத் தரித்தான்” என்றும் சொல்லுகிறபடியே, தன் திருவடிகள் தீண்டுதலாலே அசுத்தரையும் சுத்தர் ஆக்க வல்ல சுத்தியை உடையவன். இது எப்பொழுது செய்தது என்னும் அபேக்ஷையிலே, உலகு அளந்த காலத்திலே என்று அதனை நிரூபிக்கிறூர் மேல் : [3]“குறைகொண்டு” என்றூர் திருமழிசை மன்னனும். உலகு அளந்த சேவடிமேல் பூந் தாமம் சேர்த்தி அவையே சிவன் முடிமேல் தான்

1. ஸ்தோத்திர ரத்தினம்.
2. ஈஶ்வர சம்ஹிதை.

• இவ்விடத்தில்,

> புவி அளந்தவன் பொன்னடித் தாமரை
> தவழும் கங்கை அம் தண்புனல் பொன்னென
> அவிர் சடாமுடி மீது வைத் தன்றுகொல்
> சிவனும் ஓர் சிவனுகித் திகழ்ந்தனன்.

என்ற செய்யுள் ஒப்புநோக்கலாகும். (பாகவதம் 3-ஆம் ஸ்கந்தம்-கபிலர் தத்துவம் உரைத்த அத். செய். 51).

> தேனந்து சோலை அரங்கேசர் சேவடிமேல் விசயன்
> தானந்த நாளையிற் சாத்திய மாலையும் தாள்விளக்கும்
> வானம் தரும் கங்கை நன்னீரும் சென்னியில் வைக்கப்பெற்ற
> ஆனந்தந்தான் அல்லவோ முக்கணன் மன்றுள் ஆடுவதே.
>
> (திருவரங்கக்கலம். 45.)

என்ற திவ்விய கவியின் கவிச்சித்திரம் இங்குக் கண்முன் நிற்கிறது.

3.
> குறைகொண்டு நான்முகன் குண்டிகைநீர் பெய்து
> மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்திக் — கறைகொண்ட
> கண்டத்தான் சென்னிமேல் ஏறக் கழுவினான்
> அண்டத்தான் சேவடியை ஆங்கு. (நான்முகன் திருவந். 9.)

“ குறைகொண்டு - தன்னுடைய செல்லாமையை முன்னிட்டுக்கொண்டு. நான்முகன் குண்டிகைநீர் பெய்து-அருகே நின்ற தர்ம தத்துவம் ஜலமாய் இவன் குண்டிகையிலே பிரவேசித்தது. மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி - ஸ்ரீ புருஷசூக்தாதிகளைக்கொண்டு துதித்து. கறைகொண்ட கண்டத்தான் சென்னிமேல் ஏறக் கழுவினான் — “ யுக்தாயுக்த நிரூபணம்பண்ண அறியாதே இவன் அநீதியிலே கைவளரா நின்றான்; அது போகவேணும்” என்று இவன் ஜடையிலே ஏறும்படி அவன் திருவடிகளை விளக்கினான்; ஸ்ரீபாததீர்த்தம் கொண்டு துஷ்புத்திரர்கள் தலைகளிலே தெளிக்குமாறு போன்று” என்பன மேல் பாசுரத்துக்கு வியாக்கியாதா அருளிச்செய்த பொருள்.

கண்டு-[1] அருச்சுனனுக்கு ஒருதேவதை பக்கலிலே ஒரு பாணம் பெறவேண்டுவதாய் அவன் அதற்கு முயலுகின்ற காலத்திலே, இவன் சிரமத்தை ஆற்றுகைக்காகப் 'புஷ்பங்களை நம் காலிலே இட்டு ஜீவி' என்று அருளிச்செய்ய, அவனும் திருவடிகளிலே இட, அந்தத் தெய்வம் இராத்திரியிலே கனவிலே அந்த மலர்களைத் தன் தலையிலே தரித்துக்கொண்டு வந்து தோன்றிப் பாணத்தைக் கொடுத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது அன்றே? அதனை அருளிச்செய்கிறார். பூந் தாமம் - அழகிய மாலை என்னுதல்; பூமாலை என்னுதல். அவற்றோடு ஒத்த மலர்கள் அன்றி அம் மலர்களையே கண்டான் ஆதலின், '**அவையே**' என்றும், பாடே பார்ஸ்வத்திலே அன்றி அவன் தலைமேலே கண்டானாதலின் '**சிவன்முடிமேல்**' என்றும், ஆப்தர் சொல்லக் கேட்கை அன்றியே, சுருதி ஸ்மிருதிகளால் ஆதல் அன்றியே, தானே கண்டானாதலின் '**தான்கண்டு**' என்றும் அருளிச்செய்கிறார். காணுதல் - [2] பிரத்யபிஜ்ஞார்ஹமாம்படி காண்டல். ஆயின்,

---

1. இச்சரிதப் பகுதியை, வில்லிபாரதம் (மதுரைத்தமிழ்ச்சங்கப்பதிப்பு) பதின்மூன்றாம் போர்ச்சருக்கம் 193-முதல் 221-முடிய உள்ள செய்யுட்களில் காண்க. மேலும், பண்டைக்காலத்துப் புலவர் ஒருவர் "பூவைநிலை" என்னும் துறையில் அமைத்துப் 'பாண்டிய! நீ கண்ணனாய்ப் பாரதப்போர் நடாத்திய காலத்தில் தேர்விசயன் உன் அடிகளில் சாத்திய மலர்கள் சிவன்முடியின் மேல் காணப்பட்டன; இன்று, முடிமன்னர் தத்தம் முடிகளிலே சூடிய மலர்கள் நின் அடிமிசையே காணப்படுகின்றன; இஃது என்னே!' என்ற கருத்தமைய,

செங்கண் நெடியான்மேல் தேர்விசயன் ஏற்றிய பூப்
பைங்கண் வெள்ளேற்றான்பால் கண்டற்றால் - எங்கும்
முடிமன்னர் சூடிய பூ மொய்ம்மலர்த்தார் மாறன்
அடிமிசையே காணப் படும். (முத்தொள்ளாயிரம் செய். 3.)

என்று பாடிய பாட்டும் இங்கு ஒப்புநோக்கலாகும்.

இதற்கு வேறுவகையாகக் கூறும் பொருள் சிறவாமை காண்க. இங்ஙனம் பொருள் கூறலே நூலாசிரியர் கருத்து என்பதனை இதற்குப் பின் அடுத்து வருகின்ற

கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலனாய்ப்
பூந்தொடியைப் புல்லிய ஞான்றுஉண்டால்-யாங்குஒளித்தாய்
தென்னவனே! தேர்வேந்தே! தேறுநீர்க் கூடலார்
மன்னவனே! மார்பின் மறு. (முத்தொள்ளாயிரம். 4.)

என்ற செய்யுளால் உணரலாகும்.

2. பிரத்யபிஜ்ஞார்ஹமாம்படி - முன் கண்டது யாது ஒன்று அதுவே பின்னர் நினைவிற்கு வரும்படியாக.

இவ்விடத்தில் கிருஷ்ணனுடைய சரிதை ஆயிற்றுச் சொல்லு கிறது; ஸ்ரீவாமன அவதாரம் என்? என்னில், [1]கிருஷ்ணவதா ரத்துக்கும், வாமனஅவதாரத்துக்கும் வரையாதே எல்லாரோ டும் பொருந்துமது உண்டு ஆகையாலே சொல்லுகிறார். பார்த் தன் தெளிந்து ஒழிந்த - இறைவன் சாரதியாய்த் தாழ நிற்கச் செய்தேயும், அவனுடைய இறைமைத்தன்மையில் கலங்காமல், "அந்தப் பார்த்தன் பெரிய ஞானத்தை யுடையன்" என்கிற படியே பேரறிஞன அருச்சுனன் நிரூபித்து நிர்ணயித்து, [2]"தேவரீருக்கு முன்பக்கத்திலும் வணக்கம், பின்பக்கத்திலும் வணக்கம்" என்று கூறிப் பின்பற்றிய. பைந் துழாயான் பெருமை பேர்த்தும் ஒருவரால் பேசக் கிடந்ததே - அறப் பெரிய முதன்மைக்கு அறிகுறியான திருத்துழாய் மாலையை யுடைய சர்வேஸ்வரனுடைய பரத்துவம், இன்று அறிவுகேடர் சிலரால்[3] செல்லவிட்டு வரவிட்டு ஆராயுமளவாய் இருந் ததோ? (6)

196.

கிடந்து இருந்து நின்று அளந்து கேழலாய்க் கீழ்ப்புக்கு
இடந்திடும்; தன்னுள் கரக்கும்; உமிழும்;
தடம் பெரும்தோள் ஆரத் தழுவும்; பார் என்னும்
மடந்தையை மால் செய்கின்ற மால்ஆர் காண்பாரே?

பொ - ரை :—அறப்பெரிய இறைவன் பூமிதேவியை, கடற்கரை யில் வழிவேண்டிக் கிடந்தான், சித்திரகூட மலையில் முனிவர்களோடு இருந்தான், இராவணனைக் கொன்ற பின்னர் வீரஇலக்குமியோடு நின் றான், மூன்று அடிகளால் அளந்தான், வராகமாகிக் கீழே புக்கு இடந்து மேலே கொண்டு வந்தான், பிரளய காலத்திலே தன்னுள் மறைத்தான், மீண்டு உமிழ்ந்தான், வலிய பெரிய தோள்கள் இன்பத்தால் பூரிக்கும் படி தழுவினன்; ஆதலால், பூமிப்பிராட்டி விஷயமாகச் செய்கின்ற அன்பு நிறைந்த காரியங்களைக் காண்பார் யாவர்? என்கிறார்.

வி - கு :—மால் - திருமால். இரண்டாவது மால் - மயக்கம். ஆர் என்பது, ஈண்டு இன்மை குறித்து நின்றது. காண்பார் ஆர் என மாற்றுக.

---

1. "இது கிருஷ்ணவதாரத்திலேயாய் இருக்க, ஸ்ரீவாமனாவதாரத்தைச் சொல்லுகிறது, வரையாதே நீண்டுகை இரண்டு அவதாரத்துக்கும் ஒத்திருக் கையாலே" என்பது இருபத்து நாலாயிரப்படி.

2. ஸ்ரீகீதை. 11 : 40.

3. 'செல்லவிட்டு வரவிட்டு' என்றது, மஹாமதிகளையுடைத்தான அக்காலம் செல்லவிட்டு, அறிவுகேடரை உடைத்தான இக்காலம் வந்தபின்பு என்றபடி.

ஈடு :—ஏழாம் பாட்டு. ஒருவன் மேற்கொண்ட ஒழுக்கத்தைக்கொண்டு நிச்சயிக்கவேண்டுமோ? அவனுடைய இஷ்டத்திற்குத் தகுதியாக எல்லாச் செயல்களுக்கும் விஷயமாய் அன்றோ இவ் உலகம் இருக்கிறது; இதுவே போராதோ பரத்துவத்திற்குக் காரணம்? என்கிறார்.

கிடந்து - திருப்பாற்கடலிலே கிடந்தபடியாதல்; [1]"கிழக்கு முகமாகப் படுத்தார்" என்னும்படியாகக் கடற்கரையிலே சாய்ந்தபடியாதல். இருந்து - பரமபதத்திலே இருந்தபடியாதல்; [2]"பர்ணசாலையில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீராமர்" என்கிறபடியே, இருடிகள் ஆஸ்ரமங்களிலே இருந்தபடியாதல். நின்று - திருமலையிலே நின்றபடியாதல்; இராவணனைக் கொன்றபின்னர் கையும் வில்லுமாய் இலங்கையிலே நின்றபடியாதல்; [3]"வலிய வில்லைப் பிடித்துக்கொண்டு நிற்கின்ற ஸ்ரீராமனையும், இலக்குமணனையும், தன் கணவனுக்குத் தம்பியான சுக்கிரீவனையும் நல்ல எண்ணமுள்ள தாரையானவள் கண்டாள்" என்கிறபடியே வாலியைக் கொன்றுநின்ற நிலையாதல். அவர்களுடைய பெண்கள் பக்கலிலே கேட்குமித்தனையே அன்றோ இவனுடைய பரத்துவம்; [4]"பிரகிருதி மண்டலத்திற்கு மேலே இருக்கிற ஸ்ரீ வைகுண்டத்தில் இருப்பவர், சங்கு சக்கரம் கதை இவற்றைத் தரித்திருப்பவர், கொடுக்கிறவர், ஸ்ரீவத்சம் என்னும் மறுவைத் திருமார்விலுடையவர், பிரியாமல் இருக்கிற பெரிய பிராட்டியாரையுடையவர், ஒருவராலும் வெல்ல

---

1. ஸ்ரீராமா. யுத். 21 : 1. இப் பொருளையுடைய சுலோகத்திற்கு வியாக்கியாதா அருளிச்செய்த பொருள்: "பாஹும்புஜகபோகாபம் - திருவனந்தாழ்வான் மேலே சாய்ந்தாற்போலேயாயிற்றுத் திருக்கையை மடித்துச் சாய்ந்தால் இருக்கும்படி. அரிஸூதந: - கிடந்த கிடையிலே இலங்கை குடிவாங்க வேண்டும்படி இருக்கை. பிரதிஶ்யே மஹோததே :-ஒரு கடலோடே ஒரு கடல் ஸ்பரிசித்துச் சாய்ந்தாற்போலே இருக்கை" என்பதாம்.

2. ஸ்ரீராமா. அயோத். 99 : 25.

3. ஸ்ரீராமா. கிஷ்கிந். 19 : 25.

பரத்துவ நிர்ணயம் செய்யும் இத் திருவாய்மொழியில் "கிடந்திருந்து நின்று" என்று ஸ்ரீராமபிரானுடைய செயலைக் கூறியது "ஸ்ரீராமபிரானே பரம்பொருள்" என்பதற்கு. ஆயின், பிரமாணம் உண்டோ? என்னும் வினாவிற்கு விடையாக 'அவர்களுடைய பெண்கள் பக்கலிலே கேட்கு மித்தனையே அன்றோ இவனுடைய பரத்துவம்.' என்று அருளிச்செய்து, அதற்கு ஸ்ரீராமாயணத்தினின்றும் மேற்கோட் சுலோகங்கள் இரண்டு காட்டுகிறார். 'அவர்கள்' என்றது, இராவணன் வாலி என்னும் இருவரை.

4. ஸ்ரீராமா. யுத். 114 : 15. இது மண்டோதரியின் கூற்று.

முடியாதவர், எப்பொழுதும் உள்ளவர்" என்னுதல்; [1] "தேவரீர் வேதங்களாலும் அளவிட முடியாதவர், அணுக முடியாதவர், இந்திரியங்களை வென்றவர், உயர்ந்த தார்மிகர், அழிவற்ற கீர்த்தியினை உடையவர், பூதேவி போன்ற பொறுமை உடையவர், இரத்தம்போன்ற திருக்கண்களையுடையவர்" என்னுதல் சொல்லா நிற்பர்கள் அன்றே.

அளந்து - தன்னதான பூமியை மஹாபலி போல்வார் இருஞ்சிக்கொள்ள, அதனை எல்லை நடந்து மீட்டுக்கொண்டு. கேழலாய்க் கீழ்ப் புக்கு இடந்திடும் - [2] நீருக்கும் சேற்றுக்கும் இறுயாத வராகவேடத்தை மேற்கொண்டு, பிரளய வெள்ளத்துக்குள்ளே முழுகி அண்டபித்தியிலே சேர்ந்த பூமியைப் பிரித்து எடுக்கும். தன்னுள் கரக்கும் - "காத்தல்" என்று ஒரு பெயரை வைத்துக்கொண்டு கொம்பிலும் குளம்பிலும் கொள்ளாமல் வயிற்றிலே வைத்துக் காத்தபடி. இனி, 'மேல் ஒருகாலம் பிரளயம் வரும்' என்று [3] ஏலக் கோலிப் பிரளயம் வந்தாலும் 'இங்கு உண்டோ' என்று இளைத்துக் காட்டலாம்படி முன்புத்தையது ஒன்றும் தெரியாதபடி வைக்கும் எனலுமாம். உமிழும் - 'இவை என்பட்டன' என்று பார்க்கைக்காகப் பின்னை வெளிநாடு காண உமிழும். தடம் பெரும் தோள் ஆரத் தழுவும் - மிகப் பணைத்த திருத்தோள்களாலே ஆரும்படியாகத் தழுவும். பார் என்னும் மடந்தையை - ஸ்ரீ பூமிப்பிராட்டியை; பூமியைப் பிரகாரமாகவுடையள் ஆகை

---

1. ஸ்ரீராமா. கிஷ்கிந். 24 : 31. இது தாரையின் கூற்று.

2. "செய்குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை
கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி ஒருவினை உணர்த்தலின் முதுமைக்கு
ஊழி யாவரும் உணரா
வாழி முதல்வ! நின்பேணுதும் தொழுது" (பரி. 2 : 15 - 19.)

என்னும் பரிபாடற் பகுதியும், 'காலவீட்டம் கழிந்தபின் உயிர்கள் உளவாதற் பொருட்டு அந் நிலத்தினை எடுத்திட்ட கேழல் கோலத்தால், திகழ்வரப் பெயர் பெற்ற இவ் வராக கற்பம் நின் செயல்களுள் ஒரு செயலின் பெயராமதனை உணர்த்துதலின் அச் செயல்கள் பலவற்றையும் செய்கின்ற நின்முதுமைக்குள்ள கற்பங்கள் யாவரானும் அறியப்படாத' என்ற அதன் உரையும் ஈண்டு நினைத்தல் தகும்.

3. ஏலக்கோலுதல் - முன்னரே விசாரித்தல். இளைத்துக் காட்டல் - குழைத்துக்காட்டல். ஆரும்படி - பூர்ணமாகும்படி.

யாலே அதற்குரிய 'பார்' என்ற சொல்லால் சொல்லுகிறார். [1] தன் விபூதியினுடைய ரக்ஷணம் ஒருதலையானால் அவன் படும் பாட்டை அநுசந்தித்து மகிழ்ந்தவளாய் அதற்கு உரியவளான ஸ்ரீ பூமிப்பிராட்டி அணைக்கும், அதனாலே தானும் மகிழ்ந்தவனாய் அணையாநிற்கும் என்றபடி. மால் - எல்லாரைக் காட்டிலும் உயர்ந்தவனான சர்வேஸ்வரன். செய்கின்ற மால் - அவன் ஏற்றுகிற பிச்சை. ஆர் காண்பாரே - ஒருவராலே இவ்வளவு என்று அளவிடலாய் இருந்ததோ? (7)

197.

காண்பார் ஆர் எம் ஈசன் கண்ணனை? என் காணுமாறு?
ஊண் பேசில் எல்லா உலகும் ஓர் துற்று ஆற்று;
சேண் பால வீடோ, உயிரோ, மற்று எப் பொருட்கும்
ஏண்பாலும் சோரான், பரந்துளன் ஆம் எங்குமே.

பொ - ரை :—எம் ஈசனாகிய கண்ணனை அறியவல்லவர் யாவர்? காணும் விதந்தான் யாங்ஙனம்? அவனுடைய உணவினைப் பேசின் எல்லா உலகங்களும் ஒரு கவளத்துக்கும் போதமாட்டா; தங்கியிருக்கும் வீடோ எல்லா உலகங்கட்கும் அப்பாற்பட்டது; அவனே தன்னை ஒழிந்த மற்றை எல்லாப் பொருள்கட்கும் அந்தரியாமியாய் இருந்து கொண்டு எல்லாத் திக்குக்களிலும் ஒன்றையும் விடாதவனாகி எல்லா இடங்களிலும் பரந்திருக்கின்றான்; ஆதலின்.

வி - கு :—ஊண் - உணவு; உண்ணப்படுவது என்பது பொருள். துற்று - கவளம்; "அண்டம் எலாம் உண்டை என்பர் அறியாதார் ஆங்கு அவை நீ, உண்டருளும் காலத்தில் ஒரு துற்றுக்கு ஆற்றுவால்" என்றது ஒப்புநோக்கல் தகும். எண் என்பது ஏண் என முதல் நீண்டது; இது எண்ணுப் பெயர். முதனிலைத் தொழிற்பெயர் எனலுமாம். சோரான் : முற்றெச்சம்.

---

1. மேற்கூறியவற்றை எல்லாம் கடாக்ஷித்துத் தழுவுகைக்கு ஏதுவை அருளிச்செய்கிறார் 'தன் விபூதியினுடைய ரக்ஷணம்' என்று தொடங்கி. "மால்" என்பதற்கு இருபொருள் :- சுவாமி ஒன்று; வியாமோகம் ஒன்று.

அரவாகிச் சுமத்தியால், அயில் எயிற்றின் ஏந்துதியால்,
ஒருவாயின் விழுங்குதியால், ஓர் அடியால் ஒளித்தியால்,
திருவான நிலமகளை; இஃது அறிந்தாற் சீறுளோ!
மருவாரும் துழாய் அலங்கல் மணிமார்பின் வைகுவாள்.

என்ற கம்பநாட்டாழ்வாருடைய திருவாக்கு இத் திருப்பாசுரத்தை அடியொற்றியது. (விராதன் வதை. செ. 58.)

ஈடு :—எட்டாம் பாட்டு. [1] எத்தனையேனும் ஞானமுடையார்க்கும் அவனுடைய அற்புதமான காரியங்களைத் தனித்தனியும் திரளவும் அளவிடப் போகா என்கிறார்.

காண்பார் ஆர் எம் ஈசன் கண்ணனை-சர்வேஸ்வரனாயிருந்தும் கிருஷ்ணனாய் வந்து அவதரித்து எனக்குக் கையாளான வனை [2] அவன்தானே காட்ட நான் கண்டது போன்று, காண்பார்க்குக் காணலாமித்தனை போக்கி, தன் முயற்சியாலே சிலர்க்குக் காணப் புக்கால் காணப் போமோ? அது கிடக்க, காண்பார் சிலர் உளர் ஆனாலோ? எனின், என் காணுமாறு-எவ்வளவைத் தான் காண்பது? [3] ஞானமுடையார் சிலர் காண இழிந்தார்கள் என்று, விஷயத்தை அளவிட்டு அறியப்போகாதே. ஏன்தான் அளவிட்டு அறியப் போகாதொழிகிறது? என்னில், இது அன்றோ அவனுடைய செயல் இருக்கிறபடி; ஊண் பேசில் எல்லா உலகும் ஓர் துற்று ஆற்றா-அவனுடைய ஊணுகிற ஒரு செயலைச் சொல்லப் பார்க்கில், எல்லா உலகங்களும் ஒரு கவளத்துக்கும் போரா; இச்செயலையுடையவனை ஒருவராலே அளவிட்டு அறியலாய் இருக்கிறதோ? அவனுடைய செயல் அளவிட ஒண்ணாததே அன்றி, அவனுடைய சொரூபமும் அளவிட்டு அறிய ஒண்ணாதது என்கிறார் மேல்: சேண்பால வீடோ உயிரோ மற்று எப் பொருட்கும் - உயர்த்தியே சுவபாவமாக உடைத்தான பரமபதம் என்ன, [4] முக்தாத்ம சொரூபம் என்ன, மற்றும் உண்டான தேவதைகள் முதலானவைகள் என்ன, இவற்றை உடைத்தான. [5] ஏண்பாலும் சோரான் - எண்ணப்பட்ட அவ் அவ் இடங்களை வியாபித்து விடாதே நிற்கும்

1. "ஆர்" என்பதிலே நோக்காக 'எத்தனையேனும் ஞானமுடையார்க்கும்' என்கிறார். "ஊண் பேசில் எல்லா உலகும் ஓர் துற்று ஆற்றா" என்கையாலே 'தனித்தனியும்' என்கிறார். "ஏண்பாலும் சோரான் பரந்துளனும் எங்குமே" என்றதனை நோக்கித் 'திரளவும்' என்கிறார்.

2. "ஈசன் எம் கண்ணனைக் காண்பார் ஆர்" என்றதனால் பலித்த பொருளை 'அவன்தானே காட்ட நான் கண்டது போன்று' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

3. ஞானமுடையார்க்குக் காணத் தட்டு என்? என்னும் வினாவிற்கு விடையாக 'ஞானமுடையார் சிலர்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

4. முக்தாத்ம சொரூபத்தைக் கூறியது, நித்தியர்க்கும் உபலக்ஷணம்.

5. "ஏண்பால்" என்பதற்கு இருபொருள் அருளிச் செய்கிறார்: எண்ணப்படுகின்ற அவ்விடங்கள் என்பது ஒன்று; எட்டுத் திக்குக்கள் என்பது மற்று ஒன்று.

என்னுதல்; எட்டுத் திக்குக்களும் வியாபித்து விடாதே நிற்கும் என்னுதல். பரந்து உளன் ஆம் எங்கும் - [1]இப்படி வியாபிக்குமிடத்தில் ஒரு குறையுண்டாய் இருக்கைஅன்றியே, குறை அற வியாபித்திருக்கும். ஆனபின்னர், 'எங்கும் பரந்திருக்கும் பொருளை,பரந்திருக்கப்பட்ட பொருள்களிலே ஒன்று அளவிட்டுக் காண்கை' என்று ஒரு பொருள் உண்டோ? என்றபடி. (8)

198.

எங்கும் உளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து
இங்கு இல்லையால் என்று இரணியன் தூண் புடைப்ப
அங்கு அப்பொழுதே அவன் வீயத் தோன்றிய என்
சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே?

பொ - ரை :—கண்ணன் எல்லா இடத்திலும் இருக்கின்றான் என்று கூறிய மகனாகிய பிரஹ்லாதனைத் தந்தையாகிய இரணியன், நீ கூறுகிற கண்ணன் இவ்விடத்தில் இல்லாதவனே யாவன் என்று தூணை அடிக்க, அத் தூணில் அப்பொழுதே அவ் இரணியன் மாயும்படியாகத் தோன்றிய என் சிங்கப்பிரானுடைய பெருமை ஆராய்தற்குரிய தன்மையதோ? என்கிறார்.

வி - கு :—மேல் "எண்பாலும் சோரான்" என்றார்; அதனை விரிக்கிறார் இப் பாசுரத்தில். உளன், இல்லை என்பன: பண்பின் அடியாகப் பிறந்த குறிப்புமுற்றுக்கள். காய்ந்து புடைப்பத் தோன்றிய சிங்கப்பிரான் என்க.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [2]நீர் சொன்னது பொருத்தம் அற்றதாய் இருந்ததே! 'ஒரு பொருளே அநேக பொருள்களில் குறைவு அறப் பரந்து இருக்கும்' என்றால் இது கூடுமோ? என்ன, கெடுவீர்காள்! அவன் சர்வகதத்வத்தை இசையாத இரணியன் பட்டது படாதே கொள்ளுங்கோள் என்கிறார்.

---

1. "எண்பால்" என்று கூறிப் பின்னும் "எங்கும்" என்று கூறியதனால் போந்த பொருளை 'இப்படி வியாபிக்குமிடத்தில்' என்று தொடங்கி அருளிச் செய்கிறார். வியாபித்தல் - பரந்திருத்தல்.

2. மேற்பாசுரத்தில் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையைக் கூறிய பின்னர், 'இரணியனைக் கொன்ற நரசிங்கப்பெருமானுடைய பெருமை அளவிட முடியாதது' என்று சொல்லுகின்றவருடைய கருத்தை வினா விடை மூலமாக விளக்குகிறார் 'நீர் சொன்னது' என்று தொடங்கி. சர்வ கதத்வம் - எங்கும் பரந்து நிறைந்திருக்கும் தன்மை.

இங்கு, பரிபாடல் 4-ஆம் பாடலில் 10-வது வரி முதல் 21-வது வரி முடிய உள்ள பகுதியையும், அதன் உரையையும் படித்து உணர்தல் தகும். கம்பராமாயணம் இரணியன்வதைப் படலத்தால் இச் சரிதத்தின் விரிவை உணரலாகும்.

கண்ணன் எங்கும் உளன் - இது ஆயிற்று அவன் சொன்ன தப்பு; சர்வேஸ்வரன் எங்கும் உள்ளவன் என்றான். [1] "இவ் உலகம் எல்லாம் என்னால் வியாபிக்கப்பட்டிருக்கின்றன" என்றும், [2] "யாது ஒன்று இருக்கின்றது, அது என்னை அன்றி இல்லை" என்றும் அவ் இறைவன் தான் சொன்ன வார்த்தை ஆயிற்று இவன் தான் சொல்லிற்று. என்ற மகனைக் காய்ந்து - [3] இவ் வார்த்தையைப் பகைவனே சொல்லிலும் கேட்ட போதே காலிலே விழவேண்டும் வார்த்தை சொல்லிற்று; பிரமாணங்களுக்கு முரணான அர்த்தத்தைச் சொல்லிலும் கொண்டாட வேண்டும்படி ஆயிற்றுச் சம்பந்தம்; பருவத்தாலும் கொண்டாடவேண்டும். வயிற்றிலே பிறந்தவனாக இருந்தும் திருநாமம் சொல்லப் பொறுக்கமாட்டாமல் சீறினான் ஆதலின் '**மகனைக் காய்ந்து**' என்கிறார். [4] "பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன்" என்ற பாசுரம் இங்கு நினைவு கூர்வது. இங்கு இல்லையால் என்று இரணியன் தூண் புடைப்ப-எங்கும் உளனாகில் நீ சொல்லுகிறவன் இங்கு இல்லையாய் இரானே

---

1. ஸ்ரீகீதை. 9 : 4.

2. ஸ்ரீகீதை. 10 : 39. அவன் கூறியது தப்பு அன்றோ? என்ன, சர்வேஸ்வரன் தான் ஆதரித்துச் சொன்ன அர்த்தத்தை இவன் கூறியது தப்போ? என்கிறார் "இவ் உலகம் எல்லாம்" என்று தொடங்கி.

3. "என்ற" என்றதற்குப் பாவம், 'இவ் வார்த்தையைப் பகைவனே' என்று தொடங்கும் வாக்கியம். "மகன்" என்றதற்குப் பாவம், 'பிரமாணங்களுக்கு முரணான' என்று தொடங்கும் வாக்கியம். "மகன்" என்ற சொல்லுக்கு இளம்பருவம் உடையவன் என்று பொருள்கொண்டு 'பருவத்தாலும் கொண்டாடவேண்டும்' என்று அருளிச்செய்கிறார்.

4 பெரிய திருமொழி. 2. 3 : 8. இப் பாசுரப்பகுதிக்கு வியாக்கியாதா அருளிச்செய்த பொருள்: "பள்ளியில் ஓதி வந்த - பள்ளியில் ஓதும் பருவத்தில் உள்ளவை அடையக் கொண்டாட்டமாய் இருக்கும். அதற்கு மேலே, தன் சிறுவன் - தன் வயிற்றிற் பிறந்தவன் வார்த்தை மிகவும் பிரியமாய் இருக்கும். வாயில் ஓர் ஆயிர நாமம் - அதற்கு மேலே திருநாமத்தைச் சொல்லிற்று. ஒள்ளியவாகிப் போத - இவை ஒன்றும் இல்லையாகிலும் சொன்னபோதை இனிமைதான் கொண்டாடவேணும். ஆங்கு அதனுக்கு ஒன்றும் ஓர் பொறுப்பிலனாகி - அசஹ்ய அபசாரமன்றோ. பிள்ளையைச் சீறி - திருநாமம் சொன்னதுவே ஏதுவாகப் 'புத்திரன் அல்லன்' என்று விட்டான் அவன்; திருநாமம் சொன்னவர்களோடே தமக்கு எல்லா உறவும் உண்டாக நினைத்திருக்கையாலே இவர் "பிள்ளை" என்கிறார்.

என்று தூணை அடித்துக் காட்டினன்.[1]"அளந்து இட்ட தூணை அவன் தட்ட"-'முன்பே நரசிங்கத்தை வைத்து நட்ட தூண்' என்ன ஒண்ணுதே? தானே தனக்குப் பொருந்தப் பார்த்து நறுக்கிநட்ட தூண் ஆகையாலே '**அளந்திட்டதூணை**' என்கிறார். வேறே சிலர் தட்டினர்கள் ஆகில் 'கையிலே அடக்கிக்கொண்டு வந்து தூணிலே பாய்ச்சினர்கள்' என்னவுமா மன்றே? தானே ஆயிற்றுத் தட்டினனும் என்பார் '**அவன் தட்ட**' என்கிறார். அங்கு அப்பொழுதே - அத் தூணிலே, அடித்த இடத்திலே. அவன் சூளுறவு செய்த அச் சமயத்திலேயே எனவுமாம். அவன் வீயத் தோன்றிய - தன் தோற்றரவிலே அவன் பிணமாம்படி தோன்றின; அதிர்த்துக் கொண்டு புறப்பட்ட போதை அட்டஹாஸமும், நா மடிக்கொண்ட உதடும், நெற்றியது கண்ணும் உச்சியது புருவமுமாய்க்கொண்டு தோன்றின போது பொசுக்கின பன்றி போல உருகினன் ஆயிற்றுப் பொன்னன் ஆகையாலே என்றபடி. என் சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே - அடியார் கூட்டத்துக்காக நரசிம்ஹமாய் உபகரித்தவனுடைய பரத்துவம் இன்று சிலரால் ஆராயும்படி இருந்ததோ? (9)

199.

சீர்மை கொள் வீடு சுவர்க்கம் நரகு ஈறு
ஈர்மை கொள் தேவர் நடுவா மற்று எப்பொருட்கும்
வேர் முதலாய் வித்தாய்ப் பரந்து தனி நின்ற
கார்முகில் போல் வண்ணன் என் கண்ணனை நான்
கண்டேனே.

பொ - ரை :—சிறப்பினைக் கொண்டுள்ள பரமபதம் சுவர்க்கம் நரகம் முடிவாக, அன்பினைக் கொண்டுள்ள தேவர்கள் நடுவாக, மற்றும் உண்டான எல்லாப்பொருள்கட்கும் வேராகி முதலாகி வித்துஆகிப் பரந்து தனித்துநின்ற கார்காலத்து மேகத்தைப் போன்ற வண்ணத்தை உடையவனை என் கண்ணபிரானை நான் கண்டேன்.

வி - கு :—வீடு முதலானவற்றை முடிவாகவும், தேவர்களை நடுவாகவும் ஓதியதனல் 'எப்பொருட்கும்' என்றதனை முதலாகக் கொள்க. நல்வினை தீவினைகளைச் செய்பவை உயிர்கள் ஆதலின் அவற்றை முதலாகவும், அக் கருமங்கட்குப் பலன்களைக் கொடுப்பவர்கள் தேவர்கள் ஆதலின் அவர்களை நடுவாகவும், அப் பலன்களை அநுபவிக்கும் இடங்கள் வீடு சுவர்க்கம் நரகங்கள் ஆதலின் அவற்றை ஈறுகவும் ஓதினர்.

1. பெரியாழ்வார் திருமொழி. 1. 6. 9.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1]'இவர்களை விடீர், நாம் முந்துற முன்னம் இவர்களைப் போலே ஆகாதே அவனை அநுபவிக்கப் பெற்றோமே!' என்று தமது இலாப அநுசந்தானத்தாலே மகிழ்ந்தவர் ஆகிறார்.

சீர்மை கொள் வீடு சுவர்க்கம் நரகு ஈறு ஆக ஈர்மை கொள் தேவர் நடுவாக மற்று எப் பொருட்கும்-எல்லாவகையாலும் நன்றான பரமபதம் அளவுக்குட்பட்ட இன்பத்தையுடைய சுவர்க்கம் கலப்புஅற்ற துக்கமேயான நரகம் இவை முடிவாக, ஈரப்பாடு உடையவர்களான தேவர்கள் நடுவாக, மற்றும் உண்டான விலங்கு முதலானவற்றிற்கும். வேர் முதலாய் வித்தாய்-[2] மூன்றுவித காரணமும் தானேயாய். பரந்து - [3]"உயிர்களைப் படைத்து அவற்றுள் அநுப்பிரவேசித்தார்; பிரவேசித்து, அறிவுடைப்பொருள், அறிவில்பொருள்கள் ஆனார்" என்கிற படியே, முந்துற இவற்றை அடைய உண்டாக்கி, பின்னர், பொருளாதல் பெயரடைதல்களுக்காக அவற்றுள் அநுப்பிரவேசித்து, இப்படி உலகமே உருவமாய் நின்று. தனி நின்ற கார்முகில்போல் வண்ணன் என் கண்ணனை நான் கண்டேன்- இப்படி, உலகமே உருவமாய் நின்ற அளவேஅன்றி, தன்னுடைய சிறப்புத் தோன்றும்படி ஸ்ரீவைகுண்டத்திலே மழை பெய்யும் மேகம்போலே இருக்கிற அழகிய திருமேனியையுடையனாய் இருந்தும்,கிருஷ்ணனாய் வந்து அவதரித்து எனக்குக் கையாள் ஆனவனை நான் முந்துற முன்னம் கண்டு அநுபவிக்கப் பெற்றேன் என்கிறார். (10)

200.

கண் தலங்கள் செய்ய கருமேனி அம்மானை
வண்டு அலம்பும் சோலை வழுதி வளநாடன்
பண் தலையில் சொன்ன தமிழ் ஆயிரத்துஇப் பத்தும்வல்லார்
விண் தலையில் வீற்றிருந்து ஆள்வர் எம் மா வீடே.

---

1. சம்சாரிகளுக்கு உபதேசித்த இடத்தில் அவர்கள் திருந்தாமையாலே 'இவர்களை விடீர்' என்கிறார். "கண்ணனை நான் கண்டேனே" என்றதனை நோக்கி 'நாம் முந்துறமுன்னம்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. மூன்று விதமான காரணங்கள்: முதல் துணை நிமித்த காரணங்கள். வேர் - துணைக்காரணம்; முதல் - நிமித்தகாரணம்; வித்து - முதற்காரணம். ஞானசக்தியாதிகளோடு கூடிய வேஷத்தால் துணைக்காரணமும், சங்கல்பத்தோடு கூடிய வேஷத்தால் நிமித்தகாரணமும், சூக்ஷ்ம சித் அசித்துக்களோடு கூடின தன்மையால் முதற்காரணமும் கொள்க.

3. தைத்திரீய ஆனந்: 6.

பொ - ரை :—சிவந்த கண்களையும் கரிய திருமேனியையு முடைய இறைவனை, வண்டுகள் அலைகின்ற சோலைகளையுடைய திருவழுதிவள நாட்டையுடைய ஆழ்வார் தலையான பண்களிலே வைத்துப் பாடிய ஆயிரம் தமிழ்ப் பாசுரங்களிலே இப் பத்துப் பாசுரங்களையும் வல்லவர்கள், பரமாகாசத்தில் சிறப்போடு இருந்து எனக்கும் என் சம்பந்திகளுக்கும் தருவதாக இருக்கிற அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டிலே இன்பத்தினை அநுபவிப்பார்கள்.

வி - கு :—அலம்புதல் - ஒலித்தலுமாம். வீற்றிருந்து எம் மா வீடு ஆள்வர் என மாற்றுக. 'வீற்றிருத்தல்-வேறு ஒன்றற்கு இல்லாத சிறப்போடு தங்கியிருத்தல்' என்பர் நச்சினார்க்கினியர்.

ஈடு :—முடிவில், [1] இத் திருவாய்மொழியைக் கற்கவல்லவர்கள் இத் திருவாய்மொழியிற் சொன்ன முக்தப் பிராப்பிய போகத்தைப் பெறுவர் என்கிறார்.

கண் தலங்கள் செய்ய கருமேனி அம்மானை - [2] "பூதலங்கள்" என்னுமாறு போலே திருக்கண்களின் பரப்பைச் சொல்லுகிறது. பரந்து சிவந்திருந்துள்ள திருக்கண்களையும், அவற்றுக்குப் [3] பரபாகமாம்படி கருமை நிறைந்த திருமேனியையுமுடைய சர்வேஸ்வரனை. **வண்டு அலம்பும் சோலை வழுதி வளநாடன் பண் தலையில் சொன்ன தமிழ் ஆயிரத்து இப் பத்தும் வல்லார்**-வெள்ளத்திலே அலைவாரைப்போலே, தேன் வெள்ளத்திலே வண்டுகள் அலையாநின்றுள்ள சோலையையுடைய திருவழுதிவளநாட்டையுடைய ஆழ்வார் தலையான பண்ணிலே சொன்ன தமிழ் ஆயிற்று இப் பிரபந்தம்தான்; இதன் பாசுரங்கள் ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு இப் பத்தையும் கற்கவல்லவர்கள். பண் தலையிற் சொன்ன-பண்ணின் மேலே சொன்ன என்று பொருள் கூறலுமாம். **விண் தலையில் வீற்றிருந்து எம் மா வீடு ஆள்வர்** - பரமபதத்திலே தங்கள் வேறுபாடு தோன்ற இருந்து எவ்வகையாலும் விலக்ஷணமான

1. "விண் தலையில் வீற்றிருந்து ஆள்வர் எம் மா வீடே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "கண்" என்னாது, "கண்தலங்கள்" என்றது, திருக்கண்களின் பரப்பைச் சொல்லுதற்கு என்று திருவுள்ளம்பற்றி, அதற்கு மேற்கோள் காட்டுகிறார் "பூதலங்கள்" என்று. "அரங்கத்து அமலன் முகத்து, கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரி ஓடி நீண்ட அப், பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே" என்றார் பாண்பெருமாள்.

3. பரபாகம் - வண்ணப்பொலிவு; வர்ண உத்கர்ஷம்.

மோக்ஷமானது தங்களுக்கு உரிமையாம்படி பெறுவர். **விண் தலை** - தலையான விண்ணிலே என்னுதல்; விண்ணின்மேலே என்னுதல். அங்குள்ளார் தங்கள் ஆணையைப் பின்பற்றும் படியாகப் பெறுவர் என்றபடி. ஆத்ம இலாபத்து அளவே அன்றி, பரமபுருஷார்த்த இலக்ஷண மோக்ஷத்தை ஆளப் பெறுவராதலின் '**எம் மா வீடு ஆள்வர்**' என்கிறார். தொடர்ந்து வருகிற பிறவிகளால் உண்டான துன்பங்கள் எல்லாம் தீரும் படி வீறுபட்டு இருப்பராதலின் '**விற்றிருந்து**' என்கிறார். இனி, எம் மா வீடு ஆள்வர் என்பதற்கு, [1] "தன்பால் மனம் வைக்கத் திருத்தி வீடு திருத்துவான்" என்கிறபடியே, [2] எனக்கும் என் சம்பந்திகட்கும் தருவானாகச் சமைத்து நிற்கிற பரமபதத்தை ஆளப்பெறுவர் எனலுமாம். (11)

முதற் பாட்டில், இத்திருவாய்மொழியில் பரக்கச் சொல்லு கிற அர்த்தத்தைச் சுருங்க அருளிச்செய்யாநின்றுகொண்டு, "சம்சாரமாகிற இக் கடலைக் கடக்கவேண்டும்" என்று இருப் பார்க்குக் கடத்திக் கொடுக்கும் என்றார்; இரண்டாம் பாட்டில், அவன் வேண்டுமோ? அவனுடைய சம்பந்தமே கடத்தும் என் றார்; மூன்றாம் பாட்டில், அவனுடைய அதிமாநுஷ சேஷ்டி தங்கள் எங்கும் காணலாம் என்றார்; நான்காம் பாட்டில், "அந்தம் இல் பேரின்பத்தைப் பெறவேண்டும்" என்றிருப்பீர்! அவனைப் பற்றுங்கோள் என்றார்; ஐந்தாம் பாட்டில், மேல் "இணைவன் ஆம் எப்பொருட்கும்" என்றதனை விவரித்தார்; ஆறாம் பாட்டில், இவ் உயர்வுகள் எல்லாம் அவனுக்கு உண்டோ? என்ன, நாம் ஆராய வேண்டாதபடி அருச்சுனன் பண்டே தெரிந்து அறுதியிட்டான் என்றார்; ஏழாம் பாட்டில், ஒருவன் [3] அநுவர்த்தனம்கொண்டு அறியவேண்டுமோ? அவன் விரும்பிச் செய்கிற எல்லாக் காரியங்கட்கும் உரியதாக அன்றோ இவ் உலகம் இருக்கிறது? என்றார்; எட்டாம் பாட் டில், எங்கும் பரந்திருத்தல் தொடக்கமான அவனுடைய செயல் கள் ஒருவரால் அளவிட முடியாது என்றார்; ஒன்பதாம் பாட் டில், அவனுடைய எங்கும் பரந்திருக்கும் தன்மையை இசை யாதார் இரணியன் பட்டது படுவர் என்றார்; பத்தாம் பாட்டில்,

---

1. திருவாய்மொழி. 1. 5 : 10.

2. இங்கு "எம்" என்பதற்கு எங்கள் என்பது பொருள்; இந்தப் பொருளையே 'எனக்கும் என் சம்பந்திகட்கும்' என்று விரித்து அருளிச்செய் கிறார். முன்னைய பொருளுக்கு 'எ, மா, வீடு' எனப் பிரிக்கவும்.

3. அநுவர்த்தனம் - ஒழுகுதல்.

இந்த விதமானவனை நான் கண்டு அநுபவிக்கப் பெற்றேன் என்றார்; முடிவில், இது கற்றார்க்குப் பலம் சொல்லித் தலைக் கட்டினார்.

திருவாய்மொழி நூற்றந்தாதி

அணைந்தவர்கள் தம்முடனே ஆயன் அருட்கு ஆளாம்
குணந்தனையே கொண்டு உலகைக் கூட்ட—இணங்கிமிக
மாசில் உபதேசம் செய் மாறன் மலர் அடியே
வீசு புகழ் எம் மா வீடு. (18)

—o—

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

ஒன்பதாந் திருவாய்மொழி—"எம் மா வீடு"

முன்னுரை

ஈடு:— மேல் திருவாய்மொழியிலே, "நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்" என்று இவர்தாமும் அருளிச்செய்து, [1]சர்வேஸ்வரனும் இவர்க்கும் இவர் உறவினர்கட்கும் [2]பரமபதம் கொடுப்பானாகப் பாரிக்க, அதனைக் கண்டு, தேவரீர் எனக்குப் பரமபதம் தந்தருளப் பார்த்ததாகில் இங்ஙனே தரப் பார்ப்பது; அதாவது-"உமக்காக மோக்ஷம் கொடுக்கிறோம் கொள்ளும்" என்று எனக்காகத் தருகை அன்றி "நமக்காகக் கொள்ளும்" என்று தேவரீருக்கே ஆகும்படியாகத் தரவேண்டும் என்று [3]தாம் நினைத்திருந்த படியை அவன் திருமுன்னர்ப் பிரார்த்திக்கிறார். ஆயின், இதனை இத்தனைநாள் அறுதியிடாது ஒழிவான் என்? என்னில், அவன் மேலும் மேலும் குணங்களை நுகர்விக்கையாலே அதற்குக் காலம் போந்ததுஇத்தனை அல்லது, இதனை அறுதி இடுவற்குக் காலம் பெற்றிலர். ஆயின், [4]இப்பொழுதும் குணநுபவமே அன்றோ பண்ணுகிறது? என்னில், ஆம், அப்படியே; இறைவன் தம்பக்கல் மேலும் மேலும் செய்கிற விருப்பத்தைக் கண்டு, "இவனுக்கு இந்தக் காதற்பெருக்கு முடியத் தொடர்ந்து செல்லுவது ஒன்றாய் இருந்தது;

---

1. மேலே "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்றுகொலோ" என்று இவர் தாமும் விரும்பி, மேல் திருவாய்மொழியிலே "நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்" என்று பிறர்க்கும் உபதேசிக்கையாலே இவர்க்கு மோக்ஷத்தில் விருப்பம் இருந்தது. என்று பார்த்துச் 'சர்வேஸ்வரனும் இவர்க்கும் இவர் உறவினர்கட்கும் பரமபதம் கொடுப்பானாகப் பாரிக்க' என்று வேண்டுவன சிலவற்றைக் கூட்டிப் பொருள் முடிவு காண்க.

2. "எம் மா வீட்டுத் திறமும் செப்பம்" என்று இவர் மறுப்பதனாலே இறைவன் இவருக்குப் பரமபதம் கொடுப்பானாகப் பாரித்தமை பொருள்ஆற்றலாற் போதருதலின் 'பரமபதம் கொடுப்பானாகப் பாரிக்க' என்கிறார்.

3. "துயரறு சுடரடி தொழுது எழு" என்ற இடத்தில் கூறியதைத் திருவுள்ளம் பற்றித் 'தாம் நினைத்திருந்த படியை' என்கிறார். 'அவன் திருமுன்னர்ப் பிரார்த்திக்கிறார்' என்றது, "அம்மா! அடியேன் வேண்டுவது இஃதே" என்றதனை நோக்கி.

4. 'இப்பொழுதும்' என்றது, இத்திருவாய்மொழியிலும் என்றபடி.

நாம் இவனை மீட்டாகிலும் நம்முடைய பேற்றினை அறுதி இடுவோம்" என்று பார்த்து, [1]"நீ இங்ஙனே நில்" என்று அவனை நிறுத்திவைத்துப் பேற்றினை அறுதி இடுகிறார்.

[2]**எம்பார்,** இத் திருவாய்மொழி அருளிச்செய்யப் புக்கால், இருந்தவர்களை "யார்" என்று கேட்டுக் கதவுகளையும் அடைப்பித்து, மிக இரகசியமாக அருளிச்செய்வர்.

நன்று; [3]பெறத் தகுந்த பேறு என்பது இப்படி அன்றோ இருப்பது? இவர் அறுதியிட வேண்டுகிறது என்? என்னில், சர்வேஸ்வரன் இவ் ஆத்மாவுக்குத் தலைவனாய், இவனும் அடியவனாய், அவனுடைய உபாய பாவமும் நித்தியமாக இருக்கச் செய்தே அன்றோ இவனுக்கு இன்று[4]ஸ்வீகாரம் வேண்டுகிறது; அப்படியே, அவன் ஸ்வதந்திரன் ஆகையாலே[5]நினைத்தபோது நினைத்தபடி கொள்வான் ஒருவன் ஆகையாலே, பேற்றினைப் பெறும் சமயத்தில் அநுபவம் இருக்கும்படியையும் அறுதி

---

1. "தனக்கே யாக எனைக் கொள்ளும் இஃதே" என்றதனைத் திருவுள்ளம் பற்றி '"நீ இங்ஙனே நில்" என்று அவனை நிறுத்தி வைத்து' என்கிறார். தன் குணங்களை அநுபவிப்பிக்கிற ஈஸ்வரனை விலக்கித் தாமும் பகவத்குணாநுபவத்தினின்றும் விலகினவராய் என்றபடி. அப் பாசுரத்தின் வியாக்கியானத்தை நோக்குக.

2. இது குஹ்ய தமம் என்பதற்கு ஐதிஹ்யம், 'எம்பார்' என்று தொடங்கும் வாக்கியம். குஹ்யம் - இரகசியம். தமம் - உயர்ந்தது.

3. 'பெறத் தகுந்த பேறு என்பது இப்படி யன்றோ? இருப்பது' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து :—நமஃ பதத்தாலே சொல்லப்படுகின்ற பாரதந்திரியத்திற்கு அநுகுணமாகச் சந்தனம் மலர் முதலியவைகளைப் போலே, அவனே தன்பேறாக விநியோகம் கொள்ளுவதாயன்றோ இருப்பது ; இப்போது இவர் அறுதியிட வேண்டிய அம்சம் என்ன இருக்கின்றது? என்பதாம்.

4. 'ஸ்வீகாரம் வேண்டுகிறது' என்றது, சர்வமுக்திப் பிரசங்க பரிகாரத்தின்பொருட்டு ஸ்வீகாரம் வேண்டுகிறது என்றபடி. ஸ்வீகாரம் - இறைவனைப் பற்றி அவனிடத்துப் பேற்றினை வேண்டுதல்.

5. 'நினைத்தபோது நினைத்தபடி கொள்வான் ஒருவன்' என்றது. ஐஸ்வர்யம் முதலியவற்றை யாதல், கைங்கரியத்தைத் தன் பொருட்டுச் செய்து கொள்ளும்படியாதல் கொடுத்து விநியோகம் கொள்வான் ஒருவன் என்றபடி.

இட்டுப் பெறவேண்டும் என்க. [1]பின் வாக்கியத்திலும் இவ் அர்த்தத்தைச் சொல்லாநின்றதே என்க. துவயந்தன்னில் அறுதி இட வேண்டுகிறது என்? என்னில், முன்வாக்கியத்தால் சொன்ன சாதனம், எல்லாப்பலன்களையும் கொடுக்கக் கூடியது ஆகையாலே, வேறு பலன்களை விரும்பி அடைக்கலம் புகுவார்க்கும் அவற்றைக் கொடுத்து விடுவான் ஒருவன் அன்றோ சர்வேஸ்வரன்; ஆதலால், அறுதி இடுகிறது என்க.

நன்று; இத் திருவாய்மொழியில் அறுதிஇடும் பேறு என்? என்னில், [2]"முக்தனாய்த் தனக்குமேல் ஒன்று இல்லாததான சுகாநுபவத்தைப் பண்ணவுமாம்; ஆத்மப்பிராப்தியைப் பெறவுமாம்; ஆத்மவிநாசமே ஆகவுமாம்; நரக அநுபவம் பண்ணவுமாம்; இவற்றில், எனக்கு ஒரு நிர்ப்பந்தம் இல்லை; உனக்காக வரும்அன்று இவை இத்தனையும் வரவுமாம்; எனக்காக வருமன்று இவை இத்தனையும் வேண்டா; ஆனபின்னர், தேவர்க்கு உறுப்பாமிதுவே எனக்கு வடிவாம்படி பண்ணியருள வேண்டும்" என்று, தன்னுடைய பேற்றினை அறுதிஇடுகிறார்.

இப்படிப்பட்ட செயல்தான் உலகத்தில் நடைபெறுவது ஒன்று அன்று; இவ்ஆழ்வார் பக்கலிலே காணுதல்; இராமாயண புருஷர்களில் ஸ்ரீ பரதாழ்வான், இளையபெருமாள் இவர்

1. பேற்றினைப் பெறும் சமயத்தில் அநுபவம் இருக்கும்படியையும் பிரார்த்துப் பெறவேண்டும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'பின்வாக்கியத்திலும்' என்று தொடங்கி. 'பின்வாக்கியம்' என்றது, "ஸ்ரீமதே நாராயணாய நமஃ" என்றதனை. இந்த வாக்கியத்தில் "நமஃ" பதத்தாலே 'உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்று பேறு அறுதியிடப்பட்டிருத்தல் காண்க. இந்த வாக்கியம், திருமகள்கேள்வனாய்ச் சர்வ ஸ்வாமியாய் இருக்கிற சர்வேஸ்வரன் திருவடிகளில் செய்யும் கைங்கர்யமாகிற பேற்றினைச் சொல்லுகிறது. 'துவயந்தன்னில்' என்றது, முமுக்ஷுவினுடைய சாதன விசேஷத்தைச் சொல்லுகிற துவயத்திலே என்றபடி. 'முன்வாக்கியம்' என்றது, "ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே" என்றதனை. இதிற் சொன்ன சாதனமாவது, பெரிய பிராட்டியாரைப் புருஷாகாரமாக முன்னிட்டுச் சர்வேஸ்வரன் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன் என்பதாம். இதிற் சொன்ன சாதனம் புதிதாகப் பெறும் செல்வம், இழந்த செல்வம், கைவல்யம், இறைவன் திருவடிகளிற் செய்யப்படும் கைங்கரியம் என்னும் நான்கற்கும் பொதுவாய் இருத்தல் காண்க.

2. "சிறப்பில் வீடு" என்ற பாசுரத்தை நோக்கி 'முக்தனாய்' என்கிறார். "சிறப்பில் வீடு" என்று விசேடித்ததனாலே, கேவலம் வீடும் உண்டு என்று கொண்டு 'ஆத்மப் பிராப்தியைப் பெறவுமாம்' என்கிறார். ஆத்மப் பிராப்தி - கைவல்யம். "எய்தற்க" என்றதனைக் கடாக்ஷித்து 'ஆத்ம விநாசமே ஆகவுமாம்' என்கிறார்.

கள் பக்கலிலே காணுதல் செய்யுமித்தனை. கைகேயி [1]"ராஜந்" என்ற சொல் பொறுக்கமாட்டாமல் இராஜசபையிலே கூப்பிட்டான் அன்றோ? [2]"விலலாப சபா மத்யே - ஒரு திரளாக இருந்து என்னுடைய சேஷத்துவத்தைக் கொள்ளை கொள்வதே! "திருடர்களாலே திருடப்பட்டவன் போன்று வாய்விட்டு இரைந்து அழுதற்குத் தகும்" என்கிறபடியே, இழந்த பொருளுக்குத் தக்கபடியாக இருக்கும் அன்றோ கூப்பீடும். ஜகர்ஹேச - சந்தியாவந்தனத்திற்குப் பிற்பாடரைச் [3]சிஷ்டகர்ஹை பண்ணுவாரைப் போலே பழித்தான். புரோஹிதம் - அழகியதாக இக் குடிக்கு முன்னோடி இதம் பார்த்தாய். சபா மத்யே புரோஹிதம் ஜகர்ஹே - சபையின் மத்தியிலே புரோஹிதராகிய வசிஷ்டரை நிந்தித்தான்; [4]"ஆசாரியன் விதிகளை மீறுவானே யாயின் அதனை அவனிடத்தில் ஏகாந்தத்தில் கூறல்வேண்டும்" என்கிற நிலையையும் பார்த்திலன். ராஜ்யஞ்ச அஹஞ்ச ராமஸ்ய - ஒருவனுக்கு இரண்டு பொருள்கள் அடிமை ஆனால் ஒன்றை ஒன்று நிர்வஹிக்குமோ? அப்படியாயின், ராஜ்யந்தான் என்னை ஆண்டாலோ? தர்மம் வக்தும் இஹார்ஹஸி-"பெருமாள் காடு ஏறப் போனார்; சக்கரவர்த்தி துஞ்சினான்; நாடு அரசன் இன்றி இருத்தல் ஆகாது; நின்றாரில் பிரதானர் தலையிலே முடியை வைக்கவேண்டும்" என்று பார்த்தாய் இத்தனை போக்கி, இதற்கு விஷயமாக இருக்கிற என்னைப் பார்த்து வார்த்தை சொல்லிற்றில்லை. கதம் தசரதாத் ஜாதோபவேத் ராஜ்ய அபஹாரக:—[5]அவர் போகட்

1. இப் பாரதந்திரியத்திற்கு அநுஷ்டானம் காட்டுகிறார் 'கைகேயி' என்று தொடங்கி. "ராஜன்" என்பது, ஸ்ரீராமா. அயோத். 72 : 24.

2. ஸ்ரீராமா. அயோத். 82 : 10, 11. இச் சுலோகங்களினுடைய பிண்டப் பொருள் வருமாறு : "அன்னத்தின் குரல் போன்ற குரலையுடைய யுவா வாகிய அந்தப் பரதாழ்வான் கண்ணீர் அடைப்பினால் தெளிவில்லாத வார்த்தைகளால் சபை மத்தியில் கதறினான்; புரோகிதனான வசிஷ்டனையும் குறை கூறினான்; இராஜ்யமும் நானும் இராமபிரானுடைய சொத்து; இந்த விஷயத்தில் தர்மத்தைச் சொல்லக்கடவீர்; தசரதரிடமிருந்து பிறந்தவன் ராஜ்யத்தை அபஹரித்துக் கொள்ளுகின்றானாக எப்படி ஆகக்கூடும்" என்பது.

3. சிஷ்ட கர்ஹை பண்ணுதல் - 'சிஷ்டர்களுக்கு இது தகாதுகாண்' என்று பழித்தல். சிஷ்டர் - பெரியோர்.

4. ஆபஸ்தம்ப சூத்திரம்.

5. 'ஒரு திரளாக இருந்து' என்றதுமுதல் 'வார்த்தை சொல்லிற்றில்லை' என்றது முடிய, சொரூபத்திற்குச் சேராது என்றார். இனி, குடிப்பிறப்புக்கும் சேராது என்கிறார் 'அவர்போகட்டுப் போன' என்று தொடங்கி.

"தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளம் எனும் தகையானைப் பரதன் எனும் பெயரானை"

என்ற கம்பநாட்டடிகள் திருவாக்கு ஈண்டு நினைவு கூர்க.

டுப் போன ராஜ்யத்தை அபகரித்து, அவரைப் பிரிந்த அந்தக் கணத்திலே முடிந்தவன் வயிற்றிலே பிறந்தேனும்படி எங்ஙனே நான்? என்பது **ஸ்ரீ பரதாழ்வான்** திருவார்த்தை.

ஸ்ரீராமபிரான் "நில்" என்ன, [1] "குருஷ்வ - செய்தருள வேண்டும்" என்றார் **இளையபெருமாள்**; [2]சேர்ந்திருப்பதனாலேயே தரிக்கக்கூடிய பொருளைப் பிரித்து நிற்கச் சொல்லுகையாகிறது அழிக்கையே அன்றோ என்கிறார். யாருடைய பிரயோஜனத்திற்கு யார்தான் இருக்கிறார்? உம்முடைய இழவுக்கு நீர் பதறுதிருக்கிறது என்? என்பார் [3]"குரு" என்னாதே "குருஷ்வ" என்கிறார். [4] நீர்தாம் "நில்" என்று அருளிச்செய்

1. பெருமாள் "நில்" என்ன, இளையபெருமாள் "குருஷ்வ மாம் அநுசரம் - நான் பின்தொடர்ந்து வருவேனாகச் செய்யவேண்டும்" என்று சொன்னார் என்றபடி.

2. நீருள எனின்உள மீனும் நீலமும்
பாருள எனின்உள யாவும் பார்ப்புறின்
நாருள தனுவுளாய் நானும் சீதையும்
யாருளர் எனின்உளேம் அருளுவாய் என்றான்.(கம்ப. நகர்நீங். 157.)

என்ற செய்யுளை 'சேர்ந்திருப்பதனாலேயே தரிக்கக்கூடிய' என்று தொடங்கும் வாக்கியத்தோடு ஒப்பு நோக்குக.

3. ஒருவன் ஒருதொழிலைச் செய்தால் அத்தொழிலால் உண்டாகும் பயன் தன்னைச் சார்வதாக இருந்தால் அத் தொழிலை உணர்த்துகின்ற சொல்லின் உறுப்பை **ஆத்மநே** பதம் என்றும், பயன் பிறன் ஒருவனைச் சார்வதாக இருந்தால் அத் தொழிலை உணர்த்தும் சொல்லின் உறுப்பை **பரஸ்மை** பதம் என்றும் கூறுப. அங்குக் "குரு" என்பது **பரஸ்மை** பதம்; "குருஷ்வ" என்பது **ஆத்மநே** பதம். **ஆத்மநே** பதமான "குருஷ்வ" என்றதனை நோக்கி 'யாருடைய பிரயோஜனத்துக்காக யார்தான் இருக்கிறார்; உம்முடைய இழவுக்கு நீர் பதறுதிருக்கிறது என்?' என்று அருளிச்செய்கிறார். 'சேதனன் அடிமை செய்வதால் உளதாய பயன் இறைவனுக்கு' என்னும் சாஸ்திரப் பொருளை இங்கு நினைவு கூர்க. இங்கு, உனக்கே நாமாட்செய்வோம், மற்றை நம் காமங்கள் மாற்று" என்ற சூடிக்கொடுத்த சுடர்க் கொடியார் திருவாக்கின் சீரிய பொருளைச் சிந்தைசெய்க.

4. "அநுசரம் - பின்தொடர்ந்து வருகிறேன்" என்றதற்குப் பாவம் 'நீர்தாம்' என்று தொடங்கும் வாக்கியம். அந்தச் சுலோகத்தை முற்றும் ஈண்டுத் தருகிறேன்:—

குருஷ்வ மாம் அநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே
கிருதார்த் தோஹம் **பவிஷ்யாமி** தவசார்த்த: ப்ரகல்பதே.

"சேஷபூதனான என்னைப் பின்னே சஞ்சரிக்கின்றவனாகச் செய்தருள வேண்டும்; என்னைக் கூட்டிக்கொண்டு போவதில் சேஷ்ய சேஷக பாவம் மாறாடிக் கிடக்க இல்லை; தேவரீருக்கே பயன் சித்திக்கிறது; நான் தேவரீருக்குக் கைங்கர்யத்தைச் செய்து அத்தால் வந்த கைங்கர்ய பலத்தை அடைந்தவனாகப் போகிறேன்" என்பதாம்.

தது, நான், நிற்கச்சொல்லுகைக்குத் தக்கவனும்படி இருக்கை அன்றோ? உம்முடைய சாயையை 'நில்' என்று சொல்லிற்றிலீரே; சாயையைப்போன்றுஉம்மைப் பின் செல்வேனாகவேண்டும் என்பார் "அநுசரம்-பின்தொடர்ந்து வருகிறேன்" என்கிறார். இதனால், பண்ணும் பிரகாரத்தை விதித்தபடி. மேலும், [1]"நீரும்நிழலும் வாய்த்திருப்பது ஒரு பிரதேசத்தைப் பார்த்துப் பர்ணசாலையைச் சமையும்" என்ன, "நம் தலையிலே ஸ்வாதந்திரியத்தை வைத்தபோதே பெருமாள் நம்மைக் கைவிட்டார்" என்று வேறுபட்டார். "ஏவம் உக்தஸ்து ராமேண - இதற்கு முன்னர்எல்லாம் நம் குறையாலே இழந்தோம் என்று இருந்தோம்; இன்று இவர்தாமே நம் சொரூபம் அழியக் காரியம் பார்த்தார்; இனி, நம் சொரூபம் என்று ஒன்று உண்டோ? என்று வேறுபட்டார்; லக்ஷ்மண :- பாரதந்திரியத்தை நிரூபகமாக உடையவர். ஸம்யதாஞ்ஜலி :- [2]நாம் நம் சொரூபத்தை அழித்துக் கொண்ட அன்று நோக்குகை அன்றிக்கே, தலைவன் தானே அழித்த அன்றும் சொரூபத்தைத் தரவற்றாயிற்று அஞ்சலி. ஸீதா ஸமக்ஷம் - பண்ணின அஞ்சலிக்கு [3]அந்யபரதை பாவிக்க ஒண்ணாதவள் சந்நிதியிலே. காகுத்ஸ்தம்-பிராட்டி சந்நிதியும் மிகையாம்படியான குடியிற் பிறப்பை உடையவரை. இதம் வசனம் அப்ரவீத் - இவ் வார்த்தையை சொல்லுவானே!" என்று கொண்டாடுகிறான் இருடி. மேலும், [4]"பரவா நஸ்மி - உம்முடைய அஸ்மிதை போல்

---

1. கீழே வருகின்ற "ஏவம் உக்தஸ்து" என்ற சுலோகத்துக்கு அவதாரிகை 'நீரும் நிழலும்' என்ற வாக்கியம். இந்தச் சுலோகம், ஸ்ரீராமா. ஆரண். 15 : 6.

2. வேறுபட்டபின் அஞ்சலி பண்ணுவான் என்? என்னும் வினாவிற்கு விடையாக 'நாம் நம் சொரூபத்தை' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

3. 'அந்யபரதை பாவிக்க ஒண்ணாதவள்' என்றது, வேறு ஒன்றிலே நோக்குள்ளவனாக இறைவன் இருத்தற்கு விடாதவள் என்றபடி.

4. ஸ்ரீ ராமா. ஆரண். 15 : 7. பரவாநஸ்மி — பரதந்திரனாக இருக்கிறேன். நான் பரதந்திரனாக இருக்கிறேன் என்றதனால் நீர் ஸ்வதந்திரராக இருக்கின்றீர் என்பது போதருதலின், அதனையே 'உம்முடைய அஸ்மிதை போல் அல்ல காணும் என்னுடைய அஸ்மிதை' என்று அருளிச்செய்கிறார். அஸ்மி — ஆகிறேன்; ஆகிறேன் ஆகுந் தன்மை - அஸ்மிதை.

அல்ல காணும் என்னுடைய அஸ்மிதை" என்றார் இளையபெருமாள். இத் தகைய பாரதந்திரியத்தை ஆயிற்று இவர் ஆசைப்படுகிறது.

"இதுதான் ஒருவர் விரும்புவதும் அன்று, விரும்புவார் இன்மையான் நாம் கொடுத்துப் போருமதுவும் அன்று; அவ்வழி புல் எழுந்து போயிற்றுக் காணும்" என்று இறைவன் அநாதரித்திருக்க, புருஷன் அர்த்திக்க வருமது அன்றோ புருஷார்த்தமாவது, "இப்பேறு இத்தனையும் நான் பெற்றேனாக வேண்டும்" என்று இவர் விரும்ப, [1] அவனும் தலைதுலுக்கப் பெற்றாராய்த் தலைக்கட்டுகிறார்.

201.

எம் மா வீட்டுத் திறமும் செப்பம்; நின்
செம் மா பாத பற்புத் தலைசேர்த்து; ஒல்லை
கைம் மா துன்பம் கடிந்த பிரானே!
அம்மா! அடியேன் வேண்டுவது இஃதே[2].

பொ - ரை:— கையையுடைய யானையினது துன்பத்தை நீக்கிய உபகாரகனே! ஸ்வாமியே! எத்தகைய பெரிய மோக்ஷத்தின் தன்மையைப் பற்றியும் பேசோம்; நினது சிவந்த பெருமை பொருந்திய திருவடித் தாமரைகளை என் தலையின்மீது விரைவில் சேர்க்கவேண்டும்; அடியேன் விரும்புவது இப் பேறே யாகும்.

வி - கு:— 'எம்மா' என்பதனை, எ-மா என்றும், எம்-மா என்றும் இருவகையாகவும் பிரித்தல் தகும். ஒல்லை என்பதனை முன்னும் பின்னும் கூட்டி இடைநிலைத் தீவகமாகப் பொருள் கொள்க. செப்பம்: தனித் தன்மைப் பன்மை. பத்மம் என்ற சொல், பற்பம் எனத் திரிந்தது.

"பரவாநஸ்மி" என்ற தலைப்பையுடைய சுலோகம் முழுதும் வருமாறு:—

பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே
ஸ்வயந்து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத.

ககுத்ஸ்த வம்சத்தில் பிறந்தவரே! தேவரீர் பல வருஷங்களாக இருக்கும் போதும் நான் பரதந்திரனாகவே இருக்கிறேன்; தேவரீரே மனோகரமான ஓர் இடத்தைப் பார்த்து இந்த இடத்தில் பர்ணசாலை கட்டுக என்று என்னை நியமித்தருளவேண்டும்.

1. "விடலில் சக்கரத் தண்ணலை" என்னும் ஈற்றுப் பாசுரத்தை நோக்கி 'அவனும் தலைதுலுக்கப் பெற்றாராய்' என்கிறார்.

2. 'வேண்டுவது ஈதே' என்பது முன் உள்ள பாடம்.

ஈடு:— முதற்பாட்டில், [1]எவ்வகையாலும் வேறுபட்ட சிறப்பினை யுடைய மோக்ஷத்திலும் எனக்கு விருப்பம் இல்லை; உன் திருவடிகளை என் தலையிலே வைக்கவேண்டும் என்கிறார்.

[2]"ஆழ்வீர்! மோக்ஷத்தைக் கொள்ளும்" என்றான் இறைவன், "வேண்டா" என்றார்; "மா வீடு-வேறுபட்ட சிறப்பினை யுடைய மோக்ஷம் காண்" என்றான், "அதுவும் வேண்டா" என்றார்; "எம் மா வீடு காண் - செல்வம், ஆத்ம லாபம் என்று இருக்கவேண்டா; பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷம் காண்" என்றான், அதுவும் எனக்கு வேண்டா என்கிறார். எம் மா வீட்டுத் திறமும் செப்பம்-எவ்வகையாலும் நன்றான மோக்ஷத்தைப் பற்றிய வார்த்தையும் பேசோம். நீ அதனைப் பற்றிப் பேசவும் உரியவன் அல்லை; நான் மறுக்கவும் உரியவன் அல்லேன் என்றபடி. இனி, எம் மா வீட்டுத் திறமும் செப்பம் என்பதற்கு, ஒரு புலவர் எம் மா வீட்டு விகல்பமும் செவ்வியவாம் என்று பொருள் கூறினர்; அப் பொருளில், வீட்டு விகல்பமாவது - சாலோக்ய சாரூப்ய சாமீப்ய சாயுஜ்யம் என்கிற இவை. செவ்விய ஆகையாவது-சாலோக்யம் முதலானவைகள் எல்லாம்[3] இம் மோக்ஷத்திலே உண்டாகை.

ஆயின், உமக்கு வேண்டுவது என்? என்னில், நின் செம் மா பாத பற்புத் தலை சேர்த்து - மலர்ச்சி, செவ்வி, குளிர்த்தி, நாற்றங்களுக்குத் தாமரையை ஒரு போலி என்னலாம்படி இருக்கிற உன்னுடைய திருவடிகளைக்கொண்டு வந்து என் தலையிலே வைக்கவேண்டும். செம் மா பாதம் - செம் என்று சிவப்பாய், மா என்று கறுப்பாய், அகவாய் சிவந்து புறவாய் நீலமாய் இருக்கிற திருவடி என்றபடி. இனி, செம் மா பாதம் - என்பதற்கு, செம்மையால் நினைக்கிறது - செவ்வையாய், அடியார்கட்கு வருந்த வேண்டாதபடியான ஆர்ஜவத்தையுடைத்

---

1. "எம்மாவீடு" தொடங்கித் "தலைசேர்த்து" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "செப்பம்" என்ற மறுப்புக்குக் காரணத்தைக் காட்டாநின்று கொண்டு, "வீடு, மா வீடு, எம் மா வீடு" என்று பிரித்துக் கருத்து அருளிச்செய்கிறார் 'ஆழ்வீர்!' என்று தொடங்கி. "வீடு" என்றது, செல்வத்தைக் கூறுகின்றது; "மா வீடு" என்றது, ஆத்மலாபத்தைக் கூறுகின்றது; "எம் மா வீடு" என்றது, பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தைக் கூறுகிறது.

3. 'இம் மோக்ஷத்திலே' என்றது, பாதபற்புத் தலை சேர்த்தலாகிய இம் மோக்ஷத்திலே என்றபடி.

செப்பம் என்பதற்கு, இருபொருள் அருளிச்செய்கிறார்: முதற்பொருளில் எதிர் மறை முற்று. இரண்டாவது பொருளில் பண்புப் பெயர்; செம்மை பகுதி.

தாய் என்றும், மா என்று பெருமையாய், பூசிக்கத்தக்க மிக உயர்ந்த திருவடிகள் என்றும் பொருள் கூறலுமாம். சேர்த்து-சேர்க்கவேண்டும்; அதாவது -[1] கொக்குவாயும் படுகண்ணியும் போன்று, உன் திருவடிகளும் என் தலையும் சேரவேண்டும் என்றபடி. சேர்த்து என்பது வினையெச்சம் அன்று; வேண்டிக் கோடற் பொருண்மையின்கண் வந்த வியங்கோள் வினைமுற்று. 'சேர்த்துக' என்பது ஈறுகெட்டு நின்றது. [2]"பிள்ளாய்! உன் உள் வெதுப்பு ஆறுவது எப்போது? என்றார்கள்; பெருமாளும் தமக்கு வகுத்த முடி சூடி, நானும் எனக்கு வகுத்த முடி சூடின அன்று" என்றான் **ஸ்ரீபரதாழ்வான்.** மயிர் கழுவிப் பூச்சூட இருப்பாரைப் போன்று, இவரும் ஈறு இல் இன்பத்து இருவெள்ளத்திலே முழுகிப் பூச்சூட இருக்கின்றார் ஆதலின், '**பற்புத் தலை சேர்த்து**' என்கிறார்.

'அப்படியே செய்கிறோம்' என்றான்; அம் முறை பற்றாது. ஒல்லை - செய்து கொடு நின்று 'செய்கிறோம்' என்னவேண்டும்; இப்படி விரைய வேண்டும் இடம் உண்டோ? என்ன, கைம் மா துன்பம் கடிந்த பிரானே-நீ விரைந்து வந்து விழுந்தபடி அறியாயோ? [3]"பெரிய ஆபத்தை அடைந்தது, கூப்பிடுதற்கும் ஆற்றல் அற்று மனத்தினாலே நினைந்தது" என்கிறபடியே, சர்வேஸ்வரனாகிய நீயும் உன் தன்னைப் பேணாமல் வந்து விழும்படியான ஆபத்தே அன்றோ? என்றபடியாம். யானையும் தன் அளவிலே படும் துன்பம் என்பார் '**கைம் மா துன்பம்**' என்கிறார். இனி, துதிக்கை ஒழிய முழுகிற்று என்பார் '**கைம் மா**' என்கிறார் எனலுமாம். அப்படி, உமக்கு ஆபத்து உண்டோ? என்ன, அங்கு முதலை ஒன்று, எனக்கு முதலை ஐந்து; அங்கு ஆயிரம் தெய்வ யாண்டு, இங்கு அநாதிகாலம்; அங்கு ஒரு சிறு

---

1 'கொக்குவாயும் படுகண்ணியும்" என்றது, ஆபரண விசேடங்களிலே பரஸ்பர பந்தகமான உறுப்புக்களின் விசேடங்கள்.

2. அப்படிப் பிரார்த்தித்த பேர் உண்டோ? என்னும் வினாவிற்கு விடை, "பிள்ளாய்!" என்று தொடங்கும் வாக்கியம். இவ்வாக்கியம் "யாவந்ந சரணௌ" என்ற ஸ்ரீ ராமாயண ஶ்லோகத்தின் கருத்து. அச் சுலோகத்தை ஈண்டுத் தருகிறேன்:—

> யாவந்ந சரணௌ ப்ராது: பார்த்திவ வ்யஞ்ஜநாந்விதௌ
> சிரசா தாரயிஷ்யாமி நமே சாந்திர்ப் பவிஷ்யதி.

இராஜலக்ஷணம் பொருந்திய தமையனான ஸ்ரீ ராமபிரானுடைய திருவடிகளை என் தலையில் எதுவரையிலும் தரிக்கமாட்டேனோ? அதுவரையிலும் எனக்குச் சாந்தியானது உண்டாகமாட்டாது. ஸ்ரீ ராமா. அயோத். 98 : 8. இது, ஸ்ரீ பரதாழ்வான் ஸ்ரீ சத்ருக்நாழ்வானிடம் கூறியதானாலும் ஸ்ரீகௌசல்யையார் முதலாயினாரோடும் கூறியதாகவும் கோடல் தகும்.

3. விஷ்ணுதர்மம். 68.

குழி, இங்குப் பிறவி என்னும் பெருங்கடல்; அதற்குச் சரீர நாசம், எனக்கு ஆத்ம நாசம்; அங்கு யானையின் காலை முதலை பற்றியது, இங்கு என்னுடைய நெஞ்சை அன்றோ அருவித் தின்றிடுகிறது; ஆதலால், அதற்கும் இதற்கும் உள்ள வாசி பாராய். கஜேந்திராழ்வானுடைய துக்கத்தைப் போக்கின அதுவும் 'தனக்குப் போக்கியது' என்று இருக்கின்றார் ஆதலின் 'பிரானே' என்கிறார். அதற்கு உதவினமை உண்டு; உமக்கு என்? என்ன, அம்மா - அதற்கும் எனக்கும் ஒவ்வாதோ தேவரீருடைய சம்பந்தம்; நீர் சுவாமி அன்றோ. நீர் யார்? என்ன, அடியேன் - நான் அடியவன். நன்று; இருவருடைய சொரூபத்தையும் பற்றித் 'தவிர ஒண்ணாது' என்று விரும்புகிறீரோ? என்ன, வேண்டுவது - வேண்டிப் பெறத்தக்கது. 'இதுவாகில் வேண்டுவது, இது செய்கிறோம்; இதுவும் இன்னம் எதுவும் வேண்டும்' என்றான். இஃதே - [1] "நின் செம் மா பாத பற்புத் தலை சேர்த்து" என்ற இதுவே என்கிறார். (1)

202.

[2] **இஃதே யான் உன்னைக் கொள்வது எஞ்ஞான்றும்; என்**
மய்தோய் சோதி மணிவண்ண! எந்தாய்!
எய்தா நின் கழல் யான் எய்த, ஞானக்
கய் தா; காலக் கழிவு செய்யேலே.

---

1. "நின் செம் மா பாதபற்புத் தலைசேர்த்து" என்கையாலே அடிமைத் தன்மையே புருஷார்த்தம் என்றும், சொரூபத்தைப் பற்ற விக்கிரஹமே உத்தேஸ்யம் என்றும் தோற்றுகின்றன.

2. "இஃதே" என்றஇடத்து ஆய்தம் யகரத்திற்கு எதுகையாக வந்தது.

> செய்தான் இருவினையின் பயத்தைச் சேரும் சென்று என்றி
> எய்தான் அதன் பயத்தைப் பிறனே துய்த்தல் இயல்பு என்றி
> கொய்தாமந் தாழ்ந்து ஒசிந்த குளிர்பூம் பிண்டிக் கோமானே!
> இஃதேநின்சொல்இயல்பென்று லடியேன்நின்னைத்தொழுதேனே.
> (சிந்தா. 1418.)

> அஃதே அடிகளும் உளரோ என்றாற்கு அருளுமாறு
> இஃதா இருந்தவாறு என்றார்க்கு என்னைப் பெறவல்லார்க்கு
> எய்தா இடருளவே யெங்கெங் கென்றத் திசைநோக்கி
> வெய்தா வடிதொழுது வேந்தன் கோயிற் கெழுந்தானே.
> (சிந்தா. 1884.)

என்ற இடங்களில் யகரமும் ஆய்தமும் தம்முள் ஒத்து எதுகையாய் வந்துள்ளமை அறியலாகும்.

"ஈதே" என்பது, முன் உள்ள பாடம். இப் பாடம் பொருத்தம் இன்று. "இரண்டாம், வழுவா எழுத்தொன்றின் மாதே எதுகை" என்பது இலக்கணம்.

பொ-ரை :—கருமை படிந்த ஒளியையுடைய மாணிக்கம் போன்ற நிறத்தை யுடைய என் எந்தையே! எப்பொழுதும் யான் உன்னிடத்தில் கேட்பது இஃதே யாம்; எஃது? என்னில், தனது முயற்சி கொண்டு அடைய முடியாத உனது திருவடிகளை யான் அடையும்படி ஞான மாகிய கையைக் கொடு; காலம் நீட்டித்தல் செய்யாதே.

வி - கு :—எந்தாய் : விளிப்பெயர். எஞ்ஞான்றும் யான் உன்னைக் கொள்வது இஃதே என மாற்றுக. செய்யேல் - எதிர்மறை முற்று.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1] முதற் பாட்டில், உடலால் அடையும் பேற்றை விரும்பினார்; இப் பாட்டில், மானசமான பேற்றை விரும்புகிறார்.

முதற்பாசுரத்தில்“இஃதே” என்று கூறிஇருந்தும் [2]“ஒரு பொருளையே பலகால் கேட்பின் மற்று ஒன்றிலே தடுமாறிச் செல்லவும் கூடுமாதலின், இதிலே நிலை நின்றமை அறிய வேண்டும்” என்று நினைத்து இதுவும் இன்னம் எதுவும் வேண்டும் என்றான் ஈஸ்வரன்; “**இஃதே**” என்கிறார். “நீர் இதிலே நிலை நின்றீர்” என்னும் இடம் நாம் அறியும்படி யாங்ஙனம்? என்ன, யான் உன்னைக் கொள்வது - [3] இருவருடையவும் தர்மியே இதில் பிரமாணம். அதாவது - [4] ஸ்வாமியான உன் பக்கல் அடியவனை நான் கொள்ளுமது இதுவே. நம்முடைய ஸ்வாமித்வமும் உம்முடைய சேஷத்வமும் கிடக்கச்செய்தே அன்றோ நெடுநாள் இழந்து போந்தீர்? ஆனபின்னர் நமக்கு இதில் ஐயம் தொடர்கின்றது காணும்; [5] இது எத்தனை குளிக்கு நிற்கும்? என்றான் இறைவன். ‘**எஞ்ஞான்றும்**’ **என்கிறார்**; அதாவது - உயிர் உள்ள அளவும் இதுவே எனக்கு வார்த்தை என்றபடி. ஆயின், “இதிலே நிலைநிற்கும்படி உமக்கு இக் கெட்ட நெறியைக் கற்பித்தவர் யாவர்?” என்றான் இறைவன்;

---

1. மேற்பாசுரத்தில் “தலைசேர்த்து” என்றதனைக் கடாக்ஷித்தும், இப் பாசுரத்தில் “ஞானக் கை தா” என்றதனைக் கடாக்ஷித்தும் அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. இவ்விடத்தில், வேதத்திற் கூறப்பட்டுள்ள நசிகேதன் கதையைக் குறிப்பிடுவர் அரும்பதவுரைகாரர்.

3. ‘இருவருடையவும் தர்மியே இதில் பிரமாணம்’ என்றது, சேஷ சேஷித்வ ரூபமே இதில் பிரமாணம் என்றபடி.

4. மேல் வாக்கியத்தை விரிக்கிறார் ‘ஸ்வாமியான உன் பக்கல்’ என்று தொடங்கி. இவ் வாக்கியம் “அம்மா அடியேன்” என்றதனை நோக்கி எழுகின்றது.

5. ‘இது எத்தனை குளிக்கு நிற்கும்?’ என்றது, எத்தனை ஸ்நானத்துக்கு நிற்கும்? என்றபடி. பூசப்படுகின்ற வாசனைத் திரவியங்களின் நறுமணம் நாலு மூன்று ஸ்நானத்துக்குப் போகாது.

இப்படிக் கற்பித்தார் யாவர்? மற்றும் உளரோ? தேவர் வடிவழகே அன்றோ! என்கிறார் மேல்: என் மை தோய் சோதி மணிவண்ண எந்தாய் - மை தோய்ந்து இருந்துள்ள ஒளியை உடைத்தான மணியினுடைய நிறம்போன்ற திருநிறத்தைக் காட்டி என்னை உனக்கே உரியவனாக்கி உன் சேஷித்வத்தை அறிவித்தவனே!

அழகிது, உமக்குச் செய்யவேண்டுவதுதான் என்? என்ன, எய்தா நின் கழல் யான் எய்த - தன் முயற்சியால் ஒருவர்க்கும் அடைய ஒண்ணாத திருவடிகளை "உன்னாலே பேறு" என்று இருக்கிற நான் அடையும்படி செய். அது, மயர்வற மதி நலம் அருளப்பெற்ற அன்றே பெற்றிலீரோ? என்ன, ஞானக் கை தா-இது நினைத்திருக்கும் அளவு போதாது; அது நான் 'பெற்றேன்' என்று [1]தெளியும்படி செய்யவேண்டும். அமிழ்ந்தினார்க்குக் கைகொடுத்தாற் போன்று இருக்கையாலே ஞான லாபத்தை "**ஞானமான கை**" என்று உருவகப்படுத்துகிறார். இங்கே, "ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டு பேர் கை கொடுத்தால், எடுக்குமவர்களுக்கும் எளிதாய், ஏறுமவனுக்கும் எளிதாய் இருக்குமன்றோ; அப்படியேயாகிறது" என்று[2] **எம்பார்க்கு ஆண்டான்** அருளிச்செய்த வார்த்தையை நினைப்பது. இனி, [3]'எய்தா நின் கழல் யான் எய்த' என்று நீர் கூறுவது, பரபக்தி பரஞான பரமபக்திகளையுடையார் பெறும் பேறு அன்றோ? என்ன, ஞானக் கை தா - அவற்றையும் தேவரீரே பிறப்பித்து, தேவர் திருவடிகளைப் பெறும்படி செய்யவேண்டும் என்கிறார் எனலுமாம். அப்படியே செய்கிறோம் என்ன, 'காலக் கழிவு செய்யேல்' என்கிறார்; அதாவது, "ஒல்லை" என்றது தானே அன்றோ எனக்கு எப்போதும் வார்த்தை என்கிறார் என்றபடி. (2)

1. 'தெளியும்படி செய்யவேண்டும்' என்றது, மானஸ சாக்ஷாத்காரம் போராது; பிரத்யக்ஷமாம்படி செய்யவேண்டும் என்றபடி.

2. ஞானத்தைக் கையாகச் சொன்னதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'ஒரு கிணற்றிலே' என்று தொடங்கி. எம்பார், ஆண்டான் திருவடிகளிலே **ஆஸ்ர**யித்த ஒருவரை அறியாமல் பகவச் சம்பந்தத்தைப் பண்ணி, ஆண்டான் திருவடிகளில் **ஆஸ்**ரயித்தவர் என்று அறிந்தபின் பயப்பட அப்போது ஆண்டான் அருளிச்செய்த வார்த்தை என்றபடி.

3. "ஞானக் கை தா" என்பதற்கு இருபொருள் அருளிச்செய்கிறார். ஒன்று, 'நான் பெற்றேன் என்று தெளியும்படி செய்யவேண்டும்' என்று முன்னர்க் கூறியது. மற்றொன்று, 'பரபக்தி பரஞான' என்று தொடங்கி இங்கு அருளிச்செய்வது. முன்னையபொருளில், 'ஞானம்' பிரத்யக்ஷரூப ஞானம்; இரண்டாவது பொருளில், பக்திரூப ஞானம். இவ் இருபொருள்களினும் சங்கதி பேதம் ஒழிய அர்த்த பேதம் இல்லை.

203.

செய்யேல் தீவினை என்று அருள்செய்யும் என்
கய்யார் சக்கரக் கண்ண பிரானே!
அய்யார் கண்டம் அடைக்கிலும் நின் கழல்
எய்யாது ஏத்த அருள்செய் எனக்கே.

பொ-ரை :—கொடிய பாவங்களைச் செய்யாதே என்று திரு அருளைச் செய்கின்ற, கையிலே தரித்திருக்கின்ற சக்கரத்தையுடைய என் கண்ணபிரானே! கோழையானது கழுத்தை அடைக்கின்ற அக் காலத்திலும் நின் திருவடிகளை மறவாமல் ஏத்தும்படி எனக்கு அருள்செய்க.

வி - கு :—கய் - கை, அய் - ஐ என்பன : ஐகாரத்திற்கு அகர யகரங்கள் எதுகை நோக்கிப் போலியாக வந்தன ; "அகரத் திம்பர் யகரப் புள்ளியும், ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். (தொல். எழுத்.) ஐ - கோழை. ஆர் விகுதி இழிவின்கண் வந்தது. அன்றி, ஆர் ஐ என்று மாற்றிப் பொருள் கோடலுமாம். எய்த்தல் - இளைத்தல் ; எய்யாது-இளையாமல்.

ஈடு:—மூன்றாம் பாட்டு. [1] இப் பாசுரத்தில் வாயினாற் பெறும் பேற்றை விரும்புகிறார்.

செய்யேல் தீவினை என்று அருள்செய்யும் என் கையார் சக்கரக் கண்ணபிரானே - [2] "கையும் திருவாழியும் பொருந்தி இருக்கிற இருப்புக் கண்டாயே, நம் பவ்யதை கண்டாயே ; நம்மை நுகர்தல் அழகியதோ? சிற்றின்பங்களிலே ஈடுபாடு உள்ளவனாய்க் கேட்டினை அடைதல் அழகியதோ?" என்று கையில் திருவாழியையும் பவ்யதையையும் காட்டி இவருடைய தீவினைகளைத் தவிர்த்தான். என்றது, சாஸ்திரங்களை உபதேசித்து அன்று என்றபடி. ஐயார் கண்டம் அடைக்கிலும் நின் கழல் எய்யாது ஏத்த - செறிந்த கோழையானது கண்டத்தை அடைக்கிலும் உன்னுடைய எல்லையற்ற இனிமைப் பொருளான திருவடிகளை நான் மாறாமல் ஏத்த வல்லனாம்படி

1. "ஏத்த அருள்செய் எனக்கே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "கையார் சக்கரம்" என்றதனை நோக்கிக் 'கையும் திருவாழியும்' என்ற வாக்கியத்தை அருளிச்செய்கிறார். "கண்ணபிரானே" என்றதனை நோக்கி 'நம் பவ்யதை கண்டாயே' என்கிறார். சிற்றின்பங்களிலே என்றது, "தீவினை" என்றதன்பொருள்.

பண்ணியருளவேண்டும். [1] "துன்பத்தை நீக்கவேண்டும்" என்கிறேன் அல்லேன்; [2] "துன்பம் வந்த காலத்திலும், உன்னை அடைந்திருக்கிற என்னுடைய எண்ணமானது கேட்டை அடையாமல் இருந்ததே ஆனால், அதைக்கொண்டு எப்பொழுதும் பேறுபெற்றவனாக இருக்கிறேன்" என்கிறபடியே, ஏதேனும் [3] உத்கிரமண சமயத்திலும் உன் திருவடிகளை நான் இளையாதே ஏத்தும்படி செய்தருளவேண்டும் என்றபடி. இனி, ஐயார் கண்டம் அடைக்கிலும் என்பதற்கு, [4] உத்கிரமண தசையைப் பார்த்துக் கோழைப் பையலார் வந்து மிடறுபிடிக்கினும் என்று பொருள் கூறலுமாம். அது, ஒரு நல்வினையின் பலம் அன்றோ? என்ன, 'அருள்செய்' என்கிறார், "இவன் பெற்றிடுவான்" என்று இரங்கியருளவேண்டும் என்கிறார் என்றபடி. ஆயின், இது எல்லார்க்கும் செய்ய வேண்டி வாராதோ? என்ன, 'எனக்கே' என்கிறார், உன் முன்னிலையில் வேண்டிக் கொள்ளுகின்ற என் ஒருவனுக்கு செய்தருள வேண்டும் என்றபடி. (3)

204.

எனக்கே ஆட்செய் எக் காலத்தும் என்று, என்
மனக்கே வந்து இடைவீடு இன்றி மன்னித்
தனக்கே யாக எனைக் கொள்ளும் ஈதே;
எனக்கே கண்ணனை யான் கொள் சிறப்பே.

பொ - ரை:—எல்லாக் காலத்திலும் எனக்கே அடிமை செய்வாய் என்று என் மனத்தின்கண் வந்து பிரிதலின்றி நிலைபெற்று நின்று, தனக்கே நான் உரியவனும்படி என்னை ஏற்றுக் கொள்ளுமிதுவே, தனக்குத் தகுதியாகக் கிருஷ்ணனிடத்தில் யான் விரும்பிக் கொள்ளுகின்ற பயனாகும்.

வி - கு:—எனக்கே தனக்கே என்னும் இடத்துள்ள ஏகாரங்கள்: பிரிநிலையின்கண் வந்தன. மனக்கு என்பது "மாடக்கு" என்பது போன்ற விகாரம். என்று வந்து மன்னி கொள்ளும் ஈதே சிறப்பு என முடிக்க. கொள் சிறப்பு: வினைத்தொகை. கண்ணனை: வேற்றுமை மயக்கம்; கண்ணனிடத்தில் என்பது பொருள்.

---

1. "ஐயார் கண்ட மடைக்கிலும்" என்பதற்குப் பாவம், "துன்பத்தை நீக்கவேண்டும்" என்று தொடங்கும் வாக்கியம்.

2. ஜிதந்தா ஸ்தோத்திரம்.

3. உத்கிரமணசமயம் - உயிர் வெளிக்கிளம்புகிற சமயம்: இறக்கும் சமயம் என்றபடி.

4. 'உத்கிரமணதசையைப் பார்த்து' என்று தொடங்கி, ரசோக்தியாகப் பொருள் அருளிச்செய்கிறார்.

ஈடு:—நான்காம் பாட்டு. [1]இத் திருவாய்மொழியில், இவர் அறுதியிட்ட பிராப்பியமாவது-[2] மலர்மாலை, சந்தனம் முதலிய வைகளைப் போன்று "தனக்கேயாக என்னைக் கொள்ளும் ஈதே" என்பதே அன்றோ? அதனை இப்பாசுரத்தில் அருளிச்செய்கிறார். [3] "சர்வேஸ்வரன் மூன்று விதமான சேதநரையும் சொரூபத்திற்குத் தகுதியாக அடிமை கொள்ளுகின்றான்; நாமும் அப்படியே சொரூபத்திற்குத் தகுதியான பேறு பெறுவோமே! என்று அருளிச்செய்கிறார்" என்று இவ்விடத்திலே **எம்பார்** அருளிச்செய்வர். [4] "முக்தரும், நித்தியரும் தாங்களும் ஆனந்தித்து அவனையும் ஆனந்திப்பிப்பார்கள்; பத்தர், தாங்கள் ஆனந்தியாமல் அவனை ஆனந்திப்பிப்பர்; "இன்புறும் இவ் விளையாட்டு உடையான்" அன்றோ. மயர்வு அற மதி நலம் அருளப்பெற்றவர்கள் 'இறைவன் திருவுள்ளமானபடி செய்

---

1. இத்திருவாய்மொழிக்கு நிதானம் இப்பாசுரம் என்னுமிடம் தோன்ற அருளிச்செய்கிறார் 'இத்திருவாய்மொழியில்' என்று தொடங்கி.

2. "பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;" (கலித். 9.)

என்ற தாழிசைகள் ஈண்டு ஒருபுடை ஒப்பு நோக்கலாகும்.

3. சர்வேஶ்வரன் மூன்றுவகைப்பட்ட சேதனரையும் தங்களுக்கு அநுபவத்தின் பயன் இன்றிக்கே தனக்கே உறுப்பாம்படி ஸ்வரூப அநுரூபமாக அடிமைகொள்ளாநின்றான் அன்றோ; நாமும் அப்படியே ஸ்வரூப அநுரூபமான பேறு பெறுவோமே என்று அருளிச்செய்கிறார் என்றபடி.

4. மூன்று வகைப்பட்ட சேதனரும் அத் தலைக்கு உறுப்பாம் படியை விரிக்கிறார் 'முக்தரும் நித்தியரும்' என்று தொடங்கி. முக்தரும், நித்தியரும் "அஹமந்நம் அஹமந்நம்" என்று அவனை ஆனந்திப்பித்து; அவன் உகந்த அவ்வழியாலே "அஹமந்நாத" என்று தாங்களும் ஆனந்திப்பர்கள் என்றபடி. பத்தர், "அறிவில்லாத சம்சாரிகள் தங்களுடைய சுக துக்கங்களுக்குத் தாம் காரணர் அல்லர்; ஈஶ்வரனாலே ஏவப்பட்டே சுவர்க்கத்தையோ நரகத்தையோ அடைகிறார்கள்" என்கிறபடியே, தாங்கள் ஆனந்தியாமல் அவனுக்கு லீலா விஷயமாய்க் கொண்டு அவனை ஆனந்திப்பிப்பர்கள் என்றபடி. பத்தர்கள் ஈஶ்வரனுடைய ஆனந்தத்திற்குக் காரணமாயிருப்பர்கள் என்பதற்குக் காட்டும் மேற்கோள் "இன்புறும் இவ் விளையாட்டு உடையான்" என்பது. இப்பாசுரம் திருவாய். 3. 10: 7. பத்தர் - கட்டுப்பட்டவர்கள்.

கிறான் என்று இராமல், 'தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே' என்று பிரார்த்தித்தல் என்?" என்று **பிள்ளை திருநறையூர் அரையர் எம்பாரைக் கேட்க,** "அது கேளீர்; முன்பு பிரிந்து அன்று, பின்பு பிரிவிற்குக் காரணமுண்டாய் அன்று, இரண்டும் இன்றி இருக்கச்செய்தே, [1] "அகலகில்லேன் அகலகில்லேன்" என்று கூறும்படி செய்வது விஷயத்தின் தன்மையே அன்றோ; அப்படியே, பேற்றிலே உள்ள ருசி பிரார்த்திக்கப் பண்ணுகிறது காணும்" என்று அருளிச்செய்தார்.

[2] எம் மா வீட்டில் எம் மா வீடாய், வைஷ்ணவர்கள் அனைவர்க்கும் செல்வமுமாய், உபநிடதத்தின் இரகசியப் பொருளாய், சர்வேஸ்வரன் பக்கலிலே விரும்பிப் பெறுமதாய், இவ் ஆத்மாவுக்கு வகுத்ததுமான பாரதந்திரியத்தை அவன் பக்கலிலே விரும்புகிறார்.

எனக்கே ஆட்செய் எக்காலத்தும் என்று என் மனக்கே வந்து இடைவீடு இன்றி மன்னி - முதலிலே "**ஆள்செய்**" என்ன வேண்டும்; இதனால், ஸ்வாதந்திரியத்தை வேறுபடுத்தி நீக்குகிறார்; "**எனக்கு ஆள் செய்**" என்னவேண்டும்; இதனால், அடையத் தகுதிஇல்லாத மற்றையோரை வேறுபடுத்தி நீக்குகிறார்; "**எனக்கே ஆள்செய்**" என்னவேண்டும்; இதனால், தனக்கும் அவனுக்கும் பொதுவான நிலையைத் தவிர்க்கிறார். இதுதான் ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி நிற்க வேண்டிய தாதலின், "**எக்காலத்தும்**" என்கிறார். [3] "எனக்காக இதனைச் செய் என்று கூறுக" என்கிறபடியே, "இன்னதைச் செய்" என்று ஏவிக்கொள்ள வேண்டியிருத்தலின் "**என்று**" என்கிறார். இப்படி ஒருவார்த்தை அருளிச் செய்து நெடுங்கைநீட்டாக இருக்கஒண்ணாது என்னுடைய மனத்திலே வந்து புகுதல் வேண்டும் என்பார், "**என் மனக்கே வந்து**"

---

1. திருவாய். 6. 10: 10.

2. 'எம் மா வீட்டில் எம் மா வீடாய்' என்றது முதல் 'விரும்புகிறார்' என்றது முடிய, இப் பாசுரத்திற்கு அவதாரிகை. 'எம் மா வீட்டில் எம் மா வீடாய்' என்றது, திருவாய்மொழி ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு பேற்றினை அறுதியிடுதலைப் பற்றிக் கூறுகின்ற "எம் மா வீடு" பத்துப் பாட்டும் சாரமாயிருக்கும்; அவற்றில் இது நிதானமான பாசுரமாகையாலே சார தமமாயிருக்கும் என்றபடி. 'வைஷ்ணவர்களனைவர்க்கும் செல்வமாய்' என்றது, ஸ்ரீ வைஷ்ணவ அதிகாரிக்கு இப் பாசுரப்பொருள் அவசியம் அபேக்ஷிதம் என்றபடி. 'உபநிடதத்தின் இரகசியப் பொருளாய்' என்றது, கடவல்யுபநிஷத் சித்தமான துவயத்தில் "நமஃ" என்னும் பதத்தின் பொருள் இங்குக் கூறப்படுகின்றது என்றபடி.

3. ஸ்ரீராமா. ஆரண். 15: 7.

என்கிறார். புகுந்தாலும் போக்கு வரத்து உண்டாக ஒண்ணாது, நிலையியற்பொருள் போன்று எழுந்தருளியிருக்க வேண்டும் என்பார் "**இடைவீடின்றி மன்னி**" என்கிறார். இருந்து கொள்ளும் காரியம் என்? எனின், "**தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே**" என்கிறார்; அதாவது - மலர்மாலை; சந்தனம் முதலிய வைகளைப் போன்று கொள்ளவேண்டும். அவை, பிறர்க்கேயாக இருக்கும் பொருள்களாமோ? எனின், அவை, சூடுமவனுக்கும் பூசுமவனுக்கும் உறுப்பாய், மிகுதியைக் கழித்துப் போகடுமித்தனையே அன்றோ. ஆயின், அடிமையாய் உள்ள ஒருவனுக்கு, தான் ஒன்றை விரும்பிக் கேட்பதற்கு இடம் உண்டோ? எனின், இருவர் கலக்குமிடத்துக் கலவியால் பிறக்கும் இனிமையும் இரண்டு தலைக்கும் ஒத்து இருக்குமன்றே? அங்ஙனம் என்னுடைய பிரீதிக்கு நான் சேர்ந்தவனாக ஒண்ணாது என்கிறார் என்றபடி.

இதுகாறும், "அம்மா", "நின்" என்பன போன்று முன்னிலையாகக் கூறி வந்தவர் இப் பாசுரத்தில், 'தனக்கே' என்றும், 'கண்ணனை' என்றும் படர்க்கையாக அருளிச்செய்வதற்குக் காரணம் என்? எனின், "பேற்றினை அறுதியிடும் சமயத்தில் திருமுகத்தைப் பார்க்கில் உறுதி குலையும்" என்று கவிழ்ந்திருந்து கையோலை செய்து கொடுக்கிறார்.

[1]மேல் 'தனக்கேயாக' என்ற பின்புத்தை 'எனக்கே' என்னவேண்டுமன்றே; ஆதலின், '**எனக்கே**' என்கிறார். இனி, புருஷார்த்தம் ஆகைக்காகச் சொல்லுகிறார் எனலுமாம்.[2]விரும்பிப் பெறவேண்டியவன் ஒரு சேதநனே ஆவன். நீர் விரும்புகிற இது செய்வோமாகப் பார்த்தால் எல்லார்க்கும்செய்யவேண்டும் காணும் என்ன, '**யான் கொள்**' என்கிறார்; அதாவது-சொரூப ஞானத்தை நீ பிறப்பிக்க, அதனாலே சொரூப ஞானமுடைய நான் ஒருவனும் பெறும்படி செய்யவேண்டும் என்றபடி. உமக்கும் நம்மால் எப்போதும் செய்யப்போகாது என்ன, '**சிறப்பே**'

---

1. "எனக்கே" என்று அகங்காரம் தோன்றச் சொல்லுதல் குற்றம் அன்றோ? என்னும் வினாவிற்கு விடையாக 'மேல் "தனக்கேயாக" என்றார்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. புருஷார்த்தமானால் "எனக்கு" என்னவேண்டுமோ? என்னும் வினாவிற்கு விடையாக, 'விரும்பிப் பெற வேண்டியவன்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். ஆக, "எனக்கு" என்பதற்குப் பொருள் உனக்கே உறுப்பான எனக்கு என்பதாம்.

என்கிறார்; அதாவது - [1] பலகால் வேண்டா, ஒருகால் அமையும்; அது தன்னிலும், திருவாசலைக் காப்பிட்டு ஒருவர் அறியாதபடி சிறப்பாகச் செய்யவும் அமையும். சிறப்பாவது - ஏற்றம். அதாவது - புருஷார்த்தம். சொரூபத்திற்குத் தக்கதான புருஷார்த்தத்தைக் கொண்டருளவேண்டும் என்றபடி. இனி, சிறப்பாவது - முத்தியும், செல்வமும், நன்றியும். என்றது, நான் உன்பக்கல் கொள்ளும் மோக்ஷம் உனக்கேயாக என்னைக் கொள்ளுமதுவே என்னுதல்; அன்றிக்கே, உன்பக்கல் கொள்ளும் செல்வம் உனக்கேயாக என்னைக்கொள்ளுமதுவே என்னுதல்; அன்றிக்கே, நன்றி உனக்கேயாக என்னைக் கொள்ளுமதுவே என்னுதல் என்றபடி. (4)

205

சிறப்பில் வீடு சுவர்க்கம் நரகம்
இறப்பில் எய்துக, எய்தற்க; யானும்
பிறப்பு இல் பல் பிறவிப் பெருமானை
மறப்பு ஒன்று இன்றி என்றும் மகிழ்வனே.

பொ - ரை :—யானும் சிறப்புடைய மோக்ஷம் என்ன, சுவர்க்கம் என்ன, நரகம் என்ன இவற்றை இறக்கின்ற காலத்தில் பொருந்துக, பொருந்தாதொழிக; பிறப்புஇல்லாத பல பிறவிகளையுடைய பெருமானை மறதி என்பது சிறிதும் இல்லாமல் எப்பொழுதும் அநுபவிப்பேன்.

வி - கு :—சிறப்பில் என்பதில் 'இல்' பெயர்ச்சொல்; சிறப்பிற்கு இடமாயுள்ளது என்பது பொருள். எய்துக, எய்தற்க: வியங்கோள் வினைமுற்று. பின்னது: எதிர்மறை. "பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே" என்ற பரிபாடலின் பகுதி இங்கு மூன்றும் அடியோடு ஒப்பு நோக்குக.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. மேல், மனம் வாக்குக் காயங்கள் இவை மூன்றாலும் உண்டான பேற்றை ஆசைப்பட்டு, இவை மூன்றாலும் உண்டான அநுபவத்தில் உன்னுடைய பிரீதியிலே உள் அடங்கி இருக்குமிதற்கு மேற்பட எனக்காய் இருக்கும் தன்மையைத் தவிர்க்கவேண்டும் என்றார். "இதுதான் சம்சாரிகள் பக்கல் நடையாடுவது ஒன்று அன்று, இவர்தாம் தம்மை யாராக நினைத்து இப் பேற்றை விரும்புகிறார் என்று ஆராய்ந்து

---

1. சிறப்பு என்பது, ஒருகால விசேஷத்திலே ஒருகால் செய்யப்படுவதாதலின், 'பலகால் வேண்டா; ஒருகால் அமையும்' என்கிறார். "கண்ணனை யான்" ஒன்ற ஒருமைக்கு பாவம், 'அதுதன்னிலும்' என்று தொடங்கும் வாக்கியம்.

பார்ப்போம்” என்று [1] நீர் யாராகத் தான் நம்மை இப்படி விரும்புகிறீர் என்ன, “தேகமே ஆத்மா” என்பார்; கேவலம் தேகத்திற்கு இந்திரியம் ஒழிய அநுபவம் இல்லாமையாலே “இந்திரியங்களே ஆத்மா” என்பார்; அந்த இந்திரியங்களும் மனத்தின் துணை இல்லாதபோது பொருள்களை அறியமாட்டாமையாலே “மனமே காண் ஆத்மா” என்பார்; அம் மனந்தனக்கும் பிராணங்கள் துணைபுரிய வேண்டுகையாலே [2] “பிராணங்காண் ஆத்மா” என்பார்; இவை எல்லாம் உண்டாயினும் உறுதிவேண்டுமே அதற்குக் கருவி புத்தி ஆதலின் “புத்தி தத்துவமே காண் ஆத்மா” என்பார்; “இவை இத்தனைக்கும் அவ்வருகாய் ஞானமாகிய குணத்தை உடையதாய், ஞான சொரூபமாய் இருப்பது ஒன்று ஆத்மா” என்பர் ஆகாநிற்பர்கள்; அதில் எனக்கு ஒரு நிர்ப்பந்தம் இல்லை; ஏதேனுமாக, உண்டான பொருள் தேவர்க்கு உறுப்பாமிதுவே வேண்டுவது என்கிறார். [3] “நான் சரீரம் முதலியவற்றுள் ஏதாவதொன்றாகவும், குணத்தினால் யாதேனும் ஒருபடிப்பட்டவனாகவும் இருக்கக் கடவேன்; அவற்றில் எனக்கு ஒரு நிர்ப்பந்தம் இல்லை; ஆனால், இந்த ஆத்மாவானது உன்னுடைய திருவடித்தாமரைகளில் இப்பொழுதே என்னால் சமர்ப்பிக்கப்பட்டது” என்றார் **ஸ்ரீ ஆளவந்தார்.**

சிறப்பில் வீடு சுவர்க்கம் நரகம் இறப்பில் எய்துக எய்தற்க யானும் - நித்திய சம்சாரியாய்ப் போந்தவன் நித்தியசூரிகளுடைய அநுபவத்தைப் பெற்று அநுபவிக்கக் கூடியதாகச் சொல்லுகிற மோக்ஷம், அளவிற்கு உட்பட்ட சுகத்தையுடைய

---

1. ‘நீர் யாராகத் தான்’ என்றது, நித்தியசூரிகளில் ஒருவராக நினைத்தோ? என்றபடி. நித்தியசூரிகளிலே ஒருவனாகவுமாம்; சம்சாரிகளில் ஒருவனாகவுமாம் என்பதனை விரிக்கிறார் ‘“தேகமே ஆத்மா” என்பார்’ என்று தொடங்கி.

2. பிராணன்-பத்துவாயுக்களுள் சுவாசத்தை நிகழ்விப்பது. பத்துவாயுக்களாவன:—பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பன.

3. ஸ்தோத்திர ரத்நம்.

மாதவங்களென் றேதவங்களின் மருவு சீவனென் றொருவ! நீபெரும்
பூதமல்லை இந்திரியமல்லை ஐம்புலனு மல்லை நற் புந்தி அல்லைகாண்
சீதரன் பரந்தாமன் வாமனன் திருவரங்கனுக்கு அடிமை நீ உனக்கு
ஏதும் இல்லை என்றறி யறிந்தபின் ஈதின் மாதவ மில்லை எங்குமே.

என்ற அருமைச் செய்யுள் ஈண்டு நினைவிற்கு வருகின்றது. (திருவரங்கக் கலம். 63.)

சுவர்க்கம்,கலப்புஅற்ற துக்கமேயான நரகம்,இவற்றை உடலை விடுகின்ற காலத்தில் அடைக; அடையா தொழிக. என்றது, சரீரத்திற்கு வேறுபட்டதாய் இருப்பது ஒரு ஆத்மா உண்டாகவுமாம்; சரீரமே ஆத்மா ஆகவுமாம்; இதில் எனக்கு ஒரு நிர்ப்பந்தம் இல்லை என்கை. அதாவது - சரீரத்திற்கு வேறுபட்டதாய் இருப்பது ஒரு பொருள் உண்டானல் அன்றோ சுவர்க்கம் முதலான அனுபவங்கள் உள்ளது? கேவல சரீரம் இங்கே எரிந்து போதலைக் காண்கிறோமே என்றபடி. [1] சொரூப நிர்ணயத்திலே நிர்ப்பந்தம் இன்று, "தாம் யாரேனுமாக அமையும்" என்று இருக்கிறவராதலின், '**யானும்**' என்கிறார். இனி இப் பேற்றைப் பெறுதற்குத் தகுதிஇல்லாதவன் என்பார் '**யானும்**' என்கிறார் எனலுமாம்.

பிறப்புஇல் பல் பிறவிப் பெருமானை-பிறத்தற்குக் காரணமான கர்மம் இல்லாதிருக்கவும், கர்மங்கட்குக் கட்டுப்பட்டவர்களும் பிறவாத பிறவிகளிலே பிறக்கவல்ல, எல்லார்க்கும் தலைவனை. [2] "கர்மம் காரணமான பிறப்பு இல்லாமல் இருக்கிற சர்வேஸ்வரன் இச்சை அடியாகப் பலவிதமாக அவதரிக்கிறான்; அதன் காரணத்தைப் பெரியோர்கள் அறிவார்கள்" என்பது மறைமொழி. மறப்பு ஒன்று இன்றி - அவதாரங்களிலும் அவ் அவதாரங்களில் செய்யப்படும் செயல்களிலும் ஒரு மறதியும் இன்றி. இத் தலையில்உள்ளன எல்லாம் மறக்கலாம், அத் தலையில் உள்ளனவற்றுள் ஒன்றும் நழுவவொண்ணாது ஆதலின், '**மறப்பு ஒன்று இன்றி**' என்கிறார். என்றும் மகிழ்வன் - என்றும் அநுபவிப்பேன். மகிழ்ச்சி, அநுபவம் என்பன ஒரு பொருட் சொற்கள். என்றும் அனுபவிப்பேன் என்கிறார். ஆக, இப் பாசுரத்தால் ஆத்மசொரூபத்தை வெளியிடுகிறார்; '**பெருமான்**' என்கையாலே தம்முடைய சேஷத்வமும், '**மறப்பொன்றின்றி**' என்கையாலே [3] ஞாத்ருத்வமும், '**என்றும்**' என்கை

---

1. தேகத்திற்கு வேறுபட்டதாய் இருப்பதொரு வஸ்து இருந்தால்தான் சரீரம் நீங்கிய பின்னர் புண்ணிய பாபங்களின் பலமான மோக்ஷ சுவர்க்க நரகங்களின் பலன்களை அடைய முடியும்; "கேவலம் தேகமே ஆத்மா" என்றிருந்தால் அது இங்கே எரிக்கப்பட்டு விடுகின்றமையால் சுவர்க்கம் முதலிய பதவிகளை அடைதல் முடியாது; ஆகையால், "எய்துக" என்றது, தேகத்திற்கு வேறுபட்டதாய் இருப்பதொரு ஆத்மாவைச் சொல்லுகிறது: "எய்தற்க" என்றது, தேகமே ஆத்மா என்பதனைச் சொல்லுகிறது என்றபடி.

2. யஜுர்வேதம். ஆ. பிர. 3. 8 : 17.

3. ஞாத்ருத்வம் - அறியுந்தன்மை. நித்யத்வம் - என்றுமுள்ள தன்மை, போக்த்ருத்வம் - நுகர்பவனுகுந்தன்மை.

யாலே, நித்தியத்வமும், 'மகிழ்வு' என்கையாலே போக்த்ருத்வமும் அருளிச்செய்தமை காண்க. (5)

206

மகிழ் கொள் தெய்வம் உலோகம் அலோகம்
மகிழ் கொள் சோதி மலர்ந்த அம்மானே!
மகிழ் கொள் சிந்தை சொல் செய்கை கொண்டு என்றும்
மகிழ்வுற்று உன்னை வணங்க வாராயே.

பொ - ரை:—மகிழ்ச்சியை யுடையவர்களான தேவர்கள், காணப்படுகின்ற அசித்து, கண்களால் காணமுடியாத ஆத்மாக்கள், மகிழ்ச்சியைக் கொள்ளச் செய்கிற ஒளிஉருவமான சந்திர சூரியர்கள் ஆகிய இப் பொருள்களாக விரிந்திருக்கின்ற தலைவனே! மகிழ்ச்சியை யுடைய மனமும் சொல்லும் தொழிலும் ஆகிய இவற்றைக் கொண்டு என்றும் மகிழ்ச்சியுடன் கூடி நான் வணங்கும்படி நீ எழுந்தருளவேண்டும்.

வி-கு:—நான்கு அடிகளிலும் 'மகிழ்கொள்' என வந்தது சொற்பொருட்பின் வருநிலை அணி. லோகம் - காணப்படும் பொருள். அலோகம் - காணப்படாத பொருள். வாராய்: முற்று; உடன்பாட்டில் வந்தது.

ஈடு:— ஆறும் பாட்டு. [1]தேவர்கள் முதலான பொருள்களை உண்டாக்கியது போன்று, என்னையும் உன்னை நுகர்கின்றவனாகும்படியாகச் செய்யவேண்டும் என்கிறார். இனி, தேவர்கள் முதலான பொருள்கட்கு ஒவ்வொரு தன்மை நியதமாம்படி செய்ததுபோன்று, எனக்கு உன்னை அநுபவிக்குமது என்றும் உள்ள தன்மையாகும்படி செய்தருளவேண்டும் என்கிறார் எனலுமாம்.

மகிழ் கொள் தெய்வம் - போகப் பொருள்கள், போக உபகரணங்கள், போகத்தானங்கள் இவற்றாலே மனிதர்களைக் காட்டிலும் ஆனந்தத்தால் மிக்கு இருந்துள்ள தேவர்கள். உலோகம் - [2] லோக்யத இதி - லோக: என்கிறபடியே, கண்

1. இப் பாசுரத்திற்கு இரண்டு அவதாரிகை; முதலது, "மலர்ந்த" என்ற பதத்தைக் கடாக்ஷித்து அருளிச்செய்கிறார். இரண்டாவது, "மகிழ் கொள்" என்ற விசேஷணத்தைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார். 'ஒவ்வொரு தன்மை நியதமாம்படி செய்தது போன்று' என்றது, ஆனந்தத்தையுடையதாதல், இந்திரியங்களால் அறியப்படுதல், இந்திரியங்களால் அறியப்படாமை முதலாயினவற்றை.

2. 'லோக் யத இதி - லோக:' என்றது, பார்க்கப்படுவதாலே லோகம் என்று பெயர் பெற்றது என்றபடி. லோக்யத - பார்க்கப்படுதல்.

முதலான உறுப்புக்களுக்கு விஷயமான அசித்து. அலோகம்- இவற்றை அறிகின்ற கருவிகளால் அறியப்படாமல் சாஸ்திரங் களாலே அறியப்படுகின்ற சித்துப் பொருள். மகிழ் கொள் சோதி - எரிக்குந் தன்மையவான ஒளிப்பொருள்கள். சந்திர சூரியர்கள் எனலுமாம். மலர்ந்த அம்மானே - இப் பொருள் களாக விரிந்துள்ள சர்வேஸ்வரனே! [1] "பல பொருள்களாக விரிகின்றேன்" என்கிறபடியே, தன் மலர்த்தியே ஆகையாலே '**மலர்ந்த**' என்கிறார். சித்து அசித்து இவற்றோடு கூடிய பிர மமே காரணமுமாய்க் காரியமுமாகக் கடவது.

நீர் சொன்னவை எல்லாம் செய்தமை உண்டு, உமக்கு இப் போது செய்யவேண்டுவதுதான் என்? என்ன, [2] மகிழ்கொள் சிந்தை சொல் செய்கைகொண்டு என்றும் மகிழ்வுற்று உன்னை வணங்க வாராய் - என்னுடைய மனமும் உன்னை அநுபவித்து மகிழ்ச்சியை உடைத்தாம்படி செய்யவேண்டும்; என்னுடைய வாக்கின்தொழிலும் அப்படியேயாகச் செய்யவேண்டும்; என் னுடைய செய்கையும் பிரீதியை முன்னிட்டுச் செய்யும் கைங் கரியமாக வேண்டும்; நானும் தனியே அனுபவித்துப் பிரீதியை உடையேனும்படி பண்ணவேண்டும்; என்றும் இப்படி நான் உன்னை அநுபவிக்கும்படி வரவேண்டும். (6)

207.

வாராய்! உன் திருப் பாத மலர்க் கீழ்ப்
போராதே யான் வந்து அடையும்படி;
தாராதாய்! உன்னை என்னுள் வைப்பில் என்றும்
ஆராதாய்! எனக்கு என்றும் எக்காலே.

பொ - ரை :—உனது அழகிய திருவடித்தாமரைகளில் மீளாமல் யான் வந்து அடையும்படி தாராதவனே! உன்னை என்னுடைய மனத் திலே வைக்குமிடத்தில் ஒருநாளும் அமையாதபடி இருக்கின்றவனே! என்னிடத்தில் எல்லாக் காலத்திலும் எல்லா நிலைகளிலும் வரவேண்டும்.

---

1. தைத்திரீய. ஆனந். 6: 3.

2. "மகிழ்கொள்" என்றதனை, "சொல் செய்கை" என்பனவற்றிற் கும் கூட்டுக.

3. முதல் மூன்று பாசுரங்களால் முக்கரணங்களாலும் விரும்பிய பேறு "மகிழ்கொள்" என்றதனுல் பிரீதி பூர்வக மாக வேண்டும் என்னுமதுவும், தாமும் அநுபவித்து மகிழவேண்டும் என்னுமதுவும் இப் பாசுரத்தால் விசேஷ மாகக் கூறப்பட்ட கருத்துக்களாம். மேல் பாசுரத்தைக் காட்டிலும், இப் பாசுரத்துக்கு விசேடம், முக்கரணங்களோடு தாமும் அநுபவித்தல்.

வி - கு :—மலர்க் கீழ் என்பதில் கீழ் ஏழனுருபு. எனக்கு, ஏழாம் வேற்றுமையில் நான்காம் வேற்றுமை மயங்கியது. எக்காலும் வாராய் எனக் கூட்டுக.

ஈடு :—ஏழாம் பாட்டு. [1] தம்முடைய அன்பின் பெருக்காலே எல்லாக் காலமும் என்னை அடிமைகொள்ள வர வேண்டும் என்கிறார்.

உன் திருப் பாத மலர்க் கீழ் பேராதே யான் வந்து அடையும்படி தாராதாய் - உன்னுடைய [2] நிரதிசய போக்கியமான திருவடிகளின் கீழே மீண்டு வருதல் இல்லாத பேற்றை யான் பெறும்படி உன்னை எனக்குத் தாராமல் இருக்கிறவனே! வாராத இன்னாப்பாலே, '**தாராதாய்**' என்று இதனை அவனுக்கு ஒரு நிரூபகமாகச் சொல்லுகிறார். [3] அந்யபரோக்தியிலே பேற்றினை அறுதியிடுகிறார். உன்னை என்னுள் வைப்பில் என்றும் ஆராதாய் - நிரதிசய போக்கியனான உன்னை வெளியில் காணாதபோது தரிக்கமாட்டாத என்னுடைய மனத்திலே உன்னைக் கொண்டு புகுந்து வைக்குமிடத்தில் ஒரு நாளும் அமையாதபடி இருக்கிறவனே! இதனால், தர நினையாவிட்டால் நெஞ்சிலே பிரகாசிக்கின்ற அதனைத் தவிர்க்கவுமாம் அன்றே; அகவாய் பெரிய திருநாளாய்ச் செல்லாநின்றதே! என்கிறார். எனக்கு என்றும் எக்காலே - என்னிடத்தில் எல்லாக் காலத்திலும் எல்லா நிலைகளிலும் வரவேண்டும்.

உன் திருப் பாத மலர்க் கீழ்ப் பேராதே யான் வந்து அடையும்படி வாராய் என்று கூட்டலுமாம். (7)

208.

எக்காலத்து எந்தையாய் என்னுள் மன்னில், மற்று
எக்காலத்திலும் யாதொன்றும் வேண்டேன் ;
மிக்கார் வேத விமலர் விழுங்கும் என்
அக்காரக் கனியே ! உன்னை யானே.

பொ - ரை :—மேம்பட்டவர்களாய் வேதங்களை அறிந்து குற்றம் அற்றவர்களாய் உள்ள பெரியோர்கள் நுகர்கின்ற, என்னுடைய, வெல்

---

1. மேல், "நின் செம் மா பாதபற்புத் தலைசேர்த்து" என்றவர், இங்கும் "வாராய்" என்கிறது என்? என்னும் வினாவிற்கு விடையாகத் 'தம்முடைய அன்பின் பெருக்காலே' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். 'அன்பின் பெருக்காலே' என்றது, புறம்பே காணுதலை விரும்பி என்றபடி.

2. நிரதிசயம் - தனக்குமேல் வேறுஒன்றில்லாதது. போக்யம் - இனிய பொருள்.

3. அந்யபரோக்தி - வேறொன்றிலே நோக்குடைய சொல்.

லப்பாகு தோய்ந்த கனியே! நீ எக்காலத்திலும் எனக்குத் தந்தையாய் என் மனத்தில் நிலைபெற்று இருப்பாயே யானால், யான் உன்னிடத்தில் எக்காலத்திலும் வேறு ஒரு பொருளையும் விரும்பமாட்டேன் என்கிறார்.

வி - கு :—கனியே ! எக்காலத்திலும் எந்தையாகி என்னுள் மன்னில் யான் உன்னை எக்காலத்திலும் மற்று யாதொன்றும் வேண்டேன் எனக் கூட்டிப் பொருள் காண்க. உன்னை - உன்னிடத்தில் ; ஏழாம் வேற்றுமையில் இரண்டாம் வேற்றுமை வந்தது, மயக்கம்.

ஈடு :—எட்டாம் பாட்டு. [1] மிகச் சிறிய காலமாகிலும் சேஷியாய் என்னோடே கலக்கப் பெறில், பின்னை ஒருகாலமும் இதுவும் வேண்டா என்று, தமக்கு அடிமை செய்கையில் உண்டான விடாயின் மிகுதியை அருளிச்செய்கிறார்.

எக்காலத்து எந்தையாய் என்னுள் மன்னில்-இனிக் கூறு இட ஒண்ணாதபடி சிறு கூறான மிகச் சிறிய காலத்திலும், நீ ஸ்வாமியான முறை தப்பாதபடி என் மனத்திலே வந்து புகுரப் பெறில். மற்று எக் காலத்திலும் யாது ஒன்றும் வேண்டேன் - [2] இஃது ஒழிந்த எல்லாக் காலத்திலும் பின்னை இது தானும் வேண்டேன். ஆயின், அப்படி ஒருகால் அநுபவிப்பித்தால் பின்னர் விரும்பாரோ? எனின், குளிர்சுரத்தால் பீடிக்கப்பட்டவர்கள் 'ஒருகால் நாக்கு நனைக்க' என்று கூறுமாறு போன்று கூறுகின்றார். ஆயின், 'கணநேரம் அநுபவிக்க அமையும்' என்னும்படியான பொருள் உளதோ? எனின், 'மிக்கார் வேத விமலர் விழுங்கும் என் அக்காரக் கனியே' அன்றோ என்கிறார் ; அதாவது, பகவானுடைய அநுபவத்தில் மிக்காராய், "எல்லாவற்றையும் அறிந்தவர்கள், பழையராய் இருந்தும் புதியராகவே காணப்படுகின்றவர்கள்" என்கிறபடியே, வேதத்திலே குற்றமற்றவர்களாகச் சொல்லப்பட்டுள்ள நித்தியசூரிகள் அநுபவிக்கின்ற அக்காரம் போலவும், கனி போலவும் உள்ள உன்னுடைய இனிமையின் மிகுதியை எனக்குப் பிரகாசிப்பித்தவனே! அன்றோ என்கிறார்

---

1. ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹத்தைப் பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. இஃது ஒழிந்த - மிகச் சிறிய காலமான இக்காலம் ஒழிந்த. "யாது ஒன்றும்" என்றதற்குப் பாவம், 'பின்னை இதுதானும் வேண்டேன்' என்பது. 'பின்னை இதுதானும் வேண்டேன்' என்றது, மிகச் சிறிய கால அநுபவமும் வேண்டேன் என்றபடி.

என்றபடி. இனி, அக்காரக் கனியே என்பதற்கு, [1] அக்காரம் என்னும் மரமானது [2] கோட்புக்குப் பழுத்த பழம் போன்று நிரதிசயபோக்கியன் ஆனவனே என்று பொருள் கோடலுமாம். 'அக்காரக்கனியே' என்ற இது, நித்திய சூரிகளுக்கு எல்லா விதமான இனியபொருள்களும் தானேயாயிருக்கிறான் என்னுமிடத்துக்கு உபலக்ஷணம். உன்னை நானே - இப்படி எல்லை இல்லாத இனியனை உன்னை, உன்சுவடு அறிந்த நான், எக்காலத்து எந்தையாய் என்னுள் மன்னில், மற்று எக்காலத்திலும் யாது ஒன்றும் வேண்டேன் என்கிறார் என்று இங்ஙனம் ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்வர்.

இப் பொருளை, எம்பெருமானார் கேட்டருளி, "இது பொருள் அழகியது; இவ் ஆழ்வாருடைய தன்மைக்குச் சேராது, [3]பெறினும் பெறுதொழியினும் சிறுகக் கோலமாட்டார்; இங்ஙனே ஆக வேண்டும்" என்று அருளிச்செய்வர். "எல்லாக் காலத்திலும் எனக்குச் சேஷியான நீ, நான் அடிமையான முறை தப்பாமல் வந்து என் மனத்திலே புகுரப்பெறில், இக் காலம் எல்லாவற்றிலும் பின்னை இஃது ஒழிந்த மற்று ஒன்றையும் யான் வேண்டேன்" என்கிறார் என்பது. (8)

---

1. அக்காரம் - மாமரம்.

2. கோட்புகுதல்-மரங்கள் பயன்கொள்ளும் பருவத்தனவாதல்; "கோட்புகுகையாவது, பால சூதாதிகள் அபிநவமாகப் பலவத்துக்களாகை" என்பது ஈடு. (5. 10 : 3.)

3. உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.
என்றார் திருவள்ளுவர். (குறள். 596.)

4. ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹத்திலே "எக்காலத்திலும்" என்பதற்கு, மிகச்சிறிய காலத்திலும் என்பதும், "யாதொன்றும் வேண்டேன்" என்பதற்கு பின்னை இது தானும் வேண்டேன் என்பதும் பொருள். எம்பெருமானார் நிர்வாஹத்தில், "எக்காலத்திலும்" என்பதற்கு எல்லாக்காலத்திலும் என்பதும், "யாதொன்றும் வேண்டேன்" என்பதற்கு, பகவத் வியதிரிக்த புருஷார்த்தங்கள் ஒன்றும் வேண்டேன் என்பதும் பொருள். மிக்கார் வேதவிமலர் விழுங்கும் என் அக்காரக்கனியே! எக்காலத்து எந்தையாய் என்னுள் மன்னில் எக்காலத்திலும் உன்னை யான் யாது ஒன்றும் வேண்டேன் என்பது எம்பெருமானார் நிர்வாகத்தில் அந்வயம்.

209.

யானே என்னை அறிய கிலாதே,
யானே என்தனதே என்று இருந்தேன்;
யானே நீ; என்னுடைமையும் நீயே;
வானே ஏத்தும் எம் வானவர் ஏறே!

பொ - ரை :—என்னை அறியாமல் கேட்டினை விளைத்துக்கொண்டவன் யானே, 'நீயும் உன்னுடைமையும்' என்று இருத்தல் அன்றி, நானும் என்னுடைமையும் என்று வகுத்துக்கொண்டு இருந்தேன்; யானும் நீயே யாவாய், என்னுடைமையும் நீயே யாவாய், நித்தியசூரிகள் துதிக்கின்ற என் நித்தியசூரிகள் தலைவனே!

வி - கு :—அறியகிலாது இருந்தேன் என்க. வான்: இடவாகு பெயர். ஏத்தும் ஏறு என்க. இனி, ஏகாரத்தை அசைநிலையாகக் கொண்டு, யான் என்னை அறியகிலாது யானே என்தனதே என்றிருந்தேன் எனக் கூட்டலுமாம்.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [1] "மிக்கார் வேத விமலர் விழுங்கும்" என்று நித்தியசூரிகள் என்றும் நுகரும்படியைக் கூறினார்; அவர்களோடு ஒத்த சம்பந்தம் தமக்கு உண்டாயிருக்க, இழந்திருக்கிற படியையும் கருதிக் கேட்டினை அடைந்தேன் என்கிறார்.

யானே - அவன் எதிர் சூழல் புக்குத் திரியாநிற்க, நானே அன்றோ கேட்டினைச் சூழ்த்துக்கொண்டேன் என்கிறார். என் இழவு பகவானுடைய செயலால் வந்தது அன்று என்பார் '**யானே**' எனப் பிரிநிலை ஏகாரம் கொடுத்து ஓதுகிறார். என்னை அறியகிலாதே - அரசகுமரன் வேடன் கையிலே அகப்பட்டுத் தன்னை வேடனாக நினைக்குமாறு போன்று, சர்வேஸ்வரனுக்கு உறுப்பாக இருக்கிற என்னை அறியாமல். யானே என் தனதே என்று இருந்தேன் - [2] "அவனும் அவன் உடைமையும்" என்று இருக்கை தவிர்ந்து, நானும் என் உடைமையும் என்று வகுத்துக் கொண்டு போந்தேன். இப்படி நெடுநாள் போருகிற இடத்தில் ஒருநாள் அநுதாபம் பிறத்தலும் கூடும் அன்றே, அதுவும் இன்றி, செய்யவேண்டுமவற்றை எல்லாம் செய்து முடித்தவனாய் நிர்ப்பரனாய் இருந்தேன் என்பார் '**இருந்தேன்**'

1. பேற்றினை அறுதியிடுகின்ற இச்சமயத்தில் "யான் எனது என்னும் செருக்கினால் கெட்டுப் போனேன்" என்று அருளிச்செய்கைக்குக் காரணம் என்னை? என்னும் வினாவிற்கு விடையாக "மிக்கார் வேத விமலர்" என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. இங்கு ஏகாரம் தேற்றப்பொருள்; பிரிநிலையுமாம்.

என்கிருர். [1]"தீவினையேன் வாளா இருந்தேன்" என்ருர் பெரிய திருவந்தாதியில். [2]"நான் எல்லாத் தொண்டுகளையும் செய்வேன்" என்கைக்குச் சம்பந்தம் உண்டாய் இருக்க, ஒரு காரியமும் இல்லாதாரைப் போன்று கையொழிந்திருந்தேன்; "முடிந்தேன்" என்றது போன்று இருக்கின்றது; ஒரு நாளை இழவே போந்ததாக இருக்க, அநாதிகாலம் இழந்து போந்தேன் என்பார் '**ஒழிந்தேன்**' என்கிருர்.

பொருளின் உண்மை அங்ஙனம் அன்ருே? என்ன, யானே நீ - யானும் நீயே. [3]முக்தர்கள், [4]"நான் மநு ஆகிறேன், நான் சூரியனும் ஆகிறேன்" என்று நிற்பர்; சம்சாரத்தில் தெளிவுடையார், [5]"எல்லாப் பொருள்களும் என்னிடத்தில் இருந்து உண்டாயின, எல்லாப் பொருள்களும் நானே" என்று நிற்பர்; இங்ஙனம் கூறுகைக்குக் காரணம் என்னை? எனின், "அஹம் பிரஹ்மஅஸ்மி - நான் ராஜபுத்திரன்" என்னுமாறு போன்று, "நான் பிரஹ்மம்" என்னலாம்படி அன்ருே [6]சம்பந்தம் இருக்கும்படி. ஆயின், [7]"அப்பொருள் வாசுதேவன்" என்றதோ? எனின், அது, வாசுதேவனுக்குச் சரீரம் என்றபடி. என் உடைமையும் நீயே - [8]"இவர்கள் எவனுக்கு உடையவர்களோ அவனுக்கு இவர்கள் அந்தச் செல்வம்" என்கிறபடியே, '**என் உடைமையும் நீயே**' என்கிருர். இது எங்கே நிகழக் கண்டு சொல்லும் வார்த்தை? என்ன, நித்தியசூரிகள் முழுதும் இப்படி அன்ருே உன்னை அநுபவிப்பது என்கிருர் மேல்: வானோர் ஏத்தும் எம் வானவர் ஏறே-அவர்கள் தங்கள் அடிமைத் தன்மைக்குத் தகுதியாக அடிமை செய்யாநிற்க, இவனும் தன்

---

1. பெரிய திருவந். 82.

2. ஸ்ரீராமா. அயோத். 31 : 25.

3. "யானே நீ" என்றது, சரீர ஆத்ம பாவ நிபந்தனம் என்று திருவுள்ளம்பற்றி, இங்ஙனம் ஐக்கியமாகச் சொன்ன பேர் உளரோ? என்னும் வினவிற்கு விடையாக 'முக்தர்கள்' என்று தொடங்கி அருளிச்செய்கிருர்.

4. பிருகதாரண்ய உபநிடதம். 3.

5. ஸ்ரீவிஷ்ணுபுரா. 1. 19 : 85.

6. சம்பந்தமாவது, பிரகார பிரகாரி பாவ, காரிய காரண பாவ சம்பந்தங்கள்.

7. ஸ்ரீ விஷ்ணுபுரா. 2. 12 : 15.

8. மஹாபாரதம். உத்யோகபர். திருதராஷ்டிரனைப் பார்த்து விதுரன் கூறியது இது.

சேஷித்வத்தால் வந்த உயர்வு தோற்ற இருக்கும் இருப்பு. எனக்கும் அவர்களோடு ஒத்த சம்பந்தம் உண்டாயிருக்க, இழந்து கேட்டினை அடைந்தேன் என்பார் **'எம் வானவர் ஏறே'** என்கிறார். 'வான்' என்பதனைக் "கட்டில் கத்துகிறது" என்பது போல ஆகுபெயராகக் கொள்க. (9)

210.

ஏறேல் ஏழும் வென்று, ஏர் கொள் இலங்கையை
நீறே செய்த நெடுஞ் சுடர்ச் சோதி!
தேறேல் என்னை; உன் பொன்னடி சேர்த்து ஒல்லை;
வேறே போக எஞ்ஞான்றும் விடலே.

பொ - ரை :—இடபங்கள் ஏழனையும் வென்று, அழகுகொண்ட இலங்கையை நீறே ஆகும்படி செய்த மிக்க ஒளியை யுடைய பரஞ் சோதி! என்னை நம்பாதே; விரைவில் உனது அழகிய திருவடிகளில் சேர்ப்பாய்; உன்னை விட்டுத் தனியே போகும்படி எப்பொழுதும் விடாதே.

வி - கு :—ஏறேல் என்பதில் ஏல் அசைநிலை. இனி, ஏல் ஏறு என மாற்றி, எதிர்த்து நின்ற இடபம் எனக் கோடலுமாம். நீறு - சாம்பல், புழுதி. விடல்: அல் விகுதி, வியங்கோள் எதிர்மறையின் கண் வந்தது; "பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்" என்புழிப் போன்று கொள்க. வென்று செய்த சோதி என முடிக்க.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1]"யானே என் தனதே" என்று நீர் வருந்தும்படி செய்தோமாகில் உமக்குச் செய்யவேண்டுவது ஒன்று உண்டோ? நீர் இங்ஙனம் கிடந்து படுகிறது எதற்காக? என்ன, இதற்காக என்கிறார்.

ஏறேல் ஏழும் வென்று - நப்பின்னைப் பிராட்டியினுடைய சேர்க்கைக்குத் தடையாக இருந்த இடபங்கள் ஏழனையும் வென்று. ஏர் கொள் இலங்கையை - காட்சிக்கு இனியதாய்க் கட்டுடைத்தான இலங்கையை. [2]"இது என்ன வீரியம்! இது என்ன தைரியம்! இராக்ஷச அரசனை இராவணனுக்கு எல்லா இலக்கணங்களும் பொருந்தி இருப்பது ஆச்சரியம்" என்றும்,

1. "'யானே என்தனதே' என்று நீர் வருந்தும்படி செய்தோமாகில் உமக்குச் செய்யவேண்டுவது ஒன்றுண்டோ?" என்றது, முன் நிகழ்ந்த நிகழ்ச்சியை நினைத்து அநுதபிக்கும்படி செய்த இதற்கு மேற்பட ஒரு பேறு உமக்குச் செய்யத்தக்கது இன்றே? என்றபடி. 'நீர் இங்ஙனம் கிடந்து படுகிறது எதற்காக? என்ன' என்றது, "உன் திருப் பாத மலர்க் கீழ்ப், போராதே யான் வந்து அடையும்படி, தாராதாய்" என்று இங்ஙனே படுகிறது எதற்காக? என்றபடி. "உன் பொன்னடி சேர்த்து ஒல்லை" என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'இதற்காக' என்கிறார்.

2. ஸ்ரீராமா. சுந். 49 : 17.

[1] “இராவணனும் பெண்களுமாய் இருக்கிற இருப்பைக் கண்ட வாறே, பையல், தானும் பெண்களுமாய் இருக்கிற இருப்பைப் பெருமாளும் பிராட்டியுமாய் இருக்கச் சம்மதித்தானாகில், இந்த ஐஸ்வரியம் குலையாதிருக்குமே! என்றும் நினைத்தான்; ‘பகைவர்கட்கும் நன்மை வேண்டும்’ என்று இருக்கும் புத்தியையுடைய அநுமான்; தானும் ஒரு கூட்டத்துக்குத் தலைவன் ஆகையாலே இங்ஙனே இருப்பது ஒரு புத்தி பிறந்தது” என்றும் கூறப்படுகின்றபடியே, திருவடி மதிக்கும்படியான இலங்கை ஆதலின் ‘**ஏர் கொள் இலங்கை**’ என்கிறார். நீறே செய்த - [2] பிராட்டி அருளிச்செய்தபடியே சாம்பலே தங்கி இருக்கும்படி செய்த. நெடும் சுடர்ச் சோதி - இராவணனைச் சேனைகளோடே கொன்று கையும் வில்லுமான வீரஸ்ரீ யோடே நின்ற நிலை. இதனால், அவ் விரோதிகளைப் போக்கியது போன்று என்னுடைய விரோதிகளையும் போக்கவேண்டும் என்கிறார்.

தேறேல் என்னை-நப்பின்னைப் பிராட்டியினுடைய சேர்க்கையில் தடையை நீக்க அமையும்; ஸ்ரீ ஜனகராஜன் திருமகள் அளவில் அவளைப் பிரித்த இராவணனை முடிக்க அமையும்; அவர்கள் பண்டே உனக்காய் இருக்கையாலே, அவர்களை உனக்கு ஆக்க வேண்டா; அப்படியே “இவன் விரோதிகளைப் போக்கி நமக்கு ஆக்கினோமாகில் இனி என்?” என்று இருக்க ஒண்ணாதே என்னளவில்! என்பார் ‘**என்னைத் தேறேல்**’ என்கிறார். ‘**தேறேன்**’ என்ற பாடமும் உண்டு; அப் பாடத்துக்குத் தெளியேன் என்றாவது, தரியேன் என்றாவது பொருள் கொள்க. ஆயின், செய்ய வேண்டுவது என்? என்ன, ஒல்லை உன் பொன்அடி சேர்த்து - “நின் செம் மா பாத பற்புத் தலை சேர்த்து” என்று தொடங்கின அர்த்தத்தை முடிக்கிறார். கல்லுக்கும் அறிவு கொடுக்க வல்ல அடி ஆதலின் ‘**பொன்அடி**’ என்கிறார். நான் இசைந்தபோதே சடக்கெனத் திருவடிகளில் திவ்ய ரேகையைப் போன்று சேர்த்தருள வேண்டும் என்பார் ‘**சேர்த்து ஒல்லை**’ என்கிறார். வேறே போக எஞ்ஞான்றும் விடல் - “இவனுக்கு எல்லா உயர்வுகளும் செய்து தந்தோம்; ஆகில், இனி என்?” என்ன ஒண்ணாது; நீ எல்லா உயர்த்திகளும் செய்து கொடுத்தாலும் நான் [3] எல்லாத் தாழ்வுகளையும்

1. ஸ்ரீராமா. சுந். 9: 12.
2. ‘பிராட்டி அருளிச்செய்தபடியே’ என்றது, “ஸமஸானம் சத்ருசம் பவேத்” என்ற சுலோகத்தைத் திருவுள்ளம்பற்றி.
3. ‘எல்லாத் தாழ்வுகளையும்’ என்றது, விஷயாந்தரங்களை விரும்புதல் முதலானவை.

செய்துகொள்வேன்; என்னை [1] என் கையில் காட்டித் தாரா தொழிய வேண்டும் என்கிறார். (10)

211.

விடலில் சக்கரத்து அண்ணலை மேவல்
விடலில் வண் குருகூர்ச் சடகோபன் சொல்
கெடலில் ஆயிரத்துள் இவை பத்தும்
கெடலில் வீடுசெய்யும் கிளர்வார்க்கே.

பொ - ரை:—நீக்குதல் இல்லாத சக்கரத்தையுடைய பெருமையிற் சிறந்த இறைவனைப் பொருந்தி விடுதல் இல்லாத வளப்பம் பொருந்திய திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபரால் சொல்லப்பட்ட கெடுதல் இல்லாத ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப் பத்துப் பாசுரங்களையும் முயற்சியோடு கற்கின்றவர்கட்கு இவையே அழிதல் இல்லாத மோக்ஷ உலகத்தைக் கொடுக்கும் என்றபடி.

ஈடு:—முடிவில், [2] இத் திருவாய்மொழியைக் கற்க வல்லவர்கள் இதிற்சொன்ன பேற்றினைப் பெறுவர் என்கிறார்.

[3] "'நாம் விடுகிறோம்' என்று ஐயம் கொள்வது என்? நாம் ஒருவரையும் விடோம் காணும்" என்று கையில் திருவாழியைக் காட்டினான்; **'விடல் இல் சக்கரத்து அண்ணலை'** என்கிறார். அதாவது - ஒருநாளும் விடாத திருவாழியைக் கையிலே யுடைய சர்வேஸ்வரனை என்கிறார். மேவல் விடல் இல் வண் குருகூர்ச் சடகோபன் சொல் - அவன் தன்மையாலே கிட்டி அவனைப் பிரியில் தரியாதபடி பரமஉதாரரான ஆழ்வார் அருளிச்செய்த. வண்மையாவது-இவ் அநுபவத்துக்குப் பாசுரமிட்டு உபகரித்த உபகாரம். கெடல் இல் ஆயிரத்துள் இவை பத்தும் - இவ் ஆத்மாவுக்குக் கேட்டின் வாசனையும் வாராதபடி நன்மையை ஆராய்ந்து அருளிச்செய்த ஆயிரத்துள் இப் பத்தும். [4] கிளர்

1. 'என் கையில் காட்டித் தாராது' என்றது, "உபாயாந்தரங்களை அனுஷ்டித்து வாரும்" என்று கூறாது என்றபடி.

2. "கிளர்வார்க்குக் கெடலில் வீடு செய்யும்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'இதிற் சொன்ன பேற்றினை' என்றது, "தனக்கே யாக எனைக்கொள்ளு மீதே" என்ற பேற்றினை.

3. "வேறே போக எஞ்ஞான்றும் விடல்" என்ற பின்னர் "விடலில் சக்கரத் தண்ணலை" என்று பிரயோகிக்கின்றவருடைய மனோபாவத்தை 'நாம் விடோம்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். அதாவது, திருவாழியை விடிலன்றோ உம்மை விடலாவது என்றபடி.

4. "கிளர்வார்க்கு" என்றதனால், '"வரில் போகடேன், கெடில் தேடேன்" என்றிருக்கை யன்றி நம்பிக்கை யுடையவர்க்கு' என்று அருளிச்செய்கிறார்.

வார்க்குக் கெடல் இல் வீடு செய்யும் - "வரில்போகடேன், கெடில்தேடேன்" என்று இருக்கை அன்றி, நம்பிக்கை யுடைய வர்க்குக் கேட்டின் வாசனையும் இல்லாததாய் அகங்கார மம காரங்களை உடைத்து அன்றிக்கே, "தனக்கே யாக வேணும்" என்று இவர் பிரார்த்தித்த படியே இவ் ஆத்மாவினுடைய சொரூபத்திற்குத் தகுதியான பேற்றினைச் செய்துகொடுக் கும். (11)

முதற்பாட்டில், உடல் சம்பந்தமான பேற்றினை விரும்பி ஞர்; இரண்டாம் பாட்டில், மனத்தின் சம்பந்தமான பேற்றினை விரும்பினர்; மூன்றும் பாட்டில், வாசிகமான பேற்றினை விரும் பினர்; நான்காம் பாட்டில், சொரூபத்திற்குத் தகுதியான பேற் றினை அறுதியிட்டார்; ஐந்தாம் பாட்டில், நீர் யாராய் இப் பேற்றினை விரும்பினீர் என்ன, நான் யாராயினுமாக; உன்னை அநுபவித்து மகிழும்படி செய்தருளவேண்டும் என்றார்; ஆறும் பாட்டில், முக்கரணங்களாலும் உன்னைப் பிரீதி முன்னாக அநுப விக்கச் செய்தருளவேண்டும் என்றார்; ஏழாம் பாட்டில், அப் படிச் சடக்கெனச் செய்யாமையாலே இன்னாதானர்; எட்டாம் பாட்டில், சொரூபத்திற்குத் தகுதியாக நீ கணநேரம் என் னோடே அநுபவிக்கப் பெறில் பின்புள்ள காலமெல்லாம் வேண் டேன் என்றார்; ஒன்பதாம் பாட்டில், உன்னை அநுபவிக்க இட்டுப் பிறந்து வைத்து அது கிடையாதபடி நானே கேட்டி னைச் சூழ்த்துக் கொண்டேன் என்றார்; பத்தாம் பாட்டில், "ஞான விசேடத்தைப் பண்ணித் தந்தோம் அன்றே" என்று, என்னை ஒருநாளும் என்கையில் காட்டித் தாரா தொழியவேண் டும் என்றார்; முடிவில், இது கற்றார்க்குப் பலம் சொல்லித் தலைக்கட்டினர்.

திருவாய்மொழி நூற்றந்தாதி

எம்மா வீடும் வேண்டா என் தனக்கு உன் தாளிணையே
அம்மா அமையுமென ஆய்ந்துரைத்த—நம்முடைய
வாழ்முதலாம் மாறன் மலர்த் தாளிணை சூடிக்
கீழ்மை அற்று நெஞ்சே கிளர்.

ஆழ்வார் எம்பெருமானர் சீயர் திருவடிகளே அரண்.

—:o:—

பத்தாந் திருவாய்மொழி—“ கிளரொளி ”

முன்னுரை

ஈடு :—[1] மேல் “எம் மா வீடு” என்னும் திருவாய்மொழியிலே அறுதியிட்ட பேற்றினைப் பெறுகைக்குத் திருமலையை அடைகிறார்” என்று **ஸ்ரீ ஆளவந்தார்** அருளிச்செய்தாராகத் **திருமாலையாண்டான்** பணிப்பர். **எம்பெருமானார்** “அங்ஙனம் அன்று; இவர் மேல் திருவாய்மொழியிலே பாட்டுக்கள் தோறும் ‘ஒல்லை’, ‘ஒல்லை’ என்றும், ‘காலக் கழிவுசெய்யேல்’ என்றும் விரையப் புக்கவாறே, [2]‘நமக்கும் அறிவித்து, [3]நாமும் இவர் காரியம் செய்வதாக அறுதியிட்டால், அதனைக் கொண்டு ‘சரீரத்தின் முடிவில் பேறு தப்பாது’ என்று அறுதியிட்டு வாளா இருக்கலாய் இருக்க, இவர் இப்படி விரைவது இச் சரீரத்தோடே இவரை நாம் அடிமை கொள்ளவேண்டும் என்று போலே இருந்தது; இனி, இவர்க்கு நாம் நினைத்தபடி பரிமாறுகைக்கு ஏகாந்தமான இடம் ஏதோ’ என்று ஞாலத்தூடே நடந்து உழக்கிப் பார்த்து வரச்செய்தே ‘இவ்விடம் சால ஏகாந்தத் தலமாக இருந்தது’ என்று திருமலையிலே சந்நிதி பண்ணியருளி, ‘நாம் உமக்கு முகந்தருகைக்காக வந்து நின்றோம்; நீர் இங்கே வந்து நினைத்த வகைகள் எல்லாம் பரிமாறி அநுபவியும்’ என்று தெற்குத் திருமலையிலே நிற்கிற நிலையைக் காட்டிக் கொடுக்க, இவரும் அதனை அநுசந்தித்துப் பகவான் பிராப்பியனானால் அவன் வாழும் தேசமும் பிராப்பியமாகக் கூடிய தாதலின், திருமலையோடு, அதனோடு சேர்ந்த அயன்மலையோடு, புறமலையோடு, திருப்பதியோடு, போம் வழியோடு, ‘போகக்கடவோம்’ என்று துணியும் துணிவோடு வேற்றுமை அறப் பிராப்பியாந்தர்க்கதமாய் அநுபவித்து **இனியர் ஆகிறார்**” என்று அருளிச்செய்வர்.

---

1. இத் திருவாய்மொழியில் வருகின்ற “சார்வது சதிரே”, “அடைவது திறமே” என்பன போன்ற பாசுரங்களைத் திருவுள்ளம்பற்றிப் பிராபக பரமாக ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹம். “எழுவது பயனே” என்பது போன்ற பாசுரங்களைத் திருவுள்ளம் பற்றிப் பிராப்பிய பரமாக எம்பெருமானார் நிர்வாஹம்.

2. ‘நமக்கும் அறிவித்து’ என்றது, மேல் திருவாய்மொழியில் “தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே” என்பது போன்று வருகின்றவைகளைத் திருவுள்ளம்பற்றி.

3. “விடலில் சக்கரத்து அண்ணலை” என்ற பாசுரப் பகுதியை நோக்கி ‘நாமும் இவர் காரியம் செய்வதாக அறுதியிட்டால்’ என்கிறார்.

212.

கிளர் ஒளி இளமை கெடுவதன் முன்னம்
வளர் ஒளி மாயோன் மருவிய கோயில்,
வளர் இளம் பொழில் சூழ் மாலிருஞ்சோலை
[1]தளர்விலர் ஆகில் சார்வது சதிரே.

பொ-ரை :—பொங்கி வருகிற ஒளியையுடைய இளமைப் பருவம் கெடுவதற்கு முன்னே, வளர்கின்ற ஒளியோடு கூடிய மாயவன் எழுந்தருளியிருக்கின்ற கோயில், வளர்கின்ற இளமையையுடைய சோலைகள் சூழ்ந்த திருமாலிருஞ்சோலையைத் தளர்ச்சி அற்று இருக்க விரும்புவீராகில் சென்று சேர்வதே மேலான பேறு என்பதாம்.

வி-கு :—கெடுவதன் முன்னம் தளர்விலராகில் சார்வது சதிர் எனக் கூட்டுக. கோயிலாகிய மாலிருஞ் சோலை என்க. சார்வது : தொழிற் பெயர்.

ஈடு :—முதற் பாட்டு. [2]திருமலையை அடைகையே இவ் ஆத்மாவுக்கு நிரதிசயமான பேறு என்கிறார்.

"திருமலையை அடைமின்" என்றார்; "செய்கிறோம்" என்று ஆறியிருந்தார்கள்; கெடுகின்றவர்களே! எதனை நம்பித்தான் நீங்கள் ஆறியிருக்கிறீர்கள்; 'கழிந்த பருவத்தை உங்களாலே தான் மீட்கப்போமோ? மேலும், [3]"காதலியான சீதை தூரத்திலிருக்கிறாள் என்று எனக்குத் துக்கம் இல்லை, ஒருவனால் அபகரிக்கப்பட்டாள் என்று எனக்குத் துக்கம் இல்லை, வயதானது பயன் இன்றிக் கழிகிறதே! என்று அதற்கே நான் துக்கிக்கிறேன்" என்றும், [4]"வாள்களாகி நாள்கள் செல்ல" என்றும் முன்னையோருடைய வார்த்தைகளும் இருக்கின்றனவே? ஆதலால், கிளர் ஒளி இளமை கெடுவதன் முன்னம் சார்மின் என்கிறார்.

---

1. "தளர்விலராகி" என்றும் பாடம்.
2. "சார்வது சதிரே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை.
3. ஸ்ரீராமா. யுத். 5 : 5. இங்கு 29-ஆம் பக். குறிப்புரை பார்க்கவும்.
4. திருச்சந்த விருத்தம். 112. இப் பாசுரத்தோடு,
   நாளென ஒன்றுபோற் காட்டி உயிர் ஈரும்
   வாள் அது உணர்வார்ப் பெறின்.
   என்ற திருக்குறள் ஒப்புமையுடையது.

கிளர் ஒளி இளமை கெடுவதன் முன்னம் - கிளர் ஒளி இளமை என்றது, [1] மனத்தில் உண்டாகும் சிரத்தையாய், பிறந்த இச் சிரத்தை இதில் நின்றும் மாறி வேறு விஷயங்களில் பிறப்பதற்கு முன்னே என்றபடி. என்றது, ஒருவனுக்கு ஒரு விஷயத்தில் ஒருகால் சிரத்தை பிறக்கும்; அவன் தனக்கே அவ் விஷயத்திலே சிரத்தை இன்மையும் பிறக்கக் கூடியதாய் இருக்கும். ஆக, பிறந்த ருசி மாறுவதற்கு முன்னே என்ற வாறு. இனி, கிளர் ஒளி இளமை கெடுவதன் முன்னம் என்பதற்கு, "அடையத் தக்கது" என்னும் நினைவு பிறந்தாலும், [2] கரணபாடவம் இல்லையே! என்று கைவாங்க வேண்டாதபடி கரணபாடவம் உள்ளபோதே என்று பொருள் கூறலுமாம். உயர்வு பற்றி 'இளமை கெடுவதன் முன்னம்' என்றாராயினும், இனம் பற்றிப் பால்ய யௌவன பருவங்களையும் கொள்க. [3] "பாலியத்தில் விளையாட்டில் ஆசையுள்ளவர்களாகவும், யௌவன காலத்தில் விஷயங்களை அநுபவித்தலில் பற்றுள்ளவர்களாகவும் இருக்கின்றார்கள்" என்று கூறி, "ஆகையாலே, பால்யத்திலே அறிவோடு கூடினவனாய் எக்காலத்திலும் புகழின்பொருட்டு முயற்சிசெய்தல் வேண்டும்" என்றும் கூறுதல் காண்க. வளர் ஒளி மாயோன் மருவிய கோயில் - நாட்செல்ல நாட்செல்ல வளராநின்றுள்ள புகரை உடையவனாய் ஆச்சரியம் பொருந்திய ஆற்றலை உடையனான சர்வேஸ்வரன் நித்திய வாசம் பண்ணுகிற தேசம். வளர்தல் குறைதல்கள் இயற்கையில் இல்லாத சர்வேஸ்வரனுக்கும் விகாரத்தைப் பிறப்பிக்க வல்ல தேசம் என்பார் '**வளர் ஒளி மாயோன் கோயில்**' என்கிறார். [4] அவதாரங்கள்போன்று தீர்த்தம் பிரசாதியாமல் தங்கி இருக்கும் தேசமாதலின் '**மருவிய கோயில்**' என்கிறார். வளர்

---

1. கிளர் ஒளி இளமை என்பதற்கு, மனத்தில் உண்டாகும் சிரத்தை என்பது பொருள். ஒளி என்றது, ஞானத்தை; அது ஈண்டு இச்சைக்கு ஆயிற்று. இளமை என்றது, அவ் இச்சை உண்டாகும் ஆரம்பநிலையைக் குறித்தது. இந்த இச்சை தோன்றுவது மனத்திலே ஆகையாலே மனத்தில் உண்டாகும் சிரத்தை என்று பொருள் அருளிச்செய்கிறார் என்க.

2. கரண பாடவம் - கரணங்கள் தத்தம் காரியங்களைச் செய்வதற்குத் தக்க ஆற்றல்களுடன் சேர்ந்திருத்தல்.

3. ஸ்ரீ விஷ்ணுபுரா. 17. 74 : 75. இது பிரஹ்லாதாழ்வான் கூற்று.

4. 'அவதாரங்கள் போன்று தீர்த்தம் பிரசாதியாமல்' என்றது, அவதாரங்கள் போன்று அவ் வக் காலத்தோடு முடிவுபெறாமல் என்றபடி. தீர்த்தம் பிரசாதித்தல்-முடிவுறுதல். திருவிழாக் காலங்களில் விழா முடிவுறும் நாளைத் 'தீர்த்தவாரி' என்று கூறுதல் வழக்கு.

இளம் பொழில் சூழ் மாலிருஞ்சோலை - வளர வளர இளகிப் பதித்துச் செல்லாநிற்கும் சோலை சூழ்ந்த மாலிருஞ்சோலை: அடிமை செய்கிறவர்கள் **கிளர் ஒளி இளமையையுடையவர்கள்;** அடிமைகொள்ளுகிறவன் **வளர் ஒளி மாயோன்;** அடிமை செய்கிற தேசம் **வளர் இளம் பொழில் சூழ் மாலிருஞ்சோலை.** ஆக, இப்படி அடிமைசெய்யுமவனும், அடிமைகொள்ளுமவனும், அடிமைசெய்யும் தேசமும் ஒத்த பருவமாய் ஆயிற்று இருப்பது.

தளர்வு இலர் ஆகில் - [1] "முகூர்த்தகாலமாயினும் ஒரு கண நேர மாயினும் வாசுதேவனைச் சிந்திக்க இல்லை என்பது யாது ஒன்று உண்டு; அது பெரிய இழிவு; பெரிய கெடுதி" என்கிற படியே, [2] திருமலையைக் கிட்டாமையால் வருகின்ற எவ்வகை யான துக்கமும் இல்லாமல் இருக்கவேண்டில். இனி, "திரு மலையே அடையத் தக்கது" என்னும் புத்தி பிறந்து அதனை அடைவதற்கு விரோதியாய் வருகின்ற [3] அனர்த்தபாகிகள் அல்லாதாராய் ஒழிய வேண்டில் எனலுமாம். சார்வதே சதிர் - திருமலையைக் கிட்டு மிதுவே இவ் ஆத்மாவுக்குச் சதிர்; அல்லாதவை எல்லாம் இளிம்பு. கண்ணுக்கு இலக்கான விஷயங்களை விட்டு வேறே சிலவற்றைப் பெறுகைக்கு எண்ணுகின்றீர்கள்; நீங்கள் எண்ணு மதுவே இளிம்பு; இதுவே சதிர் என்றபடி. (1)

213.

சதிர் இள மடவார் தாழ்ச்சியை மதியாது,
அதிர் குரல் சங்கத்து அழகர்தம் கோயில்,
மதி தவழ் குடுமி மாலிருஞ்சோலை
பதியது ஏத்தி எழுவது பயனே.

பொ - ரை :— அழகையும் இளமையையும் உடைய பெண்கள் தாழ்ச்சி தோன்றப் பேசும் வார்த்தைகளையும் செய்யும் செயல்களையும்

1.

2. தளர்விலராகில் என்பதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச் செய்கிறார்; முன்னையது, திருமலையைச் சாராமையாகிற துக்கம் இன்றியே ஒழியவேண்டில் என்பது. இஃது ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹத்துக்கு ஒட்டிய பொருள். பின்னையது, திருமலையைக் கிட்டுகைக்கு விரோதியான பாவங்கள் இன்றியே ஒழிய வேண்டில் என்பது. இஃது எம்பெருமானார் நிர்வாஹத் துக்கு ஒட்டிய பொருள்.

3. அனர்த்த பாகிகள் - கேட்டினையடைகின்றவர்கள்.

4. இளிம்பு - சாமர்த்தியம் இன்மை.

ஒரு பொருளாக நினையாமல், ஒலிக்கின்ற ஒலியை யுடைய பாஞ்சஜன் யத்தையுடைய அழகர் தங்கியிருக்கும் இடமாய், சந்திரன் தவழ்கின்ற சிகரங்களையுடையதா யுள்ள திருமாலிருஞ்சோலையாகிய திருப்பதியைத் துதித்துப் பிறவிப்பெருங்கடலில் நின்றும் எழுதலே பயனும்.

வி - கு :—மதியாது ஏத்தி எழுதுவது பயன் என முடிக்க. எழுவது : தொழிற் பெயர்.

ஈடு :—இரண்டாம்பாட்டு. திருமலையோடுசேர்ந்த திருப்பதியைக் கிட்டுதலே பரமப் பிரயோஜனம் என்கிறார். இனி, மாலிருஞ்சோலையைச் சேர்ந்த பதி என்னுது, மாலிருஞ்சோலையாகிய பதியைக் கிட்டுதலே பரமப் பிரயோஜனம் என்கிறார் எனலுமாம்.

சதிர் இள மடவார் தாழ்ச்சியை மதியாது - சதிர் இள மடவார் விஷயமாக நீங்கள் செய்யும் [1] தாழ்ச்சியை ஒன்றாகப் புத்தி பண்ணுமல். இனி, சதிர்இள மடவார் தாங்கள் பண்ணும் தாழ்ச்சியைப் புத்தி பண்ணுமல் என்று கோடலுமாம். மதித்தால், பிரயோஜனம் இல்லாமையே அன்று ; மேல் நரகம், இங்கு மேன் மக்களால் நிந்திக்கப்படுத்தல். மேலும், "பக்தாநாம்" என்கிறபடியே, பிறர்களுக்கு உரியதாய் நிரதிசய போக்கியமாய் இருக்கும் விஷயம் அன்று ; ஆதலின், '**மதியாது**' என்கிறார் என்னுதல். சதிராவது : பிறரை அகப்படுத்திக் கொள்ளுகைக்கு ஈடான விரகு; அதாவது, செத்துக் காட்டவுங் கூட வல்லராய் இருக்கை. சதிரையும் பருவத்தின் இளமையையும் காட்டி ஆயிற்று அகப்படுத்துவது. மேல் "கிளர் ஒளி இளமை" என்றாரே அன்றோ, அப் பருவம் கண்ட இடத்தே இழுத்துக்கொள்ளும் முதலைகள் ஆயிற்று விஷயங்கள்.

அதிர் குரல் சங்கத்து அழகர் தம் கோயில் - திருக்கையின் பரிசத்தால் எப்பொழுதும் ஒக்க முழங்குகின்ற ஸ்ரீ பாஞ்ச

---

1. தாழ்ச்சி - தாழ்ச்சி தோற்ற இருக்கும் வார்த்தைகளும், செயல்களும். "சதிரிள மடவார் தாழ்ச்சியை" என்னு மிவ்விடத்தில்,

"பணியின் திருவருள் என்னும் அம் சீதப் பைம் பூம்பள்ளி
அணிமென் குழலார் இன்பக் கலவி அமுதுண்டார்" (திருவாய்.4.4:5.)
பாண்தேன் வண்டு அறையும் குழலார்கள் பல்லாண்டு இசைப்ப
ஆண்டார் வையமெல்லாம் அரசாகி முன் ஆண்டவரே
மாண்டார் என்று வந்தார் அந்தோ மனைவாழ்க்கை தன்னை
வேண்டேன் நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே.
(பெரிய திருமொழி. 6. 2 : 5.)

என்பனவற்றை நினைவு கூர்க.

ஜன்னியத்தை திருக்கையிலே யுடையராய் அச் சேர்த்தி அழகாலே [1] அது தன்னையே தமக்குத் திருநாமமாக உடையவர், " அடியார்களைக் காப்பதற்குப் பாங்கான நிலம் " என்று திருவுள்ளத்திலே விரும்பி 'என்னது' என்று ஆதரித்து வசிக்கிற கோயில். மதி தவழ் குடுமி மாலிருஞ்சோலை பதியது - சூற்பெண்டுகள் [2] சுரம் ஏறுமாறு போன்று சந்திரன் தவழ்ந்து ஏறுகின்ற சிகரத்தை யுடைய திருமலை யாகின்ற பதியை. இனி, மாலிருஞ் சோலை பதி என்பதற்கு, மாலிருஞ்சோலையில் பதி என்று, திருப்பதி என்று பொருள் கோடலுமாம். ஏத்தி எழுவது பயன் - சொரூபத்திற்குத் தகுதியான [3] விருத்தி விசேஷத்தைப் பண்ணிப் பிழைக்கு மிதுவே இவ் ஆத்மாவிற்குப் பயன்; அல்லாதவை பயன் அற்றவை. பயன் என்றது - அடையத் தக்கது என்றபடி. (2)

214.

பயன் அல்ல செய்து பயன் இல்லை, நெஞ்சே !
புயல் மழை வண்ணர் புரிந்து உறை கோயில்,
மயல் மிகு பொழில் சூழ் மாலிருஞ் சோலை
அயன் மலை அடைவது அது கருமம்மே.[4]

பொ - ரை :—மனமே! பயன் அற்ற காரியங்களைச் செய்வதால் பயன் இல்லை ; மழை பெய்கின்ற மேகம் போன்ற திரு நிறத்தையுடைய அழகர் விரும்பி வசிக்கின்ற கோயில், மயக்கம் மிகுதற்குக் காரணமான சோலைகள் சூழ்ந்த மாலிருஞ் சோலையின் அயலில் உள்ள மலையை அடைவதே செய்யத் தகும் காரியம்.

வி - கு :—மழை புயல் என மாற்றுக. கோயிலாகிய மாலிருஞ் சோலை என்க. உறை கோயில் : வினைத் தொகை. " மருவிய நன்னிலமாண்பா கும்மே " " அமைபவன் நூலுரை யாசிரியன்னே " என்பன

1. 'அது தன்னையே தமக்குத் திருநாமமாக உடையவர்' என்றது, " சங்கத்தழகர் " என்ற பெயரைக் குறித்தபடி. இனி, பாண்டியர்களால் வளர்க்கப்பட்ட முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கங்கட்குத் தலைவராகிய அழகர் என்று கோடலுமாம்.

அங்கத் தமிழ்மறை ஆயிரம் பாடி அளித்துலகோர்
தங்கட்கு வீடுஅருளும் புருடோத்தமன் தண்வகுளத்
தொங்கற் பராங்குசன் தாளிணை மாலிருஞ் சோலைமலைச்
சங்கத் தழகர்அந்தாதி நடாத்தத் தலைக்கொள்வனே.

என்றார் திவ்விய கவி. (அழகரந்தாதி. காப்பு.)

2. சுரம்—மலைவழி.

3. விருத்தி விசேஷம்—வாசிகமான கைங்கரியம்.

4. 'கருமமே' என்பது முன்னுள்ளபாடம்.

போன்று (நன்னூல்) 'கருமம்மே' என்புழி மகரம் விரித்தல் விகாரம், ஓசையின்பத்தின் பொருட்டு வந்தது.

ஈடு :—மூன்றும் பாட்டு. [1] 'உத்தேசியத்துக்கு இவை எல்லாம் வேண்டுமோ? திருமலையோடு சேர்ந்த அயல் மலையை அடைய அமையும்' என்கிறார்.

பயன் அல்ல செய்து பயன் இல்லை - இவர் பயன் இல்லாதனவாக நினைத்திருக்கிறது பரமபதத்தில் இருப்பையும் அல்லாத அவதாரங்களையும். "செய்வதற்குச் சுகரூபமாக இருப்பது" என்கிறபடியே, செயலும் பலமும் இரண்டும் பிரயோஜனமாய் ஆயிற்றுத் தாம் பற்றின விஷயம் இருப்பது. அன்றியே, பிரயோஜனம் இல்லாதனவற்றைச் செய்து ஒரு பிரயோஜனம் இல்லை எனலுமாம்; என்றது, சாதன தசையிலும் துக்க ரூபமாய், பல வேளையிலும் துக்கம் கலந்ததாய் இருக்கிற சுவர்க்காதி உலகங்களையும், அவற்றைப் பெறுதற்குரிய சாதனங்களையும் குறித்தபடி. நெஞ்சே - வேறு விஷயங்களுக்கும் இவ் விஷயத்துக்கும் உண்டான நெடுவாசி நீ அறிந்ததே அன்றோ? இனி, பந்த மோக்ஷங்கள் இரண்டற்கும் நெஞ்சு பொதுவாய் இருத்தலின் அதனை நோக்கி "நெஞ்சே" என்கிறார் எனலுமாம். இவ்வளவிலும் இவ் விஷயத்தை அகலுகைக்குக் காரியம் பார்த்தது நீயே அன்றோ எனலுமாம்.

புயல் மழை வண்ணர் புரிந்து உறை கோயில் - மழை பெய்கிற மேகம் போன்று இருக்கிற வடிவழகை யுடையவர் அவ் வடி வழகை முற்றிலும் அநுபவிக்கக் கொடுத்துக்கொண்டு வாழ்கின்ற கோயில்; [2] இனி, மேகம் போன்று தண்ணீர், நிலம் என்ற வேற்றுமை இன்றி எல்லார்க்கும் முற்றிலும் அநுபவிக்கக் கொடுத்துக்கொண்டு வாழ்கிற கோயில் எனலுமாம். [3] இதனால், பிராப்ய பிராபகங்கள் தமக்கு ஒருவனேயாய் இருக்கிறபடியைத் தெரிவித்தவாறு. பயனை விஷயந்தான் இருக்கிறபடி. மயல் மிகு பொழில் சூழ்-சோலைச் செறிவாலே புக்கார்க்கு இருண்டு இருக்கும்படியான சோலைகள் சூழ்ந்த. இனி, மயல் மிகு - இனிமையின் மிகுதியாலே மனத்தை இருளப் பண்ணும்

1. உத்தேசியம் - தாம் அறுதியிட்ட பேறு.

2. வண்ணர் என்பதற்கு நிறம் என்றும், தன்மை என்றும் இரண்டு பொருள் அருளிச்செய்கிறார். முதற் பொருளில், நிறம்; இரண்டாவது பொருளில், தன்மை. புரிதல் - கொடுத்தல்.

3. "புயல் மழை வண்ணர்" என்றதனால் பிராப்யமும், "புரிந்து" என்றதனால், பிராபகமும் கொள்க.

என்று பொருள் கூறலுமாம். மாலிருஞ் சோலை அயன்மலை - திருமலையினது சம்பந்தத்தையே தனக்குப் பெயராக உடைத்தான மலை. [1] "**அகஸ்தியருக்கு உடன் பிறந்தவர்**" என்னுமாறு போன்று '**மாலிருஞ் சோலை அயன்மலை**' என்கிறார். அடைவது அது கருமமே - அஃதொன்றுமே செய்யத் தக்கது; அல்லாதவை அடையச் செய்யத் தகாதன என்கிறார். (3)

215.

கரும வன் பாசம் கழித்து உழன்று உய்யவே
பெரு மலை எடுத்தான் பீடு உறை கோயில்
வரு மழை தவழும் மாலிருஞ் சோலை
திருமலை அதுவே அடைவது திறமே.

பொ - ரை:—கருமங்களாகிற வலிய பாசங்களைக் கழித்து அடிமை செய்து உய்யும் பொருட்டு, பெரியமலையை எடுத்தவனான கண்ணன் தனது பெருமையெல்லாம் விளங்கும்படி தங்கியிருக்கிற கோயில், வருகிற மேகங்கள் தவழும்படி மிக உயர்ந்து பரந்த சோலைகளை யுடைய திருமலையை அடைவதுவே செய்யும் வகை என்றவாறு.

வி - கு:—உய்ய அடைவது திறம் எனக் கூட்டுக. இனி, உய்ய உறை கோயில் எனக் கூட்டலுமாம். எடுத்தான்: வினையாலணையும் பெயர்: கோயிலாகிய திருமலை என்க.

ஈடு:—நாலாம் பாட்டு. அடியார்கள் கர்மங்களின் தளையைப்போக்கி அடிமைசெய்து வாழுகைக்கு ஈடாம்படி சர்வேஸ்வரன் வாழ்கின்ற திருமலையை அடைகையே செய்யத்தகும் வகையாம் என்கிறார்.

கருமம் வன் பாசம் கழித்து உழன்று உய்யவே - "திருமலையை அடையுமது ஒழிய இது நம்மாற் செய்து தலைக்கட்டப் போமோ?" என்று இங்ஙனம் [2] ஆழ்வான் ஓர் உருவிலே பணித்தாராம்; அங்ஙனமும் கொள்க. இனி, எம்பெருமானார் "கரும வன் பாசம் கழிக்கைக் காகவும், கழித்து உய்கைக்காகவும்" என்று இங்ஙனம் அருளிச்செய்வர். அதாவது, கர்மமாகிற வலியபாசங்களைக் கழிக்கைக் காகவும், தன் பக்கல் கைங்கரியத்

---

1. ஸ்ரீராமா. ஆரண்.

2. ஆழ்வான் நிர்வாகத்தில் "உய்யவே" என்றதிலுள்ள ஏகாரம்: எதிர்மறை; உய்யப்போகாது என்றபடி. ஆழ்வான் - கூரத்தாழ்வார். கூரத்தாழ்வாரை ஆழ்வான் என்றும், நம்மாழ்வாரை ஆழ்வார் என்றும் வழங்குதல் வைணவப்பெருமக்கள் வழக்கு. எம்பெருமானார் நிர்வாகத்தில் ஏகாரம்: தேற்றம்; உய்யவே உறைகின்ற கோயில் என்பது பொருளாம்.

தைச் செய்து உய்வுபெறுகைக்காகவும் என்றபடியாம். [1] முராசுரன் பல ஆயிரம் பாசங்களாலே தன்னை மறைய வரிந்து கொண்டு இருந்ததுபோன்று, அறிவின்மைமுதலியவைகளால் தன்னை மறைய வரிந்துகொண்டிருத்தலின் **'கரும வன் பாசம்'** என்கிறார். பெருமலை எடுத்தான் பீடு உறை கோயில் - [2]"பசுக்கள் ஆயர்கள் ஆய்ச்சிகள் எல்லாரும் வருந்திக்கொண்டிருக்கிற அந்தக் கோகுலம் முழுதையும்கிருஷ்ணன் பார்த்து அப்போது சிந்தித்தார்" என்கிறபடியே, ஆயர்களும் ஆய்ச்சிகளும் நோவுபட ஒரு மலையை எடுத்து நோக்கினவன், அந்த ஐஸ்வர்யத்தோடு வந்து நித்தியவாசம் செய்யுங் கோயில். இதனால், அரியன செய்தும் அடைந்தவர்களைப் பாதுகாப்பவன் என்பதனைத் தெரிவித்தபடி. ஐந்து லட்சம் குடிகளும் நிழலிலே ஒதுங்கலாம்படி மலையின் பரப்பு இருந்தது ஆதலின் **'பெருமலை'** என்கிறார். பீடு-பெருமை; என்றது, ஆபத்திற்குத் துணையாதல் முதலாயினவற்றை. பெருமலை எடுத்தான் பீடு உறை கோயில் என்றதனால், ஒரு மலையை [3] ஆதேயமாகக்கொண்டு ரக்ஷித்தவன் ஒருமலையை ஆதாரமாகக்கொண்டு காப்பாற்றுகின்றான் என்பதனைத் தெரிவித்தபடி. ஆயின், திருமலையில் நிற்றல் காத்தலுக்கோ? எனின், [4] "சாதுக்களைக் காத்தற்காகவும், துஷ்டர்களை அழித்தற்காகவும், தர்மங்களை நிலைநிறுத்துதற்காகவும், ஒவ்வொரு யுகங்கள்தோறும் பிறக்கிறேன்" என்கிறபடியே, விரோதிகளைப் போக்கி உஜ்ஜீவிப்பிக்கைஅன்றோ [5] அவதாரங்களுக்குப் பிரயோஜனம்.

வரு மழை தவழும் மால் இரும் சோலை திருமலை அதுவே - சூற்பெண்டுகள் சுரம் ஏறுமாறு போன்று மேகங்கள் நடமாடு

---

1. முராசுரன் இவன், பிராக்ஜோதிஷபுரம் என்ற நகரத்திலிருந்து அரசாண்ட நரகாசுரனுக்கு அமைச்சனுவான்; இவன் தன் அரசனுக்கும் தனக்கும் பகைவர்களால் கேடு வாராதவாறு நூறுயோசனை தூரம் பாசங்களைக் கொண்டே சுற்றிலும் சுற்றி அதனையே ஓர் அரணாக அமைத்துக்கொண்டிருந்தான் என்றும், பின், கண்ணபிரானால் அப் பாசங்களும் அறுக்கப்பட்டு இவனும் கொல்லப்பட்டான் என்றும் கூறுகிற சரித்திர வரலாறு இங்கு அறிதல் தகும்.

2. ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 11 : 13.

3. ஆதேயம் - தாங்கப்படுவது. ஆதாரம் - பற்றுக்கோடு ; தாங்குவது.

4. ஸ்ரீகீதை. 4 : 8.

5. இறைவனுடைய ஐவகை நிலைகளுள் ஒன்றான அர்ச்சையும் அவதாரம் எனப்படும்; அர்ச்சாவதாரம் என வழங்குதல் காண்க. அர்ச்சையாவது, வணங்கி வழிபடுவதற்குத் தகுதியாக விக்கிரக ரூபமாக இருத்தல்.

கின்ற மாலிருஞ்சோலையாகிய திருமலையை. இனி, மாலிருஞ் சோலை திருமலை என்பதற்கு மாலிருஞ்சோலையை யுடைத்தான திருமலை என்று பொருள் கூறலுமாம். மால் இரும் என்ற இரண்டும் ஒருபொருளன; ஒன்று உயர்விலே; ஒன்று பரப்பிலே. [1] நின்ற இடத்தே நின்று பெய்வது ஒரு மேகமும், போவது வருவதுமாய் இருந்து பெய்வது ஒரு மேகமும் என ஊர்க்கு மேகம் இரண்டாதலின் '**வருமழைதவழும்**' என்கிறார். ஆயின், இறைவன் மேகமோ? எனின், "**புயல் மழை வண்ணர்**" என்றாரே முன்னர். [2] "மிக அதிகமான தண்ணீரைத் தாங்குவனவும், கொக்குக்களின் வரிசையை யுடையனவும், ஒலிப்பனவுமான மேகங்கள், மலைகளின் பெரிய கொடுமுடிகளில் இளைப்பாறி இளைப்பாறி மீண்டும் செல்லுகின்றன" என்பவாகலின் '**மழை தவழும்**' என்கிறார். அடைவது திறமே-அடையுமதுவே செய்திறம். செய்யப்படுவது இதுவே என்றபடி. (4)

216.

திறமுடை வலத்தால் தீவினை பெருக்காது,
அறம் முயல் ஆழிப் படையவன் கோயில்,
மறுவில் வண் சுனை சூழ் மாலிருஞ் சோலைப்
புறமலை சாரப் போவது கிறியே.

பொ - ரை :—பல வகையான வலிமைகளால் கொடிய பாவங்களைச் செய்து மிகுதி யாக்கிக் கொள்ளாது, அறத்தையே செய்கின்ற சக்கரப் படையைத் தரித்த இறைவன் வாழ்கின்ற கோயில், குற்றமற்ற வளவிய சுனைகள் சூழ்ந்த மாலிருஞ் சோலைக்குப் புறம்பே உள்ள மலையைச் சாரப் போதல் நல்ல உபாயமாகும்.

வி - கு :—பெருக்காது சாரப் போவது எனக் கூட்டுக. போவது: தொழிற் பெயர்.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. திருமலைக்குப் புறம்பான மலையை அடைகையே நல் உபாயம் என்கிறார்.

திறமுடை வலத்தால் தீவினை பெருக்காது - திரண்ட பலத்தாலே வேறு பயன்களை ஆசைப்படுதலாகிற பெரியபாவத்தைக் கூடு பூரியாமல். திறம் - கூட்டம். அறம் முயல் ஆழிப்படையவன் கோயில் - [3] "அறிவுடைய இலக்குமணன்" என்கிறபடியே,

1. நின்றவிடத்தே நின்று பெய்வதொருமேகம் - சங்கத்தமிழகர்.
2. ஸ்ரீராமா. கிஷ். 28 : 22.
3. ஸ்ரீராமா. சுந். 16 : 4. இங்கு, பெருமாளைக்காட்டிலும் அடியார்களைக் காப்பதில் சிரத்தையுள்ளவன் இலக்குமணன் என்பதனைக் காட்டுவதற்காக 'அறிவுடைய இலக்குமணன்' என்கிறார்.

அடியார்களைப் பாதுகாத்தலிலே முயலாநின்றுள்ள திரு ஆழியை ஆயுதமாக உடையவன் வந்து வாழ்கிற தேசம். [1] சர்வேஸ்வரன் கடைக்கணித்துவிட அரைக்கணத்திலே வாராணசியை எரித்து வந்து நின்றவன் ஆதலின் **'அறம் முயல் ஆழி'** என்கிறார்.

மறு இல் வண் சுனை சூழ் மாலிருஞ்சோலை புறமலை சாரப் போவது கிறியே - [2] "பெரியோர்களுடைய மனத்தைப் போன்று தெளிந்த தண்ணீரையுடையது" என்கிறபடியே, மறு அற்று, ஆழ்வார் திருவுள்ளம்போன்று தெளிவை யுடைத்தாய், காட்சிக்கு இனியதாய், ஊற்று மாறாத சுனைகளாலே சூழப்பட்ட மாலிருஞ்சோலைப் புறமலை சாரப் போகும் இதுவே பகவானை அடைதலை வேண்டியிருப்பார்க்கு வருத்தம் அற அடையக்கூடிய நல் விரகு. (5)

217.

கிறி என நினைமின்! கீழ்மை செய்யாதே,
உறி அமர் வெண்ணெய் உண்டவன் கோயில்,
மறியொடு பிணைசேர் மாலிருஞ் சோலை
நெறிபட அதுவே நினைவது நலமே.

பொ - ரை :—தாழ்ந்த விஷயங்களில் விருப்பத்தைச் செலுத்தாமல், உறியிலே பொருந்திய வெண்ணெயினை உண்டவன் வாழ்கின்ற கோயில், குட்டியோடு பெண்மான் சேர்ந்து வாழ்கின்ற மாலிருஞ்சோலைக்குச் செல்லும் வழியிலே பொருந்தும்படியாக நினைத்தலே நலமாகும்; ஆதலால், இவ்வாறு நினைதலே நல்விரகு என்று நினையுங்கள்.

வி - கு :—செய்யாது நினைவது நலம் எனக் கூட்டுக. நினைவது: தொழிற்பெயர். கோயிலாகிய மாலிருஞ்சோலை என்க.

ஈடு :—ஆறாம் பாட்டு. திருமலைக்குச் செல்லும் வழியினைச் சிந்தைசெய்யும் இதுவே இவ் ஆத்மாவுக்கு நல்லது என்கிறார்.

---

1. பவுண்ட்ரகவாசுதேவன் கொல்லப்பட்டு இறந்ததை அறிந்த காசிதேசத்து அரசன், கிருஷ்ணனிடத்தில் மாறுகொண்டு ஒரு பூதத்தை ஏவினான்; அதனை அறிந்த கிருஷ்ணன் சக்கரத்தாழ்வானைக் கடைக்கணித்தருள, அது சென்று அந்தப் பூதத்தையும் அதற்குத் துணையாக நின்ற மற்றைப் பூதங்களையும் கொன்று காசிதேசத்தையும் நீறாக்கி மீண்டது என்பது சரித்திர வரலாறு. வாராணசி - காசி.

2. ஸ்ரீராமா. பால. 2.

கிறி என நினைமின்-இது நல் உபாயம் என்று புத்தி பண்ணுங்கோள். கீழ்மை செய்யாது - நான் சொல்லுகிறது ஒழியத் தண்ணிதானவற்றைச் செய்ய நில்லாமல். தண்ணியதாவது - வேறு பிரயோஜனங்களில் ஆசையும், சிற்றின்ப ஆசையும். உறி அமர் வெண்ணெய் உண்டவன் கோயில் - உறிகளிலே சேமித்துக் கள்ளக் கயிறு உருவிவைத்த வெண்ணெயைத் "தெய்வங்கொண்டதோ" என்னலாம்படி களவு கண்டு அமுது செய்தவன் வந்து வாழ்கிற தேசம். [1] இத்தால், அநுகூலருடைய பரிசமுள்ள பொருளால் அல்லது தரிக்கமாட்டாதவன் என்பதனைத் தெரிவித்தபடி.

மறியோடு பிணைசேர் மாலிருஞ்சோலை - குட்டியும் தாயும் பிரியாமல் வாழ்கிற தேசம். [2] இதனால், [3] ரக்ஷ்ய ரக்ஷகங்கள் தம்மில் பிரியாமல் வாழ்கின்ற தேசம் என்பதனைத் தெரிவித்தபடி. நெறிபட அதுவே நினைவது நலமே - [4] நெறிபடுகைக்கு நினைக்குமதுவே இவ் ஆத்மாவுக்கு நன்மையாவது. இனி, நெஞ்சிலே [5] அடிபடும்படியாகத் திருமலையைச் சொல்லுமதுவே நன்மையாவது என்று கூறலுமாம். அத்தை நினைக்குமதுவே விலக்ஷணம்; அஃது ஒழிந்தவை எல்லாம் பொல்லாதவை என்பார் '**அதுவே நினைவது நலமே**' என்கிறார். (6)

218.

நலம் என நினைமின்! நரகு அழுந்தாதே,
நிலம் முனம் இடந்தான் நீடு உறை கோயில்,
மலம் அறு மதி சேர் மாலிருஞ் சோலை
வலம் முறை எய்தி மருவுதல் வலமே.

பொ - ரை :— நன்மையானது என்று நினைமின், நரகத்தில் அழுந்தாமல்; பிரளயங்கொண்ட காலத்தில் வராக மாகி நிலத்தைக் கோட்டால் குத்தி எடுத்து வந்தவன் நித்தியவாசஞ் செய்யுங் கோயில், களங்கமற்ற சந்திரன் சேர்கின்ற திருமாலிருஞ்சோலைமலையை முறையாக வலம் வந்து சென்று சேர்தல் வலிமையாகும்.

---

1. 'இத்தால்' என்றது, களவு கண்டு அமுதுசெய்தமையைச் சுட்டுகிறது.
2. 'இதனால்' என்றது, மறியொடு பிணை சேர்ந்திருத்தலைச் சுட்டுகிறது.
3. ரக்ஷ்ய ரக்ஷகங்கள் = காக்கப்படுகின்ற பொருள்களும், காக்கும் இறைவனும்.
4. நெறிபடுகை = வழியிலே செல்லுகை.
5. அடிபடுதல் = சத்தையுண்டாதல்.

வி - கு:—அழுந்தாதே வலம் எய்தி மருவுதல் வலம் எனக் கூட்டுக. இனி, அழுந்தாதே உறை கோயில் எனக் கூட்டலும் ஆம். அழுந்தாது-அழுந்தாம லிருக்க. கோயிலாகிய மாலிருஞ்சோலை என்க.

ஈடு:—ஏழாம் பாட்டு. திருமலையைச் சென்று கிட்டி எப்பொழுதும் அங்கு வாசம் செய்கையே இவ் ஆத்மாவுக்கு வெற்றி என்கிறார்.

நலம் என நினைமின் - நான் சொல்லுகிற வார்த்தையை நன்மை என்று புத்திபண்ணுங்கோள். இனி, இவ் உலக விஷயங்களுக்கு எல்லாம் வேறுபட்ட சிறப்பினையுடைய உறுதிப் பொருள் என்று புத்திபண்ணுங்கோள் என்று கூறலுமாம். நரகு அழுந்தாதே – பிரிவால் வரும் துன்பத்தை நுகராமல். ஆயின், நரகு என்பது, பிரிவுத் துன்பத்தைக் காட்டுமோ? எனின், நரகங்களும் இவர்களுக்கு முடிவு செய்யப்பட்டதாய் அன்றோ இருப்பது; காட்டில் போமது துக்கம், படைவீட்டிலே இருப்பது சுகம்" என்று அருளிச் செய்தார் பெருமாள்; அங்ஙனம் அன்று, சுக துக்கங்கள் வடிவந்தோறும் முடிவு செய்யப்பட்டதாய்க் காணும் இருப்பது; [1]"உம்மோடு கூடிய யாதொரு வாசம் உண்டோ அது சுகமாகிறது, உம்மை ஒழியப் படைவீட்டில் இருக்கும் இருப்பு துக்கமாகிறது; இதிஜாநந் – தந்தாமுக்கு இல்லாதவை பிறர் பக்கலிலே கற்று அறிய வேணும் காணும்; பராம் பிரீதிம் - உம்மைப்போலே நிறுத்து அல்ல காணும் என்னுடைய பிரீதி இருப்பது" என்று கூறினர் **இளையபெருமாள்.**

நன்று; நம்மில் உனக்குப் பிரீதி மிக்கது எனச்சொன்னாய், அதற்கு நம்மைச் சொல்லுகிறது என்? என்ன, "கச்ச ராம மயா ஸஹ - என்னோடு கூடிப் புறப்படும்" என்றும், [2]"அக்ரதஸ்தே கமிஷ்யாமி - நான் புறப்பட்டபடியே, என்னை முன்னே போகவிட்டுப் பின்னே வரப் பாரும்"என்றும் கூறுகிறார் மேல். ஆயின், பிராட்டிமார்க்கு அன்றோ பிரிவு நரகமாகத் தோற்றும்; ஆடவரான இவர்க்கு அப்படித் தோற்றுமோ? எனின், [3]"இராகவ! உம்மாலே பிரிந்திருக்கப் பெற்ற பிராட்டி இலள் ஆவள்; நானும் அவ்வாறே; பிழைத்திருப்போமாயின், தண்ணீரினின்றும் எடுக்கப்பட்ட மீன்போல ஒரு முகூர்த்த காலமே உய்ந்திருப்போம்" என்றார் அன்றே **இளையபெருமாள்?**

---

1. ஸ்ரீராமா. அயோத். 30: 18.
2. ஸ்ரீராமா. அயோத். 27: 9.
3. ஸ்ரீராமா. அயோத். 53: 31.

நிலம் முனம் இடந்தான் நீடு உறை கோயில் - வராக கல்பத்தின் ஆதியிலே மஹாவராஹமாய், அண்டபித்தியிலே சேர்ந்து உருமாய்ந்த பூமியை ஒட்டுவிடுவித்து எடுத்துக்கொண்டு ஏறின [1]நிருபாதிக ஸௌஹார்த்தமுடையவன். அவதாரங்கள் போலே தீர்த்தம் பிரசாதியாதே நித்தியவாசம் செய்கிற தேசம். மலம் அறு மதி சேர் மாலிருஞ்சோலை - சந்திரபதத்துக்கு அவ்வருகே வளர்ந்து நிற்கையாலே அவன் போம்போது சிகரங்களிலே தேய்ப்புண்டு சாணையிலே இட்டாற்போன்று களங்கம் அறுகின்ற மாலிருஞ்சோலை. இனி, மலமறு மதிசேர் என்பதற்கு, "திருமலையாழ்வார் தாம் ஞானலாபத்தை உண்டாக்குவர்" என்று, **திருக்குருகைப்பிரான் பிள்ளான்** அருளிச்செய்வர். வலம் முறை எய்தி மருவுதல் வழக்கே - [2]காலயவநன் ஜராசந்தன் முதலியோர்களைப் போலே அன்றி, அநுகூலமான முறையிலே கிட்டி மருவுதல் வலம்: வலம் - பலம்; அல்லது சிறப்பு. சிறப்பு என்ற பொருளில் வரம் என்ற சொல்லின் திரிபு. (7)

219.

வலஞ்செய்து வைகல் வலம் கழியாதே,
வலஞ்செயும் ஆய மாயவன் கோயில்,
வலஞ்செயும் வானோர் மாலிருஞ் சோலை
வலஞ்செய்து நாளும் மருவுதல் வழக்கே.

பொ - ரை:—வலிமையை வளர்த்து நாடோறும் அவ்வலிமையை மற்றைய விஷயங்களுக்கு உறுப்பாக்கிக் கெடுக்காமல், கிருஷ்ணனுகிற மாயவன் வலம் செய்கிற கோயில், நித்தியசூரிகள் வலம் செய்கிற திருமாலிருஞ்சோலையை நாளும் வலம்செய்து சென்று சேர்தல் நியாயமாம்.

வி - கு:—வலம் கழியாது வலஞ்செய்து மருவுதல் வழக்கு எனக் கூட்டுக. கோயிலாகிய மாலிருஞ்சோலை என்க. வலஞ்செய்து: ஒரு சொல். ஆய மாயவன் வலம்செய்யும் என மாற்றுக. ஆய - பசுக்களையுடைய. ஆ-பசு. இனி, ஆயர் வம்சத்தில் வளர்ந்தவனுன எனலுமாம். மாயவன் - திருமகளை யுடையவன். மா - திருமகள்.

---

1. நிருபாதிக ஸௌஹார்த்தம் உடையவன் - காரணமின்றியே நன்மையைச் செய்பவன்.

2. காலயவனன், ஜராசந்தன் இவ் இருவரும், கண்ணபிரானோடு போர் செய்வதற்கு வடமதுரையை முற்றுகை இட்டவர்கள்.

ஈடு :—எட்டாம் பாட்டு. திருமலையை எப்பொழுதும் வலம் செய்கையே வழக்கு என்கிறார்.

வலஞ்செய்து நாளும் வலம் கழியாதே - சர்வேஸ்வரன் தன்னை அடைகைக்கு உறுப்பாகத் தந்த மனித சரீரத்தைக் கொண்டு வலிமையை உண்டாக்கிப் பின்னை அவனை அடையாமல் இதர விஷயத்தில் ஈடுபடுகைக்கு உடலாக்கிக் கெடாமல். ஆய மாயவன் வலம் செயும் கோயில் - திருச்சித்திரகூடமலையின் பக்கத்தில் பிராட்டியையுங்கூடக் கையைப் பிடித்துக் கொண்டு [1]உலாவினாற் போன்று, பிராட்டி கையைப் பிடித்துக் கொண்டு அழகர் ஆதரத்தோடே சஞ்சரிக்கிற தேசம். இனி, வலஞ்செயும் மாயவன் என்பதற்கு, [2]"எவன் தன்னையும் கொடுத்துத் தன்னை அநுபவித்தற்குத் தக்க பலத்தையும் கொடுப்பவனோ" என்கிறபடியே, [3]தன்னையும் கொடுத்து, தன்னை நுகர்தற்குத் தகுதியான சக்தியையும் கொடுக்கும் ஆச்சரியத்தையுடைய கிருஷ்ணன் என்று பொருள் கூறலுமாம்.

வானோர் வலம் செயும் மாலிருஞ்சோலை – பெருமாள் காட்டுக்கு எழுந்தருளுகிறபோது இலக்குமண பரதர்கள் பின் தொடர்ந்தது போன்று, சர்வேஸ்வரன் இங்கே போருகையாலே நித்தியசூரிகளும் போந்து வலஞ்செய்கிற மாலிருஞ்சோலை. உகந்தருளின மற்றைத் திவ்விய தேசங்கள் எல்லாம் கிடக்க, திருவேங்கடத்தை [4]"விண்ணோர் வெற்பன்" என்றார் மேல்; இங்கே இதனை 'வானோர் மாலிருஞ் சோலை' என்கிறார்; இதற்கு நினைவு என்? எனின், **குழந்தைக்குத் தாயினுடைய உறுப்புக்கள் எல்லாம் கிடக்க முலைக் கண்ணிலே அன்றோ வாய் வைக்கலாவது,** அப்படியே இங்குத் [5]"தென்னன் உயர் பொருப்பும் தெய்வ வடமலையும், என்னும் இவையே முலையா வடிவு அமைந்த, அன்ன நடைய அணங்கு" என்கிறபடியே, அவை இரண்டும் முலைகள் ஆகையாலே அவர்களுக்கே யாகி இருத்தலின் அங்ஙனம் அருளிச் செய்கிறார். வலஞ் செய்து - நாமும் இவர்களோடே கூட அங்கே அநுகூலமான தொழில்

1. உலாவினவன் - ஸ்ரீ ராமபிரான்.

2. யஜுர்வேதம் காண்டம், 7. 5: 36.

3. வலம் செய்தல் - வலிமையை யுண்டாக்குதல்; 'வலம்' பலம் என்ற சொல்லின் சிதைவு. முதற்பொருளில், வலஞ் செயல் - வலம் வருதல்.

4. திருவாய். 1. 8 : 3.

5. பெரிய திருமடல், 6, 7.

களைச் செய்து. ஆயின், பிரபந்நர்கள் வலஞ் செய்யலாமோ? வலம் செய்தல் உபாய கோடியில் சேராதோ? எனின், "**பிள்ளை திருநறையூர் அரையரும், பட்டரும்** பிரதக்ஷணம் பண்ணாநிற்கப் பின்னே சேவித்துக்கொண்டு போனேன்; [1]அல்லாதார் கடுங்குதிரை போலே வாராநிற்க, இவர்கள் திருக் கோபுரங்களையும் திருமாளிகைகளையும் [2]கண்களாலே பருகுவா ரைப்போலே பார்த்துக்கொண்டு வந்தார்கள்" என்று **நஞ்சீயர்** அருளிச் செய்வர். நாளும் மருவுதல் வழக்கே-[3] நித்திய சூரிகளு டைய யாத்திரையே தனக்கு யாத்திரை யானால் பின்னை மறுவல் இடாது; இதுவே வழக்கு. (8)

220.

வழக்கு என நினைமின்! வல்வினை மூழ்காது,
அழக்கொடி அட்டான் அமர் பெருங் கோயில்,
மழக் களிற்று இனம் சேர் மாலிருஞ் சோலை
தொழக் கருதுவதே துணிவது சூதே.

பொ - ரை:— கொடிய பாவங்களில் மூழ்காமல், பேயான பெண்ணை அழித்தவன் எழுந்தருளியிருக்கின்ற கோயில், இளமையான யானைக் கூட்டங்கள் சேர்ந்திருக்கின்ற திருமாலிருஞ்சோலையைத் தொழ வேண்டுமென்று கருதுதலைத் துணிதலே வெற்றிக்குக் காரணம்; இதனை முறை என்று நினைமின்.

வி - கு:—மூழ்காது தொழக் கருதுவது என முடிக்க. கருதுவது துணிவது என்பன: தொழிற்பெயர்கள். அழன் + கொடி - அழக் கொடி; அழன் - பிணம். கொடி - பெண்ணுக்கு ஆகுபெயர்.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு. "திருமலையைத் தொழுவோம்" என்று அறுதியிட்டு நினைக்கை அமையும் வெற்றிக்குக் காரணம் என்கிறார்.

வழக்கு என நினைமின்-நான் சொல்லுகிற இதுவே முறை என்று புத்தி பண்ணுங்கோள். வல் வினை மூழ்காது - உங்

---

1. அல்லாதார் - சாதனத்தைக் கருதி வலம் செய்யுமவர்கள்.

2. 'கண்களாலே பருகுவாரைப் போலே' என்கையாலே, பிராப்பியத் துவம் தெளிவாம்; சாதனம் கருதி அன்று என்பது வெளிப்படை.

3. நித்தியசூரிகளைப் போன்று கைங்கர்யமே தாரக போஷக போக்கி யங்களானால், வேறு பயன்களினுடைய ஆசைக்கும், அதன் மூலமாக உண்டா கும் சாதன புத்திக்கும் காரணமில்லை என்பதனை விளக்க வந்தது 'நித்தியசூரி கள்' என்று தொடங்கும் வாக்கியம். மறுவலிடாது - திரும்பாது.

களால் போக்கிக் கொள்ள ஒண்ணாத மஹா பாவங்களைப் போக்கவேண்டி இருந்தீர்களாகில். அழுக்கொடி அட்டான் அமர் பெருங் கோயில் - பூதனையை முடித்தவன் "இங்ஙனம் ஒத்த விரோதிகள் வந்த போதாக நம்மை [1] நெடுங்கை நீட்டாக்கி வைக்க ஒண்ணாது" என்று நித்திய வாசம் பண்ணுகை யாலே கொண்டாடத் தக்க கோயில். அழன் என்று பிணமாய், அத்தால் - பேய் என்றபடி.

மழக் களிறு இனம் சேர் மால் இரும் சோலை தொழக் கருதுவதே துணிவது சூதே - இள ஆனைக் கன்றுகள் இனம் இனமாகச் சேராநின்றுள்ள திருமலையைத் தொழவேண்டும் என்னும் எண்ணத்திலே துணிவதே இவ் ஆத்மாவுக்கு வெற்றிக்குக் காரணம். எல்லா இலக்கணங்களும் நிறைந்து இருப்பதொரு யானை நின்ற இடத்தே ஆயிரம் யானைகள் வந்து சேருமாதலின் 'மழக் களிற்று இனம் சேர்' என்கிறார். ஆயின், அங்குக் களிறு நிற்கிறதோ? எனின், அங்கு நிற்கிறதும் சோலை மழகளிறே அன்றோ; [2] "தென்னானை" என்பர் திருமங்கை மன்னன். இதனால், அங்குண்டான விலங்குகளும் ஓர் இனமாய் ஆயிற்று இருப்பது என்பதனைத் தெரிவித்தபடி. (9)

221.

சூது என்று களவும் சூதும் செய்யாதே,
வேதம் முன் விரித்தான் விரும்பிய கோயில்,
மாதுறு மயில் சேர் மாலிருஞ் சோலை
போது அவிழ் மலையே புகுவது பொருளே.

பொ - ரை :—வெற்றி என்று நினைத்து சூதையும் களவையும் செய்யாமல், முற்காலத்தில் வேதங்களை விரித்துக் கூறிய இறைவன் விரும்பி வசிக்கிற கோயில், பெண் மயில்களோடு கூடிய ஆண் மயில்கள் வசிக்கிற மாலிருஞ்சோலையில் இருக்கிற அரும்புகள் மலர்கின்ற திருமலையில் சென்று சேர்தலே பேறு ஆம்.

வி - கு :—செய்யாது புகுவது பொருள் எனக் கூட்டுக. புகுவது : தொழிற் பெயர். போது - மலரும் பருவத்தை யுடைய பேரரும்பு; "காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி" என்ற இடத்துப் 'போது' என்பது இப்பொருளை யுடையதாதல் காண்க.

---

1. நெடுங்கை நீட்டாக்கி - மிக்க தூரமாக்கி.

2. திருநெடுந் தாண்டகம்.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1] பல படியாலும் திருமலையே மிக உயர்ந்த பேறு என்று தொடங்கினபடியே முடிக்கிறார்.

சூது என்று களவும் சூதும் செய்யாதே - நமக்கு நல்ல வாய்ப்பாக இருந்தது என்று சூதும் களவும் செய்யாமல். [2] நூல்கள் 'செய்தல் ஆகாது' என்று இவ் இரண்டனையும் விலக்குகின்றமையால் '**சூதும் களவும் செய்யாதே**' என்கிறார். இனி, களவாவது - [3] "ஆத்மாவைத் திருடின திருடன்" என்கிற படியே, ஆத்மாவைத் திருடுதல் என்றும், சூதாவது - ஸாத்விகனாய்ப் பிராமாணிகனாய் இருப்பான் ஒருவன் 'சர்வேஸ்வரன் இரக்ஷகன்' என்று நம்பி இருந்தால், காண்கிற சரீரத்துக்கு அப்பால் ஓர் ஈஸ்வரனாவது என்? ஆத்மாவாவது என்? என்று காணக் காணக் கொள்ளை கொள்ளுதல் என்றும் [4] கூறலுமாம். வேதம் முன் விரித்தான் விரும்பிய கோயில் - இவை ஒருவர்க்கு வாராதபடி வேதார்த்தத்தை விளக்கி விவரித்த கீதோபநிஷத்து ஆசாரியன் வாழ்கிற கோயில்.

மாது உறு மயில் சேர் மாலிருஞ்சோலை - பேடையை உற்ற மயில் சேர்ந்திருக்கின்ற மாலிருஞ்சோலை. இனி, மாதுறு மயில் என்பதற்கு, மாது என்று மென்மையைக் கூறுகிறதாய், சுகுமாரமாய்க் கண்ணுக்கு இனியதான மயில் என்று பொருள் கூறலுமாம். இதனால், அங்குள்ள பொருள்களெல்லாம் [5] மிதுனமேயாய் வசிக்கும் என்பதனைத் தெரிவித்தபடி. போது அவிழ் மலையே புகுவது பொருளே - கொடியும் தண்டும் சருகும் இடை இடையே பூவுமாக இருத்தல் அன்றித் திருமலைதன்னை முட்டாக்கிடப் பூத்துக் கிடத்தலின் '**போதவிழ்மலை**' என்கிறார்.

---

1. முதலில் "சார்வது சதிரே" என்று தொடங்கி, முடிவில் "புகுவது பொருளே" என்று முடிப்பதனால் "சதிர்", "பொருள்" என்ற இரண்டனையும் பேற்றினைக் குறிக்கும் சொற்களாகக் கருதி அவதாரிகை அருளிச் செய்கிறார் 'பல படியாலும்' என்று தொடங்கி.

2. நூல்கள் இவ்விரண்டனையும் விலக்குதலைத் திருக்குறள் முதலிய நூல்களால் உணரலாகும்.

3. பாரதம் உத்யோக பர்வம். இது திருதராஷ்டிரனைப் பார்த்து சனத்ஸுஜாதன் கூறுவது.

4. களவாவது, காணாதே அபகரித்தல்; சூதாவது, கண்முன்னே அபகரித்தல் என்றபடி.

5. மிதுனம் - ஆண் பெண் இரட்டை.

[1] திருமலையைக் கிட்டும் அதுவே இவ் ஆத்மாவுக்குப் பிரயோஜனமாக முடிவது; அல்லாதவை எல்லாம் பயன் அற்ற காரியங்கள் என்கிறார். (10)

222.

பொருள் என்று இவ் உலகம் படைத்தவன் புகழ்மேல்
மருள் இல் வண் குருகூர் வண் சடகோபன்
தெருள் கொள்ளச் சொன்ன ஓர் ஆயிரத்துள் இப்பத்து
அருளுடையவன் தாள் அணைவிக்கும் முடித்தே.

பொ - ரை ;—பயன்படும் என்று இவ் உலகத்தைப் படைத்தவனுடைய நற்குணங்கள் விஷயமாக மயக்கம் இல்லாத, வளப்பம் பொருந்திய திருக்குருகூரில் அவதரித்த கொடையையுடைய ஸ்ரீ சடகோபரால் ஆத்மாக்கள் ஞானத்தைக் கொள்ளும்படியாக அருளிச்செய்யப்பட்ட ஒப்பற்ற ஆயிரம் பாசுரங்களில் இப் பத்துப் பாசுரங்களும் பாவங்களை அழித்து, அருட் கடலான இறைவனுடைய திருவடிகளில் சேர்ப்பிக்கும்.

வி - கு :—புகழ்மேல்: மேல் ஏழனுருபு. இப் பத்து முடித்து அணைவிக்கும் எனக் கூட்டுக.

ஈடு :—முடிவில், [2] இத் திருவாய்மொழி கற்றாரை, இத் திருவாய்மொழிதானே பிறப்பினைப் போக்கி அழகர் திருவடிகளிலே சேர்த்துவிடும் என்கிறார்.

பொருள் என்று இவ் உலகம் படைத்தவன் புகழ்மேல் மருள் இல் வண் குருகூர் வண் சடகோபன் சொன்ன ஆயிரம் - பயன் படும் என்று இவ் உலகங்களை உண்டாக்கினவனுடைய கல்யாண குணங்கள் விஷயமாக அறிவின்மையின் வாசனையும் இல்லாத ஆழ்வாரால் அருளிச்செய்யப்பட்ட ஆயிரம். [3] இவற்றை உண்டாக்கி உடல் உறுப்புக்களைக் கொடுத்துவிட்டால், கொடுத்த உறுப்புக்களைக்கொண்டு ஐம்புல இன்பங்களில் ஆசையுடையராய்க் கை கழியப் புக்கால், "நம் நினைவு தப்பியது அன்றோ" என்று நெகிழ்ந்து கைவாங்குகை யன்றி,

1. பொருள் புகுவதே என்று ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டித் 'திருமலையைக் கிட்டுமதுவே இவ்வாத்மாவுக்குப் பிரயோஜனமாக முடிவது; அல்லாதவை எல்லாம் பயனற்ற காரியங்கள்' என்கிறார்.

2. "இப் பத்து முடித்து அருளுடையவன் தாள் அணைவிக்கும்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. இந்தப் பத்தின் 221-ஆம் பக்கம் வியாக்கியானம் ஈண்டு நினைவு கூர்க.

"ஒருநாள் அல்லா ஒருநாளாகிலும் பயன்படாதோ?" என்று பலகாலும் படைப்பவனாதலின் '**பொருள் என்று இவ் உலகம் படைத்தவன்**' என்கிறார். மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர் ஆகையாலே அவனுடைய குணவிஷயமாக மருள் இல்லாதவர் ஆதலின் '**மருளில் சடகோபன்**' என்கிறார்.

பிரபந்தமோ? எனில், தெருள் கொள்ளச் சொன்ன ஓர் ஆயிரம் - மருள் உண்டாய்க் கழிய வேண்டிற்று இவர்க்கு. இவருடைய பிரபந்தத்தைக் கற்றார்க்கு முதலிலே அறிவின்மைதான் இல்லை. கேட்டார்க்குத் தெளிவைப் பிறக்கும்படி அன்றோ அருளிச்செய்தது. தம்முடைய ஞானத்துக்கு அடி சர்வேஸ்வரன்; இவர்களுடைய ஞானத்திற்கு அடி தாம் என்றபடி. பிரபந்தந்தான் செய்வது என்? என்னில், அருளுடையவன் தாள் அணைவிக்கும் - அருளையுடையவன் திருவடிகளிலே சேர்த்துவிடும். அருளைக் கொண்டே பரம்பொருளை நிரூபிக்கவேண்டி இருத்தலின் [1] '**அருளையுடையவன்**' என்கிறார். முடித்து - அது செய்யுமிடத்துச் சம்சார சம்பந்தத்தை வாசனையோடே போக்கித் திருவடிகளிலே சேர்த்துவிடும். ஒரு ஞானலாபத்தைப் பண்ணித் தந்து விடுதலே அன்றி, [2] அர்த்தகிரியாகாரியாய் இருக்குமாதலின் '**முடித்தே**' என ஏகாரங் கொடுத்து ஓதுகின்றார். (11)

முதற்பாட்டில், திருமலையாழ்வாரைக் கடுக அடைமின் என்றார்; இரண்டாம்பாட்டில், திருமலையோடு சேர்ந்திருக்கின்ற திருப்பதியை அடைமின் என்றார்; மூன்றாம்பாட்டில், அதனோடு சேர்ந்த அயன்மலை அமையும் என்றார்; நான்காம் பாட்டில், [3] "திரிதந்தாகிலும்" என்கிறபடியே, மீண்டும் திருமலையை அடைமின் என்றார்; ஐந்தாம் பாட்டில், அதனோடு சேர்ந்த புறமலையை அடைமின் என்றார்; ஆறாம் பாட்டில், திருமலைக்குப் போகும் வழியை நினைத்தலே அமையும் என்றார்; ஏழாம் பாட்டில், அவ் வழியோடு சேர்ந்த திருமலையை அடைமின் என்றார்; எட்டாம்பாட்டில், நித்தியசூரிகளுக்குக் கூட அடையத் தக்கது ஆகையால் திருமலையே அடையத் தக்கனவற்றுள் உயர்ந்தது என்றார்; ஒன்பதாம் பாட்டில், "திருமலையைத் தொழக்

1. "அருளுடைய பெருமாள்" என்று கள்ளழகர்க்கு ஒரு திருநாமம்.

2. அர்த்தகிரியாகாரி - பிரார்த்திக்கப்படுகின்ற பலனைக் கொடுக்கக் கூடியது.

3. கண்ணிநுண் சிறுத்தாம்பு, 3.

கடவோம்" என்கிற துணிவே வேண்டுவது என்ருர்; பத்தாம் பாட்டில், எல்லாப்படியாலும் திருமலையாழ்வாரை அடைதலே பேறு என்று தலைக்கட்டினுர்; முடிவில், இது கற்ருர்க்குப் பலம் அருளிச்செய்தார்.

முதல் திருவாய்மொழியாலே, "மணியை வானவர் கண்ணனைத் தன்னதோர் அணியை" என்கிறபடியே, விலக்ஷண விஷயமாகையாலே பிரிந்தாரைக் கண்ணுஞ்சுழலை இடப் பண்ணும் என்ருர்; இரண்டாந் திருவாய்மொழியாலே, கூடினுலும் அதனைப் போன்று மறப்பிக்கும் என்ருர்; மூன்ருந் திருவாய்மொழியால், கூடிய பொருள்தான் நிரதிசய சுகரூபம் என்ருர்; நான்காந் திருவாய்மொழியில், அவ் விஷயத்துக்குத் தேசிகரோடு அநுபவிக்கப் பெருமையாலே மோகத்தை அடைந்தார்; ஐந்தாந் திருவாய்மொழியால், தாம் ஆசைப்பட்டபடியே வந்து கலந்தமை சொன்னுர்; ஆருந் திருவாய்மொழியால், தம் இழவுக்கும் அவன் ஐயங்கொள்ளும் என்ருர்; ஏழாந் திருவாய்மொழியால், தம்முடைய சம்பந்தி சம்பந்திகளையும் ஏற்றுக்கொண்டபடியைச் சொன்னுர்; எட்டாந் திருவாய்மொழியால், அவனுடைய மோக்ஷ பரதத்துவத்தை அருளிச்செய்தார்; ஒன்பதாந் திருவாய்மொழியால், பிராப்பிய நிஷ்கர்ஷம் பண்ணினுர்; பத்தாந் திருவாய்மொழியால், அறுதியிட்ட பிராப்பியத்தைப் பெறுகைக்குத் திருமலையாழ்வாரை அடையச் சொன்னுர்.

—:o:—

திருவாய்மொழி நூற்றந்தாதி

கிளர் ஒளி சேர் கீழ் உரைத்த பேறு கிடைக்க
வளர் ஒளி மால் சோலைமலைக்கே — தளர்வறவே
நெஞ்சை வைத்துச் சேரும் எனும் நீடு புகழ் மாறன் தாள்
முன் செலுத்துவோம் எம் முடி. (20)

இரண்டாம்பத்து ஈட்டின் தமிழாக்கம்
முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானுர் சீயர் திருவடிகளே அரண்.
வடக்குத் திருவீதிப் பிள்ளை மலரடி வாழ்க.
நம்பிள்ளை நற்ருள் வாழ்க.
மாறன் மலரடி வாழ்க.

ஸ்ரீ:

பிற்சேர்க்கை

—(௦)—

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

செய்யுள்	பக்கம்
அணைவதரவணை	208
அந்தாமத்தன்பு	118
அறியாக்காலத்து	65
ஆடியாடி	91
ஆணல்லன்	137
ஆராவமுதமாய்	128
இரக்கமனத்தொடு	99
இருடீகேசன்	198
இருளின்திணி	23
இலங்கை செற்றவனே	102
இவளிராப்பகல்	103
இனியார் ஞானங்களால்	71
இஃதேயானுன்னை	246
உய்ந்து போந்து	157
உள்ளுளாவி	106
உன்னைச்சிந்தை	158
ஊழிதோறூழி	16
ஊனில் வாழுயிரே	58
எக்காலத்தெந்தை	259
எங்குமுளன் கண்ணன்	230
எந்தாய்தண்திரு	165
எப்பொருளும்தானாய்	126
எம்மாவீட்டுத்	243
எவரும் யாவையும்	46
எனக்கேயாட்செய்	250
எனதாவியுள் கலந்த	67
என்னுள் கலந்தவன்	124
ஏஎபாவம்பரமே	37
ஏத்தவேழுலகும்	53
ஏழைபேதை	112

செய்யுள்	பக்கம்
ஏறனைப்பூவனை	40
ஏறேலேழும்	264
ஒத்தார்மிக்காரை	61
ஓவாத்துயர்ப்பிறவி	220
கடலும் மலையும்	13
கடிவார்தண்ணந்	81
கண்ணித்தண்ணந்	169
கண்தலங்கள்	233
கருத்தில் தேவும்	49
கருமவன்பாசம்	275
களிப்பும் கவர்வும்	82
கள்வா வெம்மையும்	51
காக்குமியல்வினன்	50
காண்பாரார்	228
காமுற்ற கையறவோடு	10
கிடந்திருந்து	225
கிளரொளியிளமை	269
கிறியென நினைமின்	278
குழாங்கொள்பேர்	85
குறிக்கொள்ஞானம்	78
கூறுதலொன்றுராக்	139
கேசவன்தமர்	175
கோட்பட்ட சிந்தை	8
கோவிந்தன்	183
சதிரிளமடவார்	271
சிக்கெனச் சிறிது	149
சிரீதரன் செய்ய	196
சிறப்பில் வீடு	254
சீர்மைகொள்வீடு	232
சூதென்று களவும்	284

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
செய்யேல் தீவினை	249	புணர்க்குமயனும்	215
சேர்ந்தார் தீவினைகட்கு	73	புலனைந்து மேயும்	218
சொல்லீரெம்மானை	136	பொருளென்றிவ்	286
சோராத வெப்பொருட்கும்	29	பொன்முடியம்	134
தகவுடையவனே	105	போகின்றகாலம்	167
தகும் சீர்த் தன்	44	மகிழ்கொள் தெய்வம்	257
தாமரைக் கண்ணனை	152	மதுசூதனையன்றி	189
தாமோதரனை	202	மாதவனென்றது	180
திண்ணன்வீடு	34	மாறிமாறிப் பல	163
திரிவிக்கிரமன்	192	முடியாததென்	160
திருவுடம்புவான்சுடர்	122	முன்னல் யாழ்	76
திறமுடைவலத்தால்	277	யானே என்னை	262
தீர்த்தனுலகளந்த	222	வஞ்சனே என்னும்	108
தேவுமெப்பொருளும்	42	வண்ணமாமணி	203
தோற்றோம் மடநெஞ்சம்	20	வலஞ்செய்து வைகல்	281
நலமென நினைமின்	279	வழக்கென நினைமின்	283
நாரணன்	178	வள்ளலே மதுசூதனு	155
நீந்துந்துயர்ப்பிறவி	213	வாட்டமில் புகழ்	114
நைவாயவெம்மே	17	வாணுதலிம்மடவரல்	96
நொந்தாராக் காதல்	24	வாமனனென்	194
பட்டபோது	110	வாயுந்திரை	4
பயனல்ல செய்து	273	வாராயுன் திருப்பாதம்	258
பலபலவேயாபரணம்	131	விடலில் சக்கரம்	266
பள்ளியாலிலை	48	விட்டிலங்கு	186
பற்பநாபன்	200	வேவாராவேட்கை	26
பாம்பணைமேல்	133	வைகுந்தா	144

செய்யுள் அகராதி முற்றிற்று.

ஸ்ரீ:

பிற்சேர்க்கை II

—:o:—

வியாக்கியானத்தில் வந்துள்ள

ஐதிஹ்யங்கள்

'பிரமன் முதலானோர் எப்போதும் திருமேனியைப் பற்றி இருப்பர்களோ?' என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, 'ஒரோ ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங்கொடுக்கிறான்; அந் நீர்மையை விடமாட்டாமையாலே ஆழ்வார்கள் அதனையே வாய் புலற்றுகிறார்க ளத்தனை' என்றருளிச்செய்தார். பக். 41.

எம்பார் திருவாய்மொழிக்குப் பொருள் அருளிச்செய்து வருங்கால், இப் பாசுரம் வந்த வளவில், எம்பார் கோஷ்டியிலே 'இவ்வாத்மாவுக்குப் பிரதம குரு யார்?' என்ற ஒரு வினா எழுந் தது; இருந்த முதலிகளுள் சிலர் 'ஆசாரியன்' என்றார்கள்; சிலர் 'ஆசாரியன் திருவடிகளிலே அடைவதற்கு வா என்று அழைத்துக்கொண்டு போய்ச் சேரவிட்ட ஸ்ரீவைஷ்ணவர்' என்றார்கள்; எம்பார் 'அங்ஙனன்று காண், அவன் இவனை அழைத்தாலும் இவன் 'அல்லேன்' என்னுதபடி "இசை வித்து" என்கிறபடியே அகவாயிலே இருந்து இசைவித்த சர் வேஶ்வரன்காண் பிரதமகுரு' என்றருளிச்செய்தார். ப. 62.

முன்பே சேர்ந்திருக்கு மவர்கட்குத் திண்ணிதான மதி யைக் கொடுக்குமவனை. அதாவது, அம்பரீடன் தவம்செய்து கொண்டிருக்க, சர்வேஶ்வரன் இந்திரன் வேடத்தைத் தரித் துக்கொண்டு சென்று 'உனக்கு வேண்டியவற்றை வேண்டிக் கொள்' என்ன, 'நான் உன்னை ஆராதிக்குமவன் அல்லேன் காண்; என்னைச் சமாதி பங்கம் பண்ணுதே போக வல்லையே, உன்னைக் கும்பிடுகிறேன்' என்றான். ப. 74, 75.

குணாதிகவிஷய மாகையாலே முடிந்து பிழைக்கவும் ஒட் டாது; 'ஸ்ரீபரதாழ்வான் இன்னம் ஒருகால் அவ் இராமபிரானு டைய முகத்தில் விழிக்கலா மாகில், அருமந்த பிராணனைப் பாழே போக்குகிறது என்?' என்று இராச்சியத்தையும் தொட்டுக்கொண்டு கிடந்தான். ப. 92.

மால்யவானில் பெருமாள் இருந்தபோது கார்காலத்திலே பட்ட பாட்டைக் கண்டு 'வசிஷ்டசிஷ்யன் ஒரு பெண் நிமித்த மாக இப்படிப் படுவதே!' என்று பழித்துச் சிரித்திருந்தான்

விரக்தன் ஆகையாலே; இப்போது 'இவளைப் பிரிந்து தேகத்தைத் தரித்துக்கொண்டிருப்பதே!' என்கிறான் விசேஷஜ்ஞன் ஆகையாலே. ப. 97.

"'ஈஸ்வரனுக்கு விக்ரஹ மில்லை விபூதி இல்லை' என்கிறவர்கள் முன்பே ஆப்ததமரான இவர் 'திருஉடம்பு வான் சுடர்' என்னப் பெறுவதே! 'ஈஸ்வரனுக்கு விக்ரஹ மில்லை, குண மில்லை' என்கிறவர்கள் செய்து வைக்கமாட்டாத பாவ மில்லை, அவர்களைச் சார்ந்து அதனைக் கேட்க இராதபடி பெருமாள் நமக்குச் செய்த உபகாரம் என்?" என்றருளிச்செய்வர் நஞ்சீயர். ப. 122, 123.

"அப் பரம்பொருள், தேவன் அசுரன் மனிதன் விலங்கு இவைகளாக இல்லை, பெண்ணாகவு மில்லை, அலியாகவு மில்லை, ஆணாகவு மில்லை, வேறுபட்ட மற்றைப் பொருள்களாகவுமில்லை, குணமாக இல்லை, மற்றைக் கிரியையாக இல்லை, சேதனனுமாக இல்லை, அசேதனனுமாக இல்லை" என்னும் வேத புராண வாக்கியங்களை மேற்கோள் காட்டி அருளிச்செய்தவாறே, அருகிருந்து கேட்டிருந்த ஒரு தமிழ்ப்புலவர் 'சுவாமீ! நாட்டில் காணப்படுகின்ற மூன்றின் படியும் அல்லனாகில் சொல்லப்படுகின்ற பொருள் சூன்யமோ பின்னை?' என்று கேட்க, பட்டர் "பிள்ளை இயலறிவுக்குப் போந்திருந்த தில்லையே! ஆணல்லன் பெண்ணல்லள் அலியுமல்லது என்றார் இலரே? 'அல்லன், அல்லன், அல்லன்' என்கின்றாராதலின் 'புருஷோத்தமன்' என்பதனை அச்சொற்கள் தாமே தோற்றுவிக்கின்றனவே?" என்றருளிச்செய்தார். 138.

ஆளவந்தாருக்குக் குருகை காவலப்பன் அருளிச்செய்ததாக அருளிச்செய்யும் வார்த்தை :—'அப்பன் ஸ்ரீ பாதத்திலே ஒரு ரஹஸ்ய விசேஷ முண்டு' என்று மணக்கால் நம்பி அருளிச்செய்ய, அது கேட்கவேணும் என்று ஆளவந்தாரும் எழுந்தருள, கங்கை கொண்ட சோழபுரத்தேற, அப்பனும் அங்கே ஒரு குட்டிச்சுவரிலே யோகத்திலே எழுந்தருளியிருக்க, 'இவரைச் சமாதி பங்கம் பண்ணவொண்ணாது' என்று சுவருக்குப் புறம்பே பின்னே நிற்க, அப்பனும் யோகத்திலே எழுந்தருளி இருக்கிறவர் திரும்பிப் பார்த்து, இங்கே சொட்டைக்குலத்தில் ஆரேனும் வந்தார் உளரோ? என்று கேட்டருள, 'அடியேன்' என்று ஆளவந்தாரும் எழுந்தருளிவந்து கண்டு, 'நாங்கள் பின்னே தெரியாதபடி நிற்க இங்ஙனம் அருளிச்செய்கைக்கு

ஏது என் ?' என்ன, 'நானும் தானுமாக அநுபவியாநின்றால், பெரியபிராட்டியார் அன்பு நிறைந்த வார்த்தைகளைக் கூறினும் அவள் முகங்கூடப் பாராத சர்வேஶ்வரன் என் கழுத்தை அமுக்கி நாலு மூன்று தரம் அங்கே எட்டிப் பார்த்தான்; இப்படி அவன் பார்க்கும்போது சொட்டைக் குடியில் சிலர் வந்தார் உண்டாகவேணும் என்றிருந்தேன் காணும்' என்றருளிச்செய்தார். ப. 151.

சர்வேஶ்வரன் ஒருவனை விஷயீகரித்தால், அது பின்னை அவன் அளவில் நில்லாதே யன்றோ? "இருடிகள் குடியிருப்பை அழித்தான், மைதிலியைப் பிரித்தான், நம் உயிர் நிலையிலே நலிந்தாற்போலே ஸ்ரீ ஜடாயு மஹாராஜரை நலிந்தான், இவையெல்லாம் செய்யமாட்டானே இவன் இனி; ஜீவிக்கிற நாளிலே 'நாம் செய்யும் நன்மை இவன் விலக்காதொழிவது காண்' என்றிருந்தோம்; அந் நாளில் அது பெற்றிலோம்; நாம் தேடி இருந்தது முந்துற முன்னம் சித்திக்கப்பெற்றோம்; இவன் நாம் செய்யும் நன்மை விலக்காதானான அளவு பிறந்த இன்றும் இழக்கவேண்டுமோ? வேண்டுவன செய்யப் பாரும்; நீர் இராய்த்திருந்தீராகில், குடல்தொடக்கு உடையாரிலே ஒருவன் செய்யுமித்தனை யன்றோ? நாம் இவனுக்கு வேண்டுவன செய்ய நீர் கடக்க நில்லீர்" என்றார் பெருமாள். இங்கு ஸ்ரீ விபீஷணாழ்வான் பக்கல் இருந்த அன்பு இராவணன் அளவும் சென்றது. "ஸ்ரீ மஹாராஜர்க்குச் சத்துரு" என்று வாலியைக் கொன்ற பின்னர் மஹாராஜர் கண்ணீர் பொறுக்கமாட்டாமல் தாமும் கண்ணீர் விழவிட்டார். "மங்கள குணமுள்ள மாலாகாரரே! உம்முடைய மனமும் எக் காலமும் தர்மத்தில் செல்லப்போகிறது, உம்முடைய வம்சத்தில் பிறந்தவர்களுக்கும் நீண்ட ஆயுள் உண்டாகப்போகிறது" என்கிறபடியே ஸ்ரீ மாலாகாரர் பக்கல் அங்கீகாரம் அவன் சந்தானத்தளவும் சென்றது. ஸ்ரீ கண்டாகர்ணன் பக்கல் பண்ணின விஷயீகாரம் அவன் தம்பியளவும் சென்று 'நீ அவனுக்கு நல்லையாகில் அவன் முன்னாகப் போ" என்றருளிச்செய்தான். ப. 173.

எம்பார் இத் திருவாய்மொழி அருளிச்செய்யப் புக்கால் "'ஸ்ரீ வைஷ்ணவன் ஆனேன் என்கிறார்" என்பாராம். ப. 174.

பிராட்டியே! அழகிய மணவாளன் உன்னுடைய நாயகன் என்ற சம்பந்தத்தைக்கொண்டே அவனைத் தரிசிக்கின்றோம், கிட்டுகின்றோம், அவனுக்குத் தொண்டுகளைச் செய்கின்றோம்,

அத் தொண்டினால் அவனுக்கு விளைகிற பிரீதியைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளுகிறோம் என்று அருளிச்செய்தார் பட்டர். ப. 180.

எம்பார் இத் திருவாய்மொழி அருளிச்செய்யப் புக்கால், இருந்தவர்களை "யார்" என்று கேட்டுக் கதவுகளையும் அடைப்பித்து, குஹ்யமாகவாம் அருளிச்செய்வது. ப. 238.

இங்கே எம்பார்க்கு ஆண்டான் அருளிச்செய்த வார்த்தையை நினைவுகூர்வது. அதாவது, 'கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டுபேர் கைகொடுத்தால், எடுக்குமவர்களுக்கும் எளிதாய் ஏறுமவனுக்கும் எளிதாய் இருக்குமிறே; அப்படியே ஆகிறது என்று. ப. 248.

மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர் 'தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே' என்று பிரார்த்திப்பான் என்? திருவுள்ளமானபடி செய்கிறான் என்றிராதே' என்று பிள்ளை திருநறையூர் அரையர் எம்பாரைக் கேட்க, "அது கேளீர்; முன்பு பிரிந்தன்று; பின்பு பிரிவுக்குப் பிரசங்கம் உண்டாயன்று; இரண்டும் இன்றி இருக்கத் திருமார்விலே இருக்கச்செய்தே, 'அகலகில்லேன், அகலகில்லேன்' என்னப் பண்ணுகிறது விஷய ஸ்வபாவமிறே; அப்படியே பிராப்ய ருசி பிரார்த்திக்கப் பண்ணுகிறது" என்றருளிச்செய்தார். ப. 251, 252.

"பிள்ளை திருநறையூர் அரையரும், பட்டரும் பிரதக்ஷணம் பண்ணுகிற்கப் பின்னே சேவித்துக்கொண்டு போனேன்; அல்லாதார் கடுங்குதிரைபோலே வாராநிற்க, இவர்கள் திருக்கோபுரங்களையும் திருமாளிகைகளையும் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்துக்கொண்டு வந்தார்கள்" என்று நஞ்சீயர் அருளிச்செய்வர். ப. 283.

ஸ்ரீ:

பிற்சேர்க்கை III

—:o:—

பெரியோர்கள் உரைத்த உரைநயங்கள் உள்ள இடங்கள்

(நிர்வாகங்கள்)

I ஸ்ரீ ஆளவந்தார் :—

1. "தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்துக் கலந்தோம்" பக். 60.

2. "அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்து, அறியா மா மாயத்து அடியேனை வைத்தாயால்" பக். 65.

3. "அம் தாமம் வாழ் முடி சங்கு ஆழி நூல் ஆரம் உள" பக். 120.

4. "பிரணயி பிரீதி அநுசந்தானங் காண் இது" பக். 143.

5. "எக்காலத்து எந்தையாய் என்னுள் மன்னில்" பக். 263, 264.

6. "எம் மா வீடு" முன்னுரை. பக். 268.

II எம்பெருமானர் :—

1. "தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்துக் கலந்தோம்" பக். 61.

2. "அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்து அறியா மா மாயத்து அடியேனை வைத்தாயால்" பக். 65.

3. "அம் தாமம் வாழ் முடி சங்கு ஆழி நூல் ஆரம் உள" பக். 120.

4. "விட்டிலங்கு செஞ்சோதித் தாமரை பாதங் கைகள் கண்கள்" முன்னுரை. பக். 190.

5. "எக்காலத்து எந்தையாய் என்னுள் மன்னில்" பக். 264.

6. "எம் மா வீடு" முன்னுரை. பக். 268.

7. "கரும வன் பாசம் கழித்து உழன்று உய்யவே" பக். 278.

III திருக்குருகைப்பிரான் பிள்ளான் :—

1. 'மேல் திருவாய்மொழியின் ஈற்றில் "மூவா முதல்வா" என்றார்; அங்கு "முதல்வா" என்றதனால் தோன்றிய முதன்மையினை இத்திருவாய்மொழியில் விரித்து அருளிச்செய்கிறார். பக். 33.

2. "ஆனந்தாஸ்ருவுக்கு யோக்கியமான கண்களாலே ஶோகாஸ்ரு பிரவஹிக்கிறது யாரைச் சேதநராகக்கொண்டு" பக். 93.

3. "மலம் அறு மதிசேர் மாலிருஞ்சோலை" பக். 281.

IV கூரத்தாழ்வார் :—

1. "கரும வன் பாசம் கழித்து உழன்று உய்யவே-திரு மலையை அடையுமது ஒழிய இது நம்மாற் செய்து தலைக்கட்டப் போமோ!" பக். 275.

V எம்பார் :—

1. "எம்பார் இத்திருவாய்மொழிக்குப் பொருள் அருளிச் செய்து வருங்கால், இப்பாசுரம் வந்தவளவில்" பக். 62.

2. "தவளவண்ணர் தகவுகள் என" பக். 105.

VI பட்டர் :—

1. "எங்கும் நாடி நாடி" பக். 94.

2. "எரியணை அரக்கும் மெழுகும் ஒக்கும்" பக். 100.

3. "தவளவண்ணர் தகவுகள் என" பக். 105

4. "நீரான தன்மையாகிறது ஆஶ்ரிதபரதந்திரராகை" பக். 185.

5. "விட்டிலங்கு செஞ்சோதித் தாமரை பாதங் கைகள் கண்கள்" பக். 187.

6. "சிரீதரன் செய்ய தாமரைக் கண்ணன் என்றென்று இராப் பகல் வாய் வெரீஇ" பக். 197.

7. "இத் திருவாய்மொழி மோக்ஷப்பரதத்துவம் சொல்லுகிறது" பக். 206.

VII பிள்ளைதிருநறையூர் அரையர் :—

1. "எரியணை அரக்கும் மெழுகும் ஒக்கும்" பக். 100.

ஸ்ரீ:

பிற்சேர்க்கை IV

—:o:—

வியாக்கியானத்தில் வந்துள்ள உவமைகள்

துக்கத்தை யுடையவர்கள் தங்களோடு ஒத்த துக்கத்தை யுடையவர்களைக் கழுத்தைக் கட்டிக்கொண்டு கிடந்து கூப்பிட்டு ஆற்றாமைக்குப் போக்குவிட்டுத் தரிக்குமாறு போன்று. ப. 3.

ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு கிடந்து கூப்பிட்டாற் போன்று. ப. 4.

பகவானைத் தியானிப்பவர்கள் சலியாமல் இருப்பது போன்று. ப. 5.

அலைகடல் நீர் குழம்ப அகடாட ஓடி அகல்வான் உரிஞ்ச முதுகில் மலைகளை மீது கொண்டு வருமீனை மறவா திருப்பாரைப் போன்று. ப. 5.

கிராமணிகள் பிறர்க்குத் துன்பம் செய்துகொண்டே யாகங்களும் பண்ணிப் பவித்திரங்களும் முடிந்திட்டுத் தார்மிகர் என்னும்படி திரிவது போன்று. ப. 6.

எங்கள் ஐயர் கவலைக்கடலில் மூழ்கினவர் ஆனார் என்று பிராட்டி கூறியது போன்று. ப. 7.

இலங்கையை அழித்து என்னை அழைத்துச் செல்லின் செல்லும் அச் செயல் அவ் இராமனுக்கு ஒத்ததாக இருக்கும் என்று கூறி இருந்த பிராட்டியைப் போன்று. ப. 7.

புழுகிலே தோய்த்தெடுத்தாற் போன்று. ப. 9.

சிறையுறவு போன்று. ப. 11.

அவன் அவர்களுக்குக் கூட்டு இல்லாதாப் போலே. ப. 12.

மடல் ஊருவாரைப் போன்று. ப. 14.

சன்னி சுரம் வந்தவர்களைப் போன்று. ப. 14.

திருப்பாற்கடலோடு திருமலையோடு பரமபதத்தோடு வாசியறத் தேடுவாரைப் போன்று. ப. 14.

இராம இலக்குமணர்கள் பிராட்டியைத் தேடித் திரிந்தது போன்று. ப. 15.

எம்மின் முன் அவனுக்கு மாயும் தோழிமாரையும் என்னையும் போன்று. ப. 16.

தாமரை குடிபோன பொய்கை போன்று. ப. 18.

அம்பு வாய் உள்ளே கிடக்கப் புறம்பே சமாதானம் பண்ணிற் போல. ப. 18.

பெருங்காற்றால் சிதற அடியுண்ட மேகங்கள் போன்று. ப. 18.

எதிரி எளியனானால் பகைவர்கள் கூட நின்று உருகுமாறு போன்று. ப. 19.

நாட்டார் பொய்யைப் போன்று. ப. 19.

பகைவர்களானாலும் நோவுபட்டாரை ஐயோ! என்ன அன்றோ அடுப்பது; அதுபோன்று. ப. 22.

காதுகரை 'உடன் பிறந்தீர்' என்னுமாறு போன்று. ப. 22.

மடல் எடுப்பாரைப் போன்று. ப. 23.

இருளின் புறவிதழை வாங்கி வயிரத்தைச் சேரப் பிடித்தாற் போன்று. ப. 24.

தொட்டார் மேல் தோஷமாம்படி காற்றுப் படவும் பொறு திருத்தல் போன்று. ப. 25.

எரிகின்ற பெரிய நெருப்பினால் நெருப்பு மலை எரிவது போன்று. ப. 27.

காட்டி லுள்ள மரத்தை அம் மரத்தினுள் மறைந்திருக்கும் நெருப்பானது உள்ளே இருந்து எரித்துக்கொண்டு வருவது போன்று. ப. 27.

வேவ ஆராத வேட்கை நோய் போன்று. ப. 27.

கேசி தொடக்கமான விரோதிகளைப் போக்கியது போன்று. ப. 28.

கடல் வெதும்பினால் விளாவ நீர் இல்லை என்னுமாறு போன்று. ப. 32.

இரத்தினத்திற்கும் காட்டில் உலர்ந்து கிடக்கும் வறட்டிக்கும் வேறுபாடு உண்டு என்று சொல்லவேண்டுவது போன்று. ப. 38.

யானைக்கும் தனக்குத் தக்க வாதம் என்பது போன்று. ப. 39.

சர்வேஶ்வரன் கருடவாகனன் என்று இறுமாந்துஇருக்குமாறு போன்று. ப. 41.

ஒரு பூவில் நான்கு பூக்கள் பூத்தாற் போன்று. ப. 43.

இராஜசேவை செய்வார் தத்தமது அடையாளங்களோடே சட்டையும் பிரம்புமாய்ச் சேவிக்குமாறு போன்று. ப. 53.

வல்லார் ஆடியது போன்று. ப. 54.

இந்திரன் இழந்த தனது இராச்சியத்தைப் பெறுதற்கு வணங்கியது போன்று. ப. 54.

பரம்பொருள் நேர்பட்டாற் போலே. ப. 54.

இராச்சியத்தை இழந்த இராஜபுத்திரனை ஒருவன் இராச்சியத்திலே பிரவேசிப்பித்தால் இவனாலே நாம் இப்பேறு பெற்றோம் என்று அவன் அவனைக் கொண்டாடுமாறு போன்று. ப. 58.

மதுவாகிற அசுரனைப் போக்கியது போன்று. ப. 59.

ஆயிரத்தில் ஒன்றும் கடலிற் குளப்படியும் போலே. ப. 60.

ஊமத்தங்காய் தின்று மயங்கினாரைப் போன்று. ப. 66.

நெஞ்சு அறியாதபடி காரியம் செய்வாரைப் போன்று. ப. 66.

பிரளயாபத்திலே பிரிந்து நசியாதபடி உலகத்தைப் பாதுகாத்தது போன்று. ப. 70.

பிராட்டி ஒற்றைக்கண்ணள், ஒற்றைக்காதள் முதலியவர்கள் நடுவே இருந்தாற் போன்று. ப. 72.

கெடுமரக்கலம் கரை சேர்ந்தது போன்று. ப. 74.

தண்ணீரினின்றும் மேலே எடுக்கப்பட்ட மீன் போன்று. ப. 75.

பிராட்டியினுடைய சேர்க்கைக்குத் தடையாக நின்ற சூர்ப்பணகையைப் போக்கியது போன்று. ப. 75.

சிற்றின்பம் துக்கமே யாயது போன்று. ப. 82.

கடற்கரை வெளியில் நோக்கியது போன்று. ப. 84.

கலியர் கலஅரிசிச் சோறு உண்ணவேண்டும் என்றிருக்குமாறு போன்று. ப. 84.

ஜனஸ்தானம் அடியறுப்புண்ட பின்பு தண்டகாரண்யத்தில் முனிவர்கள் குடி ஏறியது போன்று. ப. 86.

காசினை இழந்தவனுக்கும் பொன்னினை இழந்தவனுக்கும் இரத்தினத்தை இழந்தவனுக்கும் இழந்ததனால் உளதாய துன்பம் ஒத்ததாக இராது வேறுபடுவது போன்று. ப. 89.

எங்கேனும் ஒரு காட்டில் இரத்தினங்கள் பறியுண்டால் நாட்டிலே அரசன் வாசலிலேசென்று அவ்வரசன் பெயரினைச் சொல்லிக் கூப்பிடுவது போன்று. ப. 89.

ஆற்றாமையாலே துடித்த துடிப்பு ஆடல் ஆறைப் போலே. ப. 92.

தாமரை இதழ்களினின்றும் விசேடமாகப் பாய்கிற தண்ணீரைப் போன்று. ப. 93.

கொம்பை இழந்த தளிர்போலே. ப. 94.

அம்பு பட்டு முடிந்தாரையும் நீரிலே புக்கு முடிந்தாரையும் முகத்திலே அறியலாமாறு போன்று. ப. 95.

ஜனக மகாராஜன் பிராட்டியினுடைய பேரழகினை நினைந்து "இச் சீதை" என்று சுட்டிக் கூறியது போன்று. ப. 96.

கருமுகை மாலை தேடுவார் சூடுவதற்காகவே தேடுவது; சும்மாட்டைக் கொள்ள அன்று; அது போன்று. ப. 98.

அரக்கும் மெழுகும் நெருப்பிற்குள் புகில் கரிந்துபோம்; கடக்க இருக்கில் வலிக்கும்; அதனைச் சார்ந்து நின்றுழி உருகும்; அது போன்று. ப. 100.

புழுக் குறித்தது எழுத்தானாற் போன்று. ப. 101.

விடாயர் இருந்த இடத்தே சாய்கரகம்போலே. ப. 102.

விடாயர் கற்பூரத்திரள் வாயில் இடுமாறு போன்று. ப.107.

பகலை இரவாக்கியும் ஆயுதம் எடேன் என்று கூறிப் பின்னர் எடுத்தும் செய்த செயல்போலே. ப. 108.

காதுகரைச் சொல்லுமாறு போன்று. ப. 109.

தஞ்சம் அல்லாதாரைத் தஞ்சம் என்றிருந்தால் சொல்லுமாறு போன்று. ப. 109.

ஒரு மஹா பாரதத்துக்குப் போரும் போலே. ப. 110.

தம்மையும் மறந்து உம்மையும் மறந்து உண்டு உடுத்துத் திரியும் சம்சாரிகளைப் போன்று. ப. 112.

தாமரையில் முத்துபட்டாற் போன்று. ப. 113.

காட்டில் எறித்த நிலாவைப் போன்று. ப. 113.

தமப்பன் செல்வம் புத்திரனுக்குக் கிடைக்க வேண்டியது முறையாமாறு போன்று. ப. 115.

குழந்தை வாயில் முலையைக் கொடுத்துக் கிரந்தியைச் சிகிச்சை செய்வது போன்று. ப. 117.

அவ் யானையைத் தன் திருக்கையாலே குளிர ஸ்பர்சித்து நின்றாற் போலே. ப. 117.

கமர் பிளந்த இடத்திலே நீர் பாய்ச்சுவாரைப் போன்று. ப. 119.

விடாயர் மடுவிலே சேருமாறு போன்று. ப. 119, 210.

கற்பக தரு வாடினால் அதில் பூவும் தளிரும் வாடுவன போன்று. ப. 120.

புறம்பு ஒளியாய் உள்ளும் மண்பற்றி இருக்கை அன்றி நெய் தினுங்கினாற் போன்று. ப. 123.

முத்துக் கோக்க வல்லவன் முகம் மாறிக் கோத்தவாறே விலை பெறுமாறு போன்று. ப. 125.

அகஸ்தியர்க்கு உடன் பிறந்தவன் என்னுமாறு போன்று. ப. 125, 275.

எப்போதும் உண்ணாநின்றாலும் மேன்மேல் என விருப்பத்தை விளைக்கும் அமிருதம் போன்று. ப. 129.

முக்தன், தன்னை அநுபவிக்கும்போது படுமாறுபோன்று. ப. 132.

தமப்பனது தனம் கிடந்தால் புத்திரன் அழித்து ஜீவிக்குமாறு போன்று. ப. 141.

ஸ்ரீ ஜனகராஜன் திருமகள் 'ஆர்ய புத்திர!' என்னுமாறு போன்றும், திருவாய்ப்பாடியில் பெண்கள் 'கிருஷ்ண!' என்னுமாறு போன்றும். ப. 145.

பகதத்தன் விட்ட சக்தியைத் தன் அந்தப்புரத்திலே ஏற்றாற் போலே. ப. 148.

செருப்பை வைத்துத் திருவடி தொழப் புக்காற் போலே. ப. 149.

பெரு வெள்ளத்துக்குப் பல வாய்த்தலைகள் போன்று. ப. 158.

கடலிலே கிடந்த ஒரு துரும்பு திரைமேல் திரையாகத் தள்ள வந்து கரையிலே சேருமாறு போன்று. ப. 163.

பிராட்டியினுடைய சேர்க்கைக்கு விரோதியாய் இருந்தவனைப் போக்கியது போன்று. ப. 166.

'விண்ணப்பஞ் செய்வார்கள்' என்னுமாறு போன்று. ப. 171.

சமிதை பாதி சாவித்திரி பாதியாமாறு போன்று. ப. 177.

அணைக்குக் கிழக்குப்பட்ட நீரைப் போன்று. ப. 181.

அம்பி துணையாக ஆறு இழிந்த ஆற்றைப் போன்று. ப. 181.

வாலி போன வழியை அடைத்து மஹாராஜர் குறும்பு செய்தாற் போன்று. ப. 182.

பிராஹ்மணர் செல்வம் மிகுந்தால் யாகம் செய்யுமாறு போன்று. ப. 184.

சேற்றிலே விழுந்த மாணிக்கத்தை எடுத்துக் கழுவி விநியோகம் கொள்ளுமாறு போன்று. ப. 186.

எதிர்சூழல் புக்கு ஒருவனைப் பிடிக்க நினைத்தவன் அவன் போம் வரம்புக்கு எதிர் வரம்பே வருமாறு போன்று. ப. 190.

நாம் நினைத்தவற்றைத் தலைக்கட்ட ஒட்டாத கர்மம் போன்று. ப. 190.

இராக்ஷச சாதியில் விபீஷணன் முதலியோரை வைத்து முருடரான ராவணன் முதலியோர்களை அழித்தாற் போன்று. ப. 199.

நித்திய சூரிகளுக்குத் தன்னை அநுபவிக்கக் கொடுக்குமாறு போன்று. ப. 199.

குளப்படியிலே கடலை மடுத்தாற் போன்று. ப. 203.

மாலியவான் தொடக்கமானோர் இராவணனுக்குச் சொன்ன ஹிதம் போலே. ப. 208.

வழிபறிக்கும்நிலத்தில் தம்கைப்பொருள்கொண்டு தப்பினார் மகிழ்ச்சியை யுடையவர்கள் ஆமாறு போன்று. ப. 208.

தாய் தந்தையர்கள் இருந்த படுக்கையிலே குழந்தை சென்று ஏறுமாறு போன்று. ப. 210.

கோடைக் காலத்தில் குளிர்ந்த தடாகத்தை அடைவது போன்று. ப. 210.

சேஷ பூதன் அடிமை செய்தல்லது தரியாதது போன்று. ப. 210.

பால் குடிக்கும் குழந்தை வாயில் முலைவாங்கினுல் தரியாதது போன்று. ப. 216.

சில பொருள்களை வறை நாற்றத்தைக் காட்டி முடிக்குமாறு போன்று. ப. 219.

உவா அல்லாத மற்றை நாட்களில் கடல் தீண்டலாகாது என்னுமாறு போன்று. 219.

கிருஷிகனுனவன் 'ஒரு கால் பதர்த்ததே அன்றோ' என்று சோம்பிக்கைவாங்காதே மேலேமேலே கோலுமாறுபோன்று. ப. 221.

கர்மங்கட்குக் கட்டுப்பட்டவர்களைப் போன்று. ப. 221.

பொசுக்கின பன்றி போலே. ப. 232.

மழைபெய்யும் மேகம் போலே. ப. 274.

குளிர்சுரத்தால் பீடிக்கப் பட்டவர்கள் ஒருகால் நாக்கு நனைக்க என்னுமாறு போன்று. ப. 260.

அக்காரம் என்னும் மரமானது கோட்புக்குப் பழுத்த பழம் போன்று. ப. 261.

ஒரு காரியமும் இல்லாதாரைப் போன்று. ப. 263.

அவதாரங்களைப் போன்று. ப. 270.

சூற்பெண்டுகள் சுரம் ஏறுமாறு போன்று. ப. 273.

முராசுரன் பல ஆயிரம் பாசங்களாலே தன்னை மறைய வரிந்து கொண்டிருந்தது போன்று. ப. 276.

பெரியோர்களுடைய மனத்தைப் போன்று. - ப. 278.

மறுவற்ற ஆழ்வார் திருவுள்ளம் போன்று. ப. 278.

திருச்சித்திரகூடமலையின் பக்கத்தில் பிராட்டியையுங் கூடக் கையைப் பிடித்துக்கொண்டு உலாவினுற் போன்று. ப. 282.

ஸ்ரீ:

பிற்சேர்க்கை V

பெரியார்களைப் பற்றிய குறிப்பு

அம்மங்கிஅம்மாள் இவர், எம்பெருமானாரால் திருத்திப் பணிகொள்ளப்பட்ட அருளாளப்பெருமாள் எம்பெருமானுடைய மாணக்கர்; அன்பில் தாய் ஒத்தவர் ஆதலின் 'அம்மாள்' என்று அழைக்கப்பட்டார். "இப் பாசுரத்திற்கு, முன்னும் பின்னும் போருகிறபடி ஒழிய, சப்த ஸ்வாரஸ்யத்தைப்பற்ற எம்பெருமானர் அருளிச்செய்து போருவது ஒன்றுண்டு; அம்மங்கி அம்மாளும் அதனையே நிர்ப்பந்தித்துப் போரும்" என வியாக்கியானத்தில் இவரைப்பற்றிய குறிப்புக் காணப்படுகிறது, (பக். 21.)

இப் பத்தில் வந்துள்ள மற்றைப் பெரியார்களைப்பற்றிய குறிப்புக்களை முதற்பத்து ஈட்டின் தமிழாக்கத்தின் ஈற்றில் காண்க.

ஸ்ரீ:

பிற்சேர்க்கை VI

“கிளரொளியிளமை” என்ற திருவாய்மொழியின் பொருளைத் தன்னகத்துக் கொண்டிருக்கின்ற பரிபாடலில் உள்ள பாடல் ஒன்றையும் அதன் உரையையும், அழகர் திருமலையின் சிறப்பைக் கூறுகின்ற சிலப்பதிகாரத்தில் உள்ள பகுதியையும் அதன் உரையையும் ஈண்டுத் தருகின்றேன். இங்கு, அவ் இரண்டும் ஒருதலையாகப் படித்து உணர்ந்து கோடற்குரியவை.

பரிபாடல்

பதினைந்தாம் பாடல்.

திருமால்.

புலவரை யறியாப் புகழொடு பொலிந்து
நிலவரை தாங்கிய நிலைமையிற் பெயராத்
தொலையா நேமிமுத றொல்லிசை யமையும்
புலவராய் புரைத்த புனைநெடுங் குன்றம்
பலவெனின் ஆங்கவை பலவே; பலவினும்
நிலவரை யாற்றி நிறைபய னொருங்குடன்
நின்றுபெற நிகழுங் குன்றவை சிலவே;
சிலவினுஞ் சிறந்தன, தெய்வம் பெட்புறும்
மலரகன் மார்பின் மைபடி குடுமிய
குலவரை சிலவே; குலவரை சிலவினும்

பதினைந்தாம் பாடலுரை

1-5. அறிவெல்லையால் அறியப்படாத புகழுடனே பொலிந்து நிலவெல்லையைத் தாங்கிய நிலைமை நீங்காத கெடாத சக்கரவாள முதலாகத் தொல்லிசைப் புலவர் ஆராய்ந்துரைத்த கொண்டாடப்படும் நெடிய குன்றங்களைச் சிறப்புவகையாற் கூறாது பொது வகையாற் பலவென்றுரைக்கின்.

5. ஆங்கு; அசை.

5-10. அப் பலவற்றுள்ளும் நிலத்துள்ளோரைப் பசி வெம்மை ஆற்றி நிறை பயன்களெல்லாவற்றையும் எப்பொழுதும் அவர் பெறப் பயன் படு குன்று சில; அச் சிலவற்றுள்ளும் தெய்வங்கள் தாமாக விரும்பும் மலரையுடைய அகன்ற தடங்களுடனே மேகங்கள் படியும் சிகரத்தை யுடையவாகிய குலவரைகள் சில சிறந்தன,

சிறந்தது, கல்லறை கடலுங் கானலும் போலவும்
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்
எல்லாம், வேறுவே றுருவி னொருதொழி லிருவர்த்
தாங்கு நீணிலை யோங்கிருங் குன்றம்;
நாறிணர்த் துழாயோ னல்கி னல்லதை
ஏறுத லெளிதோ வீறுபெறு துறக்கம்?
அரிதிற் பெறுதுறக்க மாலிருங் குன்றம்
எளிதிற் பெறலுரிமை யேத்துகஞ் சிலம்ப!
அராவணர் கயந்தலைத் தம்முன் மார்பின்
மராமலர்த் தாரின் மாண்வரத் தோன்றி
அலங்கு மருவி யார்த்திமிழ் பிழியச்
சிலம்பா றணிந்த சீர்கெழு திருவிற்
சோலையொடு தொடர்மொழி மாலிருங் குன்றம்
தாம்வீழ் காமம் வித்துபு விளைக்கும்
நாமத் தன்மை நன்கனம் படியெழ

10-14. அக் குலவரைகள் சிலவற்றிலும் கல்லென அறையும் கடலும் கானலும் போல வேறு வேறாகிய நிறத்தினையும் பிரிவில்லாத சொல்லும் பொருளும் போல வேறுபடாத தொழிலினையு முடைய மாயோனையும் தம் முன்னோனையுந் தாங்கும் நீண்ட நிலைமையினையுடைய புகழான் உயர்ந்த இருங்குன்றம் சிறந்தது. புகழான் என்பது வருவிக் கப்பட்டது.

15. நல்கினல்லது - வெளிப்பட்டுக் கொடுப்பி னல்லது.

17-8. அவ் வரிதிற் பெறு துறக்கத்தை எளிதிற் பெறுத லுரிமை யான் மாலிருங்குன்றத்தை எல்லோருங் கேட்க ஏத்தக் கடவோம்; என்று ஏத்துகின்றார் :—

19. அரவின் மெல்லிய தலையாற் கவிக்கப்பட்ட தம்முன்.

20. மராம் - வெண்கடம்பு.

21-2. அசையும் அருவி மிக ஆர்த்து இழிதலாற் சிலம்பாறு அழகு செய்த இவ் வியக்கத்தக்க இருங்குன்றத்து (26)

22-6. அழகு பொருந்திய திரு வென்னுஞ் சொல்லொடும் சோலை யென்னும் சொல்லொடும் மாலிருங்குன்றம் என்னுஞ் சொல் தொடர்ந்த மொழியாகிய திருமாலிருஞ்சோலைமலை யென்னும் நாமத்தி னது பெருந்தன்மை நன்றாகப் பூமியின்கட் பரக்க, மகளிரும் மைந்த ரும் தாம் வீழ் காமத்தை வித்தி விளைக்கும் யாமத் தியல்பை யுடைய இவ் வையிருங் குன்றத்தெனக் கூட்டுக,

யாமத் தன்மையிவ் வையிருங் குன்றத்து
மன்புன லிளவெயில் வளாவவிருள் வளர்வெனப்
பொன்புனை யுடுக்கையோன் புணர்ந்தமர் நிலையே
நினைமின் மாந்தீர் ! கேண்மின் கமழ்சீர்
சுனையெலா நீல மலரச் சுனைசூழ்
சினையெலாஞ் செயலை மலரக் காய்கனி
உறழ நனைவேங்கை யொள்ளிணர் மலர
மாயோ னொத்தவின் னிலைத்தே
சென்று தொழுகல்லீர் ! கண்டு பணிமின்மே
இருங்குன் றென்னும் பெயர்பரந் ததுவே ;
பெருங்கலி ஞாலத்துத் தொன்றியல் புகழது
கண்டுமய றறுக்குங் காமக் கடவுள்
மகமுயங்கு மந்தி வரைவரை பாய
முகிழ்மயங்கு முல்லை முறைநிகழ்வு காட்ட

---

26. குறிஞ்சிக்குச் சிறுபொழுதாகலான் யாமங் கூறினர்.

27-8. நிலைபெற்ற குளிர்ச்சியையுடைய இளவெயில் சூழ அதனிடையே இருள் வளர்தலை யொக்கப் பீதாம்பரத்தை யுடையோன் தம்முன்னொடு கூடி அமர்ந்து நிற்கும் நிலையை.

29. மாந்தீர் ! நினைமின் ; இனி, அம் மலையது சிறப்பைக் கேண்மின்.

30-33. சுனையெல்லாம் நீல மலர அச்சுனை சூழ்ந்த செயலை சினையிடமெல்லாம் மலர்தலானும் காய்கனிகளொடு நிறம் மாறுபட வேங்கை இணர் மலர்தலானும் மாயோனை யொத்த இனிய நிலைமையையுடைத்து.

நீலமலரைச் சூழ்ந்த செயலைமலர் அவன் பொன்புனை உடுக்கைக்கு ஒப்பு ; குன்றத்துக் காய்கனி யுறழ மலர்ந்த வேங்கை அவன் மணிமுடிக்கு ஒப்பு.

34-7. பெருங்கலி ஞாலத்து இருங்குன்றென்னும் பெயர் பரந்த அத்துணையே பழைதாய் இயல்கின்ற புகழையுடைய அது காண மயரை அறுப்பதொரு வழிபடு தெய்வம் ; அதனால், சென்று அவனைத் தொழமாட்டாதீர் ! அதனைக் கண்டு பணிமின்.

38. மகவால் முயங்கப்பட்ட மந்தி ஒரு சிகரத்தினின்று ஒரு சிகரத்திற் பாய.

39. முகிழ் நெருங்கின முல்லை மகளிர் கற்பு நிகழ்ச்சியைக் காட்ட.

மணிமருணன் னீர்ச்சினை மடமயி லகவக்
குருகிலை யுதிரக் குயிலினங் கூவப்
பகர்குழல் பாண்டி லியம்ப வகவுநர்
நாநவில் பாடன் முழுவெதிர்ந் தன்ன
சிலம்பிற் சிலம்பிசை யோவா தொன்னார்க்
கடந்தட்டான் கேழிருங் குன்று.
தைய லவரொடுந் தந்தா ரவரொடும்
கைம்மக வோடுங் காத லவரொடும்
தெய்வம் பேணித் திசைதொழுதனிர் சென்மின் ;
புவ்வத் தாமரை புரையுங் கண்ணன்
வவ்வற் காரிருண் மயங்குமணி மேனியன்
எவ்வயி னுலகத்துந் தோன்றி யவ்வயின்
மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்
அன்பது மேஎ யிருங்குன் றத்தான்

40-45. சினையிடத்தவாகிய மணி மருள் மயில்கள் அகவவும் குருக்கத்தி இலை யுதிர அதன்கணிருந்து குயிலினம் கூவவும், முழைக்கட் சிலம்புகின்ற எதிரொலி ஓவாது, அவுணரை நேரே பொருது கொன்றனது நிறத்தையுடைய குன்றத்தின்கண்.

42-3. சுருதியை யுணர்த்துகின்ற குழலும் தாளமும் இயம்ப அவற்றைப் பாடுவாரது மிடற்றுப் பாடலும் முழவோசையும் எதிர்ந் தாற்போன்ற.

இசை யென்ற வழி, குழலொலியும் மிடற்றுப்பாடலும் குயிலினத்தது கூவற்கும் அதன் எதிரொலிக்கும் உவமை. தாள ஒலியும் முழவொலியும் மயிலது அகவற்கும் அதன் எதிரொலிக்கும் உவமை.

மந்திபாய (38) முல்லை காட்ட (39) என நின்ற செயவெனச் சங்கள், இசை யோவா தென்னும் (44) பிறவினை கொண்டன.

46-8. அதனை நும் மனைவியரோடும் இருமுதுகுரவரொடும் குழவிகளோடும் சுற்றத்தோடுங் கூடத் தெய்வமாக மதித்துத் திசை நோக்கித் தொழுது சென்மின்.

49-53. தன் நாபிகமலத்தை யொக்கும் கண்ணை யுடையனாய் நீரை வௌவுதலை யுடைய மேகமும் இருளும் நீலமணியும் போலு மேனியனாய் எல்லா உலகினும் வெளிப்பட்டு அவ்விடத்து உயிர்ப் பன்மையது மறுக்கத்தைச் செய்யும் பிறவித் துன்பத்தைக் களைவோன் அன்பு பட்டு இருங்குன்றத்தின்கண்ணன் ஆதலால்.

புவ்வமென்பது (49) பாகதச் சிதைவு.

கள்ளணி பசுந்துளவினவை கருங்குன் றனையவை
ஒள்ளொளியவை யொருகுழையவை
புள்ளணி பொலங்கொடியவை
வள்ளணி வளைநாஞ்சிலவை
சலம்புரி தண்டேந்தினவை
வலம்புரி வயநேமியவை
வரிசிலை வயவம்பினவை
புகரிணர்சூழ் வட்டத்தவை புகர்வாளவை
எனவாங்கு
நலம்புரீஇ யஞ்சீர் நாம வாய்மொழி
இதுவென வுரைத்தென முள்ளமர்ந் திசைத்திறை
இருங்குன் றத் தடியுறை யியைகெனப்
பெரும்பெய ரிருவரைப் பரவுதுந் தொழுதே.

கடவுள் வாழ்த்து.

இளம்பெருவழுதியார் பாட்டு.
மருத்துவன் நல்லச்சுதனார் இசை.
பண்ணோ திறம்.

இவ்வளவும் குன்றத்தை யேத்திக் கண்டார்க்கும் அதன் சிறப்புக் கூறி மேல் அதன்கண் நின்ற இருவரையும் வாழ்த்தி வேண்டிக்கொள் கின்றார் :—

57. கூர்மையணிந்த வளைநாஞ்சிலை யுடையை.

58. கோபமிக்க தண்டினை யேந்தினை.

59. வலம்புரியொடு வெற்றி நேமியை யுடையை.

60. வரிசிலையொடு வெற்றி அம்பினை யுடையை.

61. புகரொழுங்கு சூழ்ந்த பாராவளையினை யுடையை.

இவ் வாழ்த்துக்களுள், ஒள்ளொளியவை, ஒரு குழையவை, (55) வள்ளணி வளைநாஞ்சிலவை, (57) சலம்புரி தண்டேந்தினவை, (58) என வந்தன பலதேவன ; ஏனைய வாசுதேவன.

63-6. அழகிய சீரையும் அஞ்சப் படுதலையு முடைய வேதம் தனக்கு நன்மையை விரும்பி அவர் பெருமை ஈதென்று சொல்லுதலால், யாமும் உள்ளம் மேவி அச்சொற்களுள் அறிந்தவற்றைக் கூட்டி உரைத்தேமாய்ப் பெரும்புகழையுடைய இருவரையும் தொழுது வேண்டுதும் ; எமக்கு இவ் விருங்குன்றத்து அடியின்கண் உறைதல் எய்துக வென்று. என்றவாறு.

ஸ்ரீ:

சிலப்பதிகாரம்

மதுரைக் காண்டம்

11-காடு காண் காதை

திருமால் குன்றத்துச் செல்குவி ராயிற்
பெருமால் கெடுக்கும் பிலமுண்டு; ஆங்கு
விண்ணோ ரேத்தும் வியத்தகு மரபிற்
புண்ணிய சரவணம் பவகா ரணியோ
டிட்ட சித்தி யெனும்பெயர் போகி
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுள; வாங்குப்
புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்;
பவகா ரணிபடிந் தாடுவி ராயிற்
பவகா ரணத்திற் பழம்பிறப் பெய்துவிர்;

திருமால் குன்றத்துச் செல்லக்கடவீராயின், அவ்விடத்தே மிக்க மயக்கத்தைக் கெடுக்கும் பிலத்து நெறியுண்டென்றானென்க.

திருமால் குன்றம் - அழகர் திருமலை.

92. ஆங்கு - (இ - ள்.) அப்பிலத்துக்குள்ளே.

93-7. விண்ணோரேத்தும்........மூன்றுள

(இ - ள்) தேவர்களாலேத்தப்படுதலின் யாவரும் வியக்கத்தகும் மரபினை யுடைய புண்ணிய சரவணம் பவகாரணி இட்டசித்தி யென்னும் பெயர் எங்கும் பரக்கப்பட்டு இடையறாத சிறப்பினை யுடையவாய்த் தம்மிற் சேர்ந்திருக்கின்ற மூன்று பொய்கைகள் உள வென்றான் என்க.

97. ஆங்கு—(இ - ள்.) அவற்றுள்,

98-9. புண்ணிய சரவணம்.........எய்துவிர்

(இ - ள்.) புண்ணிய சரவண மென்னுநின்ற பொய்கையில் ஆடுவிராயின் இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திரவியாகரணமென்னும் இலக்கணத்தை உணர்வீரென்று னென்க.

இது நினைவின்றிப் பெறும் பேறு.

பொருந்துதல் - ஆடுதல். எய்துதல் - உணர்தல்.

100-101. பவகாரணி........எய்துவிர்

(இ - ள்.) அதுவன்றிப் பவகாரணி யென்னும் பொய்கைக்கண் ஆடுவீராயின் இப் பிறப்பிற்குக் காரணமாகிய பழம் பிறப்பை யுணர்வீர் என்று னென்க.

இட்ட சித்தி யெய்துவி ராயின்
இட்ட சித்தி யெய்துவிர் நீரே ;
யாங்குப் பிலம்புக வேண்டுதி ராயின்
ஓங்குயர் மலையத் துயர்ந்தோற் றொழுது
சிந்தையி லவன்றன் சேவடி வைத்து
வந்தனை மும்முறை மலைவலஞ் செய்தால்,
நிலம்பக வீழ்ந்த சிலம்பாற் றகன்றலைப்
பொலங்கொடி மின்னிற் புயலைங் கூந்தற்
கடிமல ரவிழ்ந்த கன்னிகா ரத்துத்
தொடிவளைத் தொளி யொருத்தி தோன்றி

முன்னும் பின்னுமாகிய இரு பிறப்பையும் உய்த்துணர்தற்குக் காரணமாகிய இப் பிறப்பிலே எப் பிறப்பையும் எய்த வுணர்வீ ரென்றானெனினு மமையும். இனிப் பவமென்பதனை விகாரமாக்கிப் பாவத்தான் வரும் பிறப்புக்களை யெனினுமாம்.

102-3. இட்டசித்தி.........நீரே

(இ - ள்.) அதுவன்றி இட்டசித்தி யென்னும் பொய்கையில் ஆடுவீராயின் நீர் நினைத்தவெல்லாம் எய்துதலையுடையீர் என்றானென்க.

இனி, எண்வகைச் சித்திகளையும் தவம் செய்து வருந்திப் பெறாமல் நினைத்துழிப் பெறுவீர் என்றான் எனினும் அமையும்.

104. ஆங்குப் பிலம்புக வேண்டுதிராயின் (இ - ள்.) அங்ஙனமாகிய அப்பிலத்துக்கட் புகுதலை விரும்புவீராயின் என்றானென்க.

105-7. ஓங்குயர் மலையத்து.........மலைவலஞ்செய்தால்

(இ - ள்.) மிகவு முயர்ந்த அத் திருமலைக்கணுள்ள பெரியோன் சேவடிகளைக் கையாற்றொழுது மனத்தானினைந்து வாக்காற் றுதித்தவுடனே அம்மலையை மும்முறை வலஞ்செய்தாலென்க.

அத்து : சாரியை. வைத்தல் - நினைத்தல் - தியானம். வந்தனை ஈண்டுத் துதித்தல். தொழுது வைத்து வந்தனையோடு வலஞ்செய்தாலென்க.

108-11. நிலம்பக வீழ்ந்த.........ஒருத்தி தோன்றி

(இ - ள்.) பாதாள கங்கைக்கு மேலுள்ள நிலம் கூறுபடும்படி அறுத்துத் தாழ்ந்த * சிலம்பாறென்னும் அகற்சியையுடைய ஆற்றினது

---

* சிலம்பாற்றினை நுபுரகங்கை யென்பர்.

இம்மைக் கின்பமு மறுமைக் கின்பமும்
இம்மையு மறுமையு மிரண்டு மின்றியோர்
செம்மையி னிற்பதுஞ் செப்புமி னீயிரிவ்
வரைத்தாள் வாழ்வேன் வரோத்தமை யென்பேன்
உரைத்தார்க் குரியே னுரைத்தீ ராயின்
திருத்தக் கீர்க்குத் திறந்தேன் கதவெனும்

கரைக்கண்ணதாகிய விளக்கத்தை யுடைய முகைகள் அவிழ்ந்த மலரை யுடையதோர் கோங்கின் நிழற்கண்ணே ஒரு பொற்கொடி போலவும் மின் போலவும் புயல்போலவும் ஐவகைக் கூந்தலையும் வளைந்த தொடி புனைந்த தோளிணையு முடையா ளொருத்தி தோன்றி யென்க.

சிலம்பாறு - அவ்வியாற்றின் பெயர். தலை - இடம். இன்: உவமவுருபு. கன்னிகாரம் - கோங்கு. தொடி - வளைவு. ஒருத்தி - ஓர் இயக்கி.

112-7. இம்மைக் கின்பமும்.........கதவெனும்

(இ - ள்.) அங்ஙனம் தோன்றினவள் இப்பிறப்பிற்கு இன்பமும் மறு பிறப்பிற்கு இன்பமும் இவை யிரண்டு மொழிந்து எக்காலத்தும் ஒன்றுந் தன்மையாய்க் கோட்டமின்றி அழிவற நிற்கும் இன்பமுமாகிய பொருள்கள் யாவை? அவற்றை நீயிர் உரைமின்; யான் [1] இத்தாள் வரைக் கண்ணே வாழ்வேன்; வரோத்தமை யென்று கூறப்படுவேன்; யான் வினவிய இவற்றை உரைத்தார் உளராயின், அவர்க்கு எத்தொழிற்கு முரியேன்; ஆதலின், திருத்தக்கீர்! உரைத்தீராயின், உமக்கு இப்பொழுதே இப் பிலவாயிற் கதவம் திறந்து தருவேன் என்று சொல்லுமென்றான் என்க.

இம்மைக் கின்பம் - புகழ்; மறுமைக் கின்பம் - புண்ணியம்; செம்மையில் நிற்பது - மோக்கம்; இனி, ஒருவர்க்கு இம்மை மறுமைகட்கு இன்பத்தைத் தந்து பூமியுள்ளளவும் நிற்பது புகழெனலுமாம்; [2] "ஒன்றாவுலகத்.........தொன்றில்" எனவும், [3] "இவணிசை யுடையோர்க் கல்ல தவண, துயர்நிலை யுலகத் துறையு ளின்மை, விளங்கக் கேட்ட மாறு கொல்" எனவுங் கூறினாராகலின். கதவந் திறத்தற் குரியேன் எனவுமாம். திறந்தேன், காலமயக்கம்; விரைபொருட்கண் வந்தது.

---

1. அடிமலையைப் பாதசைலமென்று வடநூலார் கூறுதலின், தாள்வரை என்றார்.

2. திருக். 233.

3. புறநா. 50.

கதவந் திறந்தவள் காட்டிய நன்னெறிப்
புதவம் பலவுள போகிடை கழியன
வொட்டுப் புதவமொன் றுண்டத னும்பர்
வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி
யிறுதியி லின்ப மெனக்கீங் குரைத்தாற்
பெறுதிர் போலுநீர் பேணிய பொருளெனும்
உரையீ ராயினு முறுகண் செய்யேன்
நெடுவழிப் புறத்து நீக்குவ னும்மெனும்
உரைத்தா ருளரெனி னுரைத்த மூன்றின்
கரைப்படுத் தாங்குக் காட்டினள் பெயரும்

118-23. கதவந் திறந்தவள்...........பேணிய பொருளெனும்

(இ - ள்.) அவருரைப்பின், அவள் கதவைத் திறந்து இது வென்று காட்டிய நல்ல வழியில் நீண்ட இடைகழி வாயில்கள் பல உள; அவை கழிந்தால், இரட்டைக் கதவை யுடைய வாயிலொன்று உண்டு; அதற்கு மேலாகச் சென்றால் வட்டிகையிலே எழுதின பாவைபோல்வா ளொருத்தி வெளிப்பட்டு ஈறில்லாத இன்பம் யாது? அதனை உரைத்தீராயின் நீயிர் இம் மூப்பொருளிலும் விரும்பிய பொருளைப் பெறுவீர் என்னும் என்றா னென்க.

புதவம் - வாயில். போகு - நெடுமை. ஒட்டுப்புதவம் - இரட்டைக் கதவம். உம்பர் - மேல். பூங்கொடி : உவமப் பெயர்; அன்றித் துவார வட்டிகையிற் பூங்கொடி அங்ஙனம் கேட்கும் எனவுமாம். இறுதியில் இன்பம் - வீடு. பெறுதிர் : முன்னிலைப் பன்மை. போலி : ஒப்பில் போலி.

124-5. உரையீராயினும்........நீக்குவன் நும்மெனும்

(இ - ள்.) வினையவள், யான் வினையகனை நும் பேதமையான் உரையீராயினும் நும்மை வருத்தஞ் செய்யேன்; நீர் போகக் கடவ நெடு நெறிக் கண்ணே நும்மைப் போக்குவனென்னு மென்றான் என்க.

126-7. உரைத்தாருளர்........பெயரும்

(இ - ள்.) அவள் அங்ஙனங் கேட்ட பொருளை உரைத்தாருளராயின், முற் கூறப்பட்ட பொய்கை மூன்றின் கரைக்கட் செலுத்தி அவை யிவை யென்று காட்டி மீளு மென்றானென்க.

ஆங்கு - அசை.

அருமறை மருங்கி னைந்தினு மெட்டினும்
வருமுறை யெழுத்தின் மந்திர மிரண்டும்
ஒருமுறை யாக வுளங்கொண் டோதி

வேண்டிய தொன்றின் விரும்பினி ராடின்
காண்டகு மரபின வல்ல மற்றவை
மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்றா மரைத்தா ளுள்ளம் பொருந்துமின்
உள்ளம் பொருந்துவி ராயின் மற்றவன்

புள்ளணி நீள்கொடி புணர்நிலை தோன்றும்

128-32. *அருமறை மருங்கின்.........மற்றவை*

(இ - ள்.) ஓதவும் உணரவு மரிய மறையிடத்தனவாகிய ஐந்தானும் எட்டானும் வரு முறைப்பட்ட எழுத்தினையுடைய மந்திர மிரண்டையும் ஒரு தன்மையாக மனத்தானினைந்து வாக்காற் றுதித்து, அவற்றுள் வேண்டியது யாதொன்று அதனில் விரும்பினீரா யாடின், அவற்றின் பயனுயவை, தவங்களைச் செய்தோர்க்கும் காணத் தகும் மரபினையுடைய வல்ல வென்று னென்க.

இனி, அங்ஙனமாகிய பொய்கைகளின் பயனை விரும்பினீராய் ஒன்றினுடின் அதன் பயனை நுகர்ந்த நெஞ்சம் பிறிதொன்றினையும் காதலியாதென்றுமாம். இன்னும், மற்றவை காண்டகு மரபின வல்ல வென்பதற்கு, இவை யொழிந்த தீர்த்தங்கள் இவைபோலக் கைமேற் காணத் தகும் மரபினையுடைய வல்ல வெனினு மமையும்.

133-8. *மற்றவை நினையாது..........துயர் கெடுக்கும்*

(இ - ள்.) அங்ஙனமாகிய பொய்கைகளின் பயனை விரும்பீராயின், அவற்றை நினையாதே அம் மலைமீது நின்றோனுடைய பொலிவு பொருந்திய தாமரை மலர்போலும் தாள்களை நினைமின்கள்; அங்ஙனம் நினைப்பீராயின், அப்பொழுதே அவனது கருடப்புள் எழுதிய கொடித் தண்டு பொருந்தி நிற்கும் நிலையிடத்தைக் காண்பீர்; கண்ட வளவிலே அவன் திருவடி நிலை நும்மை எடுத்துக்கொண்டு பிறவித் துன்பத்தைக் கெடுக்கு மென்றான் என்க.

நீயிர் ஆண்டுச் சென்று அது காண்பீ ரென்பான் தோன்று மென்றான். கெடுக்கும்: முற்று.

தோன்றிய பின்னவன் றுணைமலர்த் தாளிணை
ஏன்றுதுயர் கெடுக்கு மின்ப மெய்தி
மாண்புடை மரபின் மதுரைக் கேகுமின்.

138-9. இன்பமெய்தி..........ஏகுமின்

(இ - ள்.) அங்ஙனம் அதுகாண்டலிற் பின்னர்ப் பரமபதத்திற்குச் சேறலும் மெய்யென்று இன்பமெய்தி மாட்சிமை பொருந்திய மரபினையுடைய மதுரைக்குச் சென்மின்க ளென்று னென்க.

பெருந்தேவனார் பாரதம்

தேனோங்கு நீழல் திருவேங்கடம் என்றும்
வானோங்கு சோலை மலைஎன்றும்—தானோங்கு
தென்னரங்கம் என்றும் திருஅத்தியூர் என்றும்
சொன்னவர்க்கும் உண்டோ துயர்.

ஸ்ரீ

பிற்சேர்க்கை VII

வியாக்கியானத்தில் மேற்கோள்களாகக் காட்டப்பட்ட சுலோகங்களும் அவை உள்ள இடங்களும்.

1. விஷயேதே மஹாராஜ ராம வ்யஸந கர்ஶிதா:
அபிவ்ருக்ஷா: பரிம்லாநா: ஸபுஷ்பாங்குர கோரகா:.
பக். 3

2. உபதப்தோதகா நத்ய: பல்வலாநி ஸராம்ஸி ச
பரிஶுஷ்க பலாஶாநி வநாநி உபவநாநி ச. பக். 3.

3. ஸீதே ம்ருத: தே ஶ்வஶுர: பித்ராஹீந: அஸி லக்ஷ்மண.
பக். 4.

4. நசஸீதா த்வயாஹீநா நசாஹம் அபிராகவ
முகூர்த்தம்அபி ஜீவாவோ ஜலாத் மத்ஸ்யாவிவோத்
பக். 4, 75. [த்ருதௌ.

5. கிரயோ வர்ஷதாராபி: ஹந்யமாநா ந விவ்யது:
அபிபூயமாநா: வ்யஸநை: யதாதோக்ஷஜ சேதஸ:. பக். 6.

6. பதிஸம்யோக ஸுலபம் வயோ த்ருஷ்ட்வா ச மே பிதா
சிந்தார்ணவகத: பாரம்நாஸஸாத ஆப்லவோயதா. பக். 6.

7. ஶரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தந:
மாம் நயேத் யதி காகுத்ஸ்த: தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்.
பக். 7, 110.

8. பதிம் விஶ்வஸ்ய ஆத்மேஶ்வரம் ஶாஶ்வதம் ஶிவம்
பக். 9. [அச்யுதம்.

9. யஸ்ய அஸ்மி. பக். 9.

10. தௌ வநாநி கிரீம்ஶ்சைவ ஸரிதஶ்ச ஸராம்ஸிச
நிகிலேந விசிந்வாநௌ ஸீதாம் தஶரதாத்மஜௌ.
பக். 14.

11. ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதிச யாசதே
அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம.
பக். 15, 19, 64, 181.

12. ஏஹிஏஹி புல்லாம்புஜபத்ர நேத்ர
நமோஸ்துதே தேவவர அப்ரமேய·
ப்ரஸஹ்ய மாம் பாதய லோகநாத
ரதோத்த மாத் பூத ஶரண்ய ஸங்க்யே. பக். 15.

13. ஸபங்காம் அநலங்காராம் விபத்மாம் இவ பத்மிநீம்
வ்ரீளிதாம் துக்கஸந்தப்தாம் பரிம்லாநாம் தபஸ்விநீம்.
பக். 18.

14. அவ்யக்தலேகாம் இவ சந்த்ரலேகாம்
பாம்ஸு ப்ரதிக்தாம்இவ ஹேமலேகாம்
க்ஷதப்ரரூடாம்இவ பாணலேகாம்
வாயுப்ரபக் நாமிவ மேகலேகாம். பக். 18.

15. பதிஸம்மாநிதா ஸீதா பர்த்தாரம் அஸிதேக்ஷணு
ஆத்வாரம் அநுவவ்ராஜ மங்களாநி அபிதத்நுஷீ.
பக். 20.

16. ஸ தவ அதர்ஶநாத் ஆர்யே ராகவ: பரிதப்யதே
மஹதா ஜ்வலதா நித்யம் அக்நிநேவாக்நிபர்வத:. பக். 27.

17. அந்தர்தாஹேந தஹந: ஸந்தாபயதி ராகவம்
வந தாஹாபிஸந்தப்தம் கூடோக்நிரிவ பாதபம். பக். 27.

18. ஶாரதீம் ரஜநீஞ்சைவ த்ருஷ்ட்வா ஜ்யோத்ஸ்நாநு
[லேபநாம்
காமவ்ருத்தஞ்ச ஸுக்ரீவம் நஷ்டாஞ்ச ஜநகாத்மஜாம்
புத்த்வா காலமதீதஞ்ச முமோஹ பரமாதுர:. பக். 28.

19. ந மே துக்கம் ப்ரியாதூரே ந மே துக்கம் ஹ்ருதேதிவா
ஏததேவ அநுஶோசாமி வய: அஸ்யா: ஹி அதிவர்த்ததே.
பக். 28, 265.

20. அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்
க்ருதக்ருத்ய: ததாராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ.
பக். 30, 151.

21. க்ருஷ்ண ஏவஹி லோகாநாம் உத்பத்திரபிச அப்யய:
க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூதமிதம் விஶ்வம் சராசரம்.
பக். 36.

22. ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்த்ருத்ய புஜமுச்யதே
வேத ஶாஸ்த்ராத் பரம் நாஸ்தி நதைவம் கேஶவாத் பரம்.
பக். 37.

23. அத்யத்புதம் இதம் வாக்யம் தவ ராம ஶுபாக்ஷரம்
பாவநஃ ஸர்வலோகாநாம் த்வமேவ ரகுநந்தந. பக். 38.

24. நஹி பாலநஸாமர்த்யம் ருதே ஸர்வேஶ்வரம் ஹரிம்
ஸ்திதௌ ஸ்திதம் மஹாத்மாநம் பவதி அந்யஸ்ய
பக். 38, 49. [கஸ்யசித்.

25. ததஃ க்ரோத பரீதேந ஸம்ரக்த நயநேந ச
வாம அங்குஷ்ட நகாக்ரேணச்சிந்நம் தஸ்ய ஶிரோமயா.
பக். 39.

26. ஸஏஷ ப்ருது தீர்க்காக்ஷஃ ஸம்பந்தீ தே ஜநார்த்தநஃ.
பக். 43.

27. தம் இமம் ஸர்வஸம்பந்நம் ஆசார்யம் பிதரம் குரும்
அர்ச்யம் அர்ச்சிதும் இச்சாமஃ ஸர்வே ஸம்மந்தும்
பக். 43. [அர்ஹத.

28. பஹுஶ்யாம் பிரஜாயேயேதி. பக். 45, 258.
ஜ்ரும்பிதம் தத்தநுஃ த்ருஷ்ட்வா ஶைவம் விஷ்ணு
[பராக்ரமைஃ
அதிகம் மேநிரே விஷ்ணும் தேவாஃ ஸர்ஷிகணஃ ததா.
பக். 45.

29. ராமஃ கமலபத்ராக்ஷஃ ஸர்வ ஸத்வ மநோஹரஃ
ரூபதாக்ஷிண்ய ஸம்பந்நஃ ப்ரஸூதோ ஜநகாத்மஜே.
பக். 45.

30. ஏஷ ஸம்ப்ரஸாதஃ அஸ்மாத் ஶரீராத் ஸமுத்தாய பரஞ்ஜ்யோதிஃ
உபஸம்பத்ய ஸ்வேநரூபேண அபிநிஷ்பத்யதே.
பக். 45.

31. நாராயண பரோஜ்யோதிஃ. பக். 45.

32. ஸ்வாபாவிக அநவதிகாதிஶய ஈஶித்ருத்வம்
நாராயண த்வயி நம்ருஷ்யதி வைதிகஃ கஃ. பக். 46.

33. விஷ்ணுபக்தி விஹீநஃ யஃ ஸர்வ ஶாஸ்த்ரார்த்த வேத்யபி
ப்ராஹ்மண்யம் தஸ்ய நபவேத் தஸ்ய உத்பத்திஃ
பக். 46. [நிரூப்யதாம்.

34. யச்ச கிஞ்சித் மயா லோகே த்ருஷ்டம் ஸ்தாவர ஜங்கமம்
தத் அபஶ்யம் அஹம் ஸர்வம் தஸ்யகுக்ஷௌ மஹாத்
பக். 47 [மநஃ.

35. நஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்த்தநே
ஸமர்த்தோ த்ருஶ்யதே கஶ்சித் தம்விநா புருஷோத்தமம்.
பக். 50.

36. அந்யம் தேஹி வரம் தேவ ப்ரஸித்தம் ஸர்வஜந்துஷு
மர்த்யோ பூத்வா பவாநேவ மாம் ஆராதய கேஶவ.
பக். 52.

37. தேவகார்யாவதாரேஷு மநுஷ்யத்வம் உபேயிவாந்
த்வாமேவ ஆராதயிஷ்யாமி ஹரத்வம் வரதோபவ.
பக். 52.

38. அஞ்ஜலிம் ஸம்புடம் க்ருத்வா விஷ்ணும் உத்திஶ்ய ஶங்கரঃ
உமயா ஸார்த்தமீஶாநோ மாஹாத்ம்யம் வக்தும் ஜஹத.
பக். 52.

39. ஸங்கைঃ ஸுராணும் திவி பூதலஸ்தைঃ
ததா மநுஷ்யைঃ ககநேச கேசரைঃ
ஸ்துதঃ க்ரமாந்யঃ ப்ரசகார ஸர்வதா
மம அஸ்து மாங்கள்ய விவ்ருத்தயே ஹரிঃ. பக். 54.

40. ராமஸ்து ஸீதயா ஸார்த்தம் விஜஹார பஹூந் ருதூந்
மநஸ்வீ தத்கதঃ தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பிதঃ.
பக். 57.

41. மநஏவ மநுஷ்யாணும் காரணம் பந்தமோக்ஷயோঃ
பந்தாய விஷயாஸங்கி முக்த்யை நிர்விஷயம் மநঃ. பக். 59.

42. ஸர்வகந்தঃ ஸர்வரஸঃ. பக். 61.
நதஸ்ய கார்யம் கரணஞ்ச வித்யதே
நதத் ஸ மঃச அப்யதிகஶ்ச த்ருஶ்யதே. பக். 62.

43. ப்ரஹ்மேஶமத்ய கணநா கணநார்க்க பங்க்தௌ
இந்த்ராநுஜத்வம் அதிதேঃ தநயத்வயோகாத்
இக்ஷ்வாகுவம்ஶ யதுவம்ஶ ஜநிஶ்ச ஹந்த
ஶ்லாக்யாநி அமூநி அநுபமஸ்ய பரஸ்ய தாம்நঃ. பக். 65.

44. யஸ்மாத் தர்மாந் ஆசிநோதி ஸ ஆசார்யঃ
தஸ்மை நத்ருஹ்யேத் கதாசந
ஸஹி வித்யாதঃ தம் ஜநயதி தத் ஶ்ரேஷ்டம் ஜந்ம
ஶரீரமேவ மாதாபிதரௌ ஜநயதঃ. பக். 64.

45. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் விரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி
பக். 64, 148. [மாஶுசঃ.

46. மாதா பிதா ப்ராதா நிவாஸః ஶரணம் ஸுஹ்ருத் கதிః நாராயணః. பக். 64.

47. பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்தோ லக்ஷ்மணோ லக்ஷ்மிவர்த்தநః
ராமஸ்ய லோகராமஸ்ய ப்ராதுః ஜ்யேஷ்டஸ்ய நித்யஶః.
பக். 66.

48. பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதః ஸ்வபதஶ்ச தே.
பக். 66, 263.

49. குருஷ்வ மாம் அநுசரம் வைதர்மியம் நேஹ வித்யதே
க்ருதார்த்தః அஹம் பவிஷ்யாமி தவச அர்த்தః ப்ரகல்ப்யதே.
பக். 63, 241.

50. க்ரயஶ்ச பரிவ்ருத்திஶ்ச விபாகஶ்ச ஸமே யதி
ஆதஶாஹாத் நிவர்த்தந்தே விஷமே நவ வத்ஸராத்.
பக். 70.

51. வபுராதிஷு யோபிகோபி வா குணதః அஸாநியதா ததாவிதః
தத் அயம் தவ பாதபத்மயோः அஹம் அத்யைவ மயா ஸமர்ப்பிதః.
பக். 70, 255.

52. மமநாத யத் அஸ்தி யோஸ்மி அஹம் ஸகலம் தத் ஹி தவைவ மாதவ
நியதஸ்வம் இதி ப்ரபுத்ததீః அதவா கிந்நு ஸமர்ப்பயாமி தே.
பக். 70.

53. இச்சாத ஏவ தவ விஶ்வ பதார்த்த ஸத்தா
நித்யம் ப்ரியாஸ்தவது கேசந தேபி நித்யாः
நித்யம் த்வ தேகக பரதந்த்ர நிஜஸ்வரூபாः
பாவத்க மங்களகுணா ஹி நிதர்ஶநம் நः.
பக். 70.

54. த்விதா பஜ்யேயம் அப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்
ஏஷமே ஸஹஜோ தோஷः ஸ்வபாவோ துரதிக்ரமः.
பக். 74.

55. ந அஹம் ஆராதயாமி த்வாம் தவபத்தः அயம் அஞ்சலிः
வரார்த்திநாத்வம் வரத ப்ரயச்ச அபிமதாந் வராந்.
பக். 74.

56. அமர்ஷீ துர்ஜயோ ஜேதா விக்ராந்தோ புத்திமாந் பலீ
ராமஸ்ய தக்ஷிணோ பாஹு: நித்யம் பிராணோ [பஹிஸ்சர:.
பக். 75.

57. யேந யேந தர்தா கச்சதி தேந தேந ஸஹகச்சதி.
பக். 80.

58. ஸ:அஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹப்ரஹ்மணாவிபஶ்சிதா.
பக். 81.

59. ஆகர்ண பூர்ணை: இஷுபி: ஜீவலோகம் துராஸதை:
கரிஷ்யே மைதிலீஹேதோ: அபிஶாசம் அராக்ஷஸம்.
பக். 85.

60. கதாநு அஹம் ஸமேஷ்யாமி பரதேந மஹாத்மநா
ஶத்ருக்நேந ச வீரேண த்வயாச ரகுநந்தந.
பக். 90.

61. குஹேந ஸஹிதோ ராம: லக்ஷ்மணேந ச ஸீதயா.
பக். 90.

62. ராமலக்ஷ்மண ஸீதார்த்தம் ஸ்ரவந்தீம் வாரிநேத்ரஜம்
அஸக்ருத் ப்ரைக்ஷத ததா ந்ருத்யந்தீமிவ மாதரம்.
பக். 92.

63. ஶுபாம் நிமித்தாநி ஶுபாநி பேஜிரே
நரம் ஶ்ரியாஜுஷ்டம் இவ உபஜீவிந:. பக். 92.

64. ஸகாமம் அநவாப்யைவ ராமபாதௌ உபஸ்ப்ருசன்
நந்திக்ராமே அகரோத் ராஜ்யம் ராமாகமந காங்க்ஷயா.
பக். 92.

65. மந: பூர்வோ வாக் உத்தர:. பக். 92.

66. மதுரா மதுராலாபா கிமாஹ மம பாமிநீ
மத்விஹீநா வராரோஹா ஹநுமந் கதயஸ்வ மே.
பக். 93.

67. கிமர்த்தம் தவ நேத்ராப்யாம் வாரிஸ்ரவதி ஶோகஜம்
புண்டரீக பலாஶாப்யாம் விப்ரகீர்ணம் இவ உதகம்.
பக். 93.

68. ஸாதிர்யக் ஊர்த்வஞ்ச ததாபி அதஸ்தாத் நிரீக்ஷ மாணம் [அசிந்த்யபுத்திம்
ததர்ஶ பிங்காதிபதே: அமாத்யம் வாதாத்மஜம் ஸூர்யம் [இவ உதயஸ்தம்.
பக். 94.

69. மத்தஃ ஸர்வம் அஹம் ஸர்வம் மயி ஸர்வம் ஸநாதநே
அஹமேவ அவ்யயஃ அநந்தஃ பரமாத்மா ஆத்மஸம்ஶ்ரயஃ.
பக். 94.

70. தாதா யதாபூர்வம் அகல்பயத். பக். 95.

70-a. இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ
ப்ரதீச்சசைநாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ
பக். 96. [பாணிநா.

71. துஷ்கரம் க்ருதவாந் ராமஃ ஹீநோ யத் அநயா ப்ரபுஃ
தாரயதி ஆத்மநோ தேஹம் ந ஶோகேநாவஸீததி.
பக். 97.

72. துல்ய ஶீல வயோ வ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணாம்
ராகவஃ அர்ஹதி வைதேஹீம் தம்சேயம் அஸிதேக்ஷணா.
பக். 97.

73. நைவ தம்ஶாந் ந மஶகாந் ந கீடாந் ந ஸரீஸ்ருபாந்.
பக். 98.

74 நாயம் ஆத்மா ப்ரவசநேந லப்யோ நமேதயா ந பஹுநா
[ஶ்ருதேந
யம் ஏவ ஏஷ வ்ருணுதே தேநலப்யஃ தஸ்ய ஏஷ ஆத்மா
பக். 99. [விவ்ருணுதே தநூம் ஸ்வாம்.

75. விஷ்ணுநா ஸத்ருஶோ வீர்யே ஸோமவத் ப்ரியதர்ஶநஃ.
பக். 100.

76. தஹந்தீமிவ நிஶ்வாஸைஃ வ்ருக்ஷாந் பல்லவதாரிணஃ
ஸங்காதமிவ ஶோகாநாம் துக்கஸ்ய ஊர்மிமிவ ஸ்திதாம்.
பக். 103.

77. அமித்ரஃ ஸததம் ராமஃ ஸுப்தோபி ச நரோத்தமஃ
ஸீதேதி மதுராம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபுத்யதே.
பக். 104.

78. மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹத்அஸ்தி நஸம்ஶயஃ
ஸமர்த்தாவபி தௌ யந்மாம் நாவேக்ஷேதே பரந்தபௌ.
பக். 106.

79. அச்சேத்யஃ அயம் அதாஹ்யஃ அயம் அக்லேத்யஃ
[அசோஷ்ய ஏவச
நித்யஃ ஸர்வகதஃ ஸ்தாணுஃ அசலஃ அயம் ஸநாதநஃ,
பக். 107.

80. அந்தகாரே அதி தீவ்ரேச நரஸிம்ஹம் அநுஸ்மரேத்
தரதி அகிலதுக்காநி தாபார்த்தோ ஜலஶாயிநம்
கருடத்வஜ அநுஸ்மரணாத் விஷவீர்யம் ப்ரஶாம்யதி.
பக். 107.

81. சிரம் ஜீவதி வைதேஹீ யதி மாஸம் தரிஷ்யதி
ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸிதேக்ஷணாம்.
பக். 108.

82. ததோ மலிந ஸம்வீதாம் ராக்ஷஸீபிః ஸமாவ்ருதாம்
உபவாஸ க்ருஶாம் தீநாம் நிஶ்வஸந்தீம் புநः புநः.
பக். 109.

83. ஸஹி தேவைः உதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபிः
அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுः
பக். 114. [ஸநாதநः.

84. உதார வ்ருத்தார்த்த பதைः மநோரமைः
ததாஸ்ய ராமஸ்ய சகார கீர்த்திமாந்
ஸமாக்ஷரைः ஶ்லோகஶதைः யஶஸ்விநः
யஶஸ் கரம் காவ்யம் உதாரதீः முநிः. பக். 115.

85. கஜ ஆகர்ஷதே தீரே க்ராஹः ஆகர்ஷதே ஜலே
தயோः த்வந்த்வ ஸமம் யுத்தம் திவ்யம் வர்ஷ
பக். 116. [ஸஹஸ்ரகம்.

86. அதந்த்ரித சமூபதி ப்ரஹித ஹஸ்தமஸ்வீக்ருத
ப்ரணீத மணிபாதுகம் கிமிதிச ஆகுலாந்தः புரம்
அவாஹந பரிஷ்க்ரியம் பதகராஜம் ஆரோஹதः
கரிப்ரவர ப்ரும்ஹிதே பகவதः த்வராயை நமः.
பக். 116.

87. ஸ்தலஸ்தம் தாரயாமாஸ க்ராஹம் சக்ரேண மாதவः.
பக். 116.

88. ஸ ஏகாகீ ந ரமேத. பக். 120.

89. அவிகாராய ஶுத்தாய நித்யாய பரமாத்மநே
ஸதைகரூப ரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே.
பக். 121.

90. ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம் அணீயாம்ஸம் அணீயஸாம்
ருக்மாபம் ஸ்வப்ந தீகம்யம் வித்யாத்து புருஷம் பரம்.
பக். 121.

91. இச்சாக்ருஹீத அபிமதோருதேஹ:
ஸம்ஸாதி தாஶேஷ ஜகத்திதோஷஸள. பக். 123.

92. ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத:
மயா காலம் இமம் ப்ராப்ய தத்த: தஸ்ய மஹாத்மந:.
பக். 123.

93. தம் த்ருஷ்ட்வா தே ததா தேவா: ஶங்க சக்ர கதா தரம்
அபூர்வ ரூப ஸம்ஸ்தாநம் தேஜஸாம் ராஶிமூர்ஜிதம்.
பக். 123.

94. பஸ்பர்ஶாங்கம் ததா விஷ்ணு: பிஶாசஸ்யாபி ஸர்வத:
கரேண ம்ருதுநா தேவ: பாபாந்நிர்மோசயந் ஹரி:.
பக். 124.

95. யச்சாபி ஸர்வ பூதாநாம் பீஜம் தத ஹம் அர்ஜுந
நததஸ்தி விநா யத்ஸ்யாத் மயா பூதம் சராசரம். பக். 126.

96. யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ.
பக். 135, 140, 153.

97. அவிஜ்ஞாதா ஸஹஸ்ராம்ஶு: விதாதா க்ருத லக்ஷண:.
பக். 135.

98. நைநம் வாசா ஸ்த்ரியம் ப்ருவந் நைநம் அஸ்த்ரீபுமாந்
புமாம்ஸம் நப்ருவந் நைநம் வதந் வததி கஶ்சந [ப்ருவந்
அ இதி ப்ரஹ்ம. பக். 138.

99. ஸவை ந தேவாஸுர மர்த்யதிர்யங்
ஸ்த்ரீந ஷண்டோ ந புமாந் நஜந்து:
ந அயம் குண: கர்ம ந ஸத் ந சஅஸத்
நிஷேத ஶேஷோ ஜயதாதஶேஷ:. பக். 138.

100. ஸ்துத: அஹம் யத்த்வயா பூர்வம் புத்ரார்த்திந்யா தத்
[அத்யதே.
ஸபலம் தேவி ஸஞ்ஜாதம் ஜாத: அஹம் யத்தவ உதராத்.
பக். 139.

101. மஹாத்மந: ஶங்க சக்ராஸிபாணே:
விஷ்ணோ: ஜிஷ்ணோ: வஸுதேவாத்மஜஸ்ய. பக். 140.

102. வைதேஹி ரமஸே கச்சித் சித்ரகூடே மயா ஸஹ
பஶ்யந்தீ விவிதாந் பாவாந் மநோ வாக்காய ஸம்யதா.
பக். 144.

103. குமுத: குந்தர: குந்த:. பக். 147.

104. விஸ்ருஷ்டம் பகதத்தேந ததஸ்த்ரம் ஸர்வ காதுகம்
உரஸா தாரயாமாஸ பார்த்தம் ஸஞ்சாத்ய மாதவ:.
பக். 147.

105. ஶ்ருத: அயமர்த்த: ராமஸ்ய ஜாமதக்ந்யஸ்ய ஜல்பத:.
பக். 153.

106. நிரவத்ய: பர: ப்ராப்தே: நிரதிஷ்ட: அக்ஷர: க்ரம:
ஸர்வேஶ்வர பராதார தாம்நாம் தாமாத்மகாக்ஷய.
பக். 153.

107. அஸந்நேவ ஸபவதி அஸத் ப்ரஹ்மேதி வேதசேத்
அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத ஸந்தமேநம் ததோவிது:.
இதி. பக். 157.

108. ஆத்ம மாயாமயீம் திவ்யாம் யோகநித்ராம் ஸமாஶ்ரித:
ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந் மதுஸூதந:.
பக். 158.

109. ஆத்மாவா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்ய:
மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:. பக். 159.

110. உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோமுகம்
ந்ருஸிம்ஹம் பீஷணம் பத்ரம் ம்ருத்யும் ம்ருத்யும்
பக். 160. [நமாம்யஹம்.

111. ஸபித்ராச பரித்யக்த: ஸுரைஶ்ச ஸமஹர்ஷிபி:
த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:
பக். 168.

112. விதித: ஸஹிதர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல:
தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதும் இச்சஸி. பக். 168.

113. மரணாந்தாநி வைராணி நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜநம்
க்ரியதாம் அஸ்ய ஸம்ஸ்கார: மமஅப்யேஷ யதா தவ.
பக். 173.

114. இத்யேவம் ஆர்த்தஸ்ய ரகுப்ரவீர: ஶ்ருத்வாவசோ
[வாலி ஜகந்யஜஸ்ய
ஸம்ஜாத பர்ஷப: பரவீரஹந்தா ராமோ முஹூர்த்தம்
விமநா பபூவ. பக். 174.

115. தர்மே மநஶ்ச தே பத்ர ஸர்வகாலம் பவிஷ்யதி
யுஷ்மத் ஸந்ததி ஜாதாநாம் தீர்க்கம்ஆயு: பவிஷ்யதி.
பக். 174.

116. க இதி ப்ரஹ்மணோ நாம ஈஶோஹம் ஸர்வ தேஹிநாம் ஆவாம் தவஅங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேஶவ பக். 175. [நாமவாந்.

117. ஏகாஹம் அபி கௌந்தேய பூமிஸ்தம் உதகம் குரு குலம் தாரயதே தாத ஸப்த ஸப்தச ஸப்த ச. பக். 176.

118. தஶபூர்வாந் தஶ அபராந் ஆத்மாநம்ச. பக். 176.

119. நாராயண பரம்பிரஹ்ம தத்வம் நாராயண:பர: நாராயண பரோ ஜ்யோதி: ஆத்மா நாராயணபர:. பக். 178.

120. ஸ்தலஸ்தஸ்ய ச ராமஸ்ய ரதஸ்தஸ்ய ச ராக்ஷஸ: நஸமம் யுத்தம் இதி ஆஹு: தேவ கந்தர்வ தாநவா:. பக். 179.

121. யாதர் லக்ஷ்மி யதைவ மைதிலஜந: தேநாத்வநா: தேவயம் த்வத் தாஸ்யைகரஸ அபிமாந ஸுபகை: பாவை: [ஹ்ரிம் இஹ அமுத்ரச ஜாமாதா தயித:தவ இதி பவதீ ஸம்பந்த த்ருஷ்ட்யா பஶ்யேம ப்ரதியாம யாமச பரீசாராந் ப்ரஹ்ருஷ்யேம ச. பக். 180.

122. காமவ்ருத்தம்ச ஸுக்ரீவம் நஷ்டாம்ச ஜநகாத்மஜாம் புத்வா காலமதீதம்ச முமோஹ பரமாதுர:. பக். 181.

123. கோக்நே சைவ ஸுராபேச சோரே பக்நவ்ரதே ததா நிஷ்க்ருதி: விஹிதா ஸத்பி: க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி:. பக். 182.

124. வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஶம் பவதி துக்கித: உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி. பக். 183.

125 அவர்க்யநாதர: பக். 184.

126. பரதஸ்ய வச: குர்வந் யாசமாநஸ்ய ராகவ ஆத்மாநம் நாதிவர்த்தேதா: ஸத்ய தர்ம பராக்ரம. பக். 185.

127. விஶோதித ஜட: ஸ்நாத: சித்ர மால்யாநுலேபந: மஹார்ஹ வஸந: ராம: தஸ்தௌ தத்ர ஶ்ரியா ஜ்வலந். பக். 187.

128. ரோபயந் தண்டகாரண்யம் தீப்தேந ஸ்வேந தேஜஸா
அத்ருஶ்யத ததா ராம: பால சந்த்ர இவோதித:.
பக். 188.

129. தேஹி மே ததாமி தே. பக். 190.

130. ஸதம் நிபதிதம் பூமௌ ஶரண்ய: ஶரணாகதம்
வதார்ஹம்அபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத்.
பக். 191.

131. சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம்
தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்.
பக். 193.

132. நது மாம் ஶக்ஷ்யஸே த்ரஷ்டும் அநேநைவ ஸ்வ [சக்ஷுஷா
திவ்யம் ததாமி தே சக்ஷு: பஶ்ய மே யோகம் ஐஶ்வரம்.
பக். 194.

133. ததா அபராஹ்ணே ப்ரவிகாஸி பங்கஜாம்
வக்ஷஸ்தலேந ஶ்ரியம் உத்வஹந் விபு:
விஸ்தாரி பத்மோத்பல பத்ர லோசநோ
மமாஸ்து மங்கள்ய விவிருத்தயே ஹரி:. பக். 197.

134. ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம்.
பக். 202.

135. த்யக்த்வா காமம் பயம் குரோதம் லோபம் மோஹம்ச [மத்ஸரம்
ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ [ஹ்ரதம்.
பக். 210.

136. ரம்யம் ஆவஸதம் க்ருத்வா ரமமாணா வநே த்ரய:. பக். 211.

137 தஸ்யா: ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:
ஸப்ரஹ்மா ஸஶிவ: ஸேந்த்ர: ஸ: அக்ஷர: பரம: ஸ்வராட்.
பக். 212.

138. ஆப்ரஹ்ம ஸ்தம்ப பர்யந்தா ஜகதந்தர்வ்யவஸ்திதா:
ப்ராணிந: கர்ம ஜநித ஸம்ஸார வஶவர்த்திந:. பக். 212.

139. ஸம்ஸார ஸாகரம் கோரம் அநந்த க்லேஶ பாஜநம்
த்வாமேவ ஶரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண:.
பக். 213,

140. ஸம்ஸாரார்ணவ மக்நாநாம் விஷயாக்ராந்த சேதஸாம்
விஷ்ணு போதம் விநா நாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம்.
பக். 213.

141. முக்திஃ மோக்ஷோ மஹாநந்தஃ. பக். 214.

142. நிரஸ்த அதிஶயாஹ்லாத ஸுக பாவைக லக்ஷண
பேஷஜம் பகவத்ப்ராப்திஃ ஏகாந்தாத்யந்திகீ மதா.
பக். 215.

143. ஏதௌ த்வௌ விபுத ஶ்ரேஷ்டௌ ப்ரஸாத
[க்ரோதஜௌ ஸ்ம்ருதௌ
ததாதர்ஶித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ.
பக். 216.

144. உத்பாத்ய ப்ருதிவீம் ஸம்யக் ஸ்தாபயித்வா யதாபுரம்
ஸ்ருஷ்டிம் ததஃ கரிஷ்யாமி த்வாம் ஆவிஶ்ய ப்ரஜாபதே.
பக். 216.

145. ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்திரமிதம் உத்தமம்
ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்த்தும்
பக். 219. [அவ்யயம்.

146. மர்யாதாநாம் ச லோகஸ்ய கர்த்தா காரயிதா ச ஸஃ.
பக். 222.

147. யத் யத் ஆசரதி ஶ்ரேஷ்டஃ தத்ததேவ இதரோ ஜநஃ
ஸயத் ப்ரமாணம் குருதே லோகஃ ததநுவர்த்ததே.
பக். 222.

148. வேதாபஹார குருபாதக தைத்யபீடாதி
ஆபத் விமோசந மஹேஷ்ட பலப்ரதாநைஃ
கஃ அந்யஃ ப்ரஜாபஶுபதீ பரிபாதி கஸ்ய
பாத உதகேந ஸஶிவஃ ஸ்வ ஶிரோத்ருதேந. பக். 223.

149. ததம்பு பதிதம் த்ருஷ்ட்வா ததார ஶிரஸா ஹரஃ
பாவநார்த்தம் ஜடாமத்யே யோக்யஃ அஸ்மி இதி
பக். 223. [அவதாரணத்.

150. பார்த்தோ விஜேதா மதுஸூதநஸ்ய
பாதாரவிந்த அர்ப்பித சித்ரபுஷ்பம்
ததர்ஶ கங்காதர மௌளிமத்யே
பபூவவீரஃ க்ருத நிஶ்சயார்த்தஃ. பக். 225.

151. நமஃ புரஸ்தாத் அத ப்ருஷ்டதஃ தே.
பக். 225.

152. ததஃ ஸாகர வேலாயாம் தர்ப்பாந் ஆஸ்தீர்ய ராகவஃ
அஞ்ஜலிம் ப்ராங்முகஃ க்ருத்வா ப்ரதிஶிஶ்யே
[மஹோததேஃ
பாஹும் புஜகபோகாபம் உபதாய அரிஸூதநஃ.
பக். 226.

153. உடஜே ராமம் ஆஸீநம் ஜடாமண்டல தாரிணம். பக். 226.

154. அவஷ்டப்ய ச திஷ்டந்தம் ததர்ஶ தநுஃ ஊர்ஜிதம்
ராமம் ராமாநுஜம் சைவ பர்த்துஃ சைவ அநுஜம் ஶுபா.
பக். 226.

155. தமஸஃ பரமோதாதா ஶங்க சக்ர கதாதரஃ
ஸ்ரீ வத்ஸவக்ஷா நித்யஸ்ரீஃ அஜய்யஃ ஶாஶ்வதோ த்ருவஃ.
பக். 226.

156. த்வம் அப்ரமேயஃ ச துராஸதஶ்ச ஜிதேந்த்ரியஃ ச உத்தம
[தார்மிகஃ ச
அக்ஷயகீர்த்திஃ ச விசக்ஷணஃ ச க்ஷிதிக்ஷமாவாந்
பக். 227. [க்ஷதஜோபமாக்ஷஃ.

157. மயாததம் இதம் ஸர்வம் ஜகத் அவ்யக்த மூர்த்திநா
மத்ஸ்தாநி ஸர்வபூதாநி நசாஹம் தேஷு அவஸ்திதஃ.
பக். 231.

158. தத் ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் ததநுப்ரவிஶ்ய
ஸச்ச த்யச்சாபவத். பக். 233.

159. அம்பஸ்ய பாரே புவநஸ்ய மத்யே
நாகஸ்ய ப்ருஷ்டே மஹதோ மஹீயாந்
ஶுக்ரேண ஜ்யோதீம்ஷி ஸமநுப்ரவிஷ்டஃ
ப்ரஜாபதிஃ சரதி கர்ப்பே அந்தஃ. பக்.

160. உத்திஷ்ட உத்திஷ்ட கிம் ஶேஷே ராஜந் புத்ர
[மஹாயஶஃ
த்வத்விதா ந ஹிஶோசந்தி ஸந்தஃ ஸதஸி ஸம்மதாஃ
பக். 240, 240.

161. ஸபாஷ்பகலயா வாசா கலஹம் ஸஸ்வரோ யுவா
விலலாப ஸபா மத்யே ஜகர்ஹேச புரோஹிதம்.
ராஜ்யம்சஅஹம் ச ராமஸ்ய தர்மம் வக்தும் இஹார்ஹஸி
கதம் தஶரதாத் ஜாதோ பவேத் ராஜ்யாபஹாரகஃ.
பக். 240.

162. ஏகஸ்மிந்நபி அதிக்ராந்தே முஹூர்த்தே த்யாந [வர்ஜ்ஜிதே
தஸ்யுபிः முஷிதேநேவ யுக்தம் ஆக்ரந்திதும் ப்ருஶம்.
பக். 240.

163. நியமாதிக்ரமம் ரஹஸி போதயேத். பக். 240.

164. ஏவம் உக்தஸ்து ராமேண லக்ஷ்மணஃ ஸம்யதாஞ்ஜலிः
ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்தம் இதம்வசநம் அப்ரவீத்.
பக். 242.

165. பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷஶதம் ஸ்திதே
ஸ்வயந்து ருசிரே தேஶே க்ரியதாம்இதி மாம் வத.
பக். 242, 252.

166. யாவந்ந சரணௌ ப்ராதுः பார்த்திவ வ்யஞ்ஜநாந்விதௌ
ஶிரஸா தாரயிஷ்யாமி நமே ஶாந்திः பவிஷ்யதி.
பக். 245.

167. பரமாபதம் ஆபந்நः மநஸா அசிந்தயத் ஹரிம்
ஸது நாகவரः ஸ்ரீமாந் நாராயண பாராயணः. பக். 245.

168. துர்க்கதாவபி ஜாதாயாம் த்வத்கதோ மே மநோரதः
யதி நாஶம் நவிந்தேத தாவதாஸ்மி க்ருதீ ஸதா. பக். 250.

169. அஜாயமாநோ பஹுதா விஜாயதே
தஸ்ய தீராः பரிஜாநந்தி யோநிம். பக். 256.

170. யத்ரருஷயः ப்ரதமஜாயே புராணாः. பக். 260.

171. தத்ஹி ஏதத் பஶ்யந்ருஷிः வாமதேவः ப்ரதிபேதே
அஹம் மநுः அபவம் ஸூர்யஶ்ச. பக். 263.

172. ஏகம் ஸதைகம் பரமः பரேஶः
ஸவாஸுதேவோ நயதः அந்யத் அஸ்தி. பக். 263.

173. த்ரய ஏவாதநா ராஜந் பார்யா தாஸः ததா ஸுதः
யத்தே ஸமதிகச்சந்தி யஸ்யைதே தஸ்ய தத்தநம்.
பக். 263.

174. அஹோ வீர்யம் அஹோ தைர்யம் அஹோஸத்வம் [அஹோத்யுதிः
பக். 264.

175. பபூவ புத்திஸ்து ஹரீஶ்வரஸ்ய யத் ஈத்ருஶீ ராகவ [தர்மபத்நீ
இமாயதா ராக்ஷஸ ராஜபார்யாः ஸுஜாதம்அஸ்யேதி ஹி [ஸாதுபுத்தேः,
பக். 265.

176 பால்யே க்ரீடனகா ஸக்தாஃ யௌவநே விஷயோந்முகாஃ.
பக். 270.

177. தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதேத ஶ்ரேயஸே
ஸதா.. பக். 270.

178. யத் முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ நசிந்த்
[யதே
ஸாஹாநிஃ தத் மஹத் சித்ரம் ஸாப்ராந்திஃ ஸாசவிக்ரியா.
பக். 271.

179. நதேரூபம் நசாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம்
ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாஶஸே.
பக். 272.

180. ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்திரம் இதம் உத்தமம்
ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்த்தும்
பக். 274. [அவ்யயம்.

181. பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்த்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.
பக். 276.

182. ததஃ தத்கோகுலம் ஸர்வம் கோ கோபீஜந ஸங்குலம்.
அதிவார்த்தம் ஹரிஃ த்ருஷ்ட்வா மைத்ரேய அசிந்தயத்
பக். 276. [ததா.

183. ஸமுத்வஹந்தஃ ஸலிலாதிபாரம் பலாகிநோ வாரிதரா
[நதந்தஃ
மஹத்ஸு ஶ்ருங்கேஷு மஹீதராணாம் விஶ்ரம்ய
பக். 277. [விஶ்ரம்ய புநஃ ப்ரயாந்தி.

184. ராமஸ்ய வ்யவஸாயஜ்ஞா லக்ஷ்மணஸ்யச தீமதஃ
ந அத்யர்த்தம் க்ஷுப்யதே தேவீ கங்கேவ ஜலதாகமே.
பக். 277.

185. அகர்த்தமம் இதம் தீர்த்தம் பரத்வாஜ நிஶாமய
ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந் மநுஷ்ய மநோ யதா.
பக். 278.

186. யஃ த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கஃ நிரயோ யஃ த்வயா விநா
இதிஜாநந் பராம் ப்ரீதிம் கச்ச ராம மயா ஸஹ. பக். 280.

187. யதி த்வம் ப்ரஸ்திதோ துர்க்கம் வநம் அத்யைவ ராகவ
அக்ரதஃ தே கமிஷ்யாமி ம்ருத்நந்தீ குஶகண்டகாந்.
பக். 280.

188 நச ஸீதா த்வயா ஹீநா ந சாஹம் அபி ராகவ
முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாத் மத்ஸ்யாவிவ
பக். 280. [உத்தரகாண்டம்.

189. ய ஆத்மதா பலதா: பக். 282.

190. ய: அந்யதாஸந்தம் ஆத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே
கிம் தேந நக்ருதம் பாபம் சோரேண ஆத்மாபஹாரிணா.
பக். 285.

முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.
வடக்குத் திருவீதிப்பிள்ளை வண்கழல் வாழ்க.
நம்பிள்ளை நற்றாள் வாழ்க.
மாறன் மலரடி வாழ்க.

பிழைதிருத்தம்

—:(o):—

பக்.	வரி	பிழை	திருத்தம்
23	17	பொருள்	பொருள
67	20	புகுந்த	கலந்த
313	26	வினயகனே	வினயதனே